மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள்

வீ. அய்யனார்

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

மதுரை

8

VG5738

மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள்

வீ. அய்யனார்

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

மதுரை - 625 021

பதிப்புரிமை : © Publications Division,
பதிப்புத்துறை, Madurai Kamaraj University,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், Madurai - 625 021.
மதுரை - 625 021.

பதிப்பு எண் : 154

விலை : ரூ. 70/-

பதிப்பு விவரங்கள்:

1. ஆசிரியர்		டாக்டர். வீ. அய்யனார் இணைப் பேராசிரியர் கலை வரலாறு மற்றும் நுண்கலைத் துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.
2. தலைப்பு	:	மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள்
3. பதிப்பித்தோர்	:	பதிப்புத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.
4. ஆண்டு	:	1999
5. பக்கங்கள்	:	336 + 16
6. பொருள்	:	நாட்டுப்புறவியல்
7. அச்சும் அமைப்பும்	:	லிட்டில் ஸ்டார், மதுரை.

அணிந்துரை

பேராசிரியர் மு. சாலிகு,
துணைவேந்தர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

இந்தியக் காவியங்களில், குறிப்பாக மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் மற்றும் சீவகசிந்தாமணி போன்றவை நாட்டுப்புறக் கதைகளின் சிதறல்கள் என்பது பரவலான கருத்து. உண்மையும் ஆகும். உலகக் காவியங்களும் இதில் அடங்கும். இவை தவிர, உரைநடைப் புதினங்களில், முதல் மூன்று புதினங்கள் எனப்படும் பிரதாப முதலியார் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் போன்றவை நாட்டுப்புறக் கதைகளின் சிதறல்களை உள்ளடக்கியவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. பெரும்பாலும் தமிழில் தோன்றியுள்ள இலக்கியங்கள் பலவற்றில் நாட்டுப்புறக் கதைக் கூறுகள் இழையோடிக் கிடக்கின்றன என்பதை தமிழறிந்த அனைவரும் அறிவர். இதைத் தொடர்ந்து, துவக்ககாலத் தமிழ்த் திரைப்படங்களில், நாட்டுப்புறக் கதைகள், திரைப்பட நெடுங்கதைகளாக வடிவம் பெற்றிருக்கின்றன. இக்காலகாட்டத்திலும் எழுதப்படுகின்ற இலக்கியங்கள், இயக்கப்படுகின்ற திரைப்படங்கள் போன்றவற்றில் முக்கிய கருத்துக்களை எளிய முறையில் மக்கள் முன் வைப்பதற்கு, நாட்டுப்புறக் கதைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு காவியம், இலக்கியம், புதினம், சிறுகதை மற்றும் திரைப்படம் போன்றவை உருவாவதற்கு மையமாக விளங்கிய நாட்டுப்புறக்

கதைகளும் மற்ற ஆய்வுகளும் நூலாக வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறு வெளிவருகின்ற கதைத் தொகுப்புகள், பெரும்பாலும் மக்கள் பேசுகின்ற மொழியில் அமைய வேண்டும். அப்போதுதான் அதன் உண்மைநிலை கற்றவர்களால் உணரப்பட்டு, காலத்தைக் கடந்து நிற்கும்.

பல்கலைக்கழக ஆய்வுகள், குறிப்பிட்ட கால கட்டத்துக்குள், நூல்களாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. எந்த வகையான ஆய்வாக இருந்தாலும், அது, பல்கலைக்கழகக் கட்டடத்துக்குள் முடங்கி விடக் கூடாது என்பதில் பல்கலைக்கழகம் விழிப்புடன் இருக்கிறது. பொதுவாக, இலக்கிய ஆய்வுகள் மக்களை மையமாகக் கொண்டவை. இவற்றில் மக்களுக்குத் தேவையான, மக்களை நல்வழிப்படுத்துவதற்கான அடிப்படை வாழ்வியல் முறைகள், தேசீய ஒருமைப்பாடு, மத நல்லிணக்க ஒருமைப்பாடு, சமூக மற்றும் சாதி நல்லிணக்க ஒருமைப்பாடு ஆகிய உயரிய நெறிமுறைகள் பசுமரத்தாணிபோல் பதிக்கப்பட வேண்டும்.

புத்தர், மகாவீரர், இயேசு, அல்லா, காந்தி, வள்ளுவர் போன்ற மகான்களின் சிறப்புகள் சாதி, மத மற்றும் அரசியல் வேறுபாடுகளாலும், கால வெள்ளத்தில் கரைந்து போகின்ற சிறுபான்மைக் கொள்கைகளாலும், மக்களின் மனதிலிருந்து மறக்கடிக்கப் படுவதைப் பல்கலைக்கழக ஆய்வுகள் தடுத்து நிறுத்த வேண்டும். மக்களுக்குப் பயன்படுகின்ற நல்ல கருத்துக்களும் சிந்தனைகளும் எந்த மூலையில் இருந்தாலும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படவேண்டும்.

இவ்வகையில், "மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள்" என்னும் இந்நூல், முழுக்க முழுக்க மக்கள் பேசுகின்ற மொழிப்பாணியில் அமைந்துள்ளது. பேசுவதுபோல் எழுதுவது என்பது கடினம். மூலைமுடுக்குகளில் காலூன்ற வழியின்றி, மனித மனம் என்னும் இருட்டறையில், தேங்கிக் கிடந்த மக்கள் கருத்துக்கள், பேச்சுமொழிப்பாணியில், இலக்கிய உலகை எட்டிப் பார்க்கிறது எனக் கருதுகிறேன். அத்தோடு, மக்களின் கருத்துக்கள், மக்களின் மனங்களில், மக்களால் விதைக்கப்பட்டிருக்கின்றன என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மு. சாலிகு

முன்னுரை

சாதி, மத மற்றும் அரசியல் வேறுபாடுகளால் கலைந்து–பிரிந்து வாழ்கின்ற மக்களின் மனதில் ஆழப் பதிந்துள்ள கருத்துக்களின் விரிவாக்கமே கதை. பெரும்பாலும் மக்களால், மக்களுக்காகச் சொல்லப்பட்டு, காலங்காலமாக ஆக்கியோன் இன்றி, அனாதையாக மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இக்கதைகள், சமுதாய நிகழ்வுகளை நேரடியாகவும், மறைமுகமாகவும், நகைச்சுவையோடும் எடுத்துரைக்கின்ற கருவியாக விளங்குகின்றன. பொய்யுரை – மெய்யுரை – புனைந்துரை ஆகிய மூன்று நிலைகளையும் தன்னகத்தே கொண்ட கதைகளை நடந்து முடிந்த சம்பவங்களின் விளக்கம் எனவும், மனித உள்ளங்களில் நாளுக்கு நாள் பல்கிப் பெருகின்ற ஆசைகளின் வெளிப்பாடு எனவும், மனிதன் பெறுகின்ற அனுபவங்களின் சுருக்கம் எனவும் கொண்டால் மிகையாகாது. இதற்கிடையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக மனித நேயம், மனிதப் பண்பாடு, சமூக மற்றும் நாட்டு வரலாறு பற்றிய சிதறல்கள் பௌர்ணமி நிலவுபோல் பளிச்சிடுகின்றன.

மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கும் பழம்பொருட்களைத் தோண்டி எடுக்கும் புதைபொருள் ஆய்வு நிபுணர்களைப்போல், மனித மனங்களில் மறைந்து கிடந்த கதைகளை வெளிக்கொணர மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வாய்ப்பளித்திருக்கிறது. மக்களின் பேச்சு மொழியிலேயே கதைகள் எழுதப்பட வேண்டும் என்பது எனது ஆய்வு வழிகாட்டி பேராசிரியை டாக்டர். வி. சரசுவதி அவர்களின் கட்டளை. அக்கட்டளையைத் தலைமேற்

கொண்டு, தமிழகக் களங்களுக்குச் சென்று, கதையாளர்களைப் பேட்டி கண்டு, அவர்கள் சொன்ன கதைகளைப் பதிவு நாடாவில் பதிவு செய்து, பின் கொஞ்சம், கொஞ்சமாக வெளிப்படுத்தி, என்னுடைய பேச்சுத் தமிழின் துணைகொண்டு, கதை சொல்பவர்களின் பேச்சுப் பாணியில் எழுதியிருக்கிறேன்.

கதைகளில் பல வகை உண்டு. அவை கூறும் கருத்துக்களை மையமாகக் கொண்டு வரிசைப்படுத்தி, வகைப்படுத்தியிருக்கிறேன். அவை – பண்பு விளக்கக் கதைகள், நீதி விளக்கக் கதைகள், சமய மரபு தழுவிய கதைகள், சமூக வரலாற்றுக் கதைகள், நகைச் சுவைக் கதைகள், குலமரபுக் கதைகள் மற்றும் நம்பிக்கை விளக்கக் கதைகள் என்பதாகும். இவ்வகைக் கதைகளில் மக்களோடு தொடர்புடைய, மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்ற மற்றும் தாம் வணங்கும் கடவுளரோடு தொடர்புடைய விலங்கினங்களும், பறவையினங்களும் மனிதப் பண்புருவாக்கம் பெற்றுக் கதைப் பாத்திரங்களாகத் திகழ்கின்றன. இவைதவிர, சலனமற்ற மலை, மரம், கல் போன்றவை மனித நிலைக்கு மீட்டுருவாக்கம் பெற்று, கதைப் பாத்திரங்களாக விளங்குகின்றன.

கதை சொல்லிகள், கதை சொல்கின்றபொழுது, அவர்களின் உச்சரிப்பில் ஏற்படுகின்ற வேறுபாடுகளும் மாற்றங்களும் மொழிச் சிதைவையும், பொருட் சிதைவையும் ஏற்படுத்துகின்றன. நன்றாகத் தமிழ் எழுதத் தெரிந்தவர்களும், பேச்சுத் தமிழில் அனுபவம் உள்ளவர்களும் இச்சிதைவுகளை எளிதில் புரிந்து

கொள்ள முடியும். ஆனால், வேற்று மொழிக் காரர்களுக்கு இச்சிதைவுகள் தடுமாற்றத்தை ஏற்படுத்தும். இச்சிதைவுகளை நீக்கும் பொருட்டு, தகுந்த இடங்களில் அடையாளக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தேங்காய் என்பது தேங்கா எனவும், மாங்காய் என்பது மாங்கா எனவும், வெண்டைக்காய் என்பது வெண்டிக்கா எனவும் சிதைவடைவதைக் கதைகளில் காணமுடிகிறது. இவற்றில், சொல்லின் இறுதியிலுள்ள யகர மெய் மறைந்தாலும் பொருளில் மாற்றம் பெறவில்லை. எல்லோரலும் எளிதில் இதன் பொருளைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், தகப்பன், அண்ணன், மகன், வந்தான், போனான், கண்டான், கேட்டான் போன்ற னகர மெய்யிறுதிச் சொற்களை கதை சொல்லிகள் உச்சரிக்கின்றபொழுது, சொல்லின் இறுதியிலுள்ள னகர மெய் கெட்டு ஒலி மாற்றமும் பொருள் மாற்றமும் பெறுகின்றன. இறுதி மெய் கெட்டு மூக்கொலி பெறுகின்றன. அவ்வாறு, மூக்கொலி பெற்ற அச்சொற்கள், மூக்கொலிக் குறியீட்டுடன் (~) தகப்ப, அண்ண, மக, வந்தா, போனா, கண்டா, கேட்டா எனக் கதைகளில் எழுதப்பட்டுள்ளன.

சொல்லின் இறுதி னகர மெய் கெடுவதைப்போல, ளகர மெய்யை இறுதியாகக் கொண்ட சொற்களை, கதை சொல்லிகள் உச்சரிக்கையில், ளகர மெய் கெடுகின்றது. உதாரணமாக மகள் என்பது ளகர மெய் கெட்டவுடன் மக என்றாகின்றது. ஆனால், ஒலி மாற்றமோ அல்லது பொருள் மாற்றமோ இல்லை. பேச்சு வழக்கில் மக (மகள்) என்பது பெண்பாலாரை வெளிப்படையாகக் குறிப்பதால், குறியீடு இன்றி, கதைகளில் மக என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர இவர்கள், அவர்கள், வந்தார்கள், போனார்கள், கண்டார்கள் போன்ற சொற்கள் கதைகளில் உச்சரிக்கப்படுவதில்லை. மாறாக, கதைப் பாத்திரங்களின் தரம் மற்றும் குணங்களுக்கேற்ப அவங்க, இவங்க, வந்தாங்க, போனாங்க, கண்டாங்க எனத் தரம் உயர்ந்த நிலையிலும், அவங்க, இவங்க், வந்தாங்க, போனாங்க, கண்டாங்க, திண்டாங்க, குடிச்சாங்க எனத் தரம் தாழ்ந்த நிலையிலும் உச்சரிக்கப்படுகிறது. மதிப்பு மிக்க நிலையில் உயர்ந்த பாத்திரங்களைக் குறிப்பிடுகையில் ஒலி மாற்றமோ அல்லது பொருள் மாற்றமோ இல்லை. எளிதில் பொருள் விளங்கக் கூடியதாக இருக்கிறது. இச்சொற்களைப் புரிந்து கொள்வதற்குக் குறியீடுகள் தேவையில்லை. அதே சமயத்தில் தரம் தாழ்ந்த, தீய கதைப் பாத்திரங்களைக் குறிப்பிடுகையில் ஒலி மாற்றமும், பொருள் மாற்றமும் ஏற்படுகிறது. முன்னதிலிருந்து பின்னதைப் புரிந்து கொள்வதற்கு, சொல்லின் இடையிலுள்ள ஙகர மெய்யின் (–) மேல் (–) என்னும் அடையாளக் குறியீடு இடப்பட்டுள்ளது. மூன்றாவதாக எவ்வித ஒலி மாற்றமோ, பொருள் மாற்றமோ இன்றி அவனுக, இவனுக, வந்தானுக, போனானுக, கண்டானுக, திண்டானுக எனக் கதை சொல்லிகளால் கதைப் பாத்திரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இச் சொற்கள், நேரடியாகப் பொருளை உணர்த்துவதால் பொருளைப் புரிந்து கொள்வதில் சிக்கல்கள் இல்லை. எனவே இவ்வகைச் சொற்கள் அப்படியே எழுதப்பட்டுள்ளன. கதைகளைப் படிக்கின்றபொழுது (~) என்னும் மூக்கொலிக் குறியீடும், (–) என்னும் ஒலி மாற்றக் குறியீடும் கவனத்தில் கொள்ளத் தக்கனவாகும்.

இந்நூலின் தகுதி அறிந்து, அணிந்துரை வழங்கிய, மதுரை காமராசர் பல்கலைக் கழக மாண்புமிகு துணை வேந்தர் பேராசிரியர் மு. சாலிகு அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி என்றும் உரியதாகும். என்னை எழுதத் தூண்டிய எனது ஆய்வு வழிகாட்டி பேராசிரியை டாக்டர் வி. சரசுவதி அவர்களுக்கு என்றும் நன்றிக்குரியவனாக இருப்பேன். இந்நூல் வெளிவருவதற்கு முயற்சி மேற்கொண்ட நண்பர், பதிப்புத் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் இரா. காசிராசன் அவர்களுக்கு முழுமனதுடன் நன்றியை உரித்தாக்குகிறேன். உடனிருந்து ஊக்கமளித்த நண்பர் பேராசிரியர் டாக்டர் கு. சேதுராமன் அவர்களும் நன்றிக்குரியவர். எதிர் காலத்தில் நாட்டுப்புறவியலில் ஆய்வு மேற்கொள்பவர்களுக்கும், நூலைப் பயன்படுத்தும் நாட்டுப்புறவியல் நிபுணர்களுக்கும், நூல் வழி அறிவு பெற விரும்பும் உத்தமர்களுக்கும் "மதுரை மாவட்ட நாட்டுப்புற கதைகள்" என்னும் இந்நூல் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்.

என்னைப் பெற்ற தாய்க்கு, இந்நூலைப் பெருமையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

17-11-99

மதுரை. *வீ. அய்யனார்*

பொருளடக்கம்

I.	பண்பு விளக்கக் கதைகள்	1
II.	நீதி விளக்கக் கதைகள்	62
III.	சமய மரபு தழுவிய கதைகள்	112
IV.	சமூக வரலாற்றுக் கதைகள்	161
V.	நகைச்சுவைக் கதைகள்	202
VI.	குல மரபுக் கதைகள்	272
VII.	நம்பிக்கை விளக்கக் கதைகள்	295

I. பண்பு விளக்கக் கதைகள்

1. முக்கலங்குத்தி மாயக்கா

ஒரு ஊர்ல – ஒரு வெறகு வெட்டி இருந்தா. தெனமும், மூணு மூட நெல்லுக்கு, வெறகு வெட்டி, வித்துப் பொளச்சுக்கிட்டிருந்தா. அவ் பொண்டாட்டி, அந்த மூணு மூட நெல்லயுங்குத்தி, கஞ்சி வெள்ளம் வச்சு, புருசெ, வெறகு வெட்டுற எடத்துக்கு, கொண்டுகிட்டு போவாளாம்.

மூணு மூட நெல்லயும் குத்துறதுனால; அவள, அந்த ஊர்ல, எல்லாரும் முக்கலங்குத்தி மாயக்காண்டு கூப்டுவாங்களாம். இப்டி – வெறகு வெட்டுறவ், வாழ்க்க ஓடிக்கிட்டிருக்கு.

இருக்கயில; ஒரு நாள் – அந்த நாட்டு ராசாவும் – ராசா பொண்டாட்டியும் வனசஞ்சாரம் வந்தாங்க. வரயில, அந்த வழியா, முக்கலங்குத்தி மாயக்கா – பெரிய தாழில, கஞ்சி வெள்ளத்த செமந்துகிட்டு வாரா. ராணி; முக்கலங்குத்தி மாயக்காளப் பாத்து, சந்தேகப்படுறா. பக்கத்துல போயி, எங்க போறண்டு கேட்டா. அங்க: எம்புருசெ, வெறகு வெட்டுது. அதுக்கு, கஞ்சி கொண்டு போறேண்டு சொன்னா.

எம்புருசெ, தெனமும் மூணு மூட நெல்லுக்கு வெறகு வெட்டும். அந்த மூணு மூட நெல்லயும் குத்தி, கஞ்சி வெள்ளம் வச்சுக் குடுக்கறேண்டு, முக்கலங்குத்தி மாயக்கா சொன்னா.

அப்ப: ராணி, மூணு மூட நெல்லுல இருந்து எடுத்த அரிசிச் சோற, ஒரு மனுசெ சாப்பட முடியுமா? தெனமும் மூணு

மூட நெல்லக் குத்தியெடுக்கிறது எப்படிண்டு ஓசிக்கிறா. இதுல ஏதோ அதிசயம் இருக்குண்ட்டு, முக்கலங்குத்தி மாயக்காகிட்டப் போனா.

போயி –, முக்கலங்குத்தி மாயக்கா சீலய, ராணி வாங்கிக் கெட்டிக்கிட்டா. கெட்டிக்கிட்டு, முக்கலங்குத்தி மாயக்கா மாதிரி, வெறகு வெட்டுறவனுக்கு கஞ்சி கொண்டு போறா. ராணியோட ஒடைகள வாங்கி, முக்கலங்குத்தி மாயக்கா போட்டுக்கிட்டு, ராசா கூட அரமணக்கிப் போறா. அரமண ரகசியங்கள, முக்கலங்குத்தி மாயக்காளுக்கு ராணி சொல்லிட்டா.

வெறகு வெட்டி, ராணிய; தம் பொண்டாட்டிண்டு நெனச்சுக்கிட்டு, கொண்டு வந்த கஞ்சி வெள்ளத்தக் குடிச்சுட்டு, அவள, வீட்டுக்குப் போகச் சொல்லிட்டர். சொல்லவும் - இவளுக்கு வீடு தெரியாதில்ல, அதுனால இவ போக மாட்டேங்குறா. சரிண்ட்டு, வெறக வண்டில ஏத்திக்கிட்டு, ரெண்டுபேரும் வீட்டுக்கு வராங்க.

அங்க – ராசா கூடப் போன முக்கலங்குத்தி மாயக்கா, அரமண விசயங்கள நல்லாத் தெரிஞ்சுகிட்டு, அவபாட்ல அரமணயில இருக்கா. மூணு கலம் நெல்லரிசிக் கஞ்சி வெள்ளத்த செமந்துகிட்டுத் திரிஞ்சவ, அரமணயில சொகுசா இருக்கா.

அப்ப ராசா, அரசாங்க வேலயா வேற நாட்டுக்குப் போயிட்டாரு. முக்கலங்குத்தி மாயக்கா, அவபாட்டுக்குத் திங்க – உங்க இருக்கா.

இங்கிட்டு, வெறகு வெட்டி கூட வீட்டுக்கு வந்த ராணி, மொதல்ல நெல்லுக் குத்துன எடத்தப் பார்த்தா. பாக்கயில, நெல்லு உமி மல மாதிரி குமுஞ்சு கெடக்கு. கெடக்கவும், நாலு

பொம்பளைகளக் கூப்ட்டு, இந்த நெல்லுமியத் தூத்துங்கண்டு சொன்னா. அஞ்சாறு பொம்பளைக தூத்துராங்க.

அண்ணக்கி, ஆறு மரக்கா அரிசி போட்டுச் சோறாக்குனா. அதுக்குத் தகுந்த கொளம்பு வச்சா. வெறகு வெட்டுறவனுக்கு கொண்டு போறா. கொண்டு போயிக் குடுத்தா.

ஆறு மரக்கா அரிசிச் சோறுல, மூணு மரக்கா அரிசிச் சோறத் திண்டர். மீதி மூணு மரக்கா அரிசிச் சோற திங்க முடியல. மூணு மரக்கா அரிசிச் சோறச் சாப்டிட்டு, ஏழு வண்டி வெறகு வெட்டுனர். அதுக்குக் கூலியா அஞ்சு மூட நெல்லு வாங்கினா.

கஞ்சியக் குடுத்திட்டு – வீட்டுக்கு வந்த ராணிகிட்ட, நெல்லுமில இருந்து இருவது மூட நெல்லும், எட்டு மூட அரிசியும் தூத்தி வச்சிருந்து குடுத்தாங்க. ரொம்ப சந்தோசப்பட்டு, அதுகள ஒழுங்குபடுத்தி அங்கங்க வச்சா.

மறுநா, மூணு மரக்கா அரிசி போட்டுச் சோறாக்குனா. அதுக்கு ஏத்த மாதிரி கொளம்பு வச்சா. மூணு மரக்கா அரிசிச் சோத்துல, ஒண்டர மரக்கா அரிசிச் சோறச் சாப்ட்டர். மீதி ஒண்டர மரக்கா அரிசிச் சோற வச்சிட்டர். சாப்ட முடியல. கொளம்ப வசமா வச்சுத் தாராள்ல. ஒண்டர மரக்கா அரிசிச் சோறச் சாப்ட்டிட்டு, பத்து வண்டி வெறகு வெட்டிட்டர்.

அடுத்தநா – ஒண்டர மரக்கா அரிசி போட்டுச் சோறாக்கி, கொண்டு போறா. அதுல மூணு படி அரிசிச் சோறச் சாப்ட்டர். மீதி மூணுபடி அரிசிச் சோறத் திங்க முடியல, வச்சிட்டர். கஞ்சி குடுத்திட்டு வந்த ராணிகிட்ட நாப்பது மூட அரிசியும் பத்து மூட நெலலுங் குடுத்தாங்க. அதுகள வக்கிறதுக்கு வீ டு இல்லாதனால, வெறகுவெட்டியர் பேருல, ஒரு வீ டு கட்டத் தொடங்கிட்டா.

அதுக்கடுத்தநா, மூணுபடி அரிசி போட்டுச் சோறாக்கி, அதுக்குத் தகுந்த கொளம்பு வச்சு, வெறகு வெட்டியானுக்கு கொண்டு போறா. மூணுபடி அரிசிக் கஞ்சில, ஒண்டரப்படி அரிசிக் கஞ்சியக் குடிச்சர். மீதி ஒண்டரப் படி அரிசிக் கஞ்சியக் குடிக்க முடியல.

ஒண்டரப் படி அரிசிக் கஞ்சி குடிச்ச அண்ணக்கி, பதினஞ்சு வண்டி வெறகு வெட்டுனர். அண்ணக்கி எம்பது மூட அரிசியும் – இருவது மூட நெல்லும் – உமியிலிருந்து எடுத்துக் குடுத்தாங்க. நாளுக்கு நாளு வருமானம் பெருகுது.

இந்த நெல்லுகளக் கொண்டு போயி, சந்தையில வித்தா. வித்து, வீடு கட்றா. வீடு கட்றது, வெறகு வெட்டியானுக்குத் தெரியாது. எண்ணிக்கும் போல – வெறகு வெட்டிக்கிட்டிருக்கர். இங்க – முக்கலங்குத்தி மாயக்கா, அவபாட்ல, ராசாக்கெணக்கா அரமணயில இருக்கா. ராணி, இத்தனயயும் நடத்திக்கிட்டு வாரா.

அதுக்கடுத்த நாளு; ஒண்டரப் படி அரிசி போட்டுச் சோறாக்கி, தகுந்த கொளம்பு வச்சு, காட்டுக்குக் கொண்டு போறா. ஒண்டரப் படி அரிசிச் சோறுல; முக்காப் படி அரிசிச் சோறச் சாப்பிட்டர். மீதி முக்காப்படி அரிசிச் சோற சாப்ட முடியல. அண்ணக்கி வேலயும் நல்லாச்செஞ்சர். இங்க – இவ, வீட்டயும் கெட்டி முடிச்சுட்டா.

இப்டி வெறகு வெட்டிக்கிட்டிருக்கயில, வெறகு வெட்டியான வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறா. கூட்டிக்கிட்டுப் போயி-, தண்ணியக் காய வச்சுக் குடுத்தா. தல முழுகினர். நல்லாப் படுத்து ஒரங்கிட்டர். ஒரங்கி எந்திரிக்கவும், முடி வெட்டி, மொகம் வளிச்சிட்டு வாண்டு சொன்னா. முடி வெட்டி, மொகம்

வளிச்சிட்டு வந்தா். புதுத் துணிகளக் குடுத்தா. உடுத்திக்கிட்டா். கூப்ட்டுட்டுப் போயி –, வீட்டச் சுத்திக்காட்டி, இதா்.. ஒ... வீ டுண்டு சொல்லி, வீ ட்டுச் சாவி யக் குடுத்தா. வாங்கிக்கிட்டா்.

எல்லாம் முடுச்சுட்டு, பெறந்த வீ ட்டுக்குப் போயிட்டு வாரேண்டு சொல்லிட்டு, அரமணக்கிப் போறா. போயி; முக்கலங்குத்தி மாயக்காகிட்ட நடந்ததச் சொல்லி, தாங்கட்டியிருந்த சீலய, அவகிட்டக் குடுத்துக் கட்டச் சொல்லி, வெறகு வெட்டியா் வீ ட்டுக்குப் போகச் சொல்லிட்டு, ராணி, அரமணயில இருந்துகிட்டா.

இவ அரமணக்கி போகவும், ராசா அரமணக்கி வரவும் சரியா இருந்திச்சு. அரமண சிறப்பா இருக்கதுபோல, வெறகு வெட்டியா் வீ டும் சிறப்பா இருக்குது.

நல்ல பொம்பளண்டப் போயி –, வெறகு வெட்டியா் வீ ட்ட நல்லா ஆக்கிட்டா. முக்கலங்குத்தி மாயக்கா மாதிரி இருந்தா எப்படி இருக்கும்? வச்சது வச்ச வாக்குல; போட்டது போட்ட வாக்குல, பொறுப்பில்லாமல் இருக்கும். அதுக்குத்தான், குடும்பத்ல பொம்பள, நல்லவளா இருக்கணும்ங்றது.

2. பொறுப்பில்லாக் குடும்பம்

ஒரு ஊர்ல – ஒரு வாழ்ந்து கெட்ட குடும்பம். அந்தக் குடும்பத்ல, ஒன்னப் பாரு, என்னப் பாருண்டு மூணு பொண்ணுக. ரொம்ப ஏழ்மயான வாழ்க்க. வாழ்ந்துக் கெட்டுப் போனா அப்டித்தான இருக்கும். ஒண்ணுக்கொண்ணு ஆளாகி வாக்கப்படுற வயசுக்கு வந்து இருக்குதுக. அப்ப, ஒரு பெரிய பணக்கார ராசா, பொண்ணு கேட்டு வாராரு. வரயில; இந்த வாந்து கெட்டவ சொல்றா, என்னா ராசாவே! நாங்க இந்த மாதிரி ஒரு காலத்ல நல்லாப் பொளச்சோம். இப்ப, கெட்டுப் போயி இருக்கோம். எங்களால, பொண்ணுக்கு, சிரு – செனத்து எதுவும் செய்ய முடியாது. பொண்ணத் தவிர எங்ககிட்ட வேற ஒண்ணுமில்லண்டு சொல்றா.

அதுக்கு ராசா, சீரு ஒண்ணும் வேண்டாம். பொண்ண மட்டும் குடுத்தா போதும். மத்ததெல்லாம் நாங்கள் போட்டுக்றோம்ண்டு சொன்னாரு. சொல்லவும் –; ஒத்துக்கிட்டுக் கல்யாணஞ் செஞ்சு வச்சிறுராங்க. அப்ப, புருசீ வீட்டுக்குப் போயிரா.

அதே மாதிரி எளய மகள, இன்னொரு ராசா வந்து கேக்குராரு. கேக்கவும், அந்தப் பிள்ளயயும் புடுச்சுக் குடுத்துடுராங்க. அவளும் புருசீ வீட்டுக்குப் போயிருரா.

அதே மாதிரி மூணாவது பிள்ளய, அதக்காட்டிலும் – பெரிய ராசா வந்து கேக்குராரு. கேக்கவும், அவளயுங் குடுத்துட்டா. அவளும் புருசங் கூடப் போயிருரா.

போகவும், இவங்க புருசனும் பொண்டாட்டியுந்தா மிச்சம். ஒருநாத் தேதில, ரெண்டு பேரும் ஒக்காந்து, மொதல்ல நல்லாப்

பொழச்சதப் பத்திப் பேசுறாங்க. பேசயில, உளுந்த வட (வடை) சுடணும்ண்டு பேசிக்கிறாங்க.

அப்ப: ரெண்டு மூணு வீட்ல, உளுந்து வாங்கிட்டு வந்து, அத ஆட்டிப் பெறக்கி, உளுந்த வட சுடுறா. சுடயில, ஒண்ண எடுத்துத் திண்டு பாத்தா. நல்லா இருந்திச்சு. இருக்கவும், நல்லா இருக்கு – நல்லா இருக்குண்டட்டு, பூராத்தயும் திண்டுபிடுறா.

புருச் வந்து, என்னா? உளுந்த வட சுட்டயே, எனக்கு வச்சிருக்கயாண்டு கேட்டா். ஆமா! சுட்டே. நல்லா இருந்திச்சு. பூராத்தயும் திண்டுபிட்டேண்டு சொன்னா. சரி! திண்டா – திண்டுட்டுப் போறாண்டட்டு, பேசாம இருந்துகிட்டா்.

அப்டி இருக்கயில, ஒருநாத் தேதியில – மூணுபேரும், தாயி வீட்டுக்கு வந்திட்டாங்க. வரவும், என்னா மகளே? நீ வந்தது, நீ வந்தது, நீ வந்ததுண்டு மூணு மகள்களயும் வரிசயாக் கேட்டா.

அப்ப: மூத்த மக, இல்லம்மா! என்னய கெட்டிட்டுப் போன மறுநா, ரெண்டுபேருங் காத்து வாங்கப் பூஞ்சோலக்கிப் போனோம். அங்க மரத்தடியில படுத்து ஒரங்கிட்டோம். அப்ப, அந்த மரத்ல இருந்த, பூவெல்லாம் எங்க மேல விழுந்து கெடந்துச்சு. எந்திருச்சுப் பாத்தா, மேலெல்லாம் புவ்வு. என்னாடி! இவ்வளவு புவ்வு மேல விழுந்திச்சே, மேலு வலுச்சுச்சா? வலிக்கலயாண்டு எம்புருச் கேக்கலமா. அதுனால, நா் வந்துட்டேண்டட்டு சொன்னா.

ரெண்டாவது மகளப் பாத்து, நீ என்னம்மா வந்ததுண்டு கேட்டா. கேக்கவும், யம்மா! நானும் – வருசமெல்லாம் வயக்ககாட்ல வேல செய்யுறவங்களுக்குக் கஞ்சி செமந்துகிட்டுப் போவே.

ஒரு நா கூட – எம்புருசீ என்னயப் பாத்துட்டு, இவ்வளவு நாளாக் கஞ்சிய செமக்குறயே! ஒனக்கு கனக்குதா! கனக்கலியாண்டு என்னயக் கேக்கலயே, அவிங்கிட்ட இருந்து வாழ மாட்டேண்ட்டு வந்துட்டேமாண்டு, ரெண்டாவது மக சொல்லிட்டா.

கடசி மகளப் பாத்து, நீ என்னம்மா வந்ததுண்டு தாயி கேட்டா. கேக்கவும், யம்மா! கல்யாணம் முடுஞ்ச நாளையிலி -ருந்து இவ்வளவு சங்கிலியச் செமந்துகிட்டு இருக்கே. ஏண்டி! இவ்வளவு சங்கிலியச் செமந்துகிட்டு இருக்கியே. ஒ...ங் கழுத்து வலிக்குதா? வலிக்கலியாண்டு ஒரு தடவ கூட எம்புருசீ கேக்கலமா. அதா வந்திட்டேண்டு, கடசி மகளுஞ் சொல்லிட்டா.

சொல்லவும், அப்டித்தாண்டி மக்கா! ஒங்கப்பாவும் ரெண்டு வீட்ல போயி, ரெண்டுபடி உளுந்து வாங்கிட்டு வந்தாரு. அத ஆட்டிப் பெறக்கி, வட சுட்டே. சுட்டதில, ஒண்ண எடுத்துத் திண்டு பாத்தே. ருசியா இருந்திச்சு. பூராத்தயும் திண்டுபிட்டே. அவ்வளவயும் திண்டயே, ஒனக்கு வயிறு வலிச் சுச்சா? வலிக்கலியாண்டு ஒங்கப்பீ கேக்கலியே! இவங்ககிட்ட இருந்து வாழப்பிடாது, வாங்க மக்கா, எங்கிட்டாச்சும் போயிரலாம்ண்ட்டு, வனாந்தரத்துப் பக்கம் போனாங்களாம். போயி, காஞ்சு கெடந்திச்சுகளாம். திண்டு கொழுத்தா நண்டு செலவுல இருக்குமா?

இருக்காதுல்ல. அதுனால, நாலுபேரும் காட்ல, ஆளுக்கொரு பக்கம் திரியிராங்க. திரியயில, பார்வதி – பரமசிவன் ரெண்டுபேரும், பறக்கப்பட்ட பன்னீராயிரத்துக்கும் எரக்கப்பட்ட எண்ணாயிரத்துக்கும் படியளந்து வாராக.

வரயில, இவங்க தாயி – மக்க நாலு பேரும், காத்துல வாடி, வெயில்ல காஞ்சு, மழயில நனஞ்சு திரியிராளுக.

இவங்களப் பாத்திட்டு, பார்வதி மனசுல எரக்கம் உண்டாகி, அங்க பாருங்க நாதா! நாலு பொண்ணுக, இந்தக் காட்டுக்குள்ள திரியுரதண்டு சொல்லுச்சு. கிட்டப் போயி, என்னாண்டு கேட்டுட்டு வாங்கண்டு பார்வதி சொல்லுது. பிரியநாயகி சொல்லத் தட்டமாட்டாம, அவங்க கிட்டப் போறாரு.

போயி –, என்னாங்கம்மா, ஒத்தயில இந்தக் காட்டுக்குள்ள திரியுரிங்கண்டு கேட்டாரு. கேக்கவும், அதுக ஒண்ணொண்ணும் – அததுக கதைகளச் சொல்லுதுக. சொல்லவும் பரமசிவனுக்குக் கோவம் வந்து, அவங்களச் சபிக்கிறாரு.

எப்டிச் சபிக்கிராருண்டா, எப்டிண்டா! மூட்டப்பூச்சிகளாப் படைக்கிறாரு. படச்சு, கட்டுல்ல, நாலு மூலைக்கு ஒருத்தர நிக்க வச்சுறுராரு. அதா நம்மள இந்தப் புடுங்கு புடுங்குது. மூட்ட கடுச்சா நம்மளால தாங்கா முடியுதா? அதா, பொறுப்பில்லாட்டி – புடுங்கு பெத்து அலைய வேண்டியதா. பொம்பள! எண்ணக்கிம் பொறுப்பா இருக்கணும்.

3. ராசாக்கிளி

ஒரு நாட்ல – ஒரு ராசா இருந்தாரு. அந்த ராசாவுக்கு ஒரு மந்திரி இருந்தாரு. காடாரு மாசம் – வீ டாறு மாசம் ஆண்டுகிட்டு இருக்காரு. காட்ல ஆறுமாசம் வாழணும். நாட்ல ஆறு மாசம் வாழணுங்றது முனிவரோட சாபம்.

ராசா காட்ல இருக்கயில, மந்திரி நாட்ல எல்லாத்தயும் பாத்துக்கிருவாரு. ராசா காட்ல இருக்கபோது, ராசாவுக்கு தொணக்கி, ஒரு ஆசாரிய போகச் சொல்வாரு. எப்பயுமே; அந்த ஆசாரிதா ராசாகூடப் போவா.

அப்ப: ராசாவுக்கு ஒரு கூடு, ஆசாரிக்கு ஒரு கூடு. ராசா கூடக் கிளியும் போகுது. போயி –, காட்ல இருக்காங்க. இருக்கயில, அந்த வனத்ல, ஒரு மரத்ல ஆங்கிளியும் – பொங்கிளியும் ஆனந்தமா கொஞ்சிக் கொலாவிக்கிட்டிருக்கு. இத; ராசா பாத்தாரு, மனசுல சந்தோசம் வந்து, தம் பொண்டாட்டிய நெனச்சுக்கிட்டு, கூட்ட விட்டு வெளிய போனாரு.

போகவும் –, இந்த ஆசாரிப்பய, ராசா கூட்டுக்குள்ள மொளஞ்சுகிட்டு, நேரா ராணிகிட்ட வாரா. வரவும் –, ஆறுமாசம் முடியுங்குள்ள ராசா வந்திட்டாருண்டு, ராணி அரமணக்குள்ள நொளய விட மாட்டேங்குறா.

அப்ப: ராசா! அங்கிட்டெல்லாம் அலஞ்சுட்டு, கூட்டுக்குத் திரும்பி வந்து பாக்கயில, கூடு இல்ல. அதுலதா, ஆசாரி நொளஞ்சு போயிட்டானே. ராசா காட்டுக்குள்ள அலயுறாரு. கிளி பறந்து போயி, ஆயிரங் கிளிகளோட சேந்துகிருச்சு.

அந்தக் காட்ல, ஒரு வேட், இந்தக் கிளிகளுக்கு கண்ணி – வச்சிருக்கா். வைக்கயில, ஒருநா, இந்த ஆயிரங்கிளிகளும் கண்ணில பட்டுக்கிருச்சு. பட்டுக்கிட்டு, வலையில இருந்து தப்பிக்கறதுக்கு வழி தேடுதுக. அப்ப, இந்த ராசாக்கிளி, நம்ம இப்ப – வலையில பட்டுக்கிட்டோம். இதுல இருந்து தப்பிக்கணும்ண்டா, நம்ம ஒண்ணு செய்யணும்ண்டு ராசாக்கிளி சொல்லுச்சு. சொல்லவும் –, என்னா செய்யணும்ண்டு கிளிக கேட்டுச்சுக.

அப்ப: வலையில நம்மெல்லாம் செத்தது மாதிரி கெடக்கணும். வேட் வந்து பாத்திட்டு, கிளிக செத்துப் போச்சுண்டு நெனச்சு, நம்மள ஒண்ணொண்ணா எடுத்துக் கீழ போடுவா். போடயில, மொதல்ல விழுகுற கிளி, எண்ணணும், சரியா, ஆயிரஞ்சத்தம் கேக்கவும், பறந்திறணும்ண்டு சொல்லுச்சு. சொல்லவும், கிளிக – சரிண்ட்டு இருக்குக.

விடியவும் வேட் வந்தா். கிளிக வலையில மாட்டிக்கிருச்ண்ட சந்தோசத்துல வரா். மரத்ல ஏறிப்பாக்கயில, கிளிக செத்துக்கெடக்குக. செத்துப் போச்சேண்ட கவலையில, ஒண்ணொண்ணா எடுத்துப் போட்டா். போடப் – போட மொதல்ல விழுந்த கிளி எண்ணிக்கிட்டிருக்கு. தொள்ளாயிரத்தித் தொன்னுத்தொம்பது கிளிக விழுந்திருச்சு. இன்னும் ஒரு கிளி விழுந்தா, பறந்திரலாம்ண்டு இருக்கயில, அவ் இடுப்ல இருந்த கத்தி, நழுவி டம்ண்டு விழுந்திருச்சு.

விழுகவும், ஆயிரங்கிளியும் விழுந்திருச்சுண்ட்டு, கீழ கெடந்த கிளிக விருட்ண்டு பறந்திருச்சுக. அப்ப: ராசாக்கிளி, வேட் கையில இருக்கு. இந்தக் கிளிக நம்மள ஏமாத்திருச்சேண்ட கோவத்ல, ராசாக்கிளியப் புடிச்சு கழுத்த திருகினா், திருகவும்,

அட வேடா! என்னயக் கொல்லாத

செட்டியாரு கடயில குடுத்திட்டு – நீ

வேணும்ண்றத வாங்கிக்க – ண்டு

ராசாக்கிளி சொல்லுச்சு. சொல்லவும், கிளியப் புடிச்சுக்கிட்டு, செட்டியாரு கடைக்குப் போறர். போயி, செட்டியாருகிட்ட, செட்டியாரண்ணே! என்னய வாங்கிக்கிட்டு; இந்த வேடனுக்கு வேணும்ண்றதைக் குடுண்ணேண்டு கிளி சொல்லுச்சு. சொல்லவும், செட்டியாரு, கிளிய வாங்கிக்கிட்டு வேடனுக்கு வேணும்ண்றதைக் குடுத்திட்டாரு. கிளிய, கடைக்கு முன்னால, ஒரு கூட்ல வச்சுத் தொங்க விட்டுட்டாரு செட்டியாரு.

அப்ப கிளி, அங்கிட்டு வீதில போறவங்களப் பாத்து,

அண்ணே! இங்க வாங்க

அக்கா! இங்க வாங்க

நாங்க உண்டனா சாமர் தரோம்ண்டு

கிளி சொல்லுது. சொல்லவும் –, கிளி பேசுதுடாண்ட்டு, கடைக்குக் கூட்டம் நெறயா வருது. நெறயா ஏவாரம் ஓடுது.

இருக்கயில, அந்த ஊர்ல பொன்னிங்ற தாசி ஒருத்தி இருந்தா. அவகிட்டப் போறவங்க, ஆயிரம் பொன் குடுக்கணும். அந்தக் கடக்காரச் செட்டியும் பொன்னிங்ற தாசி வீட்டுக்குப் போவாரு. வருவாரு. ஒருநா –, அந்த ஊரு எளந்தாரிக, ஆத்ல மாடு குளுப்பாட்டிக்கிட்டிருக்காங்க. அதுல ஒருத்த், பொன்னிங்ற தாசி வீட்டுக்குப் போனது போல கனாக்கண்டேண்டு சொன்னர். இதக் கேட்டுக்கிட்டிருந்த தாசியோட தோழிக, இதக் கேட்டுட்டுப் போயி, பொன்னிங்ற தாசிகிட்டச் சொல்லிப்பிட்டாங்க.

சொல்லவும் –, அவங்ககிட்ட, ஆயிரம் பொன் வாங்கணும்ண்டு, தாசி ஊரக் கூட்டிட்டா. பைசலும் தீரமாட்டேங்குது. யாராலயும் தீர்க்கமுடியல. எப்டித் தீரும். தீரல.

அப்ப: பைசலுக்கு ராசாக்கிளி வந்திச்சு. வந்து, ஆயிரம் பொன்ன, கம்பத்ல கட்டித் தொங்க விடச் சொல்லுச்சு. கட்டித் தொங்கவிட்டாங்க. அதுக்குக் கீழ கண்ணாடிய வச்சு, அந்தக் கண்ணாடில படுறமாதிரி வச்சாங்க. வச்சிட்டு. பொன்னிங்ற தாசியக் கூப்ட்டு, ஆயிரம் பொன்ன எடுத்துகிறச் சொல்லுச்சு கிளி. சொல்லவும், அதெப்டி எடுக்க முடியுங்கிறா தாசி. அப்ப, கிளி – ஒன்னய கனவுலதான பாத்தீ. நேராப் பாக்கலயில. கனவுல பாத்ததுக்கு, இப்டித்தீ தர முடியும்ண்டு கிளி சொல்லிருச்சு. பைசலும் முடிஞ்சிருச்சு. கிளிமேல, தாசி கோவமா இருக்கா. அப்ப, அவ!

ஒம்மண்டயக் கொறிக்கலண்டா நானு, பொன்னிங்ற தாசி இல்லண்டு சம்பிராயம் போடுறா. அதுக்குக் கிளி, கந்தத் துணியக் கட்டி, ஒன்னயக் கழுத மேல ஊர்வலம் வர வக்யலண்டா நானு விக்கிரமராசா கிளி இல்லண்டு கிளி சொல்லுது. இப்டி இருக்கயில, இந்தப் பொன்னிங்ற தாசி, தெனமும் குளுச்சு முழுகிட்டு, காளி கோயிலுக்குப் போயி –, "தாயே! நீ உசுரோட கைலாசம் போகணும்ண்டு" சாமி கும்புடுவாளாம்.

இந்தச் சமயத்ல, கடக்காரச் செட்டி மகீ, பொன்னிங்ற தாசி வீட்டுக்குப் போறீ, போகவும், செட்டி மகங்கிட்ட நல்லதக்-கில்லதப் பேசி "நீ கிளிக் கொளம்பு சாப்டணும், ஒங்க கடயில இருக்ற கிளியக் குடுங்கண்டு கேட்டா. செட்டி மகனும் கிளியக் கொண்டு வந்து தாசிக்கிட்டக் குடுத்திட்டீ. ஒண்ணும் பேசாம,

கிளியக்' குடுத்திட்டா. குடுக்கலண்டா முடியுமா! இவனுக்குக் காரியம் முடியணுமே! குடுத்திட்டா.

குடுக்கவும், கிளிய அடிச்சு, கொளம்பு காச்சச் சொல்லிட்டு, தாசி, கோயிலுக்குப் போயிட்டா. எல்லாக் காரியத்தயும் செஞ்சுட்டு, வேலக்காரி, கிளியப் புடிக்கப் போனா. போயிப் பாக்கயில, கிளி செத்தது போல கெடக்கு. கிளி செத்துப் போச்சுண்டு, வெளிய எடுத்துப் போட்டா. வெளிய எடுத்துப் போடவும் கிளி பறந்திருச்சு.

தாசி, நம்மள வைவாண்ட்டு, அவக்குத் – தொவக்குண்டு ஒரு கோழியப் புடிச்சு, அடிச்சுப் பறிச்சு, அறுத்துக் – கிருத்து கொளம்பு வச்சு எரக்கி வச்சிட்டா.

அப்ப! கோயில்ல இருந்து தாசி வந்தா. வரவும் போட்டு வச்சா. போட்டு வக்யவும், திண்டுகிட்டு, கிளியே! ஓம் மண்டய கொறிச்சுட்டேன்ல்ல. இப்ப; நிய்யி செயிச்சயா? நாஞ் செயிச்சனா? – ண்டு பேசுறா. இதக் கிளி கேட்டுக்கிட்டிருக்கு. அதுக்குப் பெறகு, அவ எங்கெங்க போறாளோ, அங்கெல்லாம் கிளியும் போகுது, அண்ணக்கி விடியவும், தாசி, கோயிலுக்குப் போறா. போயி – தாயே! நா உசுரோட கைலாசம் போகணும்டு சொல்லிக் கும்புடுறா. இதக் கிளி கேட்டுக்கிட்டு, மரத்த விட்டு எரங்கி, செலக்கிப் பின்னால வந்து ஒக்காந்துகிருச்சு. ஒக்காந்துகிட்டு, பொன்னிங்ற தாசி! நிய்யி உசுரோடதான கைலாசம் போகணும். இப்ப உடுத்தி இருக்ற துணிகளக் கழத்திப் போட்டுட்டு,

கந்தத் துணி யுடுத்தி

கரும்புள்ளி – செம்புள்ளி குத்தி

கழுத மேலேறி வந்தா, நிய்யி –

உசுரோட கைலாசம் போகலாம்ண்டு சொல்லுது. சொல்லவும் –, காளிதா் பேசுதுண்டட்டு, வீட்டுக்குப் போயி –, சொத்துகள வித்து, தான தர்மஞ் செஞ்சுட்டு, கரும்புள்ளி – செம்புள்ளி குத்தி, கழுத மேல ஏறி வாரா. வரயில, கிளி வீதியோரத்ல இருந்த மரத்து மேல ஒக்காந்துகிட்டு, ஏ... பொன்னிங்ற தாசி! சபதத்ல, நிய்யி செயிச்சியா? நாஞ் செயிச்சனா? ஒசுச்சுப் பாருண்டு கேட்டுச்சு. கிளியப் பாத்தா.

கிளியப் பாக்கவும் – இவளுக்குப் பாதி உசுரு போச்சு. கிளிகிட்டத் தோத்துப் போனோமேண்ட்டு, அவமானம் பொறுக்க மாட்டாம, அதே எடத்ல நாண்டுகிட்டுச் செத்துப் போயிட்டா. அதப் பாக்க விக்கிரமராசா வந்திருக்காரு.

அந்தக் கூட்டத்ல, விக்கிரம ராசாவ, கிளி பாத்திருச்சு. அவந்தோள்ல போயி ஒக்காந்திச்சு. ஒக்காரவும் ராசாவுக்கு மகிழ்ச்சி பொறுக்கல. அப்ப, ராசாவும் – கிளியும் அரமணக்கிப் போறாங்க.

போற வழில, ஆசாரி செம்மறிக் கெடாய்கள முட்டவிட்டுப் பாத்துக்கிட்டிருக்கா. அப்ப: ராசா வளத்த கெடா, ஆசாரி வளத்த கெடாக்கூடமுட்டுது. முட்டயில, ஆசாரி கெடா தோத்துப் போச்சு. கெடா தோத்துப் போகவும், ஆசாரி, கூட்டவிட்டு வெளிய வந்தா. வெளிய வரவும் –, அந்தக் கூட்டுக்குள்ள ராசா போயி மொளஞ்சுகிட்டாரு. பெறகு, தொரோகஞ் செஞ்ச ஆசாரிய, சுண்ணாம்புக் காளவாசல்ல வச்சு நீத்துப்பிட்டு, அரமணயில இருந்து நல்லாப் பொளச்சாங்களாம்.

4. வீம்பும் வீராப்பும்

ஒரு ஊர்ல – ஒரு பண்ணையாரு இருந்தாரு. அவருக்கு நெறயா நெலங்க. நெலத்ல வேல செய்ய, ஒருத்தன வச்சிருக்காரு. அவ் சின்னப் பிள்ளயில இருந்து, பண்ணயில வேல செஞ்சுகிட்டு இருக்கா.

இருக்கயில – பெரியாளாயிட்டா. பெரியாளாகவும் –, பண்ணயாரு, இவனுக்கு, கல்யாணம் பண்ணனும்ண்டு நெனச்சாரு. நெனச்சு, 'ஒரு பொண்ணப் பாத்து, கல்யாணஞ் செஞ்சு வச்சுட்டாரு. கல்யாணம் பண்ணி வச்சிட்டு, தவசந்-தானியத்தக் குடுத்து, தனிக்குடித்தனம் வச்சுட்டாரு.

கல்யாணமாகி, தனிக்குடித்தனம் நடத்துன அண்ணக்கிருந்து, வேலைக்குப் போகாம, வீட்ல ஒக்காந்து திண்டுட்டுருக்காங்க. இருக்கயில, தவசந் – தானியம் தீந்துபோச்சு. தீந்து போகவும், பண்ணயாருகிட்டப் போயி கேட்டா. கேக்கவும் –, பண்ணயாரு இல்லண்டு சொல்லிட்டாரு.

குடுக்கயில, வேலக்கிப் போகாம வீட்ல ஒக்காந்துகிட்டுத் திண்டாங்க. அது தீந்துபோச்ச. தீந்து போகவும் கஞ்சிக்கில்லாமப் போச்சு. சும்மா போயிக் கேட்டா பண்ணயாரு குடுப்பாரா? குடுக்கல்ல. குடுக்காம இருக்கவும், இவங்களும், எத்தன நாளாக்கி பட்னியா கெடப்பாங்க.

இப்டி –, இழுத்துக்க – பரிச்சுக்கண்டு இருக்கயில, நல்ல நாள் வந்திருச்சு. நல்ல நாளக்கி, நெல்லு வேணும்ண்டு, ரெண்டுபேரும், நெல்லு பெறக்கப் போகணும்ண்டு நெனக்கிறாங்க.

அப்ப –, நிய்யி போயி, நெல்லு பெறக்கிட்டு வா. நா் போயி, எண்ண கொண்டுட்டு வரே். நல்ல நாளாக்கி, பணியாரஞ் சுடலாம்ண்டு, புருசீ சொல்றா். சொல்லவும், சரிண்டு, ரெண்டு பேரும் போறாங்க.

இவ போயி, அறுத்த வயல்ல, ஒண்ணொன்னாப் பெறக்கி, ரெண்டு படி நெல்லு கொண்ட்டு வந்திட்டா. எண்ணக்கி – அவ் ராத்ரில போயி, கோயில்கள்ல எரியிற வெளக்குகள அமத்திட்டு, சட்டிகள்ல இருக்ற எண்ணய வடுச்சு – வடுச்சு, ஒரு படி எண்ண கொண்டுட்டு வந்திட்டா்.

அப்ப – நல்லநா வருது. நெல்லக் குத்தி; ஆட்டி பணியாரத்துக்குப் போட்டாங்க. போட்டு, விடியங்காட்டில எந்திரிச்சு பணியாரஞ் சுடுறா. சுட்டு – கிட்டு வட்டில அடுக்கி வச்சிருக்கா.

வச்சிட்டு, ரெண்டு பேரும் திங்கப் போகயில, ரெண்டு பேருக்கும் சண்ட வந்திருச்சு. நாந்தான நெல்லு கொண்டு வந்தே். நா் நெல்லு கொண்டு வரலேண்டா பணியாரஞ் சுட முடியுமா? அதுக்கு, எனக்கு ரெண்டு பங்கு பணியாரம் வேணும்ண்டு பொண்டாட்டி சொல்றா. அதுக்கு –, நாந்தான எண்ணை கொண்டு வந்தே். எண்ணயில்லண்டா பணியாரஞ்சுட முடியுமா? அதுனால எனக்குத்தா் ரெண்டுபங்கு வேணும்ங்றா், புருசெ.

இப்டி – இரண்டு பேருக்குள்ள சண்ட வந்து; ரெண்டு பேருமே பணியாரத்த திங்காம இருக்காங்க. அப்ப –, ரெண்டு பேருமே, ஆரு மொதல்ல பேசுறாங்களோ அவங்களுக்கு, ஒரு

பங்கு பணியாரம், போசாம இருக்கவங்களுக்கு ரெண்டு பங்கு பணியாரம்ண்டு பேசி, ரெண்டு பேரும் பேசாம இருக்காங்க.

பணியாரம் சுட்டுக்கெடக்கு. ரெண்டு பேரும் ஆளுக்கொரு மூலையில ஒக்காந்திருக்காங்க. பேசுனாத்தே – பணியாரம் போச்சே. அவ மொதல்ல பேசட்டும்ண்டு இவ் நெனக்கிறா். அவ் மொதல்ல பேசட்டும்ண்டு இவ நெனக்கிறா. இப்டி, நெனச்சுக்கிட்டு இருக்காங்க. எங்க பேசப் போறாங்க? பேசுனாப் பணியாரம் போச்சே;

இப்டி இருக்கயில – அடுத்த வீட்டுக்காரி திய்யி எடுக்க வந்தா. வரயில –, ரெண்டு பேரும் பேசாம ஒக்காந்திருந்தாங்க. கூப்ட்டுப் பாத்தா. ஒருத்தரும் பேசல. தொட்டு அசச்சுப் பாத்தா. அப்பவும் பேசல. நறுக்கா – நாப்பது பணியாரத்த எடுத்து வட்டில வச்சு திங்கிறா.

திங்கயில –, புருச் சத்தம் போடட்டும்ண்டு பொண்டாட்டி இருக்கா. பொண்டாட்டி சத்தம் போடட்டும்ண்டு புருச் இருக்கா். ரெண்டு பேரும் பேசல. அடுத்த வீட்டுக்காரி, வகுத்துக்குப் பணியாரத்த திண்டு, வெளில போயி, எல்லாருகிட்டயும் சொல்லிட்டா. எல்லாரும் ஓடியாந்து சத்தம் போட்டுக் கூப்ட்டாங்க. ஏ... இன்னாரு!! ஏ... இன்னாரு பொண்டாட்டி!! எந்திரிங்க! எந்திரிங்கண்டு சத்தம் போட்டாங்க. அப்பவும் எந்திரிக்கல.

எந்திரிக்காம இருக்கவும் –, ரெண்டு பேரும் செத்துப் போயிட்டாங்களேண்டு பேசிக்கிட்டு, பாடயக் கட்டுறாங்க. குளுப்பாட்டி – கிளுப்பாட்டி பாடயில தூக்கி வச்சாங்க.

அப்பயும் எந்திரிக்காம இருக்கவும், சுடுகாட்டுக்குத் தூக்கிக்கிட்டுப் போறாங்க.

சுடுகாட்டுக்குக் கொண்டுபோயி; வெறகுகள அடுக்கி, அது மேல ரெண்டு வேரயும் தூக்கி வக்கிறாங்க. அப்பவும் ரெண்டுவேரும் பேசமாட்டேங்குறாங்க. பேசுனாத்தா பணியாரம் போச்சே. பணியாரங் கூடக் கெடைக்கணும்ண்டு பேசாம இருக்காங்க. புருசனும் – பொண்டாட்டியும் பணியாரத்த நெனச்சுக்கிட்டிருக்காங்க. ஊருக்காரங்க, செத்துப் போனாங்கண்டு எரிக்கப் போறாங்க.

என்னன்னா செஞ்சாலும் எந்திரிக்காம, பேசாம இருக்கவும் திய்ய மூட்டுவோம்ண்டு, திய்ய மூட்டுனாங்க. மூட்டுன திய்யி நல்லா எரியுது.

திய்யி எரியவும் –, இவங்களுக்கு பயம் வந்திருச்சு. பொம்பள பேச மாட்டா போலிருக்கு; நம்ம ஏ... வீணாச் சாகணும்ண்டு நெனச்சு, சத்தத்தப் போட்டு எந்திரிச்சா. அப்பயும் பொம்பள பேசாமப் படுத்துக் கெடக்கா. திய்யி எரியுது. மேல பொசுக்கவும் அலறியடிச்சு எந்திரிச்சா. எந்திரிக்கவும், அவள, ஆள் ஆளுக்கு வஞ்சு – பேசி, வீட்டுல கொண்டு வந்து விட்டுட்டாங்க.

பொம்பளக்கி எம்புட்டு அரங்கத்தனம்? வீம்பு – வீராப்பு, இப்டிப் பொம்பளய என்னா செய்யுறது? பெறகு, இவள என்னா செய்யுறதுண்டு, கூட்டி வச்சுப் பொளச்சானாம்.

5. அடங்காப் பிடாரி

ஒரு ஊர்ல – ஒரு அடங்காப் பிடாரி இருந்தா. ஒருத்தங்கூட, அவளக் கல்யாணம் முடிக்க வரல. வராம இருக்கவும், அவளோட தாயிக்கு ஒரே வருத்தம். இவள எங்குடாச்சும் புடுச்சுக் குடுக்கலாம்ண்டா, ஒருத்தங் கூட வரமாட்டேங்குறானேண்டு வருத்தப்பட்டுக்கிட்டிருக்கா.

ஒருநா, தொல தூரத்ல இருந்து ஒருத்த், பொண்ணு கேட்டு வந்தா். இந்தச் சந்தா்ப்பத்த விடக் கூடாதுண்டு, சரி பொண்ணத் தரோம்ண்டு சொல்லிட்டா. சொல்லவும் கலி யாணம் முடிஞ்சிருச்சு. புருச் வீட்டுக்கு வந்தா. வந்ததும், வராததுமா, யாரிடி? மாமியாண்டறவ, அவ வீட்ட விட்டு வெளியேறுடிண்டு சொன்னா. அதிகாரத்த மாமியா மேல காட்டுறா.

அடங்காப்பிடாரி பேசுன வார்த்த, அம்மாவயும் – மகனயும் அசத்திருச்சு. ரெம்பக் கவலப்பட்டு, என்னாடா மகனே! இப்படிண்டு பேசிக்கிட்டிருக்கயில, மாமியா போறாளா? இல்ல, நா் போகவாண்டு பேசிக்கிட்டே, வெளியேறி, பெறந்த வீட்டுக்குப் போயிட்டா.

வீட்ல போகவும், அம்மாகாரி, தெரிஞ்சது தானண்ட்டு, என்னமாண்டு கேட்டா. கேக்கவும், நிய்யி எங்கூட வரணும்ண்டா. அம்மாகாரி, பதுலப் பேசாம, இவ கூட வர்ரா.

வீட்டுக்கு வந்தாங்க. இவங்க தாயி மக், அவங்க தாயி மக, ஒரே வீட்ல இருக்காங்க. இருக்கயில, நாளுக்கு நாளு மாமியாளக்

கொடுமப் படுத்துறா. எப்டியும், இவளக் கொண்டுபிறணும்ண்டு நெனச்சுக்கிட்டிருக்கா.

அப்டி இருக்கயில, ஒருநா, புருசனுக்குச் சாப்பாடு போட்டுக்கிட்டே, இண்ணக்கி ராத்ரில எப்டியாச்சும், ஒங்கம்மாளக் கொண்டுபிடணும்ண்டு சொன்னா. இதச் செஞ்சாத்தா ஒங்ககூட இன்பமா இருப்பேண்டு சொல்றா. இவனும், மனசுல ஒரு திட்டத்தப் போட்டுக்கிட்டே, சரித்தேண்டு சொல்லிட்டா.

கெழவிக ரெண்டுபேருந் தனியா ஒரு வீட்டுக்குள்ள படுத்துக்கெடக்காங்க. சின்னஞ் சிறுசுக, அங்குட்டுத் தனியா படுக்கட்டும்ண்டு நெனச்சு, நல்லாப் படுத்து ஒரங்குறாங்க. ஒரங்கயில, இருட்ல –

மாமியாள அடயாளங் கண்டுபிடிக்கிறதுக்காக, மாமியா காலுல வெள்ளத் துணியக் கெட்டி விட்டுருக்கா. தம் புருசங் கிட்ட வந்து, ஒங்கம்மா காலுல வெள்ளத் துணியக் கெட்டி வச்சிருக்கே. அடயாளம் பாத்துக் கொல்லு, தவறுதலா, எங்கம்மாவக் கொண்டுபிடாதண்டு சொல்லி போகச் சொன்னா. சொல்லவும், இவ், பொண்டாட்டிக்குத் தெரியாமப் போயி, அம்மா காலுல கெட்டி இருந்த வெள்ளத் துணியக் கழத்தி, மாமியா காலுல கெட்டி விட்டுட்டு வந்திட்டா.

நல்லா நடுக்குறிச் சாமத்ல, புருசனும் – பொண்டாட்டியும் எந்திருச்சுப் போறாங்க. பெரீ.....ய கட்டயப் புருசங்கிட்டக் குடுத்து, மாமியாள, மண்டயில பாத்து அடிக்கச் சொல்றா. இவனும் போயி, வெள்ளத் துணி கட்டுன கால அடியாளம் பாத்து, மண்டயில ஒரே போடு போட்டு, கொண்டுபிட்டு வந்திட்டா.

அண்ணக்கி, விடியுங்குள்ள அடங்காப்பிடாரி எந்திரிச்சிட்டா. எந்திரிச்சு மோரு கடயிரா. எப்டிச் சொல்லிக் கடையிராண்டா,

அல்லயும்மில்ல தொல்லயும் மில்ல

அலஞ்சு வரப் பிள்ளயும் மில்ல

சிலுப்பு மெத்தா சிலுப்பு – ண்டு

சொல்லிக்கிட்டே மோரு கடயிரா. இதக் கேட்ட புருசு,

நிய்யி அங்க சிலுப்புடி!

ங்காத்தாங்குறதும், ங்கோத்தாங்குறதும்

விடிஞ்சாத் தெரியும்ண்றா்.

நல்லா விடியவும், அடங்காப் பிடாரி போயிப் பாத்தா. பாத்திட்டு, என்னா ஆம்பள? எங்கம்மாவக் கொண்டு போட்டிருக்கண்டு கேட்டா. கேக்கவும் – நா் என்னா செய்யுறது. நிய்யி கெட்டி வச்சிருந்த அடையாளத் துணி இருந்தவளத்தா் அடிச்சேண்டு சொன்னா்.

சொல்லவும், சரி! ஆனது ஆச்சு, போனது போச்சு. பெதைக்கிறதுக்கு வழியப் பாருண்டு சொன்னா. இங்ஙன விழுந்திட்டா – அங்ஙன விழுந்திட்டாண்டு, சாக்குப் போக்குச் சொல்லி, ஊரக் கூட்டிப் பெதச்சிட்டாங்க.

பெறகும், அடங்காபபிடாரிக்கு, மாமியா மேல இருந்த ஆத்ரம் போகல. எப்டியாசசும் இவள ஒழிச்சுப்பிடணும்ண்டு வழி பாத்துக்கிட்டிருக்கா.

ஒருநா ராத்ரி, அன்யோன்யமான நேரத்ல, புருசன இறுக்கிப் புடுச்சுக்கிட்டு, இண்ணைக்கி எப்டியாச்சம் ஒங்கம்மாவ உசுரோட சாக்குல கெட்டி, சுடுகாட்டுல கொண்டு போயி எரிக்கணும்ண்டு சொல்றா. அன்யோன்யமான நேரத்ல சொன்னாக் கேப்பா்ண்டு சொன்னா. சொல்லவும், அவனும் சரிண்டு, சாக்குல கட்டி, சுடுகாட்டுக்குத் தூக்கிட்டுப் போறா். சுடுகாட்ல வச்சுட்டு, வெறகு வெட்டப் போயிட்டா். அப்ப! என்னயக் காப்பாத்துங்க. காப்பாத்துங்கண்டு சத்தம் போடுறா.

அப்ப, அந்த வழியா போனவ், என்னயக் காப்பாத்துங்கண்ட சத்தங் கேட்டுப் போயி, அவுத்து விட்டுட்டா். வெளிய வந்து, வைக்கோல அள்ளி, சாக்கு நெறயாக் கெட்டி வச்சுட்டு, பக்கத்ல இருந்த காளி கோயிலுக்குள்ள போயி ஒளிஞ்சுக்கிட்டா.

அந்தச் சமயத்ல, மூணு களவாணிக, நகநட்டுகள களவாண்டு வந்து, பகுந்துகிட்டு இருந்தாங்க. இந்தக் கெழவி, செலக்கிப் பின்னால இருந்து யாருடா? என்னெடத்ல இருக்கதுண்டு சொன்னா. சொல்லவும், யாரோ ஆளுக வந்துட்டாங்கண்டு, நகநட்டுகள போட்டுட்டு ஓடிப் போயிட்டாங்க. ஓடிப் போயிறவும், நகநட்டுகள அள்ளிக்கிட்டு, மக் வீட்டுக்கு வந்தா. வாம்மா! வா! எப்டிம்மா வந்தேண்டு மக் கேட்டா். மகனே! சுடுகாட்ல வச்சு என்னய எரிச்சுட்டயா. அப்டியே மேலோகத்துக்குப் போனே். அங்க! எங்கப்பா, எங்கண்ணே, எங்கம்மா, எந்தம்பி, எம்புருசு எல்லாத்தயும் பாத்தே். பாத்து, எந்நெலமயச் சொன்னே்.

நாங்க இங்க இருக்கயில, நிய்யி எதுக்கு அங்க கசுட்டப்படுறேண்டு – எம்மேல எரக்கப்பட்டு, இந்த நகநட்டுகள அள்ளித் தந்தாங்க. வாங்கிட்டு வந்தேண்டு சொன்னா.

மாமியா கொண்டு வந்த நகநட்டுகளப் பாத்திட்டு, அடங்காப்பிடாரிக்கு ஆச வந்திருச்சு. நானும் போயி, எங்கப்பா, எங்கம்மாகிட்ட நகநட்டு வாங்கிட்டு வரணும் என்னயும் சுடுகாட்டுல கொண்டு போயி எரிங்கண்டு சொன்னா.

சரிண்டு, அடங்காப்பிடாரியச் சாக்குல கெட்டித் தூக்கிட்டுப் போறா். சுடுகாட்ல எரக்கி வச்சுத் திய வச்சுட்டா். அடங்காப்பிடாரி எரிஞ்சு சாம்பலாப் போனா. போக மாட்டாளா பின்ன!

நாளாச்சு. அடங்காப்பிடாரி வரல. ஏம்மா! நிய்யி ரெண்டு மூணு நாள்ல வந்துட்டியே. இன்னும் எம்பொண்டாட்டியக் காணம்ண்டு கெழவிகிட்டக் கேட்டா். கேக்கவும்,

மகனே! என்னய சுடுகாட்டுக்குக் கொண்டு போன, நிய்யி, அங்கிட்டுப் போயிறவும், அந்த வழியா ஒருத்த் வந்தா். அவ் சாக்க அவுத்து விட்டா். வெளிய வந்து, பக்கத்ல இருந்த காளி கோயிலுக்குப் போனே. அங்க – களவாணிக, நகநட்டுகளப் போட்டுப் பகுந்துகிட்டிருந்தாங்க. யாருடாண்ட்டு கேட்டே? போட்டுட்டு ஓடிப் போயிட்டாங்க. அள்ளிக் கிட்டு வந்தேண்டு மகங்கிட்டச் சொன்னா. பெறகு, தாயும் மகனும் நல்லாப் பொளச்சாங்களாம். இவ, வஞ்சகக்காரி தியில எரிஞ்சு செத்தா. பாவம்! மாமியாளக் கரிச்சுக் கொட்டலாமா?

6. நொறுக்குத் தீனி

ஒரு ஊர்ல, மாமியாளும் – மருமகளும் இருந்தாங்க. ரெண்டு பேருமே கைம்பொண்டாட்டிக. சொத்து பூராவும் மாமியா பேருல இருக்கு. அதனால, மாமியா, மருமக மேல அதிகாரஞ் செய்ய ஆரம்பிச்சிட்டா.

மாமியா, நொறுக்குத் தீனி எக்கச் செக்கமாத் திம்பாளாம். எப்பப் பார்த்தாலும் திண்டுகிட்டே இருப்பாளாம். திங்கறத மருமகளுக்குத் தரவே மாட்டாளாம். மருமகளும் பொறுத்துப் – பொறுத்துப் பாத்திட்டு, ஒரு நாளக்கி, இவள நல்லா ஏமாத்தணும்ண்டு நெனச்சுக்கிட்டிருந்தா. இருக்கயில, மாமியா பயறு வேக வச்சிட்டு, கடைக்குப் போயிட்டா, போகவும்.

இந்தச் சமயம் பாத்து, பயறெல்லாத்தயும் மோந்து, பானக்குள்ள போட்டுக்கிட்டு மருமக தண்ணி எடுக்க ஆத்துக்குப் போயிட்டா. மாமியா வந்து பாக்கயில, வெந்துகிட்டிருந்த பயறக் காணம். 'அடி பாதகத்தி! அவ வாயில மண்ணபோட, பூராத்தயும் அள்ளிக்கிட்டுப் போயிட்டாளே! வரட்டும் பேசிக்கிறேண்டு, கோவத்தோட இருக்கா.

இங்க தண்ணியெடுக்கப் போனவ, ஆத்தங்கரயில இருந்த பிள்ளாரு கோயில்ல ஒக்காந்து திண்டுகிட்டிருக்கா. இதப் பாத்த பிள்ளாரு சாமி, மளிச்சிண்டு வெளிய தவ்வி, இவ முன்னால ஒக்காந்து, எனக்கு கொஞ்சம் குடுண்டு கேட்டுச்சு. இவ, தர மாட்டேண்ட்டு, பயறு பூராத்தயும் திண்டுபிட்டு, தண்ணிய எடுத்துக்கிட்டு வீட்டுக்கு வந்திட்டா. பயறு தர மாட்டேண்டதனால, பிள்ளாரு, அண்ணைக்கிருந்து கோயிலுக்குள்ள போகாம, வெளியவே ஒக்காந்துகிட்டிருந்திச்சு அந்த பிள்ளாரு போகவே இல்ல. போக மாட்டேண்டுது.

ஊர்ல, சக்கிலியன விட்டுச் சாட்ட சொல்லிட்டாங்க. எப்டிண்டா – ஊர்ல இருக்ற எல்லாருந் தனித்தனியா வந்து, பிள்ளாரப்பன கோயிலுக்குள்ள போக வைக்கணும்ண்டு சக்கிலிய் சாட்டுறா்.

அந்தப்படி, சின்னப் பிள்ளைக மொதல் பெரியாளுக வர இருக்ற ஆம்பள – பொம்பள எல்லாரும் வந்து, தனித்தனியா கும்பிட்டு வணங்கி, கோயிலுக்குள்ள போங்க பிள்ளாரேண்டு சொன்னாங்க. யாரு சொல்லுக்கும் பிள்ளாரு கட்டுப்பட மாட்டேங்குது. உள்ளயும் போக மாட்டேங்குது.

கடசியா, இன்னும் யாராவது வராம இருக்காங்களாண்டு பூசாரி கேட்டாரு. நொறுக்குத் தீனி திங்கிறவ, மருமக வல்லண்டு சொன்னாங்க.

சொல்லவும், அவளப் போயிக் கூட்டிட்டு வாங்கண்டு சொன்னாரு. சொல்லவும், கூட்டத்ல ஒரு ஆளப் போகச் சொன்னாங்க. சொல்லவும், ஒருத்த் போயிக் கூட்டிக்கிட்டு வந்தா். அவ வாரா,

வந்தவ, நேரா கோயிலுக்கு முன்னால போனா. இவளப் பாத்திட்டு பிள்ளாரு பரக்கப் பரக்க முளிச்சுச்சு. இட்டத்ல போனா. போயி, 'பிள்ளாரே இப்ப ஒழுங்கா உள்ள போறியா இல்ல, ஓ....ம் புடுக்குல ஒரு எத்து எத்தவாண்டு சொன்னா. சொல்லவும், இவ இருக்ற சிருக்கு – எத்துனாலும் எத்துவாண்ட்டு, பிள்ளாரு, கோயிலுக்குள்ள போயிருச்சு. அவளுக்கு மாமியா மேல கோவம். பாவம் பிள்ளயாரு என்னா செய்வாரு.

இவ சத்தியப் பாராட்டி, அந்த ஊரு ஆளுக, இவ பேருல அந்தக் கோயில் நெலத்தப் பூராம் எழுதி வச்சுட்டாங்க.

இவளுக்கு ஒண்ணுமே புரியல. இவ்வளவு சொத்தக் குடுத்த பிள்ளாருக்கு, இவ்வளவுண்டு [illegible] பயறக் குடுக்க மாட்டம்ண்ட்டோமேண்டு மனசுக்குள்ள [illegible] பட்டாளாம்.

7. தரம்

ஒரு ஊர்ல, அண்ணனுந் – தங்கச்சியும் வாந்து வந்தாங்க. கொஞ்ச நாள்ல, தங்கச்சியக் கல்யாணம் முடுச்சுக் குடுத்திட்டு, அண்ணனும் ஒரு பெண்ணக் கல்யாணம் முடிச்சுக்கிட்டர்.

இப்டி வாந்து வரயில, அண்ணனுக்கு ஒரு ஆம்பளப் பிள்ளயும், தங்கச்சிக்கு ஒரு பொம்பளப் பிள்ளயும் பெறக்குது. கொஞ்சநாக் கழிச்சு, ஆம்பளப் பயல விட்டுட்டு, அண்ணெ எறந்து போயிட்டர். ஆம்பளப் பயல, அவனோட அம்மா வளத்து வந்தா. வளத்து வரயில, ரொம்ப ஏழயாப் போயிட்டாங்க. கூலி வேல செஞ்சு பொழக்கிறாங்க.

இந்தச் சமயத்ல, அத்த, பெரிய பணக்காரியா, நல்லாப் பொழக்கிறா. அத்த மகளும் பெரியவளாகி கல்யாணத்துக்கு தயாராயிட்டா.

அம்மாள அனுப்பி, அத்தகிட்டப் பொண்ணுக் கேக்கச் சொல்றா. சொல்லவும், மகனுக்காக –, அம்மா பொண்ணு கேட்டுப் போறா. நல்ல நாளப் பாத்து, சவனம் பாத்து, வேண்டிய ஆளுகளக் கூட்டிக்கிட்டு போறா. போயி, நாத்தனாகிட்ட, மகனுக்குப் பொண்ணுத் தாங்கண்டு கேட்டா. அதுக்கு நாத்தனா, ஒங்க அண்ணனப் பாத்துக் கேளுண்டு சொல்லிட்டா. சொல்லவும், நாத்தனா புருசங்கிட்டப் போயி, மகனுக்குப் பொண்ணு தாங்கண்ணேண்டு கேட்டா. கேக்கவும், அவ்.

பிச்சக்கார நாயே! ஒந்தரம் என்னா? எந்தரம் என்னா? யார்கிட்ட வந்து பொண்ணுக் கேக்ற. ஒனக்கு வெக்கமாயில்ல. போ! வெளியண்டு, வஞ்சு போகச் சொல்லிட்டா். தலயத் தொங்கப் போட்டுக்கிட்டு, வீட்டுக்கு வந்தா. மாமெ என்னா சொன்னாருண்டு அம்மாகிட்டக் கேட்டர். பொண்ணத் தர முடியாதுண்டு சொன்னாங்கண்டு மகங்கிட்டச் சொல்லிட்டா. சரி! நா்.... போயிக் கேட்டுட்டு வாரேண்டு சொல்லிட்டுப் போறா்.

அத்த வீட்டுக்குப் போனவ், ஒரு வாரமும் – ஆறு நாளும் அங்க தங்கிக்கிட்டா். தங்கி, மாமங்கிட்ட, எனக்குப் பொண்ணு குடுங்கண்டு கேட்டா். கேக்கவும், போடா! ஒனக்குப் பொண்ணு தர முடியாதுண்டு மாம் சொல்லிட்டா். ஊர்ப்பஞ்சாயத்தக் கூட்னா். பஞ்சாயத்துக்கு வந்த பெரியவங்களும், பொண்ணக் குடுத்தவங்களுக்கு, பொண்ணக் குடுக்கணும்ண்டு வாதாடினாங்க.

பஞ்சாயத்துக்காரங்ககிட்ட, அப்ப – ஒரு நிபந்தனயப் போட்டா். என்னாதுண்டா; பக்கத்துக் கொளத்ல, கழுத்தளவு தண்ணில, பொழுசாய ஆறு மணில இருந்து, கால ஆறு மணி வரைக்கும் அவ் நிண்டிருந்திட்டு வந்திட்டாண்டா, பொண்ணக் கட்டிக்கிட்டுப் போகட்டும்ண்டு சொல்லிட்டா்.

இவனும் நிபந்தனய ஏத்துக்கிட்டா். அதக் கண்காணிக்க ஒரு ஆளயும் நியமிச்சு, கொளத்தங்கரயில ஒக்கார வச்சிட்டா்.

நிபந்தனப்படி, ராவ்வெல்லாம் கழுத்தளவு தண்ணிக்குள்ள நிண்டிருந்திட்டு விடியவும், வெளிய வந்து, பொண்ணக் குடுண்டு கேட்டா். அதுக்கு அவ், ஏண்டா நிய்யி வடக்கு மலயில தீய்யி எரிஞ்சுச்சு, அந்த அணல்ல குளிரு காஞ்சுகிட்டே தண்ணிக்குள்ள இருந்திருக்க. அதுனால ஒனக்கு, பொண்ணு இல்ல போடாண்டு சொல்லிட்டா்.

சொல்லவும், பஞ்சாயத்துக்காரங்க, இவ் பெரிய வம்பான ஆளா இருப்பா் போலண்ட்டு, யப்பா! இது ஒம்பாடு, ஒங்க மாம் பாடுண்டு சொல்லிட்டு போயிட்டாங்க. இத வீட்டுக்குள்ள இருந்து மக கேட்டுக்கிட்டே இருக்கா. இந்த அநியாயத்துக்கு ஒரு முடிவில்லயாண்ட்டு, அப்பனுக்கு – எப்டியாச்சும் நல்ல பாடம் புகட்டணும்ண்டு மனசுல நெனக்கிறா.

அப்ப: பஞ்சாயத்து முடியறதுக்கு மதியமாயிருச்சு. மத்தியானக் கஞ்சி குடிக்க வீட்டுக்குள்ள வந்தா். யாரு? அப்ப.

வரவும், இவ என்னா செஞ்சாண்டா – வட்டில கஞ்சிய ஊத்தி வச்சிட்டு, கஞ்சில உப்பப் போடாம, வட்டிக்குக் கீழ, தரயில உப்பப் போட்டு வச்சுட்டா. அவ் – கஞ்சிய பெசஞ்சு குடிச்சுப் பாத்தா். உப்பு இல்ல. உப்பு இல்லயேண்டு சொல்றா். குடிச்சுப் பாத்துட்டு உப்பு இல்லம்மாண்டு அப்ப் சொல்றா. சொல்லவும் என்னாப்பா! வட்டியத் தூக்கிட்டுப் பாருண்டு மக சொன்னா. வட்டியத் தூக்கிப் பாத்தா். பாக்கயில, வட்டிக்குக் கீழ உப்பு கெடக்குது.

ஏம்மா! வட்டிககுக் கீழ உப்பு இருந்தா. கஞ்சில எப்டிம்மா கக்கிம்ண்டு கேக்குறா்! அதுக்கு அவ, ஏம்ப்பா! வடக்கு மலயில திய்யி எரிஞ்சா, அந்த அணலு, எப்டிப்பா கொளத்துக்குள்ள இருக்றவ் மேல படும்ண்டு கேட்டா. "பொண்ணு இல்லண்டா! இல்லண்டு சொல்லிறணும், தரேண்டா! தரேண்டு சொல்லணும். அதுக்காக அவங்கள தரக்கொறவா நடத்தக் கூடாதுண்டு சொன்னா. சொல்லவும், இவனுக்கு கோவம் வந்து, நா் வச்சதுதா் சட்டம். நிய்யி என்னா சொல்றது. நா... என்னா கேக்குறதுண்டு சொல்றா். சொல்லவும், இவளுக்கு அப்ப் மேல கோவம் வந்து, நாஞ் சொல்றதக் கேக்க மாட்டயில, அப்ப நிய்யி சொல்லிக்கிட்டே இரு. நா் போயிக்கிட்டே இருக்கேண்ட்டு, அத்த மகனோட போயிட்டா.

போயி, கூலிவேல செஞ்சு பொழச்சுக்கிட்டிருந்தாங்க. பொழச்சுக்கிட்டிருக்கயில, அவளுக்கு மூணு பிள்ளைக பொறந்திச்சு. மூணுபிள்ளைக பெறந்தப் பெறகு, மகளயும் மருமகனயும் கூட்டியாந்து, சீர் வரிச செஞ்சு அனுப்பி வச்சாங்களாம். அண்ணக்கிருந்து, விரோதத்த மறந்திட்டு, ஒத்துமுயா வாந்தாங்களாம்.

விரோதந்தான குடும்பத்த வேறாக்குது. விரோதத்த விட்டுட்டா என்னா செய்யுமாம். விட்டாத்தே இந்தக் காலத்ல வாழ முடியும்.

8. மடக் கழுதை

ஒரு ஊர்ல - ஒரு ராசா. அந்த ராசாவுக்கு ஒரு மந்திரி இருந்தார். காலப் போக்கல, ராசா, ரொம்ப ஏளயாப் போயிட்டாரு. இருந்தாலும், மந்திரிக்கு, எந்தவிதமான கொறையும் இருக்கக்கூடாதுண்டு நம்மளோட கஷ்டம் நம்மளோடவே இருக்கட்டும். மந்திரிக்கு எதயும் கொறையில்லாமச் செய்யணும்ண்டு ராசாவும் ராசா பொஞ்சாதியும் பேசிக்கிட்டாங்க. இவங்க பேசுனத, மந்திரி கேட்டுக்கிட்டுப் போயிட்டாரு. இத மனசுல வச்ச மந்திரி, ஒரு திட்டம் போட்டு, மறுநா காலைல - ஊருக்குப் போகணும்ண்டு, ராசாகிட்ட வந்து கேட்டாரு. ராசாவும் அதுக்கு சம்மதிச்சுட்டாரு.

மந்திரி ஊருக்குப் போகயில, ராசாவே! இதுநா வரைக்கும் என்னக் காப்பாத்துனீங்க. இப்பஃ ஓங்களக் காப்பாத்துறது, என்னோட கடமை. அதுனால, நீங்க ரெண்டு வேரும் என்னோட வாங்க. ஓங்களுக்கு எந்தக் கொறையும் இல்லாம நா பாத்துக்கறேண்டு சொன்னாரு.

ராசா! ஓசிச்சுப் பாத்தாரு. பாத்திட்டு, சரி பெண்ணே! மந்திரி வீட்டுக்குப் போவமாண்டு ஓசன கேட்டாரு. அப்ப ராணி — மொதல்ல நீங்க போங்க. போகும்போது ரெண்டு பூவத் தாரே. அதுல ஒரு பூவ, நீங்க கொண்டு போங்க. ஒரு பூவ நா வச்சிக்கிறே. ஓங்களுக்கோ, எனக்கோ ஏதாவது ஆபத்து ஏற்பட்டா, மடியில இருக்கிற பூ வாடிப் போகும். இதுதா நம்மளுக்குள்ள அறிகுறி. நீங்க மந்திரி வீட்டுக்குப் போங்க. நானு இங்கேயே இருக்கேண்டு சொல்றா. ஆளுக்கொரு பூவ வச்சுக்கிட்டாங்க.

பூவ மடியில வச்சுக்கிட்டு, ராசா, மந்திரி வீட்டுக்குப் போறாரு. மந்திரி நல்லா வரவேத்து, ராசாவுக்கு வேண்டியதெல்லாஞ் செய்றாரு. செய்யயில, வசதியா கொஞ்ச நா இருக்றாரு.

இதுக்கெடையில மந்திரி, ராசாவே நீங்க இங்க இருங்க, நானு வட நாட்டுக்கு ஏவாரத்துக்குப் போறேண்டு சொல்லிட்டு, மந்திரி, நேரா ராசா வீட்டுக்கு வாராரு.

அரமணயில, ராணியும் - தோழிப் பெண்களும் இருக்காங்க. மந்திரி வந்துட்டாருண்ட்டு, ஏகத் தடபுடலா வரவேற்புச் செஞ்சு, மந்திரிக்குத் தனியா ஒரு அரமணய ஒதுக்கி, அதுல தங்கச் சொல்றாங்க.

அப்ப: மந்திரி சொல்றாரு, பெண்ணே! நா் தனியாப் படுக்கமாட்டே என்னோட தங்குறதுக்கு, ராணிய வரச் சொல்லுங்கண்டு சொல்ராரு. சொல்லவும், தோழிப் பொண்ணுக, ராணிகிட்டப் போயிச் சொல்றாங்க. சொல்லவும், ராணி! அப்டியே ஒசிச்சுப் பாத்திட்டு, சரி! ராணி வருவாண்டு, போயி - மந்திரிகிட்ட சொல்லச் சொல்லிட்டா. அவங்களும் ராணி வருவாண்டு மந்திரிகிட்டப் போயிச் சொல்லிட்டாங்க.

மந்திரி, ராணிய எதுரு பாத்து, பள்ளியரையில காத்துக்கிட்டு இருக்காரு. இதுக்கெடையில, இந்த ராணி தோழியக் கூப்பிட்டு, ராணி துணிமணி நககைளயெல்லாம் தோழிக்குப் போட்டு, பள்ளியறைக்கு அனுப்றா. மந்திரியோட விருப்பம் போல நடந்துக்கிறம்ணும்ண்டு சொல்லி அனுப்றா.

தோழிய, மந்திரி இருக்ற பள்ளியறைக்கு அனுப்பிச்சுட்டு, ராசாவுக்கு ஒல எழுதுறா, எப்டி எழுதுராண்டா!

கடல தொவர கடஞ்செடுத்த கணக்கர் வடக்கிருக்க, கடல

திங்க வந்த மடக்கழுத தொவர திண்டுட்டுப் போயிருச்சுண்டு

எழுதிட்டா. ஒலய பாத்த ராசாவுக்கு ஒண்ணுமே புரியல. ராசா மடியில இருக்ற பூவு வாடுது. என்னடா! ராணிகிட்ட இருந்து ஒலயும் வந்திருக்கு. ராணி குடுத்த பூவும் வாடுது. என்னமோ நடந்து போச்சுண்ட்டு, பெறப்பட்டு வேகு... வேகுண்டு வாராரு.

ராணிய விரும்பி வந்த மந்திரி, ரவ்வெல்லாம் தோழிகூட இருந்துட்டு, ராணி கூடத்தா ரவ்வெல்லாம் இருந்தோம்ண்ட நெனப்ல விடியவும் போயிட்டாரு. ராசா இங்க வர, மந்திரி அங்க போயிட்டாரு.

ராசா வந்தாரு. ராணியப் பாத்து என்னா பெண்ணே! என்னா நடந்ததுண்டு கேட்டாரு. அப்ப ராணி நடந்ததெல்லாம் சொன்னா. ராசாவுக்குப் புத்தி வந்து, ராணியப் பாராட்டினாரு. அப்ப இருந்து – எப்பயும் ராணியப் பிரியாம வாந்தாங்களாம். பொண்டாட்டியத் தனியா வீட்டுல விட்டுட்டுப் போனா இப்டித்தா.

9. ராட்சசி

ஒரு ஊர்ல, ஒரு தாயும் – மகனும் இருந்தாங்க. தாயுக்கேத்த மகனா வளந்து வந்தா். கல்யாணம் முடிக்கிற பருவத்துக்கு வரவும் தாயி, மகனுக்குப் பொண்ணு பாக்கப் போனா. இவங்களப் போலவே, ஒரு ஊர்ல தாயும் – மகளும் வாந்து வந்தாங்க. மக பெரிய வாயாடியா இருந்தா. தெனமும் ரெண்டு பொம்பளைக கூடச் சண்ட பிடிச்சாத்தா், அவளுக்குச் சந்தோசமா இருக்கும். இவள யாருக்காச்சுங் கட்டிக் குடுத்துடணும்ண்டு, தாயி நெனச்சுக்கிட்டிருந்தா. அந்தச் சமயத்ல, தாயும் மகனும் அந்த வீட்டுக்குப் போறாங்க. பொண்ணு கேட்டு, வந்திருக்கோம்ண்டு சொல்லவும், சந்தர்ப்பத்த எதிர்பாத்துக்கிட்டிருந்த அம்மா, பொண்ணு குடுக்க சம்மதிச்சுட்டா.

ரெண்டு பேருக்குங் கல்யாணம் நடந்திருச்சு. வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்தா். வழக்கம்போல, பக்கத்து வீட்டுப் பொம்பளைக கூடச் சண்ட பிடிக்க ஆரம்பிச்சுட்டா. ஊருக்காரங்களெல்லாம், இவள வெறுக்க ஆரம்பிச்சுட்டாங்க. இவளக் கண்டா எல்லாப் பொம்பளைகளும் பயந்து ஒதுங்கிப் போயிருவாங்க. சண்டக்கி ஆள் கெடைக்காட்டி, ரூவா குடுத்துக் கூலிக்கு ஆள்பிடிச்சுட்டு வந்து, வீட்டுக்கு முன்னால நிண்டுகிட்டு சண்ட பிடிப்பாளாம். புருசஞ் சொன்னா புருசன வையுவா.

புருசஞ் சொல்லிப் பாத்தா். அவளத் திருத்த முடியல. வீட்ட வெறுத்து பரதேசம் புறப்பட்டுப் போயிட்டா். போற வழியில, ஒரு பெரிய ஆலாமரம் இருந்திச்சு. அந்த மரத்தடியில போயி, நெழல்ல ஒக்காந்தா். அப்ப, அந்த வழியா ஒரு சாமியாரு வந்தாரு. அவரு வந்து, அந்த ஆலாமரத்து நெழல்ல ஒக்காந்தாரு. நிய்யி யாருய்யா? எதுக்கு வருத்தமா

ஒக்காந்திருக்கேண்டு கேட்டாரு. எங்கிட்ட எதயுங் கேக்க வேணாம். நானு மனம் நொந்து போயிருக்கேண்டு சொன்னா். என்னாப்பா விசயம்? எங்கிட்டச் சொல்லு, முடிஞ்சாத் தீத்து வைக்கிறேண்டு சொன்னாரு.

நா் கல்யாணம் முடிச்சுட்டு வந்த நேரம், என் பொண்டாட்டி பெரிய வாயாடி. தெனமும் ஊரு ஆளுங்க கூடச் சண்ட புடிக்கிறது. சண்டக்கி ஆரும் வரலண்டா எங்கூடச் சண்டப் புக்கிறா. எத்தன நாளக்கி இந்த ராட்சசியோட குடும்பம் நடத்துறதுண்ட்டு, குடும்பத்த வெறுத்து, பரதேசம் பெறப்பட்டு வந்திட்டேண்டு சொன்னா். வருத்தப்படாதப்பா. நா் ஒரு வழி சொல்றே. இப்ப நிய்யி வீட்டுக்குப் போண்டு சாமியாரு சொன்னாரு. நிய்யி வீட்டுக்குப் போகயில, ஒம் பொண்டாட்டி சண்ட புடிச்சுக்கிட்டிருந்தாண்டா ஒங்கூட வாழ்றதக் காட்டிலும், செத்துப் போறதே மேலுண்டு சொல்லு. போயி, சாவுண்டு சொன்னாண்டா நிய்யும் வாண்டு கூட்டிக்கிட்டு போ.

நம்ம ஊரு பெரிய கொளத்துக்குக் கூட்டிட்டுப் போ. அங்க போயி, எங்கையக் காலக் கெட்டி, கொளத்ல தள்ளி விடுண்டு சொல்லு. அப்பவும், தள்ளி விடுறதுக்கு தயாரா இருந்தாண்டா, பின்னால பத்தடி போயித் தள்ளச் சொல்லு. அதுக்கும் தயாரா இருந்தாண்டா, அவ தள்ள ஓடி வரயில, கொஞ்சம் வெலகி நிண்டுக்க. தள்ள வந்த வேகத்ல, அவ போயி கொளத்துக்குள்ள விழுவா. தண்ணிக்குள்ள விழுந்த பெறகு, வாயாடிண்டாப்ல தண்ணி விடுமா? தண்ணியக் குடுச்சுச் செத்துப் போவா. பெறகு, நிய்யி, வேற பொண்ணப் பாத்துக் கல்யாணஞ் செஞ்சு, நல்லாப் பொளச்சுக்கேண்டு சாமியாரு சொன்னாரு.

சாமியாரு பேச்சக் கேட்டுக்கிட்டு வீட்டுக்குப் போறா். வீட்டுக்கிட்டப் போகயில, பொண்டாட்டி, சண்ட புடிக்கிற

சத்தங் கேக்குது. அடுத்த வீட்டுப் பொம்பளைகள, "முண்ட—தண்ட—தேவிடியா— அவங்கூடப் போனவளே, இவங்கூடப் போனவளேண்டு பேசிக்கிட்டிருக்கா". பேச்சுகளக் கேட்டுக்கிட்டே வீட்டுக்குள்ள வந்து நொளயுறா். நொளயயில, இதுவரைக்கும் எங்கடா போன, பொண்டுகா! அவனே, இவனேண்டு புடுச்சுப் பேசுறா.

பேசவும், மனசு பொறுக்க மாட்டாம நிய்யி சண்ட புடிக்கிறது மனவேதனயா இருக்கு. அதுனால, ஒங்கூடக் குடும்ப நடத்துறதக் காட்டிலும் செத்துப் போகலாம்ண்டு நெனக்கிறேண்டு சொன்னா். சண்ட பிடிக்கிற வேகத்ல, சாகணுமா? அப்ப எந்திரி போவோம். நிய்யி சாகுறதப் பாக்கணும். சீக்கிரம் கெழம்புண்டு சொல்றா. கெழம்பி – கூட்டிக்கிட்டுப் போறா. போற வழில, பெரீ....ய கொளம். கொளத்து நெறயா தண்ணி.

அப்ப, கரயில நிண்டுகிட்டுக் கையக் கெட்டச் சொன்னா். கைகளக் கெட்டி, பின்னால போயித்தள்ளச் சொன்னா். பின்னால போயி, வேகமா ஓடியாந்து தள்ளினா, ஓடி வரயில, கொஞ்சம் வெலகிக்கிட்டா்.

அவ தண்ணிக்குள்ள விழுந்து உசுருக்குப் போராடிக்கிட்டிருக்கா. தண்ணிக்குள்ள விழுந்து செத்துக்கிட்டிருக்கே, மரம் மாதிரி நிக்றியே மடயாண்டு கத்றா. அம்மா! புண்ணியவாட்டி! நிய்யி எங்கையக் கட்டிப் போட்டுட்டியேண்டு சொன்னா். அதுக்குங்குள்ள தண்ணிக்குள்ள மூங்கிச் செத்துப் போனா.

அந்த வழியா ஒரு வழி போக்கே வந்தா். அவுத்து விடச் சொன்னா். கைகள அவுத்து விடவும், பால் வார்த்து தல முழுகிட்டு, ரெண்டாவது பொண்டாட்டி கெட்டி நல்லாப் பொளச்சானாம். ரண்டி முண்ட கூட வாழ முடியுமா? பொம்பள எப்பவும் பொறுமயா இருக்கணும். பொறு – பொறுண்டு இருந்தா போய் மடிய வேண்டியதே.

10. சின்னாத்தா காரி

ஒரு ஊர்ல– புருசி பொண்டாட்டி இருந்தாங்க. அவங்களுக்கு ஒரு பொம்பளப்பிள்ள பெறந்திச்சு. பெறக்கவும், அவங்கம்மா செத்துப் போனா. சாகவும், அப்பி, எளய குடியா கெட்டிக்கிட்டார். எளய குடியா ரொம்பக் கொடுமக்காரியா இருந்தா. அவளுக்கும் ஒரு பொம்பளப் பிள்ள.

ரெண்டு பிள்ளைகளும் சிறுசு –பெருசுமா வளர்ராங்க. கொஞ்சம் பெரியபிள்ளைகளா ஆகவும், இவ மகள, பள்ளிக் கொடம் போகச் சொல்லிட்டா. இந்தப் பிள்ளய்ப் போயி சாணி பெறக்கிட்டு வாண்டு, கூடயக் குடுத்துப் போகச் சொல்லிட்டா. மூணு நேரமும் கஞ்சி ஊத்துறதில்ல. ஒரு நேரமட்டும் கஞ்சி ஊத்துவா. பாவம்!! கஞ்சியுமில்லாம – தண்ணியுமில்லாம சாணி பெறக்கிப் போட்டுக்கிட்டு இருக்கா.

எருப் பெறக்கப் போகயில, கஞ்சி இல்லாமப் போவா. இந்தப் பிள்ள போகயில, அவங்கம்மாளப் பெதச்ச எடத்ல போயி, கொஞ்ச நேரம் ஒக்காந்திட்டு போகுமாம். அப்படி ஒக்காரயில.

அவங்கம்மா, மகளே! இப்டி கஞ்சில்லாம கெடக்க வேணாம். எங்குழி மேட்டுல தண்ணிக்கா – வெள்ளரிக்கா காச்சுக் கெடக்கு. நிய்யி, சாணி பெறக்கிட்டு வந்து, இந்தக் காயுகளத் திண்டுட்டு, வீட்டுக்குப் போண்டு சொல்றா. சொல்லவும், வெளியெல்லாஞ் சாணி பெறக்கிட்டு, அவங்கம்மா குழி மேட்டுல வந்து காயுகளப் பெறக்கித் திண்டு, பசியாறிட்டு தெளிச்சியா வீட்டுக்கு வாரா.

வரவும், கஞ்சியில்லாமப் போனாளே, இப்டி தெளிச்சியா வாராளேண்டு நெனச்சு, அடுத்த நா, தன் மகளயுங் கூடப் போகச் சொல்றா.

சொல்லவும், சரிண்டு, இந்தப் பிள்ளயுங் கூடப் போறா. ரெண்டு பேரும் சாணி பெறக்கிட்டு, குழி மேட்டுல வந்து, காயுகளப் புடிங்கித் திண்டுட்டு வந்தாங்க.

வந்து, அம்மா! அம்மா! அவங்கம்மாளப் பெதச்ச குழி மேட்ல காயுகளாக் காச்சுக் கெடக்கு. அதப்புடிங்கித் திண்டுட்டு வாராண்டு, சொல்லிட்டா. சொல்லவும், அந்தக் காயுக ஒயுர வரைக்கும் நிய்யுங் கூடப் போண்டு சொல்றா.

போயி, வந்துக்கிட்டிருக்கயில, குழிமேட்ல காச்சிருந்த காயுக ஒஞ்சு போச்சு. ஒஞ்சு போகவும், வந்து, ஒஞ்சு போச்சும்மாண்டு சொல்லிட்டா. அப்ப, இவளப் பள்ளிக்கொடம் போகச் சொல்லிட்டு, அவளச் சாணி பெறக்கப் போகச் சொல்றா.

இந்தப் பிள்ள, கஞ்சியுமில்லாம - தண்ணியுமில்லாம சாணி பெறக்கப் போனா. போகயில, அவங்கம்மா கூப்ட்டு, மகளே! நிய்யிபோற வழியில, காராம்பசுவு ஈண்டு, பாலா ஒரஞ்சு கெடக்கு, அதப் பெறக்கி திண்டுட்டு, சாணி பெறக்கிட்டு வாண்டு சொல்றா.

அப்டித்தான் போகயில, காராம்பசுவு ஈண்டு, பாலாச் சிந்திக் கெடக்கு. பால அள்ளித் திண்டுட்டு, சாணி பெறக்கி, கூடயில வச்சுச் செமந்துகிட்டுத் தெளிச்சியா வாரா.

வரவும், அடுத்த நாளக்கி, அவ பின்னாலயே போயி, பால அள்ளித் திண்டுட்டு, சாணி பெறக்கப் போகவும், இவ போயி அந்தக் காராம்பசுவ வெட்டிப் போட்டுட்டு வந்திட்டா.

இப்டி இருக்யில, ஒருநா, வீணாராசி, சாக்ல பணத்தச் செமந்துகிட்டு பொண்ணு குடுங்கண்டு கேட்டுக்கிட்டு, வீதி வழியா வாராரு. பாத்தவங்க சாமி, நீங்க அரமணக்ககாரு, நாங்க எப்டி ஒங்களுக்குப் பொண்ணு தரதுண்டு சொல்லிட்டாங்க.

அப்ப, இவ அந்தப் பக்கம் வந்தவ சாமி, எங்க வீட்ல பொண்ணு இருக்குண்டு கூட்டிட்டுப் போயி, பணத்த வாங்கி வச்சுக்கிட்டு, இந்தப் பிள்ளய, வீணா ராசாவுக்குக் கட்டிக் குடுத்திட்டா.

கல்யாணம் முடிச்சுக் குடுக்கவும், ராசா பின்னால, அவங்க ஊரு அரமணக்கிப் போயிட்டா. இவங்க போன பெறகு, ஏழெட்டு மாசங் கழிச்சு, சின்னாத்தாகாரி போறா. போனாளே! எப்டி? இருக்காளோண்டு பாக்கப் போறா. போயிப் பாக்கயில, நல்லா வசதியா அரமணயில இருக்கா. இதப் பாத்ததும், இவளுக்கு வகுறு எரியுது. இவ இருக்க, இந்த எடத்ல மகளக் கொண்டாந்து வைக்கணும்ண்டு நெனச்சு, வீணா ராசாகிட்ட, எம் பிள்ள, வகுறு வாயுமா இருக்கா, பேரு காலத்துக்கு எங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போறோம்ண்டு சொல்றா.

சொல்லவும், வேணாங்கத்த, இங்க என்னா கொறச்சண்டு ராசா சொல்றாரு. கெடுதலக்காரி, இல்லங்க. மொதப்பிள்ள எங்க வீட்லதான் பெறக்கணும்ண்டு சொல்றா. சொல்லவும் –, சரி! பின்ன – கூட்டிட்டுப் போங்கண்டு சொல்லிட்டாரு.

இவளுக்கு போக மனசில்ல, மனசில்லாம, மாவு இடிச்சு, ரெண்டு வேரு கையயும்மாவுல வச்சு, ரெண்டு கையயும் சரியா மதுல்ல வச்சாங்க. ரெண்டு கையும் சரியா, சோடியா இருக்கு, அப்ப ராசா, கையில இருந்த கணயாழியக் கழத்தி, இத எங்கயாச்சும் வச்சிட்டுப் போண்டு சொன்னாரு.

சொல்லவும், கணயாழிய வாங்கி, ஒரு தூணுக்கிட்ட நிண்டு, "நீ ஒருவனுக்கு முந்திவிரிச்ச உத்தமியா இருந்தா, இந்தத் தூணு வெலகி இந்த மோதிரத்த வாங்கிக்கிணும்ண்டு" சொன்னா.

சொல்லவும்; தூணு வெலகி எடங் குடுத்திச்ச. எடங் குடுக்கவும், உள்ள வச்சா, வைக்கவும், தூணு வந்து பொருந்திக்கிருச்சு.

வச்சிட்டு, மனசில்லாமப் போறா. வீட்டுக்குப் போகயில, சின்னாத்தாகாரி; இவள, எப்டிண்டாலும் சாக வச்சிட்டு, மகள வாழ வைக்கணும்ண்டு நெனச்சுக்கிட்டுப் போறா. வீட்ல போயி, இவ கூடத் தண்ணியெடுக்க, மகளப் போகச் சொல்றா.

மககிட்ட, மகளே! இவ போட்ருக்ற நகைகள நிய்யி வாங்கிப் போட்டுக்கிட்டு, கெங்கையில உத்துப் பாரு! பாத்து, நல்லா இருக்காண்டு கேளு. அவகெங்கைய உத்துப் பாப்பா, அப்ப – கெங்கைக்குள்ள தள்ளி விட்டுருண்டு சொல்லிவிடுறா.

சரிண்டுப் போறா. போகயில, யக்கா, ஒனக்கு இந்த நகநட்டுக நல்லா இருக்கு. எனக்குப் போட்டு பாப்போம்ண்டு கேக்குறா. சரி தங்கச்சிண்டு, பரமாத்தமா, கழத்திக் குடுத்திட்டா. குடுக்கவும், போட்டுக்கிட்டு கெணத்துக்குள்ள பாத்தா. பாக்கயில நல்லா இருந்திச்சு. நல்லா இருக்காண்டு அக்காகிட்டச் கேட்டா. கேக்கவும், இவ உத்துப் பாத்தா. பாக்கவும், கெணத்துக்குள்ள

புடிச்சு தள்ளி விட்டுட்டா. தள்ளி விட்டுட்டு, நகநட்டுகள போட்டுக்கிட்டு வீட்டுக்குப் போயிட்டா. கெங்கைக்குள்ள போனவள, ஒரு நாகேந்திர் ஏந்திக்கிருச்சு. ஏந்தி, கெணத்துக்குள்ளயே வளக்குது.

இங்க, இவ மகள மொட்டையடிச்சு, சிக்கு விழுந்தவ மாதிரி வச்சிருக்கா. ராசா வந்தா, பிள்ள செத்துப் போச்ச, சிக்காயிப் போச்சு. இப்பத்தர், நல்லா இருக்காண்டு சொல்லலாம்ண்டு வச்சிருக்கா. இருக்கயில, வீணாதிராசா, பொண்டாட்டியப் பாக்கலாம்ண்ட்டு வாராரு. வீட்டுக்கு வரவும், பேருகாலமாக மாட்டாம பிள்ள செத்துப் போச்ச. இவளுஞ் சாகக் கெடந்து, இப்பத்தர் எப்டியோ பொளச்சிருக்கா. நாலஞ்சு நா கழிச்சுக் கூட்டிட்டுப் போங்கண்டு சொல்றா.

சொல்லவும், இவனுக்கு சந்தேகம் வந்திருச்சு. பொண்டாட்டி என்னா ஆனாண்டு பாக்கணும்ண்ட்டு தேடிப் போனர். தேடிப் போகயில, ஒரு வளவிச் செட்டியாரு, அலஞ்சு திரிஞ்சு வளவி வித்திட்டு, ஒரு புங்க மரத்தடில ஒக்காந்திருக்காரு. இந்த ராசாவும், அந்தப் புங்க மரத்தடிக்குப் போறாரு. போயி, வளைவிச் செட்டியாரக் கேட்டாத் தெரியும்ண்டு, ஐயா! வளவிச் செட்டியாரே! இந்த மாதிரி, எம் பொண்டாட்டியக் காணம் எங்குட்டாச்சும், சேதி தெரியுமாண்டு கேக்குறாரு. யாரு? இந்த ராசா கேக்குறாரு.

கேக்கவும், அடேயப்பா! கெங்கைக்குள்ள ஒரு பொண்ணு இருந்திச்சு. அந்த வழியா, வளவி! வளவிண்டு வித்துக்கிட்டுப் போனே. போகயில, வளவிச் செட்டியாரேண்டு கூப்டுச்சு போனே, போகவும்,

வீண மகராச பெத்த மக்

வீதியழகு பாண்டி ராசனுக்கு

வாருங்கய்யா வளையல் செட்டி

வந்திரங்கு வாசல்ல - ண்டு

சொல்லிக் கூப்டுச்சு. நூலேணி வழியா எரங்கிப் போயி, வளவி போட்டே, போடவும், பணங் குடுத்திச்சு வாங்கிட்டு வந்து, இங்கன ஒக்காந்திருக்கேண்டு வளவிச் செட்டியாரு சொன்னாரு.

சொல்லவும், அந்த வளவிக்குப் பணங் காசுகளக் குடுத்திட்டு, அத வாங்கித் தோள்ல போட்டுக்கிட்டு அலஞ்சு திரியுறாரு. திரியயில, ஒரு மாசம் ஆச்சு, அந்த கெங்கை வழியா வளவி! வளவிண்டு சொல்லிக்கிட்டுப் போனாரு.

போகயில, வளவி போடணும்ண்டு கெங்கைக்குள்ள இருந்து கூப்ட்டா. கூப்டவும் போனாரு. போனவரு வழி தெரியாம கெணத்தக் கெணத்தச் சுத்றாரு. சுத்தவும் நூலேணி வழியா எரங்கி வாங்கண்டு சொன்னா. எரங்கிப் போகயில,

அவ, ஆம்பளப்பிள்ள பெத்து, தங்கத் தொட்டில போட்டு ஆட்டிக்கிட்டிருக்கா. போனதும் அடயாளம் கண்டுகிட்டாரு. பொண்டாட்டி அடயாளம் தெரியாமப் போயிருமா. தெரியவும் ரெண்டுவேரும் கெட்டுச் சேந்து புடிச்சு அழுகுறாங்க.

அளுகவும், அளுகச் சத்தங் கேட்டு, நாகேந்திர் வந்தாரு. என்னாண்டு கேட்டாரு. இவருதா, எம் புருசண்டு சொன்னா. சொல்லவும், ஏராளமாச் சீர்களக் குடுத்து, கூட்டிப் போண்டு சொன்னாரு.

சொல்லவும், இப்ப இங்க இருக்கட்டும். நா வீட்டுக்குப் போயிட்டு வந்து, கூட்டிட்டுப் போறேண்டு சொல்லிட்டு போறா.

போயி, இவளோட தங்கச்சியக் கூட்டிட்டுப் போயி, ஊருக்கு மேற்க கழுத்தளவு குழி தோண்டி, அந்தக் குழிக்குள்ள எரக்கி, மண்டய மட்டும் வெளிய தெரிய விட்டு பெதச்சிட்டாரு. பெதச்சிட்டு, அங்கிட்டு வெளிய போறவுங்க, வெளிய இருந்திட்டு, இவ தலயில வந்து நக்கிளிக்கச் சொல்லிட்டாரு. அதே மாதிரி போறவங்க, வாரவங்க அவ தலயில நக்களிச்சிட்டு போயிக்கிட்டிருக்காங்க.

இப்டி இருக்கயில, இவளப் பெத்த அம்மா வந்து வெளிய இருந்திட்டு, மக தலயில வந்து தொடைக்க வாரா. வர்ரபோது, இந்த ஊரு ஆளுக மாதிரி, நிய்யும் எம்மேல நக்கிளிக்க வரேயம்மாண்டு சொல்லிக்கிட்டு அளுகுறா.

அளுகவும், நிய்யா மகளேண்டு அழுது - பெறக்கி, தூக்கிக்கிட்டு ஊருக்கு வாரா. தலயில பிய்யி, காஞ்சு போயி, அடயாளம் தெரியாம இருக்கு.

இங்கிட்டு வரயில, ஒரு வண்ணார் தொவச்சிக்கிட்டிருந்தார். அவங்கிட்ட வந்து, இது போக என்னா செய்யணும்ண்டு கேட்டா. அவ் துணி தொவக்கிற வேகத்ல, அந்தா தெரியுது பாரு, வழுக்கப்பாற, அந்த பாறயில போயி, காலப் புடிச்சுக்கிட்டு நாலடி அடி, போயிரும்ண்டு சொன்னார்.

சரிண்டு, பாறைக்குப் போனா. போயி, மகளோட காலு ரெண்டயும் புடிச்சு, டம்மு - டம்முண்டு நாலடி அடிச்சா. அடிக்கவும் அவ செதறிப் போனா. பெறகு அளுதுகிட்டு வீட்டுக்கு வந்தாளாம். அவங்க, தொந்தரவு இல்லாம நல்லாப் பொளச்சாங்களாம். யாரு, ராசாவும் அவரு பொஞ்சாதியும்.

11. பொட்டக் கொசு

ரப்பெடுத்த பொட்டக் கொசுகு (கொசு) மத்த கொசுகுகளோட சேராம ராங்கி எடுத்துப் போயி அலஞ்சுச்சாம். தெனமும், காலைல அலங்காரம் பண்ணிக்கிட்டுத் தாயிகிட்டப் போயி, அம்மா நானு கலியாணம் செஞ்சுகிறப் போறேண்டே சொல்லுமாம். மாமங் கொசுகு மகனக் கட்டிக்கிறச் சொல்லுச்சாம் தாயிக் கொசுகு. இல்லம்மா! நம்ம சாதியில எனக்கு ஏத்தவ் இல்லண்ட்டு, மாப்ளள தேடிக்கிட்டுப் போச்சாம்.

போகயில, நாயி ஒண்ணு, கொசுகப் பாத்து, என்னயக் கலியாணம் பண்ணிக்கிறயாண்டு கேட்டுச்சாம். அதுக்குக் கொசுகு, கலியாணம் பண்ணிக்கிட்டா, எனக்கு என்ன வேல செய்வேண்டு கொசுகு கேட்டுச்சாம்.

அதுக்கு நாயி, ஊத்தினா குடிப்பே, கண்டாக் கொலப்பேண்டு நாயி சொல்லுச்சாம்.

அப்ப – எனக்குச் சரிப்பட்டு வர மாட்டேண்ட்டு, கொசுகு போயிருச்சாம். கொசுகு...தே... ராங்கி ஏறிப்போயி திரியுதில்ல, அதுனால தான கொசுகு வலிய ஆம்பள தேடிக்கிட்டுப் போகுது.

அங்கிட்டுப் போகயில, ஒரு கழுத (கழுதை), என்னயக் கலியாணம் பண்ணிக்கிறயாண்டு கேட்டுச்சாம். கழுதயப் பாத்து, ஒன்னயக் கட்டிக்கிட்டா, எனக்கு என்ன வேல செய்வேண்டு கொசுகு கேட்டுச்சாம்.

அதுக்குக் கழுத, வச்சாச் செமப்பே. காளு காளுண்டு கத்துவேண்டு சொல்லுச்சாம். அப்ப, எனக்கு லாயக்குப் பட மாட்டேண்ட்டு, கொசுகு போயிருச்சாம்.

அங்கிட்டுப் போகயில, ஒரு எலி எதுக்க வந்துச்சாம். கொசுகப் பாத்து, கொசுவே! என்னயக் கலியாணம் பண்ணிக்கிறியாண்டு கேட்டுச்சாம். அதுக்குக் கொசுகு, ஒன்னயக் கலியாண பண்ணிக்கிட்டா, எனக்குஎன்னா வேல செய்வேண்டு கொசுகு கேட்டுச்சாம்.

அதுக்கு எலி, நானு வயல்ல போயி, சாப்பிட நெல்லு பெறக்கிக் கொண்டு வந்து தருவே், என்னா வேணும்ண்டாலுங் கொண்டு வந்து தருவேண்டு எலி சொல்லுச்சாம்.

வாய் வார்த்தைக்கு ஆசப்பட்டு, கொசுகு, எலியக் கலியாணம் பண்ணிக்கிருச்சாம். தானியமாப் பெறக்கிட்டு வந்து குமுச்சிறுச்சாம். நல்லாத் திண்டு கொழுத்த கொசுகு, நகைக வேணும்ண்டு கேட்டுச்சாம்.

பொண்டாட்டி பேச்சத் தட்ட முடியாத எலி, நகக் கடைக்குப் போயி, நெறய நகைகள அள்ளிக்கிட்டு வந்து, வேணும்ங்கறத எடுத்துக்கண்டு சொல்லுச்சாம். ஆனாக் கொசுகு கேட்ட நக மட்டும் அதுல இல்ல.

அந்த நகயத் தேடிக்கிட்டு எலி, ஆசாரி வீட்டுக்குப் போச்சாம்.

அங்க, ஆசாரி ஏத்தி வச்சிருந்த, இடிக்கியில விழுந்து செத்துப் போச்சாம்.

எலி செத்துப் போகவும், எலியத் தேடிக்கிட்டு கொசுகு போச்சாம். கொசுகுக்கு அதிகப் பசி. ஒடல்ல ஒக்காந்து, கொஞ்சம் நத்தங் குடிக்கலாம்ண்டு, ஒரக்கக் கலக்கத்ல இருந்த மனுசி மேலக் கொசுகு ஒக்காந்து வாய வைக்கங்குள்ள அடுச்சுப் போட்டுண்டானாம். கொசுகு செத்துப் போச்சாம். அடங்காதவளுக்கு என்னா கெடைக்கும்? அடிதே கெடைக்கும்.

12. சோம்பேறி காக்கா

ஒரு காலத்ல, ஒரு காக்காவும் – குருவியும் சினேகிதமா இருந்திச்சாம். சினேகிகதமா இருக்கயில, சாமிக்குப் பொங்க வைக்க நெனச்சு, பொங்கலுக்கு வேணும்ண்ற பான, அரிசி தேடிக்கிட்டு வரணும்ண்டு, ரெண்டும் வெளில பெறப்பட்டு போச்சாம்.

மொதல்ல, பொங்க வைக்கப் பான (பானை) வாங்கப் போச்சாம். குருவி நல்ல பானயயும், காக்கா ஓட்டப் பானயயும் வாங்கிட்டு வந்துச்சாம்.

மறுநா, நெல் பெறக்கப் போச்சாம். குருவி நல்ல நெல்லயும், காக்கா பொக்கு நெல்லயும் பெறக்கிக்கிட்டு வந்துச்சாம்.

அதுக்குப் பெறகு, ரெண்டும் வெறகுக பெறக்கப் போச்சாம். குருவி காஞ்ச வெறகயும், காக்கா பச்ச வெறகயும் பெறக்கிக்கிட்டு வந்துச்சாம்.

காக்காயும், குருவியும் பொங்க வைக்க, பொங்கப் பானயத் தூக்கிக்கிட்டு போச்சாம். போயி –, பொங்க வைக்கிதுக. காக்கா வச்ச பொங்க நல்லாப் பொங்குது. பொங்கயில பெலமான மழ (மழை) புடுச்சு அடிக்குது.

காக்கா அவசரப்பட்டு, பானயில இருந்தத வாரி வழுச்சு வாயில போட்டுக்கிட்டு, பறந்து போயிருச்சு. குருவி, நிதானமா, நனஞ்சுகிட்டே பொங்க வச்சுக் கொண்டு வந்து, புருசி புள்ளைகளுக்கெல்லாம் குடுக்குது.

பொங்கல வயிறாரச் சாப்பிட்ட குஞ்சுக, அம்மா! நாளக்கி, எங்களுக்குப் பணியாரஞ் சுட்டுக் குடும்மாண்டு கேட்டுச்சுக கேக்கவும், குருவி பணியாரஞ் சுட்டுச்சாம்.

பணியாரஞ் சுடயில, மழ புடிச்சுப் பெய்யிது. மழயில, காக்காக் கூடு நனஞ்சு விழுக ஆரம்பிச்சிருச்சு. பிஞ்சு – பிஞ்சு கெடக்கு, ஒட்ட தெரியுது. அந்த ஒட்ட வழியா, காக்கா, குருவி வீட்டப் பாக்குது. அங்க குருவி பணியாரஞ் சுட்டுக்கிட்டு ஒக்காந்திருக்கு. பணியாரத்தப் பாத்ததுங் காக்காய்க்கு நாக்குல எச்சு ஊருது. எப்படியாவது குருவி சுடுற பணியாரத்தத் திண்டுபிடணும்ண்டு நெனச்சு,

"காத்தும் மழயுங் கலந்தடிக்குது
கள்ளி மரமெல்லாம் நெறு நெறுங்குது
அக்கக்கா கொஞ்சம் கதவத் தொற – ண்டு"

குருவி வீட்டுக் கதவ தட்டிச்சு. தட்டயில, இப்பத்தர் பிள்ளைக குளிக்குதுக, அப்புறமா, வாண்டு குருவி சொல்லுது.

"காத்தும் மழயுங் கலந்தடிக்குது
கள்ளி மரமெல்லாம் நெறு நெறுங்குது
அக்கக்கா கொஞ்சங் கதவத் தொற – ண்டு"

பெறகுஞ் சொல்லுது.

இப்பத்தா – எம்புருசனுக்கு தல முழுக்காட்றே, கொஞ்சம் பொறுண்டு சொல்லிக்கிட்டே.... குருவி, பணியாரத்தச் சுட்டுச் சுட்டு அடுக்குப் பானைக்குள்ள வச்சிட்டு வந்து, குருவி, கதவத் தொறந்துச்சு.

காக்கா குளிர்ல நடுங்குறத போல பாசாங்கு செய்யுது. நெசமாத்தா, காக்காயிக்கு குளிருதுண்டு நெனச்சு, சரிக்கா! எங்க படுத்துக்கிறண்டு குருவி கேட்டுச்சு.

அடுக்குப் பானக்குள்ள படுத்துக்கிறேண்டு காக்கா சொல்லுச்சு. அடுக்குப் பானக்குள்ள பணியாரம் வச்சிருக்கிறத மறந்து போன குருவி, சரிண்டு சொல்லிருச்சு.

அடுக்குப் பானக்குள்ள படுக்கப் போன காக்கா, குருவி வச்சிருந்த பணியாரத்தப் பூராவும் திண்டுபிட்டு, பறந்து போயிருச்சு.

காலயில எந்திருச்சு, அடுக்குப் பானயப் பாத்த குருவிக்கு, ஒரே வகுத்தெரிச்சலாப் போச்சு. காக்காய, எப்டினாலும் பழி வாங்கணும்ண்டு நெனச்சு, குருவி காக்காயத் தேடிக்கிட்டுப் போச்சு.

தேடிப் போகயில, அங்கிட்டு ஒருத்த் நெலத்ல உழுதுகிட்டு இருக்கா். அவங்கிட்டப் போயி, இந்த வழியா – ஒரு காக்கா போச்சாண்டு குருவி கேக்குது.

அதுக்கு, அந்த உழுகுறவ், அந்தா பாரு அங்க ஒரு அண்ரண்டாப் பச்சி (பட்சி) இருக்கு. அதுகிட்டப் போயி கேளுண்டு சொல்லிட்டா்.

அண்டரண்டாப் பச்சிகிட்டப் போயி, இந்தப் பக்கமா ஒரு காக்கா போச்சாண்டு, குருவி கேட்டுச்சு.

அதுக்கு, அண்டரண்டாப் பச்சி, ஒரு மொட்ட மரத்தக் காமிக்குது. காமிக்கவும்! அந்த மரத்துக்குப் பறந்து போன குருவி, காக்காயப் பாத்து, காக்கக்கா! காக்கக்கா! ஒனக்கு தல முழுகத் தண்ணி காய வச்சுட்டு, ஒன்னய எங்லெல்லாம் தேடுறதுண்டு குருவி சொல்லுச்சு.

காக்காய்க்கு ஒரே சந்தோசம். சந்தோசம்ண்டா பொறுக்க முடியல. காக்காய கூப்பிட்டுக்கிட்டு, குருவி, வீட்டுக்கு வருது. வந்து, காக்காய ஒக்காரச் சொல்லி, நல்....லா காஞ்ச தண்ணிய தூக்கி, காக்கா தலயில ஊத்திருச்சு, ஊத்தவும், சோம்பேறிக் காக்கா, வெந்து செத்துப் போச்சு. பெறகு என்னா? புருச புள்ளைகளோட குருவி நல்லா வாந்துச்சாம்.

13. ஆமயும் நரியும்

ஒரு மலயில – ஆமயும் – நரியும் கூட்டா இருந்திச்சாம். எங்க போனாலும் ரெண்டுந்தா போகுமாம். இந்த நரி எர பெறக்கிட்டு வந்து, இந்த ஆமக்கிக் குடுத்திட்டுத் தானுஞ் சாப்டுமாம்.

அப்ப, அந்த மலயடிவாரத்ல ஒருத்தி வெள்ளரிக்காத் தோட்டம் போட்டுருக்கா். நல்லாக் காயு காச்சு இருக்கயில, இந்த நரி வெள்ளரிப் பிஞ்சு, திங்க ஆசப்பட்டு –

இந்த நரி, ஆமயக் கூட்டிக்கிட்டுப் போகுது. போயி, வேலிக்கு வெளிய, ஆமயக் காவ (காவல்) வச்சிட்டு, ஆளு வந்தா சொல்லுண்டு சொல்லிட்டு, வெள்ளரிப் பிஞ்சு புடுங்கத் தோட்டத்துக்குள்ள போயிருச்சு. ஆம வெளிய ஒக்காந்துகிட்டிருக்கு. ஆம என்னத்தச் சொல்லி, நரிக்கு கேக்கப் போகுது. இது வெளிய இருக்கு. அங்க நரி பிஞ்சு பெறக்கித் திண்டுகிட்டிருக்கு. இப்டி இருக்கயில, தோட்டக்கார் வந்திட்டா். தோட்டக்காரனப் பாத்ததும், ஆம ஒட்டுக்குள்ள, தலய நொளச்சிக்கிருச்சு. இவ் போயி, நரியப் புடிச்சுக்கிட்டா். புடிச்சு, மாட்டு – மாட்டுண்டு மாட்றா். நரி, அலறிக்கிட்டு வெளிய ஓடியாந்து, ஆமயப் பாத்து,

ஆமக் கழுத ஊமக்கழுத,
ஆளு வந்தா சொன்னென்னா கழுத – ண்டுசொல்லுச்சு.

அதுக்கு ஆம, கோவம் வந்து,

அட, நரிக்கழுத நக்குன கழுத
நா் என்னத்த பாத்தே
ஒன்னய மாதிரி ஊர் ஊரா அலயாம
கெடச்சதத் திண்டுக் கெட தண்ணில கெடப்பே – ண்டு

சொல்லுச்சு. சொல்லிட்டு ரெண்டும் பிரிஞ்சு போயிருச்சாம். அண்ணக்கிருந்து ரெண்டுங் கூடில்ல. ஆமயும் நரியும் சேர முடியுமா? சேருறது கூடத்தான் சேரணும். கண்டதுக கூடயெல்லாம் சேர முடியுமா?

14. பயம்

ஒரு காட்ல –, ஒரு நரி இருந்திச்சாம். அந்த நரிக்குப் புலி யக் கண்டா பயம். தன்னக் காட்டிலும் பெரிய பெராணிகளக் கண்டா பொதருக்குள்ள போயி ஒழிஞ்சுக்கிறுமாம்.

ஒருநா, அந்த நரிக்கு கல்யாணம் முடுஞ்சு, பொண்டாட்டி நரியக் கூட்டிக்கிட்டு, காட்டுக்கு வருது, வர்ர வழில, புலி மலம் கழிச்சு வச்சிருந்திச்சு. மலத்தக் கண்டதும், நரி மொகத்தச் சுழுச்சுக்கிட்டு,

மாடு மத்தளக்காரர்

எருமக் கடா கெணக்கா ரங்கி

வழி மேல பேண்டு வச்சிருக்கர்

அதத் தாண்டி வா – ண்டு

பொண்டாட்டிகிட்டச் சொல்லுது. சொல்லவும், பக்கத்துப் பொதர்ல ஒழிஞ்சுக்கிட்டிருந்த புலி, நரியாரே! என்னா மொனங்கிக்கிட்டுப் போறேண்டு கேட்டுச்சு. கேட்கவும் நரி நடுங்கிப் போயி,

சாமியவுக – போட்டு வச்ச சந்தனம்

சரி கருப்பட்டி கலந்திருக்கு – அத

வாரி வழுச்சு வாயில போட்டுக்கிட்டு

வாடிண்டு சொன்னே – ண்டு

சொல்றே–ண்டு சொல்லிட்டு பொதருக்குள்ள மறஞ்சுகிருச்சாம்.

15. சினேகிதம்

ஒரு பூனயும் – நரியும் சினேகிதமா இருந்திச்சாம். சினேகிதமா இருக்கயில, பூன செய்யுறத நரியால செய்ய முடியல. பூனக்கித் தெரியுறது நரிக்குத் தெரியல. எதுக்கெடுத்தாலுங் கிர்ண்டு ஒடத்தர் தெரியுது.

இருக்கயில, இந்த நரி, பூனண்ணே! நிய்யி செய்றதெல்லாம் எனக்குச் சொல்லிக்குடுண்டு கேட்டுச்சு. கேக்கவும் பூனயும் சரிண்டு சொல்லிச்சு.

அப்ப பூன! நரியண்ணே! இண்ணைக்கி ஒரு பெரிய எடத்ல கல்யாணம் நடக்குது. வா – அங்க போவோம். ஆருக்கும் தெரியாம மேவீட்ல போயி ஒக்காந்துக்கிருவோம். ஒக்காந்து, கலியாணத்தப் பாத்திட்டு, சத்தம் போடாம வந்திரணும்ண்டு சொல்லுது. அங்க சத்தம் போட்டு ஊளை இட்றாதண்டு சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போகுது.

போயி, ஆருக்குந் தெரியாம மேவீட்ல போயி, பூனயும் நரியும் ஒக்காந்திருக்குக. எடயில பூன, நரியண்ணே! கத்திராத ஆளுக வந்து நம்மள அடிச்சுப் போட்டுருவாங்க. பேசாமப் பாரு. கலியாணம் முடியவும் எரங்கி ஓடிப் போயிருவோம்ண்டு சொல்லுது.

இருக்கயில, கோழி கூப்ட ஆரம்பிக்குது. நரியண்ணே! கோழி கூப்டப் போகுது. ஊளையிட்டுராதண்டு சொல்லுது. சரிண்ணேண்டு சொல்லிருச்சு.

அப்ப, கெழக்க நல்லா வெளுத்திருச்சு. விடியப் போகுது, விடியப் போகயில, நரிப் புத்தி போகுமா! விடியப் போகயில, இந்த நரி,... ஓ... ஓ.... ஓண்டு ஊளையிட்டுருச்சு.

ஊளையிடவும், கல்யாண வீட்டுக்காரங்க வீட்டு மேல ஏறி வந்து பாத்திட்டு, நரி இருக்டா, கம்பு எடுத்துட்டு வாங்கடாண்டு சொல்லி, எல்லாரும் வந்து அடிச்சுப் போட்டுட்டாங்க.

[stamp]

அடிச்சுப் போடவும், நரி செத்துப் போச்சு. பூன எடவாரத்ல தவ்வி ஓடிப்போச்சு. இந்த நரியோட் பொண்டாட்டி நரி அழுது வருது. எப்டி சொல்லி அழுது வருதுண்டா,

கூடுவாரோட கூடாத

கூடங்கள் மாடங்கள்ள ஏறாதண்டு சொன்னேனே – இப்ப

கூடுவாரோட கூடி

கூடங்கள்மாடங்கள் ஏறி – இப்ப

குண்டக்க மண்டக்க ஆயிச் போச்சுல்ல – ண்டு

சொல்லி அழுது வருது. வரயில, பூன இருந்துகிட்டு,

கூடுவாரோட கூடுனது குத்தமில்ல

கூடங்கள் மாடங்கள் ஏறுனது குத்தமில்ல

வேடங் கழுத்த ஊதாட்டி

நாசங்கள் மோசங்கள் ஏ... வருது – ண்டு

சொல்லிட்டு, பூன ஓடிப் போச்சாம். பூனயும் நரியும் கூடுனா எனமுண்டாலும் ஆகுமா? அதா் சொல்றது. சேருறவங்க கூடத்தா் சேரணும்ங்றது. யாராரோடு சேந்தாலும்; அவங்கவங்க புத்தி அவங்கவங்க கிட்டதா் இருக்கும். நரிப்புத்தி நரிகிட்டதான இருக்கும். போயிறவா போகுது.

16. குரங்கு மனம்

ஒரு ஊர்ல, ஒரு குடும்பத்ல, புருசு் – பொஞ்சாதி ரெண்டு வேருக்கும் ஒரு மக இருந்தா. அது ஏளக் குடும்பம். மகள வீட்ல விட்டுட்டு தாயும் தகப்பனும் ஏலமலக்கிப் போயிட்டாங்க. போகயில, காப்டி நெல்லக் குடுத்து, நாங்க வர்ற வரைக்கும் இத ஒண்ணொண்ணா கொறிச்சுக்கிட்டு இருண்டு சொல்லிட்டுப் போயிட்டாங்க. இந்தப் பிள்ள, ஒரு நெல்லக் கொறிக்குறது – இம்புட்டுத் தண்ணிக் குடிச்சுக்கிறது. இப்டியுமா இருக்கா.

இருக்கயில, அங்கிட்டிருந்து, ஒருத்த் பூசணிக்கா வித்துக்கிட்டு வந்தா். வரவும், பூசணிக்கா என்னா வெலண்டு கேட்டா. கேக்கவும், அவ், காப்டி நெல்லுண்டு சொன்னா். சொல்லவும், காப்டி நெல்லக் குடுத்திட்டுப் பூசணிக்காய வாங்கிக்கிட்டா்.

பூசணிக்காய வேக வச்சுத் திம்போம்ண்ட்டு, அறுவாமணய எடுத்து வச்சு அறுத்தா. அறுக்கவும் –, அதுக்குள்ள இருந்து கொரங்கு வந்திருச்சு. காப்டி நெல்லு போச்சேண்டு வருத்தமா ஒக்காந்திருக்கா. அப்ப: கொரங்கு, என்னாக்கா? இப்டி ஒக்காந்திருக்கண்டு கேட்டுச்சு. கேக்கவும் –, எங் – காப்டி நெல்லு இருந்தாலும் ஒண்ணொண்ணா கொறிச்சு, தண்ணி குடிப்பேப். இப்ப: இப்டி மோசம் போனனேண்டு கொரங்குகிட்டச் சொன்னா. சொல்லவும், கொரங்கு, ஒரு சாக்குக் குடுக்காண்டு கேட்டுச்சு. குடுக்கவும், வாங்கிட்டுப் போயி; நெல்லக் கொண்டு வந்து, வீட்ட நெறச்சிருச்சு.

சவுளிக்கடைக்குப் போயி; கடக்காரங்ககிட்ட, ஒம்பிள்ள செத்துப் போச்சுண்டு கொரங்கு சொல்லுச்சு, அவ் அலறியடிச்சுக்கிட்டு வீட்டுக்கு ஓடுனா். ஓடவும், நல்ல சீலைகள

அள்ளிக்கிட்டு கொரங்கு வீட்டுக்கு வருது. வந்து, வீட்ல வச்சிட்டு மறுநா,

நகைக்கடைக்குப் போகுது. போயி, ஒம்பொண்டாட்டி செத்துப் போனாண்டு சொல்லுச்சு. அவ் – விழுந்தடிச்சு வீட்டுக்கு ஓடுனா். ஓடவும், நல்ல நகைகளா எடுத்துக்கிட்டு வந்திருச்சு. கொண்டு வந்து குடுத்திட்டு, நா–ஞ் செத்தா என்னா செய்வேண்டு கொரங்கு கேட்டுச்சு, அதுக்கு, நீ செத்தா கொட்டுக் கொட்டி, தேருக்கட்டி, அமர்க்களமா எடுத்துப் போடுவேண்டு சொல்றா.

சொல்லவும், கேட்டுக்கிட்டுப் பேசாம இருந்துகிருச்சு. இருக்கயில, ஒருநா, செத்தது மாதிரி படுத்துக்கிருச்சு. கொரங்கு செத்துப் போச்சுண்டட்டு, அங்கிட்டுருக்ற பயகளக் கூப்ட்டு, இந்தக் கொரங்க இழுத்திட்டு போயி; ஒடயில போடுங்கடாண்டு சொன்னா. சொல்லவும், கொரங்கு எந்திரிச்சிருச்சு. எந்திரிச்சு, ஒக்காந்துகிட்டு, ஏனுக்கா! நா – ஞ் செத்தா, கொட்டுக் கொட்டி, தேருக்கட்டி, டம்பக்கமா எடுத்துப் போடுவேண்டு சொன்னயே, இப்ப; இழுத்துட்டுப் போயி, ஒடயில போடுங்கடாண்டு சொல்றியேண்டு கொரங்கு கேட்டுச்சு.

அவ விக்குனவளுமில்ல – வெறச்சவளுமில்ல. அப்ப: கொரங்கு, அக்கா! நா் குடுத்ததப் பூராம் நிய்யி வச்சுக்க, வச்சுப் பொளச்சுக்க. நா் போயி, எங்கூட்டத்தோட சேந்துக்கறேண்டு சொல்லிட்டுப் போயிருச்சு.

போகவும் –, இவளப் புடிச்சு எல்லாரும் வைராங்க. வசவ வாங்கிக்கிட்டு, கொரங்கு குடுத்த பொருள்கள வச்சு நல்லாப் பொளச்சாளாம். இதுனாலதா்! எனத்துக்கு உதவுணும். எனத்தோடதா் சேரணுமிங்றது.

17. இளையவள்

ஒரு ஊர்ல – ஒரு ராசா. அந்த ராசாவுக்கு பிள்ள இல்ல. கொளுந்தியா இருக்கா. அவ, அக்காள வெரட்டிட்டு, ராசா கூட வாழணும்ணடு நெனக்கிறா. அந்த அரமணயில, ஆன, சிங்கம், புலி, காராம்பசுவு, குதுர, வெள்ளப்பசுவு நெறயா வளக்குறாங்க. அதப் பாத்துக்றதுக்கு, ஆளுக போட்டு, ராசா ஆச்சி செஞ்சுக்கிட்டிருக்காரு.

பிள்ள இல்லாத கொற பெருங்கொறயா இருக்கு. கொளுந்தியா ரத்த வெறி புடிச்சவ. அக்காள, அரமணய விட்டு வெரட்டுறதுக்கு திட்டம் போட்டுக்கிட்டிருக்கா.

அந்த அரமணயில எட்டுத் தலவாசல். ஒண்ணொன்னுலயும் எட்டெட்டுப் பேரு காவ காக்குறாங்க. அப்ப: இவ, ஆருக்கும் தெரியாமப் போயி –, காராம்பசுவ கடிச்சு, ரத்தத்த உறிஞ்சிப்பிட்டு, போட்டுட்டு வந்து, படுத்த எடத்ல படுத்துக்றா. ராசா, காவக்காரங்கள வெரட்டுராரு. காராம்பசுவ என்னமோ அடுச்சுபிடுச்சுண்டு சொல்றாங்க. நீங்க எங்க போனீங்க? இண்ணக்கி, நல்லா காவகாருங்கண்டு சொல்றாரு.

அண்ணக்கி ராத்ரி, சிங்கக் கொட்டகக்குள்ள போனா. சிங்கத்தப் புடுச்சுக் கடிச்சு, ரத்தத்த உறிஞ்சிட்டு வந்து படுத்துக்கிட்டா. காவலாளிகளால அதயும் கண்டுபிடிக்க முடியல. ரொம்ப சிரமப்பட்டு காவ இருக்காங்க.

இருக்கயில, அண்ணக்கி ராத்ரில, ஆனக் கொட்டகக்குள்ள போயி, பட்டத்து ஆனயக் கடிச்சு, ரத்தத்த உறிஞ்சிட்டு வெளிய வரயில காவக்கரங்க பாத்திட்டாங்க.

காவக்காரங்களுக்கு சிக்காம ஒடியாந்து, அக்கா படுத்திருக்ற வீட்டுக்குள்ள போயி, ரத்தத்த துப்பி விட்டுட்டு, அவ எடத்ல

போயி படுத்துக்கிட்டா. பின்னால வெரட்டி வந்தவங்க, அக்காள புடிச்சு, ராசாகிட்டக் குடுத்திட்டாங்க. ராணிதா, ஆன: குதிர: பசுவுகளக் கடிச்சதுண்டு காவக்காரங்க சொன்னாங்க. சொல்லவும் –, ராணிய கொண்டுபோயி: காட்ல வெட்டிப் போட்டுட்டு வாங்கடா–ண்டு ராசா சொல்லிட்டாரு.

பிள்ளத்தாச்சியா இருந்த ராணிய கொண்டுபோயி, காட்ல வெட்டிப் போட்டுட்டு வரச் சொல்லயில, அதுக்கு தங்கச்சிகாரி, எங்கக்காள வெட்ட வேணாம். அவ கண்ணுமுளிகள மட்டும் புடுங்கிக்கிட்டு வாங்கண்டு சொல்றா. காவக்காரங்க, ராணிய வனத்துக்குள்ள கொண்டுபோயி, கண்ணு முளியத் தோண்டிக்கிட்டு வந்து, தங்கச்சிகிட்டக் குடுத்தாங்க.

அண்ணக்கி ராத்திரி – வேதனையோட வேதனையா, ராணி, காட்ல ஆம்பளப் பிள்ள பெத்துக்கிட்டா. அப்ப: அந்த வழியா ஒரு முனிவரு, என்னடா! இந்தக் காட்டுக்குள்ள பிள்ள அழுகிற சத்தங் கேக்குதுண்ட்டு, அங்க வாராரு.

வந்து பாக்கயில, ராணி இருக்கா. பாவம்ண்டு கூட்டிட்டுப் போயி: நல்லா வளக்குராரு. வளக்கயில, ராசா மக பெரியவனாயிட்டா. அம்மா! நா பெரியவனாயிட்டே. எங்குட்டாச்சும் போயி: சம்பாரிச்சுட்டு வரேன்ட்டு, நேரா நாட்டுக்கு வாரா. வந்து: அரமணயில வேலக்கிச் சேருறா. சேந்து, எடுபிடி வேல செஞ்சுகிட்டிருக்கா. இருக்கயில, எளையராணி, இவனக் கொல்லணும்ண்டு நெனைக்கிறா. அதனால, இவன ஒரு ராட்சசிகிட்ட அனுப்புறா. போகயில, ஒரு வனத்துல, ஒரு பொம்பள தவஞ் செய்யிறா.

அவள ஒரு மொரடன் கெடுக்கப் பாக்குறா. அப்ப: அவங்கிட்ட இருந்து, அவளக் காப்பாத்துறா. காப்பாத்தவும், அந்தப் பொம்பள, இவன, வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறா.

வீட்ல போயி வெசாரிக்கயில, நா் அரமணயில வேல செய்றே். ராணி, இந்த லிகிதத்தக் குடுத்து, ராட்சசிகிட்ட குடுக்கச் சொன்னாண்டு சொன்னா். அத வாங்கிப் பாத்தா. அதுல "இவன முழுங்கவும்" ண்டு இருந்திச்சு.

இந்தப் பொம்பள, அதக் கிளிச்சுப் போட்டுட்டு, "இவன நல்லா ஆதரிக்கவும்"ண்டு எழுதிக் குடுத்துட்டா. கொண்டுகிட்டுப் போறா். போயில –, அங்கிட்டு ஒரு பாம்பு ஒரு தவக்காயப் புடிச்சு முழுங்கிக் கிட்டிருந்திச்சு. பாவம் சாகப் போகுதுண்டு, தவக்கா மேல எரக்கப்பட்டு, தொடக்கரிய அறுத்து பாம்புக்குக் குடுத்திட்டு, தவக்காய, பாம்புகிட்ட இருந்து வெலக்கி விட்டா்.

வெலக்கி விட்டுட்டு, அங்கிட்டுப் போறா். ராட்சசிகிட்டப் போறா். போயி: ஓலயக் குடுத்தா். ஓலய வாங்கிப் பாத்திட்டு, நல்லா உபசரிச்சு அனுப்பி வக்கிறா.

வரயில –, ராட்சசியப் பற்றி விசாரிக்கிறா். அப்ப: அவ, ஏழு சமுத்திரத்துக்கு அங்கிட்டு, ஒரு சமுத்ரம் இருக்கு. அதுக்கு நடுவுல, ஒரு ஆலாமரம் இருக்கு, அந்த ஆலாமரத்து உச்சில ஒரு வண்டு கூடுகட்டி பொளைக்கிது. அந்த வண்டுலதா் எங்க உசுரு இருக்குதுன்னு சொல்லிட்டா.

ராட்சசி சொன்னதக் கேட்டுக்கிட்டு, இவ் திரும்பி வாரா். வரயில –, ஒரு ஆத்து நெறயா தண்ணி போகுது. இவனால ஆத்தக் கடக்க முடியல. கடக்க முடியாம இருக்கயில –, தவக்காயிக ஒண்ணு சேந்து, ஒண்ணோடொண்ணப் புடிச்சு பாலம் மாதிரி படுத்துக்கிருச்சுக. அதுமேல நடந்து ஆத்தக் கடந்திட்டா். இங்கிட்டு வரயில –, இன்னொரு ஆறு மறுச்சுக்கிறவும், இவ், பாம்ப நெனச்சா். பாம்புக வந்து, ஒண்ணொடொண்ணு பின்னி, பாலம் மாதிரியாகிப் போச்சு. அது வழியா நடந்து ஆத்தக் கடந்திட்டா்.

இங்ஙிட்டு வரயில –, ஒரு காளி கோயிலு இருக்கு. அந்தக் காளியக் கும்பிட்டர். கும்பிடவும், காளி பிரசனமாகி, என்னா வேணும்ணடு கேட்டுச்சு. கேக்கவும், வெசயத்தச் சொன்னர்.

சொல்லவும் –, விபூதியக் குடுத்து, இந்த விபூதியக் கடல்ல போட்டா, கடலு வத்திப் போகும்ண்டு சொல்லி குடுக்கவும், வாங்கிக்கிட்டுப் போறா.

சமுத்ரத்துக்கிட்ட போயிட்டர். போயி காளி குடுத்த விபூதியப் போட்டர். சமுத்ரம் ரெண்டா விரிஞ்சு வழிவிட்டுச்சு, போனர். அங்க ஒரு பெரிய ஆலாமரம் இருந்திச்சு. மரத்ல, ஏறி வண்டப் புடிச்சர். புடிச்சுக்கிட்டு நேரா அரமணக்கி வந்தர். வந்து: இவகிட்ட வந்து, எங்கம்மா கண்ணுகள தோண்டி வச்சிருக்கயில, அதக் குடுண்டு கேட்டர். கேக்கவும் –, அவ, எங்கிட்ட இல்லண்டு சொல்றா.

இல்லண்டு சொல்லவும் –, வண்டு கால ஒடிச்சர். ஒடிக்கவும், எளயராணி கால்க ஒடிஞ்சுச்சு. வண்டுக் கைகள ஒடிச்சர், எளயராணி கைக ஒடிஞ்சுச்சு. பெறகும், ஓங்கம்மா கண்ணு எங்கிட்ட இல்லண்டு சொல்றா. சொல்லவும், வண்டுக் கழுத்த நெரிச்சர். நெரிக்கவும், ராணி கழுத்து நெருஞ்சு போச்சு.

வண்டு சாகவும் அவளும் செத்துப் போனா. அரமணக்குள்ள போயி தாயோட கண்ணுகள, அடுக்குப் பானக்குள்ள இருந்து எடுத்திட்டு வந்திட்டர். ராசாகிட்ட வெவரத்தச் சொல்லிட்டு, தாயி இருக்ற எடத்துக்குப் போறர். போயி: தாயிக்கு, கண்ண வச்சர். வக்யவும் பார்வ வந்திருச்சு.

பெறகு, இவள, அரமணக்கிக் கூட்டிட்டு வந்து, நல்லாப் பொளச்சாங்களாம்.

18. கொடுமக்காரி

ஒரு ஊர்ல – ஒரு அம்மா இருந்தா. அவளுக்கு மூணு ஆம்பளப் பிள்ளைக, ஒரு பொம்பளப் பிள்ள. மூணு மகங்களுக்கு கலியாணமாச்சு. மகளும் கலியாணமாகிப் போயிட்டா.

இந்த அம்மா இருக்காளே, ரொம்பக் கொடுமக்காரி. மருமகள்கள, இந்தண்ட – அந்தண்ட அசய விடமாட்டா. எதயும் வாங்கி, வாய்க்கி ருசியாத் திங்க விடமாட்டா. இந்த மூணு மருமகள்களும், மாமியாள வெளில வெரட்டணும்ண்டு திட்டம் போட்டாங்க. ஒரு திட்டங் கூடப் பலிக்கல.

ஒருநா, காலைல, மூத்த மருமக, ஒங்க மகளப் பாம்பு கடிச்சிருச்சாம்ல, நீங்க போயிப் பாக்கலயாண்டு கேட்டா.

இத உம்மண்டு நெனச்சு, மக மேல இருக்ற பாசந் தாங்க மாட்டாம, மக இருக்ற ஊருக்குப் போறா.

மாமியா போகவும், இவங்க ஆசப்பட்டதெல்லாம் வாங்கித் திங்கணும்ண்டு நெனச்சு, மூத்த மருமக கரும்புச் சவளம் வாங்கித் திண்டா. நடு மருமக தோச சுட்டுத் திண்டா. கடசி மருமக கோழி அடுச்சு, கொழம்பு வச்சா. கொழம்பு கொதிக்கயில, மாமியா வந்திட்டா. வரவும், மருமகளுகளுக்குக் கையும் ஓடல, காலும் ஓடல.

வந்ததும், வராததுமா, ஒங்க மக நல்லா இருக்காளாண்டு மூணு வேரும் மொத்தமாக் கேட்டாங்க. கேக்கவும், மாமியாகாரி, நல்லாப் பாத்தா, வாசல்ல கரும்புச் சக்க கெடக்குது. தோச சுட்ட

அடையாளம் இருக்குது. கோழிக் கொழம்பு மணக்குது. இதெல்லாம் நல்லா தெருஞ்சுகிட்டா. தெருஞ்சுகிட்டு, அத ஏ...ங் கேக்குறீங்க?

ஏ...மகளக் கடிச்ச பாம்பு...

இருந்திச்சாம் – இருந்திச்சாம்

கரும்புச் சவளம் தண்டில – படம்

எடுத்திச்சாம் – எடுத்திச்சாம்

சுட்ட தோசத் தண்டில – ஏ... மனசு

கொதிச்சிச்சாங் – கொதிச்சிச்சாங்

கோழிக கொழம்பப் போல – ண்டு

சொல்லிப் பொய்யா அழுதாளாம். கோழிக் கொழம்ப மாமியா கண்டுட்டாண்ட்டு, கடசி மருமக தூக்கிக்கிட்டு போயி குப்பயில கொட்டிட்டா, அது மழயில நனஞ்சு, பூஞ்சான் புடுச்சுக் கெடந்திச்சாம். மின்னல் வெட்டினதால காளானாப் போச்சாம். வச்ச கொழம்ப, மாமியாளும் திங்காம மருமகளும் திங்காம, வெறு மனசால வீணாப் போச்சு. மாமியாதா் மருமக்க திங்கட்டுமிண்டு விட்டெ்ன்னா? இந்தப் பொம்பளைக, பா....வம், மாமியாளுக்கு குடுத்தென்னா? சரி..., சரி... நீங்க சண்ட புடிக்காதீங்க. மாமியாளுக்கு ஏத்த மருமக. மாமியாளும் மருமகளும் எங்க ஒத்துமயா இருக்காங்க?

19. இப்படியும் மனைவி

ஒரு ஊர்ல, புருசனும் – பொண்டாட்டியும் இருந்தாங்க. புள்ளயே இல்ல. புள்ள இல்லாதனால, நல்ல புருச் இருக்கயில, கள்ளப் புருசன வச்சுக்கிட்டா. புருச் இல்லாதபோது, கள்ளப் புருசன வரவச்சு, அவனோட கொஞ்சிக் குலாவுறது, இவளுக்கு வாடிக்கயாப் போச்சு.

ஒருநா வெள்ளண்ணா, புருச் வயக்காட்டுக்கு உழுகப் போயிட்டர். பொண்டாட்டிய கஞ்சி கொண்டுட்டு வாடிண்ட்டு, ஏரப்பூட்டிக்கிட்டுப் போயிட்டர்.

புருசனுக்கு கஞ்சி கொண்டு போகாம, கள்ளப் புருசன வரவச்சு பகலெல்லாம் அவங்கூடப் படுத்துக் கெடந்திருக்கா. புருச் பகலெல்லாம் உழுதிட்டு, பொறுமயா, பொழுது சாய வீட்டுக்கு வர்றர்.

இவ ஒடம்புக்கு முடியலண்ட்டு பாசாங்கு போட்டுப் படுத்துக் கெடக்கா. ஏண்டி! வயக்காட்டுக்கு கஞ்சி கொண்டுட்டு வரலண்டு, புருச் கேக்றர். ஒடம்பு சரியில்ல. காச்ச மண்டையிடிண்டு புளுகுறா சிறுக்கி.

ஒடம்பப் போயித் தொட்டுப் பாத்திட்டு, ஒண்ணுமில்ல. இவ ஏக்கிறாண்டு, பொண்டாட்டி மேல சந்தேகம் வந்திருச்சு. இத, பொண்டாட்டிகிட்டக் காட்டிக்கிராம, இதக் கண்டு புடிக்கணும்ண்டு நெனக்கிறர்.

மறுநா காலைல உழுகப் போகயில, வயல்ல நெறயா புல்லு கெடக்குது. நீ உழுக – உழுக, நிய்யி பெறக்கணும் எங்கூட வயலுக்கு வாண்டு கூப்புட்டர்.

சரிண்டு சொல்லி, புருச் பின்னால போனா. பாதி வழில போகயில, கள்ளப் புருசனோட நெனப்பு வந்திருச்சு. அவந்தா

நாளக்கி வரேண்டு சொல்லியிருக்கான்ல. இவ போக முடியல. எங்க? வப்பாட்டங்கிட்ட. ஒடனே! ஒரு தந்திரம் பண்ணுனா. புருசங்கிட்ட இருந்து தப்பிக்கணுமில்ல.

ஐயோ! வகுறு வலி – வகுறு வலிண்டு கத்றா. என்னா செய்றதுண்ட்டு, பொண்டாட்டிய வீட்டுக்குப் போகச் சொல்லிட்டு, உழுகப் போறது மாதிரி போயி, வயல்ல மாட்டக் கட்டிவச்சிட்டு, இவளுக்குப் பின்னாலேயே வீட்டுக்கு வந்திட்டா்.

கதவா அடச்சுக் கெடக்குது. கதவாலத் தட்டுறா். இதுக்குள்ள இவ, என்னா செஞ்சாண்டா, கள்ளப் புருசன குலுமைக்குள்ள ஒக்கார வச்சிட்டு, வெளிய வந்து கதவாலத் தொறக்குறா. பொண்டாட்டி மேல சந்தேகம் இருந்ததுனால, வீட்டப் பையா நோட்டம்விட்டா்.

அப்ப, குலுமைக்குள்ள இருக்கிற கள்ளப் புருசி, காத்துப் போகமாட்டாம அங்கிட்டும் இங்கிட்டும் நெளியுறா். அங்கிட்டும் இங்கிட்டும் நெளியயில குலும ஆடுது. அதயும் பாத்துக்கிட்டா்.

இப்டியா சங்கதி, இரு! இரு! ஒன்னயப் பேசிக்கிறேண்ட்டு எனக்கு குதுகுதண்டு வருதுடி. கொஞ்சந் தண்ணி காய வையிண்டு சொல்றா்.

சொல்லவும், விழுந்தடிச்சுக் காய வக்கிறா. இங்கதா கள்ளப் புருசனக் குலுமைக்குள்ள வச்சிருக்காளே. அந்தப் பயம் நெஞ்சுக்குள்ள பதக் – பதக்ண்டு அடிக்குதில்ல.

தண்ணி நல்லாக் காயவும், அந்தத் தண்ணியத் தூக்கி குலுமைக்குள்ள ஊத்திட்டு, அவளயுந் தூக்கிச் சுடு தண்ணிக்குள்ள போட்டுக் கொண்டுபிட்டு, தன்னத் தானே குத்திக்கிட்டு செத்துப் போனானாம். பொண்டாட்டி, இப்டி நடந்தா, புருசி என்னா செய்வா் பாவம்.

II. நீதி விளக்கக் கதைகள்

1. நன்மை செய்தவன் நன்மை அடைவான்

ஒரு ஊர்ல – ஒரு ஐயரு, பெரிய பணக்காரரா இருந்தாரு. கொஞ்ச நாள்ல, ஐயரு, சொத்தெல்லாம் போயிருச்சு, அவரு இருந்த ஊர விட்டுட்டு, வேற ஊருக்குப் பொளைக்கப் போனாரு. பொண்டாட்டியக் கூட்டிக்கிட்டு நடந்து போனாரு. நடந்து போகயில, பசி கூடுதலாயிருச்சு.

ஒரு ஆலாமரத்தடில, ரெண்டு பேரும் ஒக்காந்து, பழய வாழ்க்கயப் பத்திப் பேசிக்கிட்டிருக்ககாங்க. இப்பிடி வாழ்ந்திட்டு, இப்ப, இப்பிடி வந்து ஒக்காந்திருக்கமேண்டு நெனச்சுக்கிட்டு, ரெம்ப வருத்தமா ஒக்காந்திருக்காங்க.

அப்ப அந்தப் பாதயில, ஒரு வழி போக்கி போறா். போறவ், அவம்பாட்டுக்குப் போகாம,

நம்ம செய்யிறவன் – நம்ம அடைவான்

திம்ம செய்யிறவன் – திம்ம அடைவா – ண்டு

பேசிக்கிட்டே போறா். அவ் பாட்ல பேசிட்டுப் போனத, இவங்க நெனச்சுக்கிட்டே போறாங்க. போகயில, ஒரு பெரியஊரு, அந்த ஊரு ராசாகிட்டப் போறாங்க. ராசாகிட்டப் போயி,

நம்ம செய்யிறவன் நம்ம அடைவான்

திம்ம செய்யிறவன் திம்ம அடைவா – ண்டு ஐயரு சொன்னாரு. இதக் கேட்டு, அரச் ரெம்ப மகிழ்ச்சியடஞ்சு, ஐயருகிட்ட ஒரு சீட்டு எழுதிக் குடுத்து, கடயில போயி, என்ன வேணுமோ, பூராத்தயும் வாங்கிக்கண்டு ராசா சொல்லிட்டாரு.

அண்ணைக்கிருந்து நெதமும், ஐயரு அரமணக்கிப் போயி,

நம்ம செய்யிறவன் – நம்ம அடைவான்

திம்ம செய்யிறவன் – திம்ம அடைவா – ண்டு

சொல்றது. ராசாகிட்டயிருந்து சிட்டு வாங்கிட்டு வந்து, வேணும்ன்றத வாங்கிச் சாப்டுறது, ஐயரு வழக்கம், இப்டியே ஒரு வருசங் கழிஞ்சிருச்சு.

ஒருநா, அந்த அரமணயில வேல செய்யுற அம்பட்டயன், ஐயரு வீட்டுக்கு வந்தா். வந்து, ஐயரே! ஒனக்கு வசியம் பண்ணத் தெரியுமாண்டு கேட்டா். ஐயருக்கு, ராசா குடுக்குற சலுகயப் பாத்து, அம்பட்டயன், பொறாமப்பட்டு, ஏயா ஐயரே!

நம்ம செய்யிறவன் – நம்ம அடைவான்

திம்ம செய்யிறவன் – திம்ம அடைவா – ண்டு

சொல்லி, ராசாகிட்ட இருந்து சலுக வாங்கிப் பொளைக்கிறயில்ல, அதச் சோதிக்கணும்ண்டு, ராசாவும், மந்திரியும் பேசிக்கிட்டாங்க. எப்டிண்டா, ராசாவுக்கு மதிப்புத் தராம, நெருங்கி நிண்டு பேசுறயாம். அதனால ஒன்னய சிரச்சேதம் செய்யணும்ண்டு ராசா சொன்னாரு. அப்டியிருக்கயில, நாளக்கி நிய்யி அரமணக்கி போனா, பத்தடி தள்ளி நிண்டுபேசுண்டு, ஐயருகிட்ட, அம்பட்டயன் சொல்றா்.

சொல்லிட்டு, அம்பட்டயன் அரமணக்கி வந்திட்டா். அரமணயில வந்து, ராசாவப் பாத்து, ராசாவே! ஐயரு ஒங்களுக்கு மேல ஒசத்தியா வாழ்ந்தாராம். நீங்க ராசாவாப் பொறந்ததனாலதா், ஒங்கள மதிக்குறாராம். துர்நாத்தம்– கெட்டஎண்ணம் ஒங்ககிட்ட நெறயா இருக்காம். நாளக்கிருந்து, ஒங்க பக்கத்ல வந்து பேச மாட்டாராம். பத்தடி தள்ளி நிண்டுதா் பேசுவே், குடுத்தா வாங்குவே், குடுக்காட்டி வேற ஊருக்குப் போவேண்டு, ஐயரு சொன்னாருண்டு, அம்பட்டயன் ராசாகிட்டச் சொல்லிட்டா்.

திண்டு கொழுத்தா, நண்டு செலவுல இருக்காதுண்றது சரியாப் போச்சு. இந்த ஐயருக்கு எந்தந்தண்டித் திமிறு, வரட்டும் பேசிக்கிறேண்டு நெனச்சுக்கிட்டு ராசா இருக்காரு.

மறுநா, காலைல, ஐயரு, அரமணக்கிப் போனாரு. போயி –, ராசாவப் பாக்கயில, துண்ட எடுத்து மணிக்கட்ல போட்டாரு. பத்தடி தள்ளி நிண்டு,

நம்ம செஞ்சவன் நம்ம அடைவான்

திம்ம செஞ்சவன் திம்ம அடைவா–ண்டு

ஐயரு சொன்னாரு. சொல்லவும், ராசா ரெம்பக் கோபப்பட்டு, அம்பட்டயன் சொன்னது சரியாப் போச்சுண்ட்டு, 'ஐயர சிரச்சேதஞ் செய்யணும்ண்டு நெனச்சாரு. நெனச்சு, அண்ணைக்கெழுதுற சீட்ல, 'இந்த சீட்டக் கொண்டு வர்றவன கொல்லணும்ண்டு, எழுதி ஐயருகிட்ட குடுத்திட்டாரு. வழக்கமா, அந்தச் சீட்டக் கூடப் படிக்காமக் கடயில கொண்டு போயி குடுக்கறவரு, அண்ணக்கி வாங்கிக்கிட்டு கடைக்குப் போனாரு.

சீட்ட வாங்கிக்கிட்டு ஐயரு வெளிய வரவும், சீட்டப் புடுங்கணும்ண்டு அம்பட்டயன் வெளிய காத்துக்கிட்டிருக்கர். வெளிய வரவும், அம்பட்டயன் புடுங்கிக்கிட்டர். புடுங்கிக்கிட்டு, 'இண்ணக்கி சும்மா படு ஐயரே, நர் வாங்கிச் சாப்டுறேண்டு சொல்லிக்கிட்டு கடைக்கு ஓடுறர். கடயில கொண்டு போயிக் குடுத்தா, சீட்டப் பாத்த கணக்குப்பிள்ள, அம்பட்டயனப்புடுச்சு காவலாளிககிட்ட ஒப்படச்சுட்டர். காவலாளிக கொண்டுகிட்டு போயி, கொலக்களத்ல வச்சு வெட்டிப்பிட்டாங்க.

மறுநா விடிஞ்சுச்சு, விடியவும், எந்திருச்சு குளிச்சுட்டுக் கிளிச்சுட்டு, ஐயரு அரமணக்கிப் போறாரு. போயி ராசாவப் பாத்து,

நம்ம செஞ்சவன் நம்ம அடைவான்

திம்ம செஞ்சவன் திம்ம அடைவா–ண்டு

சொன்னாரு. ஐயரப் பாத்ததும், ராசாவுக்கு ஒரே அதிர்ச்சியாப் போச்சு. என்னடா! இவனக் கொல்லச் சொல்லி ஓல குடுத்தோம். விடிஞ்சு விடியுங்குள்ள வந்து நிக்கிறானேண்டு மனசுல நெனச்சுக்கிட்டு, காவலரிளிகளக் கூப்பிட்டாரு. ஐயர சிரச்சேதம் செய்யச் சொல்லி, அவங்கிட்டயே ஓல குடுத்தனே, நீங்க கொல்லலியாண்டு கேட்டாரு.

அதுக்கு காவலாளிங்க, அரசே! சீட்ட அம்பட்டயன் கொண்டு வந்தர். அவனக் கொண்டுபிட்டோம்ண்டு காவக்காரங்க சொன்னாங்க.

அதுக்குப் பெறகு ஐயரே! ஒனக்கும் அம்பட்டயனுக்கும் தகராறாண்டு ராசா கேட்டாரு. அதுக்கு ஐயரு, இந்த அம்பட்டயன் ஏ... வீட்டுக்கு வந்தர். வந்து, நிய்யி ராசா கிட்டத்ல நிண்டு பேசுற, கிட்டத்ல நிண்டு பேசக்கூடாது, பத்தடி தள்ளி நிண்டு பேசணும்ண்டு சொன்னர். சரிண்டு, நானும் – அப்படியே, ஒங்க பக்ககத்ல நிண்டு பேசாம, பத்தடி தள்ளி நிண்டு பேசுனேண்டு ஐயரு சொன்னாரு.

சொல்லிட்டு: அண்ணக்கி நீங்க குடுத்த சீட்ட, ஐயரே! இண்ணக்கி சும்மா கெட, நா வாங்கிட்டுப் போறேண்டு சொல்லி, எங்கிட்டயிருந்து புடுங்கிட்டுப் போயிட்டர், ராசாவேண்டு சொன்னாரு.

சீட்ட அண்ணக்கி, அம்பட்டயன் புடுங்கிட்டுப் போயிறவும், நாங்க பட்னியாக்க கெடந்தோம்ண்டும் சொல்லிட்டாரு. சொல்லவும்,

'நம்ம செஞ்சவன் – நம்ம அடைவான்

திம்ம செஞ்சவன் – திம்ம அடைவா – ண்டு

ராசா மனசுக்குள்ள சொல்லிக்கிட்டாராம்.

2. மன ஊனம்

ஒரு ஊர்ல – ஒரு ராசா இருந்நதாரு. அவரு, நல்லாவே ஊரப் பரிபாலனஞ் செஞ்சு வந்தாரு. இப்டி நடந்து வரயில, ராசா பொஞ்சாதி, அரமணயில வேல செய்ற, பண்ணக்கார மேல ஆச வச்சிட்டா. ராசா பொஞ்சாதிகிட்டக் கள்ள ஒறவு வச்சுக்கிறதப் பண்ணக்காரர் விரும்பல. பண்ணக்காரனுக்கு அரமணயில மாடு மேக்கிற வேல. ராணி, அவனோட நீண்ட நாளா ஒறவு வச்சுக்கிட்டிருந்தா. இது ராசாவுக்குத் தெரியாது.

ஒருநா, ராணி, பண்ணக்காரங் கூட ஓடிப் போயிட்டா. ஆனா, பண்ணக்காரர் பயந்துகிட்டே இருந்தர். ராணியோட தைரியத்லதா இவ் போயிக்கிட்டிருக்கா. பண்ணக்காரர் மனசில, ஒரு எண்ணம் வந்திச்சு. எப்டிண்டா, ராணியோட, நாம வாழ முடியாது. ராசா பாத்தா, கொண்டு போடுவாரு. எண்ணக்கிருந்தாலும், இது ஆபத்தான வாழ்க்கதாண்டு நெனச்சவ், ராணிகிட்ட இருக்ற பொருள்கள பறிச்சுக்கிட்டு ஓடிறணும்ண்டு நெனச்சுக்கிட்டு, ராணி கூட நடந்து போயிக்கிட்டிருக்கா.

இப்டிப் போகயில, குறுக்க ஒரு ஆறு வருது. ஆத்து நெறையா தண்ணி, ஆத்து வெள்ளத்த, ரெண்டு பேரும் கடக்க முடியல. சில - நகைக, பணம் எல்லாத்தையும் பொட்டணமாக் கட்டி எங்கிட்ட குடு. மொதல்ல போயி, அக்கரயில வச்சிட்டு வந்து, ஒன்னயக் கூட்டிட்டுப் போறேண்டு சொல்லவும், ராணியும் சம்மதிச்சு எல்லாத்தையும் கழத்திக் குடுத்திட்டு, ஒரு துண்டுத் துணியமட்டுங் கட்டிக்கிட்டு, இக்கரயில நிண்டுகிட்டிருந்தா. ஆத்து வெள்ளத்தக் கடந்து போன பண்ணக்காரர், பொருள் களக் கொண்டுகிட்டுத் திரும்பிப் பாக்காம ஓடிப் போயிட்டர்.

பொருளும் போச்சு, உடுத்தியிருந்த சீலயும் போச்சு. மாட்டுக் காரன நம்பிப் புகழும் போச்சுண்டு நெனச்சுக்கிட்டு, இக்கரயில – ராணி, முண்டுத்துணியக்கட்டி நிண்டுக்கிட்டிருந்தா. அரமணக்கி திரும்பிப் போக மனசு வரல.

அப்ப' அந்தப் பக்கமா, ஆத்துக்கர வழியா ஒரு நரி, ஒரு கவிச்சுத் துண்டக் கவ்விக்கிட்டு வருது. அப்ப, ஆத்துக்குள்ள இருந்து ஒரு மீனு, கரயில – தவ்வி விழுந்துச்சு. மீனப் பாத்த நரி, கவிச்சுத் துண்ட கக்கி வச்சுட்டு, மீனப் புடிக்கப் போச்சு. அதுக்குள்ள மீனு தவ்வி ஆத்துக்குள்ள போயிருச்சு. மீனு போயிருச்சுண்டட்டு, திரும்பிக் கரித்துண்ட நரி பாத்துச்சு. அதுக்குள்ள கவிச்சுத்துண்ட ஒரு பெறாந்து (பருந்து) தூக்கிக்கிட்டுப் போயிருச்சு.

ரெண்டயும் எழந்திட்டு நிண்டுகிட்டிருந்த நரிய, ராணி பாத்தா, ஏ.. நரியே! ஒனக்கு எதுக்கு இந்த ஆச. பேசாமக் கரித்துணட திங்க வேண்டியதானே. மீனுமேல ஆசப்பட்டியே! இப்ப, கரித்துண்டும் போச்சு, மீனும் போச்சு. இப்ப, என்ன செய்யப் போறேண்டு ராணி கேக்குறா.

ராசாவ விட்டுட்டு, மாட்டுக்காரங்கூட வந்து, உடுத்திக்கச் சீல கூட இல்லாம, முண்டுத் துணியக் கட்டிக்கிட்டு நிக்கிறியே நீயா எனக்குப் புத்தி சொல்ற! இந்தக் கரித்துண்டு போனா, வேறொரு கரித்துண்ட எடுத்துக்கிருவே. இந்த மீனு போனா, வெறொரு மீனப் புடுச்சுக்கிருவே! ஆனா, நிய்யி – மாட்டுக்காரன நம்பி, புத்திக்கெட்டுப் போயி நிக்கிறியே! ஒன்னயக் காட்டிலுமா, நா ஆசப்பட்டுப் போயிட்டேண்டு நரி சொல்லுது.

ஒடனே! ராணிக்குப் புத்தி வந்து, நரியண்ணே! நா அரமணக்கிப் போக ஒரு வழி சொல்லுண்டு நரிகிட்டக் கேட்டா.

அதுக்கு நரி, இப்ப, நிய்யிக் கிருக்கச்சி போல நடக்கணும். கிருக்கச்சி மாதிரி நடிச்சாத்தா. நிய்யி, அரமணக்கிப் போக முடியும்ண்டு நரி சொல்லுச்சு.

அப்ப: அந்த வழியாப் போறவங்க, ராசாகிட்டப் போயிச் சொல்லுவாங்க. அப்ப, ராசா வந்து, ஓ... மேல எரக்கப்பட்டு, ராணிக்கு ஏதோ மூளக்கோளாறுண்டு நெனச்சு அரமணக்கிக் கூட்டிக்கிட்டுப் போவாரு. கொஞ்ச நாள்ல கிறுக்கு விட்டதுபோல நடிச்சு, மீண்டும், நிய்யி ராணியாக வாழலாம்ண்டு சொல்லிட்டு நரி போயிருச்சு.

பழய சீலய வாங்கிக் கட்டிக்கிட்டு, சுடுகாட்டுச் சாம்பல அள்ளிப் பூசிக்கிட்டு, சுடுகாட்ல கெடந்த ராணியப் பாத்த ஊராளுங்க, ராசாகிட்டப் போயிச் சொன்னாங்க. ராசா பரிவாரத்தோட வந்து, ராணி அரமணக்கிக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. கொஞ்ச நாள்ல கிறுக்கு மாறிப் போச்சுண்டு சொல்லி, ராணி நல்லா வாந்தாளாம். மனசார நரிய நெனச்சு சந்தோசப்பட்டாளாம், படமாட்டாளா? நல்லதுக்கு வழி சொல்லிக் குடுத்தா படமாட்டாளா!

3. மூத்தோர் வார்த்தை

ஒரு ஊர்ல – ஒரு வயசானவரு இருந்தாரு. அவருக்கு ஒரே மக். பெரியவரு, சாகப் போற சமயம் வந்திருச்சு. சாகுறபோது, மகனுக்கு புத்திமதி சொல்றாரு. இந்த ஒலகத்ல பலமாதிரியான ஆளுக இருப்பாங்க. அவங்க கூட பழகுறது, எப்படி இருக்கணும்ண்டு பெருசு சொல்றாரு. எப்டிண்டா,

அரமண கிட்டச் சேராத,
புதுவகுசி வந்தவிங்கிட்ட கடன்வாங்காத,
பழய வகுசி வந்தவங்கிட்ட கடன் வாங்கு,
காட்டு மடத்ல படுக்காத,
பொஞ்சாதி கிட்ட உத்த வாத்த சொல்லாத
பருத்திக்குள்ள இருக்கு பணம் – ண்டு

புத்திமதிகளச் சொல்லிட்டு, செத்துப் போறாரு. செத்துப் போகவும், புத்திமதிகள மக சிந்திச்சுப் பாத்தா். அப்ப: செத்தபெறகு, ஒவ்வொண்ணா பரிச்ச பாக்கணும்ணடு நெனக்கிறா்.

நெனச்சுக்கிட்டு, அரமணகிட்டச் சேராதங்கற புத்திமதிய பரிசோதன பண்றா். எப்டிண்டா, போயி – அரமண ஆளுங்ககிட்டப் பழகுறா். புதுசா அரமணக்கி வந்ததுனால எல்லாருகிட்டயும் நல்ல மரியாத. எல்லாரும் இவ் மேல அம்பா (அன்பா) இருக்கவும், பழய வேலக்காரங்க பொறாமப் பட்டாங்க. இவனப் பத்தி அரசங்கிட்டப் போயி, கோளுச் சொன்னாங்க. நெறயப் பேரு கோளு சொல்லவும், இவன, அரமணய விட்டு வெலக்க நெனச்சாரு.

இப்டி இருக்கயில, ஒருநா, அரமண, மயிலப் (மயில்) புடுச்சிட்டு வந்து, மேவீ ட்ல அடச்சு வச்சிட்டா். அண்ணக்கி, ஒரு கோழி வாங்கி அடிச்சு, கறியப் பொண்டாட்டிக்கிட்டக் குடுத்து சமைக்கச் சொன்னா். ஏது? கறிண்டு பொண்டாட்டி கேட்டா. அவகிட்ட, அரமண மயிலப் புடுச்சு அடிச்சேண்டு சொன்னா்.

இருக்கயில, அரமணயில, மயிலக் காணம்ண்டு தேடுறாங்க. மயிலப் புடுச்சு, மேவீட்ல அடச்சு வச்சப்ப இருந்து, இவ் அரமணக்கிப் போகல. போகாம இருக்கவும், இவ் மேல சந்தேகப்பட்டாங்க. உம்மயக் கண்டு புடிக்கிறதுக்கு அரமண ஆளுகள நியமிச்சாங்க.

அண்ணக்கி ராத்ரி, புருசனுக்கும், பொண்டாட்டிக்கும் சண்ட வந்திருச்சு. சண்ட வரவும், அடி போட்டுட்டர். அடிபோடவும், அரமண மயிலப் புடுச்சு திண்டுபிட்டு, சொன்னதுக்கு, என்னயப் புடுச்சு அடிக்கிறர்ண்டு சத்தம் போட்டுட்டா. சத்தம் போடவும், அந்தப் பாதவழி போன அரமணக்காரங்க கேட்டுட்டுப் போயி, ராசாகிட்டச் சொல்லிப் பிட்டாங்க. போயி –, அவன இழுத்துக்கிட்டு வாங்கடாண்டு ராசா சொல்லிப்பிட்டாரு. வந்ததும், கையக் காலக் கெட்டி இழுத்திட்டுப் போயிட்டாங்க. பொண்டாட்டிகிட்ட உத்த வாத்த சொல்லக் கூடாதுண்டு, அப்ப சொன்னது சரியாப் போச்சு. இதுக்குள்ள, புதுவகுசி வந்தவங்கிட்டயும், பழயவகுசி வந்தவங்கிட்டயும் கடன் வாங்கி உரில போட்டு வச்சிருந்தர்.

இவன, அரமணக்கி இழுத்திட்டுப் போகயில, கடங்குடுத்தவங்க ரெண்டுவேரும் எதுக்க வந்தாங்க. வந்து, எங்கடன குடுடாண்டு புதுவகுசி வந்தவ் கேட்டர். பழய வகுசி வந்தவ், பேசாம இருக்கர். பழய வகுசிக்காரர், புது வகுசிக்காரங்கிட்ட, அந்த ரூவாய நாந்தரே். அவங்கிட்டக் கேக்காதடாண்டு சொன்னர்.

சொல்லவும், நம்ம அப்பன் சொன்னது உம்மயாப் போச்சுண்ட்டு, என்னயவிடுங்கடா அரமண மயிலப் புடுச்சுத் தாரேண்ட்டு, வீட்டுக்கு வந்து, அரமண மயிலப் புடுச்சுக் குடுத்திட்டர். உரில இருந்த ரூவாய எடுத்து புதுவகுசி வந்தவனுக்குக் குடுத்திட்டர்.

கடசில, காட்டு மடத்ல படுக்காதண்டு சொன்னாரே, அதப் பாப்போம்ண்ட்டு, ஒரு காட்டு மடத்ல போயி படுத்தா். இவ் படுத்திருந்த அண்ணக்கிப் பாத்து, களவாணி வந்து, இவ் வச்சிருந்த சாமாங்களப் பறிச்சிட்டுப் போயிட்டாங்க. போயிறவும், – காட்டு மடத்ல படுக்காதண்டு அப்ப சொன்னாரு, சரியாப் போச்சு. உசுரு தப்பிச்சதே போதும்ண்டு வீட்டுக்கு வந்தா்.

வந்தவ், பருத்திக்குள்ள இருக்குதடா பணம்ண்டு, அப்பா, சொன்னத நெனச்சுக்கிட்டே வாரா். வந்ததே சரிண்டு, நெலத்த உழுது பருத்தி வெதச்சா். பருத்தி, நல்லா வளந்து, நெறயா காய்க்காம, அங்னொண்ணும் – இங்னொண்ணுமா காச்சிருந்திச்சு. காயிக, பெருசு பெருசா இருந்திச்சு. இருக்கயில, வெவசாயப் பொருளு, வீட்ல வளக்குற கோழி, ஆடு, மாடுகளுக்கு பரிசு தரதா அரமணயில சாட்டுனாங்க. சாட்டவும், எல்லா ஊர்ல இருந்தும், ஆடு மாடுகளப் புடுச்சிட்டுப் போறாங்க. இவனும் என்னா செஞ்சா், பருத்திக் காயப் புடுங்கிட்டுப் போறா்.

கொண்டு போயி, வருசயா வச்சு இருக்காங்க. வச்சிருக்கயில, ராசா பாத்துக்கிட்டே வாராரு. வரயில, பருத்திக் காயி இருக்க எடத்துக்கு வாராரு. வந்து; பருத்திக் காயப் பாத்திட்டு, ராசா ஆச்சரியப்பட்டு, இந்தப் பருத்திக் காயிக்குப் பரிசு தரச் சொன்னாரு.

சொல்லிட்டு, அதுல ஒரு காய எடுத்து ஓடச்சுப் பாக்கயில, உள்ள ஒரு சோதி முத்து இருக்குது. இப்டி, எல்லாக் காயிலயும் இருக்கவும், பரிசுகள, இவனுக்கே குடுத்திட்டு ராசா போயிட்டாரு. பரிசுகள வாங்கிட்டு வீட்டுக்குப் போனவ், பருத்திக்குள்ள இருக்குடா பணம்ண்டு அப்ப சொன்னத நெனச்சுக்கிட்டே நல்லாப் பொளச்சானாம்.

4. செக்கு மரம்

ஒரு ஊர்ல – ஒரு குருதக்காரர் இருந்தா். குருதய வாங்குறது விக்கிறதுதா் அவனுக்கு வேல. ஒருநா, குதுரயப் புடுச்சுக்கிட்டு, அடுத்த ஊருக்குப் போயிருக்கா். அப்டிப் போகயில –, ஒரு ஊரு இருக்கு. அந்த ஊருக்குள்ள வந்தபோது இருட்டிப் போச்சு. இருட்ல போக முடியாது. குருதயும் சென. நடக்காதுண்ட்டு, குருதய செக்குமரத்ல கெட்டி வச்சிட்டு, சாவடில படுத்துக்கிட்டா்.

விடிஞ்சு பாக்கயில, குருத ஈண்டிருந்திச்சு. சந்தோசத்ல குட்டியயும் தூக்கிக்கிட்டு, குருதயயும் புடுச்சுக்கிட்டு பெறப்படப் போகயில, செக்குக்காரா் வந்தா். வந்து, எதுக்கு? குட்டிய புடிச்சுக்கிட்டுப் போற. குருதய மட்டுந்தான கொண்டுவந்த, எஞ்செக்கு போட்ட குட்டியயும் சேத்துப் புடிச்சுட்டு போறயே, குட்டிய விட்டுட்டுப் போண்டு தகராறு செய்றா்.

அப்ப: ஊர்ப்பஞ்சாயத்து கூடுனாங்க. அந்த ஊரு நாட்டாமக்காரு வந்து, ஒக்காந்து, என்னாப்பா! ஒங்க பஞ்சாயத்துண்டு கேட்டாரு.

சாமி! கெழக்க இருந்து இந்த குருதய புடுச்சுக்கிட்டு வந்தே். இந்த ஊருக்கிட்ட வர இருட்டிப் போச்சு. இந்தச் செக்கு மரத்ல கெட்டிப் போட்டுட்டு, இந்தச் சாவடில படுத்துக் கெடந்தே். விடிஞ்சு பாக்கயில எங்குருத ஈண்டிருந்திச்சு. புடுச்சுக்கிட்டு வெளியேறினே். இந்த ஆளு வந்து: ஏண்டா! எஞ்செக்கு போட்ட குட்டியப் புடிச்சுட்டு போறண்டு விடமாட்ராரு. இத நீங்கதா் கேட்டுக் குடுக்கணும்ண்ட்டு, ஒக்காந்துகிட்டா்.

ரெண்டயுங் கேட்ட நாட்டாமக்காரு, அந்தப் பஞ்சாயத்ல செக்குதான் குட்டிப் போட்டிருக்கு, குருதக்காரா், பொய் சொல்றா்ண்டு தீர்ப்புச் சொல்லிட்டாங்க.

குருதக்காரர், குருதய மட்டும் புடுச்சுக்கிட்டு, ரெம்ப வருத்தமா போறா். போற வழில, ஒரு நரி ஒக்காந்துகிட்டு, அண்ணே! குருதக்காரண்ணே! என்னா? வருத்தமா போற? என்னா வி சயம்ண்டு கேட்டுச்சு.

கேக்கவும் –, கெழக்க இருந்து நா் குருதயப் புடுச்சுக்கிட்டு வந்தே். இந்த ஊருக்கிட்ட வரயில, இருட்டிப் போச்சு. வி டிஞ்சதும், போவோம்ண்டு, செக்கு மரத்ல, குருதயக் கெட்டி வச்சிட்டு, அங்ஙனதான படுத்துக்கிட்டே். அப்ப, எங்குருத ஈண்டுகிருச்சு.

செக்குகாரா் வந்து, எஞ்செக்குதா் குட்டி போட்டுச்சுண்டு புடுங்கிக்கிட்டாா். பஞ்சாயத்து வச்சோம். பஞ்சாயத்துலயும், செக்குதா் குட்டி போட்டுச்சுண்டு சொல்லிட்டாங்க. அதனால குருதய மட்டும் புடுச்சுக்கிட்டு போறேண்டு சொன்னாா்.

அப்ப: நரி, நா் பஞ்சாயத்துக்கு வரே். மொதல்ல நிய்யி, போயி, அந்த ஊர்ல இருக்ற நாயிகளப்புடுச்சு, கெட்டிப் போடச் சொல்லுண்டு, சொல்லிருச்சு.

நரி சொல்லவும், சரிதாண்டுப் போறா். நாட்டாமக்காரு கிட்டப் போயி, நரியண்ணன், பஞ்சாயத்துக்கு வர்ராரு. நாயிகளக் கெட்டிப் போட்டுட்டுப் பஞ்சாயத்து கூடுங்கண்டு சொன்னாா். சொல்லவும், நரி பஞ்சாயத்துப் பேசுறதப் பாக்கணும்ண்டு ஊரே கூடிக்கிடக்குது. இந்த நரி, ரொம்ப நேரங்கழிச்சு வந்ததுமில்லாம, கூட்டத்ல ஒக்காந்த நரி, அப்டியே ஒரங்கிருச்சு.

நரி பஞ்சாயத்துப் பண்றதப் பாக்கணும்ண்டு, நம்ம ஒக்காந்துகிட்டிருக்கோம். நரிக்கு, ஒரக்கத்தப் பார்ராண்டு கூட்டத்ல பேசுறாங்க. அப்ப: இந்த நரி, நல்லா முளுச்சுப் பாத்துட்டு, "போங்கப்பா, கடல்ல தீய்யிப் புடுச்சு, வரகம் வைக்கலப் போட்டு அமத்திட்டு வந்திருக்கே. அதாம்ப்பா, ஒரக்கம்ண்டு" நரி சொல்லுச்சு.

என்னடா! கடல்ல தீய்யி புடிச்சிச்சாம்! வரக வைக்கலப் போட்டு, நரி அமத்துச்சாம்ல! வேடிக்கையா இருக்குண்டு, ஒருத்தனுக்கொருத்த மொனங்குனாங்க. அப்ப, நரி! என்னாப்பா செக்குமரங் குட்டி போடும் போது, கடல்ல தீய்யிப் புடிக்காதாண்டு கேட்டுச்சு.

கேக்கவும், அவங்களுக்குப் புத்தி வந்து, அதெப்டிடா செக்குமரம் குருதக்குட்டி போடும். குருததாங் குட்டி போட்டிருக்கும். அது குருத போட்ட குட்டிதாண்டா. செக்கு, குட்டி போடல்ல. குட்டியத் தூக்கிக் குருதக்காரங்கிட்ட குடுங்கடாண்டு சொல்லி பஞ்சாயத்த முடிச்சாங்களாம். குருதக்காரர், குட்டியயும் தூக்கிக்கிட்டு, குருதயயும் புடுச்சுக்கிட்டு, போக வேண்டிய ஊருக்குப் போனானாம்.

5. கூடப் பிறந்தவன்

ஒரு ஊர்ல, அண்ணனும் – தம்பியும் இருந்தாங்க. ரெண்டு பேருமே கூலிக்கு ஆடு மேய்க்கிறவங்க. ரெண்டு பேருக்கும் அடிக்கடி சண்ட சச்சரவுக வரும். சண்ட போட்டுக்கிருவாங்க. பெறகு கூடிக்கிருவாங்க.

இப்டி இருக்கயில, ஒருநா, ஆடு மேய்க்கிற எடத்ல, ரெண்டு வேருக்கும் சண்ட வந்திருச்சு. அண்ணங்காரு, தம்பிய அடுச்சுக் கெணத்துக்குள்ள போட்டுட்டு, வீட்டுக்குப் போயிட்டாரு. இவ், கெணத்த விட்டு வெளியேற முடியாம, கெணத்துக்குள்ள அழுதுகிட்டுக் கெடக்காரு.

அந்த வழியா ஆடு மேச்சுக்கிட்டுப் போன எடையன், அவனக் காப்பாத்தி, பத்து ஆடுகளக் குடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லிட்டு, மீதி ஆட்டப் பத்திக்கிட்டுப் போயிட்டாரு.

ஆடுகளப் பத்திக்கிட்டு, தம்பி, வீட்டுக்கு வர்றாரு. ஆடுகளப் பாத்திட்டு, அண்ணனுக்கு, ஒரே பொறாம, பொறுக்க முடியல. தம்பியப் பாத்து, ஆடுக ஏதுண்டு கேக்குறாரு.

இது, நம்ம பாட்டன் சொத்து. கெணத்துக்குள்ள இருக்ற நம்ம பாட்டன், குடுத்திட்டு, போயி அண்ணன வரச்சொல்லுண்டு சொன்னாருண்டு, அண்ணங்கிட்டச் சொல்லிட்டாரு.

தம்பி சொன்னதக் கேட்ட அண்ணன், பாட்டன், ஆடு குடுப்பாருண்டு நெனச்சு, நேரா கெணத்துக்குப் போயி, உள்ள விழுந்தாரு, விழுந்தவ், ஊட்டி ஒடுஞ்சு செத்துப் போயிட்டாரு.

தம்பிய அடுச்சுக் கொடுமயப் படுத்தினவ், பின்ன சாகாம, என்னா செய்வானாம். கூடப் பெறந்தவனக் கொடுமப் படுத்தலாமா? ஆயிரம் இருந்தாலும், அவ், கூடப் பெறந்தவன்ல்ல.

6. பிச்சைக்காரன்

ஒரு ஊர்ல—ஒரு பிச்சக்காரர் இருந்தர். அவ், இந்த ஊரு ராசா வீட்லதர் பிச்சை எடுத்துச் சாப்பிடுவர். இது, ராணிக்கு ரெம்பத் தொந்தரவா இருந்திச்சு.

இந்தப் பிச்சக்காரன, எப்டிண்டாச்சுங் கொல்லனும்ண்டு நெனச்சு, ராசாவும், மந்திரியும் வேட்டைக்குப் போயிருக்கிற சமயத்ல, பச்ச நாவிய, சோத்ல வச்சுக் குடுத்திட்டா.

அந்துப் பிச்சக்காரர், அந்தச் சோத்தத் திங்காம, கண்டதக் கூடியதத் திண்டுகிட்டு, இந்த சோத்தயும் செமந்துகிட்டு, காட்டுவழியாப் போறர்.

போகயில, அங்கிட்டிருந்து ராசாவும் — மந்திரியும் வேட்டயாடிட்டு, ஒண்ணுமே கெடைக்காம, கெரங்கிப் போயி வராங்க.

வரயில, ராசா! பிச்சக்காரர் சோறு வச்சிருக்றதப் பாத்து, மந்திரிகிட்ட, மந்திரி! பிச்சக்காரங்கிட்ட இருக்ற சோற வாங்குண்டு சொல்றாரு. மந்திரி, பிச்சக்காரனக் கூப்பிட்டு, அவ் வச்சிருக்கிற சோத்தப் பாத்துட்டு, அந்தக் சோத்தக் குடுண்டு கேக்குறாரு.

கேக்கவும், பிச்சக்காரர், அந்தச் சோத்த ராசா முன்னால வச்சு, சாப்பிடுங்க ராசாவே, இது ராணியம்மா போட்ட சோறுதாண்டு சொல்றர். சொல்லவும், அந்தச் சோற, ராசா சாப்பிட்டாரு.

சாப்பிட்டுட்டுப் படுத்தவரு, எந்திரிக்கல. மந்திரியும் பிச்சக்காரனும் உசுப்பி – உசுப்பி பாத்தாங்க எந்திரிக்கல.

ராசா செத்துப் போயிட்டாருண்டு நெனச்சு, ராசாவக் தூக்கிக்கிட்டு அரமணக்கிக் கொண்டு வராங்க. அரமணயில கொண்டு வந்து போடவும், ராணிண்டா ஓடி...ஓடி... முட்டி... முட்டி, மோதி... மோதி அழுகுறா. முட்டி அழுதாப்ல, ராசா வரப் போறாரா? செத்தவரு எப்டி வருவாரு.

அவரவர் மோசம் அவரவர்க்கு.

7. உண்மையா சம்பாரிச்ச சொத்து

ஒரு ஊர்ல - ஒரு ஆசாரி இருந்தர். ரொம்பக் கசுட்டப் பட்டு பணஞ் சம்பாரிச்சு, நெலம்பொலங்க வாங்கி, வேல செஞ்சுகிட்டு, ஆசாரித் தொழிலயும் விடாம, செஞ்சுகிட்டு வந்தர்.

வரயில, ஆசாரி வேலயும் வெவசாயமும் சேந்து, அதிகமான வருமானம் வருது. வச்சிருந்த பணத்துக்கெல்லாம் தங்கமா வாங்கினர். அப்படியே பொன்னா வச்சிருந்தா, கழவாணிக வந்து, கழவாண்டுகிட்டுப் போயிருவாங்கண்டு, வீட்ல இருந்த பனமரத்தத் தொளச்சு, அதுக்குள்ள தங்கத்த அடச்சு, வீட்டுக்கு வெளிய, மாடு கட்டுற கட்டுத் தொறயில, காடிப் பலக மாதிரி போட்டுட்டர்.

காடி மரம் போட்டுருக்காண்ட்டு, ஆருமே அது மேல சந்தேகப்படல. அவ்பாட்டுக்கு, வேலய விடாமச் செஞ்சுக்கிட்டு வாரர். தங்கம் - தங்கம் பாட்டுக்கு காடிக்குள்ளார கெடக்குது.

ஒருநா, - பலமா காத்தடிச்சு மழ பேயுது. மழயில, ஆசாரி வீடு வெள்ளத்தல மூங்கிப் போச்சு. தங்கத்த ஒழிச்சு வச்சிருந்த பன மரத்தயும் வெள்ளம் இழுத்துக்கிட்டுப் போயிருச்சு. ஆசாரிகிட்ட ஒண்ணுமே இல்ல. குடிக்கக் கஞ்சி கூட இல்ல. வேல செய்யுறதுக்கு எடமில்ல. சுருக்கமா சொன்னா, ஒண்டுறதுக்கு கோடியுமில்ல. எல்லாம் வெள்ளத்துல போயிருச்சு. ஆசாரி மட்டும், பொண்டாட்டி புள்ளைகளோட இருக்கர்.

பொழைக்க வழியில்ல. புள்ள குட்டிங்களக் கூட்டிக்கிட்டு, வேற ஊருக்கு, ஆசாரி பொழைக்கப் போறர். அந்த ஊர்ல போயி, வேல செஞ்சு பொழச்சுக்கிட்டு இருக்கர்.

பொளச்சுக்கிட்டு இருக்கயில –, வச்சிருந்த தங்கத்தப் பத்தி நெனக்காம இருக்க முடியல. நெனக்ய – நெனக்ய, நெஞ்சு வேகுது. ஒழச்சு சம்பாரிச்ச சொத்தில்ல, வேகாது பின்ன!

வெள்ளத்ல போன பனமரம், பக்கத்து ஊர்ல, (இப்ப நம்ம ஆத்துல வெள்ளம் போனா, தேனியப் போல) ஒதுங்கிருக்கு.

காலைல – வயக்காட்டுப் பக்கம் போன ஒரு வெவசாயி, அந்தப் பனமரத்த எடுத்திட்டு வந்து, இந்தப் பனமரத்ல பரம்பு செய்யலாம்ண்டு ஆசாரிகிட்டக் கொண்டுகிட்டு வாரா. கொண்டுகிட்டு வந்து, குடுத்திட்டுப் போயிட்டா.

பரம்பு செய்ய, ஆசாரி, பனமரத்த வெட்டுறா. வெட்டவும் அதுக்குள்ள இருந்த தங்கம் வெளிய தவ்விருச்சு. அப்பத்தா – இது நம்ம மரம்ண்டு ஆசாரிக்குத் தெரியுது. பெறகு, ஆசாரி, இந்த மரத்த வச்சுகிட்டு, வேற பனமரத்ல அவனுக்குப் பரம்பு செஞ்சு குடுத்திட்டான். கசுட்டப்பட்டு சம்பாரிச்ச சொத்து, வீணாப் போகுமா தம்பி? போகாது. ஏண்டா, அதுல நம்ம ரத்தம் ஓடுது. பெறகு, தங்கத்த எடுத்துக்கிட்டு, சொந்த ஊருக்குப் போயி, நல்லா பொளச்சானாம்.

8. காளை மாடு கன்று போட்டது

ஒரு ஊர்ல, ரெண்டு வேரு இருந்திருக்காங்க. ரெண்டு வேரு வீடும் எதுக்க – எதுக்க இருக்கு. ரெண்டு வேரும் சினேகிதமா இருக்கயில, ஒருத்தி வீட்ல இருக்ற பண்டத்த, ஒருத்தி எடுத்துப் புழங்கிக்கிருவாங்க.

ஒருநா, ரெண்டு வேருக்கும் சண்ட வந்திருச்சு. அவ் வீட்டுக்கு, இவ் போறதில்ல. இவ் வீட்டுக்கு, அவ் போறதில்ல.

ஒருத்தி வீட்ல மாடு இருக்கு. இன்னொருத்தி வீட்டுல மாடு இல்ல. அப்ப: சாணி கூட எடுத்து, வீடு மொழுக முடியல. மாடு இல்லாதவ், எப்படியாவது ஒரு மாடு புடிக்கணும்ண்டு நெனக்கிறா்.

அண்ணக்கி விடியங்காட்டில எந்திருச்சு, ஒரே நோக்கமா, மாடு புடிக்க, வடக்குத் தெசய நோக்கிப் போறா்.

போயி –, ஒரு மாடு புடிச்சுக்கிட்டு நடந்தே ... வர்ரா். வரயில, பட்டாணிக் கள்ளய (கடலை) வாங்கி மடியில கட்டிக்கிட்டு, திண்டுக்கிட்டே வரா். வரபாதையில, ஒரு கொளம் இருக்குது. அந்தக் கொளத்துக் கரமேல ஒரு நரி நிண்டுகிட்டு, அண்ணே! கொஞ்சம் பட்டாணிக் கள்ள குடுண்டு நரி கேக்குது.

கேக்கவும், வக்காலோளி நரிக்கு, மப்பப் (திமிர்) பார்ராண்டு, கல்ல எடுத்து எறிஞ்சா். எறியவும், இப்ப எறியிரயா? எறி. ஒரு நாளக்கி, எங்கிட்ட வருவண்ட்டு, நரி ஓடிப் போச்சு.

நேரா வீட்டுக்கு வர்ரா். வீதில, காடி போட்டுப் பசு – மாட்டக் கட்டி வச்சா். அப்ப: எதுத்த வீட்டுக்காரனும், தன்னோட காளமாட்ட, வீதியில காடி போட்டுக் கட்டி வச்சிருக்கா்.

ஒருநா ராத்ரில, இவ் பசுமாடு ஈண்டுகிருச்சு. எதுத்த வீட்டுக்கார் என்னா செஞ்சாண்டா, கண்டு குட்டியப் புடிச்சுட்டுப் போயிக் காளமாட்டுக்கிட்ட விட்டுட்டா். விடிஞ்சு வந்து பாக்கயில,

காள மாட்டுக்கிட்ட கண்டுகுட்டி இருக்கு. இருக்கவும், எங் காளமாடுதா் குட்டி போட்டுச்சு. காளமாடுதா் குட்டி போட்டுச்சுண்டு காளமாட்டுக்கார சொல்றா். இல்ல! எம் பசுமாடுதா் குட்டி போட்டுச்சுண்டு, பசு மாட்டுக்காரா் சொல்றா.

ரெண்டு பேருக்குள்ள தகராறு ஆகி, சண்டைகளாகி, விவகாரம், ஊர்ப் பஞ்சாயத்துக்கு வந்துருச்சு. பஞ்சாயத்துல, எல்லாரும், காள மாட்டுக்காரனுக்கு சார்பாப் பேசுறாங்க. பசு மாட்டுக்காரனுக்கு ஆளில்ல. காள மாடுதா் குட்டி போட்டிருக்குகண்டு சொல்றாங்க. ஆனா – பசு மாடுதா் குட்டி போட்டது. எல்லாம் அவனுக்கு சார்பா பேசவும், பேசுறதுக்கு, இவனுக்கு ஆள் இல்லாமப் போச்சு.

சாட்சிக்கு ஆளுக தேடி அடுத்த ஊருக்குப் போறா். போற வழில, அந்த நரி ஒக்காந்திருக்குது. ஒக்காந்துகிட்டு, அண்ணே!! எங்க போறண்டு கேட்டுச்சு.

எம் பசுமாடு கண்டு போட்டுச்சு. அந்தக் கண்டு போயி, காளமாடுகிட்ட நிண்டிருந்திச்சு. நிக்கவும், எல்லாரும் காளமாடுதா குட்டி போட்டுருக்குண்டு சொல்றாங்க. பசுமாடு குட்டி போட்டுருக்கும்ண்டு, ஒருத்தங் கூடப் பேச மாட்டேங்குறாங்கண்டு, நரிகிட்டச் சொல்றா்.

அப்ப: நரி சொல்லுது, அது யாருடா? காளமாடு கண்டு போட்டதுண்டு சொல்றது. சரி: அண்ணே!! நீ போ, நாளாக்கிப் பஞ்சாயத்துக்கு நா் வரே். நிய்யி போயி, அந்த ஊர்ல இருக்கிற நாய்களப் புடுச்சுக் கட்டிப் போடச் சொல்லுண்டு சொல்லிட்டு, அவன ஊருக்குப் போகச் சொல்லிருச்சு.

திரும்பி வீட்டுக்கு வாரா். வந்து, ஊர்ல போயி, நரி பஞ்சாயத்துக்கு வருது. பஞ்சாயத்த கூட்டுங்கண்டு சொல்றா்.

இவ் பேச்சக் கேட்டு, நரி பஞ்சாயத்துப் பண்ண வருதாம்ண்டு ஊரே உற்சாகமாகக் கூடியிருக்கு. நரி, பஞ்சாயத்துப் பண்றதப் பாக்க, ஊரே கூடியிருக்கு. ஆணும் – பெண்ணுங் கெடக்குக.

அப்ப: நரியக் காணோம். வரல, ரெம்ப நேரமாச்சு. ரெம்ப நேரங்கழிச்சுப் பையா நரி வருது. வந்து, பஞ்சாயத்து நடுவுல வந்து ஒக்காந்துச்சு. எல்லாம் பேசிக்கிட்டிருக்கயில, நரி ஒக்காந்த வாக்குல ஒரங்கிருச்சு.

வக்காலோளி நரி! பஞ்சாயத்துக்கு வந்திட்டு, ஒறங்குறதப் பாருடாண்டு, கூட்டத்தல ஒருத்த் சொல்றா. சொல்லவும், நரி படக்குண்டு முழிச்சுக்கிருச்சு.

முழிச்சதும், யாருடா இவங்க சின்னப் பயக. "கடல்ல திய்யி புடுச்சு, நா, வரகம் வைக்கலப் போட்டு அணச்சுட்டு வந்திருக்கேண்டு, அசால்ட்டாச் சொல்லுது. சொல்லவும் என்னாடா! கடல்ல திய்யிப் புடிக்க, வரகம் வைக்கலப் போட்டு அமத்துச்சாம்ல்ல, வக்காலோளி நரி பொய் சொல்றதப் பாருடாண்டு, கசமுசண்டு கூட்டத்தல பேசுறாங்க. பேசிக்கிட்டிருக்கயில, தலவரு கையாட்டுனாரு. கையாட்டவும், கூட்டம் கப்ண்டு பேசாம இருந்திச்சு. அப்ப: தலவரு கேட்டாரு ஏ.. நரியே! கடல்ல எப்டித் திய்யிப் பிடிக்கும்? தண்ணியில போயி, திய்யிப் பிடிக்குமாண்டு கேக்குறாரு.

அப்ப நரி: சொல்லுது, கடல்ல திய்யிப் பிடிக்காது. உம்மதா. கடல்ல திய்யிப் பிடிக்காதபோது, காளமாடு எப்டியா கண்டு போடும்ண்டு கேட்டுச்சு.

ஒருத்தரும் ஒண்ணும் பேசல. ஆமா! காளமாடு எப்டி கண்டு போடும்? பசு மாடுதான கண்டு போடும். ஆம்பள எப்டியா பிள்ள பெறுவாண்டு ஒருத்தனுக்கொருத்த் பேசுறாங்க.

பேசி முடிச்சிட்டு, காளமாடு குட்டி போட்டிருக்காது. பசு மாடுதா போட்டிருக்கும். அவ் பொய் சொல்றா. அவனப் புடிங்க – அடிங்கண்டு கூட்டம் எந்திருச்சுச்சு. கூட்டத்தோட கூட்டமா நரியும் எந்திரிச்சு, ஒடிப் போச்சு.

கண்டு குட்டிய புடிச்சு, பசுமாட்டுக்காரக்கிட்டக் குடுத்துட்டாங்க. திராத பஞ்சாயத்த தித்து வச்ச நரியண்ணன, எல்லாரும் பெருமையாப் பேசிகிட்டாங்களாம்.

9. நரி சொன்ன நீதி

ஒரு வேட் – ஒரு ஊர்ல இருந்தர். எடாறு வச்சு மானு, பண்ணிகளப் புடிக்கிறது வழக்கம். ஒருநாத் தேவையில, வேட், வச்ச எடார்ல புலி மாட்டிக்கிருச்சு. அந்த வழியா – ஒரு எடயன் ஆடு பத்திக்கிட்டுப் போனர். போகயில, புலியப் பாக்குறர். புலி எடாருல மாட்டிக் கெடக்குது.

அப்ப: புலி, எடயனப் பாத்து, அண்ணே! அண்ணே!! என்னயத் தொறந்து விட்டியின்னா, ஒ...ம்பிள்ள குட்டிகளெல்லாம் நல்லாருக்கும்ண்டு சொல்லிக் கெஞ்சுச்சு. எடயனும், ரொம்ப இரக்கப்பட்டு, எடார்லிருந்த புலிய எடுத்துவிட்டர். எடுத்துவிடவும் –, எனக்கு ரொம்பப் பசி, இப்ப நர் ஒன்னயத் திங்கணும்ண்டு சொல்லுச்சு. சொல்லவும், எடயனும் பயந்து போயி, ஒன்னயத் தொறந்து விட்டதுக்கா, என்னயத் திங்கணும்ண்டு சொல்ற, வாவா! நாலுபேருகிட்டப் போயிக் கேப்போம், அவங்க திங்கச் சொல்லிட்டாங்கண்டா, நிய்யி என்னயத் திங்கலாம்ண்டு எடய் சொல்றர்.

சரி – வாண்டட்டுப் போறாங்க. போகயில, ஒரு ஆலாமரம் இருக்கு, அந்த ஆலாமரத்துக்குக்கிட்ட போயி, ஆலாமரம்! ஆலாமரம்!! இந்த புலி, எடார்ல பட்டுக் கெடந்திச்சு, அந்த வழியா நர்... போனே. அப்ப, இந்தப் புலி இருந்துகிட்டு, காப்பாத்தி விடுண்டு சொல்லிச்சு. நானுங் காப்பாத்தி விட்டே. இப்ப, என்னயத் திங்கணும்ண்டு சொல்லுது. இது நாயமா? ஆலாமரமே! நீ சொல்லுண்டு கேக்குறர்.

கேக்கவும், அந்த ஆலாமரம், இந்த மனுசப் பயக இருக்காங்களே, என்னய அடிக்கடி வெட்டிக் கொடுமப் படுத்துராங்கே, இவங்களப் பாவம்ண்டு பாக்கக்கூடாது. சும்மா! புடுச்சுத் தின்னு புலியேண்டு சொல்லிருச்சு.

அப்ப: அங்கிட்டுப் போறாங்க. அங்கிட்டு ஒரு காராம் பசுவு இருக்குது. காராம்பசுவே! காராம்பசுவே!! இந்தப் புலி, ஒரு எடாறுல மாட்டிக் கெடந்திச்சு. அந்த வழியா நா்... போனே். போகயில, இந்தப் புலி என்னயப் பாத்து, காப்பாத்திவிடுண்டு கேட்டுச்சு. நானும், எடார்ல இருந்து எடுத்துவிட்டே. இப்ப என்னயத் திங்கணும்ண்டு சொல்லுது. இது நாயமா காராம்பசுவே! நீ சொல்லுண்டு கேட்டா்.

அப்ப: அந்தக் காராம்பசுவு, இந்த மனுசப் பயலுக நா்... பால் தா்ரவரைக்கும் என்னயக் காப்பாத்துராங்க. பால் இல்லாத காலத்ல, வெளிய வெரட்டி விட்டுறுராங்க. கொஞ்சஞ்கூட, எரக்கங் காட்டாம, புலியே! புடுச்சுத் திண்ணுண்டு சொல்லிருச்சு.

அப்ப: அங்கிட்டுத் தள்ளிப் போகயில, ஒரு மரத்தடில, ஒரு நரி ஒக்காந்துக்கிட்டிருந்திச்சு. நரிகிட்டப் போயி, நரியண்ணே! நரியண்ணே!! இந்த புலி எடாறுல மாட்டிக் கெடந்திச்சு. அந்த வழியா நா்... போனே். என்னயக் காப்பாத்தி விடுண்டு சொல்லுச்சு. நானும், எடார்ல இருந்து காப்பாத்திவிட்டே். இப்ப, என்னயத் திங்கணும்ண்டு சொல்லுது. இது நாயமா? நீ சொல்லு நரியண்ணேண்டு சொல்றா்.

அப்ப: நரி சொல்லுச்சு. அட எடப்பயலே! ஒனக்கு அறிவிருக்காடா? இங்க இருந்து, என்னால நாயஞ் சொல்ல முடியாது. எந்த எடத்ல? எந்த மாதிரி புலி எடார்ல பட்டுக் கெடந்திச்சு. நீ எப்டிப் போயி, எடார எடுத்து விட்ட, வாங்க! அங்க போயிப் பேசிக்கிறலாம்ண்டு, நரி கூப்பிட்டுக்கிட்டுப் போகுது.

மூணு பேரும், அந்த எடத்துக்குப் போறாங்க. போயி –, புலிய எடார்ல மாட்டி விட நெனச்சு, எடயப்பயலப் பாத்து, நீ புலிய, எதுக்குள்ள இருந்து தொறந்து விட்ட? இந்தக் கூட்டுக்குள்ள, இத்தம் பெரிய புலி, எப்டி உள்ள போச்சு? நிய்யி பயப்படாம, எப்டிக் கிட்டப் போயித் தொறந்துவிட்டேண்டு நரி கேக்கவும், எடயஞ் சொன்னர். சொல்றதெல்லாம் எனக்குப் புரியாது. அதுப்படி செஞ்சு காட்டுங்கண்டு, நரி சொல்லுது. புலிய அடச்சு வைக்கக்கணும்ல்ல. அதுனால இந்தத் தந்திரம் செய்யுது. புலி கூட்டுக்குள்ள போச்சு. போகவும் எடயன் லபக்ண்டு அடச்சு வச்சுட்டர். அடப்பாவி! ஆட்டப் பத்திக்கிட்டு, வீட்டுக்குப் போடாண்டு சொல்லிட்டு, நரி காட்டுக்குள்ள ஓடிப் போச்சாம்.

10. நிலாவே! நீ சாட்சி

ஒரு ஊர்ல – ரெண்டு பேரு நீராணிக்கனா இருந்தாங்க. கொளத்துப் பரவ, ரெண்டு பேரும், சரியா பகுந்துகிட்டு, தண்ணி பாச்சுர வேலயப் பாத்துக்கிட்டு வந்தாங்க.

பாத்து வரயில, ஒருநா! தண்ணி கெட்டுறதுல ரெண்டு பேருக்குஞ் சண்ட வந்திருச்சு. ரெண்டு பேருமே விக்கந் – தக்கமா இருந்து வந்தாங்க. ஒருத்தன – ஒருத்தன் கொல செய்யுற நோக்கத்துல, ரெண்டு பேரும் இருந்து வாராங்க.

ராத்திரிக்குத் தண்ணி கெட்ட வரும்போது, எப்டிண்டாலும், ஒருத்தன – ஒருத்தன் கொல்லணும்ண்டு நெனச்சுக்கிட்டாங்க. இவன, அவ், கொல செய்யணும்ண்டு நெனக்கிறா். அவன, இவ், கொல செய்யணும்ண்டு நெனக்கிறா். நெனச்சுக்கிட்டிருக்கயில, அண்ணக்கி ராத்திரி கோழி கூப்ட, ரெண்டு பேரும் மட தொறக்கப் போறாங்க. மடயத் தொறந்து விட்டுட்டு, ஒருத்தி் மடையடியில படுத்துக்கிட்டா். இன்னொருத்தி், தண்ணி பாச்ச, வயலப் பாக்கப் போயிட்டா்.

வயலச் சுத்திப் பாத்திட்டு வந்தவ், படுத்துக் கெடந்தவன, கையில வச்சிருந்த கம்பக் கொண்டு, ஒரே அடியா அடிச்சுப் போட்டுட்டா். அடி பலமா விழுகவும், அவனால எந்திரிக்க முடியல. சாகப் போற நேரத்ல, லேசா கண்ணத் தொறந்து பாத்தா். மேல வானத்ல நெலா தெரிஞ்சிச்சு. தெரியவும், நெலாவே, நீ சாட்சிண்டு, சொல்லிட்டு, செத்துப் போயிட்டா்.

வயக்காட்டு வரப்ப, அட்டத்துல தோண்டி, அவனத் தூக்கி, அதுக்குள்ள வச்சு, சேத்தப் போட்டுப் பூசிப்பிட்டா். பூசுனதக் காங்க முடியல. அப்டிப் பூசிப்பிட்டா்.

நல்லா விடிஞ்சு போச்சு. தண்ணி கட்டப் போன ஆம்பளைய, இன்னுங் காணம்ண்ட்டு, வாசப்படில நிண்டு, புருசன, பொண்டாட்டி எதுரு பாத்துக் காத்துக்கிட்டிருந்தா. ஆரு? செத்தவ் பொண்டாட்டி. ஒரு நா! ரெண்டு நா! மூணு நா ஆச்சு. புருச் வரல. வெளியெல்லாந் தேடிப் பாத்தா. கண்டுபிடிக்க முடியல. ரெம்ப வருத்தத்தோட அழுது பொலம்பிக்கிட்டிருக்கா. அவந்தா் செத்து, வயக்காட்டு, வரப்புக்குள்ள கெடக்குறானே. எப்டி வரப் போறா். வரல. துப்புங் கெடைக்கல்லே. பாத்தவங்கிட்டயெல்லாம் எம்புருசனப் பாத்திங்களா? எம்புருசனப் பாத்திங்களாண்டு கேட்டுக்கிட்டிருக்கா.

வெளியெல்லாந் தேடிப் பாத்திட்டு விட்டுட்டா. அப்டியே மறஞ்சு போச்சு. எடுத்தாட்ட ஆளிருந்தாத்தான, பொம்பள என்னா செய்வா. விட்டுட்டா.

அவன, அடுச்சுச் கொண்ட அண்ணக்கி, வீட்டுக்கு வந்து, பொண்டாட்டிகிட்ட மாத்திரம், நீராணிக்கன அடுச்சு, வரப்புக்கடில பெதச்சு வச்சிட்டேண்டு சொல்லிப்பிட்டா். அவ, அதக் காதுல வாங்கி, மனசுல வச்சுக்கிட்டா.

ஒரு நா! புருசனும் – பொண்டாட்டியும் வீட்டுக்கு வெளிய நெலா வெளிச்சத்துல, கட்டுலப் போட்டு, படுத்துக் கெடந்தாங்க.

அப்ப, நெலாவப் பாத்து சிரிச்சா். என்னா, நெலாவப் பாத்து சிரிக்கிறேண்டு, பொண்டாட்டி கேட்டா. கேக்கவும் சொல்லா மாட்டேண்ட்டா். வற்புறுத்தலா கேக்குறா. கேக்கவும்,

அந்த நீராணிக்கன, அடிச்சு சாகவச்சு, வரப்புக்கடியில பெதச்சுப்பிட்டே. அவ் சாகும் போது, 'நெலாவ நீ சாட்சிண்டு' சொல்லிட்டுச் செத்தா். அதா், அந்த நெலா வந்து, எப்ப சாச்சி சொல்லப் போகுதோண்டு சிரிக்கிறேண்டு, சொல்லிப்பிட்டா்.

ஒருநா! புருசம் பொண்டாட்டிக்குள்ள சண்ட வந்திருச்சு. கம்ப எடுத்துக்கிட்டு அவள அடிக்கப் போனா். அவ தெருவுக்கு ஓடியாந்துட்டா. அப்பவும் – இவ் விடல, வெரட்டிக்கிட்டு ஓடியாறா்.

ஐயையோ! என்னக் காப்பாத்துங்க. நீராணிக்கன அடுச்சுக் சாகவச்சு, வரப்புக்கடியில பெதச்சாப்ல, என்னயும் சாக வைக்கப் போறா்ண்டு, வீதில நிண்டுகிட்டுச் சத்தம் போடுறா. போடவும்.

ஊரு ஆளுங்கெல்லாம் கூடிட்டாங்க. அவன, அடி – அடிண்டு அடிச்சு, மடைக்கு இழுத்துட்டுப் போனாங்க. போயி, எங்கடா பெதச்சண்டு கேக்கவும், அவனும் எடத்த சொல்லிட்டா். சொன்ன எடத்த, தோண்டிப் பாத்தாங்க. பாக்கயில, அழுகின நெலயில, பொணம் வெளிய வந்திச்சு. அவனப் புடுச்சு, ஊருப் பொது எடத்ல கட்டி வச்சிட்டு, பஞ்சாயத்துக்கு, ஊரக் கூட்டுனாங்க.

ஊா்ப் பஞ்சாயத்துக்கு, அவனக் கூட்டிக்கிட்டு வா்ரபோது, அதே நெலா மேல இருந்திச்சு. கொல, செஞ்ச குத்தத்துக்கு, அவனச் சுண்ணாம்புக் காளவாசல்ல வச்சு, நீத்துப்பிட்டாங்களாம்

11. வேரும் வாலும்

ஒரு ஊர்ல - ஒரு ஏழப் பெராமணன் இருந்தர். தெனந்தோறும், காலைல, கடல்ல போயிக் குளிச்சுட்டு, தொழுக செய்வானாம். இந்தப் பெராமண் செய்யுறத, ஒரு மெதல, கண்காணிச்சுக்கிட்டு வருது. அந்த மெதல, பெராமணனப் பிடிச்சு, திண்டுபிடணும்ண்டு நெனச்சு, அவ் போறத - வர்ரதப் பாத்துக்கிட்டே இருக்கு.

ஒருநா வேளயில, மெதல கடலவிட்டு வெளியேறி, பெராமணன் வர்ர வழியில போயிப் படுத்துக்கிருச்சு. பெராமணன் அந்த வழியா வந்தர். வழியில மெதல படுத்துக் கெடக்கு. கிட்டப் போறர். போகவும்,

ஏ.... பெராமணனே!! குளிக்கப் போறது போற. என்னால நடக்க முடியல. என்னய தூக்கிட்டுப் போயி, தண்ணிக்குள்ள விட்டுருண்டு சொல்லுது. பாவம்ண்டு நெனச்சு, மெதலய தூக்கிப் பாத்தர். தூக்க முடியல. வாலப் புடிச்சு இழுத்துட்டுப் போயி, தண்ணி ஒரத்ல விட்டர்.

விடவும், வந்தது வந்துட்ட, கொஞ்சந் தள்ளிக் கொண்டு போயி விடுண்டு மெதல சொல்லுது. சொல்லவும், இடுப்புத் தண்ணிக்குக் கொண்டு போறர். இன்னுங் கொஞ்சந் தள்ளிக் கொண்டு போயி, விட்டுருண்டு சொல்லுது.

கழுத்து தண்ணிக்குள்ள கொண்டு போயி விட்டர். விடவும், பெராமணனே!! தெனோங் குளிச்சுக் - குளிச்சு ஒடம்பச் சுத்தமா வச்சிருப்ப, ஒன்னய முழுங்க ஆசயா இருக்குண்டு, மெதல சொல்லிச்சு. நாலு பேருகிட்ட நாயங் கேப்போம். அவங்க, என்னய, முழுங்கச் சொல்லிட்டாங்கண்டா, என்னய முழுங்கலாம்ண்டு, பெராமணன் சொல்றர். சொல்லவும்,

ஆருகிட்டப் போயிக் கேப்போம்ண்டு, பேசிக்கிட்டே கரைக்கு வந்தாங்க.

கடக்கரயில, ஒரு நரி, நண்டு புடுச்சு, திண்டுகிட்டிருந்திச்சு. நரிகிட்டப் போயி, நரியண்ணே! நரியண்ணே!! இந்த மெதல, பாதயில நடக்க முடியாமக் கெடந்திச்சு. என்னய தூக்கிட்டுப் போயி, தண்ணிக்குள்ள விடச் சொல்லுச்சு. தூக்கிட்டுப் போயி விட்டேன். இப்ப என்னய முழுங்கணும்ண்டு சொல்லுது மெதல. இதுக்கு நிய்யிதா். நாயஞ் சொல்லணும்ண்டு, சொன்னா். சொல்லவும்.

நரி, ஏர்த்து, ரெண்டு பேரயும் பாத்துச்சு. அப்ப, மெதல வாயத் தொறந்துகிட்டிருந்திச்சு. பெராமணன் பரக்கப் பரக்க முளிச்சுக் கிட்டிருக்கா். பெராமணன் மேல எரக்கப்பட்ட நரி, பெராமணன, மெதலகிட்டிருந்து காப்பாத்த நெனச்சுச்சு. அதுனால, அவங்கிட்டப் போயி, பெராமணனே!! எப்படி இத்தம் பெரிய மெதலய, அங்கிருந்து தூக்கிட்டு வந்த, நா் இத நம்ப மாட்டேண்டு, நரி சொல்லுது. உம்மயா நீ, தூக்கிட்டு வந்திருந்தயிண்டா இப்ப தூக்கிட்டுப் போயி, அந்தப் பழய எடத்ல போடு பாக்கலாம்ண்டு சொல்லுச்சு. பெராமணன், மெதலயப் புடுச்சு இழுத்துக்கிட்டுப் போயி, பழய எடத்ல போட்டா்.

போடவும், அட மூடப் பெராமணனே! திரும்பிப் பாக்காம, ஓடுராண்டு நரி சொல்லுச்சு. சொல்லவும், பெராமணன், திரும்பிப் பாக்காம, வந்த வழியா ஓடிப் போயிட்டா்.

நரியே!! என்னய ஏச்சுப் பிட்டயில. ஒன்னயப் புடுச்சு முழுங்கல, நா் மெதல வகுத்ல பெறக்கலண்டு, மெதல வம்மம் முறுத்திச்சு. மெதலயாரே!! என்னய, முழுங்க முடியாதுண்டு, நரி திருப்பிச் சொல்லுது.

அண்ணயில இருந்து, மெதல, நரிமேல கண்ணா இருந்திச்சு. நரிச் சத்தங் கேட்டுச்சுன்னா, மெதல அந்தப் பக்கம் போயிரும். இத நரி பாத்துச்சு. சரி, இப்டியா இருக்க. ஒன்னய ஏக்கிரே பாருண்ட்டு, ஒரு பக்கத்ல போயி கத்றது, மறுபக்கத்ல போயி, நண்டு பிடிச்சுத் திங்கிறது. இப்டி மெதலய ஏச்சுக்கிட்டே... நரி, நண்டு புடுச்சுத் திண்டு கிட்டிருந்திச்சு. நரியோட தந்திரத்த, மெதலயும் கண்டுகிருச்சு. அண்ணக்கிருந்து, ஒரு பக்கத்ல ஊ...ஊ....ஊ....ண்டு கத்துறது. கத்திட்டு, மறுபக்கத்ல போயி, நண்டப் புடிச்சுத் திண்டுபிட்டுப் போயிறது. இப்டி இருக்கயில, மெதலயும் தெரிஞ்சுக்கிருச்சு. நரி, ஏக்கிதுண்டு தெரிஞ்சுகிட்டு, ஒருநா, ஒரு பக்கத்ல நரி கத்திச்சு. ஆனா மெதல அங்க போகாம, எதுத்த பக்கத்துக்குப் போயி, தயாரா இருந்திச்சு. இருக்கயில, நரி வழக்கம் போல, இந்தப் பக்கத்ல கத்திட்டு, அந்தப் பக்கத்துக்குப் போச்சு. போயி, ஒரு புங்க மரத்து அடில ஒக்காந்து, நண்டு புடுச்சுச்சு. அதுக்காகவே காத்துக்கிட்டிருந்த மெதல, நரியோட வாலப் புடிச்சுக்கிருச்சு. பெறகு விசும்புறது எங்ஙிட்டு?

ஒடனே, நரி ஒரு ஐடியாப் பண்ணுச்சு. என்னாண்டா: ஐயையோ! என்னய விட்டுட்டு, புங்க மரத்து வேரப் புடுச்சுக்கிட்டே! என்னய விட்டுட்டு, புங்கமரத்து வேரப் புடுச்சுக்கிட்டேண்டு சொல்லிக் கத்துது. கத்தவும், மெதலக்கி வெக்கமாப் போச்சு. சே! புங்க மரத்து வேரத்தா புடிச்சுப்பிட்டோம் போலாண்டு நெனச்சு. உம்மாயப் பிடிச்சிருந்த நரியோட வால விட்டுப்பிட்டு, புங்க மரத்து வேரப் புடிச்சுக்கிருச்சு. நரி தப்பிச்சு. ஒடிப்போயிருச்சு. அண்ணயில இருந்து, நரி, அந்தப் பக்கமே போறதில்ல. வேற பக்கம் போயி, எர தேடித் திண்டுச்சாம்.

நரிக்கமுத கெட்டியானதில்ல, எல்லாத்தயும் ஏச்சுப்பிராது. நரிகிட்டப் போயி, பந்தயம் போட்டா விடுமா? நரி எப்டிப்பட்டது? ஆளக் கூட ஏச்சுப்பிராது.

12. அநியாயம்

ஒரு ஊர்ல – ஒரு ராசா இருந்தாரு. அவரு நாப்பது கிராமங்களுக்கு ஒரு ராசாவா இருந்தாரு. அவரு ராசாவா இருந்துங்கூட, தென்னாட்டச் சுத்திப் பாக்கல. அதுனால, தென் நாட்டச் சுத்திப் பாக்கணும்ண்டு, ராசாவுக்கு ஆசயா இருந்திச்சு. மந்திரியக் கூட்டிக்கிட்டு, நாட்டச் சுத்திப் பாக்கப் போறாரு. ஒரு – ஒரு ஊராப் போயிக்கிட்டிருக்காரு.

போயிக்கிட்டிருக்கயில, அநியாயபுரம்ண்டு ஒரு ஊரு. அந்த ஊருக்கு வரயில, ராசாவே!! இந்த ஊருப்பேரு அநியாயபுரம். அநியாயமா ஏதாச்சும் நடக்கும். நம்மதா் எச்சரிக்கயாய் இருக்கணும்ண்டு, மந்திரி எச்சரிக்க செய்றாரு.

இப்டி, பேசிக்கிட்டே, நடந்து வா்ரபோது, எதுக்கால ஒரு நொண்டி, நொண்டி – நொண்டி நடந்து வந்துகிட்டிருக்கா். நொண்டியப் பாத்து, எப்டி இருக்றேண்டு ராசா கேட்டாரு.

அதுக்கு நொண்டி, நிய்யி தானே எங்கால ஒடிச்ச. இப்ப எப்டி இருக்கேண்டு கேக்றீயேண்டு, அநியாயமாச் சொல்றா். இதென்னடா! வம்பா இருக்குண்ட்டு, ராசாவும் – மந்திரியும் நொண்டியக் கடந்து போறாங்க. போகயில, அங்கிட்டிருந்து, ஒரு குருட் வரா். குருடனப் பாத்து, நலம் விசாரிச்சுட்டு, ஏம்ப்பா!! அதோ போறானே, நொண்டி, அவ், நாந்தா் அவ்ங்கால ஒடிச்சேண்டு சொல்றானே, இது அநியாயமா? இல்லயாண்டு ராசா கேட்டாரு. அதுக்கு, அந்தக் குருட், அவங் கால மட்டுமா ஒடுச்ச, எங்கண்ணயும் நீ தான கெடுத்தேண்டு சொல்றா்.

இது என்னடா அநியாயமா இருக்குண்ட்டு, அவன விட்டுத் தள்ளிக் கொஞ்ச தூரம், ராசாவும் – மந்திரியும் போறாங்க. எதுக்கால பிள்ளத்தாச்சி ஒருத்தி, ரெண்டு கொழந்தைகள நடத்திக் கூப்பிட்டுக்கிட்டு வரா.

அவளப் பாத்த ராசா, ஏம்மா நல்லா இருக்கியாண்டு கேட்டுட்டு, நொண்டி சொன்னதயும், குருட் சொன்னதயும் அவகிட்டச் சொல்லறாரு. சொல்லவும் அதுக்கு அவ, அத மட்டுமா செஞ்சே. நீ தானே! என்னய, ரெண்டு பிள்ளைகளக் கையிலயும், ஒண்ண வகுத்துலயும் குடுத்திட்டு, விட்டுட்டுப் போனண்டு சொன்னா.

ராசாவுக்கு ஒரே ஆச்சரியம். மந்திரிக்கிட்ட ஓசன கேக்குறாரு. அப்ப, மந்திரி சொல்றாரு, ராசாவே!! நொண்டிக்கிட்டப் போயி, நொண்டி!! உன், ஒரு காலயும் எடுத்திட்டு, என் இரண்டு காலயும் தரேண்டு, சொல்லுங்க. குருடனோட மற்றொரு கண்ணயும் எடுத்திட்டு, என் ரெண்டு கண்ணயும் தரேண்டு சொல்லுங்க. பிள்ளத்தாச்சிய, எங்கூட வாண்டு கூப்பிடுங்கண்டு, மந்திரி சொன்னாரு.

அதேபோல, நொண்டியக் கூப்பிட்டு, நொண்டி!! அந்த ஒரு காலயும் வெட்டி எடுத்திட்டு, எங்காலு ரெண்டயும் வைக்ரேண்டு ராசா சொன்னாரு.

அதுக்கு நொண்டி, வேணாம் ராசா. இந்த ஒரு காலே எனக்கு உருப்படியா இருந்தாப் போதும்ண்டு சொல்லிட்டுப் போயிட்டா.

குருடங்கிட்டப் போயி, அந்த ஒத்தக் கண்ணயும் தோண்டிட்டு, அங்க, எங்கண்ணு ரெண்டயும் வைக்கிறேண்டு, ராசா சொன்னாரு.

அதுக்கு குருட், வேணாம் ராசாவே! எனக்கு இந்த ஒத்தக் கண்ணே போதும்ண்டு, சொல்லிட்டு நகண்ட்டர்.

பிள்ளத்தாச்சியக் கூப்பிட்டு, ஓம் புள்ளக்கி என்னத்தானே தகப்பிண்டு சொன்னே, எங்கூட வாண்டு கூப்பிட்டாரு.

அதுக்கு அவ சொல்றா, என்னய்யா! எம் புருச் மலபோல இருக்கா். அதெப்டி ஒங்கூட வர முடியும்ண்டு சொல்லிட்டு நழுவிப் போயிட்டா.

ராசாவுக்கு ஒரே வருத்தம். ஊருப் பேருக்குத் தக்கபடி நடக்குறாங்களே. ஊருப்பேர மாத்தணும்ண்டு, நெனச்சு, பேர மாத்தறதுக்கு ஆணை போட்டாரு. இப்டிச் செஞ்சா, என்னா வெளங்கும் மனுசரு, இப்டிப்பட்ட ஊருக்குள்ள குடியிருக்க முடியுமா?

13. ஓசித் தண்டட்டி

ஒரு ஊர்ல – புதுக் கல்யாணம் முடிச்சவ், ஒருத்தி இருந்தா். கலியாணம் முடுஞ்சு, தனியா குடித்தனம் நடத்துறா். பொண்டாட்டி இருக்காளே, அவ எப்பயும் நகநட்டு போட்டுக்கிட்டிருக்கணும்ண்டு நெனக்கிறவ. நகநட்டு போட்டுக்கிட்டு சொந்தக்காரங்க ஊருக்கெலாம் போகணும்ண்டு நெனக்கிறா. இருந்தாத்தான போடுறதுக்கு இல்லயில, வாங்கணும்ண்டா புருசங்கிட்ட சொத்துபத்து இல்ல.

இப்டி ஆசயோட இருக்கயில, பக்கத்து ஊர்ல, ஒரு திருவிழா நடக்குது. நம்ம மாரியம்மங்கோயிலு திருவிழா போல வச்சுக்குங்க.

நடக்கயில, அந்த ஊருச் சனங்கள்ளாம் திருவிழாவுக்குப் போறாங்க. அப்ப, இவளும் போகணும்ண்டு நெனக்கிறா.

புருசனுக்குத் தெரியாம, அடுத்த வீட்டுக் கெழவி கிட்டப் போயி, தண்டட்டிய ஓசி வாங்கிப் போட்டுக்கிட்டு, புருசனக் கேக்காம, திருவழாவுக்குப் போயிட்டா. புருச் உழுகப் போயிட்டு, பொழுது விழுக வந்தா். எம் பொண்டாட்டிய எங்கண்டு கேக்கவும், அடுத்த வீட்டுக் கெழவி, எங்கிட்ட, தண்டட்டிய வாங்கிப் போட்டுக்கிட்டு, திருவிழாவுக்குப் போயிட்டாண்டு, கெழவி சொன்னா.

இவ, திருவழாவ்ல, ஓசித் தண்டாட்டிய வாங்கிப் – போட்டுக்கிட்டு. அங்கிட்டும் – இங்கிட்டும் அலச்சுக்கிட்டுத் திரியிறா.

இங்க, இவ், ஒசித் தண்டட்டிய வாங்கிப் போட்டுக்கிட்டு போயிருக்கா. எங்கிட்டாச்சும் ஒரங்கிட்டாண்டா, தண்டட்டிய அவுத்துக்கிட்டுப் போயிருவாங்கண்டு, அவனும், மாடுகளக் கெட்டி வச்சுட்டு, கதவாலப் பூட்டிட்டு, கெழவி கிட்டச் சொல்லிட்டு, திருவிழாவுக்குப் போறா்.

போயிப் பாத்தா, அம்மா! அலச்சுக்கிட்டுத், திரிஞ்சுட்டு ஒரு எடத்ல படுத்து, நல்லா கொரட்ட விட்டு ஒரங்கிக்கிட்டிருக்கா. இவ் பாத்தா். ரெண்டு அமுக்குப் பூட்ட வாங்குனா். பையாப் பக்கத்ல போயி, தண்டட்டியக் கழத்திக்கிட்டு, காதுல, அமுக்குப் பூட்டப் போட்டு விட்டுட்டு. தண்டட்டியக் கொண்டுகிட்டு வீட்டுக்கு வந்திட்டா்.

நல்லா ஒரங்கி எந்திருச்சவ, காதுல தண்டட்டிதா் கெடக்குண்ட்டு அலச்சு – அலச்சுப் பேசுறா. இவ, பேசயில பாத்தவங்க எல்லாஞ் சிரிக்குறாங்க. மத்தவங்க சிரிக்கச் – சிரிக்க, இவ ரொம்ப அலைக்குறா. அலச்ச அலயில, பூட்டு அடுச்சு, ரெண்டு கன்னமும் இந்தந் தண்டி – இந்தந் தண்டி வீங்கிப் போயிருக்கு.

பாத்த பொம்பளைகள்ல ஒருத்தி என்னாடி, அமுக்குப் பூட்டப் போட்டுக்கிட்டு, இந்த அல அலைக்கிறண்டு கேட்டா. கேக்கவும், காதத் தொட்டுப் பாத்தா. தண்டாட்டிக்கு பதிலா அமுக்குப் பூட்டுப் போட்டிருக்கு. பதறிப் போயிட்டா.

புருசங்கிட்ட என்ன சொல்றது? கெழவி கிட்ட எதக் குடுக்குறதுண்டு நெனச்சுக்கிட்டு, அமுக்குப் பூட்டயுங் கழத்தாம வீட்டுக்கு ஒடியாந்தா. வீட்ல, கெழவி நிண்டுகிட்டிருக்கா. இவ, வீட்டுக்குள்ள வந்தும் வரங்குள்ள, ஏ... இன்னாரு பொண்டாட்டி! தண்டட்டியக் குடு, எந்தங்கச்சி வீட்டுக்குப் போகணும்ண்டு கேக்குறா.

கேக்கவும், பையாப் புருசங்கிட்ட வந்து, கெழவி கிட்ட ஒசித் தண்டட்டி வாங்கிப் போட்டுக்கிட்டுத் திருவழாவுக்குப் போனே. எவனோ தண்டட்டியக் கழத்திக்கிட்டு, அமுக்குப் பூட்டப் போட்டு விட்டுட்டாண்டு சொன்னா. சொல்லவும், அட கண்டாரோளி முண்ட! அடுத்த வீட்டுக் கோழி முட்ட, அம்மிய ஒடைக்கும்ண்டு ஒனக்குத் தெரியாதாண்டு, வௌக்க மாத்த எடுத்து, ரெண்டு போடு போட்டார். போடவும், அதயும் தாங்கிக்கிட்டுப் பேசாம இருந்தா. தப்புச் செஞ்சுட்டா, எப்டிப் பேச முடியும்?

அப்பக் கெழவி, இங்க துடிச்சுக்கிட்டிருக்கா. தண்டட்டியக் குடுறி, நா தங்கச்சி வீட்டுக்குப் போகணும். ரெண்டு பவுனுக்குச் செஞ்ச தண்டட்டி, இப்டி தொலச்சிட்டு வந்திருக்கியே, ஒனக்கு எம்புட்டுத் தைரியம்ண்டு புடுச்சுப் பேசுறா.

அப்ப, பையா புருசங்கிட்ட, அந்தக் கோம்பக் காட்டவித்து, கெழவிக்குக் குடுத்துருங்கண்டு சொல்றா. என்னாடி, கல்யாணம் முடுஞ்சு மூணு மாசங்கூட ஆகல. அதுக்குள்ள, காட்ட விக்கச் சொல்றியே அதெல்லாம் முடியாதுண்றார்.

இங்க, கெழவி வேற நெருக்கிக்கிட்டிருக்கா. ரொம்ப அவமானப்பட்டுப் போயி, பாவமா புருசனப் பாத்தா. அவனுக்கு எரக்கம் வந்திருச்சு. பெறகு உம்மயச் சொல்லி, இதுனாலதா அடுத்தவங்க பொருள, ஒசி வாங்கக் கூடாதுண்றதுண்டு, புத்திமதிகளச் சொல்லவும், அவளும், இப்ப இருந்து நாந் திருந்திட்டேண்டு சொன்னா.

கெழவி கிட்ட, கழத்தி வச்சிருந்த நகயக் குடுத்திட்டு, சந்தோசமா வாந்தாங்களாம்.

14. அப்பனுக்கு ஆசை, மகளுக்குப் பூசை

ஒரு ஊர்ல, ஒரு ஏழக் குடும்பம். எதுனாலும் வேலைக்குப் போனாத்தா கஞ்சி. நெல்லுக்கருது (கதிர்) அறுக்கத்தா அதிகமாப்போவாங்க. இப்டி, கூலி வேல செஞ்சே காலத்த கடத்திக்கிட்டிருக்காங்க. அவங்களுக்கு ரெண்டு மகளுக.

ஒருநா, தாயும் – தகப்பனும் நெல்லுக்கருது அறுக்கப் போயிட்டாங்க. மூத்த மக, வாசப்படில ஒக்காந்து இருந்தா. அப்ப, ஒரு சிட்டுக் குருவி வந்து, அவ பக்கத்ல ஒக்காந்திருச்சு. ஒக்காரவும், அதுக்கு ரெண்டு நெல்ல எடுத்துப் போட்டா. அதக் கொருச்சு திண்டுட்டுப் போயிருச்சு. நெல்லுக்கருது அறுக்கப் போன தாயும் – தகப்பனும் திரும்பி வரவும், குருவிக்கு நெல்லு போட்டத மக சொன்னா.

சொல்லவும், நாங்க என்னா பாடுபட்டு நெல்லு கொண்டு வாரோம். அத வீணடிக்கிறியேண்டு சொல்லி, அவள அடுச்சு, வீட்ட விட்டுப் பத்திட்டாங்க. அழுதுகிட்டே, குருவி இருக்கிற வீட்டத் தேடிக்கிட்டுப் போறா. வழில, ஒரு தென்ன மரம் தண்ணி எடுத்து ஊத்திட்டுப் போண்டு சொல்லுது. தென்ன மரத்துக்குத் தண்ணி எடுத்து ஊத்திட்டுப் போறா.

அங்கிட்டு, வண்ணாத்தி துணி தொவச்சுக்கிட்டு இருக்கா. அவ, ரெண்டு துணிய, தொவச்சுப் போட்டுட்டுப் போண்டு சொன்னா. சரிண்டு, ரெண்டு துணிய, தொவச்சுப் போட்டுட்டு, அங்கிட்டுப் போறா.

வாழ மரமும் – ரோசாச் செடியும் தண்ணி எடுத்து, ஊத்திட்டுப் போண்டு சொல்லுது. தண்ணி எடுத்து, ரெண்டுக்கும் ஊத்திட்டு, அங்கிட்டுப் போகயில, குருவி வீடு இருக்குது.

குருவிய பாத்து, குருவிக்குக் குடுத்த, ரெண்டு நெல்லயுங் கேட்டா. ரெண்டு நெல்லுக்குப் பதிலா, குருவி, ஒரு மூட்ட நெல்லு குடுத்திச்சு. செமந்துகிட்டு வாரா.

வரயில, தென்ன மரம் தேங்கா குடுத்துச்சு. வாழ மரம் வாழக்கா குடுத்துச்சு. வண்ணாத்தி பட்டுச் சில குடுத்தா. பட்டுச் சிலயக் கட்டிக்கிட்டா. ரோசாச் செடி, பூ குடுத்துச்சு. புவ்வ, கொண்டையில வச்சுக்கிட்டா. வீட்டுக்கு வந்தா, நெல்லக் கொட்டி வச்சா. தேங்ககாய எரக்கி வச்சா. வச்சிட்டு, தாயயும் – தகப்பனயும், எதுரு பாத்து, ஒக்காந்து இருக்கா.

தாயுந் – தகப்பனும் வந்தாங்க. குருவியப் பாத்து, நெல்லு வாங்குன வெவரத்தச் சொன்னா. சொல்லவும், தாயுக்கும் தகப்பனுக்கும் ஆச வந்திருச்சு. எளய மகளயும் அடுச்சு வெரட்டினா, அவளும் போயி, நெல்லு வாங்கிட்டு வருவாண்டு சொல்லி, எளயமகள அடுச்சு, வீட்டவிட்டு வெரட்டிட்டாங்க.

அழுதுகிட்டே – குருவியத் தேடிக்கிட்டுப் போறா. எடையில, வேல சொன்ன தென்னமரம், வண்ணாத்தி, வாழமரம், ரோசாச் செடிகளச் சட்ட செய்யாமப் போறா.

குருவி கிட்டப் போயி, நெல்லு கேட்டா. குருவி நெல்லுக்குப் பதிலா, செமையா அடி குடுத்து அனுப்பிச்சிருச்சு.

குருவி கிட்ட அடிய வாங்கிக்கிட்டு, திரும்பி வரயில, தென்ன மரம், தம்பங்குக்கு ரெண்டு வாங்கு வாங்குச்சு. வண்ணாத்தியும், ரெண்டு வாங்கு வாங்குனா. வாழமரம் அடிக்க, ரோசாச் செடி அடிக்க, அடிவாங்கி, மேலெல்லாம் காயமும் – கியமுமா, அளுதுகிளுது வீடு வந்து சேந்தாளாம். நல்லவ போனா, கெடச்சுச்சு. இவ போனாண்டா எப்டிக் கெடைக்கும்? அடிதான் கெடைக்கும்.

15. ஆணுக்கும் பெண்ணுக்கும் சகசம்

ஒரு ஊர்ல – ஒரு தாசி இருந்தா. அவளுக்கு நாலு பொண்ணுக. அந்த நாலு பொண்ணுகளயும், தாசியாக்கி, பொளப்பு நடத்திக்கிட்டிருக்கா. அப்டி, பொளப்பு நடத்திக்கிட்டிருக்கயில, தெனம், பத்துப் பயக, அந்த வீட்டுக்குப் போயிட்டு வருவாங்க.

அந்த தாசி வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரி நல்லவ. சுத்தமானவ. எத்தன பயக, அந்த வீட்டுக்குப் போறாங்கண்டு எண்ணியெண்ணி, அடுத்த பொம்பளகிட்ட சொல்லுவாளாம். ஒரு பய போகயில, ஒரு கல்லெடுத்து குலுமைக்குள்ள போட்டு வப்பாளாம்.

இப்டிப் போட்டுக்கிட்டிருக்கயில, குலும நெறையறதுக்குள்ள நல்லவ செத்துப் போயிட்டா. சாகவும், எமன், அவ உசுர, மேலயும் போகவிடாம, கீழயும் இருக்கவிடாம, கல்லு – முள்ளு – காடு – மேடுகள்ல இழுத்துக்கிட்டிருக்கா.

அந்தரத்ல இருக்கயில, ஈஸ்வரியும் – ஈஸ்வரனும் அந்த வழியா வராங்க. நாதா! இந்தப் பொண்ணுசுர, ஏ... இப்டி, மேலயும் போக விடாம, கீழயும் இருக்கவிடாம, இப்டி, கல்லுலயும், முள்ளுலயும் இழுத்துக்கிட்டிருக்கானேண்டு கேக்குறா.

அப்ப: பரமசிவன், ரொம்ப கோவப்பட்டு, இந்தப் பொம்பளகளே இப்டித்தா. எதுக்கெடுத்தாலும் வெளக்கங் கேட்டுக்கிட்டே இருக்குறது. ஒங்கூட வந்ததே தப்பு. சரி பெண்ணே! இங்ஙன ஒக்காந்திரு, நா ஒரு எடத்துக்குப் போயிட்டு, சீக்கிரம் வந்திர்ரேண்ட்டு பரமசிவன் போயிட்டாரு.

ஈசுவரி, அங்க ஒக்காந்திருக்கா, ஒக்காந்திருக்கயில, குண்டிப் பகுதிச் சீலயக் கரயான் திண்டிருச்சு. பின்னால பூராம்

ஒட்டோட்டயா இருக்கு. அவமானப்பட்டுப் போனோம்ண்ட்டு தெகச்சு நிக்கிறா.

அப்ப: ஈசுவரன், ஊசி பாசி விக்கிற கொறவன் மாதிரி, அங்கிட்டிருந்து, வாராரு.

ஆம்பள வர்ரத பாத்திட்டு, ஈசுவரி கூனிக்குறுகி நிக்கிறா. கிட்ட வந்தாரு. கிட்டத்ல வரவும் ஐயா!! இந்த சிலயத் தச்சு குடுங்கயாண்டு, ஈசுவரி கேக்குறா. தச்சுக் குடுத்தா, எனக்கு என்னா குடுப்பேண்டு ஈசுவரன் கேக்குறாரு. அதுக்கு அவ, என்னா கேட்டாலும் தரேண்டு சொல்றா.

மானத்த எனக்கு அடிமையாக்குவயாண்டு கேக்குறாரு. மானத்தக் காத்த ஒரு ஆடவனுக்கு, மானத்த அடிமையாக்குறதில தப்பில்லண்டு சொல்றா.

என்னா பெண்ணே!! சிலயத் தச்சுக்குடுத்த ஒரு சின்ன ஒதவிக்கு தன்னயே குடுக்க தயாராயிட்டயே, ஒன்ன மாதிரிதா, பூலோகத்ல இருக்கிற பொண்ணுகளும், சந்தர்ப்பங்களாலும், தேவைகளாலும், இச்சைக்கு அடிமையாகுராங்க. இது ஆணுக்கும் – பெண்ணுக்கும் சகசம்.

ஒரு தேவைக்காக, நிய்யி அடிமையாயிட்ட, நிய்யி கெட்டுப் போனதப் பெரிசா நெனச்சு, ஒன்னய நா அவமானப்படுத்ல. பொண்ணுக்குப் பொண்ணு அவமானப்படுத்துனதுனாலதா, அந்த உசுரு எம்ங்கையில இந்தப்பாடுபடுது. ஒரு பொண்ணு பொரசு, அதது பிரியத்துக்கு நடந்தா, அத, இவ ஏ...வெளிப்படுத்தணும். இவ, நீதியா இருந்தால் இவ அளவுக்குத்தான இருக்கணும், அடுத்தவங்களப் பத்தி பேசுறதுக்கு உரும இல்ல. சரி! வா பெண்ணே! போவோம், எல்லாம் விதிப்படிதா நடக்கும்ண்ட்டு போயிட்டாங்களாம்.

16. ஆனயும் - பானயும்

ஒரு ஊர்ல – ஒருத்தி ஆன வளத்தானாம். வளக்கயில, அந்த ஊர்ல, ஆரு கல்யாணம் முடிச்சாலும், இவங்கிட்ட ஆன வாங்கிட்டுப் போயி, ஆன மேலதா ஊர்வலம் நடத்துவாங்களாம்.

அப்ப, ஒருத்தனுக்கு, அந்த ஊர்ல கல்யாணம் முடியப் போகுது. அவ், மொதல்ல ஆனக்காரங்கிட்டப் போயி, எங்கல்யாண ஊர்வலத்துக்கு ஆன வேணும்ண்டு கேட்டா. ஆனக்காரனும், பணத்த வாங்கிக்கிட்டு, ஆனயக் குடுத்திட்டா.

ஆனய கூட்டிக்கிட்டு வீட்டுக்கு வாரா. வீட்ல வந்து, கெட்டி வச்சிருக்கயில, ஆன செத்துப் போச்சு. சாகவும், ஆனக்கார் வந்து, ஏ...ஆனயக் குடுண்டு கேட்டா. ஏலே! ஆன செத்துப் போச்ச. ஆனக்கிப் பதிலா பணம் வாங்கிக்கண்டு சொன்னா. பணம் எனக்கு வேணாம். எனக்கு ஆனதா வேணும்ண்டு சொல்லிட்டா. ஆன செத்துப் போச்சு, நிய்யி, போயி பஞ்சாயத்ல சொல்றாண்டு சொல்லிட்டா.

இவ் போயி, பஞ்சாயத்ல சொல்லி, ஊரக் கூட்டிட்டா. இப்ப, இவ் என்ன செய்றாண்டா, வாசல்ல, மண்சட்டிகள் அடுக்கி கதவால அடச்சு வச்சிருக்கா. வச்சிட்டு, வீட்டுக்குள்ள ஒக்காந்திருக்கா.

கூட்டங்கூடுனவங்க, அவனப் போயி, கூட்டிட்டு வாடாண்டு ஆனக்காரன போகச் சொன்னாங்க. இவ் போயி, கதவாலத் தள்னா, தள்ளவும், அடுக்கி வச்சிருந்த சட்டி பானைக, விழுந்து ஒடஞ்சு போச்சு. ஒடஞ்சு போகவும், எஞ் சட்டிகளக் குடுடாண்டு, ஆனக்காரனப் புடிச்சுக்கிட்டா.

ரெண்டுவேரும் சண்ட போட்டுக்கிட்டே பஞ்சாயத்துக்கு வந்தாங்க. நடந்ததச் சொன்னாங்க. சொல்லவும், ஆனக்கிம் – பானக்கிம் சரியாப் போச்சு. போங்கடாண்டு பஞ்சாயத்ல சொல்லி ட்டாங்க. சொல்லவும், பெறகு பேசாம வீட்டுக்கு போனாங்களாம்.

17. சிற்றறிவு

ஒரு புத்ல, ஒரு பாம்பும் – ஒரு எறும்பும் வாந்து வந்திச்சசு. ரெண்டுமே நல்ல முறையில பழகி வந்துச்சுக. பாம்பக் காட்டிலும், எறும்புக் குறைவானது என்ற ஒரு காம்ளெக்ஸ் எறும்புக்கு இருந்திச்சு.

ஒருநா, அந்த வழியா, செத்த பொணத்தத் தூக்கிட்டுப் போனாங்க. போறபோது, அவஞ் செத்த விதத்தப் பத்திப் பேசிக்கிட்டுப் போனாங்க. பாவம்! நல்லவ, பாம்பு கடிச்சு, செத்துப் போனாண்டு பேசிக்கிட்டு, கூட்டம் போகுது.

எறும்பு, புத்து மேட்ல நிண்டு பாத்துக்கிட்டிருக்கு. பாம்பு கடிச்சுத் செத்து போனாங்கற பேச்சக் கேட்டதும், இந்த எறும்புக்கு, ஒரு பொறாமை குணம் மனசுல வந்திருச்சு. எப்டியாவது நம்மளும், பாம்பப் போல, பேரு வாங்கணும்ணடு நெனச்சு, கடவுள நோக்கி தவம் பண்ணுச்சு.

நீண்டநா, தவத்துக்குப் பெறகு, கடவுள் எறும்புக்கு முன்னாடி வந்து நிண்டு, எறும்பே! உனக்கு என்ன வேண்டும்ண்டு கேட்டாரு.

எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை. நா...ங்– கடுச்சாச் சாகணும், எனக்கு அந்த வரம் வேணும்ண்டு கேட்டுச்சு.

கடவுளு என்ன செஞ்சாரு. எறும்பு தவறாக் கேக்குதுண்டு நெனச்சு, எறும்பே! நல்லா யோசன பண்ணிக்கேளுண்டு சொன்னாரு. கடவுளு சொன்னத, காதுல வாங்கிக்காத எறும்பு நாங்க, கடுச்சா சாகணும்ண்டு மறுபடியும் கேட்டுச்சு.

எறும்போட சிற்றறிவை எண்ணி வியந்தவராய், எறும்புக்கு அது கேட்ட வரத்த குடுத்திட்டாரு. எறும்புக்கு ஒரு ஆச. கடவுள் குடுத்த வரத்த, சோதிச்சுப் பாக்க நெனச்சது.

தூரத்ல ரெண்டு பேரு பேசிக்கிட்டிருந்தாங்க. அவங்ககிட்ட எறும்பு போச்சு. போன சோர்ல, ஒருத்த் தொடையில நறுக்கென்று கடுச்சது. வலி தாங்க மாட்டாம, அவ், ஓங்கி, கடுச்ச எடத்ல கைய வச்சு அடிச்சர். அடி, எறும்பு மேல விழுந்து, எறும்பு சுக்கு நூறா ஒடஞ்சு செத்துப் போச்சு. அண்ணக்கிருந்துதா் எறும்பு கடிச்சா, செத்துப் போகும். கடிச்சா அடிச்சுப்பிடுறோம்ல்ல, தன்னோட பலம் அறிந்து யாரும், செயல்படணும்.

18. மருமகளாயிருந்து மாமியாளானவள்

ஒரு ஊர்ல, தாயும் – மகனும் இருந்தாங்க. அந்த ஊர்ல கெடைக்கிற வேலைகளச் செஞ்சு, பொளச்சுக்கிட்டிருந்தாங்க. மகனுக்கு, கலியாணம் முடிக்கிற வயசு வந்திருச்சு. ஒரு ஏழப் பொண்ணப் பாத்து, கலியாணஞ் செஞ்சு வச்சா.

வந்த மருமக, அமதியா இல்லாம, அடங்காப்பிடாரியா இருந்தா. மாமியா பாவம், நம்ம பாத்து, மகனுக்குக் கட்டி வச்சப் பொண்ணுதா. இப்ப நம்மளே கொற சொன்னா எப்டிண்டு, மருமக என்னா செஞ்சாலும், மகங்கிட்டச் சொல்லாம, இருந்துக்கிருவா. மருமகளுக்குப் பயந்துகிட்டு, அவ செய்யுற அடாவடித்தனங்களை மகங்கிட்டச் சொல்றதில்ல. புருசங்கிட்டப் பக்குவமா நடந்துக்கிருவா. இப்பயும் அப்படித்தான, மக முன்னால, மாமியாளுக்கு பயப்படுறவ போல நடிக்கிறது. எங்கம்மாகிட்ட, நல்லா நடந்துகண்டு சொல்லிட்டு, அவ வேலயப் பாத்துக்கிட்டிருந்தா.

ஒருநா, மாமியா குளிக்கயில, மருமகளக் கூப்பிட்டு, முதுகு தேச்சு விடுண்டு சொன்னா. சொல்லவும், ஏண்டி! கெழவி ஒனக்கு முதுகா தேய்க்கணும்? தேய்க்கிறே, தேய்க்கிறேண்ட்டு, காலத் தூக்கி முதுகுல வச்சு, காலாலயே மேலுந் தேய்க்கிறா.

அடிப்பாவி! இப்படியா செய்யுற. செய்யி – செய் ப! இதுதா ஒனக்கும் கெடைக்கும்ண்ட்டு, அண்ணக்கி ராத்திரியே, மாமியா செத்துப் போயிட்டா.

இவளுக்கு ஒரு மகன் பொறந்தா. ஆருக்கு? காலத் தூக்கி மாமியாளுக்கு முதுகு தேச்சாளே, அந்த மருமகளுக்கு. மகன்

பெறந்து, வளந்தா. இவளுக்கு வயசாயிருச்சு. மகனுக்கு, ஒரு கலியாணம் முடிச்சு வச்சுட்டு, செவனேண்டு இருக்கலாம்ண்ட்டு, வெளியெல்லாம் பொண்ணுத்தேடுனா, கடசில ஒரு பொண்ணப் பாத்துக் கலியாணம் முடிச்சு வச்சா, மருமக, ரெம்ப ஒழுக்கமானவ, மாமியா, காலால சொல்ற வேலய, கையால செய்யணும்ண்டு நெனக்கிறவ. அப்டிப்பட்டவள,

இந்த மருமகளாயிருந்து மாமியாளானவ, குளுச்சுக்கிட்டு, முதுகு தேச்சு விடக் கூப்பிட்டா. கூப்டவும், போனா, போனவ, கையால முதுகு தேய்க்கணும்ணடு நெனச்சு, கைய முதுக்குக்கு கொண்டு போறா, ஆனா, கையி முதுகு தேய்க்கப் போக மாட்டேங்குது. காலுதா, முதுகுக்குப் போகுது.

காலாலயே மாமியாளுக்கு முதுகு தேச்சு விட்டுட்டு, மாமியாகிட்ட வந்து, அத்த! கையால முதுகு தேய்க்கணும்ண்டு, கைய முதுக்குக்குக் கொண்டுபோனே. ஆனா, கையி போக மாட்டேண்டுருச்சு. கால்தா போச்சு. அதனாலதா, காலால முதுகு தேச்சே. என்னயப் பொறுத்துக்கிறணும்ண்டு சொன்னா.

ஆண்டவன்! அவரவர்க்கு வச்சதுதாமா நடக்கும். நான்.. ஏ... மாமியாளுக்கு என்னா செஞ்சேனோ? அதுதாமா எனக்குக் கெடைக்கும்.

ஏ... மாமியாளுக்கு, நா காலால முதுகு தேச்சுவிட்டே. இப்ப எனக்கு நிய்யி தேய்க்கிற. இதுல என்னம்மா தப்பு.

ஆண்டவன் ஒருத்த் சும்மாவா இருக்கா. ஒலகத்ல நடக்குறதுகள ஒண்ணு விடாமப் பாத்துக்கிட்டுதா இருக்கா.

செஞ்சத, செஞ்சாத்தாம்மா திரும்ண்டு மொனங்கிக்கிட்டாளாம்.

19. தடிக் கம்பு

ஒரு ஊர்ல, ஒரு காரியக்காரன் இருந்தர். அவ், அந்த ஊக்குக் காரியக்காரன். நல்லது நடந்தா, அந்த வீ ட்ல போயி இருந்திட்டு வருவானாம்.

அந்த ஊர்ல, சாவு நடந்தா, அந்த வீ ட்டுக்குப் போயிட்டு, கையில இருக்ற தடிக்கம்ப வச்சிட்டு வந்திருவானாம். செத்த வீ ட்டுக்கு மட்டும் போறதில்ல. மத்தெல்லா வீ ட்டுக்கும் போயி, உண்டு உறங்கி வருவானாம்.

ஒருநா, அந்தக் காரியக்காரன் செத்துப் போயிட்டர். சாகவும், அந்த ஊர்ல இருக்றவங்கல்லா, ஆளுக்கொரு, தடிக்கம்ப எடுத்திட்டுப் போயி, காரியக்கார் வீ ட்ல வச்சிட்டு வந்திட்டாங்க. யாருமே எளவு வீ ட்ல இல்ல. வெறுந் தடிக்கம்பா இருக்கு. அந்த வீ ட்டுக்காரப் பொம்பள பாத்தா, பெறகு போயி, கெஞ்சிக் கெதறி அழுது பெறக்கி, கால்ல – கையில வி ழுந்து கூட்டிட்டு வந்தாளாம். பெறகு எல்லாருமாச் சேந்து, தூக்கிட்டுப் போயி, நல்லடக்கம் செஞ்சாங்களாம். கெட்டவன, இப்படித்தர் திருத்தணும். சாவுக்குப் பெறகு, ஒருவன மக்கள் மறக்காம, இருக்கணும்ண்டா, நன்ம செய்தவனாகவோ அல்லது தீமை செய்தவனாகவோ இருக்கவேண்டும். நன்ம செய்தவனையும், மக்கள் எளிதில் மறக்க மாட்டார்கள். தீம செய்தவனயும் மக்கள் எளிதில் மறக்க மாட்டார்கள்.

20. சாவக் கத்தி

ஒரு காட்ல, ஒரு நரியும் – மானும் பெரண்டா இருந்திச்சாம். எதச் செஞ்சாலும், ரெண்டும் சேந்துதா் செய்யுமாம். ரெண்டும் சேந்துதா் எங்கயும், போகும் – வரும்.

ஒருநா, நரியும் மானும் சேந்து, ஒரு மலய நோக்கிப் போகுதுக. போற வழியில, ஒரு வெள்ளரிக்காத் தோட்டம் இருந்திச்சு. அந்தத் தோட்டத்ல, ஒருத்தெ், தொத்த மாடுகளக் கமலயில பூட்டி தண்ணி எரச்சுக்கிட்டிருக்கா். எரக்கிறது – தண்ணி பாச்சுறது, ரெண்டயும் அவனே செஞ்சுகிட்டிருக்கா். ரெண்டு சாலு எரக்கிறது, போயி ரெண்டு பாத்திய வெட்டி விடுறதுமா இருக்கா்.

வழில போன மானும் நரியும், அவங்கிட்டப் போச்சு. போயி, அண்ணே!! நிய்யி, ரெண்டு வேலகளயுஞ் செஞ்சு கஸ்டப்படுற, தோட்டத்த எங்ககிட்டக் குடு, நாங்க, வெவசாயம் செஞ்சு, ஒனக்குப் பங்கு குடுக்றோம்ண்டு நரி சொல்லுச்சு. அவனும் சரிண்டு சொல்லிட்டு, வீட்டுக்குப் போயிட்டா்.

அண்ணக்கிருந்து மானு தண்ணி எரைக்க, நரி தண்ணி கெட்டுது. வெள்ளரிக்கா காய்க்க ஆரம்பிச்சிருச்சு. மானு, தண்ணி எரைக்கயில, எடயில விட்டுட்டு, சால இளுத்து வெளியவச்சுட்டு, பச்சப் புல்லு இருக்ற எடத்தப் பாத்து மேயப் போயிரும். ரெண்டு சாலு எரச்சுக்கிறது, போயி, ரெண்டு வாய் புல்ல மேஞ்சுகிறது.

நரி, நாலு பாத்திகள ஒண்ணா வெட்டி விட்டுட்டு, அந்த நாலு பாத்திகளுந் தண்ணி பாயங்குள்ள, பக்கத்ல இருக்ற கொளத்ல போயி, நண்டு பிடிச்சு தின்னப் போயிறும். நாலு பாத்தி தண்ணி பாச்சுறதுக்குள்ள, வகுத்துக்கு, நண்டப் பெறக்கித்

தின்னப் போயிறது. இப்டியே, நண்டத் திண்டு, கொளுத்துப் போன நரி, கொளத்துத் தண்ணிக்குள்ள பேண்டு விட்டுட்டு, வெள்ளரிக்காயில வந்து குண்டி தொடைக்கிறது. வெள்ளரிக்காயெல்லாம், வெறும் பிய்யா இருக்கு. கொளத்துத் தண்ணிக்குள்ள பிய்யி பேலுறது, வெள்ளரிக்காயில வந்து குண்டிய வச்சுத் தேச்சுத் தொடச்சுக்கிறதுமா இருக்கயில, ஒருநா, தோட்டக்காரன், தோட்டத்தப் பாக்கணும்ண்டு வந்தா, வரயில, மானு புல்லு மேயப் போயிருச்சு. நரி கொளத்துக்கு, நண்டு புடிக்கப் போயிருச்சு. இருக்ற வெள்ளரிக்காயி பூராம் வெறும் பிய்யா இருக்கு. இத என்னாண்டு பாக்கணும்ணடடு, மரத்து மேல ஏறி ஒக்காந்துகிட்டா. கொளத்துக்குள்ள, இருந்து நரி வந்திச்சு, வந்ததுமே வெள்ளரிக்காயில நக்கிளிச்சு, பிய்யத் தொடைக்கிது. தொடைக்கவும் இந்த நரிக்கழுதக்கிப் பாடம் புகட்டணும்ண்டு, நெனச்சுக்கிட்டு, வீட்டுக்குப் போறா.

போயி, நெறயா சாவக் கத்திகள, ஆசாரிகிட்டச் சொல்லி அடிச்சு வாங்கிக்கிட்டுத் தோட்டத்துக்கு வாரா. வந்து, வெள்ளரிக்காயில, ஊண்டி – ஊண்டி வச்சிட்டா. அப்ப, நரி கொளத்துக்குள்ள பேண்டு வச்சிட்டு, வெள்ளரிக்காயில குண்டி தொடைக்க வருது. வந்ததே சரிண்டு, ஒரு வெள்ளரிக்காயில, வச்சு நக்கிளிக்கவும், காயில, ஊண்டி வச்சிருந்த கத்தி, விசுக்குண்டு அறுத்து விட்டிருச்சு. அறுக்கவும், நரி அலறிக்கிட்டு ஓடிருச்சு. குண்டில சலம்புடுச்சிருச்சு. சலம் புடுச்சு வீசுது. நரி, அடிக்கடி அதத் தொட்டு மோந்து பாத்துக்கிறது. இருக்கயில, புண்ணு ஆறிப்போச்சு. ஆறிப் போகவும், நரி மறுபடியும் வெள்ளரிக்காயில குண்டி தொடக்கிற பழக்கத்த செய்ய ஆரம்பிக்குது.

இப்டி இருக்கயில, மானும் – நரியும் செய்யுற வெவசாயத்த விரும்பாத தோட்டக்காரன், சாட்டக் கம்பக் கொண்டு அடுச்சு வெரட்டி விட்டுட்டா.

அடி வாங்கின மானும் – நரியும், ஒரு காட்டுப் பாதயில போயிக்கிட்டிருக்கு. போயிக்கிட்டிருக்கயில, ரெண்டுக்கும் அளவு கடந்த பசி. நரி, மான, திங்கிறதுக்கு பாக்குது. நேரடியா அடுச்சுத் திங்க முடியாது. ஏ...ண்டா, பழகுன தோசம் இருக்குது.

திட்டத்த, நெனச்சுக்கிட்டே போகயில, ரெண்டுக்கும் அளவு கடந்த பசியா இருக்கதுனால ஒரு சின்னக் கல்ல எடுத்து, நரி நடுகண்டு மெண்டுச்சு. மெல்லவும், மானு, நண்பா! என்னத்தத் திங்கறண்டு கேட்டுச்சு. அதுக்கு நரி, நண்பரே! பசி பொறுக்க முடியல, எங்கண்ணுல, ஒண்ணப் புடிங்கித் திண்டேண்டு சொல்லுச்சு. சரிண்ட்டு, மானும், ஒரு கண்ணப் புடுங்கித் திண்டுபிருச்சு.

கொஞ்சத் தூரபோனதும், நரி, எதயோ கொறுக்ண்டு மெண்டுச்சு. மெல்லவும், நரியாரே!! என்னா திங்கிறண்டு மானு கேட்டுச்சு. பசி பொறுக்க முடியல, மிச்சமிருந்த இன்னொரு கண்ணயும் புடுங்கித் திண்டேண்டு சொல்லுச்சு. சொல்லவும், நண்பன் செய்யுறத, நம்மளுஞ் செய்யணும்ண்டு, மிச்சமிருந்த ஒரு கண்ணயும் புடுங்கித் திண்டுபிருச்சு. கண்ணப் பிடுங்கித் திண்டேண்டு நரி பொய்யு சொல்ல, மானு உம்மயாவே புடுங்கித் திண்டுபிருச்சு.

தின்னவும், மானுக்கு இப்பக் கண்ணுத் தெரியல. கண்ணு தெரியலண்டு மானு நரிகிட்டச் சொல்லுச்சு. சொல்லவும், நரிக்கு ரெம்ப சந்தோசம் பொறுக்க முடியல. நரி, நண்பா! பயப்படாம, எம் பின்னாலயே வாண்டு சொல்லுது.

சொல்லவும், நரி பின்னாலயே, மானு போகுது. போகயில, மானக் கொண்டு திங்கணும்ண்டு நரி நெனக்கிது.

நெனச்சுக்கட்டே, ஒரு கெணத்துக்கிட்டக் கூட்டிட்டுப் போகுது. தந்திரமா, மான கெணத்துக்குள்ள விழுக வச்சிருச்சு. எரங்க முடியாமச் சுத்தியும் முத்தியும் பாக்குது.

அப்ப, அங்கிட்டு ஒருத்த் உழுதுகிட்டிருந்தர். நரி, அவங்கிட்டப் போயி, கெணத்துக்குள்ள மானு செத்து மெதக்குதுண்டு சொல்லுச்சு. அவ், ஒழவ நிறுத்திட்டு, ஓடியாந்து, மானத் தூக்கிட்டு மேல வந்தர். ரெண்டுபேருக்கும், சரி பங்குண்டு நரி சொல்லுச்சு. சரிண்டு, மான உரிச்சுக்கிட்டிருக்கயில, ஒரு சப்பயக் கவ்விக்கிட்டு ஓடிப்போச்சு நரி. அவ், மான உரிச்சு உப்புக்கண்டம் போட்டுட்டா.

மறுநா, உழவங்கிட்ட, நரி வந்து, ஒழவனே எனக்கு பசியா இருக்கு, உப்புக்கண்டம் குடுண்டு கேட்டுச்சு. ஒழவ உப்புக் கண்டம் தர முடியாதுண்டு சொல்லிட்டர்.

சொல்லவும், நரி வருத்தத்தோட, அண்ணே! எடது பக்க மாட்டக் கழத்திவிடு, அதுக்கு பதிலா என்னயக் கட்டி உழு, அதுக்குக் கூலியா உப்புக் கண்டம் குடுண்டு கேட்டுச்சு. சரிண்டு, எடத்து மாட்டக் கழத்தி விட்டுட்டு, நரிய ஏருல பூட்டி உழுகுறர். நரியால இழுக்க முடியல. சாட்டய வச்சு, ரெண்டு போடு போட்டர். பல்லுல ரத்தம் வடியுது. உப்புக்கண்டம் ஆசயில, முக்கிக்கிட்டுப் போகுது நரி. ஏர இழுக்க மாட்டாம, இருக்கவும், சாவடி அடிச்சு, ஒடக்குள்ள இழுத்துப் போட்டுட்டர். வலி தாங்கமாட்டாம, மொனங்கிக்கிட்டுப் படுத்துக் கெடக்கு. இங்க இவ் உழுதுகிட்டிருக்கர்.

அப்ப, அங்கிட்டிருந்து ஒரு நரி வந்திச்சு. வந்து நரியண்ணே!! என்னாண்ணே? இங்க படுத்திருக்கண்டு குசலம் விசாரிக்குது. வாயில ரத்தம் வருதே, என்னா விசயம்ண்டு கேட்டுச்சு.

அதுக்கு, அடிபட்ட நரி, அத ஏ்... கேக்குற? நீ கேட்டால் அசந்து போயிருவண்டு சொல்லவும், அப்ப, சொல்லுண்டு கேக்குது, புதுசா வந்த நரி.

அந்தா, உழுகுராரு பாரு, அவரு மான உரிச்சு, உப்புக்கண்டம் போட்டு வச்சிருக்காரு. எடத்து மாட்டக் கழத்தி விட்டுட்டு, என்னயப் பூட்டி உழுதாரு. அதுக்குக் கூலியா, உப்புக்கண்டமும் குடுத்து, ரோசாப் பாக்கு வெத்தலயும் குடுத்தாரு. நல்லா திண்டுட்டு, திண்ட மயக்கத்ல படுத்துக் கெடக்குறேண்டு சொல்லுச்சு.

நா், இந்தக் காடெல்லாஞ் சுத்தினே், ஒண்ணு கூடக் கெடைக்கல்ல. நானும் போயி, உப்புக்கண்டம் வாங்கித் திண்டுட்டு வாறேண்டு சொல்லிட்டு ஒழவ்ங்கிட்டப் போகுது. போ! போ! நொணங்கப் பெத்து, வருவேண்டு நெனச்சுக்கிட்டு, இந்த நரி படுத்துக் கெடக்குது.

ஒழவ்ங்கிட்டப் போயி, அண்ணே! எங்கண்ணே சொன்னாரு. அவரு அங்க படுத்திருக்காரு. வலத்து மாட்டக் கழத்தி விடு, நாஞ் செத்த உழுகிறே். எனக்கு உப்புக்கண்டம் குடுண்டு, புதுசா வந்த நரி சொல்லுச்சு. சரிண்ட்டு, வலத்து மாட்டக் கழத்தி விட்டுட்டு, நரிய ஏர்ல பூட்டுனர். நரியால இழுக்க முடியல. சாவடி அடிச்சு, மொத நரியப் போட்ட எடத்ல தூக்கிப் போட்டுட்டர். வலி தாங்கத் மாட்டாம.

எனக்கென்னா சொன்னவ் பழி குடுப்பாண்டு, ரெண்டாவது அடி பெத்த நரி மொனங்கிச்சு. இப்டி, மொனங்கிக்கிட்டே, ரெண்டு நரியும் செத்துப் போச்சுக.

அப்பாவி, மானுக்குத் தொரகஞ் செஞ்சா, அந்தப் பாவம் விடுமா? இப்ப அடி பெத்துச் சா. துரோகம் என்பது எதிரிக்குக் கூடச் செய்யக் கூடாது.

III. சமய மரபு தழுவிய கதைகள்

1. யாகம்

இந்த ஒலகத்ல, மொதல்ல வந்தது ஈஸ்வரி. மொதல்ல வந்து, ஆண் தொண இல்லாம வாழ்றதுக்கு கஷ்டமா இருந்திச்சு. வனத்ல, கொஞ்ச நா தனியா இருந்து பாத்தா. அவளால தாக்குப் பிடிக்க முடியல.

இயற்கை நல்ல பாடங்குடுத்துச்சு. விலங்குகளெல்லாம் கூட்டங் கூட்டமா, சோடி சோடியா இருந்துச்சு. விலங்குகள், தம் – தம் இனத்தோடு கூடி இன்புற்று வாழ்றதக் கண்ட ஈஸ்வரி, வாய் பேசாத வெலங்குக எவ்வளவு சந்தோசமா இருக்கு. தனிமையில இருக்கோம்ண்டு நெனச்சு, தனக்குத் தொணக்கி மனித உயிர்கள உருவாக்க நெனச்சா.

ஆலங்குச்சி – அரசகுச்சிகளப் பெறக்கி, யாகஞ் செய்ய ஆரம்பிச்சா. அந்த யாகத்தல இருந்து ஒரு ஆண் உருவாகி வெளிய வந்துச்சு. ஈஸ்வரி, யாரப்பா? நிய்யிண்டு கேட்டா. அதுக்கு, அந்த ஆண் என்னம்மாண்டு பதில் சொன்னரி. என்னம்மாண்டு சொன்னதினால, நிய்யி, ஏ – மகீங்ண்டு சொல்லிட்டா.

கொஞ்ச நேரங்கழிச்சு, இன்னொரு ஆண் உருவம் வெளியாச்சு. நிய்யி ஆருண்டு கேட்டா ஈஸ்வரி. அதுக்கு என்ன பெண்ணே – ண்டு பதில் சொல்லுச்சு. என்ன பெண்ணேண்டு சொன்னதுனால எங்கணவன்டு சொன்னா.

இப்டி, ஈஸ்வரி செய்த யாகத்ல மும்மூர்த்திகளும் வி நாயகரும் வெளியானாங்க. இவர்களோட, ஈஸ்வரி சந்தோசமா இருந்தா.

ஒருநா, மும்மூர்த்திகளும் வேட்டக்கிப் போனாங்க. அப்டி, போகும்போது, ஈஸ்வரி வழியனுப்பி வச்சா. வேட்ட விட்டு வீ ட்டுக்கு வரும்போது, எப்பயுமே சிவந்தா் (சிவன்) முன்னால வருவாரு. அண்ணக்கி, பிரம்மா முன்னால வந்துட்டாரு. கணவந்தா் முன்னால வர்ராருண்டு, ஈஸ்வரி பிரம்மாவ கட்டித் தழுவி வரவழச்சா. அப்ப, சிவனுக்கு கோபம் வந்திருச்சு. ஈஸ்வரிய ரெம்ப கோவிச்சு, அடிக்கப் போனாரு. அப்ப, ஈஸ்வரி சொல்லுச்சு, நானென்ன செய்யுறது, ரெண்டு பேருக்கும் அடயாளந் தெரியலண்டு சொல்லுச்சு.

ரெண்டு பேரயும் ஈஸ்வரி அடையாளம் கண்டுகிறதுக்காக, பிரம்மாவோட அஞ்சு தலைகள்ல ஒண்ண கிள்ளினாரு. கிள்ளுன தல, சிவன் கையக் கவ்வி கிருச்சு. எடுத்து – எடுத்துப் பாத்தாரு எடுக்க முடியல.

இதப் பாத்த திருமாலு, பெண்ணுருவம் எடுத்து பிரம்மா முன்னால ஆடுனாரு. ஆட்டத்தப் பாத்திட்டு, பிரம்மா சிரிச்சாரு. சிரிக்கவும் பிரம்மாவோட வாயி விட்டு வெலகிக்கிருச்சு. அப்ப இருந்து, ஈஸ்வரி பிரம்மனயும் – சிவனயும் அடையாளந் தெரிஞ்சுக்கிட்டா.

2. கண்டெடுத்த கர்ணகி

ஒரு ஊர்ல – ஒரு வாணிபச் செட்டியாரு இருந்தாரு. அவருக்கு ரெண்டு மூணு மகங்க. மூத்தவ் கொஞ்சம் தில்லவாரி! கண்டபடி வாந்துகிட்டிருந்தர். கல்யாணத்த முடுச்சு வச்சா, திருந்துவாண்ட்டு, கல்யாணத்த செஞ்சு வச்சாங்க. திருந்தல. கூடப் பெறந்தவங்க மொனங்க ஆரம்பிச்சுட்டாங்க. குடும்பத்ல கோவுச்சுக்கிட்டு புருசனும் – பொஞ்சாதியும் மருதைக்கு வாராங்க.

மருதைக்குள்ள ஆரயுமே தெரியாது. திக்குத் தெரியாம முளுச்சுக்கிட்டு நிக்கிறாங்க. அப்ப, அங்கிட்டிருந்து, கொடப்புடுச்சு ஒரு ஆளு வந்தாரு. வரயில, இந்த வாணிபச்செட்டியாரு மகன், கிட்டப் போயி, ஐயா! இந்த ஊருக்கு நா புதுசு, எனக்கு இந்த ஊர்ல ஒரு வேல வேணும்ண்டு கேட்டாரு. கேக்கவும், அந்தப் புண்ணியவான் இரக்கப்பட்டு, என்னா வேல செய்வேண்டு கேட்டாரு. எண்ணெவிப்பேண்டு சொல்றா. சொல்லவும், பக்கத்துக் கடக்கிக் கூட்டிட்டுப் போயி, இவருக்கு தெனமும் பத்துப்படி எண்ண குடுத்திருங்க. அவரு வித்துட்டு வந்து, எண்ணைக்கான காச ஒங்களுக்குக் குடுத்திட்டு, லாபத்ல அவரு பொளச்சுக்குவாருண்டு சாமியங் குடுத்தாரு. கடக்காரனும் தெனமும் பத்துப்படி எண்ண தரேண்டு சொல்லிட்டா.

அந்தப் படி போயி, பத்துப்படி எண்ணெய வாங்குறது– விக்கிறது, வீட்டுக்கு வர்றதுமா சந்தோசமா, புருசனும், பொண்டாட்டியும் இருக்காங்க. இருக்கயில, ஒருநா, எண்ணெய வாங்கிக்கிட்டு நடந்து போறா. போற வழில, ஒரு காளி கோயிலு இருக்கு. அந்தக் காளி கோயிலு கிட்டப் போகயில, 'அம்மா!! காளீஸ்வரி!! இந்த எண்ணெ சீக்கிரமா வித்துப்

போச்சுண்டா ஒனக்கு வெளக்குப் போடுறே. எங்குல தெய்வமா ஏத்துப்பேண்டு' சொல்லி கும்பிட்டுட்டுப் போறா்.

ஊருக்குள்ள போயும் – போகங்குள்ள, பொம்பளைக கூப்புட்டுக் கூப்புட்டு எண்ணெய வாங்குறாங்க. எண்ணெயும் சீக்கிரமாத் தீந்து போச்சு. திரும்பி வர்ரா். வர்ர வழியில, காளியப் பாத்து, நேந்து கொண்டபடி கதவாலத் தொறந்து, அங்கிட்டு கத்தாளக்குள்ள கெடந்த குளியாஞ்சட்டியத் தேடிப் பெறக்கி எண்ணெய ஊத்தி, வெளக்கேத்தி வரிசயா வைக்கிறா். காளி கோயில்ல வெளக்கு எரியுறதப் பாத்ததும், ஓட்டமா ஓடியாந்து காவக்காரங்க புடுச்சுக்கிட்டாங்க. அடப்பாவி!! யாரு வெளக்கேத்தக் கூடாதுண்டு பாண்டியன் உத்தரவப்பா! உத்தரவ மீறி, நீ வெளக்கேத்தலாமாண்டு புடுச்சுக்கிட்டாங்க. ஐயா! நானு வெளியூரு, எனக்குத் தெரியாதுண்டு சொல்றா. இல்லப்பா, மீறி வெளக்கு வச்சவங்கள, நாங்களா விடக்கூடாது. விட்டாப் பாண்டியன் எங்கள கோவிப்பாரு. வாப்பா! பாண்டியங்கிட்டப் போவோம்ண்டு கூட்டிட்டுப் போறாங்க. 'காளி கோயில்ல வெளக்கேத்தினா, விசாரண இல்லாம வெட்டிப் போடணும்ண்றது பாண்டியன் உத்தரவ்'. காளி கோயில்ல வெளக்குப் போட்டாண்டு சொல்லவும், கொலக்களத்ல கொண்டு போயி வெட்டிப் போடுங்கண்டு, பாண்டியன் சொல்லிட்டு, அந்தப் பொறத்துக்குள்ள போயிட்டா். கொலயாளிக வாணிபச் செட்டியாரு மகன, வெட்டிப் போட்டுட்டாங்க.

"பாண்டியனோட குல தெய்வந்தா் காளி. பாண்டியனுக்கு வாரிசு இல்லாததனால ரொம்ப வருந்தி, மனைவிக்குப் பிள்ளப்பேறு வேணும்ண்டு வேண்டிக்கிட்டா்". நாட்கள் கடந்தனவே தவிர, பிள்ளப் பேறு கிட்டவில்ல. மிகவும் வெறுப்படைந்த பாண்டியன் காளிக்கு வழிபாடு செய்வத நிறுத்திக் கொண்டதுடன், யாரும் வழிபடக் கூடாதுண்டு தட விதித்தா். காளியச் சுற்றி வேலியிட்டா். கதவயும் பூட்டி விட்டா்.

தடயை மீறியதால் வாணிபச் செட்டியாரு மகனுக்கு கொலத் தண்டன கெடைத்தது.

அப்ப, வாணிபச் செட்டியாரு மகன் தங்கி இருக்கிற ஊர்ல, விழாக் கொண்டாடுராங்க. பொண்டாட்டியானவ புருசனோட வரவ எதிர்பாத்துக் காத்துக்கிட்டிருக்கா. வரல, உசுரோட இருந்தாத்தான வருவா. ரெண்டுநா – மூணுநா ஆச்சு வரல. நாளாக – ஆக, கை கால் வீங்கிச் செத்துப் போயிட்டா. வகுத்துக்குள்ள இருந்த பிள்ளயும் செத்துப் போச்சு.

சாகவும், துர்க்கக்கி கோவம் வந்திருச்சு. தன்ன வழிபட்டதுக்காக, வாணிபச் செட்டியாரு மகன கொல செஞ்சிட்டா. அவ் பொண்டாட்டியும் பிள்ளத்தாய்ச்சியா இருந்தாவ, புருசஞ் செத்த ஏக்கத்ல செத்துப் போயிட்டா. பழிக்குப் பழி வாங்கணும்ண்ட்டு துக்கயே, பாண்டியனுக்கு மகளா வந்து பெறக்குறா.

பெறந்தது பொம்பளப் பிள்ள. பெறக்கயிலேயே காலுல செலம்பு, நாக்குல சூலாயுதம் இருந்திச்சு. இதப் பாத்ததும், பாண்டியன் பயந்துபோயி, அரமணச் சோதிடக்காரங்களக் கூப்பிட்டுக் கேட்டா. பாண்டியனே!! இந்தக் கொழந்த பெறந்ததுனால, நமக்கு நசுட்டமே தவிர லாபமில்ல. இந்தக் கொழந்த பெரியவளாகிறபோது, அழுதால் அரமண தீப்பிடிக்கும், சிரிச்சா அரமண இடிஞ்சு விழுகும். வளர வளர வாரிசு இல்லாமப் போயிரும்ண்டு சொல்லிட்டாங்க.

பிள்ள இல்லாட்டியும் பரவாயில்லப்பா. இந்தப் பிள்ள வேணாம்ண்டு, அரமணக் காவக்காரங்களக் கூப்பிட்டு, இந்தப் பிள்ளய எடுத்திட்டுப் போயி, வரட்டாத்துல பொதச்சிட்டு வந்திருங்கண்டு பாண்டியன் சொல்லிட்டா. மன்னன் பேச்ச மீற முடியுமா? அதனால,

அடக்கமாப் பொட்டி செஞ்சு, பொட்டிக்குள்ள வச்சு மூடி, வரட்டாத்துல கொண்டு போயி பொதச்சிட்டாங்க, அப்ப, துர்க்கயம்மா, வருண பகவான வேண்டுறா. எப்டிண்டா: வருண பகவானே!! பாண்டியனப் பழி வாங்கலாம்ண்டு, அவனுக்கு மகளாப் பெறந்தே். என்னயக் கொண்டு வந்து மழ - தண்ணி பெய்யாத எடத்ல பொதச்சு வச்சிட்டா். என்னய மீண்டும் எழுப்புறது, ஒம் பொறுப்புண்டு வேண்டுனா.

துர்க்கயோட வேண்டுதலக் கேட்ட வருண பகவான், மழயாப் பேஞ்சு, எண்ணக்கிமே வெள்ளம் வராத வரட்டாத்ல, அக்கா வெள்ளம் - தங்கச்சி வெள்ளமாப் புறப்பட்டு, பெட்டியக் குத்தி வெளியேத்தி, இழுத்துக்கிட்டு வருது. அந்தச் சமயத்துல, மாசாத்துவானும் - மாநாய்கானும் பழம பேசிக்கிட்டு, ஆத்தங்கர வழியா வாராங்க. வரயில, பொட்டி மெதந்து வர்ரதப் பாக்குறாங்க. மாசாத்துவான், மாநாய்க்கனப் பாத்து, மச்சுனா ஆத்துல பொட்டி ஒண்ணு மெதந்து வருதுண்டு சொல்றாரு. அப்ப, மாநாய்க்கன், மச்சுனா!! பொட்டிக்குள்ள இருக்கது என்னதுண்டு சொல்றாரு. சொல்லிக்கிட்டிருக்கயில, பொட்டி கிட்டத்ல வந்திருச்சு. எடுத்துப் பாத்தாங்க. பொண் கொழந்த. கொழந்தய மாநாய்கன் தூக்கி வச்சுக்கிட்டாரு. மச்சுனா! இண்ணக்கி சொல்லுறதா். இதுதா் பொண்ணு. உம் பையந்தா் மாப்பிள்ளண்டு. ரெண்டு பேரும் பேசிக்கிட்டு, கண்டெடுத்த கர்ணகிண்டு பேரு வச்சு, பேசி சிரிச்சுக்கிட்டுப் போறாங்க.

துர்க்கா, பாண்டியனுக்கு மகளாப் பெறக்கயில, கொல செய்யப்பட்ட வாணிபச் செட்டியாரு மகன், மாசாத்துவானுக்கு மகனாப் பெறந்து வளர்ரா். அவனோட மனைவி, திருக்கடயூர், தேரோடும் வீதி இருபத்திரெண்டாம் நம்பர் வீட்ல மாதவியாப் பெறந்து வளர்ரா. அவளோட வகுத்தப் பிள்ள, மாதவி கை மாலயா வெளங்குறா.

மாசாத்துவன் மகன் கோவலனுக்கும், மாநாய்க்கன் மகள் கண்டெடுத்த கர்ணகிக்கும், கல்யாண பேசுறாங்க. கோவலனுக்கும் கண்டெடுத்த கர்ணகிக்கும் கல்யாணஞ் சிறோடுஞ் சிறப்போடும் எல்லாரும் மெச்சும்படி கல்யாணம் நடக்குது.

கல்யாணம் முடுஞ்சு காலைல மாநாய்கன் செட்டியாரு, ஆத்துப் பக்கம் போறாரு. போகயில, அங்கிட்டு ரெண்டு பேரு பேசிக்கிட்டிருக்காங்க. எப்டி பேசுறாங்கண்டா: என்னடா கல்யாண முடிச்சாங்க. பெரிய பணக்காரங்க. ஆட்டம் பாட்டு எதுவுமே இல்லயே! அவங்க குடுத்த, அந்த விருந்த நம்ம குடுக்க மாட்டமா? பணக்காரங்கண்டுதா பேரு, என்னத்த செஞ்சுபிட்டாங்கண்டு பேசுனாங்க.

இதக் கேட்ட மாநாய்க்கன், நேரா வீட்டுக்குப் போனாரு. போயி, மாசாத்துவாங்கிட்டச் சொன்னாரு. சொல்லவும், அவருக்கு கோவம் வந்திருச்சு. நம்மளப் பாத்து இப்டி பேசிப்பிட்டாங்களாண்ட்டு, மொத்தமா ஒக்காந்து பேசுறாங்க. பேசயில, இந்த ஒலகத்ல செய்யாத அளவுக்கு செய்யணும்ண்டு, நல்லா ஆடுறவ எங்க இருக்காண்டு மாசாத்துவான் கேட்டாரு. அதுல ஒருத்தரு சொன்னாரு. "கும்பகோணம் தாசியக் கொண்டு வந்தா கொணமா ஆடுவா. மாயவரந் தாசியக் கொண்டுவந்தா மயக்க – மயக்க ஆடுவா ஆனா, இப்ப மருதையில திருக்கடயூர், தேரோடும் வீதி, இருபத்திரெண்டாம் நம்பர் வீட்ல, மாதவிங்கிற தாசி இருக்கா. அவளக்கொண்டு வந்தா, சிறப்பா ஆடுவாண்டு சொன்னாரு".

இதக் கேட்டதும், மாசாத்துவான் செட்டியாரு நேரா மருதைக்குப் புறப்பட்டு போனாரு. போயி, மாதவி வீட்டக் கண்டுபுடிச்சு, எங்க வீட்டுக் கல்யாணத்துல ஆடவரணும்ண்டு கேட்டாரு. அப்ப மாதவி சொல்றா, நா ஆட வர்றே. ஆனா ஒண்ணு, எங்கையில இருக்கிற மாலய வீசி எறிவே, அது போயி

ஆரு கழுத்ல விழுகுதோ, அவரு எங்கூட வரணும்ண்டு சொன்னா. மாசாத்துவானும் சரித்தேண்டு சொல்லிட்டாரு.

மாதவியும் வர்ரா. கோவலனும் – கண்டெடுத்த கர்ணகியும் பாத்து ரசிக்கும்படி, கலைக்கி நாந்தா் பெறந்தேங்கிறதப் போல மாதவி ஆடுறா.

ஆடிக்கிட்டிருக்கும்போது, தங் கழுத்துல கெடக்குற மாலயக் கழத்தி, வீசி எறிஞ்சா. அது ஆட்டம் பாத்துக்கிட்டிருந்த கோவலப் பெருமாளு கழுத்துல போயி விழுந்திச்சு. மால விழுகவும், கோவலன, மாதவி, கூட வரும்படி கூப்பிடுறா. அப்ப, அங்க இருந்தவங்களெல்லாம் என்ன சொல்றாங்கண்டா” நீயோ நட்டுவச்சி, அவனோ வாணிபச் செட்டியாரு, எப்டியம்மா ஒங்கூட அனுப்புறது? எவ்வளவு பணம் வேணும்ணடாலும் வாங்கிக்கண்டு சொல்றாங்க.

மாதவி கேக்கமாட்டேங்குறா. “கோவலன எங்கூட அனுப்புங்க. இல்லேண்டா, அவங் கழுத்துல கெடக்குகுற மாலயக் கழத்திக் குடுத்திறுங்கண்டு” சொல்றா.

அப்ப,மாதவிக்கு எடுபிடி வேல செய்யிற ‘டாப்பர் மாமா’, “ஏம்மா! மாதவி!! எதுக்கு கசுட்டப்படுற, மலயாளத்து மைய எடுத்து, தாம்பூலத்துல தடவிக் குடும்மா. கோவலரு தானாக வந்திருவாருண்டு” சொல்றா். யாரு? டாப்பர் மாமா.

மாசாத்துவாஞ் செட்டியாரு கெஞ்சுறாரு. எவ்வளவு பணம் வேணும்ணடாலும் தரேன். எஞ் சொத்துப் பூராத்தயும் தரேண்டு சொல்றாரு. சொத்தும் வேணாம், சொகமும் வேணாம். நா் குடுக்குற தாம்பூலத்தப் போட்டாப் போதும். நா் போறேண்டு மாதவி சொல்றா.

வெத்தலதான போடச் சொல்றாண்ட்டு, வெத்தலய வாங்கிக் குடுத்தாங்க. கோவலரு போட்டாரு. மயங்கிப்போயிட்டாரு.

மயங்கிப் போயிறவும், ஏழு ரூம்புக்கு, அங்கிட்டு இருக்ற ஏழாவது ரூம்புக்குள்ள போட்டு அடச்சு வச்சுட்டாங்க.

மயக்கம் தெளிஞ்சு, மாதவியைத் தேடிக்கிட்டு மருதைக்குப் போறா். வீதி வழியாப் போகயில, திருக்கடயூர், தேரோடும் வீதி, இருப்பத்திரெண்டாம் நம்பர் வீடு, பொன்னிங்கிற தாசிக்குப் பெறந்த மாதவி வீடு இதுதானாண்டு கேட்டா். இதுதாண்டு சொன்னாங்க. சொல்லவும், கோவலரு உள்ள போனாரு. அங்க 'பாப்பர் மாமா' இருக்கா். கோவலா!! வாப்பா! இப்பத்தா் வழி தெரிஞ்சதா? அம்மா மாதவி! கோவலரு வந்துட்டாரும்மாண்டு மாதவியக் கூப்பிட்டுச் சொல்றா்.

மாதவி வெளிய வாரா. வந்து, கோவலரு முன்னால ஆடுறா. பாடுறா. ஆட்டத்திலும் – பாட்டத்திலும் கோவலன் மயங்கிப் போயிட்டா். அந்த மயக்கத்துல அங்கயே தங்கிப்போயிட்டா்.

கொஞ்ச நாளாச்சு. பணம் வேணும்ண்டு மாதவி கேட்டா. கேக்கவும் தந்தைக்கு கோவலன் லிகிதம் எழுதுறா். எப்டி எழுதுறா்: "எனக்கு ஒரு கப்பல் நெறயா பணம் அனுப்பணும் இல்லயெனில் செத்து மடிவே – ண்டு எழுதுறா்.

லிகிதத்தப் பாத்து, அப்பப்பா! ஒத்த மகந்தான எனக்கு, அவ் எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்ண்ட்டு, ஒரு கப்பல் நெறயா பணத்த அனுப்புனாரு. அப்ப, கா்ணகிக்குப் பதினாறு வயசு ஆகுது.

ஒருநா, நந்தவனத்துல பூப் பறிச்சுக்கிட்டிருக்கயில, எங் கழுத்துல தாலி கெடக்கே. புருச் எங்கேண்டு தோழிகிட்டக் கா்ணகி கேட்டா.

இல்லேம்மா, ஓம் புருச் கோவலரு, ஒங்க கழுத்துல தாலி கட்டின நாளிலிருந்து, மருதயில மாதவி கிட்ட இருக்காருண்டு சொன்னாங்க.

அவர வரவக்கிறதுக்கு என்னா செய்யணும்ண்டு கர்ணகி கேக்குறா. கேக்கவும், ஒரே வழிதாம்மா இருக்கு. "கோவலன் மனைவி கர்ணகி, நந்தவனத்ல, பூப் பறிக்கயில, பாம்பு கடிச்சுச் செத்துப் போயிட்டாண்டு லிகிதம் எழுதம்மாண்டு" சொல்றாங்க.

அப்டியே கர்ணகியும் எழுதிட்டா. லிகிதத்தப் பாத்தவுடனே கோவலன் புறப்படுறா. மாதவி, போக விட மாட்டேங்குறா.

உன்னப் போல தங்கத்ல செல செஞ்சு வச்சிட்டுப் போண்டு சொல்றா. என்னப் போல தங்கச் செலக்கி எங்க போறதுண்டு சொல்றாரு. மாதவி போக விட மாட்டேங்குறா. போக விடாம இருக்கயில, கர்ணகிய நெனச்சு,

வஞ்சக மில்லாதவளே, அம்மா!

மாநாய்க்கன் செட்டியார் மகளே!!

வஞ்சகமில்லாத இந்த வேளயிலே

வந்து காக்கவேண்டும் என்னயே – ண்டு

பாட்டுப் பாடுனாரு. பாடவும் ஒரு தங்கச் செல வந்திச்சு. அதக் கொண்டு போயிக் குடுத்தாரு. அத வாங்கி வச்சுக்கிட்டு.

கோவலரே! செல மட்டும் போதாது. அந்தச் செல பேசணும்ண்டு மாதவி சொல்றா. கர்ணகிய நெனச்சா. செல பேசுச்சு. பேசவும், கோவலனப் போகச் சொல்லுறா.

வேகமா வெளியேறிப் போறாரு. போகயில, கர்ணகி நெனக்கிறா. தன்னப் போல செல செஞ்சு வச்சிட்டு வாராரோண்டு ஞானத்ல பாக்குறா கர்ணகி. ஒடனே, செல தீப்புடிச்சி எறிஞ்சு போச்சு.

மாதவி, டாப்பர் மாமாகிட்ட வந்து, கோவலன் வச்சிட்டுப் போன செல, தீப்பிடிச்சு எரிஞ்சு போச்சுண்டு சொல்றா.

அப்ப: டாப்பர் மாமா, கோவலன் ஊருக்குள்ள போறதுக்குள்ள கூப்பிட்டு வரணும் "பூப் பறிக்கயில, பூ நாகந் தீண்டி மாதவி இறந்துவிட்டாண்டு லிகிதம் எழுதம்மாண்டு சொல்றா். ஒரு எளந்தாரிப் பயகிட்டக் குடுத்து, கோவலங்கிட்டச் சேக்குறதுக்கு வழி சொல்றா். அவ, சொன்ன மாதிரி லிகிதம் எழுதிக் குடுத்தா. ஒரு எளந்தாரி, அதக் கொண்டுகிட்டு வேகமா ஓடி, கோவலன எடயில புடுச்சு லிகிதத்தக் குடுத்தா்.

குடுக்கவும், கோவலனுக்கு அங்கிட்டுப் போக மனசில்ல. திரும்பி வா்றா். வீட்டுல வந்து பாத்தா், மாதவி படுத்துக் கெடக்கா. மாதவி!! நீ, பூ நாகந் தீண்டி செத்து போனதாக லிகிதம் வந்திருக்கேண்டு சொன்னா். சொல்லவும் ஆமா! நாந்தா் எழுதினே. நீ வச்சிட்டுப் போன செல இருக்காண்டு பாரு. இல்ல. தீப்புடிச்ச எறிஞ்சு போச்சு. அதா் திருப்பிக் கூட்டிட்டு வரச் சொன்னேண்டு சொல்றா.

மனைவி இறந்துகூட, சண்டாளன் வரலயேண்டு எஞ்சாதி சனம் சொல்லும். பேருக்கு மட்டும் போயிட்டு வா்ரே. திரும்பி வந்து, உன் காலுக்கடியிலே கெடக்குறேண்டு கோவலன் சொன்னா்.

நீ போகக்கூடாது. அப்டிப் போகணும்ண்டா, பதினாறாயிரம் பொன்ன இப்பவே வைக்கணும் பட்டுப் பீதாம்பரங்கள அவுத்துப் போட்டுட்டு, ஆத்தி நாரக் கோவணமா கட்டிக்கிட்டுதா், போகணும்ண்டு சொல்லிட்டா.

சரிண்டு சொல்லிட்டு, வீட்டுக்கு வாரா். வ்ரவும், ஓடியாந்து கோவலன, கா்ணகி வாங்கண்டு சொல்றா.

மாதவி கிட்ட கடன்பட்டு வந்திருக்கே. பதினாராயிரம் பொன் குடுக்கணும் எங்கிட்ட பதினாராயிரம் பொன் இல்லண்டு சொல்றா்.

அம்மா கர்ணகி தன் காற்சிலம்ப வித்து, அந்த பதினாராயிரம் பொன்ன மாதவிக்குக் குடுத்திட்டு வந்திருங்கண்டு சொல்றா.

சொல்லவும், செலம்ப வாங்கிக்கிட்டு, விக்க மருதைக்குப் போறா். அப்ப, கர்ணகியும் கூட வரேண்டு சொல்றா. சரிண்ட்டு கட்டுச் சாதங் கட்டிக்கிட்டு, ரெண்டு பேரும் மருதைக்கு வாராங்க.

மருதயில, கர்ணகிய, மொட்டப் பெராமணத்தி வீட்ல அடைக்கலங் குடுத்திட்டு, செலம்ப எடுத்துக்கிட்டு, மருதைக்குள்ள போறா். போகயில, ஒங்களுக்கு ஏதாவது ஆபத்துண்டா தெரியுறதுக்கு அடயாளம் வேணும்ண்டு கேக்குறா. கேக்கவும் திண்டா மணி விளக்கு, செம்பு நெறயா ஜலம், மல்லிகப் பூ, தேங்கா இந்த நாலயும் குடுக்கிறா். குடுத்திட்டு, எனக்கு ஆபத்துண்டா, திண்டா மணி வெளக்கு அணஞ்சு போகும். செம்பு ஜலம் வத்திப் போகும். மல்லிகப் பூ வாடிப் போகும். தேங்க அழுகிப் போகும்ண்டு சொல்லிட்டுப் போறா்.

மருத வீதியில செலம்போ! செலம்புண்டு சத்தம் போட்டுக்கிட்டு போறா். வஞ்சிப் பொத்தன் மகன் ஒடியாந்து, அப்பா! அப்பா! யாரோ ஒரு ஆளு, செலம்பு வித்துக்கிட்டு வாராம்ப்பாண்டு சொல்றா்.

பாண்டிமா தேவிக்கு செஞ்ச கால் செலம்பத் தொலச்சிட்டு நாளக்கி சாகப் போறோமேண்டு படுத்துக் கெடக்குறா் வஞ்சிப் பொத்தன்.

பாண்டியன் ஆணைப்படி, அழகான செலம்பொன்று செஞ்சு, எசக்கி – எச முத்துக்களப் பதிச்சு, சூரிய வெளிச்சத்துக்காக அவரப் பந்தல்ல வச்சிருக்கா. ஒரு கருடன் அந்தச் செலம்பத் தூக்கிட்டுப் போயி, கூட்டுல வச்சுக்கிருச்சு.

ஏ...ண்டா, வஞ்சிப்பத்தன் வீட்டு வாசல்ல, ஒரு வில்ல மரம் இருந்திச்சு. அந்த வில்ல மரத்ல, ஒரு கருடன், கூடுகட்டி குஞ்சு பொறிச்சிருந்திச்சு. அந்தக் குஞ்சுகள, இந்த வஞ்சிப்பத்தனோட மகன் எடுத்துக், காலுல கயத்தக் கட்டி அங்கிட்டும் – இங்கிட்டும் இழுத்து வெள்ளாடவும் கடசில குஞ்சு செத்துப் போச்சு. அதத் தூக்கிக் குப்பமேட்ல போட்டுட்டர். கருடன் வந்து பாத்துச்சு. குப்பமேட்டுல செத்துக் கெடக்குதுக. ஆகா! படுபாவிப்பய! நம்ம பிள்ளைகள இப்டிச் சாகடிச்சுட்டானே. இவன பழிக்குப் பழி வாங்கணும்ண்டு நெனச்சுக்கிட்டிருக்கயில, வஞ்சிப்பத்தன், செலம்புகள சூரிய ஒளிக்காக அவரப்பந்தல்ல கொண்டு வந்து வச்சர். இதர் சமயம்ண்டு, ரெண்டு செலம்பயும் எடுத்துட்டுப் போயி, கூட்டுல வச்சுக்கிருச்சு. பாண்டியங்கிட்ட செலம்பங் குடுக்க முடியல. குடுக்க முடியாததுனால பாண்டியன், சிரச்சேதஞ் செய்ய உத்தரவிட்டுட்டர். விடிஞ்சா வெட்டப் போறாங்க. அந்த வருத்தத்துல படுத்துக் கெடக்கர்.

அந்தச் சமயத்ல, கோவலன் வீதி வழியா செலம்போ செலம்புண்டு சத்தம் போட்டுக்கிட்டு, வரதுக்கும் வஞ்சிப்பத்தன் மகெ வந்து சொல்றதுக்கும் சரியா இருந்திச்சு.

மகெ சொல்லவும், வஞ்சிப்பத்தன் வெளிய எந்திருச்சு வந்தர். அப்ப கோவலன், செலம்பக் கையில புடுச்சு வர்ரர்.

அப்ப: வஞ்சிப்பத்தன், கோவலன் முன்னால வந்து, ஐயா! எந்த ஊரு? என்ன வம்சம்? இந்த வெயில்ல, வெல மதிக்க முடியாத செலம்பக் கையில புடுச்சு வித்து வாரங்கண்டு கேட்டர்.

அதுக்குக் கோவலன், நா் காவிரிப்பூம்பட்டிணம். எம் பேரு கோவலப் பெருமாளு. மாசாத்துவாஞ் செட்டியாரோட ஒரே மகி. இது, ஏ.. மனைவியோட செலம்பு. இத விக்கிறதுக்கு மருதைக்கி வந்திருக்கேண்டு சொல்றா்.

அடடா! மாசாத்துவாஞ் செட்டியாரு மகனா நீங்க. ஒங்க பாட்டனும் – எங்க பாட்டனும் எவ்வளவு சினேகிதருங்க. அதோட அவங்க சினேகிதம் நிண்டு போகல. ஒங்கள, எங்கிட்டக் கொண்டு வந்து சேத்திருக்கு. நமக்குள்ள எவ்வளவு ஒத்தும பாத்திங்களாண்டு, வாய்க்கு வந்தபடி புகழுறா்.

புகழ்ந்திட்டு, இந்தச் செலம்ப, குடிமக்க வாங்க முடியுமா? அரமணப் பாண்டியந்தான் வாங்க முடியும். எங்க கூட வாங்க, பாண்டியங்கிட்டச் சொல்லி, வித்துத் தாரேண்டு சொன்னா்.

கோவலப் பெருமாளு சரிண்ட்டாரு. அரமணக்கிக் கூட்டிக்கிட்டுப் போறா். வாசப்படில ஒக்கார வச்சிட்டு, நா் கூப்பிட்டாத்தான் வரணும்ண்ட்டு உள்ள போயிட்டா். யாரு? வஞ்சிப்பத்தன்.

பாண்டியங்கிட்டப் போயி, அரசே! அரசிக்கு செஞ்ச செலம்ப திருடினவனக் கையுங் களவுமா பிடிச்சுக் கொண்டு வந்திருக்கே். நீங்க பாத்து அவனுக்கு என்ன தண்டன குடுக்க முடியுமோ குடுங்க அரசேண்டு தாந் தப்பிக்றதுக்காகப் பாசாங்கு பண்ணிப் பேசுறா்.

முங்கோபக்காரப் பாண்டியன், கோவலப் பெருமாள கொண்டு வரச்சொன்னா். கோவலப் பெருமாளக் கூட்டிட்டுப் போயி, குற்றவாளிக் கூட்டுல நிறுத்தி விசாரிக்குறாங்க.

விசாரிக்கயில, அரசே! திருட்டுங்கறது எங்க பரம்பரயில கூட இல்ல. இது ஏ...ம் மனைவியோட செலம்பு. விக்கிறதுக்கு வந்தேண்டு கோவலப் பெருமாளு சொல்றாரு. சொல்றதக்

கேக்காம, செலம்ப வாங்கிக்கிட்டு, இவனக் கொண்டுபோயி கொலக் களத்துல வெட்டிப் போடுங்கண்டு சொல்லிட்டாரு.

அப்ப, ஒரு மந்திரி, அரசே! நம்ம ஆச்சி செய்ற தர்ம நீதி அழிஞ்சு போகக்கூடாது. எப்பவும், நம்ம குத்தங் கண்டுபிடிக்க என்னா செய்வோமோ, அது மாதிரி முக்குறுணி நெய்ய நல்லாக் காச்சி, அதுக்குள்ள செலம்பப் போட்டு, கைய விட்டு எடுத்துத் தரச் சொல்லுவோம்ண்டு சொல்றாரு.

அப்டித்தர் முக்குறுணி நெய்யக் காய வச்சாங்க. அதுக்குள்ள அந்தச் செலம்பப் போட்டாங்க. போட்டுட்டு, கைய விட்டு எடுத்துத் தரச் சொன்னாங்க. அப்ப, கோவலன் பயப்படல, பயப்படாம மனவிய நெனச்சு, இப்டிப் பாடுறர்,

வஞ்சகம் இல்லாதவளே, அம்மா!!
மாநாய்க்கான் செட்டியார் மகளே!!
வஞ்சகமில்லாத என்னை இந்த வஞ்சிப்பத்தன்
வஞ்சித்தானம்மா
வந்து காக்க வேணும் இந்த வேளை – ண்டு

பாடிட்டு, நெய்யுக்குள்ள கைய விட்டு எடுத்துக் குடுத்திட்டர்.

அப்ப வஞ்சிப்பத்தன், அரசே!! அக்கினிக்கட்டு கட்டுற வம்சம் அரசே!! இவ் அக்கினிக்கட்டு கட்டித்தர் நெய்யுக்குள்ள கைய விட்டு, அவனால எடுக்க முடிஞ்சது. இத நம்பக் கூடாதுண்டு சொல்றர்.

சரிண்ட்டு, நம்ம பதினாறடி வேங்கயப் பட்டினியாப் போட்டு, அது முன்னால செலம்பப் போட்டு எடுத்துத்தரச் சொல்லலாம்ண்டு, இன்னொருத்தரு சொன்னாரு.

சொல்லவும், பதினாறடி வேங்கயக் கொண்டு வந்து நிறுத்துனாங்க. முன்னால செலம்பப் போட்டாங்க. தன் மனவிய நெனச்சுக்கிட்டுப் போயி, எடுத்திட்டு வந்து குடுத்திட்டர்.

அரசே!! இத உம்மண்டு நெனச்சுறாதிங்க. பறக்கப்பட்ட பன்னீராயிரத்துக்கும், எரக்கப்பட்ட எண்ணாயிரத்துக்கும் வாய்க்கட்டுக் கட்டுவான் அரசே! புலிக்கு வாய்க்கட்டு கட்டித்தான் எடுத்திருக்க முடியும். இத நம்பக் கூடாதுண்டு வஞ்சிப்பத்த் சொல்றா்.

பெறகென்னா செய்யலாம்ண்டு பாண்டியங் கேக்குறா். கேக்கவும், நம்ம அரமணச் சர்ப்பம் முன்னால செலம்பப் போட்டு, எடுத்து தரச் சொல்வோம்ண்டு வஞ்சிப்பத்தன் சொன்னா். அதுவும் சரித்தேண்ட்டு சர்ப்பங்கிட்டப் போறாங்க. போகயில, சர்ப்பம் பயங்கரமா படமெடுத்துக்கிட்டிருக்கு. அப்ப, அது முன்னால செலம்பப் போட்டாங்க. போட்டுட்டு, கோவலப் பெருமாள, போயி எடுத்திட்டு வரச் சொன்னாங்க.

மனவிய நெனச்சுக்கிட்டு, கருநாகத்துக்கிட்டப் போனா். கருநாகம் அப்டியே பொட்டிப் பாம்பா சுருண்டுகிருச்சு. ஒண்ணுஞ் செய்யல. கைய விட்டுச் செலம்ப எடுத்துக்கிட்டு வந்து குடுத்திட்டா்.

குடுக்ககவும், வஞ்சிப்பத்தன் அலறுறா். அரசே!! நாகதாளி வேரக் கையில வச்சுக்கிட்டு, கருநாகத்த மயக்கிப்பிட்டான் அரசே! இதுவும் பொய்தானரசே! இத நம்பக் கூடாது. பயங்கரமான திருட்டுக் கும்பலச் சேந்தவனரசேண்டு வஞ்சிப்பொத்தன் வாய் கூசாமச் சொல்றா்.

அப்டிச் சொல்லவும், அரசன் வஞ்சிப்பத்தன் பேச்சுக்கு மதிப்பு குடுக்குறா்.

கடசில நிய்யி எப்டிப்பட்ட ஆளா இருந்தா மருதயிலயே செலம்பத் திருடி, மருத வீதியிலேயே வெல கூறி வந்திருப்ப. உன்னயச் சும்மாவிட மாட்டோம்ண்டு சொல்லிட்டு, ஏவலர்களுக்குக் கட்டளயிட்டா். ஏவலர்களே!! இவனக் கொண்டுபோயி கொலக்களத்ல வச்சு, சிரச்சேதம் செய்யச் சொல்லிட்டா.

காவலாளிங்க புடுச்சுட்டுப் போறாங்க. புடிச்சுட்டுப் போயி, கொலக்களத்ல வச்சு வெட்டிப் போட்டாங்க. வெட்டிப் போடவும், கர்ணகிகிட்ட குடுத்திருந்த அடயாளங்க தெரியுது. எப்டிண்டா:

"திண்டா மணிவெளக்கு அணஞ்சு போச்சு
செம்புல இருந்த ஜலம் வத்திப் போச்சு
மல்லிகப் பூ வாடிப் போச்சு
தேங்கா அழுகிப் போச்சு"

குடுத்த அடயாளக் குறி, கோவலன் சொன்னது மாதிரி ஆகவும், அம்மா கர்ணகிக்கு, தங் கணவனுக்கு ஆபத்ண்டு தெரிஞ்சு போச்சு.

இப்பவே போயி, கணவனப் பாக்கணும்ண்டு வெளியேறுறா. அப்ப, மொட்டப் பிராமணத்தி வேண்டாம்மா, மருதயோ போக்கிரிப் பய ஊரு, தனியாப் போறது ஆபத்துமாண்டு, மொட்டப் பாப்பாத்தி சொல்றா. சொல்லவும்,

இல்ல – நா் போயி, இப்பவே பாக்கணும்ங்றா. பாத்தே ஆகணும்ண்ட்டு வெளியேறித் தெருவுல மளமளண்டு நடந்து போறா. தெருவுல போகயில, ஆளுங்க பேசுறது கர்ணகிக்குக் கேக்குது. என்னா பேசுறாங்கண்டா: "யாரோ ஒருத்தன், பாண்டிமாதேவிக்குச் செஞ்சு வச்ச செலம்பக் கழவாண்டுபிட்டானாம். களவாண்டதுக்காக, இப்பத்தான் கொண்டுபோயி, வெட்டி எறிஞ்சிட்டு வாராங்கண்டு பேசுறாங்க.

அழுது பொலம்பிக்கிட்டு கொலக்களத்துக்கு வாரா. வந்து பாக்கயில, கோவலப் பெருமாளு வெட்டப்பட்டுக் கெடக்குறா். அப்ப, கர்ணகி நெனச்சுப் பாத்தா. அடடா! போன பெறப்பில வெட்டுப்பட்டு இறந்திருக்கா். எனக்கு பெயருக்குத்தா் கணவன். ஆனா மாதவிக்குத்தான் நீ உம்மயான கணவன்டு சொல்லிக்கிட்டே, தங்க ஊசில வெள்ளி நூலக் கோத்து, தலயத் தச்சு எழுப்பினா.

கோவலன் எந்திருக்கும்போது, மாதவிண்டா மடிமேல வா. கர்ணகிண்டா தூரப் போயிருண்டு சொல்லிக்கிட்டே எந்திரிச்சாரு. அம்மா கர்ணகி ஒதுங்கிக்கிருச்சு. பாண்டியன சும்மா விடக்கூடாதுண்ட்டு நேரா அரமணய நோக்கி நீதி கேக்கணும்ண்ட்டு அரமணக்கி வர்ரா. வர்ரயில, காவக்காரங்க தடுக்குறாங்க. விசும்பிட்டு உள்ள போயிட்டா.

உள்ள போகவும், பாண்டியன் பாத்திட்டு, ஆடு தூக்குற கள்ளனுக்கு, ஆக்கி வக்கிற கள்ளி மாதிரி வர்றியே, நீ ஆருண்டு கேக்குறாரு.

எங் கணவன கள்ளண்டு சொல்லி, சிரச்சேதம் செஞ்சயே, அதுக்கு நீதி கேட்டு வந்திருக்கேண்டு சொல்றா.

சொல்லிக்கிட்டே, தங் கையிலுள்ள செலம்பக் காட்டி, இது என்னோட செலம்பு, மாணிக்கத்தாலானதுண்டு சொன்னா. சொல்லவும், பாண்டியன் என்னோட செலம்புல இருக்றது அத்தனயும் முத்துண்டு சொன்னா். சொல்லிட்டு, செலம்பக் கொண்டுட்டு வாங்கண்டு சொன்னா். கொண்டுட்டு வந்தாங்க.

கர்ணகி, செலம்ப எடுத்து ஒடச்சா. ஒடைக்கவும் வைரமும் வைடூரியமும் செதறி ஓடுது. வஞ்சிப்பத்தன் செஞ்ச செலம்பக் கொண்டு வரச் சொல்லி, கருடங்கிட்டச் சொன்னா. கருடன் செலம்புகளக் கொண்டுவந்து போட்டுச்சு. போடவும், கர்ணகிக்கு அளவு கடந்த கோவம் வந்திருச்சு. வந்த கோவத்துல,

நீ அரசனா? உனக்கு ஏ....ஞ் செங்கோல்ண்டு பாண்டியனப் பாத்துக் கேட்டா. பாண்டியனும் தல குனுஞ்சிட்டா். பெருமழ பேஞ்சு, வெள்ளக்காடாகி மருதயே அழியுது. அழியயில,

சிவன் பாத்தாரு. சத்திய, சமாதானப்படுத்தி, தன்னோடு சிவ பார்வதி இணயவும் மழ நிண்டு போச்சு. வெள்ளம் வத்திப் போச்சு. மக்க நல்லா இருந்தாங்களாம்.

3. பிள்ளைக் கறி

ஒரு ஊர்ல – திருத்தண்டனும், அவ் பொண்டாட்டியும் வாந்தாங்க. எண்ணைக்கிமே பொய் சொல்லாம, செவ பக்தியோட ரெண்டு பேரும் இருந்தாங்க. தெனோமும் –, ஒரு பரதேசிக்கு அன்னதானம் போடாமச் சாப்பிடுறதில்ல. இப்டி நடந்து வரயில, ஒருநா, கடவுளே!! இவங்களச் சோதிக்க நெனச்சு, பண்டாரம் பரதேசிகள இவங்க வீட்டுக்குப் போக விடுறாரு.

அண்ணக்கிப் பாத்து, எந்தப் பண்டாரம் பரதேசியும் இவங்க வீட்டுக்கு வரல. திருத்தண்டன் பொண்டாட்டி, சோத்த ஆக்கி வச்சுட்டு ரெண்டு பேரும் வெளியெலாந் தேடுராங்க. பண்டாரம் பரதேசியக் காணமே காணம். ஊருக்குத் தெக்க, திருத்தண்டன் போயி ஒக்காந்து, பண்டாரம் பரதேசியப் பாத்துக்கிட்டு ஒக்காந்துகிட்டு இருக்காரு. எங்கிட்டுண்டாலும் வரமாட்டாங்களாண்டு தெக்கயும் – வடக்கயும் பாத்துக்கிட்டிருக்காரு.

அப்ப, அந்த வழியா, கடவுளே, சாமியாரு வேசம் போட்டு வாராரு. கடவுளு, நம்ம பரமசிவந்தே. வரவும், திருத்தண்டனுக்கு உள்ளூர சந்தோசம் பொறுக்க முடியல. ஒடிப் போயி, காலுல நெடுஞ்சாணா விழுந்து, சாமி!! எங்க வீட்டுக்குச் சாப்பிட வரணும்ண்டு கூப்புடுறாரு.

கூப்புடயில, சாமியாரு, பக்தா!! நாஞ் சாப்பிடுறத ஒன்னால தர முடியாது. நீ போப்பாண்டு சொல்லிட்டு நடக்க ஆரம்பிச்சாரு.

சாமி!! பதினாறு வகக் காய்கறியோட சமச்சு வச்சிருக்கே. கண்டிப்பா, இண்ணக்கி நீங்க வகுறாரச் சாப்பிடணும்ண்டு விடாமச் சொல்றா்.

சொல்லவும், சரி! சாப்டுறே. ஆனா, எனக்கு வேண்டியது மாமிசம். காய்கறி இல்ல. அதுவும் நர மாமிசம். அதுவும், ஆணா இருக்கணும். அஞ்சு வயசுப் பையனா இருக்கணும். ஒன்னால இதத்தர முடியுமாண்டு கேட்டாரு. மனசுக்குள்ள பயம்,இருந்தாலும் சரிண்டு சொல்றா். சாமிய விடுறதுக்கு மனசு இல்ல. விடுஞ்செந்திருச்சா ஒரு சாமிக்காவது அன்னதானம் போட்டாகணும். போட்டாத்தான் இவங்க ரெண்டு பேரும் சாப்ட முடியும். சாமியாருகிட்ட சரிண்டு சொல்லிட்டு, ஒசுக்சுக்கிட்டே நேரா வீட்டுக்கு வாரா். வர்ர போதே எல்லாத் தெய்வத்தயும் வேண்டிக்கிட்டே வாரா். எப்டிண்டா: சாமி!! ஏ.. மனசப் போல, எம் பொண்டாட்டி மனசும் இதுக்குச் சம்மதிக்கணும்ண்டு பொலம்பிக்கிட்டே வீட்டுக்கு வாரா்.

அப்ப, திருத்தண்டன் பொண்டாட்டி, வாசல்ல நிண்டு புருச் வாரதப் பாத்துக்கிட்டிருக்கா. பொண்டாட்டிகிட்ட வந்து, சாமியாரப் பாத்தே, பிள்ளக்கறி சமச்சாத்தா் சாமியாரு சாப்பிடுவாராம். பிள்ளக்கி எங்க போறதுண்டு கேக்குறா். எதுக்கு வருத்தப்படுறீங்க? நம்ம பிள்ளயக் கறி சமச்சு, சாமிக்குப் போடலாம். சாமி சாப்பிட்டால் போதும்ண்டு அவ சொல்றா.

சரிண்ட்டு, பள்ளிக் கொடத்ல படிக்கப் போயிருக்கிற பாலகனக் கூட்டிட்டு வரப் போறா். வாத்தியாருகிட்டப் போயி,

எம் பையனோட அத்தயும் - மாமாவும் வந்திருக்காங்க. வாத்தியாருகிட்டப் போயி, பையனக் கூப்பிட்டுட்டு வரச்சொன்னாங்கண்டு சொன்னா். அப்ப, வாத்தியாரு, கூப்பிட்டு போண்டு சொல்லிட்டாரு. கூப்பிட்டுகிட்டு, தகப்பனும், பிள்ளயும் நடந்து வாராங்க.

நடந்து வர்ரபோது, எடறி விழுந்தா, எங்கறி கண்டிப்போகும். சாமி சாப்பிட மாட்டாரு, என்னயத் தோள்ல தூக்கிட்டுப் போண்டு மகன் சொல்றா். அழுதுகிட்டே மகனத் தூக்கிக்கிட்டு நடந்து வாரா்.

தாயும் எதிர்பாத்து, வாசல்ல காத்துக்கிட்டிருக்கா. இவங்க மனச அறிய, அத்தயும் - மாமாவயும் எங்கேண்டு மகன் கேக்குறா். நீ வாரதுக்கு நேரமாச்சு, அதனால இப்பத்தா் போறாங்கண்டு தாயி சொல்றா. பேசிக்கிட்டே தாயி மடியில படுத்து ஒரங்கிப்போயிட்டா். அப்ப, தாயி கழுத்தப் புடிக்க, தகப்பன் கழுத்த அறுக்க, அறுத்து கொஞ்ச நேரத்துக்குள்ள சமச்சிட்டா.

திருத்தண்டன், சாமியாரப் போயி, நீங்க சொன்னது மாதிரி, பிள்ளக்கறி சமச்சு வச்சிருக்கே். சாப்பிட வாங்கண்டு கூப்டுறா்.

சாப்பாட்டு நேரந் தவறிப் போச்சு, இதுக்கு மேல என்னால சாப்பிட முடியாது. வந்தாலும் சாப்பிட மாட்டேண்டு சாமியாரு சொல்றாரு.

நீங்க பசியா இருக்கயில, நாங்க எப்பபடிச் சாப்ட டுறது? கட்டாயம் நீங்க சாப்பிட வரணும்ண்டு திருத்தண்ட வப்புறுத்திக் கூப்டுறாா்.

அப்ப, வேண்டா வெறுப்பா வந்து, வெளித் திண்ணயில ஒக்காந்தாரு. திருத்தண்டன் பொண்டாட்டி, கை கழுவத் தண்ணி மோந்து கொண்டாந்து தந்தா. தண்ணிய கையில வாங்கிக்கிட்டு, ஒனக்குக் கொழந்த இருக்காண்டு சாமியாரு கேட்டாரு. இருக்குண்டு திருத்தண்டன் சொன்னாா். அப்டிண்டா கூப்டு, "மக்களில்லாச் சோறு மருந்து, பிள்ளயில்லாச் சோறு புளுவு", குழந்தைக பக்கத்ல இல்லாம நாஞ் சாப்பிட மாட்டேண்டு சொல்லிட்டாரு.

நம்ம பிள்ளையத்தே அறுத்துக் கறி சமச்சிருக்கோம். பெறகு, பிள்ள எப்பிடி வரும்ண்டு நெனச்சுக்கிட்டு, வாசல்ல போயி நிண்டு, எட்டிப் பாத்தா. வெளியில நெறையாப் பிள்ளைக வெளையாடுதுக.

சாமியாரு சாப்பிடட்டும்ண்டு நெனச்சு, வெளிய நிண்டு சிராளா!! சிராளாண்டு ரெண்டு தடவ கூப்பிட்டா. அப்ப, அங்கிட்டிருந்து மகன் ஓடியாராா். பிள்ளயப் பாத்த ஆசயில ஓடிப்போயித் தூக்குனா. தூக்கிக்கிட்டு வீட்டுக்குள்ள போறா. போயிப் பாக்கயில, வீட்டுக்குள்ள சாமியாரு இல்ல. கறி வகைக இல்ல, சாதம் மட்டும் இருக்குது. பெறகு. பெறகென்னா? கடவுள் தான் கருண காட்டிட்டாருல்ல. கடவுள் புண்ணியத்துல, நல்லா வாழ்ந்தாங்களாம்.

4. கடவுள் சத்தியம்

ஒரு ஊர்ல – ஒரு பொண்டுகன் இருந்தர். அவனுக்கு மாடு மேக்கிற வேல. அந்த ஊரு மொதலாளிகிட்ட மாடு மேக்கிறர். அவ், மேக்கிற மாடுகள்ல, ஒரு மாடு நெறசெனயா இருக்கு. அப்ப – மொதலாளி: ஏலே!! செனமாட்ட வீட்ல கெட்டிப்போட்டுட்டு, மாடுகள மேய்க்கப் பத்திட்டுப்போண்டு சொன்னாரு. பொண்டுகன், மொதலாளி சொன்னதக் கேக்காம, செனமாட்டயும் சேத்துப் பத்திட்டுப் போயிட்டர்.

பத்திட்டுப் போகவும், செனமாடு நடக்க முடியாம மலயில நிண்டுகிருச்சு. அப்ப – அந்த வழியா ஒரு செனப்புலி வருது. நடு மலயில, ரெண்டும் சந்திச்சுக்கிருச்சுக.

அப்ப, நம்ம ரெண்டு வேரும் செனயா இருக்கோம். ஒரே சமயத்ல ஈண்டுகிருவோம் போலிருக்கு. நம்ம ரெண்டு வேரும் தொணக்கித் தொணயா – இந்தக் காட்ல இருந்துக்கிருவோம்ண்டு புலி சொல்லுச்சு.

அதுக்கு பசுவு, நிய்யி வேற கூட்டம், நர் வேற கூட்டம், நம்ம ரெண்டு வேரும் சேந்து இருக்க முடியாது. ஒனக்கு, எர கெடைக்கலண்டா, என்னய புடுச்சுத் திண்ருவ. இது ஒத்து வராதுண்டு பசுவு சொல்லிருச்சு.

இல்ல.... இல்ல! ஒன்னய, நானு ஒண்ணுமே செய்ய மாட்டேண்டு சத்தியம் செஞ்சு குடுத்திச்சு புலி. புலி சத்தியம் பண்ணவும், பசுவும் சரிண்டு சொல்லிருச்சு. அண்ணைக்கிருந்து, புலியும் – பசுவும் ஒண்ணாச் சேந்து வாழ்ந்துகிட்டிருக்குக.

இருக்கயில: புலியும் – பசுவும் ஒருநா, ராத்ரில ஈண்டுகிருச்சு. புலி ஆங்குட்டி போட்டுருச்சு. பசுவு காளங்கண்டு போட்டுருச்சு.

அப்ப, பகல்ல தாயிக மேயப் போயிரும். மேயப் போயிறவும் புலிக்குட்டியும் – காளங்கண்டும் சேந்து வெள்ளாடிக்கிட்டிருக்கும். புலிக்குட்டிக்கு வெவரம் வந்திருச்சு. அப்ப–, தந் – தாய விட, பசுவு மேல பாசங் காட்டுது. பசுவ அடிச்சுத் தின்ன மாட்டேண்டு, சத்தியம் பண்ணிக் குடுண்டு கேட்டுச்சு. தாய்ப் புலியும் சத்தியஞ் செஞ்சு குடுத்திருச்சு.

இப்டி இருக்கயில – ஒருநா, புலிக்கு எர கெடைக்கல. பொழுது விழுந்திருச்சு. புலிக்கு வகுத்துப்பசி பொறுக்க முடியல. பசுவ அடிச்சுத் திண்டுருச்சு.

எண்ணைக்கிமே பசுவுதான் முன்னால வரும். அண்ணைக்கிண்டு புலி முன்னால வந்திச்சு. பசுவு இருந்தாத்தான வரும். அப்டி புலி முன்னால வரயில – புலிக்குட்டிக்கு சந்தேகம் வந்திருச்சு. தாயாரான புலிகிட்ட, – எங்க பசுவம்மாண்டு? புலிக்குட்டி கேக்குது. கேக்கவும் –, எனக்குத் தெரியாதுண்டு, புலி சொல்லிருச்சு.

அப்ப, நிய்யி பசுவம்மாவ அடிச்சு திண்டுபிட்ட, எங்கிட்ட மறைக்கிரண்டு புலிக்குட்டி கேட்டுச்சு. இல்ல மகனேண்டு புலி சொல்லுச்சு. அடிச்சுத் திங்கலண்டு, எந்தலயில அடிச்சுச் சத்தியம் பண்ணுண்டு புலிக்குட்டி கேட்டுச்சு.

புலி – தலயில அடிச்சு, சத்தியம் பண்ணுச்சு. பண்ணவும் – மொதல்ல செஞ்ச சத்தியத்த மீறுனதால, புலி, ஈல வெடிச்சுச் செத்துப் போச்சு.

புலிக்குட்டியும் – காளங்கண்டும் கொஞ்சநா, தனியா... அந்தக் காட்ல இருந்திச்சுக.

ஒருநா தேவயில, புலிக்குட்டி காளங்கண்டப் பாத்து, நம்ம ரெண்டுவேரும் சேந்து இருக்கணும்ண்டு சொல்லுச்சு. அதுக்குக் காளங்கண்டு சம்மதிக்கல. கடசியா... காளங்கண்ட சம்மதிக்க வச்சு,

இந்தக் காட்ல – ஒண்ணு சேந்து இருப்போம். இல்லண்டா, சேந்து சாவோம்ண்ட்டு, ரெண்டும் கட்டிப் புடிச்ச வாக்ல, மலயில இருந்து உருளப் போச்சுக.

அந்தச் சமயம் பாத்து, பார்வதியும் – பரமசிவனும் அந்தப் பாத வழியா வாராங்க. வரயில, புலிக்குட்டியயும் – காளங்கண்டயும் பாத்து, ஏ... ஞ் சாகப் போறீங்கண்டு எரக்கப்பட்டுக் கேட்டாங்க.

கேக்கவும், எங்நம்மாவும், இவங்நம்மாவும் ஒண்ணா ஒரே எடத்ல இருந்தாங்க. நாங்க பெறந்து, வளந்த பெறகு, ஒருநா, எங்நம்மா – இவங்நம்மாவ அடிச்சு திண்டுபிருச்சு. எங்கிட்ட, எங்நம்மா செஞ்சு குடுத்த சத்தியத்த மீறுனதால, தல வெடிச்சு செத்துப்போச்சு. நாங்க ரெண்டுவேரும் அனாதயா இருக்கோம். ரெண்டுவேரும் சேந்திருப்போம்ண்டு நா–ஞ் சொல்றே. காளங்கண்டு கேக்க மாட்டேங்குது. பெறகெதுக்கு உசுரோட இருக்கணும்ண்ட்டு, மலயில இருந்து உருளுறோம்ண்ட்டு புலிக் குட்டி சொல்லுச்சு.

அப்டியாப்பா! அப்பண்டா, நீங்க ரெண்டுவேருமே சாகக் கூடாதுண்ட்டு, ஒங்கள மனுசனா படச்சு விட்டுர்ரோம்ண்டு சொல்லி –,

புலிக்குட்டிய புலி ராசாண்டும்

காளங்கண்ட காளராசாண்டும்

படச்சு விட்டுட்டு, பார்வதியும், பரமசிவனும் போயிருறாங்க.

போயிறவும், புலிராசாவும் – காளராசாவும் தெக்கு தெசயப் பாத்துப் போறாங்க. போகயில –, ஒரு கம்மங்காடு இருக்கு. அந்தக் காட்டுவழியா வரயில, ஒரு வானம்பாரிக் குருவி (வானம்பாடி) கண்ணில பட்டுக் கெடந்திச்சு. அந்தக் குருவியப் புடிச்சுக்கிட்டு, அதுக்கங்கிட்டு வரயில, ஒரு கொளம், அந்தக் கொளத்து நெறயா தண்ணி ஒடயுராப்ல இருக்கு. அந்தக் கொளத்துக் கரயில ஒக்காந்து குருவியச் சுட்டாங்க. சுட்டதும் காளராசா ஒடலத்திண்டார். புலிராசா தலயத் திண்டார்.

"ஒடலத் திண்டவன் ஒடனே ராசா: தலயத் திண்டவன் தத்துப் – பித்தி ராசாவாகணுங்கறது தத்துவம்"

குருவிய சுட்டுத் திங்கவும், காளராசாவுக்கு தண்ணி தவிக்குது. கொளத்துக்குள்ள தண்ணி குடிக்க போனார். அப்ப, புலிராசா கரயில ஒக்காந்திருக்கார்.

அப்ப, அந்த நாட்டு ராசா மகளுக்கு மாப்ள தேடுராங்க. எப்டித் தேடுராங்கண்டா? ஆன கையில மாலயக் குடுத்து, அந்த ஆன ஆருக்கு மாலயப் போடுதோ! அவந்தா ராசா மகளுக்கு மாப்பளண்டு ஊரச் சாட்டி விட்டிருக்காங்க.

அப்டி இருக்கயில, அந்த ஆன மாலயக் கொண்டுகிட்டு வருது. இங்க, காளராசா தண்ணி குடுச்சுக்கிட்டிருக்கார். வரயில,

சத்தம் போட்டுக்கிட்டு ஆளுக பின்னால வராங்க. என்னா சத்தம்ண்டுட்டு – காளராசாவும் கரைக்கு வர, ஆனயும் இவங்கிட்ட வர சரியா இருந்திச்சு.

அப்டியே! ஆன, இவனுக்கு மாலயப் போட்டு, தூக்கிக்கிட்டுப் போகுது. அரமணயில ராசா, ஆன எப்ப வரும்ண்டு பாத்துக்கிட்டிருக்காரு. ஆன வந்திச்சு. அரமணயே... ஒரே ஆரவாரமா இருக்கு.

காளராசாவுக்கும் – ராசாமகளுக்கும் கல்யாணம் முடுஞ்சுச்சு. இவ் அரமணயில இருக்கர்.

கொளத்துக் கரயில, ஒக்காந்துகிட்டிருந்த புலிராசா! அண்ணனாகிய காளராசனத் தேடிக்கிட்டு, ஆன போன வழியே போறர். போயி: அரமணய கண்டு புடிச்சுட்டர். கண்டுபிடிச்சுப்போயி, காளராசாவப் பாத்தர். பாக்கவும் – எந் – தம்பி வந்திட்டாண்டு எல்லாருகிட்டயும் காளராசா சொல்றர்.

தம்பிண்டு சொல்லவும் –, புலிராசாவயும் அரமணயில இருக்கச் சொல்றாங்க. சரிண்டுட்டு இருக்கர். கொஞ்ச நாளுக் கழிச்சு, புலிராசாவுக்குக் கல்யாணத்தப் பண்ணி வக்கிராங்க.

கல்யாணத்தப் பண்ணிக்கிட்டு: ரெண்டுவேருமே அந்த நாட்டு ராசாக்களா இருந்து நல்லாப் பொளச்சாங்களாம்.

5. பூவாண்டிச்சி

ஒரு ராசாவுக்கு ரெண்டு பொம்பளப் பிள்ளைக. ராசா, இவங்கள நல்லா வளக்குறாரு. நாட்டயும் நல்லாப் பரிபாலனம் செஞ்சுகிட்டிருக்காரு.

ராசாவோட தங்கச்சி வீட்ல, ஒரு ஆம்பளப் பையன் இருக்கா். அவன விட்டுட்டு, ராசா தங்கச்சியும் – தங்கச்சி புருசனும் செத்துப் போனாங்க.

இப்டி இருக்கயில, ரெண்டு பொண்ணுகளும் வயசுக்கு வந்திட்டாங்க. வயசுக்கு வந்து, ஒன்னப் பாரு – என்னப் பாருண்டு இருக்காங்க. இருக்கயில, ரெண்டு வேரயும், ஒரு முனி தூக்கிட்டுப் போயிருச்சு. தேடுறாங்க ... தேடுறாங்க... தேசந்தேசமா தேடுறாங்க. நாடு ... நாடாத் தேடுறாங்க. எங்கயும் காங்க முடியல.

அப்ப, தங்கச்சி மகன் வாரா். நாந்தேடிப் போறேண்டு மாமங்கிட்ட கேக்குறா். மருமகனத் தொலைக்க ராசா விரும்பல. சின்னப்பய எங்குட்டாச்சும் போயிருவாண்ட்டு, போக வேணாம்ண்டு சொல்றாரு.

சொல்லவும் –, கேக்காம, மந்திர வாளயும், கணயாழியயும் வாங்கிக்கிட்டுப் போறா். நடந்து போறா். ரெம்பத் தூரம் போன பெறகு, ஒரு மரத்தடில ஒக்காந்து கட்டுச் சோத்த சாப்டுறா்.

சாப்டயில, அங்கிட்டிருந்து ஒரு வணிகன் வர்ரா். வந்ததும், எங்க போறண்டு கேட்டா். கேக்கவும் –, எங்க மாமன் மகளத் தேடிப் போறேண்டு சொன்னா். ஒரு ஆளுனால காங்க முடியாது. இதுக்கெல்லாம் ரெண்டுவேரு போகணும்ண்டு

சொல்றா். சரி! நிய்யும் வாண்டு சொல்லி, ரெண்டுவேரும் போறாங்க.

காட்டுப் பாதயில குருத போகுது. அப்ப, அங்கிட்டிருந்து எதுக்கால, பார்வதி – பரமசிவ ரெண்டுவேரும் வாராங்க. இவங்களப் பாத்திட்டு, எங்க போறங்கண்டு கேட்டாங்க. எங்க மாமன் மகள்களக் காணம், தேடிப் போறோம்ண்டு சொல்லவும் –, அவங்க மூணு குளுவைகளக் குடுத்து, எதனாச்சும் ஆபத்து வந்தா இந்தக் குளுவைகள்ல;

ஒண்ணப் போடுங்க, தண்ணியாப் போகும்

ரெண்டாவதப் போடுங்க, மலாயாப் போகும்

மூணாவதப் போடுங்க, தியாப் போகும்ண்டு

சொல்லி குடுத்தாங்க. அதயும் வாங்கிக்கிட்டுப் போறாங்க. போயிப் பாக்கயில, மலமேல ஒரு பெரிய குக இருக்கு. அந்தக் குகயில, ரெண்டு வேரயும் தனித்தனியா வச்சிருக்கு முனி. பாக்கயில, ரெண்டுவேரும் அழுதுகிட்டிருக்காங்க.

மொதல்ல, – மூத்தவ இருக்ற குகைக்குள்ள போயி –, கணயாழிய கொடில முடுஞ்சு மண்டக்கி நேரா விட்டா். கணயாழி போயி மண்டயில பட்டுச்சு. படவும் – எந்திரிச்சுட்டா, எந்திரிச்சுப் பாக்கயில, அத்த மகன் . வாண்டு கூப்ட்டா். வந்தா வரவும் குருதயில தூக்கி வச்சுக்கிட்டு வேகமா வராங்க.

அப்ப, – ஆங்காத்து வீசுது – பொங்காத்து வீசுதுண்டு, முனி வருது. இவங்கள பாத்திட்டுத் தொடுத்து வருது. தொடுத்து வரயில, ஒரு உருண்டயப் போட்டா். பூமியெல்லாந் தண்ணியாப் போச்சு. தண்ணியக் கடந்து முனி வெரட்டி

வருது. வெரட்டி வரவும், ரெண்டாவது உருண்டயப் போட்டர். மலயா வளந்து நிக்கிது. முனி; அந்த மலயயும் தாண்டி வருது. வரவும், மூணாவது உருண்டயப் போட்டா, திய்யாப் புடுச்சு எரியுது. எரியவும், முனி திய்யக் கடந்து வர முடியல. அப்ப: ஊர நெருங்கி வந்திட்டாங்க. வரவர – கூட இருக்ற வாணிகச் செட்டி சந்தேகப்பட்டுக்கிட்டிருக்கர்.

அண்ணக்கி ராத்ரி, இவ தனியா படுக்க மாட்டேண்டுறா, ஏண்டா முனி, தூக்கிட்டுப் போயிரும்ண்டு. சுத்தி காவக்காரங்கள இருக்க வச்சுட்டு, ரெண்டுவேரும் அரமணக்குள்ள படுத்திருக்காங்க. அப்ப: இவ், அவள மடில போட்டு ஒறங்குறா். மாறி – மாறி, ஒருத்த மடியில ஒருத்த ஒறங்கிக்கிட்டிருக்காங்க.

ஒறங்கிக்கிட்டிருக்கபோது, முனி வந்திருச்சு. வந்து, காவக் காரங்கள புடுச்சுத் தூண்ல கெட்டி வச்சிட்டு, இவனத் தூக்கிக் கிழ போட்டுட்டு, அவளத் தூக்கிட்டுப் போயிருச்சு. கொண்டு போயி, ஊருக்கு அடுத்த ஒத்தப்புளிக்குக் கொண்டு போகுது. அங்க ஒரு பெரிய பாதாள அறை இருக்கு. அங்க தங்கச்சியும் இருக்கா. இவளயும் அங்க கொண்டு போகுது. இதப் பாத்துக்கிட்டிருந்தவ் வந்து சொல்லிப்பிட்டர்.

சொல்லவும், இவ் போறா. போயி, ஏழு வண்டி ஊனாங்கொடியப் புடுங்கி, ஒண்ணாக் கெட்டி, கொடியப் புடிச்சு எரங்கிப் போறா். அப்ப, வாணிகச் செட்டி மக், காவ காத்துக்கிட்டு மேல நிக்கிறா்.

போயிப் பாக்கயில, ரெண்டு பொண்ணுகளவும் ரெண்டு பக்கம் போட்டு, முனி; நடுமையத்ல படுத்து, தங்கச்சி மேல ஒரு காலும், அக்கா மேல ஒரு காலும் போட்டுப் படுத்துக் கெடக்கு.

போனவ், ரெண்டு வேரயும் வெலக்கி விட்டுட்டு, ஒரே வெட்ல ரெண்டு துண்டாக்கிப்பிட்டா் முனிய. வெட்டுன அவசரத்ல, மந்திர வாள அங்க போட்டுட்டு, மூணு வேரும் மேல ஏறி வாராங்க.

மேல வந்தவ், இடுப்ல ஒடவாளப் பாத்தா். இல்ல, ரெண்டு வேரயும் வாணிகச் செட்டி மகனப் பாத்துக்கிரச் சொல்லிட்டு, பெறகும் எரங்கிப் போறா். போயி, வாள எடுத்துக்கிட்டு, மேல ஏறி வரயில, கொடிப் பக்கத்ல இருந்த வாணிகச் செட்டி, கொடிய வெட்டி விட்டுட்டா். கொடிய வெட்டி விடவும், பாதாளக் கொகைக்குள்ள விழுந்து நொறுங்கிப் போனா்.

அவ் விழுந்து செத்துப் போகவும், இந்தப் பிள்ளைக மயமாத் துடிக்குதுக. அவ், நடங்க வீட்டுக்குப் போவோம்ண்றா். இந்தப் பிள்ளக போக மாட்டேங்குதுக. போக மாட்டேண்டவும் நல்லாப் புளிய வெளாற வெட்டிக்கிட்டு வெரட்டி - வெரட்டி அடிக்கிறா். அடிச்சு வீட்டுக்குக் கொண்டு வரா். அப்பஃ பாத்தவங்க சந்தோசப்படுறாங்க. ஏ..ண்டா, காணாமப் போன பிள்ளைக வந்திருச்சுண்டு. சந்தோசமா வீட்ல வச்சிருக்காங்க. இருக்கயில, இந்தப் பிள்ளைக மொகத்ல ஈஸ்வரி (கலை) இல்ல. இப்பயே கல்யாணம் வக்யணும்ங்கறா் வாணிகச் செட்டி. ஆனால், இந்தப் பிள்ளைகளுக்குக் கல்யாணத்ல இஸ்டம்ல்ல.

இப்டி இருக்கயில. கல்யாணத்ல இருந்து தப்பிக்கிறதுக்கு, நாங்க நோம்பு இருக்கணும்ண்டு, தாயி - தகப்பங்கிட்டச் சொல்றாங்க. தாயுந் - தகப்பனும் நோம்பு இருக்கச் சரிண்டு சொல்லிட்டாங்க. எப்படிப்பட்ட நோம்புண்டா, ஊசிய நட்டு, அதுமேல ஒக்காந்து நோம்பு செய்றாங்க. அத்த மகன, கடவுளு காப்பாத்தித் தரணும்ண்டு ஊசில தவமிருக்காங்க.

இருக்கயில, இந்த வாணிகச் செட்டி மக், தெனக்கிம் ஒத்தப் புளிய' மரத்துக்குப் போயிப் பாக்க, – திரும்பி வந்துற, போயிப் பாக்க, – திரும்பி வந்திறவுமா இருக்கா.

இந்தப் பிள்ளைக, அத்த மக் உயிரோடவரணும்ண்டு, ஊசில தவமிருக்காங்க. இருக்கயில, பார்வதியும் – பரமசிவனும் இவங்க தவத்துக்கு எரக்கப்பட்டு, பாவம்! இந்தப் பொண்ணுக, அன்னமுமில்லாம, தண்ணியுமில்லாம இப்டிக் கெடக்குகளேண்டு, மனசு எரங்கி, இவங்க நோம்பு இருக்ற எடத்துக்கு வராங்க. வந்து, எதுக்கு நோம்பு இருக்கிங்கண்டு கேக்குறாங்க.

கேக்கவும் –, எங்கத்த மகன, பாதாளக் கொகைக்குள்ள எரங்கவும், இந்த வாணிகச் செட்டி மக, கொடிய வெட்டி விட்டுட்டா. விழுந்து செத்துப் போனாரு. இப்ப, எங்கள இந்த வாணிகச் செட்டி மக் கல்யாணம் முடிக்கணும்ண்டு சொல்றா. இப்ப: எங்கத்த மக் உயிரோட வரணும். நீங்க எழுப்பித் தரணும்ண்டு கேட்டாங்க. நீங்க நோம்ப நிறுத்திக்கங்க, நாங்க, உருசுண்டாக்கித் தரோம்ண்டு சொல்லிட்டுப் போயிட்டாங்க.

போனதும், கழுகுகள விட்டு, கறித்துண்டங்கள பெறக்கிட்டு வரச் சொன்னாங்க. பெறக்கிட்டு வந்து குடுத்துச்சுக. அதுல ஒரு துண்டத்தக் காணம், அந்தத் துண்டம் போயி –, ஏழு கடலுக்கு அப்பால போயிக் கெடக்கு. அதப் போயி, ஒரு கழுகு எடுத்திட்டு வந்து குடுத்துச்சு. எல்லாத்தயும் ஒண்ணு சேத்து வச்சு, உசுரு குடுத்து எழுப்பி விட்டாங்க.

எழுப்பி விடவும் எந்திரிச்சு வணங்குனா. விட்டுக்குப போற வரைக்கும் ரூவத்த மாத்தி விடச் சொன்னா. மாத்தி விட்டுட்டாங்க. புண்ணும் – புளிச்சியுமா, வரா. வாரயில,

வாணிகச் செட்டி, ஒத்த புளிய மரத்துக்குப் போறா். இவ வீட்டுக்கு வாரா்.

வந்து, பூவாண்டிச்சி வீட்ல தங்கிக்கிட்டா். அந்தப் பூவாண்டிச்சி, தெனக்கிம் பூக்கொண்டு போயி; அந்த வீட்ல குடுத்திட்டு வருவாளாம். ஒருநா, பூ முடியயில, கணயாழிய வச்சு முடிஞ்சு விட்டுட்டா். அண்ணக்கி: ராசா மகளுக்குக் கல்யாணம், பூவாண்டிச்சி, பூவக் கொண்டு போயிக் குடுத்தா, குடுக்கவும் –, இந்தப் பிள்ளைக நம்பிக்கையில்லாம, பூவ வைக்காமப் போட்டுட்டுப் பேசாம ஒரங்கிட்டாங்க. ஒரங்கயில, அத்த மகெ எந்திரிச்சு வரமாதிரி கனாக் கண்டாங்க. அந்த ஆவுகத்ல பூவ்வ எடுக்க, அதுக்குள்ள இருந்து ஒரசுச்சு. ஒரசவும் பாத்தா கணயாழி.

அத்த மகனோட கணயாழிண்டு தெரிஞ்சுகிருச்சு. பூவாண்டிச்சி வீட்டுக்குப் பெறப்பட்டுப் போகயில, பூவாணிச்சிகிட்ட ஒங்க வீட்ல ஆரு இருக்கதுண்டு கேட்டா. வீட்ல எம்பேராண்டி இருக்கா்ண்டு பூவாண்டிச்சி சொன்னா. நா் அவரப் பாக்கணும்ண்டு சொல்லிட்டுப் போறாங்க. போயி பாத்திட்டு நம்ம அத்த மகனாச்சேண்ட்டு, அவனயும் கூட்டிக்கிட்டு வீட்டுக்கு வாராங்க. வந்து பாத்தா.

கல்யாண மேடையில, வாணிகச் செட்டி மகெ ஒக்காந்திருக்கா். வந்து, நடந்ததச் சொன்னா். சொல்லயில, வாணிகச் செட்டி மகனுக்கு கெதக் கெதக்ண்டுது. சொல்லிட்டு, இப்ப: நீங்க, ஆருக்கு வேணும்ண்டாலும் கெட்டிக் குடுங்கண்டு சொல்லிட்டுப் போறா். ஊருல இருக்க ஆளுக; வாணிகச் செட்டி மகனப் புடிச்சு, சுண்ணாம்புக் காளவாசல்ல வச்சு நீத்துபட்டு, அத்த மகனுக்கு கல்யாணம் செஞ்சு வச்சு, நல்லாப் பொளச்சாங்களாம்.

6. அன்னதானம்

அழகாபுரி - மதுராபுரிண்டு ரெண்டு ஊரு, போடி - தேனி மாதிரி, சோடியா இருக்குது. ரெண்டு ஊரு ராசாவுக்கும் பிள்ளைக இல்ல. ரெண்டு பேரும் ஒரு மரத்தடியில இருந்து பேசிக்கிட்டிருந்தாங்க. பேசிக்கிட்டிருக்கயில, அந்த வழியா பார்வதியும் - பரமசிவனும் வராங்க. வந்து, அந்த மரத்தடில நிக்கிறாங்க. அப்ப, அந்த ரெண்டு ராசாக்களும் ரொம்ப வருத்தப்பட்டுப் பேசிக்கிட்டிருந்தாங்க. அவங்க மொகவாட்டத்தக் கண்டு, ஏ.... வருத்தமா இருக்கிங்கண்டு கேக்குறாங்க. அதுக்கு அவங்க, கொழந்த இல்லாத கொறய மறக்க முடியல, அதா வருத்தம்ண்டு சொல்றாங்க.

அதுக்குப் பார்வதியும் - பரமசிவனும் ஆயுசு இல்லாத ஆம்பளப் பிள்ள வேணுமா? அஞ்சாநா சாகுற பொம்பளப்பிள்ள வேணுமாண்டு கேக்குறாங்க.

அப்ப, ஆயுசு இல்லாத ஆம்பளப் பிள்ள வேணும்ண்டு மதுராபுரி ராசா கேக்குறாரு. அஞ்சாநா சாகுற பொம்பளப்பிள்ள வேணும்ண்டு அழகாபுரி ராசா கேக்குறாரு.

கேக்கவும், அங்கிட்டு இருந்த மாமரத்தக் காட்டி, அதுல இருக்ற பழத்தக் கொண்டு போயி, பொண்டாட்டிகிட்டக் குடுங்கண்டு சொல்லிட்டு பார்வதியும் - பரமசிவனும் மறஞ்சுகிறாங்க.

பார்வதியும் - பரமசிவனும் சொன்னபடி, மாம்பழத்தப் புடுங்கிட்டுப் போயி, பொண்டாட்டிக்கிட்டக் குடுத்தாங்க. குடுக்கவும் மதுராபுரி ராசாவுக்கு ஆம்பளப் பிள்ளயும், அழகாபுரி ராசாவுக்குப் பொம்பளப் பிள்ளயும் பெறந்துருச்சு. வளத்து

வராங்க. வளத்து வரயில, மதுராபுரி ராணி, தன் மகனுக்கு எண்ண தேச்சுக் குளிப்பாட்டுரா, குளிப்பாட்டயில, அவ கண்ணிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் வந்து, மகனோட தொடையில விழுகுது. ஏ...ம்மா அழுறண்டு மக கேக்குறா. பதிலுச் சொல்லாம அற்ப ஆயுசுலேயே போகப் போறீயேண்டு அழுகுறா.

எதுக்கும்மா அழுகுறண்டு பெறகுங் கேக்குறா். ஒனக்கு இன்னுங் கொஞ்ச நாள்ல ஆயுசு முடியப் போகுதேண்டு கவலப்பட்டே். அதான் அழுக வந்துச்சு. வேறொண்ணும்ல்ல மகனேண்டு சொல்றா.

அதுக்கு மக், அம்மா!! எனக்கு தயிர்ச்சோறு கட்டிக்குடு. நா் காசிக்கு யாத்திர போயிட்டு வாரேண்டு சொன்னா்.

வேணாம் மகனே! நீயோ சின்னப் பைய! ஒனக்குத் தெக்க வடக்க தெரியாது. தப்பிப் போவண்டு, தாயி சொல்றா. மக் கேக்கல.

சரி – போயிட்டு வாண்டு, தயிர்ச்சோறு கட்டிக் குடுத்தா. தன்னோட தம்பியயும் தொணக்கிப் போகச் சொன்னா.

மாமனும் – மருமகனும் போறாங்க. போற வழியில, ஒரு ஆறு குறுக்க போகுது. அகோரப் பசி. ஆத்தங்கரயில வச்சுக் கட்டுச் சோத்த திண்டுபிட்டு, தாய் மாம் மடியில தலய வச்சு சின்னப் பய நல்லா ஒரங்கிட்டா். மாமன் என்னா செஞ்சுட்டா். லேசாத் தலய எறக்கித் தரயில வச்சிட்டு, ஓடிப் போயிட்டா். யாரு? தாய் மாமன், தொணக்கிப் போனவ்.

பெறகு, ரெம்ப நேரங்கழிச்சு எந்திருச்சு, நடந்து போயிக்கிட்டிருக்கா். போகயில, அங்கிட்டு ஒரு ஊரு இருக்கு.

அந்த ஊருல - ஒரு விழா நடக்குது. என்னா விழா நடக்குதுண்டு ஒரு பாட்டிகிட்டக் கேக்குறா். அப்ப அவ, அழகாபுரி ராசா மகளுக்கு மாப்பிள்ள தேடுராங்கண்டு பாட்டி சொல்றா.

சொல்லிக்கிட்டிருக்கயில, ஆன மாலயக் கொண்டு வந்து, இவங்கழுத்துல போட்டுட்டுப் போயிருச்சு. மாலயப் போடவும் அழகாபுரி ராசா தன் மகள, இவனுக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்திட்டாரு.

அண்ணக்கி ராத்திரில, பாம்பு ஒண்ணு படுக்கையறைக்கு வரும், அதக் கும்பிடணும்ண்டு பொண்டாட்டிகிட்டச் சொல்றா். அவளுந் சரித்தேண்டு சொல்றா. அப்டித்தா் படுத்துக் கெடக்கயில, சொன்ன மாதிரியே ஒரு பாம்பு வருது. வரவும், அவளும் வணங்கினா. வணங்கவும் தீர்க்க சுமங்கலியாயிருண்டு சொல்லிட்டுப் பாம்பு போயிருச்சு.

ராசா செத்துப் போவாருண்டு நெனச்சவங்க, அவரு உசுரோட இருக்கவும் எல்லாரும் மகிழ்ச்சியடையுராங்க.

தன் பொண்டாட்டிகிட்டயும், தன்னோட மாமங்கிட்டயும் காசிக்குப் போறேண்டு சொல்லிட்டு, நா் வா்றதுக்கு நாலு வருசமாகுண்டு சொல்றா்.

அப்ப: நிய்யி, வா்றதுக்கு என்ன அடையாளம்ண்டு பொண்டாட்டி கேக்குறா.

நானு வா்ர அண்ணக்கி மல்லிகப் பூப் பூக்கும். உலக்க நேரா நிக்கிம்ண்டு சொல்லிட்டு, நா் வா்ற வரைக்கும் அன்ன தானஞ் செய்யுங்கண்டு சொல்லிட்டுப் போறா்.

அழகாபுரி ராசா மகள் அன்னதானம் செய்யுறா. செய்யும் போது வர்றவங்களுக்கு, குளிக்கிறதுக்கு எண்ண, சீவக்கா குடுத்துக் குளிக்க விட்டு, சாப்பாடு போட்டு அனுப்பி வச்சுக்கிட்டிருக்கா.

இப்டி, அன்னதானம் செஞ்சுகிட்டிருக்கயில அழகாபுரி ராசாவுக்கும் ராணிக்கும் கண்ணு தெரியாமப் போயிருது.

இப்டி இருக்கயில, ஒருநா, மல்லிகப் பூப் பூக்குது. ஒலக்க நேரா நிக்குது. இதப் பாத்ததும், புருச் வரப் போராருண்டு தெரிஞ்சுக்கிறா.

இந்த அறிகுறி தெரிஞ்ச கொஞ்ச நாளயில, புருச் வீட்டுக்கு வாரர். அன்னதானம் கேக்குறவங்களப் போல வந்து, தம் பொண்டாட்டிகிட்டயே குளிக்க எண்ண கேக்குற். அவ தர மாட்டேங்குறா. தம் மாமங்கிட்டப் போயி சொல்ற். மகளக் கூப்பிட்டு ராசா கேக்குறாரு.

அழகாபுரி ராசா, காரணங் கேக்கயில, அவரு எம் புருச். நா எப்டி அவருக்கு எண்ண குடுப்பேண்டு சொல்லிப்பிடுறா.

திரும்பி வரவும் ரெண்டு பேருக்கும் ரெண்டாந் தடவையுங் கல்யாணத்தச் செஞ்சு வக்கிறாங்க.

அப்ப, பார்வதியும் - பரமசிவனும் வராங்க. வந்து, ஓ... விரதத்துல கொற இருக்கு. அதுனாலதா, ஓ... மாமனுக்கும் -அத்தைக்கும் கண்ணுத் தெரியாமப் போச்சுண்டு சொல்றாங்க.

பெறகு, புருசனும் - பொண்டாட்டியும் மதுராபுரிக்கு வராங்க. மருமக விரதமிருந்து தாயிக்கு மையக் கண்ணுல தடவுனா. அழகாபுரி ராசாவுக்கும் ராணிக்கும் பார்வ வந்திருச்சு. எல்லாருஞ் சந்தோசமா வாந்தாங்களாம்.

7. பெரீய - மொதலாளி

ஒரு ஊர்ல - பெரீய மொதலாளி, பத்து ஏருக்கு சொந்தக்காரு. பெரீய மொதலாளி,அந்த ஊருக்கே மொதலாளி. அப்ப, ஊர்ல நல்லது கெட்டது அறியுறதுக்காக, பரமசிவன் பூலோகத்துக்கு வாராரு. வர்ற வழில, பத்து ஏரு உழுகுது. மொதலாளி, கொடயப் புடுச்சு வரப்போரத்ல நிக்கிறாரு.

பரமசிவன் நேரா அங்க போறாரு. பத்து ஏருக்காரு உழுகுறூ. அவங்கிட்டப் போனாரு, ஏதாவது நம்ம பசிய ஆத்துவாண்ட்டு,நேரா அங்க போறாரு.

மொதலாளி கொடயப் புடுச்சு வரப்புல நிக்கிறூ. அவங்கிட்ட வழிபோக்க் மாதிரி போராரு. போயி, நெடுந்தூரத்ல இருந்து நடந்து வர்ரே. கடும்பசி, இந்த ஏழயோட பசியத் திக்கணும்ண்டு கேக்குறாரு.

அப்ப, அந்தப் பத்து ஏருக்காரு சொல்றூ. ஏப்பா ஒனக்கு கஞ்சி ஊத்தணும்ண்டா, இந்தப் பத்து ஏரயும் நிப்பாட்டணும். அது முடியாது. வேற எடத்தப் பாருண்டு சொல்லிட்டாரு.

ஏ...ங்க மொதலாளி!! நீங்க பணம் நெறஞ்சவங்க. நீங்க பசி திக்கலனா, வேற யாரு திக்குறதுண்டு சொல்லிக் கெஞ்சிக் கேக்குறாரு.

ஏய்யா! சாமியாரு! நிய்யி வாயில சொன்னா கேக்கமாட்டேண்ட்டு, ஏரு உழுதவங்கிட்டச் சாட்டக்கம்ப வாங்கி, எண்ணிக்கிட்டே பத்தடி அடிச்சசூ. மனித ரூவத்ல இருந்த பரமசிவன் பத்தடியயும் வாங்கிக்கிட்டு, யப்பா!! என்னோட பசி திந்து போச்சு. நா வர்றேண்டு சொல்லிட்டு விறுவிறுண்டு நடந்து வாராரு.

வரயில, இங்கிட்டு ஒருத்தி, ஒரு தொத்த ஏருக்கட்டி உழுதுகிட்டிருக்கா. பரமசிவன், நேரா அவங்கிட்ட வாராரு. அவங்கிட்ட வந்து, ஐயா! எனக்குக் கடும் பசிண்டு சொல்றாரு. சொல்லவும், பசியாயா? அப்டி செத்த ஒக்காருங்க, எந்தொத்த மாடுக எளப்பாராட்டும்ண்ட்டு மாட்டக் கழத்திவிட்டுட்டு, மரத்து நெழல்ல போயி ஒக்காந்தாங்க.

அங்க, கம்மங் கஞ்சியக் கரச்சு வச்சுக்கிட்டு, பொண்டாட்டி ஒக்காந்திருக்கா. ரெண்டு பேருக்கும் ஊத்துனா. நல்லாக் குடிச்சாரு. யாரு? இந்த மனுச ரூவத்ல வந்த சிவன். குடிச்சிட்டு, ஒனக்கு நல்ல புண்ணியங் கெடைக்கும்ண்டு சொல்லிட்டு பெறப்படயில.

அங்க பத்தேரு கட்டி உழுகுறானே! மொதல்ல, அவங்கிட்டப் போயிப் பசிக்குதுண்டு கஞ்சி கேட்டே, நல்லாப் பத்து அடி குடுத்தா. பாவம் நிய்யி, தொத்த ஏருக்காரி ஏ...ம் பசியப் போக்குன. அதனால ஒனக்குப் புண்ணியங் கெடைக்கும்ண்டு சொல்லிட்டுப் போயிட்டாரு. அப்ப, இந்தத் தொத்த ஏருக்காரி, ஏய்யா! அவங்கிட்ட ஏயா போனீங்க? அவ் பெத்த தாயக்கூட அடிப்பானேண்டு சொல்றா. சொல்லவும், மவராசி! நீ நல்லாயிருப்பே, ஒனக்கு புண்ணியம் கெடைக்கும்ண்டு சொல்லிட்டுப் போயிட்டாரு.

அண்ணைக்கி ராத்திரியே, காத்து மழயுங் கனத்த வானமுமாப் பேய் மழ பேஞ்சு, தொத்தேருக்காரி, அவ் பொஞ்சாதி, பிள்ள குட்டிங்க, மாடு, வீடு எல்லாந் தண்ணில முங்கி அழிஞ்சு போச்சு.

தொத்தேருக்காரர் தங் குடும்பத்தோட செத்துச் சிவலோகம் போறாக. அங்க, எதுக்கால, சிவனாகப் பட்டவரு, இவங்கிட்டக் கஞ்சி வாங்கிக் குடிச்ச வேசத்துல நிக்கிறாரு.

பாத்தர். பாத்திட்டு, தொத்தேருக்காரர், நீதானே எங்கிட்டக் கஞ்சி வாங்கிக் குடிச்சவீண்டு கேட்டர். ஆமாண்டு சொன்னாரு. நீ வந்த அண்ணைக்கே மழ பேஞ்சு, தண்ணி முங்கிச் செத்தோம். அதுக்குள்ள நீ எப்டி இங்க வந்தே. எங்கிட்ட கஞ்சி வாங்கிக் குடிச்சுப்புட்டு, நல்ல புண்ணியம் கெடைக்கும்ண்டு சொல்லிட்டு வந்தயில? ஆமா. அண்ணக்கி ராத்திரியே மழ பேஞ்சு நானு, பொண்டாட்டி, பிள்ள குட்டிங்களா செத்துப் போயி, இப்ப இங்க வந்திருக்கோம்ண்டு, தொத்தேருக்காரர் சொன்னர்.

அப்ப: நாந்தாப்பா சிவன், அண்ணக்கி மனுச் ரூவத்ல பூலோகத்தப் பாக்க வந்தேண்டு சொன்னாரு. சொல்லவும் கால்ல விழுந்து வணங்கி நிண்டர். நிக்கயில, சிவன் சொல்றாரு.

அண்ணக்கிப் பசிச்சு வந்த எனக்கு, கஞ்சிய ஊத்தி, என்னோட பசியத் தித்தயில, அதர் இண்ணக்கி ஒனக்கு சிவலோக பதவி கெடச்சிருக்கு.

அந்தப் பத்தேர் சம்சாரிக்கு, மேலும் பத்தேரக் குடுத்திருக்கேன். அவ் உழுது – உழுது, தாய் மொகத்துல பிள்ள முளிக்காம, பிள்ள மொகத்ல தாய் முளிக்காம, பாவச் செமைகளோட சாவாண்டு, ஈசுவரன் சொன்னாரு. பெத்த தாயிக்குக்கூட கஞ்சி ஊத்தாம, சொத்து சேத்து எதுக்கு? அது என்னத்துக்கு ஆகும்? பணக்காரன், எங்கிட்ட வர முடியாது. ஏழதர், எங்கிட்ட வரமுடியும்ண்டு சொல்லிட்டு, அதனாலதர் ஒனக்கு விமோசனங் கெடச்சிருக்கு.

8. அட ராமா!!

ஒரு ஊர்ல, புருசனும் – பொஞ்சாதியும் இருந்தாங்க. ரெண்டு பேரும் வேலக்கிப் போனாத்தான் கஞ்சி, இல்லண்டா பட்டினி. கஞ்சி குடிச்சுங் குடிக்ககாமயும் வாளுராங்க. அர வகுத்துக் கஞ்சியும் – கா வகுத்துக் கஞ்சியுமாக் குடிச்சுக்கிட்டு இருக்குறாங்க.

ஒருநா, காலையில எந்திருச்சு வெறகு வெட்ட மலக்கிப்போனா். போகயில, எடவழியில, ராமாயணக் கத சொல்லிக்கிட்டிந்தாங்க. போ்னவ், கத கேட்டுக்கிட்டு ஒக்காந்துகிட்டா். கத கேட்டுக்கிட்டேத் தூங்கிட்டா். எந்திரிச்சுப் பாக்கயில, பொழுது விழுந்திருச்சு.

கத சொன்னவங்களெல்லாம் போயிட்டாங்க. அட ராமா!! பிள்ள குட்டிகளப் பட்டினியா போட்டுட்டியேண்டு ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டு வீட்டுக்கு வந்தா். வீட்ல, பொண்டாட்டி ஆர்ப்பரிச்சுட்டு இருக்ககா. அந்த நேரத்ல வர்ரா். வரவும், சம்பாரிச்சுட்டு வந்ததக் குடு, கஞ்சிக்கு வாங்கிட்டு வரணும்ண்டு, பொண்டாட்டி கேக்குறா. கேக்கவும், இல்ல! மலக்கிப் போனே். போற வழில ராமாயணக் கத சொன்னாங்க. செத்த நேரம் கேட்டுட்டுப் போகலாம்ண்டு ஒக்காந்தே். ஒரங்கிட்டே். இண்ணக்கிச் சும்மா வந்திருக்கேண்டு சொன்னா.

நீ கெட்ட கேட்டுக்கு, நீ பெறந்த கெழமக்கி, ஒனக்கு ராமாயணக் கத கேக்குதோண்ட்டு, வெளக்க மாத்தக் கொண்டு, நாலு மாட்டு மாட்டிப்பிட்டா. கோவிச்சுக்கிட்டு, வீட்ட விட்டு வெளியேறிப் போயிட்டா். போயி, மலயில உருண்டு செத்துப் போகலாம்ண்டு நெனச்சுக்கிட்டு மலக்கிப் போறா்.

உச்சி மலக்கிப் போயி, அங்கிருந்து, அட ராமாண்டு சொல்லிக்கிட்டு விழுகவும், கீழ விழுக விடாம, கிருஷ்ணர் வந்து ஏந்திக்கிட்டாரு. ஏப்பா? ஒனக்கு என்ன ஆச்சு? ஏஞ் சாகணும்ண்டு நெனச்சு மலயில இருந்து விழுகுறேண்டு

கேட்டாரு. கேக்கவும், நா அன்னாடு, வேலக்கிப் போனாத்தே கஞ்சி, போகலண்டா இல்ல. நேத்து வேலக்கிப் போகயில, ராமாயணக் கத கேட்டுக்கிட்டிருந்திட்டே. எந்திருச்சுப் பாத்தா பொழுது விழுந்திருச்சு. வீட்டுக்கு வந்தே, இண்ணக்கிச் சம்பாத்தியக் குடுண்டு பொண்டாட்டி கேட்டா. வேலக்கிப் போகலண்டு சொன்னே. ஏ...ண்டா நீ கெட்ட கேட்டுக்கு, ராம கத வேறயாண்டு வெளக்கமாத்தல அடிச்சுட்டா. என்னால பொறுக்க முடியல. அதா சாகலாம்ண்டு வந்தேண்டு சொன்னர்.

எங்—கதயக் கேட்டதுனாலதான ஒனக்கு வெளக்கமாத்தடிண்டு ராமரு நெனச்சுக்கிட்டு, யப்பா!! மூணு உருண்டை தர்ரே. அதக் கொண்டு போயி வீட்ல வச்சு, பத்தி பொருத்தி வச்சு, வணங்குனயிண்டா, நீ கேட்டது எல்லாம் வரும். அத வச்சு நல்லாப் பொளச்சுக்கண்டு அனுப்பி வச்சாரு.

உருண்டய வாங்கிக்கிட்டு வீட்டுக்கு வந்தா. வந்து, பத்தி பொருத்தி வச்சு, வணங்கி, மாடமாளிக வாண்டு சொன்னர், வந்திச்சு. நக – நட்டு, பண்ட பாத்திரம் வாண்டு சொன்னர், வந்திச்சு. நஞ்ச – புஞ்ச தானியந் – தவுடு வாண்டு சொன்னர், வந்திச்சு. சகல வசதியோட வாழ்றா.

இதப்பாத்த அடுத்த வீட்டுக்காரிக்கு பொறாம வந்திருச்சு. இந்தச் சக்காளத்திக்கு எப்டி இம்புட்டுச் சொத்து வந்திச்சுண்டு நெனச்சுக்கிட்டு, பையாப் போயி, ஏது இம்புட்டு சொத்துண்டு கேட்டா. கேக்கவும், அவ, எம் புருசன வேலக்கிப் போகச் சொன்னே. அவரு போகாம, ராமாயணக் கத கேட்டுட்டு வீட்டுக்கு வந்தாரு. வெளக்கமாத்தக் கொண்டு அடிச்சுப்பிட்டே. கோவிச்சுக்கிட்டுப் போயி மலையிலிருந்து விழுந்தாரு. அப்ப ராமரு வந்து ஏந்திக்கிட்டாரு. மூணு உருண்டயக் குடுத்து, இத வீட்டுல வச்சு வணங்கி, எதக் கேட்டாலும், அது வரும்ண்டு சொல்லிக் குடுத்தாரு. அதுமாதிரி செஞ்சு, பூராத்தயும் வரவச்சோம்ண்டு சொன்னா. இதக் கேட்ட அடுத்த வீட்டுக்காரி, வீட்டுக்குப் போயி, புருசன ராமாயணக் கத கேக்கப் போகச

சொன்னா. கத கேட்டுட்டு வீட்டுக்கு வந்தவன, வெளக்கமாத்தக்கொண்டு அடிச்சு, வெளியே பத்தி விட்டுட்டா. இவ் வெறுத்துப்போயி, கோவிச்சுக்கிட்டு மலயிலிருந்து உருள, அதே மலக்கிப் போறா். உருளயில, ராமரு வந்து காப்பாத்தி, மூணு உருண்டைகளக் குடுத்து, போயி நல்லா பொழச்சுக்கண்டு சொல்லி அனுப்பி வச்சாரு.

நேரா வீட்டுக்கு வந்தா். பத்தி பொருத்தி வச்சா், வணங்கினா். வணங்கிட்டு, மாட மாளிக வரணும்ண்டு சொன்னா். மாடமாளிக வந்திருச்சு. எடையில பொண்டாட்டி, எனக்கு நக – நட்டுக் கேளு! நக – நட்டுக் கேளுண்டு தொந்தரவு படுத்திக்கிட்டிருந்தா. வாழுறதுக்கு வேண்டியதெல்லாங் கேட்டுக்கிட்டிருக்கே, நச நசண்டு - நச்சரிக்கிறியேண்டு கோவுச்சுப் பேசுறா்.

நஞ்ச – புஞ்ச வரணும்ண்டு கேட்டா். இவ எடமறுச்ச நக – நட்டு வரச்சொல்லுங்கண்டு சொன்னா. பொண்டாட்டி அரிப்பையும் சகுச்சுக்கிட்டு எல்லாத்தையும் வரவழச்சிட்டா்.

சாப்பாடு வாண்டு சொன்னா். அதுக்குள்ள நக கேளுண்டு சொன்னா. நா் இங்க என்ன பாடுபட்டுக் கேட்டுக்கிட்டிருக்கே. நிய்யி என்னடாண்டா, நக வா, மயிருவாண்டு கத்துறியேண்டு கோவத்துல சொன்னா். சொல்லவும் வீடு பூராவும் மயிரா வந்து நெறஞ்சு போச்சு. மயிரு வாண்டு சொன்னான்ல்ல. அதா் வருது. அளவு கடந்து வந்து, இவங்களப் போட்டு மயிரு மூடிக்கிருச்சு. மயிருத் தொந்திரவு பொறு--- முடியல. இதென்னடா வம்பாப் போச்சுண்டட்டு,

அந்தவெளம் – இந்தவெளம்ண்டு மாடமாளிகயும் வேணாம், ஒரு மயிரும் வேணாம் எல்லாம் போண்டு, கடசி உருண்டையப் போட்டா. நஞ்ச – புஞ்ச, நக – நட்டு எல்லாம் போயிருச்சு. கடசில பாத்தா, பழயபடி ஒட்டை வீட்டுக்குள்ள ஒக்காந்திருக்காங்களாம். இந்தக் கழுத நச்சரிக்காம இருந்தா என்னா. ஆச புடிச்ச கழுத, நக நட்டப் போட்டு, சும்மா அலைக்கச் சொல்லுதாக்கும்.

9. கிருஷ்ண மாயம்

முன்னொரு காலத்ல, பார்வதி – பரமசிவன், கிருஷ்ணர் – ராதா நாலுபேரும் வானத்த விட்டு, இந்தப் பூமியப் பாக்க வந்தாங்கள்ராம். மேல் ஒலகத்ல-கெடைக்கிற மாரி (மாதிரி), பூமில கெடைக்கல்லா போகுது. திங்க ஒண்ணுமே கெடைக்கல. பசிண்டா பசி, அப்டிப்பசி, என்னத்தயாவது திண்டு பசியப் போக்கணும்ண்டு நெனச்சு, அந்த ஊர்ல இருக்ற வீடுகளத் தேடிப் போனாங்க.

கால்போன வழியில போகயில, கிருஷ்ணரு ஒரு சக்கிலியன் வீட்டுக்குள்ள நொளஞ்சுட்டாரு. ஈசுவரன், ஒரு குடியானவன் வீட்டுக்குள்ள நொளஞ்சுபுட்டாரு. பார்வதியும் ராதாவும், எங்கயும் போகாம, அந்த எடத்லயே நிக்கிறாங்க.

கிருஷ்ணரு போன வீடு சக்கிலியன் வீடு. அங்க என்னா இருக்கும். மாட்டுக்கறி நெறயா இருந்திச்சு. பசிக்குப் பனங்காயி நஞ்சாண்டு, மாட்டுக்கறியப் பெறக்கிப் பிச்சுப் – புடுங்கிப் போட்டாரு. வகுறு நெறஞ்சுச்ச. ஏ....ண்டு ஏப்ப விட்டுக்கிட்டு வந்தாரு. ஈசுவரன் போன வீடு குடியானவன் வீடு. அங்க பாலு பழமிருக்கும். சோறு இருக்கும். குடியானவன் வீடு இல்ல! நெறயா பசு மாடுக இருக்கு. காங்காத மாடு கம்புல விழுந்த மாதிரி, பாலு பழத்தப் புடுச்சு அடிச்சுட்டு, ஏப்பம் விட்டுக்கிட்டு, இந்தப் பக்கமிருந்து வந்தாரு. ரெண்டு பேரும் வந்தாங்க. எங்க? பார்வதியும் – ராதாவும் இருக்ற எடத்துக்கு வந்தாங்க.

அப்ப நாலு பேரும் ஒண்ணு கூடுனாங்க. கிருஷ்ணரு போயி, சக்கிலிய வீட்ல, மாட்டுக்கறி திண்டத, ஈசுவர் பார்வதிகிட்டச் சொல்லிக்கிட்டு சிரிக்குறாரு. அப்ப, கிருஷ்ணன், மாட்டுக்கறி எனக்குப் பிடித்தமானது. அதுனால, அந்தச்

சக்கிலிய வீட்டத் தேடிப் போயி சாப்பிட்டே! ஒங்களுக்கு பிடிச்சது ஒங்களுக்கு. எனக்குப் பிடிச்சது எனக்குண்டு சொல்றாரு கிருஷ்ணன்.

ரெண்டு பேருக்கும் வாக்குவாதம் முத்திப்போச்சு. ரெண்டுபேரும் வாதம் பண்ணிக்கிட்டே, பார்வதிகிட்டப் போறாங்க. போயி, ரெண்டு பேரும் சாப்பிட்டதப் பத்திப் பார்வதிகிட்டச் சொன்னாங்க.

அப்ப, பார்வதிக்கு தர்ம சங்கடமான நெலம. இங்கிட்டுக் கணவன். அங்கிட்டு அண்ணன். யாரு பக்கம் ஞாயம் பேசுறதுண்டு தெரியாம, சங்கடப்பட்டுக்கிட்டிருந்தா.

கடசியா, ஒரு முடிவுக்கு வந்து, ரெண்டுபேரும் கக்குங்க. யாராரு என்னன்னா சாப்ட்டிருக்கிங்கண்டு பாக்கணும்ண்டு பார்வதி சொன்னா. பார்வதி சொன்னா மீற முடியுமா? சொல்லவும், ரெண்டுபேரும் கக்குனாங்க. கக்கவும், குடியானவன் வீட்ல, பாலும் பழமும் சாப்ட்ட ஈசுவரன், மாட்டுக்கறியும் எலும்புமாக் கக்குனாரு. சக்கிலியன் வீட்ல, மாட்டுக்கறி சாப்ட்ட கிருஷ்ணன், பாலும் பழமுமாக் கக்குனாரு.

அப்ப, கிருஷ்ணன், பாத்தயா பார்வதி! ஒம்புருசன் என்னா சாப்ட்டிருக்காருண்டு, சாப்பிட்டதத் தான கக்க முடியும். நாஞ் சாப்பிட்டத நா கக்குனே. அவரு சாப்டத அவரு கக்குனாரு. அவரவரு என்னா சாப்டாங்களோ, அதத்தான கக்கி இருக்குறாங்க.

ஆராரு என்னா நெனக்கிறாங்களோ, அதுதான மனசுல இருக்கும்ண்டு சொல்லிக்கிட்டு, ஈஸ்வரனப் பாத்து லேசாச் சிருச்சாரு கிருஷ்ணரு. ஈஸ்வரன் வெக்கப்பட்டு அங்கிட்டுத் திரும்பிக்கிட்டாராம்.

கிருஷ்ணரு பாத்து என்னென்னா செய்ய மாட்டாரு. மயாவதி இல்ல. மறச்சுப்பிட்டாரு.

10. தெய்வ நம்பிக்கை

ஒரு ஊர்ல – ஒரு வெறகு வெட்டி இருந்தர். தெனந்தோறும் வெறகு வெட்டி, பக்கத்து ஊர்ல போயி வித்திட்டு வந்து பொழச்சுக்கிட்டிருந்தர்.

ஒரு நா, காட்ல போயி, முனி மரத்ல ஒக்காந்து அடிமரத்த வெட்டிக்கிட்டிருந்தர். அப்ப, அந்த வழியா, பார்வதியும் – பரமசிவனும் வானவழியா வந்துகிட்டிருந்தாங்க. பார்வதி, மொதல்ல இதப் பாத்து, அங்க பாருங்க நாதாண்டு பரமசிவங்கிட்டச் சொன்னா. பரமசிவன் பாத்தாரு. பாத்திட்டு அவனுக்கு விதி முடிஞ்சிருச்சு. அதர் அப்டி வெட்டிக் கிட்டிருக்காண்டு சொன்னாரு.

அவனக் காப்பாத்த வழி இல்லயாண்டு பார்வதி கேட்டா. பொண்ணில்லையா? மனசு எளகிப் போச்சு. அதனால காப்பாத்தணும்ண்டு நாதங்கிட்டச் சொன்னா. சொல்லவும், பரமசிவனும் – சரி பெண்ணே! மரம் ஒடிஞ்சு விழும்போது, ஐயோ! அப்பாண்டு விழுந்தா, நாந் தாங்கிக்கிறே. ஐயோ! அம்மாண்டு விழுந்தா, நீ தாங்கிக்கண்டு பரமசிவன் சொன்னாரு.

மரம் ஒடிஞ்சு விழுந்திச்சு. விழுகும் போது, "ஐயோ! நாஞ்செத்தேண்டு விழுந்தர்".

பாத்தயா பெண்ணே! ஒன்னயயுங் கூப்டல, என்னயயுங் கூப்டல, செத்தேண்டுதான விழுந்தர். அவ் சாகட்டும். வா! போவோம்ண்டு சொல்லிட்டுப் போயிட்டாங்களாம். தெய்வத்து மேல, எப்பயும் நம்மளுக்கு நம்பிக்க இருக்கணும். அவங்கதர் நம்மளக் காப்பாத்துவாங்க.

11. சாமி சொன்ன மாதிரி

மேற்கு மலைத்தொடரின் அடிவாரத்தில், வடக்கத்திக் காளியம்மன் கோயில் இருக்கிறது. இப்பகுதியில், இந்த தெய்வத்தைப் பற்றிய கதை ஒன்று வழங்கி வருகிறது. உத்தமபாளையம் தாலுகாவில் தேவாரம், திம்மி நாயக்கன்பட்டி, தம்பி நாயக்கன்பட்டி, எரணம்பட்டி போன்ற ஊர்கள், இக்கதை வழங்கும் பகுதிகளாகும்.

எரணம் பட்டில ஒரு பொண்ணு, சின்னப் பிள்ளயா இருந்ததிலிருந்து, மேற்கு மலைக்கு வெறகெடுக்கப் போகுமாம். இந்தப் பிள்ள ஒண்ணுமா. அதுனால சிறுவயசுல இருந்து வெறகெடுத்து வித்து, அத வச்சுச் சாப்ட, இப்டியுமா இருக்கு.

வெறகெடுக்கப் போகயில, கெட்டுச்சோறு கொண்டு போகும். கொண்டு போறக் கெட்டுச் சோத்த, அந்தக் கோயிலுக்குள்ள வச்சிட்டு, வெறகு வெட்டிட்டு வந்து, அந்தக் கோயில்ல எரக்கி வச்சிட்டு, கெட்டுச் சோத்தத் திண்டுட்டு, வெறகத் தூக்கிக்கிட்டு வீட்டுக்கு வருமாம்.

இப்டியுமா இருக்கயில, அந்தப் பிள்ள வயசுக்கு வந்திட்டா. வயசுக்கு வந்ததோட வெறகெடுக்கப் போறா. அதத் திட்டுண்டு நெனைக்காம, கோயிலுக்குள்ள போயி, கட்டுச் சோற வக்யப் போகயில, அந்தச் சாமி! நில்லும்மா! இதுநா வரைக்கும் உள்ளார வந்த, நா ஒண்ணுமே சொல்லல்ல, இப்ப, நிய்யி வயசுக்கு வந்து திட்டா இருக்க. அதுனால உள்ள வராம, எது கொண்டு வந்தாலும், வெளிய, மரத்ல கட்டித் தொங்க விட்டுட்டுப் போ! நா பாத்துக்கிறேண்டு சொல்லிருச்சு.

சொல்லவும், கெட்டுச் சோத்த கோயிலுக்கு முன்னால இருக்ற மரத்ல, கட்டித் தொங்கவிட்டுட்டு, காட்டுக்குள்ள போயி, வெறகெடுத்துட்டு வந்து, கெட்டுச் சோத்த திண்டுட்டு, வெறகச் செமந்துகிட்டு வீட்டுக்குப் போயிட்டா.

இப்டி இருக்கயில, ஒரு நா, அவளுக்கு கலியாணம் முடிஞ்சிருச்சு. கலியாணம் முடிஞ்ச பெறகும் விடாம, வெறகெடுக்கப் போயிக்கிட்டிருக்கா. இருக்கயில, அவளுக்குப் பிள்ள பெறந்திருச்சு.

பிள்ள பெறந்த பெறகு, ஒரு நா, வெறகெடுக்க மலக்கிப் போறா. போயி, சாமி சொன்ன மாதிரி, கோயிலுக்கு முன்னால, மரத்ல தொட்டி கட்டிப் போட்டுட்டு, "வடக்கித்தியம்மா பாத்துக்கண்ட்டு" காட்டுக்குள்ள போயிட்டா.

இவ காட்டுக்குள்ள போகவும், காத்தும் மழயும் புடுச்சு அடிக்குது. மழ வெறிக்கும்-வெறிக்கும்ண்டு பாத்தா. வெறுச்ச பாடில்ல. இருக்க – இருக்க புடிச்சுத் தாறுமாறா அடிக்குது. மழ அடிக்கவும் பிள்ளயப் போட்டுட்டுப் போனவ, திரும்பிப் பிள்ளகிட்ட வர முடியல.

வர முடியாம இருக்கவும், அந்தக் காட்டுக்குள்ள, ஒரு கல்லடில, மரத்தடில ஒண்டி ஒக்காந்துகிட்டா. அண்ணக்கி ராத்திரியெல்லாம் மழ புடிச்சு அடிச்சிட்டு, விடியப் போகயில மழ விட்டுச்சு. பிள்ள நாபகத்ல ஓடயக் கடந்து, ஓடப்பக் கடந்து ஓடியாறா.

அண்ணிக்கி ராத்திரியெல்லாம் இவ வராம இருக்கவும், இந்தச் சாமி, பிள்ளயத் தூக்கி பால் குடுத்து, அழுகவிடாம

வச்சிருக்கு. இந்தச் சாமிதா், பாத்துக்கிறேண்டு சொல்லி யிருக்கில்ல. அதா், அழுக விடாம வச்சிருக்கு. விடிஞ்சு போச்சு.

விடியங்காட்டில, வெறகெடுக்கப் போனவளக் காணமேண்டு புருச் தேடி வாரா். இவனும் கோயிலுக்கு வர, அவளுங்கோயிலுக்கு வரச் சரியா இருந்திச்சு. பிள்ள நாபகத்ல இவனயும் பாக்காம கோயிலுக்குள்ள ஓடுறா.

ஓடிப்பாக்கயில, சாமி மடில பிள்ள இருக்கு. ஆவலா ஓடுனா. ஓடிப் பாக்கயில பிள்ள கல்லாப் போச்சு. ஐயையோ! கல்லாப் போச்சேண்ட்டு, அலறிக்கிட்டு வெளிய ஓடியாந்தா. வெளிய வந்து நிண்டு பாக்கயில, சாமி மடில இருக்ற கொழந்த துளும்பி அழுகுது. உள்ள ஓடிப்பாத்தா கல்லாப் போகுது. இப்டி, மாறி – மாறி தெரியுறதால, இவளும் ஏமாந்து அழுதுகிழுது, பொலம்பித் தவுச்சிட்டு, பிள்ளய எடுக்காம வீட்டுக்கு வந்திட்டா. அந்தப் பிள்ளதான் இப்ப, வடக்கித்தியம்மா மடில இருக்குது. இப்பயும் அப்டியே அந்தச் செல, அந்த மலையடிவாரத்ல இருக்குது.

IV. சமூக வரலாற்றுக் கதைகள்

1. பெரிய தனக்காரன்

ஒரு ஊர்ல – ஒரு பெரிய தனக்காரன் இருந்தா். இந்த ஊர்ல, ஒரே ஒரு கொசவன் வீ டு இருந்திச்சு. அவந்தா் அந்த ஊருல இருக்கிறவங்களுக்குச் சட்டி செஞ்சு குடுக்கிறா். சட்டி வித்து – சட்டி வித்து கொசவன் ந....ல்...ல பணக்காரனாயிட்டா். நம்மள மாதிரி கஷ்டப்படாம, ஏதோ ஒரளவுக்கு வசதியா இருக்கா்.

இருக்கயில, ஒருநா, இந்தப் பெரிய தனத்துக்காரன், கொசவங்கிட்டப் போயி, ஒரு குளுதாணி செஞ்சு குடுண்டு கேட்டா். கேக்கவும். கொசவன், குளுதாணி செஞ்சு குடுக்கல. துட்டுத் தர மாட்டாண்ட்டு, செஞ்சு குடுக்காம விட்டுட்டா்.

ஒரு குளுதாணி கேட்டு, செஞ்சு குடுக்க மாட்டேண்ட்டானே, வக்காலோளி, இந்தக் கொசப்பயல மட்டமாக்கணும்ண்ட்டு, வாய்ப்ப எதிர்பாக்குறா். யாரு? இந்தப் பெரியதனத்துக்கார்.

ஒருநா, அடுத்த ஊர்ல இருந்து, ஏலக்காப் பாரம் ஏத்திக்கிட்டு, ஏழு மாட்டு வண்டிக மருதைக்குப் போகுது. நம்ம மேலக்கால்ண்டு வச்சுக்கங்க. அங்கிருந்து போகுது.

போகயில, மழ புடிச்சுகிருச்சு. மழண்டா சோ...ண்...டு பேயுது. பேயவும், ஒடக்காடு – ஒடப்புக்காடெல்லாம் வெள்ளம் போகுது. அப்ப, அந்த ஊரு ஒடயில ஆளு கடக்க முடியாத வெள்ளம் போகுது. அடங்காத வெள்ளம். இந்த ஏழு மாட்டு வண்டிகளயும் இழுத்துக்கிட்டுப் போயிருச்சு. வெள்ளம் வத்தவும், அந்த ஊரு ஆளுங்க சிக்குன ஏலக்காய் மூட்டைகளத் தூக்கிக்கிட்டுப் போயி, வீ ட்ல வச்சுக்கிறாங்க.

அப்ப, இந்த ஏழு வண்டிக்காரங்களும் போயி, அந்த ஊருப் பெரிய தனத்துக்காரங்கிட்டப் போயி, இந்த ஏலக்காய் மூட்டைகள வாங்கித் தரச் சொல்றாங்க.

இதா சாக்குண்டட்டு, பெரியதனத்துக்காரன், ஊரச் சாட்டி, கூட்டத்தக் கூட்டிட்டா. இதுக்கு மொதல்ல. இந்தப் பெரிய தனத்துக்காரன், என்னா செய்யுராண்டா, அந்த ஊருக் கோடாங்கி, குறி சொல்றவனக் கூப்பிட்டு, விசயத்தப் பூராஞ் சொல்லிட்டா.

எப்டிண்டா;

கொசவன் சுள்ள போட

புகை கிளம்ப

மேகந் திரள

மழ பேயண்டு

எழுதி, பிள்ளையாருக்கடில வச்சிரு. நாங்க, ஒன்னயக் கூப்பிட்டுக் கேப்போம். அப்ப, நிய்யி, பிள்ளையாரடி — பிள்ளையாரடிண்டு உடுக்க அடி. அப்புறம் நாங்க பாத்துக்றோம்ண்டு பெரியதனத்துக்காரன் சொல்லிப்பிடுறா.

சொல்லிப்பிட்டு, ஊரக் கூட்டிப் பஞ்சாயத்து வக்கிறாங்க. அப்ப, ஏலக்காய் வண்டிக்காரங்க, ஏழு பேரும் நிக்கிறாங்க. அப்ப, அந்தக் கொசவனும் வந்து, வேடிக்க பாத்துக்கிட்டு நிக்கிறா. அவனுக்கு எந்த விசயமுமே தெரியாது.

அப்ப: கூட்டத்துல பெரியதனத்துக்காரன் சொல்றா; நம்ம ஊர்ல திடீர்ண்டு மழ பேஞ்சு, வெள்ளம் வந்து, ஏழு வண்டி ஏலக்காய இழுத்திட்டுப் போயிருச்சு. இப்ப, இவங்க நம்மகிட்ட நட்டஈடு கேக்குறாங்க. திடீர்ண்டு மழ பேஞ்சதுக்கு, என்னா காரணம்ண்டு, மொதப் பாக்கணும். அதுக்கு — கோடாங்கிய, சாமியெரக்கிக் கேக்கணும்ண்டு சொல்றா. அந்த ஊர்ல — எதுக்கெடுத்தாலும், சாமியெரக்கி, சாமியத்தா கேக்குறது வழக்கம். இதுக்கும் சாமியெரக்கிக் கேக்குறாங்க.

அப்ப, கோடாங்கி, உடுக்கடுச்சுச் சாமியெரக்குறா். எப்டி உடுக்கடிக்கிறாண்டா பிள்ளையாரடி – பிள்ளையாரடிண்டு அடிக்கிறா். அடிச்ச அடில, உடுக்கு ஒடஞ்சு போச்சு. உடுக்கு ஒடயவும், சாமி மலையேறியிருச்சுண்ட்டு ஒக்காந்துக்கிட்டா். பிள்ளையாரடி – பிள்ளையாரடிண்டு அடிச்சானே. பிள்ளையாருக்குக் கீழ குறி இருக்குமோண்ட்டு, பிள்ளையாரத் தூக்குனாங்க. எல்லாம் பெரியதனத்துக்காரனோட செட்டப்தான். தூக்கிப் பாத்தா, கீழ ஒரு ஒல இருக்கு. அந்த ஓலைல

கொசவன் சுள்ள போட

புகை கிளம்ப

மேகந் திரள

மழ பேயண்டு

இருந்திச்சு. இருக்கவும் எல்லாரும் கொசவனப் புடுச்சுட்டாங்க. மழ பேஞ்சதுக்கு, கொசப்பயதான் காரணம்ண்ட்டு, அவனத் தெண்டம் வச்சுப்பிட்டாங்க. ஏழு வண்டி ஏலக்கா, மாடு – வண்டி அம்புட்டயும் கொசவந்தான் தரணும்ண்டு பெரியதனத்துக்காரன் சொல்லிட்டா். மீற முடியல, சொத்தப் பூராத்தயும் வித்துக் குடுத்திட்டா்.

சொத்துப் போகவும், ஏழயாப் போனா், கொசவன். ஏழயாப் போன கொசவன், வாழ்க்கைல ரொம்பக் கஷ்டப்படுறா்.

ஒருநா தேவையில, பெரியதனக்காரன் வயக்காட்டுக்குப் போறா். போகயில, இந்தக் கொசவன் மேக்க திரும்பி, வானத்தப் பாத்துக்கிட்டு இருக்கா். என்னா? மேக்க பாத்துக்கிட்டு நிக்கிறண்டு பெரிய தனக்காரன் கேக்குறா். அப்ப, எம் பொண்டாட்டி சட்டி விக்யப் போனா. இன்னும் வரல. அதான் பாத்துக்கிட்டிருக்கேண்டு கொசவன் சொல்றா்.

வரலண்டு சொல்லவும், பெரியதனக்காரனுக்கு மனசு எரங்கிப் போச்சு. அவ் மேல ரொம்ப எரக்கப்பட்டு, ஒனக்கு நல்ல காலம் வருது, நிய்யி நாலஞ்சு சட்டி செய்ண்டு பெரியதனக்காரன் சொல்றா். சட்டி செஞ்சு ஆடி மாசம் பதினெட்டாந் தேதி அண்ணக்கி, சுள்ளய வையி, நான் ஒன்னய பொழைக்க வக்கிறேண்டு சொல்லிட்டுப் போயிட்டா்.

போகவும், நாலஞ்சு சட்டிகள, சும்மா பேருக்குச் செஞ்சு, ஆடி மாசம், பதினெட்டாந் தேதி சுள்ளய வச்சிட்டா் கொசவன்.

அண்ணக்கி மழ பேஞ்சிருச்சு. கொசவ், பெரியதனக்காரன் வீட்டுக்கு வந்தா். நான் சுள்ள வச்சதுனால தான் மழ பேஞ்சுச்சு. இது என்னோட மழ. ஊர்ல யாரும் வெதைக்கப்பிடாதுண்டு தண்டக்காரன விட்டுச் சாட்டச் சொல்றாண்டு பெரியதனக்காரன் சொல்லித் தந்துட்டா். விடுவானா கொசவன்?

பெரியதனக்காரன் சொன்னது மாதிரி சாட்டிப்பிட்டா். வெதைக்கவிடாமச் செஞ்சுபிட்டா்.

ஊர்ல பஞ்சாயத்துக் கூடுது. அப்ப, பெரியதனக்கார், அண்ணக்கி அவன் சுள்ள போடவும் மழ பேஞ்சுச்சு. இண்ணக்கிஅவன் போட்ட சுள்ளயினாலதா் மழ பேஞ்சுச்சு. பாவம், அவனும் ரொம்ப ஏழயா இருக்கா். அதுனால, அவனுக்கு ஏதாச்சும் குடுத்துட்டுப் போயி, வெதைங்கண்டு பெரியதனக்காரன் சொல்லவும்,அதுவும் சரிதாண்டு ஊராளுங்க சொல்றாங்க.

பெரியதனக்காரன சொல்லவும், ஏருக்கு நாலஞ்சு ரூபா எல்லாரும் ஒப்புக் கொண்டுகிட்டு, ரூபாயத் தந்தாங்க. அத வாங்கி நல்லாப் பொளச்சானாம். காரியக்காரனப் பகைக்கக் கூடாதுண்றது இதுக்குத்தான். பெறகெதுக்கு.

2. மகா கஞ்சன்

ஒரு ஊர்ல, புருச் பொண்டாட்டி இருந்தாங்க. புருச் இருக்கானே மகாக் கஞ்சன். அவ் அதுக்கு மேல சிக்கனகாரி. யாரயும் ஏமாத்தி பணஞ் சம்பாரிப்பா். ஏமாத்தி படுபாதாளத்லயும் தள்ளியும் விட்டுருவா். லேசுல, இவ் சம்பாரிக்கிறத செலவளிக்க மாட்டா். செலவளிக்காம மிச்சம் புடுச்சு வச்சிட்டு, கூழாக் காச்சி குடுச்சுக்கிட்டு காலத்தப் போக்கிக்கிட்டிருக்காங்க.

இருக்கயில, இவ் வீட்டுக்கு எதுத்த வீட்ல, ஒரு பணக்காரன் இருந்தா். வர்ர வருமானத்த வச்சு, வசதியா சாப்பிட்டுக்கிட்டிருந்தா். இது இவனுக்குப் பொறுக்கல. ஆருக்கு? கஞ்சனுக்குத்தான். எதுத்த வீட்டுக்காரன, எப்டிண்டாலும் ஏழயாக்கிப்பிடணும்ண்டு பாக்குறா்.

இப்டி இருக்கயில, கஞ்சனும் – கஞ்சன் பொண்டாட்டியும் அவங்க குடிக்கிற கூழுக்கு, பாலுண்டு பேரு வக்கிறாங்க. கூழுக்குப் போடுற உப்புக்கு, சக்கரண்டு பேரு வக்கிறாங்க. கடுச்சுக் குடிக்கிற பட்ட மொளகாய்க்கு, பழம்ண்டு பேரு வக்கிறாங்க.

ஒருநாள், சாப்பிடப் போகயில, பால, பழஞ் சக்கர கொண்டு வாடிண்டு, அடுத்த வீட்டுக்காரனுக்கு கேக்குற மாதிரி சத்தம் போட்டு, பொண்டாட்டிகிட்ட சொல்றா். சொல்லவும், பொண்டாட்டி, கூழு, பட்ட மொழகா, உப்பு கொண்டு வர்ரா. கொண்டு வந்து, கூழக் குடிச்சிட்டு, எண்ணயில கையத் தொட்டுட்டு வந்து வெளிய கை கழுவுறா். கூழக் குடிக்கிறது, எண்ணயில கைய முக்குறது, வாழ எலயில

தடவுறது, வெளிய கொண்டு போயி போடுறது. இப்டியே தெனமும் நடக்குது. அடுத்த வீட்டுக்காரப் பணக்காரனுக்கு ஏகப்பட்ட சந்தேகம். அவனே கஞ்சனாச்சே. எப்டிறா இதெல்லாஞ் செய்யுறீண்டு, சந்தேகப்பட்டு இவனும் ஆரம்பிச்சுட்டாா்.

கஞ்சனே பால் பழந் திங்கிறபோது, நம்ம எப்டி சோற மட்டும் திண்டுகிட்டிருக்கிறதுண்ட்டு, இவனும் பாலுபழம் திங்க ஆரம்பிச்சிட்டாா்.

அவ் கூழக் குடிச்சுப்பிட்டு வந்து, எண்ணயில கைய நனச்சு, எண்ணயோட வாழ எலயக் கொண்டு வந்து வெளிய போடுறா். பணக்காரன் என்னா செய்யிறாா்ண்டா, உம்மயாவே பாலு, பழம் வேணுங்றதெல்லாம் வாங்கி சாப்ட்டு, ரூவாய வீணாச் செலவளிக்கிறா்.

அப்ப, கஞ்சனுக்குப் பணம் பெருகுது. பணக்காரன் பக்கத்ல பணங்கொறயுது. கஞ்சனுக்கு, இவன எப்டிண்டாலும் ஏழயாக்கணும்ண்டுதான; இதெல்லாஞ் செய்யுறா்.

அவ் செய்யுறது, பணக்காரனுக்குத் தெரியல. நாளுப் போகப் போக சூச்சியத்த தெரிஞ்சுக்கிட்டு, பழயபடி, எப்பயும்போல பொளப்ப நடத்துனானாம். இதுக்குத்தான், பக்கத்து வீட்டுக் காரனப்பாத்து எதயும் செய்யக் கூடாதுண்டு சொல்றது. பக்கத்து வீட்ல ஆயிரம் நடக்கும். நம்ம, நம்ம வீட்ட மட்டும்தான பாக்கணும்.

3. சுடுகாடு போற வரைக்கும்

ஒரு ஊர்ல, ஒரு ஏழக் குடும்பம். அந்தக் குடும்பத்ல, அண்ணனுந் – தங்கச்சியும் இருந்தாங்க. அப்ப, தங்கச்சி வயசுக்கு வந்திருச்சு. எப்டியாச்சுந் தங்கச்சியக் கட்டிக் குடுத்துறணும்ண்டு நெனக்கிறா். வயசுக்கு வந்த பிள்ளய,வீட்ல வச்சிருக்கக்கூடாதுண்டு நெனச்சுக்கிட்டிருக்கயில, அவன மாதிரி ஒரு ஏழ, பொண்ணு கேட்டு வரா். பின்ன... அவ் வீட்டுக்கு பெரிய – பெரிய பணக்காரங்களா வருவாங்க? தங்கச்சிய அந்த ஏழக்கி, கட்டிக் குடுத்திருறா்.

ஒரு வருசமாச்சு. இப்ப மாதிரி அப்பயெல்லாம் யாரும் ஒதவி செய்ய மாட்டாங்க. இப்ப மாதிரி கடங்குடுக்குற பேங்கெல்லாம் அப்ப இல்ல. இப்ப மாதிரி பிள்ளைங்களுக்கு எம்சியாரு ஆட்சில சத்துணவு போடுறதெல்லாம் அப்ப இல்ல. அப்ப, தங்கச்சிக்கு அண்ணந்தான் ஒதவி செய்யணும். இது அந்தக் காலத்ல செய்யிறமொற.

தங்கச்சிக்குப் புள்ள பொறக்குது. பெறந்த பிள்ளய, இலுப்ப மரத்ல தொட்டி கட்டிப் போடுறது, அந்தக் காலத்ல வழக்கம். அப்டி இருக்கயில, அண்ணன், இலுப்ப மரம் வெட்டிட்டுப் போயி, தொட்டி கட்டி, தங்கச்சி புள்ளய அதுல போடணும். இவ் என்னா செய்யுறா். வருமையோட வருமையா, இதயும் செய்யணும். வருமைங்கறதுக்காக செய்மொறய விட்டுற முடியுமா? விட முடியாது! விட முடியாம,

காலைல, வெள்ளனா எந்திருச்சு, அருவாள எடுத்துக்கிட்டு மலைக்குப் போறா். எதுக்கு? இலுப்ப மரம் வெட்டுறதுக்கு.

இலுப்ப மரம் வெட்டிட்டு வர்ரா. வந்து, அதுல தொட்டி கெட்டி, தங்கச்சி புள்ளயப் போட்டு ஆட்டி விட்டுட்டு, சோறு திங்காம வெளியேறி ஊருக்கு வாரா. சோறு திங்காம ஏ.... போறாண்டு தெரியுமா? தங்கச்சி வீட்டுல வரும (வறுமை) ஜாஸ்தி. நாம திங்கிற சோறு, பாவம் பிள்ளைக திண்டுகிரட்டும்ண்டு நெனச்சுக்கிட்டு வாரா. அப்ப, அண்ணன் ஆட்டி விட்ட தொட்டியப் புடுச்சு ஆட்டிக்கிட்டு, தங்கச்சி, தொட்டிப் பாட்டுப்பாடி அழுகுறா.

எப்டிப் பாடுறாண்டா

பச்ச இலுப்ப வெட்டி

பால் வடியத் தொட்டி கட்டி

தொட்டியில இட்ட மாமன்

சோறு தின்னாமப் போறானே–ண்டு

தொட்டியாட்டுறா. அப்ப, அண்ணன், தங்கச்சியத் திரும்பிப் பாத்திட்டு, தங்கச்சி தும்பத்த திக்க (தீர்க்க) முடியாத தன்னோட நெலய எண்ணி, ரொம்ப அழுது பொலம்பிக்கிட்டே நடந்து, ஊருக்கு வந்தானாம். இப்ப, நாங் கசுட்டப் படுறபோது எங்கண்ணன் பாத்துக்கிட்டிருக்குமா? அது போலதா. அண்ணந் – தங்கச்சி பாசங்கறது எண்ணைக்கும் போகுமா? மண்ட, சுடுகாடு போற வரைக்கும் பாசம் இருக்கும். சும்மாவா!

4. வெறகு வெட்டி

ஒரு ஊர்ல – ஒரு தகப்பனுக்கு, அண்ணந்தம்பி நாலு பேரு இருந்தாங்க. மூத்தவனுக்குக் கல்யாண வயசு வந்திருச்சு. கல்யாணம் முடிக்கணும்ண்டு தகப்பன் நெனச்சர். ரூவாய்க்கு, மொதலாளிகிட்டக் கேக்கச் சொல்லி, தகப்பனப் போகச் சொல்றர். ரூவா குடுத்தா, நெலத்ல வேல – கூலி செஞ்சு, கடனக் கழிச்சிருவோம்ண்டு, மொதலாளிகிட்டச் சொல்லி, ரூவா வாங்கிட்டு வரச் சொல்றர்.

கடன ஒடன வாங்கி, கல்யாணத்த முடுச்சுட்டாங்க. கல்யாணம் முடிஞ்ச மறுநாளே, வேற ஒல வைக்கணும்ண்டு, தகப்பங்கிட்டக் கேட்டர். கல்யாணத்துக்கு வாங்குன கடன அடைக்கல. அத, அடைக்கிறது ஆருண்டு தகப்பன் கேக்குறர். அதுனால, தகப்பன் சம்மதிக்கல. சம்மதிக்காம இருக்கவும், தகப்பன் சொல்றதக் கேக்காம தனியாப் போயிட்டர். கையில இருந்தத வச்சு நாலஞ்சு நா சாப்பிட்டாங்க. பெறகு கையில மெல்யில இல்லாமப் போகவும், அடுத்த வீட்டுப் பொம்பளகிட்ட, ரெண்டு படி சோளம் வாங்கிட்டு வரச்சொன்னர். சொல்லவும், போயிக் கேட்டர். கேக்கவும், அவளும் மறுப்புச் சொல்லாம குடுத்திட்டா. அந்தச் சோளத்த வாங்கி இடுச்சுக்கிடுச்சு, களியாக் கிண்டி, ஒரு ஆப்ப சோத்தத் திண்டுட்டு, ஒரு ஆப்ப சோத்தக் கட்டுச் சோறாக் கட்டிக்கிட்டு, மலைக்கு, வெறகு வெட்டப் போறர்.

மத்தியானத்ல, கட்டுச் சோற எடுத்துக்கிட்டு, ஒரு தெப்பத்துக்குப் போறர். தெப்பத்ல, பாத்தா மீனுக நெறயா இருக்கு. கட்டுச் சோத்தத் திண்டுட்டு, அஞ்சாறு மீனப்புடுச்சு, அதுல வச்சுக் கட்டிக்கிட்டு மசங்க – மசங்க வீட்டுக்கு வாரர்.

வீட்டுக்கு வந்ததும், அருவாமணய எடுத்திட்டு வாடிண்டு சொல்றர். பொண்டாட்டி அந்த இருட்ல தேடி அருவாமணய எடுத்திட்டு வந்து குடுத்தா. கொண்டு வந்த மீன அறுத்துச்

சுத்தஞ் செய்யுறா். பொண்டாட்டி மஞ்ச மொளகா அரைக்கிறா. ஒரு மீன அறுக்கவும், அதுல இருந்து, முத்து முத்தாக் கொட்டிருச்சு. பொண்டாட்டிக்குத் தெரியாம அள்ளித் தவுடு இருக்கிற அடுக்குப் பானக்குள்ள வச்சிட்டா்.

வச்சிட்டு, விடியவும் எந்திருச்சு, பெறகும் மலக்கிப் போறா். போயிறவும், அண்ணக்கிப் பகல்ல ஒருத்த், தவுடு இருக்கா – தவுண்டு சத்தம் போட்டுக்கிட்டுத் தெரு வழியா வந்தா். நம்ம வீட்லதான் ரெண்டு சேர் தவுடு இருக்கே. அதப் போட்டு காசு வாங்குவோம்ண்டு, குத்து மதிப்பாக் குடுத்திட்டுக் காச வாங்கிட்டா.

மலக்கிப் போயிட்டு, மசங்கற நேரத்ல வந்தா். இவ கருவாட்டுச் சாறு வச்சு, சோளக்களிக் கிண்டி வச்சிருக்கா. வந்தா். நல்லாத் திண்டா், திண்ட்டு, வெத்தல வாங்கக் காசு கேக்குறா். கேக்கயில, தவுடு வித்த காசு இருக்கு மச்சாண்டு சொன்னா. அடி கண்டாரோளி! அதுக்குள்ள இருந்து ஒண்ணு கூட எடுக்கலயாண்டு கேக்குறா். இல்லேண்டு சொன்னா. கடவுள் குடுத்தது கூட நமக்கு ரவிக்கலேயேண்டு வருத்தப்பட்டுப் படுத்துக் கெடந்துட்டு, விடியவும் மலைக்கிப் போறா்.

அஞ்சாறு வெறகெடுத்துக்கிட்டு, அந்தத் தெப்பத்ல போயி, ரெண்டு மீனப் புடுச்சுக்கிட்டு வீட்டுக்கு வாரா். வந்து, மீன அருவாமணயில வச்சு அறுக்கவும் உள்ள இருந்து முத்து கொட்டுச்சு. அள்ளிக் கொண்டு போயி, கொட்டமுத்து இருக்கிற பானக்குள்ள வச்சுட்டு, படுத்துக்கிட்டா். விடியவும் எந்திருச்சு வெறகு வெட்ட மலக்கிப் போயிட்டா்.

காலைல கொட்டமுத்து இருக்கா? கொட்டமுத்துண்டு கேட்டுக்கிட்டுத் தெரு வழியா ஒருத்த் வந்தா். அதயெடுத்து வெலக்கிப் போட்டுட்டா. புருசன் வரவும், கொட்டமுத்த வெலக்கிப் போட்டுட்டேண்டு சொன்னா. கண்டாரோளி முண்ட!

கெடுத்தாள குடியண்டு, அவள, அடி அடிண்டு அடுச்சு அவங்னப்பன் வீட்டுக்கு வெரட்டி விட்டுட்டார்.

பொண்டாட்டிய வெரட்டி விட்டுட்டு, ரொம்ப வருத்தத்தோட, காலையில எந்திருச்சு, வெறகு வெட்ட மலக்கிப் போறார். போனவ், வெறக வெட்டாம, நே ..ரா... தெப்பத்துக்கே போறார். போயி, மீனப் புடுச்சுக்கிட்டு, ரெண்டு வெறகையும் வெட்டிக் கெட்டிக்கிட்டு, வீட்டுக்கு வர்றார். வந்து, எத அறுத்துப் பாத்தாலும் வெறும் முத்துக்களா இருக்கு. இந்தத் தடவ வீட்டுக்குள்ள வைக்காம நேரா ஆசாரிகிட்ட அள்ளிட்டுப் போயி, பூராத்தயும் வித்துப் பணமாக்கிடணும்ண்டு நெனச்சு, ஆசாரிகிட்டப் போறார். போயி கேக்கயில, ஆசாரி அத வாங்கிக்கிட்டு நெறயா பணம் குடுத்தர். அந்தப் பணத்த வச்சு. மொதல்ல வீடு கட்டணும்ண்டு நெனச்சு, வீட்டுக்கான எடத்தத் தேடிப் போயி, ஒரு எடத்த வெலைக்கிக் கேக்குறார்.

அப்ப: அவஞ் சொன்னார் ஆரு? வீடு விக்கிறவ். ஏண்டா! வெறகு வெட்டி!! இந்த எடத்துக்கு ஒன்னால பணங் குடுக்க முடியுமாண்டு கேட்டார். ஆயிரம் ரூவாய அவங்கிட்டத் தூக்கிப்போட்டுட்டு, எடத்த வாங்கிட்டார். வாங்கி, ஊரு ஆளுக, ஆச்சரியப் படுற மாதிரி வீட்டக் கட்டுறார்.

வீட்டு வேல நடந்துக்கிட்டிருக்கப்ப, பொண்டாட்டி முக்காடு போட்டுக்கிட்டு வந்தா. வரவும், கம்பெடுத்து கெணாசுரார். கெணாசிப்பிட்டுப் போயி, வேலயப் பாரு விள்ளண்டு சொல்றார். மூச்சுவிடாமப் போயி, வேலயப் பாக்குறா. வீடு முடிஞ்சிருச்சு, கிரகப் (பிரவேசம்) பிரசனம் நடத்துறதுக்கு, நிய்யி போயி, நொய்யங் – கொப்பனக் கூட்டிட்டு வா. நாம் போயி, ஞாயிங் – நப்பனக் கூட்டிட்டு வாரேண்ட்டு, பொண்டாட்டியப் போகச் சொல்லிட்டு, இவனும் போயிட்டார். பெறகு, எல்லாரும் வந்தாங்க. கெரகப்பிரவேசம் நடந்திச்சு. பெறகு நல்லா வாந்தாங்களாம். அவனுக்கு நல்ல நேரம் வந்திருச்சு. நம்மளுக்கு இன்னும் வரலியே.

5. மருவாதி

ஒரு ஊர்ல, அண்ணந் தம்பி இருந்தாங்க. அவங்களுக்கு ஒரு தங்கச்சி இருந்தா. தங்கச்சி கொள்ள அழகு. அவள, ஒரு பக்கத்து ஊரு பணக்காரன், கலியாணம் முடுச்சுக்கிட்டுப் போயிட்டா.

அதுக்குப் பெறகு, அண்ணனும் கலியாணம் பண்ணிக்கிட்டா. தம்பிக்கும் ஒரு நல்ல பொண்ணா பாத்து கலி யாணம் செஞ்சு வச்சா.

இந்த சமயத்ல, அண்ணனுக்கு நல்ல நேரம். நல்லாப் பொளக்கிறா. தம்பிக்குக் கெட்ட நேரம். சொத்தெல்லாம் போயி, ஏழயாப் போயிட்டா. தங்கச்சி பணக்காரியா பொளக்கிறா.

ஒருநா அண்ணனும் – தம்பியும் தங்கச்சி வீட்டுக்குப் போறாங்க. அப்ப, தங்கச்சி, சின்ன அண்ணனுக்குக் கேப்பக் களியும், பெரியண்ணனுக்கு அரிசிச் சோறும் போட்டு வச்சா. சின்னண்ணன் ஏழயில்ல. அதனால – அவனுக்கு கேப்பக் களி.

வீட்டுக்கு வந்தாங்க. அண்ணன், தம்பிக்குக் கொஞ்ச நெலமும், ஒரு சோடிக் காளமாடுங் குடுத்தா. அத வச்சு, வெவசாயம் பண்ணி, மாடி வீடு கட்டி, பெரிய பணக்காரனாயிட்டா. ஆரு? தம்பி.

அண்ணந் தம்பிக, ரெண்டுபேரும் வீடும், எதுக்க – எதுக்க இருக்குது. தங்கச்சி, பெரிய அண்ணன் வீட்டுக்குப் பெண் கேட்டு வர்ரா. வந்தவ, சின்ன அண்ணன் வீட்டப்

பாக்குறா. பாக்கயில, வீடு பெரிசா இருக்கு. சின்ன அண்ணன் வீட்லயும் பெண் இருக்கு. பெரிய அண்ணன் விட்டுக்குப் போகாம, தாங் கொண்டு வந்த ஏழு தட்டுப் பொன்னயும் சின்ன அண்ணன் வீட்ல எரக்கிட்டா.

கொண்டு வந்ததெல்லாத்தயும் சின்ன அண்ண வீட்ல வச்சுட்டு, மகனுக்குப் பொண்ணு குடுக்கணும்ண்டு கேக்குறா.

அண்ணமாரு ரெண்டு பேருஞ் சேந்து, அவ கொண்டு வந்ததெல்லாத்தயும் புடுங்கிக்கிட்டு, வீட்டுக்குள்ள விடாம வெரட்டியடுச்சுட்டாங்க.

பேராச புடுச்சவளுக்கு எப்டி மருவாதி கெடைக்கும் அழுதுகிட்டு ஊருக்குப் போனாளாம். வீட்டப் பாத்து, பொண்ணு கேக்குறா பாரு. இந்தக் காலத்ல ஆள ஆரு பாக்குறா.

6. பெத்த மனசு

ஒரு தாயிக்கு ஒரு மகன். அந்த மகனக் கஸ்டப்பட்டு வளத்தா. வெளிய என்னா கெடச்சாலுங் கொண்டு வந்து குடுத்து, நல்ல அம்போட வளக்குறா. பெத்த மனசு, பிள்ளய வாடவிடுமா? வாட விடாம வளக்குறா.

வளக்கயில, பெரியாளா ஆயிட்டா். மகனுக்கு, ஒரு கல்யாணத்த முடிச்சு வைக்க நெனச்ச, ஒரு மகராசி மகளக் கல்யாணம் முடிச்சு வச்சிட்டா. கல்யாணம் முடிச்சு வைக்கவும், பொண்டாட்டி பேச்சக் கேட்டுக்கிட்டு, பெத்த தாய்க்குக் கஞ்சி ஊத்த மாட்டேண்ட்டா்.

ஊத்த மாட்டேண்டு சொல்லவும், பாவம், இந்தப் பெத்தவ, வீட்ட விட்டு வெளியேறிப் போயி, சத்ரஞ் – சாவடில இருந்துகிட்டா. இருந்துகிட்டு அங்கன ரெண்டு வீட்ல எடுத்துக் குடிச்சுக்கிட்டு இருக்றா. எடுத்துக் குடிக்கக் கூடத் துபாயம் இல்லாமப் போச்சு. எந்திரிச்சுப் போக முடியாம தவந்துகிட்டுப் போயி, அங்கன ரெண்டு வீட்ல வாங்கி, வகுத்த நெரப்பிக்கிறது. அந்தச் சாவடில நொடக்கிக்கிறது. இப்டியுமா இருக்கா.

இருக்கயில, ஒருநா, செத்துப் போனா. செத்துப் போகவும், பாத்தவக போயி இவங்கிட்ட, ஒங்கம்மா செத்துப் போனாண்டு சொன்னாக. செத்துப் போனாளாண்ட்டுப் போறா். போயி, தூக்கித் தோள்ல போட்டுக்கிட்டு வாரா்.

வரயில, இவன, ஊரே எச்சியக் காரித் துப்புது. பெத்த தாய்க்குக் கஞ்சி ஊத்தாம தன்னால விட்டவ், இண்ணக்கி இப்டி செய்யலண்டா நாங்க ஊருக்காரு, ஒரு சில எடுத்துப் போட்டு தானஞ் செய்ய மாட்டமாண்டு சொல்றாங்க.

அதயும் மீறி, வீட்டுக்குக் கொண்டு வந்து, பொன்தேருக் கட்றா. பூப்பந்தப் போடுறா, கொட்டுறா, மொழக்றா, கும்மறச்சம் போடுறா. இப்ப, தொலதூரத்ல வாக்கப்பட்டிருந்த தங்கச்சிக்கு ஆள்விட்டு, அவ அழுது வாரா. எப்டிண்டா:

சத்திரத்த தூத்தாத்தா

சாவடியக் காத்தாத்தா

சந்த மடஞ் சாவடியே - ஒனக்கு

தண்ணி குடுக்க நாதியில்ல - இண்ணக்கி

ஒனக்கு கொட்டேது - மொழக்கேது

கோல வர்ணத் தேரேது - ண்டு

அழுது வாரா. தங்கச்சி வாராண்டு சொல்லவும், இங்க போட்டுட்டு, எதுக்க ஓடுறா. அப்ப, பாத்தவங்க, தங்கச்சிகிட்ட, தாயி செத்ததச் சொல்லி, அழுகத்தா போறானாக்கும்ண்டு நெனக்கிறாங்க. இவ் எதுக்க ஓடி, எப்டிம்மா தங்கச்சி அழுது வர்ர. இப்டி அழுதா எனக்கு .அசிங்கமில்லயா? அப்டி அழுகாதமா,

பாண்டியனவ காத்தா

பாலு விக்கிச் செத்தா – ணடு

அழுமாண்டு சொல்றா. “அப்பப்பா!” “பாலுஸ்டர் வேட்டி கட்டணும்ண்டு அப்டிக் கொட்றா”, “கஞ்சி ஊத்தாத படுவா! பூப்பந்த போடுறானோ? “செத்த பெறகு இதெல்லாம் கேக்குதா”, இப்படிக் கதை கேட்டவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பெறகு அழுதுகிழுது, தூக்கி தானஞ் செஞ்சுண்ட்டுப் போனானாம்.

7. தோல் தட்டிப் போயி

ஒரு ஊர்ல, அண்ணந் – தம்பி ரெண்டு வேரு. தாய் – தகப்பன் இல்ல. மூணு மாடுதான் இவங்க சொத்து. இந்த மூணு மாட்டயும் வச்சு, வேல செஞ்சுக்கிட்டு இருக்கயில, ரெண்டு வேருங் கலியாணஞ் செஞ்சுகிட்டாங்க.

வந்தவ சும்மாவா இருப்பா! குடும்பத்ல கசபுசலாகுது. இப்ப எங்க வீட்ல மாதிரி.

அண்ணனுந் – தம்பியும் பங்கு பாகம் பிரிக்றாங்க. பிரிக்றதுக்கு அங்க என்னா இருக்கு? மூணு மாடுதான, இதுல அண்ணனக்கு ரெண்டு மாடு. தம்பிக்கு ஒரு மாடுமா பிரிச்சுக்கிட்டாங்க.

அண்ணன் பொண்டாட்டி, தம்பியக் காங்கவிட மாட்டேங்குறா. கரிச்சுக் கொட்டுறா. தம்பி வச்சிருக்கிற, அந்த ஒரு மாட்டயும் கொல்லச் சொல்லி, புருசனத் தூண்டி விடுறா.

பொண்டாட்டி சொல்லக் கேட்டுக்கிட்டு, தம்பியோட, ஒரு மாட்டயும் கொண்டு போட்டுட்டர். தம்பிக்கு ரொம்ப வருத்தம். அண்ணன, என்னா செய்யுறதுண்டட்டு, அந்தத் தோல எடுத்துக்கிட்டு, சந்தக்கி விக்கப் போறர்.

வெள்ளணாவே எந்திருச்சுப் போறர். போற வழில, கழவாணிங்க, கழவாண்ட காசுகளப் போட்டு, ஆளுக்குக் கொஞ்சமா பகுந்துகிட்டிருக்காங்க.

இவ், பயந்துகிட்டு, தோலத் தட்டிக்கிட்டே போறர். தோல் சத்தத்தக் கேட்ட கழவாணிங்க, தோல் தட்டிப் பேயி வருதுண்டட்டு, பணங்காசுகளப் போட்டுட்டு ஓடிப் போயிட்டாங்க. இவ்

—அந்தப் பணங் காசுகள, தோலுக்குள்ள அள்ளிப் போட்டுக் கெட்டிக்கிட்டு, வீட்டுக்கு வந்திட்டா். வீட்ல வந்து கொட்றா். பொண்டாட்டிக்கிண்டா ஆச. இங்கிட்டோடுறா! அங்கிட்டோடுறா! கடசில,

பணத்த அளக்க, அண்ணன் வீட்ல போயி நாழி (படி) வாங்கிட்டு வாடிண்டு பொண்டாட்டிய அனுப்பி வைக்கிறா். பொண்டாட்டி போயி, படி குடுக்காண்டு, மச்சான் பொண்டாட்டிக்கிட்டக் கேக்றா. அப்ப, அவ சொல்றா, ஒங்கிட்டத்தான் ஒண்ணுமில்லயே, படி எதுக்குடிண்டு கேக்குறா.

கேக்கவும், எம் புருசன், தோலக் கொண்டு போயி, நெறயா பணங்காசு அள்ளிட்டு வந்திருக்கு. அத, அளந்து அடுக்குப் பானயில போட்டு வைக்கணும்ண்டு சொல்றா.

இதக் கேக்கவும், அவளுக்குப் பொறாமயாப் போச்சு. ராத்திரியோட ராத்திரியா, ரெண்டு மாடுகளயும் அடுச்சு, தோல உருச்சு, எடுத்துக்கிட்டு, அண்ணன், தம்பி போன பாத வழியாப் போறா்.

போகயில, அதே மாதிரி கழவாணிங்க மரத்தடியில ஒக்காந்து பணங்காசுகளப் பகுறுறாங்க. கழவாணிகளப் பாத்திட்டு, அண்ணங்காரன் பலமா தோலத் தட்டுறா். தட்டவும் கழவாணிங்க சுதாரிச்சுட்டாங்க. நேத்து, நம்மள ஏமாத்திட்டு போனவண்டாண்ட்டு, அவனப் புடுச்சு அடுச்சு, சாக வச்சுப் பொதச்சுப்பிட்டாங்க.

தம்பி நல்லா பொளைக்கயில, அண்ணன் பொண்டாட்டி அழுது செத்தாளாம். பொறாம புடுச்சவளுக்கு, புருசன் செத்தது, மாடு செத்ததுதான் மிச்சம். புருசனச் சாகக் குடுத்தவ மொகத்ல முளிச்சா ஆகுமா? ஆகாது. அதான் கைமுண்டச்சிய பாக்குறதில்ல.

8. எம் மகனே! எம் மகனே!

ஒரு தாய்க்கு ஒத்த மகன். வளக்குறா. வளக்குறா, ஒத்த மகண்டு அப்டி வளக்குறா. வளத்து படிக்க வக்கிறா.

எப்டி படிக்க வக்கிறாண்டா, அங்கிட்டு-இங்கிட்டு, அடுத்த வீட்ல அண்டுன வீட்ல, குறுண மாவு பொடச்சு, அதுல கெடக்கிற அரிசிய மகனுக்கு காச்சி வச்சிட்டு, இவ, அந்த குறுணயப் போட்டு காச்சிக் குடிச்சிட்டு படுத்துக்கிறது.

இப்டி இருக்கயில, மகன் வளந்து பெரியவனாகி, கல்யாணம் முடிக்கத் தக்கன வந்திட்டா். வரவும், மகனே!! நிய்யி எனக்கு ஒத்த மகன், ஒனக்குக் கல்யாணம் முடிச்சு வைக்கணும்ண்டு, எனக்கு ஆசயா இருக்குண்டு சொன்னா.

சொல்லவும், யம்மா! ஒனக்கு வயசாயிருச்சு. இப்ப, கல்யாணம் முடிச்சா வந்தவ ஒன்னய மதிக்க மாட்டா. ஒன்னய மதிக்கலண்டா எனக்குப் பொறுக்காது. கல்யாணம் இப்ப வேண்டாம்மா. நிய்யி செத்துப் போனா ஒன்னய எடுத்து தான —தர்மஞ் செஞ்சுட்டு, பெறகு கல்யாணம் முடிச்சுக்கிறேம்மாண்டு சொன்னா்.

இல்ல மகனே! நா் கண்ணால பாக்கணும். பாத்திட்டுத்தான் சாகணும்ண்டு கண்டிச்சுச் சொல்லிட்டா.

அப்ப, ஒரு மகராசி பொண்ண பாத்து, கல்யாணம் முடிச்சு வச்சிட்டா. மருமக வந்திட்டாண்டு ஆசயா இருக்காக. அம்மா எப்பயும் போல இருப்பாண்ட்டு, இவ், இவ் பாட்ல வேலயப் பாத்துக்கிட்டிருக்கா்.

இருக்கயில, ம்ருமகளே! நா் சும்மா இருக்கே. எனக்கு ஒரு எரும மாடு வாங்கித் தாங்க, நா் வளக்குறேண்டு சொல்றா.

சொல்லவும் புருச் வரவும் புருசங்கிட்ட, ஒங்கம்மா ஒரு எரும மாடு புடிச்சுக் குடுங்க, நா் வளக்குறேண்டு கேக்குறாங்கண்டு சொன்னா.

சொல்லவும், சரிண்ட்டு, ஒரு நல்ல எரும மாட்டப் புடிச்சுக் குடுத்திட்டாங்க. இவ வளக்குறா. வளத்துக்கிட்டிருக்கயில, மருமக, மாமியாளுக்கு, இவங்க சாப்டுற சாப்பாட்டப் போடுறதில்ல. கூழு-கொளப்பட்டயக் காச்சி வச்சிட்டு, வெறுங் கஞ்சிய ஊத்தி வச்சுக்கிட்டிருக்கா. இது புருசனுக்குத் தெரியாது. நம்ம சாப்டுற சாப்பாட்டத்தா அம்மா சாப்டுறாண்டு நெனச்சுக்கிட்டிருக்கா. இத மகங்கிட்டவும் சொல்லாம, எரும மாட்ட மேச்சுக்கிட்டிருக்கா.

ஒரு நா, மடி நெறயா மூக்குத்திக் கொளயப் புடுங்கிட்டு வந்து, மருமகளே!! என்னால வெறுங் கஞ்சியக் குடிக்க முடியல. இந்த மூக்குத்திக் கொளய வேக வச்சு வையிண்டு சொன்னா. சரிண்ட்டு, மூக்குத்திக் கொளய வேக வச்சு, கஞ்சிய ஊத்திக் குடிக்க வச்சிட்டு, எனக்கு பாட்டுச் சொல்லிக் குடுங்கண்டு மருமக கேட்டா, எனக்கு ஒண்ணும் தெரியாதுமாண்டு மாமியா சொன்னா. சொல்லவும்.

இல்ல! எனக்கு எப்டிண்டாலும் பாட்டுச் சொல்லித் தரணும்ண்டு சொல்லிட்டு, தலகால முழுக வச்சு, புதுச் சீலயக் கட்டச் சொல்லி, இந்தக் காதுல ஒரு மொறம், இந்தக் காதுல ஒரு சொளகயும் கட்டித் தொங்க விட்டு, பாட்டுப் படிக்கச் சொல்றா. அவ, அலச்சு அலச்சுப் படிக்கயில, சொளகும் மொறமும், இந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் இடிக்குது.

அப்ப, இவ் வீட்டு வாசல்ல வந்து நிக்கிறா ஆரு? மகன். நிண்டு கேட்டுக்கிட்டிருக்கா. அப்ப, தாயி, இவ செய்யுற கொடுமயப் பொறுக்க மாட்டாம.

மூக்குத்திக் கொளையடா எம்மகனே!
முந்தி வந்தக் குறுணக் கஞ்சி ஏம்மகனே!
அண்ணக்கிச் சொன்னயடா எம்மகனே!
அதுபோல நடக்குதடா எம்மகனே! – ண்டு

சொல்லிச் சொல்லி அழுதுகிட்டுப் பாட்டாப் படிக்கிறா. இவ், கேட்டுக்கிட்டிருந்தவ், கதவாலத் தொறந்துகிட்டு, வந்ததும், இவளப் போடு – போடுண்டு போட்டு, வெரட்டி விட்டுட்டு, தாயும் மகனும் நல்லா இருந்தாங்களாம்.

9. கூலிக்காரப் பய மகளே!!

ஒரு ஊர்ல, ஒரு பெரிய பணக்காரன் இருந்தா. அவனுக்கு ஏழு மகங்க. அவ் பொண்டாட்டி, ரொம்பக் கொடுமக்காரியா இருந்தா. ஆறு மகங்களுக்கும் கல்யாணம் முடிச்சுட்டு, கடசி மகெ, படிச்சுக்கிட்டிருக்கதுனால கல்யாணம் முடிக்கல. அவனுக்கு, கல்யாணம் முடிக்கணும்ண்டு பெத்தவங்க நெனச்சாங்க. ஆனா, அவ், அந்த வீட்டு வேலக்காரியக் கல்யாணஞ் செய்ய ஆசப்பட்டா. அவனது ஆசப்படி, அவனுக்கு வேலக்காரியக் கல்யாணஞ் செஞ்சு வச்சிட்டாங்க.

கல்யாணம் முடிஞ்ச பெறகு, ஆறு மாசம் வெளிய போயிப் படிக்கப் போயிட்டா. அவ் போகும்போது, இந்த ஆறு மருமகளயும், எப்டி வச்சிருக்கியோ, அது மாதிரிதான் எம் பொண்டாட்டியயும் வச்சிருக்கணும்ண்டு சொல்லிட்டுப் போயிட்டா.

போறபோது, பொண்டாட்டிகிட்ட, ஏதாவது கொடும செஞ்சா, நிய்யி போயி பனமரத்துகிட்டச் சொல்லிருண்டு சொல்லிட்டுப் போயிட்டா.

மகன் போன பெறகு, ஏண்டி கூலிக்காரப் பய மகளே!! ஒனக்குப் பட்டுச் சீலயா கேக்குது. கழத்திடிண்டு சொல்லி, வாங்கிக்கிட்டு, ஒரு பழய சீலயக் குடுத்தா. அத வாங்கிக் கெட்டிக்கிட்டா. வடிச்ச தண்ணிய ஓட்ல ஊத்திக் குடிக்க வச்சா, அதக் குடிச்சிட்டுப் புருசன, மனசுல நெனச்சுக்கிட்டு பேசாம இருந்தா.

அப்ப, அந்த ஊர்ல ஒரு நாடகம் போட்டாங்க. நாடகம் பாக்கப் போகணும்ண்டு எல்லாரும் வெளியேறுனாங்க. அப்ப,

ரெண்டாவது அண்ணன் பொண்டாட்டி, கொழுந்தன் பொண்டாட்டிய நாடகத்துக்கு கூட்டிட்டுப் போகணும்ண்டு சொன்னா.

போடி அங்கிட்டு, கூலிக்கார பயமகளப் போயி, நாடகத்துக்கு கூட்டிட்டுப் போவாங்களா? அவ, வீட்ல கெடக்கட்டும்ண்டு, கருப்பட்டிப் பால நல்லாக் காச்சி, இவ மேல்ல ஊத்தி கெட்டிப் போட்டுட்டு, பூனக் குட்டிய பக்கத்ல விட்டுட்டு, வீட்டப் பூட்டிக்கிட்டுப் போயிட்டாங்க. கருப்பட்டிப் பாலுக்குப் பூனக்குட்டி அவள அப்படியே பெரண்டது. அவ்வளவு துன்பத்தயும் பொறுத்துக்கிட்டு, காலைல எந்திரிச்சு, வீட்டு வேலைகளெல்லாஞ் செஞ்சா. செஞ்சிட்டு பனமரத்துக்கிட்டப் போயி, மாமியா செய்யுற கொடுமைகளச் சொன்னா.

ஒருநா, இவ,வீட்டுக்கு வெலக்காப் போயிட்டா. வெலக்காப் போகவும், இவளத் தனி வீட்ல ஒக்கார வச்சு, வடிச்ச தண்ணியத்தான் இவளுக்கு குடுக்குறது. அப்ப, எளயவன் பொண்டாட்டி, இவ மேல எரக்கப்பட்டு, கோழியடிச்சு, கொழம்பு வச்சு, மாமியாளுக்குத் தெரியாமக் கொண்டு போயிக் குடுத்தா.

மறுநா, காலைல தோட்டத்துக்கு களையெடுக்கப் போனாங்க. அவங்க ஆறுபேரும், ஆறு நெறைகள (பிரிவு) யெடுத்தால், இவ ஒருத்தி மட்டுந் தனியா ஆறு நெறைகளக் களையெடுக்கணும்ண்டு, நெறயப் பிரிச்சுப் போட்டுட்டாங்க. அவங்க பிரிச்சுப் போட்ட நெறைகளயும் வெட்டிட்டு, பொழுது விழுகுறதுக்குள்ள வீட்டுக்கு வந்து, வீட்டு வேலைகளயுஞ் செய்யணும். பொழுது விழுகுறதுக்குள்ள ஆறுபேரும் வீட்டுக்கு வந்துருவாங்க. இவதான் பூராத்தயும் எடுத்துக்கிட்டு வரணும்.

பகுந்து போட்ட நெறய வெட்டாம, வீட்டுக்கு வரக் கூடாதுண்டு சொல்லிட்டு வந்திட்டாங்க. அப்ப, தோட்டத்ல அழுதுகிட்டு, கள வெட்டிக்கிட்டிருக்கா. வெட்டிக்கிட்டிருக்கயில, புருச் வாரர். வர்ர வழில தோட்டம் இருக்கு. இவ், அந்த வழியாத்தான் வரணும். தோட்டத்ல என்ன இருக்குண்டு பாக்கலாம்ண்டு நேரா தோட்டத்துக்கு வர்ரா். வர்ரப்ப; தோட்டத்தில இருந்து, ஒரு பொண்ணு அழுகுற சத்தம் கேக்குது. நம்ம தோட்டத்துல, அழுகச் சத்தங் கேக்குதுண்டு, குதுரய விட்டெரங்கி தோட்டத்துக்குள்ள போனர்.

அங்க அழுதுகிட்டு, கள வெட்டிக்கிட்ருக்கா. அப்ப, நர் வந்திட்டே அழுகாதண்டு சொல்லி, கூட்டிக்கிட்டு வீட்டுக்கு வாரர்.

வீட்டுக்கு வந்து, குளிச்சிட்டு, யாருக்கும் தெரியாமப் படுத்துக்கிட்டாங்க. விடிஞ்சு பாத்தா, வீடெல்லாம் சோப்பு வாட மணக்குது. மகன் வந்துட்டான் போல இருக்குண்ட்டு, என்னாங்கடி, இங்க வாங்கண்டு ஆறு மருமகளயும் கூப்பிட்டா. வந்தாங்க. மகன் படிச்சிட்டு வந்திட்டர். இவ தோட்டத்ல கள வெட்டிக்கிட்டிருக்கா, நம்மள வையப் போறாண்டி. சீக்கிரம் போயி, அவளக் கூட்டிக்கிட்டு வாங்கடிண்டு,மாமியா சொல்றா.

அப்ப, ஒருத்தி போயி, மேவீட்ல பாக்றா. பாக்கயில, ரெண்டு பேரும் படுத்துக் கெடக்காங்க. கொஞ்ச நேரக்கழிச்சு, மகன், கிழ எரங்கி வந்தர். கிழ எரங்கி வந்து! ஏம்மா!! இவ்வளவுதான் செய்வீங்களா? இதுக்கு மேலயுஞ் செய்வீங்களாண்டு கேட்டுட்டு, ரெண்டு பேரும், வீட்டவிட்டு வெளியேறிப் போறாங்க.

போயி, ஒரு வனாந்தரத்ல பசியில வாடி, வதங்கி ஒக்காந்திருக்காங்க. அப்ப பார்வதியும் – பரமசிவனும் பாத்து, எரக்கப்பட்டு, மச்சுமாடி, குச்சுகோபுரம் கட்டிக் குடுத்து, வேண்டிய வசதியெல்லாஞ் செஞ்சு குடுக்கவும், வனாந்தரத்ல நல்லாப் பொளக்கிறாங்க.

அப்ப, இங்க, இவங்க சொத்தெலாம் போயி, வெறகு செமந்து பொழக்கிறாங்க. ஒருநா, வெறகெடுக்கப் போனவங்க. வனாந்தரத்ல மாடமாளிக இருக்றதக் கண்டு, இவங்களுக்கு ஆச்சரியமாப் போச்சு. வெறகக் கெட்டி வச்சிட்டு அங்க போறாங்க. போகயில, இவ, எல்லாத்தயும் அடயாளம் கண்டுகிட்டா. கண்டுகிட்டு:–

அவங்க வெறகப் பூராத்தயும் வாங்கிக்கிட்டு, அவங்களுக்கு ஏழு வருசத்துக் கேப்பய அரச்சு, கூழ் காச்சி, ஏழு தவக்காயப் புடுச்சு சுட்டு வச்சிட்டு, சாப்ட வாங்கண்டு கூப்ட்டா.

கூப்பிடவும், போயிப் பாத்தாங்க. பாத்திட்டு, சாப்ட மனசு இல்ல. பசி வேற கொல்லுது. சாப்டாம இருக்கவும் முடியல. அப்ப, இவ சொல்றா.

ஏம்மா! செஞ்சவங்களுக்குச் செஞ்ச வெனம்மா. சும்மா எடுத்துச் சாப்பிடுங்கண்டு சொன்னா. இது அவங்களுக்கு பெரிய அவமானமா போச்சு.

அவமானந் தாங்க மாட்டாம, மாமியா நாண்டுகிட்டுச் செத்துப் போனா. எளய மாமனயும் - அக்காவையும் தங்கூட இருக்க வச்சுக்கிட்டு, மத்தவங்கள வெரட்டியடிச்சுட்டா. பெறகு, அவங்க ஊருக்குப் போயி, வெறகு வித்துப் பொழச்சாங்களாம்.

10. அம்மாகாரி

ஒரு ஊர்ல, ஒரு அம்மாகாரி இருந்தா. அவளுக்கு ஒரு மகன் இருந்தர். மகனுக்கு வயசு வந்திருச்சு. சட்டுப்புட்டுண்டு, மகனுக்கு கலியாணத்த முடிச்சுட்டா. வந்த மருமக, மாமியாளுக்கு அடங்கி நடந்தா. என்னத்துக்கு, அடங்கி நடந்தாண்டா, அவ ஒண்ணு கூடக் கொண்டு வரல. சீர் சிரத்த எதுவுமே கெடையாது. மாமியா, அத மனசுல வச்சுக்கிட்டு, மருமகளோட அடிக்கடி சண்ட போடுவாளாம்.

ஒரு நா, மாமியாளுக்கும் – மருமகளுக்கும் பெலமாத் தகராறு நடக்குது. அண்ணக்கித்தான் மருமக மாமியாள எதுத்துப் பேசுறா. வந்தது போல, வீட்ட வீட்டு வெளில போடிண்டு, மாமியா சொல்லிட்டா. மருமகளுக்கும் ரோசம் வந்திருச்சு. வீட்ட விட்டு வெளியேறிப் போறா.

அப்டிப் போகயில, பொழுது விழுந்து இருட்டிப் போச்சு. அதுக்கு மேல நடக்கப் பயந்துக்கிட்டு, ஒரு ஆலாமரத்து மேல ஏறி ஒக்காந்துக்கிட்டா. கோழி கூப்டுது. களவாணிக, வெளியெலாம் போயிக் கழவாண்டுகிட்டு வந்த, தங்க நகைகள, அந்த மரத்தடில போட்டுப் பகுந்துகிட்டு இருக்காங்க. அப்ப: லேசாக் காலுக் கொலுச ஆட்டுறா. ஆட்டவும் திருடங்க மேல பாத்தாங்க, பாத்திட்டு பேயிண்டு நெனச்சு நகைகளப் போட்டுட்டு பயந்து ஓடிட்டாங்க. அந்த நகைகள அள்ளி கழுத்துல, காதுல மாட்டிக்கிட்டு, வீட்டுக்கு திரும்பி வாரா.

வர்ரத, பக்கத்து வீட்டுக்காரி பாத்தா. பாத்திட்டு, இவளுக்கு ஏது இவ்வளவு நகைகண்டு நெனச்சுக்கிட்டு, வரவும், ஏதுடி ஒனக்கு இவ்வளவு நகைங்கண்டு கேட்டா. அதுக்கு இவ, மாமியா கூடச் சண்ட புடுச்சிட்டு கோவுச்சிக்கிட்டுப் போனே. போகயில —, இருட்டிப் போச்சு. ஒரு மரத்து மேல ஏறி ஒக்காந்துகிட்டேன். என்னயப் பேயிண்டு நெனச்சுப் பயந்து, நகைகளப் போட்டுட்டு, திருட்டுப் பயக ஓடிப் போனாங்க. அத அள்ளிக்கிட்டு வரேண்டு சொல்றா. சொல்லவும்,

அவ என்னா செஞ்சா, மாமியாகூடச் சண்ட போட்டுட்டு, கோவுச்சுக்கிட்டுப் போயி—, அந்த மரத்ல ஏறி ஒக்காந்துகிட்டிருக்கா. அப்ப, திருடங்க கழவாண்டு வந்து, அந்த மரத்தடியில போட்டுப் பகுந்தாங்க. பகுறயில, பயந்து ஒடட்டுமிண்டு லேசாச் சத்தங் காட்னா. திருடங்க பயந்து ஓடல. ஓடாம நேத்து நம்மள ஏமாத்தி பூராத்தயும் அள்ளிக்கிட்டுப் போனவண்டு சொல்லிப் புடுச்சு, அடி—அடிண்டு அடுச்சுப் போட்டுட்டுப் போயிட்டாங்க. பெறகு முக்கிக்கிட்டு — மொனங்கிக்கிட்டு விடியங்காட்டில எந்திருச்சு வந்தாளாம்.

கடவுளு பாத்து குடுக்கணும். இவள மாதிரி பொறாமப் பட்டா என்ன கெடைக்கும்? பூசதான் கெடைக்கும். பெறகு என்னா கெடைக்கும்?

11. அடுத்த வீட்டுக்காரி

ஒரு ஊர்ல புருசனும் – பொண்டாட்டியும் இருந்தாங்க. இருக்கயில, அந்த ஊர்ல இருக்றவங்க, எல்லாரும் காடு வெதச்சாங்க. ராசாவும் வெதச்சாரு எல்லாரு காடும் நல்லா வெளஞ்சிருக்கு. ராசா காடு மட்டும் ஒண்ணுமே வெளையல. வெளையாம இருக்கவும், என்னாண்டு பாக்கணும்ண்டு சோசியங்கேக்கப் போனாரு. போயிக் கேக்கயில, அந்தச் சோசியன், ஓம் பொண்டாட்டிய வெட்டிப் பொலி (பலி) குடு, பொலி குடுத்தா நல்லா வெளையும்ண்டு சொல்லிட்டா். ஆரு? சோசியன்.

சரிண்ட்டு, வீட்டுக்கு வந்து, காட்ல பொங்க வைக்கணும் வா-ண்டு கூப்டுறா். புருசங் கூப்டவும், இவளும் பொங்கப் பானயத் தூக்கிட்டுப் போறா. காட்ல போயி, பொங்க வக்கிறாங்க. பொங்க வச்சிட்டு, குனுஞ்சு எரக்கயில, ஒரே வெட்டா வெட்டிட்டா். வெட்டிப் போட்டுட்டு, வீட்டுக்கு வந்திட்டா்.

வீட்டுக்கு வரவும், எங்கப்பா? அம்மாளண்டு பிள்ளைக கேட்டுச்சு. கேக்கவும், அம்மா பாட்டி ஊருக்குப் போயிட்டாண்டு சொல்லிட்டா். அம்மா வரும் – வரும்ண்டு நெனச்சுக்கிட்டிருந்த பிள்ளைக, நாளாகவும் மறந்திருச்சுக.

காடும் வெளையல, கஞ்சிக்கும் இல்ல, வெறகு வெட்டிப் பொளச்சுக்கிட்டிருக்கா். பிள்ளைகளுக்குக் கஞ்சி காச்சி வச்சிட்டு, வெறகு வெட்டப் போயிருவா். வந்து பாத்தா – பிள்ளைக பட்டினியா கெடக்குங்க.

இவ், கஞ்சியக் காச்சி வச்சிட்டுப் போகவும், அடுத்த வீ ட்டுக்காரி தியயெடுக்க வர்ர சாக்ல வந்து, கஞ்சியக் குடிச்சிட்டுக் – குடிச்சிட்டுப் போயிர்றது.

இப்டி இருக்கயில, ஒருநா, கஞ்சியக் காச்சி வச்சிட்டு, வெறகு வெட்டப் போற மாதிரி, போக்குக் காமுச்சு, மெத்து மேல ஏறி ஒக்காந்துகிட்டா. இவ,தியயெடுக்க வந்தவ, கஞ்சிய ஊத்திக் குடிக்றா. குடிக்கயில, மெத்ல இருந்து எரங்கி வந்து, அண்ணாக்கவுத்த அத்து, தாலியக் கெட்டி, புருசீ – பொஞ்சாதியா நல்லாப் பொளச்சாங்களாம்.

12. கள்ளப் புருசன்

ஒரு ஊர்ல, ஒரு வெவசாயி இருந்தா். அந்த ஊர்ல பெரும் பஞ்சம் வந்திருச்சு: தோட்டந் தொற வெல்லாம் தண்ணியில்லாம சும்மா கெடக்குது: ஒருநா தேவையில, அந்த ஊர்ல நல்ல மழ பெய்யவும், சும்மா தருசா கெடக்குற நெலத்ல, ஏதாவது வெதைக்கலாண்ட்டு; அப்பக் கம்புதான் அதிகமா வெதப்பாங்க. கம்பு வாங்கப் போறா்: அப்ப—,

பக்கத்து ஊர்ல, ஒரு கோனாரு இருந்தாரு. அவருக்கு நெறயா ஆடு மாடுங்க. அந்தக் கோனாரு வீட்லதான் கம்பு இருக்குது. அங்க போயி, கம்பு கேட்டாரு. அப்ப, அவரு சொன்னாரு, இப்ப நான் கெடைக்குப் (கிடை) போறேன். வீட்ல, எம் பொண்டாட்டி இருக்கா. அவகிட்டப் போயி, கேளு, போடுவா. வாங்கிட்டுப் போயி, காலா காலத்ல வெதப்பா—ண்டு சொல்லிட்டு . கோனாரு கெடைக்குப் போயிட்டாரு.

அப்ப, வீட்டுக்குப் போறா். போயி, ஐயா, கம்பு போடச் சொன்னாருண்டு சொல்றா். அவளும் கம்பு எடுத்துப் போட்டா. வாங்கி வெளியேறவும், நல்ல மழ புடுச்சுக்கிருச்சு. பொழுதும் விழுந்திருச்சு. அப்ப, இவனால வீட்டுக்குப் போக முடியல. அப்ப, இண்ணைக்கிப் படுத்துக் கெடந்துட்டு, விடியவும் போண்டு சொன்னா. சரித்தாண்ட்டு, திண்ணயில படுத்துக்கிட்டா்.

அந்தக் கோனாரு பொண்டாட்டி, ஒரு கள்ளப் புருசன வச்சிருந்திருக்கா. புருச் கெடைக்குப் போகவும், அவ் வந்து, இவளோட படுத்துக்றது. அண்ணக்கிண்டு, அந்தச் சமயத்ல வீட்டுக்குள்ள வந்திட்டா், வரவும், எங்க? நாங் கேட்ட வெள்ளிக்

கொலுசுண்டு கேக்குறா, இந்தா பாருண்டு, கொலுசக் குடுத்தா். அவ, அதக் கையில வாங்காம, அந்த மேச்சட்டிக்குக் கீச்சட்டில வச்சிருங்கண்டு சொல்றா. அவ, அப்பிடிச் சொல்லவும், வச்சிட்டுப்போயி படுத்துக்கிட்டா்.

அந்நேரத்ல ஒரு கோழியப் புடுச்சு அடிச்சு, கள்ளப் புருசனுக்குப் கொழம்பு காச்சுறா. கொழம்புக்கு வேண்டிய மஞ்ச மொளகா எல்லாத்தையும் சேத்து அரைக்க மாட்டாம, ஒரல்ல போட்டு இடிக்கிறா. இவ, செய்யுற எல்லாத்தயும் படுத்துக்கிட்டே பாத்துக்கிட்டிருக்கா, யாரு? இந்தக் கம்பு வாங்க வந்தவ். கம்பங் கஞ்சி குடிச்சதுனால, நல்லா வகுறு பொறுமி, வகுத்தால போறதுக்கு ரெடியா இருக்கு இவனுக்கு. பேலுறதுக்கு வேற எடங் கெடைக்கல. அந்தச் சமயத்ல மறந்த பொருள எடுத்திட்டு வர, வீட்டுக்குள்ள போயிட்டா. போகவும், பையா எந்திருச்சு வந்து, ஒரல்ல ஒக்காந்து, தடதடண்டு கழிஞ்சா். ஒரலு நெறஞ்சு போச்சு. எந்திருச்சு வந்து, படுத்த எடத்ல படுத்துக்கிட்டா். வீட்டுக்குள்ள இருந்து, இவ வந்தா. எல்லாத்தையும் சேத்து நல்லா சத்சத்திண்டு இடுச்சுப் போட்டு, கொழம்ப எரக்கிட்டா. எரக்கி, கள்ளப் புருசன ஒக்கார வச்சுப் போட்டா. போடவும், சாப்பிட்டுப் பாத்தா். பாத்திட்டு, என்னா ஒரு வடியா மணக்குதுண்டு சொல்றா. மணக்கும்.மணக்கும். ஏ....ண்டா, நா் கெழவியாகிப் போனேல்ல, அதுனால வடியா மணக்குதோண்டு மோடி (ஊடல்) பண்ணுறா, அவனும், விக்கந்தொக்கமா பூராத்தையும் சாப்பிட்டுட்டா்.

சாப்ட்டுப் படுத்துக் கெடக்கையில, மழ பேஞ்சதுனால, கெடைக்குக் காவலுக்குப் போன கோனாரு வா்றாரு. வந்து, கதவாலத் தட்டவும், கள்ளப் புருசனக் கொண்டு போயி,

பரண்ல ஏத்தி ஒக்கார வச்சிட்டு வந்து, கதவால தொறந்து விடுறா. அப்ப – கோனாரு, தோள்ல வச்சிருந்த தடியோட வீட்டுக்குள்ள வர்ராரு. தடி, வாசலத் தட்டிக்கிருச்சு. வீட்டுக்குள்ள வர முடியல. வர முடியுமா? முடியாது. முடியல! போயி –, ஆசாரியக் கூட்டிக்கிட்டு வந்தா. ஆசாரி, சுத்தியலோட வந்து பாத்தா். கோனாரு, வாசப்படில தடி தட்டி நிக்கிறாரு. மொளில ரெண்டு போடு சுத்தியலக் கொண்டு போட்டாரோ இல்லையோ! பொடனில வச்சிருந்த தடியக் கிழ விட்டுட்டாரு. தடி கிழ விழுகவும், கோனாரு, ஈசியா வீட்டுக்குள்ளார போயிட்டாரு.

கம்பு வாங்க ஒரு ஆளு வந்தாரே, அவருக்கு கம்பு போட்டியாண்டு கோனாரு பொண்டாட்டிகிட்டக் கேட்டாரு. போட்டேட். மழ வந்திருச்சு, திண்ணயில படுத்துக் கெடக்காருண்டு சொன்னா. அவர எழுப்பு, அவருக்கு இம்புட்டு சோத்த ஊத்து, சாப்பிட்டுட்டுப் போயி, காலாகாலத்ல வெதைக்கட்டும்ண்டு சொல்றாரு கோனாரு.

இவனும் எந்திருச்சுப் போனா். சோத்தச் சாப்பிட்டா். மேச்சட்டிக்குக் - கிச்சட்டியில கம்பு இருக்கு. நாங் கொண்டட்டு வந்ததெல்லாம் அதுல இருக்கு, அத எடுத்துக் குடுங்கய்யா, நா் போறேண்டு, இவ் சொல்றா். கோனாரு எடுக்கப் போகயில, கம்பு, கொலுசு பணமெல்லாம் அதுல இருக்கு. இவளுக்குப் பேச முடியல. பேசாம நிக்கிறா! ஏ(ன்) பேச முடியல? இதுகெல்லாம் கள்ளப் புருசங் குடுத்தது. அதுனால புருசங்கிட்டச் சொல்ல முடியல.

கம்பச் சாக்குல போட்டா். சாக்கக் கட்ட கயிறு கேட்டா். பரண்மேல நாறு இருக்கு, எடுத்துக் கட்டச் சொல்லிட்டு, கோனாரு வாயி கழுவப் போயிட்டாரு. அப்ப, பரண்மேல ஏறுறா். ஏண்டா? அவனயும் காட்டிக் குடுக்கணுமில்ல. இவ் பரண்ல, இவங் கையப் புடுச்சுக்கிட்டு என்னயக் காட்டிக் குடுத்துறாதேண்டு கெஞ்சுறா். கையப் புடிக்கவும், நாறு எடுக்க விடாமத் தடுப்பது போல, இவனுக்குத் தெரிஞ்சுச்சு. தெரியவும் நாற,ஏண்டா! எடுக்க விடமாட்டேங்குறண்டு சத்தம் போடுறா். அப்ப கோனாரு, மேல பாத்து, யாரு கூட அங்க பேசிக்கிட்டிருக்கே. மேல யாரு இருக்குறதுண்டு, மேல ஏறிப் பாத்தாரு. இவ் (கள்ளப் புருசன்) ஒக்காந்நிதருக்கா். கீழ இழுத்துட்டு வந்து, அடி—அடிண்டு அடுச்சு, போடு போடுண்டு போட்டு, வெளிய வெரட்டி விட்டாங்களாம், அண்ணக்கிருந்து அவ், அந்தப் பக்கம் எட்டிக்கூடப் பாக்குறதில்லயாம். இந்தப் பொம்பளைங்கள நம்பக் கூடாது. முந்தானயில கூடக் கள்ளப் புருசன வச்சிருப்பாளுங்க.

கோனாரு, அவள ஒண்ணுஞ் செய்யல. எல்லாத்தயும் காட்டிக் குடுத்திட்டு, இவ், கம்ப வாங்கிக்கிட்டு, வெதக்கப் போயிட்டா். பெறகு, ஒழுங்கா கோனாருகிட்ட இருந்து பொளச்சாளாம்.

13. வங்கணகாரன்

ஒரு கெராமத்ல, வெவசாயி ஒருத்தன் இருந்தா். வயலுக்கு உழுகப் போவா். அவ் பொண்டாட்டி, கஞ்சி கொண்டுட்டு போவா. இது வழக்கமா நடந்துகிட்டு வருது. புருச் வேலக்கிப் போகயில, பொண்டாட்டி, கஞ்சி கொண்டுகிட்டுப் போவா. இப்டி இருக்கயில, இவளுக்கு ஒரு வங்கணகாரன் இருக்கா். வங்கணகாரன வச்சுக்கிட்டு, புருசன, ஏதாவது ஒரு வேலயச் செய்யச் சொல்லிக்கிட்டே இருப்பாளாம், பாதகத்தி.

ஒருநா, கஞ்சி கொண்டு போகயில, வழியில ஒரு ஐயனாரு கோயிலு இருக்குது. அந்தக் கோயிலுகிட்ட, கஞ்சிய எரக்கி வச்சிட்டு, தெனமும் சாமி கும்புடுவாளாம். என்னா சொல்லி சாமி கும்புடுவாண்டா, எம் புருசனுக்கு, கண்ணு தெரியாமப் போகணும், நானும் – வங்கணகாரனும் நல்லாயிருக்கணும்ண்டு சாமி கும்புடுவாளாம்.

இப்டியே சாமி கும்புடுறது, புருசனுக்குச் சந்தேகம் வந்திருச்சு. எப்டி? சாமி கும்புடுறாண்டு கேக்கணும்ண்ட்டு, கோயிலுக்குள்ள வந்து, ஒளிஞ்சு ஒக்காந்துகிட்டா்.

இவ, கஞ்சிய எரக்கி வச்சிட்டு, வேகமா கோயிலுக்குள்ள போறா. போனதும் சாமி – ஐயனாரப்பா!! எம் புருசனுக்கு, கண்ணு தெரியாமப் போயிறணும். எங்கள்ளப் புருச், எப்பவும் எங்கூடயே இருக்கணும்ண்டு சாமி கும்பிட்டா. புருச் நல்லா கேட்டுக்கிட்டா். இப்டியாடி கும்புடுறே, இரு! இருண்ட்டு, வேற வழியா வயலுக்குப் போயிட்டா். இவ வயலுக்கு, கஞ்சி கொண்டுட்டு வரும் போது. அவ், அங்க, தாறுமாறா உழுகுறா். என்னா மனுசா? இப்டி உழுகுறண்டு கேட்டா. கண்ணு தெரியலடிண்டு சொல்றா். சொல்லவும், நாளக்கி உழுகலாம், வாண்டு வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்துட்டா. அவளுக்குப் பொறுக்க முடியாத சந்தோசம். ஏ.....ண்டா! கேட்டது கெடச்சுப்

போச்சு. அந்தச் சந்தோசத்ல அங்கிட்டுப் போறா. இங்கிட்டுப் போறா. போயி, வங்கணகாரனக் கூட்டிக்கிட்டு வந்துட்டா. அவனுஞ் சந்தோசமா வாரா். பூராத்தயும் பாத்துக்கிட்டு போசம ஒக்காந்திருக்கா்.

வங்கணகாரனக் கூட்டிக்கிட்டு வந்து, குறுணி நெல்ல எடுத்து அவிச்சுப் போட்டுட்டு, புருசனக் காவலுக்கு வச்சுட்டு, வங்கணக்காரனக் குளிப்பாட்ட தண்ணி காய வச்சுட்டு, தண்ணியெடுக்க, கெணத்தடிக்குப் போறா. இவ், ஒரு கம்பையும் கையில வச்சு, நெல்லக் காவ காத்துக் கிட்டு வீட்ல ஒக்காந்திருக்கா். வங்கணகாரன், சந்தோசமா வீட்டுக்குள்ள ஒக்காந்துக் கிட்டிருக்கா். தண்ணி கொண்டுவரும் போதும், போகும், போதும், காலுல. ஒரு அடி அடிக்கிறது, என்னா மச்சான்? என்னய அடிக்கிறண்டு கேக்கயில, கண்ணு தெரியலடிண்டு சொல்லிப்பிடுறது.

இவ, இங்க தடபுடலா வேல செஞ்சுகிட்டிருக்கயில, என்னமோ அவசரமா பக்கத்து வீட்டுப் பொம்பள, அவளக் கூப்பிடவும் வங்கணகாரன, குலுமைக்குள்ள எரக்கி ஒக்கார வச்சிட்டு, அடுத்த வீட்டுக்குப் போயிட்டா. சுடுதண்ணி ந...ல...லா காஞ்சுகிட்டிருக்கு. இதாந் சமயம்ண்டு, சுடுதண்ணியத் தூக்கி குலுமைக்குள்ள ஊத்திட்டா். ஊத்தவும், மேலுகாவெல்லாம் வெந்து, அப்டியே பல்லத் தொறந்த வாக்குல செத்துக் கெடக்குறா்.

வந்து பாத்தா, அவந்தான், அங்க பல்லத் தொறந்த வாக்குல கெடக்கானே! ஏ...ராசா! எப்டிச் சிரிக்கிறாருண்டு சொல்லிக்கிட்டு வீசயப் (மீசை) புடுச்சு லேசா இழுத்தா. இழுக்கவும், விச கையோட வந்திருச்சு. தொட்டுப் பாத்தா. உசுரில்ல. அவந்தான், பொணமா கெடக்கானே. தெரிஞ்சுகிட்டு ஐயய்யோ... குலுமைக்குள்ள யாரோ செத்துக் கெடக்காங்கண்டு, சத்தம் போடுறா. என்னாடி சொல்றேண்டு? புருச் எந்திருச்சு

வாரா. வந்து தொட்டுப் பாத்திட்டு, எனக்குக் கண்ணு தெரியாது. நிய்யி தூக்கிட்டுப் போயி, எங்கயாவது போட்டுட்டு வந்திருண்டு சொல்லிட்டு, பழய (பழைய) எடத்ல போயி ஒக்காந்துகிட்டு, அடியே தூக்கிட்டுப் போறது போற, யாராவது ஆளு அரவங் கேட்டா, கொண்டுகிட்டு வந்திருண்டு சொல்லிப் பயமுறுத்றா.

சாக்ல போட்டுக் கட்டி, வடக்க தூக்கிட்டுப் போனா. போகயில, இவளுக்கு முன்னால போயி, வழியில நிண்டுகிட்டுச் செறுமினா. செறுமவும், அவக்கு தொவக்ண்டு தூக்கி செமந்துகிட்டு வீட்டுக்கு ஓடியாந்திட்டா. தெக்க (தெற்கு) தூக்கிட்டுப் போயிப் போட்டுட்டு வாண்டு சொல்றா. தெக்க தூக்கிட்டுப் போனா. இவளுக்கு முன்னால போயி இருந்துகிட்டு சத்தம் குடுக்றா. பயந்து போயி, தூக்கிக்கிட்டு ஓடியாந்திட்டா. இவளுக்கு முன்னால ஓடியாந்து, வீட்ல ஒக்காந்துகிட்டா. ஒக்காந்துகிட்டு, மேற்க தூக்கிட்டுப் போடிண்டு சொல்றா. தூக்கிட்டுப் போகவும், அவளுக்கு முன்னால போயி இருந்துகிட்டு, லேசா செறுமுறா. செறுமவும், கொண்டுகிட்டு ஓடியாந்திட்டா. ஓடியாரவும், என்னாவிள்ளா? ஓடியாந்துட்டவண்டு கேட்டா. கேக்கவும், ஆளு இருக்காங்க மனுசாண்டு, சொன்னா.

சரி: கெழக்க தூக்கிட்டுப் போண்டு சொன்னா. சரீண்டு தூக்கிட்டுப் போறா. அங்கயும் போயி அரவங் காட்டுறா. வீட்டுக்குத் தூக்கிட்டு வந்திட்டா. நாலு பக்கமும் ஆளு முழுச்சுக்கிட்டு இருக்காங்க. இப்பத் தூக்கிட்டுப் போக முடியாது, கொஞ்ச நேரங் கழிக்கட்டும்ண்டு செத்த (சிறிது) நேரம் படுத்தா. படுத்தவ, அப்டியே ஒரங்கிட்டா. விடுஞ்சு போச்சு. பொணம். சாக்குல கட்டுனவாக்ல இருக்குது.

காலைல, சக்கிலியன், அந்த வீட்டுக்கு எளவு (சாவு) சொல்லி வந்தா. வரவும் நல்லா .... சாப்பாடு போடுறா. போடவும் சாப்பிட்டா. எளவு சொல்லி வந்ததுக்கு, ஒரு மூட

கானத்தத் தூக்கிட்டுப் போண்டு சொல்றா. கஞ்சி சாப்பிட்ட முறுக்குல, சாக்கத் தூக்கிட்டுச் சக்கிலியன் போறா்.

வழில ஒருத்தன், பன மரத்தல ஏறி, கள்ளு வடுச்சுக்கிட்டிருக்கா். செமைய, அங்ஙன எரக்கி வச்சுட்டு, நாழிக் (படி) கள்ளு குடிப்போம்ண்ட்டு எரக்கி வச்சா். வச்சிட்டு, அண்ணே!! ஒரு படி கள்ளு குடு. ஒரு படி கானந்தரேண்டு மரத்துல இருக்கறவங்கிட்ட சொல்றா். சரிண்டு சொல்லிட்டு, ஏலே... அந்த மொந்தையில இருக்கிற கள்ளக் குடுச்சுட்டு, கானத்த, அந்த மொந்தையில போட்டு வச்சிருண்டு சொல்லிட்டு, அவ், மரத்து மேலயே இருக்கா்.

கள்ளக் (கள்) குடிச்சிட்டு, சாக்க அவுத்துப் பாத்தா். பொணம், பல்ல இளிச்ச வாக்ல இருக்கு. அப்டியே சாக்கப் போட்டுட்டு, திரும்பிப் பாக்காம ஓடிப் போயிட்டா். பனையேறி, பனமரத்ல இருந்து பாக்குறா். பாக்கயில, கள்ளக்குடிச்ச மயக்கத்ல, சிரிக்கிறது போல இருக்கு. இன்னுங் கள்ளு வேணும்ண்டு கேக்குறானாக்கும்ண்ட்டு, ஓ.... இளிச்சவாய மூடப்பா ஏழு கம்பங் (கலயம்) கள்ளு தாரேண்டு சொல்றா். பெறகும் சிரிச்ச வாக்குல இருக்கவும், பயந்து சாக்கப் பாத்தா் சாக்குக்குள்ள பொணம், பயந்து, பனமரத்ல இருந்து விழுந்து செத்துப் போயிட்டா். பொணமுங் கெடக்கு, பனயேறியுங் கெடக்கா்

எளவுக்கு அந்த வழியா ஆளுக வாராங்க. இவளும் வாரா. வார வழில, பன மரத்தடில சாக்கு இருக்றதப் பாத்தா. ஏ...ராசா...ண்டு போயி முத்தங் குடுத்தா. பின்னாலயே வந்த புருச், தலமயித்த இழுத்துப் புடுச்சு, கழுத்த வெட்டிக்கிட்டு, தலையோட, மச்சினன், வீட்டுக்குப் போறா். போகவும் மச்சினன் பாத்தா், பாத்து, மச்சினஞ் செஞ்சது சரிதாண்ட்டு, இன்னொரு தங்கச்சிய அவனுக்குக் கட்டிக்குடுத்து, நல்லா வாழ்ந்தாங்களாம். பொட்ட முண்டைக்கு, எந்தந்தண்டி மப்பு.

14. கூட்டாளிகள்

ஒரு ஊர்ல, ஒரு ராசா. அந்த ராசாவுக்கு ஒரு மந்திரி. ராசா மகனும் – மந்திரி மகனும் கூட்டாளிகளா இருந்தாங்க. ரெண்டு பேரும் கூட்டாளிகளா இருக்கிறதால, எதச் செஞ்சாலும் ரெண்டு பேரும் சேந்து செய்வாங்க. எங்க போனாலும் ரெண்டு பேருஞ் சேந்து போவாங்க. இப்படி இருக்கயில, ரெண்டுபேரும் வாலிபப் பருவத்துக்கு வந்துட்டாங்க. அப்ப: மந்திரி என்னா செஞ்சாரு, மகனுக்குக் கலியாணம் முடிக்கத் திட்டம் போட்டாரு. ராசா மகனுக்கும் - மந்திரி மகனுக்கும் ஒரே நாளைல கலியாணம் முடிஞ்சுச்சு.

ராசா மருமகளுக்கு, ஊர்ல ஒரு வங்கணகாரன் இருந்தா. அதனால ராசா மருமக, பத்துநா புருசங்கிட்டேயும், பத்துநா தகப்பன் வீட்லயுமா வாந்து வந்தா. இதக் கண்ட மந்திரி மகனும் தன்னோட பொண்டாட்டியயும் பத்து நா தன்னோடயும், பத்து நா, அவ அப்பா வீட்லயும் விட்டுக்கிட்டிருந்தா.

ஆனா, ராசா மருமக, அப்பன் வீட்ல இருக்கும்போது வங்கணகாரனோட இருக்கா. மந்திரி மருமக, அப்பன் வீட்ல இருக்கும்போது, புருசன நெனச்சுக்கிட்டு சுத்தமா இருக்கா.

ஒருநாத் தேதில, அப்பன் வீட்டுக்குப் போன ராசா மருமக, ஒரேயடியா மூணுமாசம் இருந்துகிட்டா. ராசாவும் – ராசா பொஞ்சாதியும் மருமகளக் கூட்டிக்கிட்டு வரும்படி மகங்கிட்டச் சொன்னாங்க. அப்ப, ராசா மகனும் – மந்திரி மகனும் போறாங்க. போகயில –, மாமனாரு வீட்ல ஏக வரவேற்பு, பொழுது விழுந்திருச்சு. அப்ப, மந்திரி மகன்,

தனியிடத்ல படுத்துக்கிட்டார். ராசா மகனும், அவ் பொண்டாட்டியும் தனியாப் படுத்துக்கிட்டாங்க.

நல்லா நடுச்சாமத்ல, இளவரசி எந்திருச்சா. சுரங்கத்து வழியா ஊருக்கு வெளிய போறா. ராசா மகன் நல்லா ஒரங்குறார். இதப் பாத்த மந்திரி மகன் எந்திருச்சு, இளவரசியப் பின் தொயந்து போறார்.

ஊருக்கு வெளிய ஒரு காட்டுக்குள்ள போயி, சுரங்கப் பாத வெளியேறுது. அந்தக் காட்டுக்குள்ள ஒரு பாழடஞ்ச மண்டபம். அந்த மண்டபத்ல, ஒரு முடவன். அந்த முடவங்கிட்ட இளவரசி போயி, அவனோட கொஞ்சிக் குலாவுறா.

இளவரசி மேல எரிஞ்சு விழுறார் மொடவன். ஏன் – இவ்வளவு நேரந் தாமதமா வர்ர. என்னாச்சு. வெள்ளனா வந்தா என்னாண்டு கோபமாகக் கேக்குறார்.

அதுக்கு இளவரசி, எம்புருசு வந்திட்டாரு. அவர ஒரங்க வச்சிட்டு வர்ரதுக்குள்ள நேரமாச்சுண்டு சொல்றா.

ஒனக்குக் கலியாண மாச்சா? அப்ப, நிய்யி எனக்குத் தேவையில்ல, போண்டு மொடவன் சொல்றார்.

அதுக்கு இளவரசி, இல்ல, சும்மா ஒரு பேருக்குத்தான் கலியாணம் முடுச்சிருக்கேன். மத்தபடி ஏ... நெனவெல்லாம் ஒங்ககிட்டத்தான் இருக்குண்டு சொல்றா.

இதக் கேட்ட மொடவன், ஒரு ஐடியாப் பண்றார். அதுசரி ஒரு கத்தி தாரே. ஒம் புருசனக் குத்திக் கொண்டுபிட்டு வாண்டு சொல்லி அனுப்புறார்.

கத்தியக் கொண்டுகிட்டு, இளவரசி வேகமா வீட்டுக்கு வாரா. மந்திரி மகனும் பின் தொயந்து வாரார். வந்ததே சரிண்டு, புருசன குத்திக் கொண்டுபிடுறா. கொண்டுபிட்டு, பழிய, மந்திரி மகன் மேல போட்டுட்டா. அரமணக் காவக்காரங்க, மந்திரி மகனப் புடுச்சுச் சிறையில போட்டு, தூக்குத் தண்டன போட்டுர்றாங்க.

சிறையில இருக்கிற மந்திரி மகன், ராசாகிட்ட எட்டு நா தவண குடுங்க, அதுக்குள்ள, உம்மயான கொலகாரன புடுச்சுத் தரேண்டு சொல்றார். சரிண்டு, மந்திரி மகன, வெளியவிட்டு, எட்டுநா தவண குடுத்தாங்க.

வெளில வந்த மந்திரி மகன், இளவரசியக் கவனிக்க ஒரு ஒற்றன நியமிக்கிறார். இதுக்கெடயில, இளவரசி, மூணுநா அரமணய விட்டு வெளியேறல, தவண நாள்ல, ஏழு நாள் முடுஞ்சு போச்சு. அண்ணக்கி ராத்ரி இளவரசி சுரங்கத்து வழியா, காட்ட நோக்கிப் போறா.

இளவரசியப் பின் தொயந்து, மந்திரி மகனும், அந்த நாட்டு சேனாபதியும் போறாங்க. மொடவங்கிட்டப் போன இளவரசி, இந்த ஏழு நாளும் வர முடியாததயும், புருசனக் கொண்டதயும் வருசயாச் சொல்றா. இதக் கேட்டுக்கிட்டிருந்த சேனாபதி, சேனைகள வரச் சொல்லி, உம்மையான குத்தவாளியக் கைதி செய்றாரு.

இளவரசி மேல கொலக்குத்தந் சாட்டி, இளவரசிய, சுண்ணாம்புக் காளவாசல்ல வச்சு நீத்துப்பிட்டாங்க. குத்தஞ் செஞ்சவளுக்கு என்னா கெடைக்கும்.

15. மூணு பொண்டாட்டி

ஒரு தவக்காயிக்கு மூணு பொண்டாட்டி. யாராருண்டா? மாடப்புறா, பச்சக்கிளி, காக்காயி. இந்த மூணுவேரும், தவக்காயிக்கு மூணு சம்சாரம். இவங்கள, இங்க விட்டுட்டு, கதவால இறுக்கிப் பூட்டிப் போட்டுட்டு, மருதையில சோலி இருக்ண்ட்டுப் போயிறது. மருதக்கி எதுக்குப் போகுது? அங்க ஒரு கட இருக்கு. தெனமும் அங்க போயிறது.

இந்த மாடப்புறா, பச்சக்கிளி, காக்காயி இந்த மூணும் எத்தன நாளக்கிப் பட்னியா கெடக்கும். இந்தக் காக்காண்டாலும் வெழுஞ்ச காட்டுக்குச் சேம போயி, ரெண்டப் பெறக்கித் திண்ட்டு வந்திரும். பாவம், இந்த மாடப்புறாவும் – பச்சக்கிளியும் பட்னியா கெடக்குக.

அப்ப, இங்கிருந்து ஒரு ஆளு மருதக்கிப் போறாக. போகயில, அவங்களப் பாத்த மாடப்புறா, ஐயா!! நீங்க எங்க போறவகண்டு கேட்டுச்சு. அதுக்கு அந்த ஆளு 'ஏம்மா? நா மருதைக்குப் போறேண்டு சொன்னாக'. சொல்லவும், எங்க வீட்டுக்காரு, அங்க இருக்காரு. அவருகிட்டப் போயி,

மாடப்புறா மாடப்புறா

மகராசன் கூட்டமெல்லாம்

சோத்துத் தண்ணிக்கு தட்டுப்பட்டு – எங்க

சோழ ராசன வரச் சொல்லுங்க–ண்டு.

சொல்லுச்சு. சொல்லவும் சரிம்மாண்டு சொல்லிட்டு அங்கிட்டுப் போறாக. போகயில, பச்சக்கிளி அங்கிட்டிருந்துகிட்டு,

ஐயா!! நீங்க எங்க போறவக?-ண்டு கேட்டுச்சு. கேக்கவும், நா மருதக்கி போறேம்மா. மருதக்கிப் போனேங்கண்ணா, எங்க வீட்டுக்காரு அங்க இருக்காரு. அவருகிட்டப் போயி,

பச்சக்கிளி பச்சக்கிளி

பச்ச நடக் கூட்டமெல்லாம்

சோத்துத் தண்ணிக்குத் தட்டப்போயி – எங்க

சோழ ராசன வரச் சொல்லுங்க–ண்டு.

சொல்லுச்சு. சொல்லவும், சரிம்மாண்டு சொல்லிட்டு, அங்கிட்டுப் போனாக. போகயில, ஒரு கம்மாக்கரயில இந்தக் காக்காயி ஒக்காந்துகிட்டு, ஐயா!! நீங்க எங்கே போறவகண்டு கேட்டுச்சு, கேக்கவும், நா மருதக்கிப் போறேம்மாண்டு சொன்னாரு. மருதக்கிப் போனேங்கண்டா,

காக்காயி காக்காயி

கருத்த நடக் கூட்டமெல்லாம்

சோத்துத் தண்ணிக்குத் தட்டப்போயி – எங்க

சொரித் தவக்காய வரச் சொல்லுங்–ண்டு.

சொல்லுச்சு, சொல்லவும், இந்த ஆளு போயி, ஒண்ணுவிடாம, இந்த மாடப்புறா, பச்சக்கிளி, காக்காயி சொன்னத அப்டியே தவக்காயிகிட்டச் சொல்லி விட்டுட்டாக.

சொல்லவும், இந்தத் தவக்கா, தவ்விக்கிட்டு ஓடி வருது. வந்து ஏ... மாடப்புறா!! நிய்யி என்னா சொன்ன? நா என்னா சொன்னே, எங்க சோழராசன வரச் சொல்லுங்க–ண்டு

சொன்னே. ஏ... பச்சக்கிளி!! நிய்யி என்னா சொன்ன? நா என்னா சொன்னே, எங்க சோழ ராசன வரச் சொல்லுண்டு சொன்னே. ஏ...காக்காயி!! நிய்யி என்னா சொன்ன? நானா? நானு,

காக்காயி காக்காயி

கருத்த நடக் கூட்டமெல்லா

சோத்துத் தண்ணிக்குத் தட்டப்போயி – எங்க

சொரித் தவக்காய வரச்சொல்லுங்க–ண்டு.

சொன்னே–ண்டு. சொல்லுச்சு, தவக்காயிக்கு கோவம் வந்திருச்சு. ஏ...காக்காயி! இப்ப எம் மொந்தாணிக் காலால மொதக்ணு எத்தவாண்டு தவக்காயி சொல்லுது. சொல்லவும் நிய்யி போறயா! மொந்தாணி மூக்ல மொதக்ணு குத்தவாண்டு சொல்லி, காக்காயி எதுத்துக்கிருச்சு.

அப்ப, இந்தத் தவக்கா எத்த, காக்கா கொத்த, கடசில தவக்காயத் தூக்கிட்டுப் போயி, கூரயில வச்சு, காக்கா திண்டுபிட்டு போயிருச்சாம். சரியாப் போச்சு. இவங்க ரெண்டு வேரும் முண்டச்சியா இருந்தாங்களாம்.

V. நகைச்சுவைக் கதைகள்

1. வக்கணை

ஒரு ஊர்ல – ஒரு வெறகு வெட்டி இருந்தர். தெனக்கிம், மலயில போயி, வெறகு வெட்டி பொளச்சுக்கிட்டிருந்தர். அவனுக்கு ஒரு மக இருந்தர். அவன, ஆடு மேய்க்க போகச் சொன்னர். அண்ணக்கி, சாரமழ சல்சல்லுண்டு அடிக்குது. அடிக்கவும், எனக்கு கானம் வறுத்துக்குடு, அப்பத்தா, ஆட்டுக்குப் போவேண்டு சொன்னர்.

சரிண்டு, அவனுக்கு கானம் வறுத்துக் குடுத்தா. குடுக்கவும் ஆடுகள மேய்க்கப் பத்திக்கிட்டு போறர். பகலெல்லாம் ஆடுகள மேச்சுட்டு ஒரு எடத்ல ஆடுகளப் படுக்கப் போட்டுட்டு, இவ, வறுத்த கானத்தத் திங்கிறர்.

திங்கயில –, ஆடுக, கருவேல நெத்து திண்டதுனால – ஆடுக, அசக்குப் போடுதுக, அசகுக்குப் போடயில, கருவேல வெதய கடுபுடு – கடுபுடுண்டு மெல்லுதுக. ஆடுக, கடுபுடுண்டு மெல்லவும், இவ, நம்மள, ஆடுக, வக்கண குத்துதுண்டு நெனச்சு; என்னா ஆடுகளே!! என்னய வக்கண குத்துறீங்களா? ஒங்கள இப்ப என்னா செய்யிறே பாருங்கண்ட்டு, அருவாள எடுத்து; எல்லா ஆடுகளயும் வெட்டிப் போட்டுட்டர். வெட்டி எறிஞ்சிட்டு, வீட்டுக்கு வந்தர்.

வீட்டுக்கு வரவும், எங்கடா மகனே? ஆடுகளண்டு அப்பு கேட்டர். கேக்கவும், ஆடுகளப் படுக்க போட்டுட்டு, கானந் திண்டே, அதுக என்னய வக்கண குத்துச்சுக. பூரா ஆடுகளயும் வெட்டி எறிஞ்சுட்டேண்டு சொன்னர்.

அடப்பாவி! இப்டியா செய்வேண்டு, ரெண்டு போடு போட்டர். மறுநா விடிஞ்சுச்சு, இவன, வீட்ல இருடாண்ட்டு, வெறகு வெட்டப் போறர். வெறகு வெட்டப் போகயில, எனக்கு கானம் வறுத்துக்குடு, அப்பத்தர் வீட்ல இருப்பேண்டு சொல்றர். கானம் வறுத்துக் குடுத்திட்டு, வீட்ல,இருடாண்ட்டு போயிட்டாங்க. பெத்த மனசு; எத்தன தப்பு செஞ்சாலும் மன்னிக்குது.

தாயுந் – தகப்பனு, வீட்ல இருடாண்ட்டு மலக்கிப் போயிட்டாங்க. நல்லா மல்லாந்து கட்ல்ல படுத்துக்கிட்டர். படுத்துக்கிட்டு, வறுத்த கானத்த திண்டர். அப்ப, மொகட்ல ஒரு எலி, கூரயக் 'கடுக் – கடுக்ண்டு கொறிக்குது. இவனுங் கடுக்–கடுக்ண்டு மெல்றர். எலியுங் கூரயக் கடுக்–கடுக்ண்டு கொறிக்குது.

கொறிக்கவும் –, என்னா எலியே! நா் கானந் தின்னுறத வக்கணையா காட்டுற, ஒன்னய கொல்றே பாருண்ட்டு, வீட்ல தியய வச்சு விட்டுட்டர்.

தாயுந் – தகப்பனும் காட்ல இருந்து, வீட்டுக்கு வந்தாங்க. வந்து பாக்கயில, வீடு வெந்து போயிக் கெடக்கு. என்னடா? இப்டிண்டு கேக்கவும் –, நா் கானந்திண்டே, ஒரு எலி என்னயப் பாத்து வக்கண காட்டுச்சு. எலிய கொல்றதுக்கு, தியய வச்சேண்டு சொன்னர். சொல்லவும் இண்ணக்கி நம்ம வீட்டக் கொளுத்துனவ், நாளக்கி, அடுத்தவங்க வீட்டயும் கொளுத்துவாண்ட்டு; வாடா! எங்க கூடண்டு, மலக்கிக் கூப்ட்டுக்கிட்டு போறாங்க.

கொண்டு போன கஞ்சிக் கலயத்த, மரத்ல தூக்கி விட்டுட்டு; தகப்ப் வெறகு வெட்டுறர். தாயி அத எடுத்து ஒண்ணு சேக்குறா.

வேல செஞ்சுகிட்டிருக்கயில, இவனுக்கு அகோரப் பசி படுத்துக்கிட்டே மேல பாத்தா். கலயத்ல கஞ்சி இருக்கு. ஒரு கல்ல விட்டெறிஞ்சா். எறியவும் –, கலயம் பொத்துக்கிருச்சு. பொத்துக்கிறவும் –, கஞ்சி ஒழுகுது. ஒழுக – ஒழுக பூரத்தயும் குடுச்சுட்டா்.

மத்தியானமாச்சு, தகப்ப கஞ்சி குடிக்க வந்தா். வந்து பாத்திட்டு, எங்கடா? கஞ்சிண்டு கேட்டா். கேக்கவும் –, அந்தா – இருக்குலப்பா, வெல்லக்கட்டிண்டு, ஓட்ட வழியாத் தெரியிற மேகத்தக் காம்ச்சா்.

காமிக்கவும் –, இவனுக்கு ரொம்பக் கோவம். கோவமா இருக்கயில, இவ் சும்மா இருக்க மாட்டாம, இந்த ஆறு எங்கப்பா போகுதுண்டு கேட்டா். பசி வேகத்ல, இந்த ஆறு, ஒங்க நடு வீட்டுக்குப் போகுதுண்டு சொல்லிட்டா்.

சொல்லிட்டு, வெறகு வெட்டப் போயிட்டா். போகவும், இவ், வெறகெல்லாம் எடுத்து–எடுத்து, ஆத்ல எறிஞ்சிட்டா். வெறகு வெட்டி முடிஞ்சதும், வெறகு கெடக்ற எடத்துக்கு வந்தா். வெறகு ஒண்ணு கூட இல்ல. எங்கடா வெறகுகளண்டு கேட்டா்.

கேக்கவும் –, இந்த ஆறு எங்க போகுதுண்டு கேட்டே. நடு வீட்டுக்குப் போகுதுண்டு சொன்னயில –, அதா், ஆத்ல எடுத்து போட்டுட்டேண்டு சொன்னா்.

இந்நேரம் நடு வீட்டுக்குப் போயிருக்கும்பாண்டு சொன்னா். நடு வீட்டுக்கு போயிருக்குமா? நிய்யும் நடு வீட்டுக்குப் போடாண்டு, அடிச்சுத் தூக்கி ஆத்ல போட்டுட்டா. ஆத்ல போறா். போகயில –,

பாட்டாளி வாரார் பாடிப்புடி

தேட்டாளி வாரார் தேடிப்புடி—ண்டு

சொல்லிக்கிட்டே.... வெள்ளத்ல மெதந்துகிட்டு போறா.

அங்கிட்டொருத்த், வாழக்கி காவ காத்துக்கிட்டிருந்தவ்; இதென்னாடா, இப்டி சொல்லிக்கிட்டுப் போறா. இவனத் தூக்குனா, நமக்கு தொணயா இருக்கும்ண்ட்டு, தூக்குனா.

தூக்கி –, உம்பேரு என்னாண்டு கேட்டா. கேக்கவும், "தோல் இருக்க சொள முழுங்கி"ண்டு சொன்னா.

சொல்லவும் –, வாழத் தோட்டத்த பாத்துக்க, நா வீட்டுக்குப் போயிட்டு வரேண்டு சொல்லிட்டுப் போயிட்டா. போகவும் –, தோலு இருக்க, பழத்த பூராவும் பிதுக்கி – பிதுக்கித் திண்டுட்டா. வீட்டுக்கு போயிட்டு தோட்டக்காரர் வந்தா. வந்ததும் எங்கடா? பழத்தக் காணம்ண்டு கேட்டா. நாந்தா சொன்னனில்ல – எம்பேரு; தோல் இருக்க சொள முழுங்கிண்டு, அதா திண்டேண்டு சொன்னா. சொல்லவும், அவனும் அடுச்சுத் தூக்கி ஆத்ல போட்டுட்டா. போடவும்,

பாட்டாளி வாரார் பாடிப்புடி

தேட்டாளி வாரார் தேடிப்புடி—ண்டு

சொல்லிக்கிட்டே...., மெதந்துகிட்டுப் போறா. அங்கிட்டொருத்த், நெல்லல அடிச்சு, களத்ல குமுச்சு வச்சிட்டு, காவ ஒக்காந்திருக்கா. ஆத்ல போனவனத் தூக்கி, உம்பேரு என்னாண்டு கேட்டா. கேக்கவும் –, எம் பேரு "சூட்டச் சுத்திப் பொறிப் பெறக்கி"ண்டு சொன்னா.

அப்ப, நெல்லப் பாத்துக்க. நானு வீட்டுக்குப் போயிட்டு – வரேண்ட்டு போறா. போகவும் –, நெல்லுல திய்ய வச்சு விட்டுட்டு, சுத்தி விழுகுற பொறியப் பெறக்கி திண்டுகிட்டிருந்தா.

நெல்லுக்காரர் வந்தா். என்னாப்பா இப்டி செஞ்சுட்டேண்டு கேட்டா். நாந்தா் அப்பவே சொன்னனில்ல; எம்பேரு சூட்டச் சுத்திப் பொறிப் பெறக்கிண்டு. அதா பொறி பெறக்குரேண்டு சொன்னா்.

சொல்லவும் –, அவனும், அடிச்சு ஆத்ல தூக்கிப் போட்டுட்டா். போடவும்,

பாட்டாளி வாரா் பாடிப்புடி

தேட்டாளி வாரா் தேடிப்புடி-ண்டு

சொல்லிக்கிட்டு, மெதந்து போறா். போகயில –,

அங்கிட்டொரு வண்ணா், துணி தொவச்சுக்கிட்டிருந்தா். இவ் சொல்லிக்கிட்டு வா்ர சத்தங்கேட்டு, தண்ணிக்குள்ள இருந்து தூக்கி, துணிகளுக்கு காவ இருடாண்ட்டு; வண்ணா் வீட்டுக்குப் போயிட்டா். வீட்டுக்குப் போயிட்டு வரங்குள்ள, பட்டுத் துணிகளவா பெறக்கியெடுத்துக்கிட்டு ஓடிப் போயிட்டா். வெகுதூரம் போயி, ஒரு புளிய மரத்ல, பட்டுத் துணிகள கெட்டி விட்டுட்டு, மரத்துக்கு கிழ ஒக்காந்துகிட்டா்.

அப்ப, அந்த வழியா ஒரு குதுரக்காரா் வந்தா், வந்தவ், என்னாப்பா இதுண்டு கேட்டா். கேக்கவும் –, இதாங்க பட்டு காக்கிற மரம்ண்டு சொன்னா். சொல்லவும் –, இந்த மரத்த வெலைக்கி தாரயாண்டு கேட்டா். கேக்கவும் –, நூறு பவுங்காசுண்டு சொன்னா்.

வெலச் சொல்லிட்டு, இந்தக் காப்ப (மகசூல்) நா் எடுத்துக்குறே். அடுத்த காப்பு ஒனக்குண்டு சொன்னா. குதுரக்காரா் சரிண்ட்டா். பட்டுத் துணிகள எடுத்துக்கிட்டு, காச்சாப் பாரு; காய்க்கலண்டா, தண்ணிய நல்லா காயவச்சு ஊத்துண்டு சொல்லிட்டு, குதுரயப் புடுச்சுக்கிட்டுப் போறா்.

போயி –, ஒரு எடத்ல, குதுரய கெட்டி வச்சிட்டு, குதுரச் சாணில பவுங்காசுகளப் பெதச்சு வச்சு, தெரியாததுபோல கிண்டிக்-கிண்டி எடுத்துக்கிட்டிருக்கா. எடுத்துகிட்டிருக்கயில-, அங்கிட்டிருந்து, தகப்பனும் – மகனும் பொண்ணுப் பாக்க வராங்க. வந்தவங்க, என்னாப்பா! சாணில இருந்து பவுங்காச எடுத்துக்கிட்டிருக்கண்டு கேட்டாங்க.

அதுக்கு இவ், இது பவுங்காசு போடுற குதுர, இப்பத்தா சாணி போட்டுச்சு. அதுல இருந்த பவுங்காசக் கௌச்சு (கிண்டி), எடுத்துக்கிட்டிருக்கேண்டு சொன்னா.

சொல்லவும், அவங்க, இந்தக் குதுரய வெலைக்கித் தாரயாண்டு கேட்டாங்க. கேக்கவும் –, இவ், ஆயிரம் பவுங்காசு குடுங்கண்டு சொன்னா, சரிண்டாங்க. ஆயிரம் பவுங்காச வாங்கிக்கிட்டு, பவுங்காசு போட்டாப் பாரு, போடலண்டா; குதுரய படுக்க வச்சு, ஒலக்கயப் போட்டு அமுக்குங்கண்டு சொல்லிட்டு போயிட்டா.

இவங்க, இப்ப பவுங்காச போடும், பெறகு பவுங்காசு போடும்ண்டு, பொறுத்துப் – பொறுத்துப் பாத்தாங்க. பவுங்காசு போடல. குதுர சாணிதே போடுமா! பவுங்காசா போடும்? போடாம இருக்கவும் –, குதுரய விழுக்காட்டி, ஒலக்கய போட்டு அமுக்குனாங்க. அமுக்கவும் –, குதுர செத்துப் போச்சு. தூக்கி – தூரப் போட்டுட்டுப் போயிட்டாங்க.

இவ், போனவ் –, அந்த வழியா திரும்பி வாரா. திரும்பி வரயில –, குதுர செத்துக் கெடக்கு. இவங்களக் காணம், இந்தக் குதுரய வச்சு, பணஞ் சம்பாரிக்கணும்ண்டு நெனச்சுக்கிட்டு ஒக்காந்திருக்கா. ஒக்காந்திருக்கயில –, குதுரயத் திங்கிறதுக்கு

பொச்சு வழியா, ஒரு கழுகு மொளஞ்சு போயிருச்சு. ஈரலு கிரலுத் திங்கலாம்ண்டுப் போயிருச்சு.

போகவும் –, பாத்துக்கிட்டு இருந்தவ், ஓட்டமா ஓடி, வைக்கோற்புல்ல சுருட்டிக்கிட்டுப் போயி –, பொச்ச அடச்சுப்பிட்டா். அடைக்கவும் –, கழுகு பறக்குது. கழுகு பறக்கவும் –, குதுர எந்திரிச்சு நிண்டுகிருச்சு.

அப்ப, அந்த வழியா, தகப்பனும் – மகனும் மாடு புடிக்க வராங்க. வந்தவங்க, குதுரயப் பாத்தாங்க. பாக்கயில; இவ், குதுர பறக்கும்ண்டு சொல்றா். பறக்கும்ண்டு சொல்லவும் –, பத்தாயிரம் பவுன்காசு குடுத்து குதுரய வாங்கிக்கிறாங்க.

பத்தாயிரம் பவுங்காச வாங்கிக்கிட்டு, குதுரய வகுத்ல ஒரு தட்டுத் தட்னா சுமாராப் பறக்கும். ரெண்டு தட்டுத் தட்னா ரெம்ப ஒயரத்ல பறக்கும். ரெம்ப ஒயரத்ல பறந்திச்ண்டா, குண்டில இருக்ற வைக்கோற் புல்ல, எடுத்து விட்ருங்கண்டு சொல்லிட்டுப் போயிட்டா்.

இவங்க, அப்பனும் – மகனும், குதுரயில ஏறுனாங்க. ஏறவும், குதுர வகுத்துக்குள்ள இருக்ற கழுகு பறக்க ஆரம்பிக்குது. வகுத்ல ரெண்டு தட்டு தட்டுனாங்க. குதுரயத் தூக்கிக்கிட்டு, கழுகு பறந்து போகுது. போகவும் –, ரெம்ப மேல போயிருச்சுண்ட்டு, குண்டில அடச்சு வச்சிருந்த வைக்கல எடுத்து விட்டுட்டாங்க. எடுத்து விடவும் –, கழுகு குண்டி வழியா வெளிய வந்திருச்சு. கழுகு வெளிய வந்திச்சோ இல்லயோ! குதுர, இவங்க, தல விழுதா வாராங்க. வந்து; மொந்து – மொந்துண்டு விழுந்து செத்துப் போனாங்க. பெறகு பவுங்காசுகள வீட்டுக்குக் கொண்டு போயி –, அப்பங்கிட்டக் குடுத்து, நெலம்பொலம் வாங்கி, நல்லா பொளச்சாங்களாம்.

2. பங்கு - பாகம்

ஒரு ஊர்ல – பெரிய சொக்கன் – சின்னச் சொக்கீண்டு அண்ணந் – தம்பி ரெண்டுபேரு இருந்தாங்க. பெரிய சொக்கன் விவசாயம் செய்யுறது. சின்ன சொக்கன் குண்டடிக்கிறது, பம்பரங் குத்துறது, வெ–ளாண்டுகிட்டுத் திரிஞ்சுட்டு, வீட்டுக்கு வந்து திங்கிறது, போயிறது. சின்ன சொக்கன் பொண்டாட்டி, எங்க பொம்பளைக, குளியாஞ்சுட்டி வச்சு வெள்ளாடுறாங்களோ, அங்க போயி வெள்ளாடுறது.

அப்ப: பெரிய சொக்கன் பொண்டாட்டி, என்னாங்க! நம்ம வயல்ல வேல செய்றோம், ஒங்க தம்பி, இப்டி வெள்ளாண்டுகிட்டு இருக்காறே. எப்டிங்கண்டு கேக்குறா. பங்கு – பாகம் பகுந்து விட்டுருங்கண்டு சொல்றா.

சொல்லவும், சரிண்ட்டு பங்கு பாகம் பகுந்து விடுறாி. எப்டிண்டா! வெ–ளஞ்ச வெள்ளாமயில; வெ–ளஞ்ச கருது பெரிய சொக்கனுக்கு. வெளையாத கருது சின்னச் சொக்கனுக்கு. முட்டையிடுகிற கோழி பெரிய சொக்கனுக்கு, சாவ (சேவல்) சின்னச் சொக்கனுக்கு, கார வீடு பெரிய சொக்கனுக்கு, கூர வீடு சின்னச் சொக்கனுக்கு. இவ், வெள்ளாண்டுகிட்டு திருஞ்சதுனால; பங்கு பாகம்ண்டா என்னாண்டு தெரியல. அண்ணன் பாத்து, குடுக்குறத வாங்கிக்கிட்டாி. வாங்கிப் பெறக்கி, பொண்டாட்டிகிட்ட பாத்துக்கிண்டு விட்டுட்டு; இவ் வெளியேறிப் போறாி. போகயில –, அங்நட்டு ஒரு சின்னக் கிராமம் இருக்கு. அந்தக் கெராமத்ல, நமக்கோடி நாராயணஞ் செட்டியாருண்டு ஒருத்தரு. பெரிய பணக்காரு. அந்த ஊர்ல போயி –, வேல இருக்காண்டு நமக்கோடி நாராயணஞ் செட்டியாருகிட்டக் கேக்குறாி. யாரு? சின்னச் சொக்கன். வேல இருக்கு. ஒன்னால செய்ய முடியுமாண்டு செட்டியாரு கேக்குறாரு.

குடுங்க, செய்றேங்குறா். யப்பா! நிய்யி சின்னப் பய. இங்க இருக்ற வேலயச் செய்ய மாட்ட. குடுத்த வேலயச் செய்ய முடியலண்டா; ஒரு காத அறுத்துக்கிட்டு விட்டுருவோம். செஞ்சுட்டா, எஞ்சொத்துல பாதியும், எம் பொண்டாட்டிகள்ல ஒண்ணுங் குடுத்துருரேண்டு சொல்லி, சின்னச் சொக்கன வேல செய்யச் சொல்லிட்டாரு.

என்னன்னா வேலண்டா, விடிஞ்சா(ல்)
ஆயிரம் கட்டுப் புல்லறுக்கணும்
ஆயிரம் பான தண்ணி யெடுக்கணும்
அழுத பிள்ளய ஆட்டி விடணும்
ஆறு பான சோறாக்கணும்
நெல்லு குத்தணும் – அரிசி யாக்கணும்
மெத்த விரிக்கணும் – காலமுக்கணும்
குதுரைகளுக்கு தண்ணி காட்டணுமுண்டு

வரிசயா சொல்லிக்கிட்டே இருக்கா். இத்தன வேலைகளுஞ் செஞ்சு, எண்ணக்கி; இவ் செட்டியாருக்கு நல்ல பிள்ளையாகுறது. செஞ்சு பாத்தா், எத்தனை வேலைகளச் செய்யுறது. பொழுது விடுஞ்சு, பொழுது விழுகுறதுக்குள்ள இத்தன வேலைகளச் செய்ய முடியுமா? எனண்டு செய்யுறது. செய்ய முடியாமப் போகவும், செட்டியாரு ஒரு காத அறுத்துக்கிட்டுப் போகச் சொல்லிட்டாரு. காது வழி ரத்தம் வந்தவாக்குல, வீட்டுக்குப் போறா். போகவும் –, அண்ணன் பாத்தா். என்னா தம்பிண்டு கேட்டா்.

கேக்கவும் –, அந்த ஊர்ல, நமக்கோடி நாராயணஞ் செட்டியாருண்டு இருக்காரு. அவருகிட்ட வேல செய்றேண்டு கேட்டே. யப்பா! இங்க வேல கடுமயா இருக்கும். செஞ்சுட்டயிண்டா, எஞ்சொத்துல பாதி சொத்து, எம்பொண்டாட்டில ஒண்ணும்

தரேண்டு சொன்னாரு. சரிண்டு செஞ்சே. என்னால செய்ய முடியல, காதறுத்துக்கிட்டு போகச் சொல்லிட்டாரு. வந்தேண்டு சொன்னர்.

அண்ணனுக்கு வேகம் வந்து; நிய்யி, இங்க வெவசாயத்தப் பாரு. நா் அங்க போறேண்ட்டுப் போறா்.

போகயில, ஒரு கொளம் இருக்கு. அந்தக் கொளத்துக்கர வழியா போறா். போகயில, கொளத்துக் கரயில ஒக்காந்து, நமக்கோடி நாராயணஞ் செட்டியாரு பல்லு வெளக்கிட்டிருக்காரு. இவ், போகயிலலேய... நமக்கோடி நாராயணஞ் செட்டியாருண்றது யாரு? நமக்கோடி நாராயணஞ் செட்டியாருண்றது யாருண்டு கேட்டுக்கிட்டே போறா். அங்நன எதுக்கால ஒக்காந்திருந்தவரு; நாந்தாப்பா! ஒனக்கு என்னா வேணும்ண்டு கேட்டாரு.

ஒங்ககிட்ட வேல இருக்காம்ல, அந்த வேலய, நாஞ் செய்றேண்டா். இப்பத்தா் ஒருத்த் காதறுத்துக்கிட்டு போறா். நிய்யி வேறயாண்டு செட்டியாரு சிரிக்குறாரு. சிரிச்சுட்டு, வா—ண்டு கூட்டிட்டுப் போறாரு. போயி—, வேலைகளச் சொன்னாரு. சொல்லவும், சரிண்ட்டு செய்யுறா்.

மொதல்ல போயி —, ஆயிரங்கட்டுப் புல்லறுத்திட்டு வா—ண்டு செட்டியாரு சொன்னாரு. சொல்லவும், சரிண்ட்டுப் போறா். போற வழில, ஒரு கடயில ஒரணாவுக்கு நூல் கண்டு ஒண்ண வாங்குனா். வாங்கிட்டுப் போறா். போயி —, ஒரு கட்டுப் புல்ல அறுத்து; அத ஆயிரங்கட்டாக்கட்டி, அந்த ஆயிரம் கட்டயும் ஒண்ணா வச்சுக்கட்டி, தலயில வச்சுக்கிட்டு வாரா்.

வரவும், எங்கடா ஆயிரங்கட்டு? பின்னால வருதாண்டு செட்டியாரு கேட்டாரு. யோ! வந்து கட்ட எண்ணிப் பாருய்யாண்டு, ஆயிரம் கட்ட எண்ணிப் போட்டா். செட்டியாருனால மறுபேச்சுப் பேசமுடியல.

சரி – போயி –, ஆயிரம் பான தண்ணி எடுத்துக்கிட்டு வா–ண்டு செட்டியாரு சொன்னாரு. சரிண்டு, பானய எடுத்துக்கிட்டுப் போனவ், படிக்கொரு பானயப் போட்டு ஒடச்சா். படிக்கொரு பானய ஒடைக்கவும், செட்டியாரு எத்தன பான வாங்கிக் குடுப்பாரு.

சரிடா – நிய்யி தண்ணியெடுக்க வேணாம், ஆயிரம் குதுரைகள அவுத்து, தண்ணி காட்டுண்டு செட்டியாரு சொன்னாரு. இவ், ஆயிரங் குதுரகளயும் அவுத்து, தண்ணிகிட்டக் கொண்டு போயிக், காட்டிட்டுக் கெட்டி வச்சுறது. பாத்தாரு செட்டியாரு. இவ் நம்மள மிஞ்சிருவா் போலவண்ட்டு இந்த வேலய நாஞ் செஞ்சுகிறே். நிய்யி போயி, அழுத பிள்ளய ஆட்டிவிடுண்டு சொன்னாரு. அங்க போயி –, பிள்ளய ஆட்டி விடுற மாதிரி நறுக்குண்டு கிள்ளி விட்டுறது. பிள்ள வீர் – வீர்ண்டு அழுகுது.

இவன ஒண்ணுஞ் செய்ய முடியாது. இவன எங்கிட்டாச்சுங் கொண்டு போயி விட்டுறணும்ண்ட்டு, செட்டியாரோட மாமியா வீட்டுக்குப் போகச் சொல்றாரு.

பணியாரஞ் செஞ்சு கொடத்ல வச்சுக்கிட்டு வண்டியக் கட்டிக்கிட்டுப் போறாங்க. நமக்கோடி நாராயணஞ் செட்டியாரே! எனக்கு வகுத்தப் பசிக்குதுய்யாண்டா்.

இந்தக் கட்டுச் சோற, அந்த தண்ணித் தொறயில வச்சுத் திண்டுட்டு, எனக்குக் கொஞ்சம் வச்சுட்டு வாடாண்டு செட்டியாரு சொன்னாரு.

கட்டுச் சோறக் கொண்டு போயி திண்டுட்டு, மீதிய அங்னதான வச்சுப்பிட்டு வந்திட்டா். வரவும் –, எங்கடா எனக்குச் சோறுண்டு செட்டியாரு கேட்டாரு. நிய்யிதானய்யா அங்ன வச்சுட்டு வரச்சொன்ன. அதா், அங்க வச்சுட்டு வந்திட்டேண்டு சொன்னா்.

இவன என்னா செய்யுறதுண்ட்டு, சரி; இந்தக் கொடத்த பாத்துக்க, இதுக்குள்ள கைய விட்டுறாத, உள்ள பாம்பு; தேளு; பல்லிக கெடக்குதுண்டு சொல்லிட்டு, செட்டியாரு சோறு தின்ன, தண்ணி மோக்கப் போனாரு.

இவ், செட்டியாரு வரங்குள்ள, கொடத்ல இருந்த பணியாரத்தத் திண்டுபிட்டு, மீதிய அங்ஙன இருந்த மாட்டுக்காரங்களுக்கு குடுத்துத் திங்க விட்டுட்டு, அங்கிட்டுக் கெடந்த பாம்பு – பல்லிகளப் புடுச்சுப் போட்டு நெப்பி, மேலாக ஒரு செனத் தேளப் போட்டு, மூடி வச்சிட்டா்.

வண்டி போகுது. போகயில, செட்டியாரு – லேசா வண்டுக்கட்ட அவுத்துக்கிட்டு, கொடத்துக்குள்ள கைய விட்டாரு செட்டியாரு. விடவும், மேலாகக் கெடந்த செனத் தேளு, கையில வாங்கி விட்டுருச்சு. வாங்கவும் மனுச் துடிக்கிறா்.

வலியோட வலியா, வண்டி மாமியா வீட்டுக்குப் போயிருச்சு. இந்தத் தேளுக்கடிக்கு என்னாடா செய்யுறது சொக்காண்டு, செட்டியாரு கேட்டாரு.

காப்டி கேப்பய நனச்சு இடுச்சு, புளிச்ச தண்ணில காச்சிக் குடிக்கச் சொல்லிட்டா். காச்சிக் கரச்சுக் குடுத்தாங்க. குடிச்சாரு செட்டியாரு. ரெண்டாங் கெட்ட நேரத்ல, செட்டியாருக்கு வகுத்தால புடிங்கிருச்சு. புடுங்கவும், சந்து பொந்தெல்லாம் பேண்டு மாமியா வீட்டக் கெடுத்துப்பிட்டாரு. இவன வச்சிருந்தோம்ண்டா, நம்மள ரெம்ப அவமானப் படுத்திப்பிடுவாண்ட்டு, பேசுனது போல, சொத்துல பாதியும், நமக்கோடி நாராயணஞ் செட்டியாரு பொண்டாட்டிகள்ல ஒரு பொண்டாட்டியும் குடுத்துப் போகச் சொன்னாராம்.

வாங்கிட்டு, ஊருக்கு வந்து, பெரிய சொக்கனும் – சின்னச் சொக்கனும், நல்லாப் பொளச்சாங்களாம்.

3. பூதம் - கீதம்

ஒரு ஊர்ல – வாச்சொல்லு வீ ரண்டு ஒருத்தனும், செயல் வீ ரண்டு ஒருத்தனும் இருந்தாங்க. எங்க போனாலும் சேந்துதா போவாங்க. என்னா செஞ்சாலுஞ் சேந்துதா செய்யிவாங்க. ஒருத்தனுக் கொருத்த் விட்டுப் பிரிய மாட்டாங்க.

ரெண்டுபேரும் ஆடு களவாண்டப் போனாங்க. அப்ப, கெடயில, ஆட்டுக்கார ஒக்காந்திருக்கா. ஒக்காந்திருக்கவும், ஆட்டுக்கார போகட்டும்ண்டு, ஒரு பொதைக்குள்ள ஒளிஞ்சுகிட்டாங்க.

அப்ப, ஒரு பூதமும், ஆடுபுடிக்க வந்து ஒளிஞ்சிருக்கு. அப்ப: ஆட்டுக்கார, கம்ப நட்டு, அதுமேல போர்வயப் போட்டுட்டு, தம்பி! நா வீ ட்டுக்குப் போயிட்டு வரே. நா வர்றது வரைக்கும், ஆடுகளப் பாத்துக்க. ஒரங்கிறாத. ஒரங்குனயிண்டா, பூதங்கிதம் (பூதம் – கிதம்) வந்து, ஆடுகளப் புடுச்சிட்டுப் போயிரும்ண்டு சொல்லிட்டு, வீ ட்டுக்குப் போயிட்டா. சும்மா வாச்சுக்கும் பேசிட்டுப் போறா.

அப்டி – பூதங்கிதம்ண்டு சொல்லயில, அங்க ஆடு களவாண்ட வந்த பூதம் கேட்டுக்கிட்டிருந்து, கிதம்ண்டு ஒண்ணு இருக்குதுபோல, நம்மளக் காட்டிலும் பெருசுபோலண்டு பயந்துகிட்டு இருந்திட்டு, இவ் போகவும், பூதம் ஆட்டுவடிவத்ல வந்து, ஆட்டுக் கூட்டத்துக்குள்ள மொளஞ்சு, ஆடு மாதிரி நிண்டுருக்கு.

ஆட்டுக்குள்ள இருக்ற பூதம், கித்ம் வரும்ண்டு பயந்துகிட்டிருக்கயில, இவங்க, சொல்வீரனும் – செயல்வீரனும் ஆடு புடிக்க கெடைக்கு வராங்க.

கொளுத்த ஆட்டப் புடிக்கணும்ண்டு, எல்லா ஆட்டயும் தடவிக்கிட்டே வந்தாங்க. வரயில, ஆடு மாதிரி நிண்டிருந்த பூதத்தத் தடவிப் பாத்தாங்க. தடவிப் பாக்கயில, இது கொளு – கொளுண்டு இருக்குது. கொளு – கொளுண்டு இருக்கவும், புடுச்சுக் தூக்கிட்டாங்க. தூக்கிட்டுப் போறாங்க.

போகயில, பூதம் என்னா நெனக்கிது. கிதம் வரும்ண்டு ஆட்டுக்காரி சொன்னானே! கிதத்துகிட்ட வசமா மாட்டிக்கிட்டோம் போல இருக்கு. இதுகிட்ட இருந்து எப்டித் தப்பிக்கிறதுண்டு நெனச்சு, பூதம் பயந்துகிட்டிருக்கு. இவங்க, தூக்கிட்டுப் போனவங்க, என்னடா இந்தக் கனங்கனக்குது, கொளுப்பாடு போல, இண்ணக்கி நல்ல கறிண்டு நெனச்சுக்கிட்டுத் தூக்கிட்டுப் போறாங்க.

பூதம், இவங்ககிட்ட இருந்து தப்பிக்கப் பாக்குது. இவங்களக் கிதம்ண்டு நெனச்சுக்கிட்டு, பூதம் தப்பிச்சு ஓட வழி பாக்குது.

போகயில, செமக்க மாட்டாம, ஒரு எடத்ல எரக்கி வச்சிட்டு, ஒண்ணுக்கிருக்கப் போனாங்க. போகவும், பூதம் இதான் சமயம்ண்டு தப்பிச்சு, ஒரேயடியா ஓடிப்போச்சு.

ஒண்ணுக்கு இருந்திட்டு வந்தாங்க. வந்து பாக்கயில, ஆட்டக் காணம். தோலுமட்டும் அங்க இருக்கு. இருக்கவும் பூதம் நம்மள ஏச்சிருக்குண்டு நெனச்சுப் பயந்து, நல்லவேள, நம்ம தப்பிச்சோம்ண்டு, இவங்க வீட்டுக்குப் போனாங்களாம்.

4. பணியார மழை

ஒரு ஊர்ல – புருசம் பொண்டாட்டி இருந்தாங்க. பொண்டாட்டிய, வீட்ல இருக்கச் சொல்லிட்டு, புருசு கருதறுக்கப் போறா். கருதறுக்கயில, கூட அறுக்ற கொமரிக. இவனப் பாட்டுப் படிண்டு சொன்னாங்க. சொல்லவும், எனக்குப் பாட்டுத் தெரியாதுண்டு சொல்றா். அப்ப! பாட்டுத் தெரியலண்டா; நாளக்கிருந்து, எங்க கூட கருதறுக்க வரக்கூடாதுண்டு சொல்லிட்டாங்க.

அப்ப: இவ், என்ன நெனக்கிறா், பாட்டுப் பழகப் போறேண்டு, இருவத்தஞ்சு ரூவா வாங்கிக்கிட்டு, வீட்ட விட்டு வெளியேறிப் போறா்.

போகும்போது, வழில ஒருத்த் பாட்டுப் பாடிக்கிட்டே, எரச்சுக்கிட்டிருந்தா்.

அவங்கிட்டப் போயி, அண்ணே!! இந்த இருவத்தஞ்சு ரூவாய வச்சுக்கிட்டு, எனக்குப் பாட்டுச் சொல்லிக்குடுண்டு கேட்டா்.

இருவத்தஞ்சு ரூவாய, அவ் வாங்கி வச்சுக்கிட்டு, இப்படிப்பட்ட இளிச்ச வாயங்க இருக்குறாங்களேண்டு மனசுல வச்சுக்கிட்டு, பாட்டுச் சொல்லிக் குடுக்குறா். பாட்டுகளப் பழகிக்கிட்டு, நா் போயிட்டு வாறேண்டு சொல்லிட்டு, வீட்டுக்கு வாரா்.

அப்ப: பாட்டுச் சொல்லிக் குடுத்தவ் சொன்னா்; தம்பி! போகும் போது;

புங்கமரம் புது நெழலு
தென்றலே தென்றல் – ண்டு

பாடிக்கிட்டே போண்டு சொன்னர், சொல்லவும், இவனும் அப்டித்தர்,

புங்கமரம் புது நெழலு

தென்றலே தென்றல் – ண்டு

பாடிக்கிட்டே வீட்டுக்கு வாரர்.

வர்ற வழில, ஒரு ஆறு குறுக்க போகுது. ஆத்தக் கடக்கும் போது; இவ், புங்கமரம் புது நெழலு – ண்டு சொன்னர், தென்றலே தென்றல்ங்ற வாத்த மறந்துபோச்சு.

மறந்துபோன,தென்றலே தென்ல்ங்ற வாத்த, ஆத்துக்குள்ள விழுந்திருச்சுண்ட்டு, ஆத்து தண்ணிய அணகெட்டி எரக்கிறர். ஆனா! தண்ணி வத்தல, பொழுதும் விழுந்திருச்சு.

பொழுசாய வீட்டுக்கு வந்தர். வந்ததும் வராததுமா, பாய விரிடிண்டு சொன்னர். பொண்டாட்டி, பாய விருச்சா. விரிக்கயில, ...ங்.... புங்கமரம் புது நெழலு, அதுக்கு மேல அந்து போச்சுடிண்டு – பாடுறர்.

பாடவும், அவ, அட வெக்கங்கெட்ட மனுசா! ஒனக்கென்னா பைத்தியமா? சும்மா இரு. ஒன்னயப் போயி பாட்டுப் பழகச் சொன்னேன்பாரு, எம் புத்திய செருப்பாலடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டா.

அப்ப, அவங்க வீட்ல ஒரு காளைமாடு இருந்திச்சு. மனுசா! மனுசா! இத வச்சு என்னா செய்யப் போற? உழுகுறதுக்கு நம்மகிட்ட நெலமில்ல. இதக்கொண்டுபோயி, சந்தயில வித்துட்டு வாண்டு சொன்னா. சொல்லவும், சரிண்டட்டு, மாட்டப் புடுச்சுக்கிட்டுப்போறர். போற வழில, ஒரு

கரட்டான், வேலில படுத்துக் கெடக்கு. இவனப் பாத்ததும், கரட்டான் தலய ஆட்டுச்சு. கரட்டான் தலய ஆட்டவும்,அண்ணே! அண்ணே! கரட்டான் அண்ணே! இந்த மாட்ட வெலக்கி வாங்கிகிறயாண்டு கேக்குறா. அதுக்கும் கரட்டான் தலய ஆட்டுச்சு.

ரெண்டு மாடு, இருவத்தஞ்சு ரூவாண்டு சொன்னா. அதுக்கும் கரட்டான் தலயாட்டுச்சு. அப்ப! துட்டு? இப்ப இல்லி யாக்கும். அப்பண்டா! ரெண்டுநா கழிச்சு வந்து வாங்கிக்கிறேண்டு சொன்னா. அதுக்கும் கரட்டான் தலயாட்டுது. மாட்ட, மரத்ல கெட்டி வைக்கட்டாண்டு கேட்டா. அதுக்கும் கரட்டான் தலய ஆட்டுச்சு.

மாட்ட, கருவல மரத்ல கெட்டி வச்சிட்டு, வீட்டுக்கு வந்திட்டா. வந்து, பொண்டாட்டிகிட்ட வெவரத்தச் சொன்னா. சொல்லவும், பொண்டாட்டி,புடுச்சு எக்கச் செக்கமா வையிரா. பொம்பள! பேசாம இரு, நாளக்கிப் போயி கரட்டாங்கிட்ட, பணத்த வாங்கிக்கிட்டு வந்திருரேண்டு சொல்றா.

சொல்லிட்டுப் படுத்திருக்கா. அண்ணக்கி ராத்திரி விடியவும், எந்திரிச்சு, சொல்லாமக் கொள்ளாமப் போறா.

போகயில, அந்தக் கரட்டான், அந்தக் கருவல மரத்ல இருக்கு. இவனப் பாத்ததும் பம்மிக்கிருச்சு.

கரட்டான் அண்ணே! ஒழியாத, நானு ஒன்னய பாத்திட்டே. என்னா? ரூவா இருக்காண்டு கேக்குறா.

கேக்கவும், கரட்டான் தலய ஆட்டுச்சு. என்னடா, நம்ம பேசிக்கிட்டே இருக்கோம், கரட்டான் அதுபாட்டுக்குத் தலய ஆட்டிக்கிட்டே இருக்கு. கரட்டான், தலய ஆட்டாம என்னா

செய்யும், ஆட்டவும், இப்பப்பாருண்டு, ஒரு கல்ல எடுத்து கரட்டானப் பாத்து எறிஞ்சா். எறியவும், கரட்டான் ஓடிப் போயி ஒரு பொந்துக்குள்ளே நொழஞ்சுகிருச்சு. பொந்துக்குள்ள தான இருப்ப! இரு! ஒன்னய வந்து பேசிக்கிறேண்ட்டு வீ ட்டுக்குப் போனா்.

அங்க, பொண்டாட்டி புடுச்சு மானங்கெட வையிரா. அந்தக் கோவத்ல, மம்பட்டிய எடுத்துக்கிட்டு வாரா். வந்து, கரட்டான் நொழஞ்ச பொந்தப் புடுச்சு வெட்டுறா். வெட்டிப் பாக்கயில, அந்தக் கரட்டான், அண்டாப் பணத்து மேல படுத்திருக்கு. ஏண்ணே! இப்பயாவது, இருப்பதஞ்சு ரூவாயக் குடு, நானு வீ ட்டுக்குப் போகணும்ண்டு கேக்குறா். அப்பவும் கரட்டான், தலய ஆட்டுச்சு.

ஆட்டவும், கரட்டான் அண்ணே! சரிண்டு சொல்லி ருச்சுருண்ட்டு, இருவத்தஞ்சு ரூவாய மட்டும் எடுத்துக்கிட்டு, பொந்த மூடி வச்சிட்டு, வீ ட்டுக்கு வந்திட்டா்.

வந்து, பொண்டாட்டிகிட்ட ரூவாயக் குடுத்திட்டு, கரட்டான் அண்ணே! எத்தம் பெரிய பணக்காரருண்டு ஒனக்குத் தெரியுமாடி? அவரப் போயி வையிரயே! கொஞ்சங் கூட மனுசத்தம்மயில்லாம, அண்டாப் பணத்து மேல, எம்புட்டு சொகுசாப் படுத்துக் கெடக்காருதெரியுமாண்டு சொல்றா்.

சொல்லவும், அட கூறு கெட்ட மனுசா! கரட்டான் பணத்து மேல படுத்துக் கெடக்குதுண்டு சொன்னய, காமிண்டு கூட்டிட்டுப் போறா.

கூட்டிக்கிட்டுப் போகயில, ஒண்ணொண்ணா சொல்லிக் கிட்டே போறா். கிட்டத்ல போயி, அண்டாப் பணம் இருக்ற எடத்தக் காமிச்சா்.

அண்டாப் பணத்தப் பாத்தவ, எடுத்துட்டுப் போயிறலாம்ண்டு நெனச்சு, எடுக்கப்போனா. போகவும், அண்டாப் பணத்த எடுத்துட்டுப் போ; நா் போயி ராசாகிட்டச் சொல்றேண்டு சொன்னா்.

சொல்லவும், இவ், ஒரு கூறு கெட்ட பய, சொன்னாலுஞ் சொல்வாண்ட்டு, அண்டாப் பணத்த எடுக்காம, வீட்டுக்கு வந்திட்டாங்க.

புருசன ஓரங்கப் போட்டுட்டு, ராத்ரில போயி, அண்டா பணத்த எடுத்திட்டு வந்து, வீட்ல வச்சுக்கிட்டா.

பணத்த ஒளிச்சு வச்சிட்டு, பணியாரஞ் சுடுறா. இவ் – பந்தல் மேல ஏறிப் படுத்துக் கெடக்கா். படுத்துக் கெடக்கயில, பணியாரத்த அவ் மேல எறிஞ்சுவிட்டுட்டு, தண்ணிய மோந்து அவ்மேல ஊத்துறா. ஊத்திட்டு, அடக் கூறுகெட்ட மனுசா! பணியார மழ பேஞ்சு எல்லாரும் பெறக்குறாங்க. நிய்யி படுத்துக் கெடக்கயேண்டு சொன்னா. சொல்லவும், ஏண்டி! சத்தம் போடுற, இங்கயும் விழுகுதுடி பணியார மழண்டு சொல்லிட்டு, பணியாரத்தப் பெறக்கி – கிரக்கித் திண்டுப் பிட்டுப் போயிப் படுத்துக்கிட்டா். ராத்ரிக்கு – ராத்திரியாப் போயி, அண்டாப் பணத்த எடுத்திட்டு வந்து, வீட்ல வச்சுக்கிட்டு, விடியவும் புருசங்கிட்டப் போயி, அண்டாப் பணத்த எடுத்திட்டு வந்திட்டேண்டு சொன்னா. சொல்லவும், அப்டியா சங்கதிண்ட்டு, வேகமா வெளியேறிப் போயி, ராசாகிட்டச் சொல்லிட்டா்.

எப்டிச் சொன்னரீண்டா! என்னய ஒரங்கப் போட்டுட்டு, எம் பொண்டாட்டி, கரட்டான் அண்ண வச்சிருந்த அண்டாப் பணத்த எடுத்துட்டு வந்து, வீட்ல வச்சிருக்காண்டு சொல்லி, அரமண ஆளுகளக் கூட்டிட்டு வாரார்.

வரயில, இங்க, இவ கிளிஞ்ச சீலயக் கெட்டி, வாசப் படில ஒக்காந்திருக்கா. அவ் ராசாவக் கூட்டிக்கிட்டு வாரார்.

வந்ததும், வாசல்ல ஒக்காந்திருந்தவகிட்ட அண்டாப் பணப் பொதயல எடுத்தயாண்டு கேக்குறாரு ராசா. அதுக்கு அவ, எனக்கு எப்டிசாமி பொதயலு கெடைக்கும்ண்றா. ஓம்புருச் சொன்னரீண்டு ராசா சொல்றாரு. ஐயையோ எம்புருச் ஒரு பைத்தியம். எண்ணக்கி எடுத்திட்டு வந்தேண்டு, அவரக்கேளுங்க ராசாவேண்டு சொல்றா.

ஓம் பொண்டாட்டி, எண்ணக்கிப் பொதயல எடுத்திட்டு வந்தாண்டு ராசா கேட்டாரு.

அதுக்கு அவ, எனக்கு நல்லாத் தெரியுமே, பணியார மழை பேஞ்சண்ணக்கிண்டு சொன்னர்.

பாத்திங்களா ராசாவே! இந்த மதிகெட்ட மனுச் பேச்சக் கேட்டு, நீங்களும் வந்திருக்கிங்களேண்டு சொன்னா. சொல்லவும், அவனத்தான வஞ்சுவிட்டுட்டு, ராசா போயிட்டாரு. பெறகு பணத்த வச்சு நல்லா பொளச்சாங்களாம்.

இவனமாதிரி, அவளும் இருந்தால் எப்டி இருக்கும். அதர் – ஒண்ணு, ஆம்பள வெவரமா இருக்கணும், இல்ல பொம்பள வெவரமா இருக்கணும். ரெண்டும் ஒண்ணு மாதிரி இருந்தால் எப்டி இருக்கும். இது மாரிதர் இருக்கும்.

5. முளி கண்ணுக் குருடன்

ஒரு குடும்பத்ல – ஒரு முளி கண்ணுக் குருடன் இருந்தா. அவனுக்கு கல்யாண வயசு வந்திருச்சு. எப்டியாவது, கல்யாணத்த முடிச்சு வச்சிரணும்ண்டு, பொண்ணு தேடி அலயுறாங்க. அலயயில, அப்டித்தா, நம்மள மாதிரி பொண்ணு வச்சுருக்கவங்க குடுக்குறோம்ண்டு சொல்ல மாட்டாங்க. குடுக்குறோம்ண்டு சொல்லிட்டாங்க.

தாயுந் – தகப்பனும், வீட்டுக்கு வந்து, மகங்கிட்ட, நாளக்கி மாப்பிள்ள பாக்க வராங்க. நிய்யி காட்டுல போயி, பரண்ல ஒக்காந்துகிட்டு, படிக்கிறது மாதிரி பொசுத்தகத்தப் புடுச்சுக்கிட்டு, மண்டைய அலச்சுக்கிட்டு இருண்டு, சொல்லிக் காட்டுக்கு போகச் சொல்லிட்டாங்க.

அப்ப: பொண்ணு வீட்டுக்காரு வராங்க. வந்து மாப்பளயப் பாக்கணும், எங்கண்டு கேக்குறாங்க.

கேக்கவும், அவர எங்க? வீட்ல பாக்க முடியும், காட்டுல ஒக்காந்து படிச்சுக்கிட்டு இருப்பாரு. அங்க போயுத்தா பாக்கணும்ண்டு தாயுந் – தகப்பனும் சொல்றாங்க.

சரி – பின்ன வாங்க. போயிப் பாப்போம்ண்ட்டு, காட்டுக்குப் போறாங்க. தூரத்லபோகும்போது, பரண்ல ஒக்காந்திருக்கிறது தெரியுது. பொண்ணு வீட்டுக்காருக்கு, அந்தா ஒக்காந்திருக்கார்லண்டு காட்டுறாங்க. பாக்கயில, பொசுத்தகத்தக் கையில புடுச்சுக்கிட்டுப் படிக்கிறவ மாதிரி தலய அங்கிட்டும் – இங்கிட்டும் ஆட்டிக்கிட்டிருக்கா.

படிக்கிறவர, இப்ப ஒண்ணுஞ் செய்யக் கூடாதுண்ட்டு, வீட்டுக்கு வந்திருராங்க. வந்து, சாப்பிட்டிட்டு – கிப்பிட்டிட்டு கல்யாணம் பேசி முடிச்சிட்டாங்க.

கல்யாணமும் முடிஞ்சிறுச்சு. கல்யாணத்தண்ணக்கி கைய காலப்புடுச்சுக் கெத்தாக் கொண்டுபோயி, கல்யாண மேடயில விட்டுட்டாங்க. தாலிய எடுத்துக் குடுக்கவும், மதிப்பாத் தாலியக் கட்டிட்டா்.

கல்யாணம் முடிஞ்சு, மறுவீடு போறாங்க. கோழி – கிழிய அடிச்சுக் காச்சி வச்சிட்டுச் சாப்பிடக் கூப்பிடவும், எனக்கு வேணாம்ண்டு சொல்றா். கண்ணுதெரிஞ்சாத்தான, கூப்பிட்டா – கூப்பிட்ட எடத்லு போயி மதிப்பா வட்டி முன்னால ஒக்காந்து சாப்பிட முடியும், இவனுக்குத்தா் கண்ணு தெரியாதே. எப்டி ஒக்காந்து சாப்பிடப் போறா். பெறகு, படிச்சவரு, நம்ம முன்னோடி சாப்பிடுறதுக்கு வெக்கப் படுறாரு, போலண்ட்டு, தம்பி கேட்கும்போது சோறு போடும்மாண்டு சொல்லிட்டு படுக்கப் போயிட்டாங்க.

நல்லா நடுக்குளிச் சாமத்ல, வகுத்துப் பசி எடுக்கவும், பொறுக்க மாட்டாம எந்திரிச்சா். பொண்டாட்டிய எழுப்பி, நா் ஒரு விடுகத போடுறே், நிய்யி அழிச்சுக் குடுக்கணும்ண்டு சொல்றா். அவளுஞ் சரித்தேண்டு சொல்லிட்டா. இவ் கதயச் சொல்றா்.

சோத்துப் பானயும், சாத்துச் சட்டியும் எங்க இருக்கும்ண்டு கேட்டா். அட! அது கூடவா எனக்குத் தெரியாது. எங்க இருக்கும்? அடுப்பு மேட்டுல இருக்கும்ண்டு சொல்லிப்பிட்டா.

தடவிக்கிட்டே போயி, சோறப் போட்டுத் திங்கிறா். திங்கயில, சட்டி உருள்ற சத்தம் கேக்குது. ராத்ரியிலே போயி உருட்டினா சத்தம் கேக்காது. கேட்டுச்சு. நாயிதா் சட்டிய உருட்டுதுண்டு, மாமியாகாரி, சே – சேண்டு சத்தம் போட்டா. மாமியா சத்தம் போடவும் கம்ண்டு இருந்துகிட்டா்.

காலயில, எந்திருச்சுப் பாத்தா சட்டியில சோறு இல்ல. ஐயையோ! எம் பிள்ளைக்கு வச்ச சோத்தெல்லாம், நாயி

திண்டுட்டுப் போயிருச்சு போலண்டு, மாமியாகாரி, மகளச் சத்தம் போடுறா.

காலைல தவசம் – தானியம் எடுக்குறதுக்கு குழியத் தொறந்து போட்டாங்க. ஆவியெல்லாம் போன பெறகு, எரங்கலாம்ண்ட்டு, எல்லாரும் வெளிய போயிட்டாங்க.

இவ் என்னா செஞ்சர், வெளிய போயித் திண்ணயில ஒக்காரலாம்ண்ட்டு, வெளிய வந்தவ், குழிக்குள்ள விழுந்துகிட்டர்.

ஐயையோ! மருமகன், குழிக்குள்ள விழுந்து கெடக்காருண்டு, மாமியா சத்தம் போட்டுக்கிட்டு ஓடியாறா. ஓடியாந்து, என்னாங்க மருமகனே! குழிக்குள்ள விழுந்திட்டிகண்டு பதறுரா. அதுக்கு இவ், ஆமா! தவசந் தானியம் இருக்ற குழிய, சுத்தமா வைக்க வேணாம். இப்டித் தானா? செத்தையுஞ் செடியுமாப் போடுறதுண்டு சொல்லிக்கிட்டே, குழிக்குள்ள கெடக்ற செத்தைகள அள்ளிப் போட்டர்.

சரி – ஏறி வாங்கப்பா, போதும்ண்டு ஏணியத் தூக்கி வச்சாங்க. ஏணி, குழிக்கும், மொகட்டுக்கும் சரியா இருக்கு. ஏறி வாங்கண்டு சொல்லவும், படி வழியே ஏறிக்கிட்டு மொகட்டுக்குப் போயிட்டர். கண்ணு தெரிஞ்சாத்தான தரை இருக்குண்டு தெரிஞ்சுகிறப் போறர்.

நேரா மொகட்டுக்கு ஏறிப் போயிட்டர் என்னாங்க மருமகனே! மொகட்டுக்கு ஏறிப்போயிட்டீங்கண்டு மாமியா சொல்றா.

சொல்லவும், ஆமா – இப்டித்தானா கூரய ஓட்டயாப் போடுறது. ரெண்டு, தட்ட முடிய எடுங்க, மேஞ்சு விட்டுட்டு வாரேண்டு சொல்றர்.

சரிண்டு, எடுத்துக் குடுத்தாங்க. மேஞ்சு விட்டுட்டு மதிப்பா ஏணியப் புடுச்சு எறங்கி வந்திட்டர்.

மறுநா, மாவு இடிக்கிறாங்க. மருமகனுக்குச் சாப்பிடக் குடுக்கவும், மாவு எனக்கு வேணாம்ண்டர். சரி – படிச்ச மருமகன், மாவு திங்கமாட்டாரு போலண்ட்டு, பேசாம இருந்துகிட்டாங்க.

எல்லாரும் வெளில போன சமயத்ல, ஒரல்ல வந்து ஒக்காந்து, லேசா ஒரலத் தொட்டு நக்கிப் பாத்தர். இனிச்சுக் கெடந்திச்சு. மாவு ருசியா இருக்கவும், நாக்க விட்டு நக்கிப் பாத்தர். இன்னும் ருசியா இருந்திச்சு. மண்டய ஒரலுக்குள்ள விட்டு ஒரல நக்குறர்.

நக்கி முடிச்சுட்டு, மண்டய எடுக்கப் போகயில, வர மாட்டேங்குது. எடுத்து – எடுத்துப் பாக்குறர். முடியல. மண்ட ஒரலுக்குள்ள சிக்கிக்கிருச்சு.

அப்பத்தே – மச்சினன், வீட்டுக்குள்ள வர்றர். என்னாங்க மச்சுனா? ஒரலுக்குள்ள தலய விட்டுக்கிட்டுண்டு கேட்டர்.

அதுக்கு, சும்மா இருயா. ஒங்க வீட்டுலசம்பந்தஞ் செஞ்சுகிட்டு, ஒங்க ஒரலத் தூக்கலண்டா நீர்.. என்னா மச்சுனேண்டு சொல்றர்.

வேண்டாங்க, ஒரலுகூடச் சமத்துப் பாக்க வேணாம். எந்திரீங்கண்டு சொல்றர். சும்மா இருயா. இந்த ஒரலத் தூக்கலேண்டா நீர்.. என்னா ஆம்பளண்ட்டு, அங்கிட்டும் இங்கிட்டுந் திருகவும் கழுத்து நொடுக்ண்டு ஒடிஞ்சு போச்சு. ஒரலுக்குள்ள தலய விட்டவாக்குல கெடக்கர். என்னா? மருமகன் பேசாமக் கெடக்குராருண்டு பாத்தா செத்துக் கெடக்கர். செத்தவ் எப்டி துளும்ப முடியும். பெறகு எடுத்துப் பெதச்சாங்களாம், முழி கண்ணு குருடனால, நாலு மனுசரப் போல இருக்கமுடியுமா? கண்ணு தெரியாம எத்தன நாளக்கிச் சமாளிக்க முடியும்.

6. உலக்கைச் சாமியார்

ஒரு ஊர்ல – புதுசா கல்யாணம் முடிச்சவங்க இருந்தாங்க. அவங்களுக்குப் பிள்ளயே இல்ல. பிள்ளயில்லாததனால, எப்பயும் அவங்களப் புதுசாக் கல்யாணம் முடிச்சவங்கண்டு, அந்த ஊர்ல எல்லாருஞ் சொல்லிக்கிருவாங்க.

இப்டி இருக்கயில, பிள்ளவரங் கேட்டு போகாத எடமில்ல. கோயிலுமில்ல. எல்லா எடங்களுக்கும் போயி, அலஞ்சு பாத்திட்டு, வேலயச்செஞ்சு, கஞ்சியக் குடிச்சுக்கிட்டு நம்மள மாதிரி இருக்குறாங்க.

இப்டி, பிள்ளயேக்கம் புடிச்சு இருக்கயில, ஒரு நா, அந்த ஊருக்கு ஒரு சாமியாரு வந்தாரு. விசயத்துல பெரிய கெட்டிக்காருண்டு அவரச் சொல்லிக்கிருவாங்க. பெரிய கெட்டிக்காருண்டு சொல்லவும், சாமியாருகிட்டப் போயி, குடும்ப வாழ்க்கயில இருக்ற பிள்ளயில்லாக் கொறயச் சொல்லி, எனக்கு எப்டிண்டாலும் பிள்ள்வரங் குடுக்கணும்ண்டு,சாமியாருகிட்டக் கேக்குறா்.

கேக்கவும், சாமியாரு அதுக்குப் பரிகாரஞ் செய்யணும்ண்டு சொன்னாரு. பரிகாரஞ்செய்றதுக்கு என்னா செய்யணும்ண்டு, சாமியாருகிட்டத் திரும்பிக் கேக்குறா். கேக்கவும், அதுக்கு சாமியாரு,

பத்துநா, இங்க இருந்து பரிகாரத்துக்குச் செய்றதெல்லாஞ் செய்யணும்ண்டு சொன்னாரு. சொல்லவும், அண்ணக்கிருந்து, சாமியாருக்கு நல்ல சாப்பாடு போடுறா். குளிக்கத் தண்ணி,

படுக்க வசதி செஞ்சு குடுத்துக்கிட்டிருக்கா. சாமியாருக்கு ஏராளமா வசதி செய்யவும், வீட்டுப் பொம்பளக்கி வேல அதிகமாயிருச்சு. வேலைகளச் செய்ய முடியாமத் தெணர்றா. பத்துநா, நம்மளால தாங்க முடியாது. இவன எப்படிண்டாலும் வீட்ட விட்டு, வெரட்டிரணும்ண்டு திட்டம் போடுறா.

ஏழெட்டுநா நல்லாத் திண்டுகிட்டிருக்கா. திண்டுகிட்டிருக்கயில, ஒருநா, மதியானத்துல புருச் வெளியூருக்குப் போயிட்டா. நல்லா ஆத்ல போயி குளிச்சிட்டு, மதியானச் சாப்பாட்டுக்கு வாராரு சாமியாரு. அண்ணக்கிண்டு நல்லாக் கோழியடுச்சு, கொழம்பு வச்சு ரெடியா வச்சிருக்கா. வச்சிருக்கயில, சாமியாரு வாராரு. இண்ணக்கி எப்படியாச்சும் இவன, வெளிய வெரட்டிரணும்ண்டு ஒக்காந்துகிட்டிருக்கா. அப்பப் பாத்து சாமியாரு வாராரு.

வரவும், சாப்பாடு போடுறதுக்கு ரெடியாகுறா. எல – கிலயப் போட்டுட்டு, தண்ணி மோந்து வச்சிட்டு, சாப்பாடப் போட்டு, கொழம்ப ஊத்றா. சாமியாரு சாப்பிட்டுக்கிட்டு இருக்காரு. சாப்பிட்டுக்கிட்டிருக்கயில, பெரிசா ஒரு ஒலக்கய எடுத்திட்டு வந்து, வாசல்ல வச்சிட்டு, வீட்டுக்குள்ள போறா.

அப்டி, போறது – வாரது, ஒலக்கய எடுத்திட்டுப் போயி வாசல்ல வைக்கிறது, எல்லாத்தயும் பாத்துக்கிட்டிருக்கா. பாத்துக்கிட்டிருந்திட்டு, ஏம்மா ஒலக்கய எடுத்திட்டுப் போயி வாசல்ல வக்கிறண்டு, சாமியாரு கேக்குறாரு, கேக்கயில, அவ என்னா சொல்றாண்டா! அவரு, கோழியடிச்சுக் கொழம்ப வச்சு சாமியாருக்குப் போடச் சொல்லிட்டு, வெளியப் போயிருக்காரு. நீங்க சாப்பிட்டு முடிக்கவும், ஒங்கள இந்த

ஒலக்கயக் கொண்டு அடிச்சுக் கொல்லணும்ண்டு சொல்லிட்டு, வெளிய போயிருக்காரு. ரெடியா இருக்கச் சொல்லிட்டுப் போயிருக்காரு. அதா் இங்க, நீங்க சாப்பிட்டுக்கிட்டிக்கிருங்க. அங்க, ஒலக்க ரெடியா இருக்கு. எனக்குப் பாவமா இருக்கு. அதனால, அவரு வாரதுக்குள்ள வேகவேகமாச் சாப்பிட்டுட்டுப் போயிருங்க சாமி. வந்தால், கட்டாயமா, இந்த ஒலக்கயக் கொண்டு அடிச்சுக் கொல்லப் போறாருண்டு சொன்னா.

சொல்லவும், சாமக்கு கையும் ஓடல, காலும் ஓடல. பயந்து எந்திருச்சாரு. கையுங் கழுவாம சாப்பிட்ட கையோட, எந்திருச்சு, இவளயும் தாண்டி வெளிய ஓடுறாரு.

என்னாங்க சாமி! சாப்பிடாம ஓடுறீங்க. இருந்து சாப்பிட்டுப் போங்க சாமிண்டு சொல்லிக்கிட்டே, இவளும், வெளிய வாரா. சாமியாரு என்னா? ஏதுண்டு கேக்காம வடக்கால ஓடுறாரு.

அதே நேரத்ல, புருச், தெக்கயிருந்து வந்து, வீட்டுக்குள்ள நொளயிறா். அப்ப, சாமியாரு ஓடுறாரு. இவ—வடக்க பாத்தவாக்ல நிக்கிறா. அப்ப, நம்ம கருப்பசாமி கோயிலப் போல சாமியாரு ஓடுறாரு. இவ், வீட்டுக்குள்ள மொளஞ்சவ், என்னா? சாமியாரு ஓடுறாருண்டு, இவகிட்டக் கேட்டா். கேக்கவும், அவ, வாசல்ல ஒலக்கயக் காமுச்சு, இந்த ஒலக்கயக் கேட்டாரு. நா் தரமாட்டே். குத்தக் – குலுக்க, இது ஒண்ணுதா இருக்குண்டு சொன்னே். அதுனால, கோவுச்சுக்கிட்டுச் சாமியாரு போறாருண்டு சொல்லிப்பிட்டா.

இதுக்குப் போயா கோவுச்சுக்கிட்டுப் போறாரு. நிய்யி தந்திர வேண்டியதுதானேண்டு, இவளப் புடிச்சு வஞ்சிட்டு, ஒலக்கயக் கையில எடுந்துக்கிட்டு, சாமியத் தொயந்துகிட்டு ஓடுறா். யாரு? புருசு.

அப்ப, ஊரக்களிச்சு வந்திட்டோம்ல்ல, இனியாரு வரப் போறாண்டு நெனச்சு, லேசாப் பின்னால திரும்பிப் பாத்தாரு சாமியாரு. பாக்கயில, இவ் ஒலக்கய கொண்டுகிட்டு வாரது தெரியுது. சாமி திரும்பிப் பாக்கவும், சாமி! இந்தாங்க ஒலக்க, ஓடாதிங்க! நில்லுங்கண்டு ஒலக்கயத் தூக்கிக் காமுச்சுக்கிட்டு வேகமாத் தொயந்து ஓடுறா். ஓடியாரவும், சாமிக்கு இருப்புக் கொள்ளல, ஒலக்கய எடுத்துக்கிட்டு அடிக்கத்தா் வாரராண்ட்டு, உசுரக் கையில புடிச்சுக்கிட்டு ஓடுராரு. அவனும் ஓட, அவரும் ஓட, ஊருக்காரங்க வேடிக்க பாத்தாங்களாம்.

ஒலக்கயக் குடுக்கலண்டு சொல்லவும் சாமியாரு கோவத்ல போறாரு. போயி, ஏதாச்சும் சாபம் போட்டுருவாருண்ட கவலயில இவ் ஓடுறா். இவங்கிட்டச் சிக்குனா சட்னிய எடுத்திருவா் போலண்ட்டு, இவங்கிட்டயிருந்து எப்டியாச்சும் தப்பிக்கணும்ண்டு, சாமியாரு ஓடுறாரு.

ஒருத்த் உதவி செய்ய ஓடுறா். ஆமா, ஒருத்த் உசுருக்குப் பயந்து ஓடுறா். ஆமா! உசுருக்குப் பயந்து ஓடுறவன, உதவி செய்ய ஓடுறவ் புடிக்க முடியுமா? புடிக்க முடியல. ஒலக்கயக் கொண்டுகிட்டுத் திரும்பி, வீட்டுக்கு வந்தானாம். பொம்பள எப்டித் தந்திகாரிண்டு பாரு. எல்லாமே பொம்பளக்குள்ள இருக்கு.

7. கோழிக் கொழம்பு

ஒரு ஊர்ல – ஒரு தொல்லாளி. அவ் வேல செஞ்சுகிட்டிருக்கயில, ஒரு பெறாந்து, ஒரு கோழிக் குஞ்சத் தூக்கிட்டு வந்து, இவ் முன்னால போட்டுட்டுப் போயிருச்சு. போட்டுட்டுப் போகவும், இவ் எடுத்து வளக்குறா். பெருசாயிருச்சு. சும்மா இருக்க அண்ணக்கி, கோழி அடிக்கணும்ண்ட்டு இருக்கா். இருக்கயில, பொண்டாட்டி; கோழியடிக்கணும், கோழியடிக்கணும்ண்டு கெடக்கா. புருசனும் பொண்டாட்டியும் ஒருநா, சும்மா இருந்தாங்க. இண்ணக்கி, கோழிய அடிச்சுக் கொளம்பு வப்போம்ண்டு, புருசு் சொன்னா்.

சரிண்டு, கோழிய அடிச்சாங்க. அடிச்சுக்குடுத்திட்டு, இவ் கடவீ திக்குப் போயிட்டா். இவ, மஞ்ச மொளகா அரைக்கிறா. அரச்சு,கொழம்ப கூட்டி வைக்கியல, இவளோட அப்ப்,வந்திட்டா்.

அப்ப வரவும், இவளுக்கு பொறுக்க முடியல. எப்டியாச்சும் போயிருங்கப்பா; அவரு வந்தா அம்மிக் கொளவியக் கொண்டு மண்டயில போடப் போறாரு. சீரு சீதனங் குடுங்கலண்டு,ஓங்க மேல கோபமா இருக்காருண்டு சொன்னா. சொல்லவும், இவனுக்குக் கொஞ்சம் பயம் வந்திருச்சு. பயந்துகிட்டு, வீட்ட விட்டு வெளியேறிப் போறாரு. போகயில, மருமகன் பாத்திட்டா், பாத்திட்டு, என்னா?

மாமன் போறாரு, மக கூடச் சண்ட போட்டுட்டுப் போறாரோண்டு நெனச்சு,

வீட்டுக்கு வந்தா், வரயில, மாமன், வீட்ட விட்டு வெளியேறிப் போயிக்கிட்டிருக்காரு. வேகமா வீட்டுக்கு வந்து,

என்ன? ஒங்கப்பா வந்திட்டதும் போறாருண்டு கேட்டா். கேக்கவும், இல்ல,எங்கப்பா வந்தாரு. இந்தக் கொழவிக் கல்லக் கேட்டாரு. அரச்சிட்டு தாரேண்டு சொன்னே. கோவுச்சிட்டுப் போறாருண்டு சொன்னா.

கொழவிக் கல்லக் குடுக்கறதுதான. இதப் போயி இல்லண்டு சொல்லிருக்கியே. கொண்டா, நான் போயி குடுத்திட்டு வரேண்டு சொல்லிட்டு, கொழவிக் கல்ல தூக்கிக்கிட்டு ஓடுறா்.

மருமகன் ஓடிப்பாத்தா். மாமனப் புடிக்கமுடியல. திரும்பி வந்திட்டா். ஒங்கப்பா, என்னயப் பாத்திட்டு, நிக்காம ஓடிப் போயிட்டாருண்டு சொன்னா். சொல்லவும், அவ சிரிச்சா இவனுக்குப் புரியல. இருக்காங்க, இருக்கயில, இங்க

கோழிக் கொழம்பு வெந்துகிட்டிருக்கு. சாப்டலாம்ண்டு இருக்கயில, இவளோட அப்பா, செத்துப் போனாருண்டு எளவு வந்திருச்சு. என்னடா! இப்பத்தா் போனாரு. அதுக்குள்ள செத்துக் போனாரேண்ட்டு, இவங்க வெளியேறுறாங்க.

வெளியேறயில, கொளம்பு கொதிக்குது. இதத் திங்காம எப்டிப் போறதுண்ட்டு, திங்கணும்ண்டா நேரமில்ல. வச்சிட்டுப் போகவும் மனசில்ல. என்னா செய்யுறது? தூக்கித் தலயில வச்சுக்கிட்டு போறாங்க.

ஊருப் பக்கத்துல போயி, ஒரு படப்புக்குள்ள திணுச்சு வச்சுட்டு, அப்பன், வீட்டுக்குப் போறா. போயிப் பாக்கயில, அப்பனச் சாத்தி வச்சிருக்கு. இந்தப் பக்கம் வெளக்கமாறக் கெட்டித் தொங்க விட்றுக்காங்க. இந்தப் பக்கம் செருப்பக் கெட்டித் தொங்கவிட்டுறுக்காங்க. எல்லாரும் ஒக்காந்திருக்காங்க.

இவ போகவும், மக வந்திட்டா – மக வந்திட்டாண்டு! கூடி இருந்தவங்க சொல்றாங்க. இவ போனதுமே, கெட்டுச் சேந்து புடுச்சு,

அப்பே! நேத்துதானப்பே ....

ஏ...... வீட்டுக்கு வந்த –

ஒரு கோழிய ஒருமிக்கா

அடிச்சுப் போட்டேனே அப்பே! .....

இண்ணக்கி செத்துப் போனயே ...... யப்பே – ண்டு

ஊரு மெக்ய அழுகுறா. இப்டிச் சொல்லி அழுகவும், வெளம் வந்து, எந்திரிச்சு, வெளக்க மாத்தயும் செருப்பயுங் கொண்டு மாத்தி – மாத்திப் போட்டானாம். ஞோளிமக, ஒரு கோழியயும் ஒருமிக்கா போட்டாளாம்ல்ல, போடி சிறுக்கி மகளேண்டு வெரட்டி விட்டுட்டு, மக செத்துப் போனாண்டு சொல்லி, தலகாலு முழுகிட்டு இருந்தானாம்.

இவ, அடி பொறுக்கமாட்டாம புருசனக் கூட்டிக்கிட்டு, ஊருக்கு ஓடுனா. ஓடயில, கோழிக் கொழம்பு நாபகம் வந்திருச்சு. படப்புக்குள்ளபோயி பாத்தால், பூராத்தயும் நாயி திண்டுபிட்டுப் போயிருச்சு. பொட்டி மீனும் போயி, புடிச்ச மீனும் போயி – வீட்டுக்குப் போனாங்களாம்.

8. விவரங்கெட்ட கோனாரு

ஒரு ஊர்ல – ஒரு கோனான் இருந்தர். அவ், நெறயா ஆடுக வச்சிருந்தர். ரொம்பப் பலசாலி. ஆனா அறிவிலி. எதச் செஞ்சாலும் முன்னால – பின்னால நெனச்சுப் பாக்குறதில்ல. அவனுக்கு வாச்ச பொண்டாட்டியும், ஆடுகள மேச்சு, நெறயப் பணஞ் சேத்து வச்சிருந்தர்.

ஒருநா, ஆடுகள மேய்க்கக் காட்டுக்குப் பத்திக்கிட்டுப் போனர். அதுல ஒரு நொண்டியாடு இருந்திச்சு. அதனால நடக்க முடியல. அதத் தூக்கித் தோள்ல போட்டுக்கிட்டு, ஆடுகள வீட்டுக்குப் பத்திக்கிட்டு வந்தர். வரயில, ஆடுகள எனம் பாத்தர். எனம் பாக்கயில, ஒரு ஆடு கொறயுது. ரெண்டு மூணு தடவ எனம் பாத்தர். அப்பயும் ஒரு ஆடு கொறஞ்சுச்சு. நொண்டியாடு தோள்ல இருக்றத மறந்திட்டர். நடக்க முடியாத நொண்டியாடு தோள்ல இருக்குங்குறதேய மறந்திட்டு, எனம் பாத்துக்கிட்டுருந்திர். கணக்கு வரல, அதனால,

கூட வந்தவங்ககிட்ட ஆட்டப் பத்தி விட்டுட்டு, காணாமப் போன ஆட்டத் தேடிப் போறர். வெளியெல்லாம் அலஞ்சு திரிஞ்சு, ஆட்ட காங்க முடியல. ஆடுதான் இவ் தோள்ல இருக்கே. அங்க எப்டி ஆடு இருக்கும். கடுமயான வெயிலு, தண்ணித் தவி பொறுக்க முடியாம, ஒரு கெணத்துக்கு வந்தர். வந்து, கெணத்த உத்துப் பாத்தர். பொடனில இருக்ற ஆடு தண்ணிக்குள்ள தெரிஞ்சுச்சு. ஒக்காலோளி ஆடு, எங்க போயி இருக்குது, பாருண்ட்டு, கெணத்துக்குள்ள தவ்னர்.

தண்ணிக்குள்ள தவ்வவும், ஆடு, எடய பொடனிய விட்டு வெலகிருச்சு. தண்ணிக்குள்ள தவ்னா வெலகாது, வெலகவும், ஆட்டப் புடிச்சுக்கிட்டு வீட்டுக்கு வந்தர்.

எடயில, பாக்குறவங்ககிட்டெல்லாம், இந்த நொண்டியாடு கெணத்துக்குள்ள இருந்திச்சு. இப்பத்தா் புடுச்சுட்டு வாரேண்டு பெருமையடிச்சுக்கிட்டே வீட்டுக்குப் போறா். வீட்டுக்குள்ள போகயில, ஆடு மேய்க்கிற கம்பயும் பொடனில வச்சுக்கிட்டு, அதோட சேத்து ஆட்டயும் பொடனில போட்டுக்கிட்டு வீட்டுக்குள்ள போனா். வீட்டுக்குள்ள நொளயும்போது, வாசப்படில கம்பு மாட்டிகிருச்சு. உள்ள போக முடியல. குறுக்கு வாக்குல போனால், எப்டிப் போக முடியும்? முடியல.

பொண்டாட்டியக் கூப்பிட்டு, ஆசாரியக் கூட்டிக்கிட்டு வாடிண்டு சொன்னா். சொல்லவும், அவ போயி, ஆசாரியக் கூட்டிக்கிட்டு வந்தா. ஆசாரிக்கு வெசயம் புரிஞ்சு போச்சு. உளிய வச்சுக் கம்ப வெட்டி விட்டா். எடயன் உள்ள போனா். ஆசாரி தெறமயப் பாராட்டி, ஆசாரிக்கு ஒரு ஆடு குடுத்தா்.

இப்டி இருக்கயில, இங்கிட்டு ஆடுகளக் களவாண்டணும்ண்டு, அஞ்சு களவாணிங்க, ரொம்ப நாளாத் திட்டம் போட்டுக்கிட்டிருந்தாங்க.

ஒருநா, ஒரு மொதலாளி தோட்டத்ல கெட அமத்தியிருந்தா். இதான் சமயம்ண்டு, களவாணிக, களவாண்டப் போனாங்க. போயிப் பாக்கயில, நாடில கம்ப ஊண்டி நிண்டுகிட்டிருந்தா். நாடில கம்ப ஊண்டிக் கெடயில நிண்டுகிட்டே ஒரங்குவா். நிண்டுகிட்டு இருக்றவன, முழுச்சுகிட்டுத்தா் இருப்பாண்ட்டு களவாணிக போயிட்டாங்க.

மறுநாளும் போயிப் பாத்தாங்க. அதே மாதிரி நிண்டுகிட்டிருந்தா். அதுக்கு மறுநாளும் போயிப் பாத்தாங்க. பாக்கயில, இதுல ஏதோ இருக்குண்ட்டு, இதக் கண்டுபிடிக்க, ஒரு திட்டம் போட்டாங்க.

ஒருநா, கோனாரு வீட்டுக்குப் போனாங்க. கோனாரு பொண்டாட்டி வீட்ல இருந்தா. நேத்து ராத்ரி, ஓம் புருசீ, கெடயில, ஆட்டத் தூக்க விட்டுட்டானுல்லண்டு சொன்னாங்க.

சொல்லவும், அந்தப் பயல, நிண்டுகிட்டு ஒரங்காதடா, நிண்டுகிட்டு ஒரங்காதடாண்டு எத்தன நாளக்கிச் சொல்றது. இண்ணக்கி ஆட்டத் தூக்க விட்டுட்டானா? வீட்டுக்கு வரட்டும் பேசிக்கிறேண்டு சொன்னா.

சரி! நிண்டுகிட்டா மாப்பள ஒரங்கற, இண்ணக்கி இருண்டு மனசுல நெனச்சுக்கிட்டு போயிட்டாங்க.

அண்ணக்கி ராத்ரில, களவாணிங்க கெடைக்குப் போனாங்க. கெடையில கோனான் நிண்டுகிட்டு ஒரங்கிக்கிட்டிருந்தா. ஆளுக்கொரு ஆட்டப் புடுச்சுக்கிட்டுப் போயிட்டாங்க. கோனாரு ஆட்டக் காணம்ண்டு தேடிப் பாத்துட்டு விட்டுட்டா.

அண்ணக்கி மறுநாக் காலையில, கோனாரு ஆடு மேய்க்கிற எடத்துக்குப் போனாங்க. போயி, ஒம் பொண்டாட்டி, வீட்ல பணத்தப் பூராம், களவாண்ட விட்டுட்டாண்டு சொன்னாங்க.

அந்த ஞோளிமகள! எத்தன நாளக்கிச் சொல்றது. அம்மிக் கடில வக்யாத — அம்மிக்கடில வக்யாதண்டு சொன்னா கேட்டாதான. களவாண்ட விட்டுட்டாளா? அவளப் போயிப் பேசிக்கிறேண்டு சொல்லிட்டு, ஆடு மேய்க்கப் போயிட்டா.

சரி அம்மிக்கடிலயா வச்சிருக்கா, இன்னக்கி நல்ல வேட்டண்டு நெனச்சுக்கிட்டுப் போயிட்டாங்க.

அண்ணக்கி ராத்ரில போயி, அம்மியப் பெறட்டிக்கிட்டு, அடியில இருந்த பணத்த எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க. இதுக்குதா, ஆரு கிட்டயும் உத்தவாத்த சொல்லக் கூடாதுண்றது.

9. அமாவாசி விரதம்

ஒரு ஊர்ல – ஒருத்த், அமாவாசி வெரதம் புடிக்கணும்ண்டு வெகுநாளா நெனச்சுக்கிட்டிருந்தர். அவனுக்கு, அதே கிறுக்காப் போச்சு. எப்பப் பாத்தாலும் அமாவாசி வெரதம் புடிக்கணும்– அமாவாசி வெரதம் புடிக்கணும் – அமாவாசி வெரதம் புடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டே இருப்பர்.

எங்கயோ ஊருக்குப் போனவ், சும்மா போகமாட்டாம, அமாவாசி வெரதம் புடிக்கணும் – அமாவாசி வெரதம் புடிக்கணும்ண்டு சொல்ற வேகத்ல, அமாவாசியப் புடிக்கணும் – அமாவாசியப் புடிக்கணும் – அமாவாசியப் புடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டே வழில போயிக்கிட்டிருக்கர்.

போயிக்கிட்டிருக்கயில, அந்தச் சமயத்ல, அமாவாசிங்கற ஒருத்த், கவர்மண்டுல குத்தவாளியாகி, கவர்மண்டுக்குப் பயந்து, காட்டு வெளில ஒழிஞ்சுகிட்டு இருக்கர். அவ், ஒழிஞ்சு கிட்டிருக்கயில, இவ், அமாவாசியப் புடிக்கணும் – அமாவாசியப் புடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டே போறர்.

இவ் சொல்றதக் கேட்டு, யார்றா இவ், நம்மளப் புடிக்கிறவண்டு, பாதக்கி வந்தர். வந்து பாக்கயில, இவ் பொலம்பிக்கிட்டே போயிக்கிட்டிருக்கர்.

போயிக்கிட்டிருந்தவனப் புடிச்சு, ஏண்டா ராஸ்கோல்! என்னயப் புடிக்கிறது நிய்தானடாண்டு செவுட்ல ரெண்டு போடு போட்டர். போடவும், இல்லங்க. நர் ஒங்களப் புடிக்கணும்ண்டு சொல்லல. அமாவாசி வெரதம் புடிக்கணும்ங்கறதத்தர், அவசரத்ல, அமாவாசியப் புடிக்கணும்ண்டு சொல்லிட்டேண்டு சொன்னர்.

சொல்லவும், படுவா! இனிமே எதுவும் புடிக்கப்படாது— எதுவும் புடிக்கப்படாதுண்டு சொல்லிகிட்டுப் போடாண்டு சொல்லி, வெரட்டி விட்டா். இவ், சொல்லச் சொன்னது மாதிரி, எதுவும் புடிக்கப்டாது – எதுவும் புடிக்கப்படாதுண்டு சொல்லிக்கிட்டே போறா்.

போகயில, அங்கிட்டொரு கொசவன், சட்டி பானைகளச் செஞ்சு, சுள்ளயில போட்டுத் திய்யி மூட்டிக்கிட்டிருக்கா். திய்யி, சாரவாடக்கிப் புடிக்க மாட்டேங்குது. அவ், கஸ்டப்பட்டு ஊதிக்கிட்டிருக்கயில, இவ், எதுவும் புடிக்கப்படாது – எதுவும் புடிக்கப்டாதுண்டு சொல்லிக்கிட்டுப் போறா்.

போகவும், ஏண்டா படுவா! இங்க வாடா! திய்யிப் புடிக்காம நா் என்னா பாடுபடுறே். எதுவும் புடிக்கப்டாதுண்டு எவ்வவளவு திமுறு இருந்தா சொல்வேண்டு, ரெண்டு அப்பு – அப்பி, நல்லாப் புடிக்கணும் நல்லாப் புடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டுப் போடாண்டு சொன்னா்.

சரிண்டு, நல்லாப் புடிக்கணும் – நல்லாப் புடிக்கணும் – நல்லாப் புடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டே போறா்.

அங்கிட்டுப் போகயில, ஒரு ஊர்ல, திய்யிப் புடுச்சு, வீடுக வேகுது. வேகவும், அந்த ஊரு ஆளுக, தண்ணி—தடிக்கம்புகளக் கொண்டு அமத்திக்கிட்டிருக்காங்க. அங்கன போனவ், சும்மா போக மாட்டாம, நல்லா புடிக்கணும் – நல்லாப் புடிக்கணும் – நல்லாப் புடிக்கணும்ண்டு சொல்லிக்கிட்டுப் போனா்.

அவங்க, ஏண்டா! நம்ம என்னா பாடுபட்டுக் கிட்டிருக்கோம். வீதியில போறவ் பேச்சப் பாத்தயா. நல்லாப் புடிக்கணுமாம்ல. அவனப் புடிங்கடா, திய்யில தூக்கிப் போடுங்கடாண்டு சொல்லிக்கிட்டு வந்து, ஆளுக்கு நாலு மாத்து

– மாத்துனாங்க. வாங்கி கெட்டிக்கிட்டுப் போனர். அந்தக் கூட்டத்ல ஒருத்தி, ஏலே! பேசாமப் போகாம,

தண்ணிய ஊத்திக்க

தடியக் கொண்டு போட்டுக்க!

தண்ணிய ஊத்திக்க

தடியக் கொண்டு போட்டுக்க – ண்டு

சொல்லிக்கிட்டுப் போடாண்டு சொன்னா். சொல்லவும், சரிங்கண்ட்டு,

தண்ணிய ஊத்திக்க

தடியக் கொண்டு போட்டுக்க!

தண்ணிய ஊத்திக்க

தடியக் கொண்டு போட்டுக்க – ண்டு

சொல்லிக்கிட்டுப் போறா்.

போகயில, அங்கிட்டு ஒரு கொமரிப்பிள்ள, கொடத்ல, தண்ணிய எரச்சு –எரச்சுஊத்திக் குளிச்சுக்கிட்டிருக்கா. அதுக்கு நேரா, போனவ்,

தண்ணிய ஊத்திக்க

தடியக் கொண்டு போட்டுக்க – ண்டு

சொல்லிக்கிட்டுப் போறா், அப்ப, அவ், நம்ம

குளிக்கிறதத்தா் கேலி பண்றாண்டு நெனச்சு, அந்தப் பிள்ள, வெளக்க மாத்தக் கொண்டு நாலு கெணாச்சு கெணாச்சுனா..

கெணாச்சவும், இதென்னடா வம்பாப் போச்சுண்டு நெனச்சா். அப்ப, அவ சும்மா போகாத,

ஒண்ணுந் தெரியப்படாது

ஒண்ணுந் தெரியப்டாது – வுண்டு

சொல்லிக்கிட்டுப் போடாண்டு சொல்லிட்டா.

சொல்லவும், இவனும் பெறகென்னா செய்றதுண்ட்டு,

ஒண்ணுந் தெரியப்படாது

ஒண்ணுந் தெரியப்டாது – ண்டு

சொல்லிக்கிட்டுப் போறா.

போகயில, அங்கிட்டிருந்து ஒரு கல்யாணஊர்வலம் வருது. அந்த மாப்பிள்ளக்கி ஒத்தக் கண்ணு. கல்யாணப் பொண்ணு – மாப்பள அங்கிட்டிருந்து வருது. இவ் இங்கிட்டிருந்து போறா். போனவ், சொல்லிக்கிட்டு வந்தத நிறுத்தாம,

ஒண்ணுந் தெரியப்படாது

ஒண்ணுந் தெரியப்டாது – ண்டு

சொன்னா். சொல்லவும், அவங்க, நம்ம மாப்பளக்கி ஒத்தக் கண்ணு, அதயும் தெரியப்படாதுண்டு சொல்றானே, இவனப் புடிங்கடா - அடிங்கடாண்டு, அடி – அடிண்டு அடிச்சு,

நல்லாத் தெரியணும்

நல்லாத் தெரியணும் – ண்டு

சொல்லிக்கிட்டுப் போடாண்டு வெரட்டி விட்டாங்க. சரியப்பா! பொழுது விழுகங்குள்ள வீடு போயிச் சேரணும்ண்டு வேகமா நடக்குறா்.

நடக்கவும், அதுல ஒருத்தி என்னாடா, சொல்லாமப் போற, சொல்லிக்கிட்டுப் போடாண்டு சொன்னா. சரிண்ணேண்ட்டு,

நல்லாத் தெரியணும்

நல்லாத் தெரியணும் – ண்டு

சொல்லிக்கிட்டு வேகமா நடந்தா.

நடந்து போகயில, எடயில ஒரு ஆறு. ஆத்ல, நெறயா தண்ணி போகுது. அஞ்சாறு வயசுப் பிள்ளைக, ஆத்துக்குள்ள, தலையில புலலுக்கட்ட வச்சுக்கிட்டு, அங்கிட்டிருந்து வருதுக. இவ், இங்கிட்டிருந்து போனவ, எதுக்க வந்த வயசுப்பிள்ளைக, தண்ணி ஏற, ஏற, சீலயத் தெறச்சு – தெறச்சு மேல தூக்கிப் புடிச்சுக்கிட்டு வாராங்க. பொம்பளப் பிள்ளைக, சீலயத் தெறச்சுக்கிட்டு வாராங்களேண்டு தெரிய வேணாம். தெரியாம.

நல்லாத் தெரியணும்

நல்லாத் தெரியணும்

நல்லாத் தெரியணும் – ண்டு

சும்மா சொல்லிக்கிட்டு போனா. போகவும், அதுல ஒருத்தி, குசும்புக்காரி, எனத்தடா நல்லாத் தெரியச் சொல்றண்டு புடிச்சு, ஆளுக்கு நாலு நொத்து நொத்தி, எதுவுஞ் சொல்லாம ஒழுங்கா வீடு போயிச் சேருடாண்டு சொல்லி வெரட்டி விட்டாங்க.

வெரட்டவும் ஒண்ணுஞ் சொல்லாம, நல்லா அமாவாசி வெரதம் புடிச்சம்டா! அமாவாசி வெரதமும் வேணாம், ஒண்ணும் வேணாம்ண்டு நெனச்சுக்கிட்டு, வீட்டுக்கு வந்து சேந்தானாம்.

அண்ணக்கிருந்து, அமாவாசி வெரதம்ங்ற பேச்சயே பேசமாட்டானாம்.

10. முழுச் செவிடன்

ஒரு ஊர்ல – ஆடு மேய்க்கிறவ ஒருத்த். அவ் காச் செகுடன். அந்த ஊர்ல, வண்ணான் ஒருத்த், அவ் அரச் செகுடன். அதே ஊர்ல, வெவசாயி ஒருத்த், அவ் முக்காச் செகுடன், அந்த ஊரு நாட்டமக்காரன், அவனுக்கு முழுசாக் காது கேக்காது. அவன முழுச் செகுடண்டு சொல்வாங்க. இந்த நாலு பேரும் ஒரே ஊர்ல இருக்காங்க.

இருக்கயில, இந்தக் காச் செகுடன், கொளத்ல ஆடுகள மேய விட்டுக்கிட்டிருக்கர். அப்ப, அரச் செகுடன், வண்ணான், அந்தக் கொளத்ல சிலதுணிகளத் தொவச்சுக்கிட்டிருக்கர். தொவச்சுக்கிட்டிருக்கயில, இந்த காச் செகுடன், ஆட்டுக்காரனுக்கு அகோர வகுத்துப்பசி, வண்ணாங்கிட்டப் போயி, அண்ணே! இந்த ஆடுகளப் பாத்துக்க, நர் வீட்ல போயி, கஞ்சி குடிச்சிட்டு வந்திருரேண்டு சொன்னர். இவ் சொல்றது அவனுக்குக் கேக்கல. அவ், தலயத் தலய ஆட்டிக்கிட்டு தொவைக்கிறர். தலயத் தலய ஆட்டிக்கிட்டுத் தொவைக்கவும் சரிண்டு சொல்றாண்டு நெனச்சுக்கிட்டு, ஆட்டப் பாத்துக்கிருவாண்ட்டு, இவ், வீட்டுக்குப் போயிட்டர். யாரு? காச் செகுடன்.

போயிட்டு, பொழுதுசாய வந்தர். வந்து பாக்கயில, ஒரு ஆடு காலொடுஞ்சு கெடக்கு. கெடக்கவும், அந்த ஆட்டத் தூக்கிக்கிட்டு வண்ணாங்கிட்ட வந்தர். வந்து, நிய்யி, ஆட்டப் பாத்துக்கிறேண்டு சொன்னதுனாலதான நர் வீட்டுக்குப் போனே. இப்ப, நிய்யி பாக்காம விட்டதுனாலதான இந்த ஆட்டுக்குக் காலு ஒடுஞ்சு போச்சுண்டு சொன்னர்.

சொல்லவும், ஆட்டுக்கார் சொல்றது, வண்ணானுக்கு கேக்காம, அவ் என்னா சொல்றர். ஆட்டுக்கால நர் ஒடிக்கல,

காலைல வந்து, இந்தக் கொளத்துக்குள்ள குனுஞ்சு துணியடிச்சவ், இப்பத்தா் நிமுந்து பாக்குறேண்டு சொல்றா்.

ஆட்டப் பாத்துக்கிறேண்ட்டு ஏச்சதுமில்லாம, எதுத்துப் பேசுறயாண்டு நெனச்ச ஆட்டுக்காரன், வண்ணாங்கிட்ட சண்டக்குப் போறா். ஒருத்தி் பேசுறுது ஒருத்தனுக்குக் கேக்காம, ரெண்டுவேரும் ஏடாகூடாமாப் பேசி சண்டக்கி நிக்கிறாங்க. ஆட்டப் பாத்துக்கிறேண்டு சொன்னயில, நிய்யி சொல்லவுந்தான நா் வீட்டுக்குப் போனே். நிய்யி தலய ஆட்டலண்டா நா் போக மாட்டன்ல்ல – ண்டு ஆட்டுக்காரன் சொல்ல, ரெண்டுவேருக்கும் வாக்குவாதம் முத்திக் கை கலக்குற லெவலுக்கு வந்திட்டாங்க.

அப்ப, அங்கிட்டிருந்து கம்மாய்க்கு கிழ இருக்ற தோட்டக்கார், மாட்டுக்கு வைக்கலப் புடுங்கிக் கெட்டித் தலயில செமந்துகிட்டு, இவங்களுக்கு நேரா வர்ரா்.

வரவும், அண்ணே! இந்த நாயத்தப் பாருண்ணே! நா், வீட்டுக்குப் போயிட்டு வாரே, நா் வர வரயில, இந்த ஆடுகளப் பாத்துக்ற – யாண்டு கேட்டே். இவரு சரிண்டு தலயாட்டுனாரு. நா் வீட்டுக்குப் போயிட்டு வந்து பாக்கயில, ஒரு ஆடு காலொடுஞ்சு கெடக்கு. இதப் பாத்தயாண்டு கேட்டே். கேட்டதுக்கு, இவரு சண்டக்கி வராருண்டு, ஆட்டுக்காரஞ் சொன்னா்.

அதுக்கு வண்ணா! இந்த ஆளயும் பாக்கல! இவரு ஆட்டயும் பாக்கல! ஆசுவாண்டு, சில துணிகள தொவச்சுக்கிட்டிருந்தவன, ஏண்டா ஏ... ஆட்டக் காலொடுச்சேண்டு, சண்டக்கி வாராருண்டு வண்ணான் சொன்னா். இவங்க சொல்றத கேட்டத் தோட்டக்கார், இவங்க நம்மள ஏதோக் குத்தஞ் சொல்றாங்ண்டு நெனச்சு, எந் தோட்டத்ல, எம்மாட்டுக்கு வக்யப்புல்லப் புடுங்கிக் கெட்டித்

தூக்கிட்டு வந்தா, ஒங்களுக்கென்னாடாண்டு அவ் சத்தம் போடுறா். ஏண்டா! அவ் முக்காச் செகுடன்.

இவங்க மூணு பேரும், ஒருத்தனுக்கொருத்த் மொரண்டாப் பேசுறாங்க. பேசிக்கிட்டே நாட்டாமக்காரு வீ ட்டுக்குப் போறாங்க.

அப்ப, ஆட்டுக்காரன் நாயத்த ஆட்டுக்காரன் சொன்னா். வண்ணான், அவ் நாயத்த, அவ் சொன்னா். தோட்டக்காரா - வெவசாயி, அவ் நாயத்த, அவ் சொன்னா.

ஆட்டுக்காரா், ஆடு காலொடிஞ்சு போச்சுண்டு பொதுவாச் சொன்னா். வண்ணான், நம்மளத்தா் காலொடுச்சா்ண்டு சொல்றா்ண்டு நெனச்சு, நா் ஒடிக்கல, எனக்குத் தெரியாதுண்டு சொன்னா். தோட்டக்காரன், எந்தோட்டத்ல, எம் மாட்டுக்கு வக்யப் புல்லக் கட்டிட்டு வந்தா, இவங்களக்கென்னா, என்னய வழிய மறிச்சு, சண்ட புடிக்கிறாங்கண்டு, தோட்டாக்காரன் சொன்னா்.

நாட்டாமக்காரன் முழுச் செகுடன். இவங்க சொல்றத என்னாண்டு தெரிஞ்சுக்கிறாம, எம் பொண்டாட்டிய அடிச்சா ஒங்களுக்கென்னாடா? எங்கூடச் சண்ட புடிச்சா, அடிக்காம என்னா செய்வாங்களாம்? இவங்கள்லாம் பஞ்சாயத்துக்கு வந்துட்டாங்க. போங்கடாண்டு, சவுக்க எடுத்து, ஆளுக்கு ரெண்டு போடு போட்டா். தொடச்சுக்கிட்டு ஓடுனாங்களாம்.

அதுனாலதான் தம்பி, காது செகுடானவங்ககிட்ட, கொஞ்சம் நிதானமாப் பேசணும்ண்டு ஊரு ஒலகத்ல சொல்வாங்க.

11. ஆயிரம் புளுகன்

ஒரு ஊர்ல – ஒரு புளுகன் இருந்தா். புளுகுறதுக்கு, ஆளுக் கெடைக்காம, சீமைக்கு வாரா். நம்ம டொம்புச்சேரியப் போல வந்து, இந்த ஊர்ல,பெரிய தனக்காரு. வீ டெதுண்டு கேட்டா். அங்ஙன பாத்தவங்க, இந்த வீ டுதாண்டு காட்டுனாங்க. காட்டவும், வீ ட்டுக்குள்ள போனா், போயி, அந்தப் பெரியதனத்துக் காரங்கிட்ட, இந்த ஊர்ல, எங்கூடப் புளுகுறதுக்கு சோடி இருக்காண்டு கேட்டா். புளுகுறவனுக்கு ஆள் இருந்தா, ஆயிரம் ரூவா பந்தயங் கட்டச் சொல்லுங்கண்டு சொல்றா். புளுகுறதுல மெசாரிட்யாப் புளுகுறவனுக்கு, அந்த ஆயிரம் ரூவாயக் குடுத்திறலாம்ண்டு அள்ளி விடுறா்.

அப்ப, பெரியதனத்துக்காரு, இந்த ஊர்ல, ஒங்கூடப் புளுகுறதுக்கு ஆளு இல்ல. மேற்க கொஞ்ச தூரந் தள்ளிப் போனா, ஏலுவலப் பட்டில ஒருத்த் இருக்கா். அவந்தா், ஒங்கூடப் புளுக லாயக்ககானவ், அவன இங்க வரச்சொல்லி, புளுகுப் பந்தயத்த வச்சிக்வோம்ண்டு, பெரிய தனத்துக்காரு சொல்றாரு.

இப்டி சொல்லிக்கிட்டிருக்கயில, ஆயிரம் புளுகன், அந்த ஊருக்கு ஒரு வேலயாப் போயிட்டா். அப்ப, இந்தா வந்துட்டான்ல, ஆயிரம் புளுகெ்ண்டு சொன்னாங்க. சொல்லவும், நாட்டாமக்காரு, ஏப்பா! ஆயிரம் புளுகா! இந்தாளு புளுகுறதுல, சோடிக்குக் கூப்புடுறாரு. நிய்யி தயாராண்டு கேட்டாரு.

யோசிச்சுப் பாத்திட்டு, சரித்தாண்டு சொல்லிட்டா். கை அடுச்சுப் பந்தயங் கட்டி, வெள்ளிக் கெழமண்ணக்கிப் புளுகு போட்டி நடக்கும்ண்டு ஊர்ல தமுக்கடுச்சு, தண்டக்காரன விட்டுச் சாட்டச் சொல்லிட்டாங்க.

வீட்டுக்கு வந்தா். வந்து, அவ், புளுகுறதுக்கு சோடி கெடைக்காம கெழக்குச் சீமயில இருந்து வந்திருக்கா். அவ், புளுகுறதுல, பெரிய ஆளா இருப்பா் போல, அவங்கூட நம்மளால புளுக முடியுமா? தோத்துப் போனா, ஆயிரம் ரூவாயும் போயிருமே, ஆயிரம் புளுகண்டற பேரும் போயிருமேண்டு நெனச்சு, புளுகப் போகாம மண்டயில பத்த அரச்சுப் போட்டுக்கிட்டு, மண்டவலிண்டு சொல்லிட்டுப் படுத்துக்கிட்டா். அண்ணக்கி வெள்ளிக்கெழம, ஆயிரம் புளுகன் புளுகுறதக் கேக்குறதுக்காக பக்கத்து ஊர்ல, இருந்து வந்து நெறயாக் கூடிக் கெடக்காங்க. கூட்டங் கூடிக் கெடக்குது. இங்க, ஆயிரம் புளுகன், புளுகப் போகாம வீட்ல படுத்துக் கெடக்குறா்.

படுத்துக் கெடக்கயில, ஆயிரம் புளுகனுக்கு ஒரு மகன் அப்ப வீட்டுக்குள்ள வந்தா். வந்தவ், அப்பன் படுத்துக் கெடக்குறதப் பாத்தா். என்னாப்பா! புளுகப் போகலயாண்டு கேட்டா். போகல, போயித் தோத்துப் போனா ஆயிரம் ரூவா போயிருமேண்டு நெனச்சு, படுத்துக்கிட்டேண்டு சொல்றா்.

என்னாப்பா! அந்த ஆயிரம் ரூவாய எங்கிட்டக் குடுப்பாண்டு வாங்கிக்கிட்டு, ஆயிரம் புளுகனோட புளுகுறதுக்குப் போறா். கூட்டம் கூடிக் கெடக்குது.

இவ் போகவும், எங்கடா? ஓங்கப்பண்டு கூட்டத்துல இருந்தவங்க கேக்குறாங்க. அதுக்கு இவ் சொல்றா்: முந்தா நாத்து மானம் (வானம்) ரெண்டாப் பொளந்துகிருச்சு. ஒரு இய்யப் புடுச்சு, தோல உருச்சு, மானத்ததச்சிட்டு, மிச்சத் தோலக் கொண்டு போயி, சின்னமனூரு சந்தயில வித்திட்டு அண்ணைக்கே பாதி ரூவாய வாங்கிட்டு வந்திட்டாரு. மீதி ரூவாய வாங்க, இண்ணக்கிப் போயிருக்காருண்டு சொன்னா்.

சொல்லவும், சனமே ஆச்சரியப்பட்டு, அடியாத்தா!.... இவனே... இந்தப் புளுகுப் புளுகுறானே, இவங்கப்பன் – என்னா புளுகுப் புளுகுவானோண்டு நெனச்சுப் பயந்து, புளுக வந்தவ் புளுகாமப் பெறப்டுட்டாா்.

இந்தப்பய, கூட்டத்துல இருந்தவங்களப் பாத்தாா். பாத்து, என்னாயா? இந்தப் புளுகு போதுமா? இன்னும் புளுகணுமாண்டு கேட்டாா்.

கேக்கவும், கூட்டத்ல இருந்தவங்க, இன்னொரு புளுகு – புளுகுடாண்டு சொன்னாங்க.

எங்கப்பாவுக்கும் – எங்கம்மாவுக்கும் கல்யாணம் நடக்கயில, நாங் கூடவே இருந்தே். கல்யாணம் முடுஞ்ச பெறகு, வீட்டுக்குள்ள போயி பாயில ஒக்காந்தாங்க. அப்ப, ரெண்டு பேருக்கும் எடயில, நா் ஒக்ககாந்திருந்தே். ஒக்காந்திருக்கயில, ஊருக்குப் பெரியதனத்துக்காரங்க வந்தாங்க. வந்து, செய்யுற சோலிகளச் செஞ்சுட்டு, கடசியாத் தேங்காய ஒடச்சாங்க. ஒடைக்கவும், மே மூடி பறந்து போயி, மானமாப் போச்சு. கீழ மூடி விழுந்து பூமியாப் போச்சு. அவங்க திகிலடுச்சுப் போயிட்டாங்க. நா் பாத்துக்கிட்டே இருந்தே்ண்டு சொன்னாா்.

அடேயப்பா! நிய்யி புளுக வேணாம்டா. இந்த ரூவாய எடுத்துக்கிட்டுப் போடாண்டு சொல்லிட்டாங்க. ரெண்டாயிரம் ரூவாயயும் எடுத்துக்கிட்டு வீட்டுக்கு வாராா்.

வீட்ல வந்து, அப்பங்கிட்டக் குடுத்தாா். இதென்னடா? அதிசயமாயிருக்கு. இந்தப் புள்ள உசுரோட இருக்கப்

-பிடாதுறாண்ட்டு கையயும் – காலயுங் கெட்டி, கெணத்துக்குள்ள போட்டுட்டு வந்திட்டா.

போடவும், விடிய – விடியக் கெணத்துக்குள்ள கெடக்கா. விடியக் காலத்ல, தோட்டக்காரர், போயலைக்குத் தண்ணி எரைக்க வந்தா. எரைக்கயில சாலப் புடுச்சுக்கிட்டு மேல வர்ரா. புண்ணுக் கழுத்து லம்பாடி மாடுக, டமக் – டமக்ண்டு மிதிச்சுக்கிட்டுப் போகுதுக.

மேல வந்தவ், ஐயா! ஆயிரம் புளுக மகன். சாலப்புடுச்சுக்கிட்டு மேல வாரா. தலவாரில, மாட்ட நிப்பாட்டிட்டு என்னய வந்து தூக்கி விடுண்டு சத்தம் போட்டா. என்னாடா மனுசன் சத்தங் கேக்குதுண்ட்டு வாரில, மாட்ட நிப்பாடிட்டு, வந்து பாத்தா, ஆயிரம் புளுகி மகி, கையப் புடுச்சுக் தூக்கிவிட்டா. தூக்கி வெளிய விடவும், நேரா வீட்டுக்கு வந்தா. வந்து, அப்ப பக்கத்துல போயிப் படுத்துக்கிட்டா. ஒரக்கத்துல தடவிப் பாத்தவ். ஆருடாண்டு கேட்டா. என்னப்பா! நாந்தேண்டு சொன்னா.

அடப்பாவி! எப்டிடா? கெணத்துக்குள்ள கெடந்து வந்தேண்டு கேக்கவும், நிய்யி கெணத்துக்குள்ள போட்டுட்டயா, அப்பப் பாத்து தோக்லா வரத்துச் சாரலு, சோண்டு பேஞ்சுச்சு. அந்தத் தூத்தலப் புடுச்சு – அந்தத் தூத்தலப் புடுச்சு வந்திட்டேப்பாண்டு சொன்னா.

சொல்லவும், இனி, இவனத் திருத்த முடியாதுண்ட்டு, அவ் போற போக்குல விட்டுட்டானாம். அதுக்குப் பெறகு பெரிய புளுகனா இருந்தானாம்.

12. பூதத்தின் போணிக் கூடு

ஒரு ஊர்ல – ஒரு வெறகு வெட்டியா். அவனுக்கு ஒரு மக இருந்தா. வயசுப் பிள்ளைய, ஒத்தயில வீட்ல விட்டுட்டுப் போகப் பயந்து, வெறகு வெட்ட மகளயும் கூட்டிக்கிட்டு போயிருவா். பாவம்! வெறகு வெட்டி வித்தாத்தா் கஞ்சி.

ஒருநா, மகளயுங் காட்டுக்குக் கூட்டிட்டுப் போயி, மகள, ஒரு மரத்தடியில ஒக்கார வச்சுட்டு, புருசனும் – பொஞ்சாதியும் ஆளுக்கொரு பக்கம் வெறகு வெட்டப் போயிட்டாங்க. ரொம்ப நேரமாயிருச்சு. இந்த பிள்ள நல்லா ஒரங்கிட்டா. ஒரங்கவும், அந்தச் சமயத்ல, அந்தக் காட்ல, இருந்த பூதம் அந்தப் பக்கமா காட்டச் சுத்திப் பாக்க வருது. வரயில, பிள்ள படுத்துக் கெடக்குறதப் பாக்குது. ஒடனே! தூக்கித் தன்னோட கொகைக்குக் கொண்டு போயிருச்சு.

பகலெல்லாம் வெறகு வெட்டிட்டு, சாயங்கலாம் வந்து பாத்திருக்காங்க. மகளக் காணம். பொண்டாட்டிய வீட்டுக்குப் போகச் சொல்லிட்டு, அந்தக் காட்டு வழியா வெறகு வெட்டியா் போறா். போறா்.... போறா்..... ரவ்வெல்லாம் போறா். விடியப் போறபோது பாத்தா, அந்தப் பூதம் வாழுற மலயில இருக்கா. அந்த மலயில – ஒரு பெரிய கொக இருக்கு. அந்தக் கொகைக்குள்ள போயி எட்டிப் பாத்தா். அங்க பதினோரு பொண்ணுக இருக்குது. அந்தப் பதினொண்ணுல ஒண்ணா, வெறகு வெட்டியா் மகளும் இருக்கா. தகப்பனப் பாத்ததும், அப்பா!! அப்பா!! அப்பாண்டு சத்தம் போட்டா.

அப்ப பூதம், கொகய விட்டுக் காட்டச் சுத்திப் பாக்க, வெளிய போயிருச்சு. அதனால எல்லாப் பிள்ளைகளும்

ஓடியாந்து, வெறகு வெட்டியானச் சுத்தி நிண்டுகிட்டு இருந்துச்சுக. கொஞ்ச நேரத்ல, பூதந்திரும்பி வருது. வந்ததும், வராததுமா இந்தப் பிள்ளைக ஓடி, எங்கப்பா வந்திருக்காங்கண்டு பூதத்துக்கிட்ட சொல்லுச்சுக. அப்டியா! அப்ப கூட்டிக்கிட்டு வாங்கண்டு பூதஞ் சொல்லுச்சு. எல்லாருமா ஓடிப்போயி வெறகு வெட்டியானக் கூட்டிக்கிட்டு வந்தாங்க. நல்லா சோறு போட்டு, ரெண்டு நா, அவன நல்லா வச்சிருந்துச்சு பூதம். ரெண்டு நா, களிஞ்சுச்சு. வெறகு வெட்டியா், ஊருக்குப் போகணும்ண்டு பூதத்துக்கிட்டச் சொன்னா்.

மூணு பூசணி வெதையக் குடுத்து, எங்காவது நட்டு வச்சு, காக்கிற பூசணிக்காய வச்சுப் பொளச்சிக்கிறச் சொல்லி, வெறகு வெட்டியான அனுப்புச்சு வச்சது பூதம்.

மகளப் பாத்த சந்தோசத்ல வெறகு வெட்டியா் நேரா வீட்டுக்கு வர்றா். வீட்டுக்கு வந்து, பூதங் குடுத்தப் பூசணி வெதைய, குப்ப மேட்ல நட்டுவச்சா். அந்த வெத மொளச்சு, நூறு பூசணிக்கா காச்சிருச்சு. எல்லாப் பூசணிக் காய்களயும் புடுங்கி, மூட்டையில கட்டி, செட்டியார் கடக்கிக் கொண்டுகிட்டுப் போயி குடுத்திட்டு, பதிலுக்கு அரிசிய வாங்கிக்கிட்டு வந்து, ஆக்கிச் சாப்பிட்டுட்டுப் புருசனும் – பொஞ்சாதியும் படுத்துக்கிட்டாங்க.

வெறகு வெட்டியா், குடுத்த பூசணிக்காய ஒடச்சுப் பாக்கயில பூராம் பவுனா இருக்கு. மிச்சமிருக்கிற பூசணிக்காய்களயும் வெறகு வெட்டியாங்கிட்டயிருந்து வாங்கிக்கிட்டு, ஒரு மூட அரிசியும், அம்பது ரூபாயுஞ் செட்டியாரு குடுத்தாரு.

ரெண்டு பேருமா ஆக்கிச் சாப்பிட்டுக்கிட்டிருக்காங்க. கொஞ்ச நாள்ல அரிசி தீந்து போச்சு. ரெண்டு நா, பட்டினி

கெடந்து பாத்தாங்க முடியல. சரிண்ட்டு – மககிட்டத் திரும்பயும் போறா். அப்பா வந்துட்டாருண்ட்டு எல்லாப் பிள்ளைகளும் சந்தோசமா இருக்காங்க. நல்லாச் சாப்பிட்டா். ஊருக்குப் போகணும்ண்டு, பூதங்கிட்டச் சொல்றா்.

பூதம், ஒரு டப்பாவக் குடுத்து, நீ போற வழில ஒரு கொளமிருக்கு. அந்தக் கொளத்துக் கரயில, ஒரு பெரிய ஆலாமரம். ஆலாமரத்துக் கீழ ஒக்காந்து, எலயப் போட்டுக்கிட்டு, டப்பாவ தொறந்துவிடுண்டு, பூதஞ் சொல்லி அனுப்பி வக்கிது.

வேகமா வாரா், அகோரப் பசி. ஆலாமரத்துக்குக் கீழ ஒக்காந்தா். எலயப் போட்டா். டப்பாவ தொறந்து விட்டா்.

டப்பாவுக்குள்ள இருந்து ஒரு பொண்ணு வெளிய வந்து, ஆறு வகக் காய்கரியோட சோறு போட்டுச்சு. நல்லாச் சாப்பிட்டா். திரும்பவும் டப்பாவ (போணிக்கூடு) எடுத்துக்கிட்டு, வீட்டுக்கு வந்தா்.

வீட்டுக்கு வந்ததும், பொண்டாட்டிய, வீட்டக் கூட்றிண்டு சொன்னா். எலயப் போட்டுட்டு, டப்பாவ தொறந்து விட்டா். ஆறு வகைக் காய்கறியோட சோறு போட்டுச்சு. சாப்பிட்டாங்க, படுத்து ஒரங்கிட்டாங்க.

விடிஞ்சுச்சு, தமுக்கடிக்கிறவனக் கூப்பிட்டா். மடத்தப் போல கோயில்ல, வெறகு வெட்டியா், பந்தி வக்கிறா்ண்டு ஊர் முழுசுஞ் சாட்டச் சொன்னா. இதென்னடா ஆச்சரியம், வெறகு வெட்டியானுக்கு ஏதுடா? இவ்வளவு பணம்ண்டு, ஊரே ஆச்சரியப்பட்டு நிக்கிது.

சரி வாங்கடா! என்னா நடக்குதுண்டு பாப்போம்ண்டு, ஊர்ல எல்லாரும் வெளியேறிப் போறாங்க. போனா, அங்க ஒண்ணுமே இல்ல. சட்டி இல்ல – பொட்டி இல்ல – அடுப்பு இல்ல – அரிசி இல்ல, வெறகு வெட்டியா நம்மள ஏச்சுப்பிட்டாண்டாண்டு பேசிக்கிட்டு ஒக்காந்திருக்காங்க.

அப்ப: வெறகு வெட்டியா போறா. எல்லாரையும் வருசயா ஒக்காரச் சொல்றா. இதையும் பாப்போம்ண்டு, எல்லாரும் வரிசயா ஒக்காந்தாங்க.

எல்லாரும் ஒக்காந்த பெறகு, வெறகு வெட்டியா, பையாப் போணிக் கூட்டத் தொறந்து விட்டா. அதுக்குள்ளயிருந்த பொண்ணு வெளியேறி, எல்லாத்துக்கும் ஒரு பக்கமா இருந்து பந்தி வக்கிது. இதக் கவனிச்ச செட்டியாரு, வெறகு வெட்டியாங்கிட்டப் போணிக்கூட்ட வாங்கிப்பிட்டாரு.

அங்க செட்டியாரு, ஆறு வகக் காய்கறியோட சாப்பிடுராரு. இங்க வெறகு வெட்டியா, சும்மா பட்டினியா கெடக்கா.

என்னா செய்யுறுதிண்ட்டு, திருப்பியும் மககிட்டப் போறா. மககிட்ட ரெண்டு நா இருந்தா. மூணாவது நா, பூதத்துகிட்டப் போயி, நா ஊருக்குப் போறேண்டு சொன்னா.

இவ், என்னடா பெரிய ஏமாளிப் பயலா இருப்பா போல இருக்கு. இந்தத் தடவ இவனுக்கு நல்லா பாடங் கற்பிக்கணும்ண்டு, பூதம் நெனக்கிது.

திருப்பியும், ஒரு போணிக்கூட்ட கையில குடுத்து அனுப்பி வச்சுச்சு. அதே மாதிரி, கொளத்தங் கரயில ஒக்காந்து எலயப் போட்டு, ரொம்ப ஆசயோட தொறந்து விட்டா. தொறந்து விடவும்,

அதுக்குள்ள இருந்து, செருப்பும் – வௌக்கமாறும் வெளியேறி, சும்மா அடி பிடுச்சுருச்சு. அடுச்சா – இன்ன அளவிலதா் அடிக்குதுண்டு சொல்ல முடியல.

அடிய வாங்கிக்கிட்டு, நேரா வீட்டுக்கு வாரா். வந்ததும் வராததுமா, பொண்டாட்டியப் பாய விரிடிண்டு சொன்னா். பாய விருச்சா போணிக்கூட்ட தொறந்து விட்டுட்டா். அதுக்குள்ள இருந்து செருப்பும் வௌக்கமாறும் வெளியேறி, புருச்– பொண்டாட்டி ரெண்டு பேத்தையும் அடி பிடிச்சிருச்சு. அடிய வாங்கிக்கிட்டுப் படுத்துக்கிட்டாங்க.

அண்ணிக்கு விடியவும், நேரா செட்டியாரு வீட்டுக்கு, வெறகு வெட்டியா் போனா். செட்டியாரு கடையில ஒக்காந்து இருந்தாரு. செட்டியாரே!! சாப்பாட்டுக்குக் கொஞ்சம் அரிசி வேணும்ண்டு கேட்டா்.

அண்ணைக்கே குடுத்துட்டேனடா! இப்ப எங்கடா இருக்கு அரிசி? அரிசியுமில்ல – ஒண்ணுமில்ல. போ–போண்டு சொல்லிட்டாரு.

போணிக்கூட்டத் தொறந்து விட்டுட்டா். செட்டியாரப் புடுச்சு அடுச்சிருச்சு. அடி பொறுக்க மாட்டம செட்டியாரு, அங்கயும் இங்கயும் ஓடுராரு. அப்பயும் அடிய விடல.

ஏலே!! நீா் வாங்குனதெல்லாம் குடுத்திருரேண்டா, அடிய நிறுத்தச் சொல்லுடாண்டு, செட்டியாரு அனத்துராரு. மொதல்ல பூசணிக்காய குடு! குடுத்திட்டாரு. போணிக்கூட்ட குடு! குடுத்திட்டாரு எல்லாத்தையும் வாங்கிக்கிட்டா். நேரா வீட்டுக்கு வந்து, திருந்தி நல்லாப் பொளச்சானாம்.

13. கட்டயன்

ஒரு ஊர்ல - ஒரு செட்டியாரு இருந்தாரு. பக்கத்து ஊருக்குப் போயி, பணம் வட்டிக்கு குடுத்து வாங்குறது வழக்கம். செட்டியாரு வெளியூருக்குப் போறபோதெல்லாம் கட்டயண்றவ், தொணக்கிப் போவானாம்.

ஒருநா, ரெண்டு பேரும் ரஸ்தாவ்ல நடந்து போயிக் கிட்டிருந்தாங்க. போயிக்கிட்டிருக்கயில, இருட்டிப் போச்சு. பயந்துகிட்டே, நடந்து போயிக்கிட்டிருக்காங்க.

பின்னால, யாரோ ஓடி வர்ர சத்தங்கேக்குது. திரும்பிப் பாத்தா திருடங்க. செட்டியாரப் போயிச் செடி மறவ்ல ஒழிஞ்சுகிறச் சொல்லிட்டு, அப்டியே ரஸ்தாவ்ல கட்டயன் படுத்துக்கிட்டா.

ஓடியாந்த திருடங்க, கட்டயன காலால எடறுனாங்க. எடறிட்டு, கட்ட, நடுரோட்ல கெடக்டாண்டு ஒருத்த் சொன்னா.

திருடங்க சொன்னதக் கேட்டக் கட்டயன், கட்ட, கைலகூடக் காலணா இருக்கும்ண்டா. என்னாடா! கட்ட பேசுதுண்டு திரும்பிப் பாத்தாங்க. பாத்து, அவங்கிட்ட இருந்த காலணா காசப் புடுங்கிப் பாத்த திருடங்க, இந்த காசு செல்லுமா? செல்லாதாண்டு அவங்களுக்குள்ள பேசுனாங்க. கட்டயன், சும்மா கெடக்காம, செல்லும் செல்லாதுங்றது செடிக்குள்ள இருக்ற செட்டியாரக் கேட்டாத் தெரியும்ண்டு சொல்லிப்பிட்டா. செல்லும் - செல்லாதுண்றதுக்கெல்லாம் செட்டியாரு செடிக்குள்ள இருக்காரு, அவரப் போயிக் கேளுங்கடாண்டு சொல்லவும், திருடங்க செடிக்குள்ள ஒழிஞ்சுகிட்டிருந்த செட்டியாரப் புடுச்சு, அடியடிண்டு அடிச்சு, பணத்தெல்லாம் புடுங்கிக்கிட்டுப் போயிட்டாங்க. இவ் சும்மா இருந்திருந்தா, புடுங்கிருப்பாங்களா? அதுக்குத்தா சொல்றது, கோவணத்ல முக்காத்துட்டிருந்தா கோழி கூப்டப் பாட்டு வருமாம்.

14. கடலக்காயி

ஒரு ஊர்ல – ஒரு பெரிய பண்ணயாரு இருந்தாரு. அதே ஊர்ல, புதுசா, ஒரு கொசவன் (குயவன்) வந்து, அதாஞ் சட்டி – பான செய்றவரு குடி இருந்தாரு. இவரு சட்டி பான செய்யுற எடத்ல, எப்பயும் பத்து பேரு கூடி இருப்பாங்க. இருந்துக்கிட்டு, எதயாவது பேசிக்கிட்டே இருப்பாங்க. கொசவருக்கு, பேச்சுக்குப் பேச்சும் நடக்கும் – வேலக்கி வேலயும் ஒடும்.

அப்டி இருக்கயில, ஒருநா வெதைக்கிறது பத்திப் பேச்சு வந்திச்சு. ஒவ்வொரு ஆளுங்களும், நீ பத்து மொடா வெதச்சே, நீ ஆறு மொடா வெதச்சே, நீ நாலு மொடா வெதச்சேண்டு, அவங்கவங்க, வெதச்சதப் பத்திப் பேசிக்கிட்டிருந்தாங்க.

கொசவருக்கும் ஒரு ஆச, நம்மளும் வெதைக்கணும், இவங்க கூடப் பேசும்போது, நானும் அஞ்சு மொடா வெதச்சேண்டு சொல்லணும்ண்டு நெனச்சுக்கிட்டு, நே...ரா... பெரிய பண்ணயாருகிட்டப்போயி, காணி நெலம் வேணும்ண்டு கொசவரு கேட்டாரு. சரிண்ட்டு, பெரிய பண்ணயாரு ரெண்டு காணி நெலங் குடுத்தாரு. வீட்டுக்கு வந்து, அஞ்சு பானைகள நொறுக்கி, நெலத்துல கொண்டு போயி வெதச்சுட்டு வந்துட்டாரு. (மொடா என்பதை அளவு என்று கொள்ளாமல் பானை என்று கொண்டார்.)

மூணு நாக் கழிச்சுப் போயிப் பாக்கயில, வெறும் அருகம் புல்லா மொளச்சிருக்கு. மொடா, இப்பத்தா மொளைக்குதுண்டு நெனச்சுக்கிட்டு, வீட்ல வேலயப் பாக்குறாரு. பெறகு, நாலுநாக் கழிச்சுப் போயி பாத்தாரு. புல்லு நல்லா மொளச்சிருந்திருச்சு. மொடா, நல்லா மொளச்சிருச்சிண்டு, திருப்தியா வீட்டுக்குப் போயிட்டாரு.

எட்டாம் நா, போயிப் பாக்கயில, தேவலோகத்து ஆனைக வந்து, மேஞ்ச தடம், நெலம் பூறாவும் இருக்குது. ஆனத் தடம் பெரிசா இருக்கும்ல்ல. ஆமா! அத இவரு ஒரலுத் தடம்ண்டு நெனச்சு, ஊருல இருக்ற ஒரலுகதா (உரல்) வந்து மேயுதுண்ட்டு, நேரா ஊருக்குள்ள போனாரு. நம்ம என்னா பாடுபட்டு மொடாவ வெதச்சிருக்கோம். இந்த ஊர்ல இருக்ற ஒரலுக வந்து, இப்டி மேஞ்சு அழிக்குதேண்டு, வருத்தப்பட்டு, ஊருக்குள்ள வந்து நேரா.... நாட்டாமக்காரு வீட்டுக்குப் போறாரு.

போயி –, நாட்டாம!! நாட்டாம!! நா பெரிய பண்ணயாருகிட்ட ரெண்டு காணி நெலம் வாங்கி, அஞ்சு மொடா வெதச்சிருக்கே. அத இந்த ஊரு ஒரலுக போயி, மெஞ்சிட்டு வந்திருச்சு. வந்து, தடத்தப் பாருண்டு, கூட்டிக்கிட்டுப் போனாரு. நாட்டாமகாரு போயிப் பாத்துட்டு, ஆமா அது உம்மண்டு, ஊருல இருக்ற ஒரலுகளயெல்லாம் புடுச்சுக் கட்டிப் போடச் சொன்னாரு நாட்டாம. ஊரு ஆளுங்களும், வீட்ல இருக்ற ஒரலுகளப் புடுச்சுக் கட்டிப் போட்டுட்டாங்க.

மறுநாக் காலைல போயி காட்டச் சுத்திப் பாத்தா வெறும் ஆனத் தடமா, வட்ட வட்டமா இருக்கு. நம்ம ஊரு ஒரலுகளத்தா கட்டிப் போட்டுட்டோமே, பெறகு எப்டி ஒரலு வந்து மேயுது? ஒரு வேள அசலூரு ஒரலுக வருதோண்டு நெனச்சு, காவலுக்குப் போயி படுத்துக் கெடக்காரு.

படுத்துக் கெடக்கயில, தேவலோகத்து ஆனைக வந்து மேயுதுக. டையாப் போயி, ஒரு ஆனயோட வாலப்(வால்) புடுச்சுக்கிட்டாரு. புடிக்கவும், ஆன, மேல பறந்து, தேவலோகத்துக்குக் கொண்டுகிட்டுப் போகுது. அங்க, தேவேந்திரன் இருக்கா. பாவம்ண்டு சொல்லி, கடலக்காயப் போல, நெறயாத் தங்கத்தக் குடுத்து, இவனக் கீழ கொண்டு போயி விடச் சொல்லி,

தேவேந்திரீ சொல்றாரு. சொல்லவும் ஆனைக, கீழ கொண்டு வந்து விட்டுருச்சு. விடவும், நே....ரா.... வீட்டுக்கு வந்துட்டாரு.

வந்து, தேவலோகத்ல கடலக்காயி குடுத்தாங்க. கடிச்சு உடைக்க முடியல. எனக்கு வறுத்துக் குடுண்டு, பொண்டாட்டிகிட்டச் சொன்னாரு. அவ, ஓட்டக் காய வச்சு, வருத்தா, கடலக்காயி பொறியாமல் உருகிப் போச்சு. எரக்கி வக்யவும், கெட்டியா இருகிப் போச்சு. பிச்சுப்—பிச்சுப் பாத்தாங்க. பிக்ய முடியல. ஓட்டோட தூக்கிட்டுப் போயி, குப்பையில கொட்டிட்டாங்க. குப்பையில கெடந்த, கடலக்காய, ஆசாரி மகன், கரிக்கட்ட பெறக்க வந்தவ், எடுத்திட்டுப் போயி, அப்பங்கிட்டக் குடுத்திட்டாா. ஆசாரி வாங்கிப் பாத்திட்டு, எங்க கெடந்திச்சுண்டு கேட்டு, உம்ம தெரிஞ்சுகிட்டு, கொசவர புடிக்கிறாரு. ஒண்ணுந் தெரியாத கொசவரு, ஆசாரியக் கூட்டிக்கிட்டு, காட்டுக்குப் போறாரு. போயி —, ரெண்டு வேரும் படுத்துக் கெடக்காங்க. படுத்துக் கெடக்கயில, ஆனைக வந்து மேயுதுக. மேயவும், ஆசாரியக் கூப்ட்டு, ஆசாரி!! ஆசாரி!! ஆனைக வந்திருச்சு. நா மொதல்ல வாலப் புடுக்கிறே். நீ எங்காலப் புடுச்சுக்கிறணும்ண்டு சொல்றாரு. ஆசாரி சரிண்ட்டாா. ஆசாரிப்பய இல்ல, விடுவானா?

கொசவரு போயி, வாலப் புடுச்சாரு. ஆசாரி போயி, கொசவரோட காலப் புடுச்சுக்கிட்டாா. ரெண்டு வேரும் மேல போறாங்க. தேவலோகத்துக்கு முக்கா வாசித் தூரம் போகயில, ஆசாரி கேட்டாா! எவ்வளவு கடலக்காயி தருவாங்கண்டு. கேக்கவும், கொசவரு, சும்மா இருக்கமாட்டமா, ஆனயோட வால விட்டுட்டு, இந்தா, இவ்வளவுண்டு; ரெண்டு கையையும் விரிச்சுக் காட்னாா. கைய விடவும், ரெண்டு வேரும் கீழ விழுந்து செத்துப் போனாங்களாம், சாகாம இருப்பாங்களா? பாவம்! கொசவரு கூடப் போனது யாரு? கம்மாளப் பய இல்ல.

15. ஊர் காக்கும் ஐயனார்

ஒரு ஊர்ல – ரெண்டு களவாணிக இருந்தாங்க. களவாண்டே பொளச்சு வந்தாங்க. ஒருத்த மொரடன், இன்னொருத்தன் அப்பாவி. களவாண்ட போரண்ணைக் கெல்லாம், ஐயனாரு சாமிய கும்புடாமப் போறதில்ல. ஐயனாரு, அவங்களுக்குத் தொண செஞ்சுக்கிட்டு வந்தாரு.

இப்டி இருக்கயில, ஒருநா ராத்திரி, களவாண்டப் போனாங்க. போரப்ப, ஐயனாரு கோயிலுக்கு போயி, 'ஐயனாரப்பனே" .இண்ணக்கி நெறயக் கெடைக்கணும், எங்கள ஆரும் பாத்திரக் கூடாது. அப்டி காத்துக்கிட்டயினா! இண்ணிக்கி கெடைக்கிறதில பாதிய, உனக்கு படைக்றோம்ண்டு வேண்டிக்கிட்டாங்க.

சொல்லி வச்சது போல, ரெண்டு பேரும் ஊருக்குள்ள போனாங்க. போயி, ஒரு வீட்டுகிட்ட நிண்டாங்க. வீட்டு வாசல்ல படுத்துக் கெடந்த நாய்க, இவங்களப் பாத்துக் கொலச்சுச்சு. நாயி கொலைக்கிற சத்தம் பலமா இருந்துச்சு. என்னா! நாயி இப்டிக் கொலைக்குதுண்டு பாக்க வந்த பக்கத்து வீட்டுக்காரு, இவங்களப் பாத்திட்டு, களவாணி! களவாணிண்டு சத்தத்தப் போட்டுட்டா.

ஊரு ஆளுகளெல்லாம் எந்திருச்சுக்கிட்டாங்க. இந்த நெலம களவாணிகளுக்கு பயத்தத் தந்திருச்சு. ஓட ஆரம்பிச்சாங்க. கம்புங்-களிக்கவயும் தூக்கிக்கிட்டு வெரட்டிட்டாங்க.

தப்பிச்சே – பொளச்சேண்டு ஐயனாரு கோயில நோக்கி ஓடியாந்தாங்க. சாமிக்கு. காதுல கொழுப்பு ஏறிப்போச்சுடா. அதுனாலதா நம்ம சொன்னது கேக்கல. அது மண்டய ஒடச்சாத்தாண்டா, கொழுப்புக் கொறையும், நிய்யி ஒரு கல்ல

எடுத்துக்க, நானும் ஒரு கல்லு எடுத்துக்கிறே், ரெண்டு பேரும் சேந்து எறியணும்டாண்டு சொல்லிக்கிட்டு, மொரடன் முன்னால வாரார்.

அப்பாவியான களவாணி, சாமி மண்டயில கல்லக் கொண்டெறியப் பயந்துகிட்டு, அவ், சாமி மண்டயில எறியயில, நம்ம, கல்ல சங்கம் பொதைக்குள்ள எறிஞ்சிரணும்ண்டு நெனச்சுக்கிட்டுப் பின்னாலேயே வந்துகிட்டிருக்கா்.

அப்ப சாமி!! இந்தப் பயக வர்ர சீருக்கு, நம்ம மண்டய ஒடச்சுப்பிருவாங்க போல இருக்கு. நம்ம போயி, இந்தச் சங்கம் பொதைக்குள்ள ஒளிஞ்சுகிருவோம்ண்டு, செலய விட்டெறங்கி, சங்கம் பொதைக்குள்ள போயி ஒளிஞ்சுகிருச்சு.

எங்களக் காப்பாத்தாம, குதுரமேல ஏறியா ஒக்காந்திருக்க. ஒன்னய, இப்பப் பாருண்டு சொல்லிக்கிட்டே, சாமி மேல கல்ல எறிஞ்சா். கல்லு படவும் செல ஒடஞ்சு போச்சு. சாமிய எறியப் பயந்த அப்பாவிக் களவாணி, பக்கத்துல இருந்த சங்கம் பொதையில எறிஞ்சா். அந்தக் கல்லு, சங்கம் பொதைக்குள்ள ஒளிஞ்சுகிட்டிருந்த, ஐயனாரு மண்டயில புடுச்சுக்கிருச்சு.

இந்தப் பயக விடமாட்டாங்க போலிக்கு. பூசாரிகிட்டப் போயிச் சொல்வோம்ண்ட்டு, எறிஞ்ச, அந்தக் கல்லயும் எடுத்துக்கிட்டு, பூசாரி வீட்டுக்கு ஓடுச்சு.

பூசாரிய எழுப்பி, பூசாரி!! பூசாரி!! ஆபத்து. என்னய வெரட்டிக்கிட்டு வருது. தடுத்து, அவங்ககிட்டச் சொல்லி வையி, இல்லோண்டா ஒங்கண்ண கெடுத்துப்பிருவேண்டு சொல்லிட்டு, பூசாரி வீட்டு கொல்லைக்குள்ள போயி ஒளிஞ்சுகிருச்சாம். ஒளிஞ்சுகிட்டு, அவனச் சொல்லி வக்கிறயா! ஒங்கண்ணச் கெடுக்கவாண்டு சத்தம் போட்டுச்சாம்.

16. வல்லவனுக்கு வல்லவன்

ஒரு ஊர்ல – ஒரு கெழவி இருந்தா. அவளுக்கு ஒரே ஒரு மகன். அந்தக் கெழவி, அவனுக்குப் பிட்டு அவுச்சுத் தருவாளாம். அதத் திண்டுபிட்டுப் போயி, ஒரு ஆனய வாலப் புடுச்சு சுத்தி ஏறிவானாம்.

இப்டியே தெனமும் செஞ்சு வரயில, ஒருநா, கெழவி புட்டு அவிக்கிறா, அவிச்சுக்கிட்டிருக்கும்போது, வீதில வெளையாடிக்கிட்டிருந்த பிள்ள ஒண்ணு, கெழவிகிட்டப் போயிருக்கு. போகவும், அந்தக் கெழவி கொஞ்சம் பிட்ட அள்ளிக் குடுத்தாளாம். அள்ளிக் குடுக்கவும், பிட்டுல கொஞ்சூண்டு கொறஞ்சு போச்சு.

வழக்கம் போல வந்தா். பிட்ட எடுத்து முன்னால வச்சா, திண்டுட்டு, ஆனயப் புடிக்கப் போனா். போயி, ஆன வாலப் புடிக்கவும், ஆன இவன இழுத்துப் போட்டுட்டு போயிருச்சு. நேரா வீட்டுக்கு வந்து, கெழவிகிட்டச் சொன்னா்.

இண்ணக்கி ஆன, என்னய இழுத்துப் போட்டுட்டுப் போயிருச்சுண்டு சொல்றா். சொல்லவும்; அதுனால என்னா மகனே! வல்லவனுக்கு வல்லவன் வையோகத்துல இருப்பா்! அவ் வந்து, நீ புடிக்க முடியாத ஆனய, அவ புடிப்பாண்டு சொன்னா.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்துல இருக்கானா? அப்ப: அவனப் போயி, நா் பாக்கணும். எனக்குக் கட்டுச்சோறு கட்டிக்குடுண்டு கேக்குறா். கேக்கவும், அவளுங் கட்டிக் குடுத்திட்டா. கொண்டுகிட்டுப் போறா. போகயில, அங்கிட்டு ஒருத்த், ரெண்டு ஆனைகள ஏர்ல கட்டி உழுதுகிட்டிருக்கா்.

நேரா அவ்ங்கிட்டப் போயி, குடிக்கத் தண்ணி வேணும்ண்டு கேக்குறா். அவ் உழுகுறத நிறுத்தாம, அங்க -

கொடத்துல தண்ணிஇருக்கு, எடுத்துக் குடிண்டு சொல்லிட்டு, அவ் பாட்டுக்கு உழுகுறா்.

வந்து, கொடத்தப் பாத்தா். கொடத்ல தண்ணி இருக்கு, ஆனா கொடத்து மேல ஒரு கல்லெடுத்து வச்சிருக்கா். அந்தக் கல்லத் தூக்கித்–தூக்கிப் பாக்குறா். தூக்க முடியல. உழுதுகிட்டு இருந்தவனக் கூப்பிட்டா். அவ் உழுகுறத விட்டுட்டு வந்து, கொடத்த மூடியிருந்த கல்ல, லேசா தாருக்கம்புல தள்ளினா். கல்லு கிழ விழுந்திருச்சு. தண்ணிய நல்லாக் குடிச்சா்.

குடிச்ச பெறகு, எங்க போறண்டு கேட்டா். யாரு? உழுகுறவ். வல்லவனுக்கு – வல்லவனப் பாக்கப் போறேண்டு சொன்னா்.

சொல்லவும், எங்கம்மா தெனமும் பிட்டு அவுச்சுத் தருவா, அதத் திண்டுபிட்டுப் போயி, ஆனய வாலப் புடுச்சு சுத்தி எருஞ்சுட்டு வருவே்.

ஒருநா, அப்டித்தா் – பிட்டத் திண்டுபிட்டு, ஆனயப் பிடிக்கப் போனே். போயிப் புடிக்கவும், ஆன என்னய இழுத்துப் போட்டுட்டுப் போயிருச்சு. அதப் போயி, எங்கம்மா கிட்டச் சொன்னே். அதுக்கு வல்லவனுக்கு – வல்லவன் வையோகத்துல இருப்பா்ண்டு எங்கம்மா சொன்னா.

அதா் – நானு வல்லவனத் தேடிப் போயிக்கிட்டிருக்கேண்டு சொல்றா். சொல்லவும், நானும் அப்டித்தா் – எம் பொண்டாட்டியோட வாழ்ந்துக்கிட்டிருந்தே. ஒரு ரிசி வந்து, எம் பொண்டாட்டியத் தூக்கிக்கிட்டுப் போயிட்டா். அவங்கிட்டயிருந்து மீட்ட முடியல. அந்த வருத்தத்துலதா், எம்பாட்டுக்கு தனியா உழுதுகிட்டிருக்கேண்டு அவ் சொன்னா்.

சொல்லவும், அப்ப, வா போவோம். ஓம் பொண்டாட்டிய நா் மீட்டித் தரேண்டு சொல்றா். சொல்லவும், ஏர நிறுத்திட்டு,

ரெண்டுபேரும் போறாங்க. போகயில, அந்த ரிசி, மல மேல உச்சில ஒக்காந்திருக்கு. இவங்க வர்றதப் பாத்திட்டு, ஆங்காத்து வீ சுது – பொங்காத்து வீ சுதுண்டு வெரட்டி வருது. இவங்க தல தெறிக்க திரும்பி ஓடி வாராங்க.

ஓடிவர வரத்துல, காட்டுல நிண்டுகிட்டிருந்த ஆனைகளயுந் தூக்கி, இந்தக் கக்கத்துல ஒண்ண, இந்தக் கக்கத்துல ஒண்ண இடுக்கிக்கிட்டு, ஓடி வராங்க. அப்டி ஓடி வரயில, ஒரு பொம்பள, வட்டப் பாறையில, நெல்ல அவுச்சுக் காயப் போட்டுக்கிட்டிருக்கா.

இவங்க ஓடி வரதப் பாத்திட்டு, என்னாங்கடா இப்டி ஓடி வர்ரங்கண்டு கேக்குறா. கேக்கவும், ஒரு ரிசி, எங்கள வெரட்டி வருதுண்டு சொல்றாங்க. திரும்பிப் பாத்தாளோ இல்லையோ! நெல்லு, நெல் அவுச்ச பான, இதுகளச் சுருட்டித் தூக்கிக்கிட்டு இவங்களோட ஓடுறா.

மூணுபேரும் ஓடுறாங்க. ஓடயில, அங்கிட்டு, ஒரு பொம்பள நிண்டுகிட்டு, என்னாப்பா இப்டி ஓடியாறங்கண்டு கேக்குறா.

கேக்கவும், ரிசி எங்கள வெரட்டி வருதுண்டு சொன்னாங்க. சொல்லவும், இவங்க மூணு பேரு, ரெண்டு ஆன, பூராத்தயும் தூக்கி மாராப்புக்குள்ள வச்சுக்கிட்டு நிண்டுகிட்டா.

ரிசி பக்கத்துல வந்து, இங்க ஓடியாந்த பயகள எங்கண்டு கேக்குது. கேட்டுக்கிட்டிருக்கயில, ஒரு மூக்க அடச்சுக்கிட்டு, ஒரு மூக்குல மூச்ச இ...ழு...த்து விட்டா. அந்தக் காத்துல, ரிசி பறந்துபோயி சத்தா சமுத்திரத்துக்கு அங்கிட்டுப் போயிவிழுந்துச்சாம்.

பெறகு, மாராப்ப அவுத்து விட்டா. அவுத்து விடவும், ஆனக்காரர் ஆனயப் புடுச்சுக்கிட்டுப் போனானாம். நெல்லுக்காரி நெல்ல அள்ளிக்கிட்டுப் போனாளாம், இவ வீட்டுக்குப் போனானாம்.

17. திருவிழா நாடகம்

ஒரு ஊர்ல – திருவி ழா நடந்திருக்கு. திருவி ழாவ்ல, அந்த ஊர்ல நாடகம் போட்டிருக்காங்க. நாடகத்ல, மொதல்ல ஒரு கோமாளி வருவர். அவ் எப்டி வருவாண்டா! வந்திட்டே! வந்திட்டே! வந்திட்டே! வந்திட்டேண்டு வருவர்.

கூட்டம்ண்டா கூட்டம், எக்கச்செக்கமான கூட்டம். பலரும் பலவி தமா வந்திருப்பாங்கள்ல. நல்லவங்களும் வந்திருப்பாங்க. கெட்டவங்களும் வந்திருப்பாங்கண்டு நெனச்சு, ஐயா! இது நல்ல நாடகம். எல்லாரும் அமதியா ஒக்காந்து பாக்கணும். எந்தக் காரணத்தக் கொண்டும், செரங்கு வந்தவக செரங்கு சொறியப்படாது. செரங்கு சொறிஞ்சால், அடுத்தவக மேல, கையில, காலுல படும். யாருஞ் செரங்கு சொறியப்படாது.

அடிக்கடி மூக்கு சிந்திரவங்க, யாரும் கூட்டத்ல மூக்குச் சிந்தப்படாது. மூக்குச் சிந்தினால் அது அடுத்தவக மேல படும். சண்ட வந்திரும். யாரும் கூட்டத்ல மூக்கு சிந்தப்படாது.

கொசுகரிக்கிற கண்ணுக்காரு யாரும் இருந்தா, கூட்டத்ல கொசுகடிக்கப்படாதுண்டு சொல்லிட்டு, போறே! போறே! போறே - ண்டு சொல்லிட்டுப் போயிட்டர்.

நாடகம் பாக்கயில, இந்த மூணு வேரும் ஒரே எடத்ல வருசயா ஒக்காந்திருக்காங்க. நாடகம் முடியுறவரைக்கும் செரங்கு சொறியாமல், மூக்குச் சிந்தாமல், கொசு கடிக்காமல் இருக்க முடியுமா? முடியல. அங்க நாடகம் நடந்துகிட்டிருக்கு.

செரங்கு வத்தியா் பாத்தா். அவனால செரங்கு சொறியாமல் இருக்க முடியல. பக்கத்ல இருந்தவனக் கூப்ட்டு, அண்ணே! எங்க கொளத்ல, கொளத்து வெள்ளரிநட்டு, ஒரொரு காயும், இம்மந்தெண்டி – இம்மந்தெண்டி – இம்மந்தண்டி – ண்டு கையத் திருகித் திருகிக் காமுச்சு. அரிப்பத் தீத்துக்கிட்டா்.

அதுக்குங்குள்ள மூக்கருச்சானுக்கு மூக்கு ஒளிகிருச்சு. கூட்டத்ல யாரும் மூக்குச் சிந்தக் கூடாதுண்டு சொல்லிருக்கான்ல, அதுனால, அவ் என்னா செஞ்சா், இதென்னாணே பிரமாதம், எங்க பக்கத்து வீட்டுக்கார் ஒரு செம்பிலிக்கெடா வளக்குறா். அதுக்குக் கொம்பு இப்டித் திருகிருக்கு இப்டித் திருகிருக்குண்டு கைய மூஞ்சில வச்சுக் காமுச்சு, அவ் மூக்ககத் தொடச்சுக்கிட்டா்.

அதுக்குங்குள்ள, கொசு அரிச்ச கண்ணன் என்னா செஞ்சா். போணே! இதெல்லாம் பொய்யி – இதெல்லாம் பொய்யிண்டு கைய மூஞ்சிக்கு நேரா அடிச்சுக் காமுச்சு, கண்ணுல ஆஞ்சிகிட்டிருந்த கொசுகுகள வெரட்டிட்டா்.

இப்டி, மூணுவேரும் நாடக பாத்ட்டு வீட்டுக்கு வந்தாங்களாம். எப்டி? தந்திரமா செஞ்சிறுக்காங்க.

18. விருந்தாடி

ஒரு ஊர்ல, ஒரு குடும்பம் இருந்திச்சு. அந்தக் குடும்பத்ல ஒரு நாயி இருந்திச்சு. அந்த நாயிக்குப் பேரு குடும்பியப்புடி. அவனுக்குப் பேரு சட்னி. அவ் பொண்டாட்டிக்குப் பேரு இட்லி, மாட்டுக்குப் பேரு விருந்தாடி.

இப்டி ஒரு குடும்பம். அந்த ஊர்ல, அந்த வீட்டுக்கு எப்பயும் நல்ல மரியாத இருக்கும். நாலு பேரு வருவாக - போவாக.

இப்டி இருக்கயில, ஒருநா, இவ், காட்ல உழுதுகிட்டிருக்கா்.உழுதுகிட்டிருக்கயில, அவ் மருமகன், அந்த வழியா மாமன் ஊருக்கு வாரா். வரயில, மாமன் உழுகுறதப் பாத்திட்டு, உழுகுற எடத்துக்குப் போனா். போகவும், வாங்க மருமகனே. எப்ப வந்திங்கண்டு கேட்டா். கேக்கவும், இப்பத்தா் வந்தேண்டு சொன்னா். சொல்லவும், வீட்டுக்குப் போங்க, இட்லி இருக்கு சாப்டுங்க. வந்திர்றேண்டு சொன்னா். சொல்லவும், இட்லி – கிட்லி சுட்டுருப்பாங்க போல, அதா், மாமன் சொல்றாருண்டு நெனச்சுக்கிட்டு, வீட்டுக்குப் போனா்.

அங்க மாமியா, வாங்க மருமகனே, ஒக்காருங்க சட்னி வரட்டும் சாப்டலாம்ண்டு சொல்றா. அப்ப, இவ் என்னா நெனக்கிறா், இட்லி வீட்ல இருக்கு போல, சட்னி வாங்கப் போயிருக்காங்க, வரட்டும், ஒரு பிடி பிடிச்சிரலாம்ண்டு நெனக்கிறா். என்னத்த ஒரு பிடி பிடிக்ப் போறானாம்? இட்லியத்தா்! வேறென்னத்த.

ஒக்காந்திருக்கயில, மாமன் உழுதிட்டு வந்தா். அப்ப மாடுக, பசில, தீவனமில்லாமல் உழுததுக இல்ல. வீட்டுக்கு வரவும், அங்கிட்டும் – இங்கிட்டும் ஓடுதுக. ஓடி, தீவனத்த ராவுதுக.

அப்ப, மாமன் என்னா செஞ்சா, மாடுக ஓடுறப் பாத்துட்டு, "விருந்தாடியப் புடிச்சுக் கட்டுங்க, விருந்தாடியப் புடுச்சுக் கட்டுங்க"ண்டு சத்தம் போட்டா். சத்தம் போடவும், இவ் என்னா நெனக்கிறா். வீட்ல இட்லி இருக்குண்டு மாமன் சொன்னா். சட்னி வரட்டும் சாப்டுவீங்கண்டு மாமியா சொன்னா. இப்ப என்னாண்டா, விருந்தாடியப் புடிச்சுக் கட்டுங்கண்டு சொல்றா். நம்ம தான விருந்தாடி. நம்மளத்தே புடிச்சுக் கட்டச் சொல்றாங்கண்ட்டு ஓட்டம் எடுத்திட்டா்.

இவ் ஓடுறதப் பாத்திட்டு, வீட்ல இருந்த நாயி, அதா் குடும்பி, லொள் – லொள்ண்டு கொலச்சுக்கிட்டு வெரட்டி ஓடுது. வெரட்டி ஓடவும், மருமனக் கடிக்கப் போகுதுண்ட்டு, மாட்டப் புடிச்சுக் கட்டிக்கிட்டிருந்தவ், ஏ... புள்ள மருமகன வெறட்ர குடும்பியப் புடி–குடும்பியப் புடிண்டு சத்தம் போட்டா்.

சத்தம் போடவும், இதென்னாடா வம்பாப் போச்சு, நம்மள வெரட்டிக் குடும்பியப் புடிக்கச் சொல்றாங்கண்டு நெனச்சு, ஒரேயடியா ஓடி, வீட்ல போயி, நிண்டுதா் திரும்பிப் பாத்தானாம்.

சிரிப்புக்காக, இப்டி ஒரு கத ஊரு ஒலகத்ல சொல்லி -க்கிருவாங்க.

19. தொங்கோட்டம்

ஒரு காட்ல, நரிக ஒண்ணு கூடி, ஒத்துமயா இருக்கணும்ண்டு பேசி முடிச்சு, அண்ணணக்கிருந்து ஒத்துமயா இருந்திச்சுக. இருக்கயில, தமக்குள்ள ஒரு தலவனத் தேந்தெடுக்கணும்ண்ட்டு, கூட்டம் போட்டுப் பேசி, ஒரு கெழட்டு நரியத் தலவனாத் தேர்ந்தெடுத்துச்சுக.

மாநாட்ல, நரிக என்னா பேசுதுண்டா, நமக்கு சரியான எர கெடைக்க மாட்டேங்குது. எப்பயும் எர கெடைக்கணும், கெடைக்கிற எர போதுமானதா இருக்க மாட்டேங்குது. கெடைக்கிற எரைகள்ல நண்டு நருக்ண்ட பண்டம். எலி, வாய்க்குப் பத்தல. பெரிய எர கெடைக்கணும். நம்ம ஒண்ணா இருந்து திங்கணும்ண்டு, நரிக தீர்மானம் போட்டுப் பேசுதுக.

பேசயில, தலைவன் நரி, இத ஒத்துக்கிட்டு, பெரிய எரயப் புடிக்கிறதுக்குத் திட்டம் போட்டுச்சுக. பெரிய எர எதுண்டு பாக்கயில, ஆனண்டு ஒரு நரி சொல்லுச்சு. எல்லா நரிகளும் ஆனயப் புடிக்கணும் – ஆனயப் புடிக்கணும்ண்டு சத்தம் போட்டுச்சுக. ஆனயப் புடிக்கிறதுக்கு என்னா வழிண்டு பாத்துச்சுக. அதுல ஒரு நரி, ஆனயக் கண்ணணி வச்சுப் புடிக்கணும்ண்டு, ஒரு நரி சொல்லுச்சு. சொல்லவும், இந்த ஒசனய ஏத்துக்கிட்டு, எல்லா நரிகளும், ஆனயப் புடிக்கப் போறோம்ண்ட்ற சந்தோசத்ல ஆரவாரஞ் செஞ்சு, ஆட்டம் போடுதுக. இத, ஒரு ஆன மறஞ்சு கேட்டுக்கிட்டிருந்திச்சு.

மறுநா, எல்லா நரிகளும் ஒண்ணு கூடி, ஆனக்கிக் கண்ணணி வக்யப் போகுதுக, ஆனச் சருத்ல, கண்ணணியக் கட்டி வச்சுட்டுப் போயி, பொதருக்குள்ள ஒளிஞ்சு, ஆன எப்ப வரும்ண்டு ஒக்காந்திருக்குக. மொதநா, நரிக பேச்சக்

கேட்டுக்கிட்டிருந்த ஆன, அந்தச் சருத்து வழியா வருது. வந்து, கண்ணியப் பாத்திட்டு, இது நரிக செஞ்ச வேலீதாண்டு நெனச்சு கண்ணில ஒரு கால ஒட்டிக்கிட்டு, கண்ணில பட்டுக்கிட்டது போலப் படுத்துக்கிருச்சு. படுத்துக்கிறவும், கண்ணில, ஆன சிக்கிக்கிருச்சுண்டு நெனச்சு, பொதருக்குள்ள படுத்துக் கெடந்த நரிக ஒடுதுக. போயிப் பாக்கயில, ஆன படுத்துக் கெடக்குது. எல்லா நரிகளும் ஆனயத் திங்கணும்ண்டு ஆசயில ஓடி வருதுக.

கூட்டத்ல ஒரு கெழட்டு நரியும் வருது. அந்த நரி, மொத நாத்து ஒரு குட்டி போட்டிருக்கு. அந்தக் குட்டிக்கு, ராசாண்டு பேரு வச்சிருக்கு. அந்தக் கெழட்டு நரி, மத்த நரிககிட்ட, ஏ.. மகீ ராசா பெறந்த பெறகு, நம்ம ஒத்துமயா இருக்கோம். மாநாடு போட்டிருக்கோம். பெரிய பெரிய சீவாத்திக எரையாக் கெடைக்குதுக. எம்மகீ பெறந்த நேரம். நல்ல யோகம் அடிக்குதுண்டு பெருமயாச் சொல்லிக்கிட்டு, ஆனயத் திங்க, மத்த நரிக கூட ஓடியாருது.

ஓடியாந்து, ஆனயச் சுத்திக்கிட்டு வருதுக. பெரிய எரை கெடச்சிருக்குண்டு கெழக்க பாத்துத் தொழுது, ஆனயச் சுத்தி வரிசயா நிண்டு கடிக்குதுக. மொத்தமா நிண்டு கடிக்கயில, ஆன ரேசாப் பெரண்டுச்சு. பெரளவும் ஒரு வருச நரிக, ஆனக்கி அடில சிக்கி, நசுங்கிக் செத்துப் போச்சு. செத்தது போக, கையு போனதும், காலு போனதுமா ஒடுதுக.

தப்பிச்சு ஓடுற நரிகள்ல, அந்தக் கெழட்டு நரியும் ஓடுது. ஒடயில, அது சொல்லுச்சாம், எம்மகீ, ராசா பெறந்த பெறகு தொங்கோட்டமும், தொருக்கு குசுவுமா இருக்குதுண்டு சொல்லிக்கிட்டு ஓடுச்சாம். இந்த நரி மாதிரி, நம்மளும், நல்லது கெடச்சா, நல்லதுங்கறது. கெட்டது கெடச்சா வையுறது. நம்மளப் போலதான அகங்களும்.

20. சாமியும் வேணாம் - ஒண்ணும் வேணாம்

ஒரு காட்டுல — ஒரு நரி இருந்திச்ச. அந்த நரி, அங்க வர்ற ஆட்டுக்கெடாயப் புடுச்சுத் திங்கறது வழக்கம். ஒருநா, ஆட்டுக்காரன் சுதாரிச்சுக்கிட்டார். வக்காலோளி நரி, தெனக்கிம் ஆட்டப் புடுச்சு திண்ணுது. ஒரு நாளைக்காவது, ஆட்டப் புடிக்கயில, நல்லா மாட்டணும்ணடு, வம்மம் வச்சுக்கிட்டிருக்கார்.

ஒருநாத் தேதில, இவ், ஆட்டப் பத்திக்கிட்டுப் போறர். போகயில, இந்த நரி போற வழில பதுங்கி இருக்கிறதப் பாத்துப்பிட்டார். பாத்திட்டு, கம்ப ரெடியா வச்சுக்கிட்டு ஆட்டுக்குள்ளயே நடந்துபோறா். கண்டாரோளி நரி, அவனப் பாக்கல. ஆட்டு மேலயே குறியா இருக்கு. கிட்ட வரவும், பெரிய கெடா மேல தாவிப் புடுச்சுச்சோ இல்லயோ, கம்ப வச்சு மாட்டிட்டார். மாட்டுண்டாலும் செம்மையான மாட்டு, முக்கி மொனங்கிக்கிட்டு நரி ஒடுது. ஒடியாந்து, சக நரிகள கூப்ட்டு, இந்த ஆட்டுக்காரன் என்னய அடிச்சுப்பிட்டார். நம்ம ஒண்ணு சேந்து, அவனப் பழி வாங்கணும்ண்டு கூட்டம் போட்டுப் பேசுதுக. இத, ஒழிஞ்சிருந்து ஆட்டுக்காரன் கேட்டுக்கிட்டார். இப்டியா பேசுறீங்க. இருங்க, ஒங்களண்டு பேசாம இருந்துகிட்டார்.

நம்மளுக்கு நேரஞ் சரியில்ல. காட்டுல இருக்ற காளியம்மாளக் கும்பிடணும். கும்பிட்டா, அந்தக் காளி, அந்த ஆட்டுக்காரனுக்கு கண்ணுத் தெரியாம செய்யும். நம்ம, தெனக்கிம் ஒரு ஆட்டப் புடுச்சுத் திங்கலாம்ண்டு, மொதல்ல அடிவாங்கின நரி சொல்லுச்சு. மத்த நரிங்களாம் அதுக்கு ஆமா சாமி போட்டுச்சுக.

நரிங்க சந்தைக்குப் போகுதுங்க. கடல, பொறி, அவுலு, பழம் தேங்காயெல்லாம் வாங்கிக்கிட்டு வந்து, வச்சிட்டு ஒரு கெடையில போயி, பெரிய கெடா ஒண்ணப் புடுச்சுட்டு வந்து கெட்டி வச்சிருக்குக.

அப்ப: இந்த ஆட்டுக்காரன் என்னா செஞ்சார்ண்டா, மேலுகாலெல்லாம் சந்தனத்தைப் பூசி, செந்துருக்கத்த நெத்தில வச்சு, அம்மங்காப்புக் கொளைய (வேப்ப இலை) மேலுல கட்டி, கட்டக் கம்பு ஒண்ணக் கையில புடுச்சு, கோயிலுக்குள்ள போயி, காளீஸ்வரி மாதிரி ஒக்காந்துகிட்டார்

இத, ஒரு கெழட்டு நரி பாத்துக்கிட்டே இருக்கு. அதுனால, அந்தக் கெழட்டு நரி கூட்டத்துக்குள்ள போகாம, கூட்டத்த விட்டு ஒதுங்கியே இருக்கு.

ரெம்பத் தடபுடலா நரிங்க வந்து, அடுப்பக் கூட்டி சோறக் காச்சுதுக. தண்ணி எடுத்துட்டு வாரது – தண்ணி எடுத்திட்டு வருது. அரிசி அரிக்கிறது ஒரு பக்கம் அரிசி அரிக்குது. தீ எறிக்கிறது – தீ எறிக்குது. பொங்கல் வைக்கிறது – பொங்க வைக்குது. ரெண்டு நரி கொடயப் புடுச்சுட்டு வந்து ரெடியா நிக்குதுக. இதெல்லாம் பாத்துக்கிட்டு, வாங்கடி இண்ணக்கி ஒங்களப் பேசிக்கிறேண்ட்டு, கம்ப வச்ச வாக்குல ஒக்காந்திருக்கா.

பொங்கப் பொங்கவும், கெடாய வெட்டி, உறிச்சு, கரியச் சுட்டுச் சாமிக்குப் படைக்குதுக. பொங்கலுஞ், சுட்ட கரியும் நல்லாத் திண்டா. வகுறு நெறயவும், லேசாத் தலைய ஆட்னா. ஆட்டவும், சாமிக்கு வகுறு நெறஞ்சிருச்சுடா, வாங்கடா! போயி – நம்ம சாப்புடலாம்ண்ட்டு கோயிலுக்குள்ள பந்தி போடுதுக. வெளிய இருக்கிற கெழட்டு நரி, போங்கடி நல்லா சாத்தப் போறாண்டிண்டு சொல்லுது. பந்தி வேகத்துல, அது பேச்ச, எந்த நரியுங் கேட்டுக்கல.

உள்ள பந்தி நடக்குது. விரு விருப்பா எல்லா நரிங்களும் சாப்பிடுதுக. லேசா வெளிய வந்து, கோயில் கதவ சாத்திட்டு, போட்டானாம் அடி. சும்மா! காளு – காளுண்டு கத்திக்கிட்டு அங்ஙிட்டும் இங்ஙிட்டும் ஓடுது. பெறகும், இவ் அடிய நிறுத்தல, அடி பொறுக்க மாட்டாம, சும்மா, கழிஞ்சு குமுச்சிறுச்சுக.

அப்ப: வெளிய நிக்கிற கெழட்டு நரி, 'சொல்லுறவ் சொன்னாக் கேப்பிங்க! நாஞ் சொன்னாக் கேப்பீங்களா? இப்ப பெறுங்கடி – பெறுங்கண்ட்டு ஓடிப் போச்சாம். காலு போனதும் கையி போனதுமா, முக்கிக்கிட்டும் – மொனங்கிக்கிட்டும் – இழுத்துக்கிட்டும் – பரிச்சுக்கிட்டும் ஓடுச்சுங்களாம். நல்லாச் சாமி கும்புட்டோம்டா! சாமியும் வேணாம். ஒண்ணும் வேணாம்ண்டு சொல்லிட்டு, ஆளுக்கொரு பக்கமா ஒடிச்சுங்களாம்.

21. சொன்னவன் பழி குடுப்பான்

ஒரு ஓழவன், மலயோரத்ல உழுதுகிட்டிருந்தா். அப்ப: அங்கிட்டிருந்து ஒரு நரி வந்திச்சு. வந்து; அவங்கிட்டப் போயி, என்னாண்ணே வெதக்கிறேண்டு நரி கேட்டுச்சு. தண்ணியுமில்லாம — கஞ்சியுமில்லாம உழுதுகிட்டிருக்கவனுக்கு எவ்வளவு கோவம் வராது. கேக்கவும் —, கருவாடுங் கத்திரிக்காயும் வெதக்கிறேண்டு சொன்னா். அப்டியாண்ணே! அப்ப: வலது மாட்டக் கழத்தி விடு. நா—ங் கொஞ்ச நேரம் மேக்கால இழுக்றேண்டு சொல்லுச்சு. சொல்லவும், சரிண்ட்டு; வலத்து மாட்டக் கழத்தி விட்டுட்டு, நரிய வலத்ல மாட்டி உழுதா். கலப்பய நரி இழுக்க முடியாம முக்குது. முக்கவும், தாருக்கம்ப வச்சு, நாலு மாட்டு மாட்னா். மாட்டவும் பல்லு ஒடஞ்சு, ரத்தம் ஒழுகுது. முக்கிக்கிட்டு — மொனங்கிக்கிட்டுப் போயி: ஒரு செடியடில படுத்துக் கெடக்கு.

படுத்துக் கெடக்கயில, அங்கிட்டிருந்து ஒரு நரி; என்னாண்ணே! வெத்தல — கித்தல பெருசா இருக்கே; என்னா விசேசம்ண்டு கேட்டுச்சு.

கேக்கவும், இந்த நரி! அதாண்ணே! அங்க ஒரு அண்ணே, கத்திரிக்காயும், கருவாடும் வெதக்கிறாரு. அவருகிட்டப் போயி; என்னா வெதக்கிறண்டு கேட்டே. கருவாடு வெதக்கிறேண்டு சொன்னாரு. அப்ப: வலத்து மாட்டக் கழத்திவிடு, அதுக்குப் பதிலா நா் இழுக்குறேண்டு சொன்னே. கொஞ்ச நேரம் இழுத்தே. கருவாடு குடுத்தாரு. திண்டே! ஒரு பாக்கு வெத்தல குடுத்தாரு, செவக்கச் — செவக்கப் போட்டுக்கிட்டு வந்து படுத்திருக்கேண்டு சொல்லுச்சு.

சொல்லவும், நானும் போறேண்ட்டு, புதுசா வந்த நரி போகுது. போயி: என்னாண்ணே வெதக்கிறண்டு கேட்டுச்சு. கேக்கவும், நம்ம என்னா பாடுபட்டு உழுதுகிட்டிருக்கோம். வக்காளி நரிக்கு மப்பப் பார்ராண்டு மனசில வச்சுக்கிட்டு, கருவாடும் கத்திரிக்காயும் வெதக்கிறேண்டு சொன்னர்.

சொல்லவும், எடத்து மாட்டக் கழத்திவிடு, நா-ங் கொஞ்ச நேரங் கலப்பய இழுக்குறேண்டு சொல்லுச்சு. கழத்தி விட்டர், நரியப் பூட்னர். கலப்பய இழுத்துக்கிட்டே கருவாடத் தேடுது. ஒண்ணு கூடத் தட்டுப்படல. இருந்தாத்தான தட்டுப்படும். ரெண்டு சுத்துத் சுத்திச்சு. மூணாவது சுத்து, சுத்த முடியல. முக்குது. முக்கவும், கழத்தி விட்டு நாலு போடு போட்டர். போடவும், மொனங்கிக்கிட்டுப் போச்சு. போகயில, மொதல்ல அடிவாங்கின நரி, படுத்துக்கிட்டு; என்னாண்ணே, கருவாடு, வெத்தல எப்டிண்டு கேட்டுச்சு.

கேக்கவும், பரவாயில்லண்ட்டு, எனக்கென்னா! சொன்னவ் பழி குடுப்பர். எனக்கென்னா! சொன்னவ் பழி குடுப்பாண்டு சொல்லிக்கிட்டே காட்டுக்குள்ள ஓடிப் போச்சாம்.

VI. குல மரபுக் கதைகள்

1. கவண்டமாரும் மாட்டுக் கறியும்

அம்மா தாயி!! ஒக்கலிகர் கோரம்பாயில ஒக்கார மாட்டாக. புங்க மரத்து வெறகயும் எரிக்க மாட்டாக. அது எதுக்கு? எதுக்குண்டா.

அந்தக் காலத்ல, வடநாட்ல, கவண்டமாரு, வீட்ல சம்பந்தம் பண்ணணும்ண்டு, ராவுத்தமாரு கெழ பேசுனாங்க. கவண்டமாரு பெண்ண, துலுக்கன் பாத்தா. விடுவானா? எப்டியாச்சும் கவண்டமாரு சாதில, பொண்ணக் கல்யாணம் முடிச்சிரணும்ண்டு நெனவா இருக்கா.

அப்ப, ராவுத்த துலுக்கன், இந்த நாட்ட ஆண்டு கிட்டிருக்கான். அவ் ஆருண்டு தெரியாம, பொண்ணக் குடுக்கலாமாண்டு கவண்டமாரு நெனச்சுக்கிட்டிருக்காங்க.

இருக்கயில, அந்தத் துலுக்கன் கவண்டமாரச் சமமா ஒக்கார வச்சு, நம்ம கூடப் போசனம் செய்ய வக்யணும்ண்டு இவங்கள, அரமணக்கி சாப்டக் கூப்ட்டா, சரிண்ட்டு, இவங்களும் போனாங்க. சமபந்தி போசனம் நடக்குது. சாதங்களப் பரிமாறுறதுக்கு ரெடியா இருக்காங்க. கவண்டமாரு, வந்தவங்க — வந்தவங்க வந்து ஒக்காந்துகிட்டாங்க. கடசில வந்த பொம்பள, பிள்ளய வேற எடத்ல தொட்டிகெட்டிப் போட்டுட்டு வந்திச்சு. வந்து பாக்கயில, ஒக்கார எடம்ல்ல.

எடமில்லாம இருக்கவும், அவங்க ஒக்காந்திருந்த எடத்ல, ஒரு மூலையில, ஒரு பஞ்சாரம் கமத்தி வச்சிருந்தாங்க. அப்ப: எல்லாரும், அந்தப் பஞ்சாரத்த எடுத்து அங்கிட்டு வச்சிட்டு, அங்ஙன ஒக்காருண்டு சொன்னாக.

சொல்லவும், சரிண்ட்டு, அந்தப் பஞ்சாரத்த எடுத்தா. எடுக்கவும், அதுக்குள்ள இருந்த மாட்டுத் தலய, கவண்டமாரு

பாத்திட்டாங்க. பாத்திட்டு, ஒருவர ஒருவர் தொடயக் கிள்ளி, சாப்டாம எந்திருச்சு வெளிய கெழம்பிட்டாங்க. வெளிய கெழம்பிப் போகயில, இந்த ராவுத்தமாரு பாக்கல. வந்த மத்தவங்களுக்குப் பந்தி போட்டுக்கிட்டிருக்காங்க.

ரெம்ப நேரங்கழிச்சு, சாப்ட வந்த, கவண்டமாரக் காணம்ண்டு தேடி வரயில, இவங்க துங்கபத்ரா நதிய அடுத்து வந்திட்டாங்க.

அப்ப, துங்கபத்ரா ஆத்ல, அந்தக் கரைக்கும் இந்தக் கரைக்கும் ஆளுக கடக்க முடியாம வெள்ளம் போகுது. என்னா செய்யுறதுண்டு முளிக்கிறாக. அப்ப, கடவுள வேண்டுறாங்க. எப்டிண்டா? "நாங்க வாக்குத் தவறாத கவண்டமாரா இருந்தால், எங்க வாக்குக்குக் கட்டுப்பட்டு, இந்தப் புங்க மரமும், இந்தக் கோரைகளும் வளஞ்சு அக்கரயத் தொடணும்ண்டு வேண்டுறாங்க". வேண்டவும், இந்தக் கரயில இருந்த புங்க மரமும், கோரையும் வளஞ்சு, அக்கரயத் தொட்டுச்சு. தொடவும், இந்தக் கவண்டமாரு ஆளுக ஒருத்தொருத்தரா புங்க மரத்து மேல ஏறி, அக்கரக்கிப் போயிட்டாக. அதுக்குப் பெறகு, சாப்ட வந்த கவண்டமாரு ஆளுக போயிட்டாகண்டு சொல்லவும், குதுரயப் போட்டுக்கிட்டு வெரட்டி வாரார். வந்து பாக்கயில, எல்லாரும் கடந்திட்டாக. துலுக்கனுக்கு எடங் குடுக்காம, புங்க மரமும் கோரயும் எந்திருச்சு நிண்டுகிருச்சு. துலுக்கனால, தண்ணியக் கடந்து போயி, அவகளப் பிடிக்க முடியல, துலுக்க ராவுத்தரு திரும்பிட்டாக.

இவங்க, அந்தக் கரயில போயிப் பாக்கயில, தொட்டில போட்டுட்டு வந்தாகளே, அந்தப் பிள்ளய அங்க விட்டுட்டு வந்திட்டோம்ண்டு ஊசுச்சாங்க. பிள்ளய அன்னிய தேசத்ல விட்டுட்டுப் போக மனசில்ல. எப்டியாச்சும் பிள்ளய வாங்கிரணும்ண்டு பேசிக்கிட்டிருக்கயில, ஒரு களக்கூத்தாடி, அங்கிட்டிருந்து, ராவுத்தமாரு தேசத்துக்குப் போறா.

அப்ப, இந்தக் கவண்டமாரு, அந்தக் களக்கூத்தாடிகிட்ட, துலுக்க தேசத்ல எங்க பிள்ளய விட்டுட்டு வந்திட்டோம். அந்தப் பிள்ளய வாங்கிட்டு வந்து, எங்ககிட்டக் குடுத்திட்டா. நிய்யி வர்றபோது, கட்ன வீட்டுக்குப் பத்துப்பணம் தரோம்ண்டு சொன்னாங்க. சொல்லவும், சரிண்டு, துலுக்க தேசத்துக்குப் போறா்.

அந்த நாட்ல போயி, அவக மெச்சுர மாதிரி ஆடிப் பாடினா். ஆடவும் அந்த நாட்டுத் துலுக்க ராசா, இந்தக் களக்கூத்தாடிக்கு அன்பளிப்புச் செய்ய வாராக.

அப்ப, இந்தக் களக்கூத்தாடி, ஐயா! ஓங்க புண்யத்ல, எனக்கு பொன்னும் பொருளும் இருக்கு. ஆசப்பட்டு வளக்க எனக்கு ஒரு பொம்பளப் பிள்ள வேணும். இருந்தா, குடுங்கண்டு கேட்டா். கேக்கவும், ஒருத்தரு மொகத்த ஒருத்தரு பாத்திட்டு, அண்ணக்கிச் சாப்ட வந்த கவண்டமாரு, ஒரு தொட்டிப் பிள்ளய விட்டுட்டு ஓடிபோனாகள்ல். அடுத்த சாதிப் பிள்ள நம்மளுக்கெதுக்கு. அத, இந்தக் களக்கூத்தாடிகிட்ட குடுத்து விடுங்கடாண்டு சொல்லிட்டா். சொல்லவும், அந்தப் பிள்ளயத் தூக்கி, இவங்ககிட்ட குடுத்து விட்டுட்டாங்க. அந்தக் களக்கூத்தாடி கொண்டுகிட்டு வந்து, இந்தக் கவண்டமாருகிட்டக் குடுத்திட்டா், குடுக்கவும் வாங்கிக்கிட்டு, அவனுக்கு சேர வேண்டிய பணத்தக் குடுத்திட்டாங்க.

அண்ணக்கிருந்து, இந்தக் கவண்டமாரு சாதி, எங்க இருந்தாலும், அங்க இந்தக் களக்கூத்தாடி போவா். வீடு தவறாமப் பத்துப் பணத்த இண்ணக்கிம் குடுத்துக்கிட்டு வாராக.

இவங்களக் காப்பாத்ன, புங்க மரத்தயும் கோரயயும் மருவாதி செய்யணும்ண்ட்டு, எங்க கவண்டமாரு, புங்க மரத்து வெறக எறிக்கவும் மாட்டாக. கோரம்பாயில ஒக்காரவும் மாட்டாக. இப்ப இப்ப, கொஞ்சப் பேரு, அதுகள்ல ஒக்காந்துக்கிறாங்க. இது தெரிஞ்சவக ஒக்கார மாட்டாக. தெரியாதவக ஒக்காந்துக்கிராக. என்னா செய்றது? காலம் மாறிப் போச்சு.

2. நிண்டமாடு - விழுந்தமாடு

ஒரு அண்ணனுந் – தம்பியும், மாடு மேய்க்க மலக்கிப் போனாங்களாம். அப்ப: மாடுகள இருப்பிருந்து மேய்க்கிற காலம். மழகாலம்ண்டா, மாடு மலயிலதா் இருக்கும். வீட்டுக்கு வராது. அண்ணந் – தம்பி ரெண்டுவேரும், மாடு மேய்க்கப் போயிருக்கயில, மழ புடுச்சுக்கிருச்சு. கஞ்சி காச்சக் குறுண மாவு இல்ல. மலயில, பட்னியா இருக்க முடியுமா? முடியாது. அப்ப: அண்ணன், குறுண மாவு எடுத்திட்டுப் போக, வீட்டுக்கு வந்திட்டா்.

வீட்டுக்கு வந்து, குறுண – மாவு எடுத்துக்கிட்டு, திரும்பி, காட்டுக்குப் போகயில, பயங்கர மழ பேஞ்சதுமில்லாம, மலையோரத்துக் காட்டாறுகள்ல வெள்ளம் பெறண்டோடுது. இவனால, மாடுக இருப்பு இருக்ற எடத்துக்குப் போக முடியல.

அண்ணன், வராம இருக்கவும், தம்பி, எத்தன நாளக்கிப் பட்னியா கெடப்பா்? பசி பொறுக்க மாட்டாம, பசுக்கூட்டத்ல இருந்த சின்னக் கண்டுகுட்டிய அடுச்சு, கறியாக்கி, வேக வச்சு திண்டுகிட்டிருக்கா்.

திண்டுகிட்டிருக்கயில, ஆத்ல தண்ணி வத்தி, வரண்டு மூணுநா களிச்சு, அண்ணன் வந்தா். மாடுகளப் பாத்துக்கிட்டே, இருப்பு இருக்ற பாறக்கி வந்தா்.

வந்து பாக்கயில, அந்த எடம் ஒரு மாதிரியா சிணுக்கு வீசிக் கெடக்கு. இய்யி மொக்கிது. எனமோ, நடந்திருக்ண்டு இருக்கயில, தம்பி, மாடுகளப் பத்திக்கிட்டு வந்தா். வரவும்,

என்னடா தம்பி? எதும் வேட்ட — கிட்ட கெடச்சுச்சாண்டு கேட்டர்.

கேக்கவும், இல்லண்ணே! நீ வரல. என்னால பசி பொறுக்க முடியல. நம்ம பசுமாட்ல திருஞ்ச, கண்டுகுட்டிகள்ல, ஒரு கண்டுகுட்டிய, அடுச்சுச் சாப்ட்டேண்டு சொன்னர்.

தம்பி!! நிய்யி செஞ்சிருக்கது, வழக்கத்துக்கு மாறாச் செஞ்சிருக்க. இத என்னால ஒத்துக்கொள்ள முடியாது. இண்ணைக்கே பங்கு பாகத்தப் பிரிச்சுக்கிட்டு, வேற போயிருவோம்ண்டு, அண்ணன் சொன்னர்.

அண்ணன எதுத்துப் பேச முடியாம, சரிண்டு சொல்லிட்டர். மாடுகளப் பகுறுறதுக்கு ஒரு திட்டத்த அண்ணஞ் சொன்னர். சொல்லவும், அண்ணே! நீ என்னா செஞ்சாலும் சரித்தேண்டு, தம்பி சொல்றர். ஏண்டா, குத்தஞ் செஞ்ச மனசு, அண்ணனப் பாத்துக்கிட்டு ஒக்காந்திருக்கர்.

அப்ப அண்ண், தம்பி! ஒனக்கு நிண்ட மாடு வேணுமா? விழுந்த மாடு வேணுமாண்டு? கேட்டர். அப்ப, மாடுகெல்லாம் படுத்து, அசக்குப் போட்டுக்கிட்டிருக்குக.

நல்லாப் பாத்தர். பாத்திட்டு, எனக்கு விழுந்த மாடு வேணும்ண்டு தம்பி சொல்லிட்டர். சொல்லிறவும், அண்ணங்காரங் கையில இருந்த சிங்குழல எடுத்து, ஊதிக்கிட்டு வெளியேறுனர். வெளியேறவும், மாடுகள்லலாம் எந்திருச்சு, அவ் பின்னால போயிருச்சுக. ஒண்ணு ரெண்டு, கெழட்டு மாடுக, எந்திரிக்க முடியாமக் கெடக்குக. அண்ணன், திரும்பிப் பாக்காமப் போயிட்டர். இவ, விழுந்த மாடுகளப் பாத்துக்கிட்டிருக்கர்.

பாத்துக்கிட்டிருக்கயில, அதுல ரெண்டொரு மாடு செத்துப் போச்சு. செத்த மாட்ட வெட்டிப் பெறக்கி, ரெண்டுநா, திண்டுகிட்டிருந்திட்டு, பெறகு, செத்த மாடுகளத் தேடிப் போயிட்டர். எங்ஙன மாடுக செத்தாலும், இவனுக்குச் சொல்லி விட்டுருவாங்க. இவ் போயி, அத எடுத்து, எடுக்குறத எடுத்துக்கிட்டு, போடுறதப் போட்டுருவர்.

அதுக்காம் பெறகு, அண்ணனத் தேடி அலஞ்சர். அண்ணங்கிட்ட மன்னிப்புக் கேக்கணும்ண்டு அலஞ்சர். அவ் கெடப்பானா? தெச போக்காப் போயிட்டர்.

அதுக்காம் பெறகு, விழுந்த மாடுகள வச்சுத் திண்டவ் சக்கிலியண்டும், நிண்ட மாடுகள கூட்டிட்டுப் போன அண்ணன், கம்பளத்து நாய்க்கமாருண்டும் ஆயிப் போனாங்களாம்.

இண்ணக்கி ரெண்டு சாதிக்காரங்களும்

அண்ணந் – தம்பிண்டு சொல்லிக்கிறாங்க.

3. வாய்க்கரிசி

முன்னொரு காலத்ல, பறையங்களுக்கும் ஆசாரிகளுக்கும் சண்ட, இவங்க ரெண்டுவேரும் அவங்களுக்குள்ள சண்டய, வெளிய காட்டிக்கிறதில்ல. பகய மறந்திட்டதா பாவன காட்டி, எல்லாப் பறையங்களயும் விருந்துக்கு கூப்டாங்க. ஆரு? ஆசாரியாளுக, கஞ்சிண்டவும், முன்னால இருந்த பகய மறந்திட்டு விருந்துக்கு போறாங்க. போகயில, ஆசாரிக என்னா செஞ்சாங்க, வெச வச்சு கல்பந்தலப் போட்டாங்க. போட்டு, பந்தல்லதா் சாப்பாடு – தண்ணியெல்லாம் வச்சாங்க. இவங்க பரமாத்தமா போறாங்க. ஆசாரிக வெசனமா இருக்காங்க. சாப்பாடு நடக்குது.

பறையங்க, பகய மறந்து, நம்மளுக்கு விருந்து வக்கிறாங்கண்ட்டு, பகய மறந்து சாப்ட்டுட்டிருக்காங்க. அவங்க மனசுல இருக்கது, இவங்களுக்கென்னா தெரியப் போகுது.

வண்ணான் விரிச்ச மாத்துல ஒக்காந்து சாப்டுறாங்க. அப்ப, ஒரு ஆசாரிப் பய, வெசைக்கயித்தப் புடுச்சு இழுத்தா். இழுக்கவும், கல்பந்த விழுந்திருச்சு. விழுந்து, உள்ள ஒக்காந்திருந்த பறையங்களப் பூராம் அழுக்கிக் கொண்டுபிடுச்சு.

அப்ப. அந்தக் கூட்டத்ல, ஒரு பய மட்டும் தப்பிச்சு, அங்கிட்டிருந்த வண்ணாம் பொதிக்குள்ள போயிட்டா். வண்ணானும், பந்தி விரிக்கக் கொண்டு வந்திருந்த, மூட்டைக்குள்ள வச்சுக்கட்டி, கொண்டு போயி வளக்குறா்.

வளத்து வரயில, இந்த ஆசாரிக பறப்பூண்டு இல்லாம அழிச்சுப்பிட்டொம்ண்டு, அகங்காரமா இருக்காங்க. தப்பிச்சுப் போன பய, வண்ணான் வீட்ல, வாலிபமா வளந்திட்டா். இது ஆசாரிகளுக்குத் தெரியாது. இனி, இந்தக் குடியானப பயக.

பறத்தொழிலுக்கு, ஆரக் கூப்டுவாங்கண்டு பாப்போம்ண்டு இருக்காங்க.

இருக்கயில, ஒருநா, பயங்கரமாக மழ பேஞ்சு, கொளத்ல தண்ணி நெறஞ்சு போச்சு. நெறஞ்சு போயி, ஒடையிற அளவுல இருக்கு. இருக்கயில, பெறகும், விடாம மழ பேஞ்சுக்கிட்டிருக்கு. கொளம் ஒடயாமச் செஞ்சாத்தா், குடியானவங்க வயல்ல – வரப்பல இருக்கற வெள்ளாம தப்பும், இல்லண்டா தப்பாது.

அப்ப: கொளத்ல தண்ணி நெரம்பி வழியுது. ஆசாரிக கொண்டாட்டம் போடுறாங்க. இந்த வெட்டம் அழிஞ்சாத்தா் – இந்தக் குடியானப் பயக, நம்மகிட்ட வருவாங்கண்டு, கம்மாளப் பயக நெனச்சுக்கிட்டிருக்காங்க.

இதுக்கு முன்னால, கொளம் நெறஞ்சு வழியிற போது, "கொளத்துக் கர மேலே நிண்டு, பறையரு பறையடிச்சா, தழும்பி வழியிற தண்ணிகூட, கொளத்துக்குள்ள ஒடுங்கி நிண்டுருமாம். அப்டி இருக்கயில, இந்த ஆசாரிப் பயக, பறையரு இல்லாததனால, கண்டிப்பா கொளம் ஒடயும், வெள்ளாம அழியும், குடியானப் பயக கொட்டம் அடங்கும்ண்டு நெனச்சுக்கிட்டிருக்காங்க.

குடியானவங்களா ஒண்ணு சேந்து, இதுக்கு என்னா பண்றதுண்டு, ஒசன பண்ணிக்கிட்டிருக்காங்க. அப்ப, வண்ணான் ஓடியாந்தா். ஏ...ண்டா! குடியானவங்க நட்டப்பட்டா, இவனுக்கும் பங்கில்ல. அதுனால ஓடியாந்தா். வந்து, பறப்பிள்ள தப்பிச்சு, ஏ- வீட்ல வளருதுண்டு சொன்னா். சொல்லவும், கூட்டிட்டு வரச் சொல்லி, கொளத்துக் கரையில நிண்டு பறையடிக்கச் சொன்னாங்க. அவனும், கரமேல நிண்டு பறையடிச்சா். பறையடிக்கவும், நெறஞ்சு வழுஞ்சுகிட்டிருந்த தண்ணி, மந்திரக்காரனுக்கு கட்டுப்பட்ட பாம்பாட்டம் ஒடுங்கிக் கொறஞ்சிருச்சு.

பறையோச கேக்கவும், ஆசாரிக பறப்புள்ள, எப்டி தப்பிச்சுச்சுண்ட்டு, அதயும் கருவறுக்கணும்ண்டு வாராங்க. குடியானவங்க இதப்பாத்தாங்க. நம்மளக் காப்பாத்ன, இந்தப் புள்ளய காப்பாத்தணும்ண்ட்டு, "இவ் பறப்புள்ள இல்ல, எங்கபுள்ளதாண்டு சொல்றாங்க".

சொல்லவும், ஆசாரிக நம்ப மாட்டேங்குறாங்க. எப்டிச் சொன்னாலும் நம்ப மாட்டேங்குறாங்க. அப்ப: ஆசாரிப்பயக, "இவ் எங்க புள்ளண்டு சொல்றீங்கள்ல, உம்மயிலேயே ஒங்க புள்ளண்டா, ஒரே எலையில ரெண்டுபேரும் சேந்து சாப்பிடுங்க" பாக்கலாம்ண்டு சொன்னாங்க. சொல்லவும், குடியானவங்க தயங்குறாங்க.

தயங்கவும், அதுல ஒருத்த், சாப்டுறோம்ண்டு சொன்னா். அப்ப: ஒரு எலைல சோத்தப் போட்டு, பெனஞ்சுகிட்டே, ஓசன பண்றா். ஓசன பண்ணிக்கிட்டே, ரெண்டுவேரும் சாப்டுற சாப்பாட்டப் பிரிக்கிறாங்க. எப்டிண்டா, எல நடுவுல வெரலால, ஆசாரிகளுக்குத் தெரியாம ஒரு கோடு போட்டா்.

கோடு கிழிச்சுட்டு, கோட்டுக்கு அங்கிட்டிருக்கிறத அவஞ் சாப்டுறா், கோட்டுக்கு இங்கிட்டிருக்றத இவஞ் சாப்டுறா். இத, இந்தக் கம்மாளப் பயக பாக்கல. ஒரே எலையில சாப்டவும், சரி, இவனுங் குடியானப்பயதே போலண்ட்டு, போயிட்டாங்க.

அப்ப: எலயில, அவங்க போட்ட கோடுதா், இப்படி நரம்பா இருக்கு. அதுக்கு முன்னால, எலயில, இப்டி நரம்பு கெடையாது.

அண்ணைக்கிருந்துதா், குடியானவங்களுக்கும், பறையருக்கும் தொடர்பேறபட்டது. அதுல இருந்துதா், குடியானவங்க செத்தா, பறையருங்க, வாய்க்கரிசி வாங்குற வழக்கம் வந்திச்சு

4. நயன பாசை

ஒரு நாட்ட, ஒரு அரசன் ஆண்டு வந்தர். நாட்ட எல்லாம் பரிபாலனஞ் செஞ்சு வரயில, மக்க, அவங்கிட்ட அனுமானமா இருக்காங்க. இருக்கயில, இந்த ராசாவுக்கு ஒரு ஆச. என்னா ஆசண்டா, இந்த நாட்ல இருக்ற ஜீவராசிக, பேசுறதத் தெரியணும்ண்டு ஆசப்பட்டுக்கிட்டிருக்கா். ஆசப்பட்டு, நேரா கடவுளுகிட்டப் போயி, தவமிருந்து வரங் கேக்கணும்ண்டு வனத்துக்குப் போறா். வனத்ல போயி தவமிருக்கா். இருக்கயில, கடவுளும் தோற்றமாகி, என்னா வரம் வேணும்ண்டு, தவம் இருக்றண்டு கேட்டாரு. கேக்கவும், எனக்கு இந்த ஜீவராசிக பேசுற பாசய, நாந் தெரிஞ்சுக்ற வரம் வேணும்ண்டு சொன்னா். நீ கேக்ற வரத்த நாந் தர்ரே். ஆனா, நிய்யி ஆருகிட்டயும் சொல்லக் கூடாதுண்டு சொன்னாரு. அப்டிச் சொன்னயிண்டா ஒ...ந்தல வெடிச்சுச் செதறிப் போகும்ண்டு கடவுளுசொல்றாரு. சொல்லவும், நா் ஆருகிட்டயும் சொல்ல மாட்டேண்டு ராசா சொல்லிட்டாரு. சரி! அப்ப போ! இண்ணக்கிருந்து ஒனக்கு ஜீவராசிக பேசுற, நயன பாச தெரியும்ண்டு சொல்லிட்டாரு.

அரமணக்கி வாரா். வந்து, ராணி கூட அரமணத் தோட்டத்ல நிண்டு பேசிக்கிட்டிருக்கா். பேசிக்கிட்டிருக்கயில, ரெண்டு கட்டெறும்பு, ஆணும் – பெண்ணும் ஒண்ணுக்குப் பின்னால ஒண்ணு வருதுக. வரயில, ராணி எதுக்க நிண்டு சிக்கெடுத்துக்கிட்டிருக்கா. ராசா பக்கத்ல நிண்டு பேசிக்கிட்டிருக்காரு. அப்ப! இந்த ஆணெறும்பு, ராணி கவட்டுக்குள்ள நொளஞ்சு, அந்தப் பக்கங் கடந்து போச்சு. இந்த பொட்டெறும்பு, கவட்டுக்குள்ள போகாம, வெலகிப் போகுது. அப்ப, இந்த ஆணெறும்பு, ஏண்டி! எங்கூட வரயிலயே! என்னய விட்டுட்டு, ஒதுங்கிப் போறயேண்டு சொல்லி அடிக்குது. அடிக்கவும், இந்தப் பொட்டெறும்பு,

"நிய்யிதர், சரியெத்தவ கவட்டுக்குள்ள நொளையுற

நானுமா சரியெத்தவ கவட்டுக்குள்ள நொளையணும்" – ண்டு அழுதுகிட்டுப் பேசுது. பேசவும், இத ராசா கேட்டுட்டாரு.

கேட்டுட்டு, கெக்கெக்கேண்டு சிரிச்சிட்டாரு. சிரிக்கவும், ராணி எந்திரிச்சுப் பாத்தா. ஆருமே இல்ல. ராசா மட்டும் நிக்கிறாரு. நிக்கவும், ஏ...ஞ் சிரிச்சங்கண்டு ராணி கேட்டா. கேக்கக்கூடாத ஒண்ணக் கேட்டே. அதர் சிரிச்சேண்டு சொன்னாரு. சொல்லவும், அதச் சொல்லக் கூடாது. சொன்னா, எந்தல வெடிச்சிரும்ண்டு சொல்றர்.

சொல்லவும், அதெல்லாமில்ல. எனக்குச் சொல்லித்தான் ஆகணும்ண்டு புடிச்சுக்கிட்டா. இவரால சொல்லாம இருக்க முடியாது. சரி சொல்றே. சந்தனக் கட்டைகளக் கொண்டு போயி, மயானத்ல அடுக்கி வச்சிரு. அதுமேல இருந்து சொல்றே. சொல்லவும் எம்மண்ட வெடிச்சுச் செதறிரும். அப்டியே திய்ய வச்சுட்டு வந்திருண்டு சொல்றாரு.

அப்பண்டாலும் இவளுக்குத் தெரிய வேணாம். சொல்லித் தானாகணும்ண்டு ஒத்தக் கால்ல நிக்கிறா. சரிண்டு சந்தனக்கட்ட, குங்குமக் கட்டைக வண்டில போகுது. மயானத்ல ஒரே கூட்டம். ராசா, என்னமோ சொல்வாராம், சொன்னதும் அவரு மண்ட வெடிச்சுப் போகுமாம். அதர் எல்லாரும் மயானத்துக்குப் போறாங்கண்டு, கூட்டங் கூட்டமா ஆளுக வந்து, கூடிக் கெடக்காங்க.

அப்ப! அங்கிட்டு வெள்ளாடு மேச்சுக்கிருந்தவங்களும், அங்கனதான, வெள்ளாடுகள விட்டுட்டு, வேடிக்க பாக்க வந்திட்டாங்க. ஆடுக அப்டியே மேஞ்சு வருதுக.

அப்ப, அந்த மயானத்துக்குப் பக்கத்ல ஒரு மொட்டுக்கெணம அந்தக் கெணத்ல கோவங்கொள மொளச்சு, குளு – குளுண்டு வளந்து கெடக்கு. அப்ப, மொத வந்த வெள்ளாட்டங் கெடா, வேக வேகமாப் புடிங்கித் திண்டுருச்சு. பின்னால நடக்க முடியாம வந்த, நெற செனையாடு, அந்தக் கெடாயப் பாத்து, எனக்கு அந்தக் கொள மேல ஆசயா இருக்கு. அந்தக் கொப்ப எனக்கு வளச்சுக்குடு, நாங் கொஞ்ச திண்டுகிரேண்டு, இந்தப் பின்னால வந்த, செனையாடு சொல்லுச்சு.

அதுக்கு, அந்தக் கெடா, அடி போடி அங்கிட்டு, நா கெணத்துக்குள்ள விழுந்து செத்துப் போனா எந்தாயும் தகப்பன ஆரு பாக்கறது. இந்த மதிகெட்ட ராசா, ஆருகிட்டயும் சொல்லக் கூடாதுண்டு கடவுளு சொன்னத, இவரு இப்ப, பொண்டாட்டிகிட்டச் சொல்லிட்டு, மண்ட வெடிச்சுச் சாகப் போறாரு. அவருண்டு, என்னய நெனச்சயா? புடிங்கித் தர முடியாது, போடிண்டுப் போயிருச்சு.

இந்த வெள்ளாட்டங் கெடா பேசுனத, இந்த ராசா கேட்டுக்கிட்டாரு. கேக்கவும், இந்த வெள்ளாட்டுக்கு இருக்க ஓசன புத்தி கூட நமக்கில்லயேண்ட்டு, அந்த ராணிய, அடிச்சுச் சாக வச்சு, அந்தக் கட்டயில வச்சு, திய்ய வச்சு விட்டுட்டு, வீட்டுக்கு வந்தாராம்.

வந்ததும், ஒரு ஆடர் போட்டாரு, எப்டிண்டா? ராஜியத்ல, ஆருமே வெள்ளாட்டங்கறி திங்கக் கூடாதுண்டு உத்தரவு போட்டுட்டாரு. அதுல இருந்து வந்தவங்கதா, கவண்டமாருல ஒரு கூட்டமான பசிலாரு கூட்டம். அவங்க இப்பயும் வெள்ளாட்டங்கறி சாப்ட மாட்டாங்க.

5. பனை மரம்

ஒரு துலுக்கன் – நாய்க்க மாரு வீட்ல பொண்ணு கேட்டானாம். நாய்க்கமாரு, பொண்ணு தரோம்ண்டு சொல்லிட்டாங்களாம். தாரம்ண்டு சொல்லவும், கலியாண ஏற்பாடு தடபுடலா நடக்குது. இவங்க, அவங்க வீட்டுக்கு போறது, அவங்க, இவங்க வீட்டுக்கு வாரதுமா இருக்காங்க.

அப்ப: நாய்க்கமாரு, மாப்ள பாக்க, துலுக்கன் வீட்டுக்கு வாராங்க. வர்ர அண்ணக்கி; மாப்ள பாக்க வாரவங்களுக்கு, நல்ல கறிச்சாப்பாடு போடணும்ண்டு நெனச்சு, அண்ணக்கி, ஒரு மாட அடுச்சு, கறிபோட்டு, ஏகத் தடபுடல் பண்றா். கறிய மட்டும் எடுத்துக்கிட்டு, தோலு காலுகள வெளிய பெதச்சு வச்சுட்டாங்க. ஏண்டா–, இவங்க மாட்டுக்கறி திங்கமாட்டாங்கள்ல, அதுனால மத்ததுகள பெதச்சு வச்சிட்டு, தலய மட்டுங் கூடத்ல, பஞ்சாரத்தப் போட்டு, கமத்தி வச்சிட்டாங்க. ஒரு பக்கம் சோறு வேகுது, ஒரு பக்கம் கறி வேகுது. கல்யாணச் சந்தோசத்ல, எல்லாரும் குறுக்க – மறுக்கத் திரியிராங்க.

அப்ப: நாய்க்கமாரு வந்தாங்க. வந்து கூடத்ல வருசயா ஒக்காந்தாங்க. அப்ப: பொண்ணோட அம்மா, ஒக்கார எடமில்ல. பஞ்சாரத்த, தள்ளி வச்சிட்டு ஒக்காருண்டு சொல்றாங்க.

சரிண்ட்டு: அந்த எடத்ல ஒக்காரலாம்ண்ட்டு, பஞ்சாரத்த எடுத்தா. உள்ள மாட்டுத்தல இருக்கு. இருக்கவும் –, இவங்க கூடச் சம்பந்தஞ் செஞ்சா, நம்மளயும் மாட்டுக்கறி தின்ன வச்சிருவாண்ட்டு ரகசியமா பேசி; எல்லாரும் வெளியேறி - வெளியேறிப் போறாங்க.

துலுக்கன் வீ ட்டுக்குத் தெரியாம வெளியேறிப் போறாங்க. அவங்க போறது, இவங்களுக்குத் தெரியாது. எங்கயோ; போறாங்கண்ட்டு இவங்க இருக்காங்க. ரொம்ப தூரம் போன பெறகுதா், துலுக்கங்களுக்கு தெரிய வருது.

தெரிய வரவும், குதுரயப் போட்டுக்கிட்டு, துலுக்கன் வெரட்டி வாரார். இவங்களும், வேகவேகமா ஓடுறாங்க. ஓடயில, குறுக்க ஒரு ஆறு. ஆத்ல நெறயா வெள்ளம் வேற போகுது. இப்டியிருக்கயில, துலுக்கன் வெரட்டி வாரார். ஆத்தக் கடந்து இவங்களால ஓட முடியல. துலுக்கனும் கிட்டத்ல வந்திட்டார்.

அப்ப: ஆத்தங்கரயில, ஒரு பனமரம் இருக்கு. இருக்கவும், நாய்க்கமாரு, பனமரத்தப் பாத்து, பனயே! பனயே! நாங்க உம்மயான நாய்க்கமாருண்டா; பனயே! எங்களுக்கு வளஞ்சு குடுத்து, நாங்க தப்பிக்கிறதுக்கு, தொண செய்யணும்ண்டு வேண்டுனாங்க. வேண்டவும், பனமரம் வளஞ்சு அக்கரயத் தொட்டுச்சு. தொடவும், அது வழியா, எல்லாருங் கடந்து அக்கரைக்கு வந்துட்டாங்க.

துலுக்கன், ஆத்துக்கிட்ட வரவும், வளஞ்சிருந்த பனமரம் எந்திருச்சு நிண்டுகிருச்சு. வெரட்டி வந்த துலுக்கன், ஆத்தக் கடக்க மாட்டாம, ஏமாந்து, திரும்பிப் போயிட்டார்.

அண்ணைக்கிருந்து, இண்ணக்கி வரைக்கும் நாய்க்கமாரு கொலத்தக் காப்பாத்துன பனமரத்த, தெய்வமா நெனக்கிறாங்க. பன ஓலையில பின்னுன பாயில ஒக்கார மாட்டாங்க. அந்தப் பாயப் பொழங்கவும் மாட்டாங்க.

இப்ப அது, கொஞ்சங் கொஞ்சமா மறஞ்சு வருது. முன்னாக மாதிரி இல்லை.

6. ஏமாத்து

ஒரு ஊர்ல – பள்ளஞ்சாதில ஒருத்தனும் – பறையஞ்சாதில ஒருத்தனும் சேந்து, வெவசாயஞ் செஞ்சாங்களாம். வெவசாயம் செய்யயில, மொதல்ல ஈராங்கா நட்டாங்களாம். நட்டு, நல்லா வெளஞ்சிருச்சு. ஈராங்கா, எடுக்குற பருவத்துக்கு வந்திருச்சு.

ரெண்டுவேரும், ஈராங்காய, எடுத்துப் பகுறணும்ண்டு நெனக்காம, நெலத்ல இருக்ற போதே பகுறணும்ண்டு நெனச்சாங்க. நெலத்ல இருக்றபோதே பகுறணும்ண்டு நெனச்சு, ரெண்டுவேருமே, சந்தோசமா இருக்காங்க.

பறையன், எப்டியாச்சும், பள்ளன ஏமாத்தணும்ண்டு நெனக்கிறா். பள்ளன், அண்ணன் நமக்கு பகுந்து தருவாண்டு, அவ் பாட்டுல, வேல செஞ்சுகிட்டிருக்கா்.

அப்ப பறையன், பள்ளனக் கூப்ட்டு, தம்பி, ஈராங்கா வெளஞ்சிருக்கு, ஈராங்காய எடுத்திட்டு, அடுத்த வெள்ளாம போடணும். இப்ப நெலத்ல இருக்ற ஈராங்காயில, ஒனக்கு மேல இருக்கது வேணுமா? கீழ இருக்கது வேணுமாண்டு கேட்டா். அப்பாவி பள்ளன், நெலத்துப் பாத்தா். ஈராங்காத்தாளு வெளஞ்சு பூத்துக் கெடக்குது. பூத்துக் கெடக்கவும், நா் வேண்டா, மேல வச்சிக்கிறேண்டு சொல்லிப்பிட்டா்.

பறையன், ஈராங்காய எடுத்துக் குமிக்கிறா். பள்ளன், ஈராங்காயத்தாள அறுத்துக் குமிக்கிறா். அவ், ஈராங்காய நெறய வெலக்கி வித்து, பெரிய பணக்காரனாகிட்டா். இவ், தாள அறுத்து அவுச்சுக் திண்டது போக, அங்கிட்டுக் குப்பயில போட்டானாம்.

அடுத்த மொர, கேப்ப நட்டாங்க. கேப்ப வளந்து வெளஞ்சிருச்சு. பறையன், இப்பக் கூப்பிட்டு, தம்பி, கேப்ப வெளஞ்சிருச்சு. அறுக்கணும், அறுத்திட்டு அடுத்த வெள்ளாம

போடணும், அதனால, இப்ப் ஒனக்கு மேல இருக்கது வேணுமா? கீழ இருக்கது வேணுமாண்டு கேட்டா. இவ், என்னா செஞ்சா. போன தடவ ஏமாந்திட்டோம், இந்தத் தடவ ஏமாறக்கூடாதுண்ட்டு, எனக்கு, கீழ இருக்கது வேணும்ண்டு சொல்லிட்டா.

சொல்லவும், பறையன், கேப்பக் கருத அறுத்துக் குமிக்கிறா. இவ், கேப்பத்தாள அறுத்துக் குமிக்கிறா. தாளு எதுக்காகும்? மாட்டுக்குத்தான ஆகும், இப்ப் அவ் பணத்ல பெரியாளாகிட்டா.

ஆக, இப்பயும் பள்ளன், பறையங்கிட்ட ஏமாந்து போனா. இனிமே, இவங்கூட வெவசாயம் செய்யக் கூடாதுண்டு, ரெண்டுவேரும் பிரிஞ்சுட்டாங்களாம். அண்ணைக்கிருந்து – இண்ணக்கி வர பறையன் – பள்ளன ஏச்சது போல – ண்டற பழமொழி இன்னும் அவங்ககிட்ட இருக்கு.

7. வள்ளக் கொடி

“வள்ளக் கொடில பெறந்த பள்ளமக்காண்டு” ஏ...ஞ் சொல்றாங்கண்டா கடவுளு, வள்ளக் கொடில இருந்து பள்ளரப் படச்சாராம். எப்டிண்டா, பள்ளரு, தேவந்திர கொலத்தச் சேந்தவங்க. தேவேந்திரனயும் – பள்ளரயும் வள்ளக்கொடிதான் எணச்சிருந்திச்சாம்.

எல்லாரயும் படைக்கயில, கடவுளு என்னா நெனச்சாருண்டா, இவங்கள, இந்த ஒலகத்ல சும்மா விடக் கூடாதுண்டு, ரவரட்ணமுத்து நெறஞ்ச பூசணிக்காயும் தெராசுங் குடுத்து பொளச்சுக்கங்கண்டு சொன்னாராம்.

பூசணிக்காயயும் தெராசயும் கோமுட்டிச் செட்டியாரு கடயில குடுத்திட்டு, அதுக்குப் பதிலா அரிசியும் பருப்பும் வாங்கிட்டு வந்து, காச்சிச் சாப்பிட்டாரு. பூசணிக்காய வாங்குன கோமுட்டிச் செட்டியாரு, ரவரட்ண முத்த எடுத்து, நல்லா பொளச்சுசக்கிட்டாராம்.

அந்த அரிசி ஒரு நாளக்கிதா இருந்திச்சு. மறுநா, கடவுள் கிட்டப் போனா. போயி, கடவுளே! இண்ணக்கி என்னா தரப் போறீங்கண்டு கேட்டா. இண்ணக்கி, ஒனக்கு என்னா வேணும்ண்டு, கடவுளு கேட்டாரு. கேக்கவும்,

“மகுந்திருக்க மாந்தோப்பும்

கள்ளு குடிக்கக் கலநெல்லும்

பெரம்புத் தட்டு – மம்பட்டி”

குடுத்தாப் போதும்ண்டு சொன்னா. இதுகள ஒனக்கு தரமாட்டேண்டு கடவுளு சொல்லிட்டாரு. கொளத்துப் பாசன, வயக்காடு தாரேண்டு கடவுளு சொன்னாரு. அது வேணாம், சேத்துல எரங்கி, எங்களால வேல செய்ய முடியாதுண்டு சொல்லிட்டு, மம்பட்டியோட மடயில இருந்தாப் போதும்–ண்டு சொல்லிட்டு, 'மம்பட்டியுங் கூடயும் இருந்தாப் போதும்'ண்டு சொன்னாா். சரிண்டு சொல்லிட்டு மறஞ்சுகிட்டாரு. வள்ளக் கொடில பெறந்ததுனால இண்ணக்கி, இவங்க வள்ளக்கிரயத் திங்கிறதில்லயாம். அப்டி மீறி, வள்ளக் கிரைய வேக வச்சா, வெந்த கிர நத்தமாதிரி ஆகிருமாம். நத்தக் கவுச்சி அடிக்கும்ண்டு சொல்றாங்க. கடவுளு குடுத்த வரத்துனாலதா், இண்ணிக்கி, வெவசாயத்துல மொதல்ல நிக்கிறாங்க.

8. கருணைக்குக் காலம் இல்லை

ஒரு காட்ல – ஒரு பளியன் இருந்தா். கெழங்கு தோண்டுறது, தேனெடுக்கிறது, கனி வகைகளப் பெறக்குறது – வேட்டையாடுறது அவந் தொழிலு. இதச் செஞ்சுதா், குடும்பத்த காப்பாத்திக்கிட்டு, அந்த மலங்காட்ல வாழ்ந்துகிட்டிருந்தா்.

ஒருநா, தேனா, வேட்டயா எதுமே கெடைக்கல. கெழங்காவது தோண்டிட்டுப் போயி, பிள்ள குட்டிகளுக்கு குடுக்கலாம்ண்ட்டு. பளியங் கெழங்கு இருக்கிற எடத்துக்குப் போனா்.

மத்தியான வெயிலு, வோ்க்க விறுவிறுக்க, குழிக்குள்ள மண்டிகாலு போட்டு, கெழங்கு தோண்டிக்கிட்டிருந்தா்.

அப்ப! அந்த வழியா பார்வதியும் பரமசிவனும் படியளக்கப் போனாங்க. பார்வதி, இவன பாத்திட்டா, பொண்ணுல்ல! ரெம்ப எரக்கப்பட்டு, அவனுக்கு ஏதாச்சும் குடுத்து, நல்ல வாழ்க்கயக் குடுக்கணும்ண்டு பரமசிவங்கிட்டச் சொன்னா.

அப்ப: பரமசிவனும், சரிண்டு சொல்றாரு. அப்ப: ரெண்டு பேரும் அங்க போறாங்க.

அவ் அந்தக் குழிக்குள்ள மண்டிகாலுப் போட்டு, ஒண்ணுங் கெடைக்கலங்கற கோவத்ல, கெழங்கு தோண்டிக்கிட்டிருக்கா்.

ஏப்பா! இங்க வா–ண்டு பரமசிவன் கூப்பிட்டாரு. அப்ப, அவ், எதுக்குண்டு கேக்குறா? ஒரு சோலிண்டு பரமசிவன் சொல்றாரு. அப்ப, பார்வதி பக்கத்துல நிக்கிறா.

பரமசிவன் கூப்பிட்டதுக்கு, அவ் "நானு இங்கென்னா சோலில இருக்கே, என்னப் போயிக் கூப்பிடுறய, ஒனக்கு அறிவிருக்காண்டு கேக்குறா." யார? பரமசிவன.

பாத்தயா பெண்ணே! நீ பாவம்ண்டு எரக்கப்பட்டயே, அவ் பேச்சப் பாத்தியா! வா! பெண்ணே! போவோம்ண்டு பரமசிவன் கூப்பிடுறாரு.

பார்வதிக்குப் போக மனசில்ல. பார்வதி ரெம்ப எரக்கப் படுறதப் பாத்திட்டு, பெறகும், இங்க வாப்பா! இந்த தின்னீர வாங்கி, நல்லாப் பொழச்சுக்கண்டு, பரமசிவன் சொல்றாரு.

அப்ப, சொல்றா, "ஒந்தின்னீரக் கொண்டு வந்து ஏ...ம் பொச்சுல போடு. போவானா, சும்மா தொண தொணண்டுகிட்டு" –ருக்காணேண்டு சொல்றது, அவங்களுக்குக் கேக்குது.

சரி! வா பெண்ணே! அவ் போடச் சொன்ன எடத்லேயே போட்டுட்டு, நம்ம போயிருவோம்ண்டு, தின்னீர அள்ளி, அவ் பொச்சுல போட்டுட்டுப் போயிட்டாங்க. அதுல இருந்துதா, பளியன் பொச்சு சாம்பப் பொடச்சுக்கிட்டிருக்கு. இப்பயும், அவங்களப் பாரு, பின்னால சாம்ப விழுந்த அடையாளம் இருக்கும்.

9. நடக்குறதே வேற

ஒரு ஊர்ல – ஒரு ஆசாரி இருந்தர். பேச்சுல, படு கெட்டிக்காரர். பேச்சுல ஆரயும் மடக்கிப்பிருவர். பெரிய ஆளு. அந்த ஊர்ல இருக்ற வெவசாயிகளுக்குக் கொளுவு – கலப்ப – கொத்து – மம்பட்டி, அகப்ப – துடுப்பு அத்தனயுஞ் செஞ்சு குடுக்கறது. அவங்க, குடுக்குற தவசந் தானியங்கள வச்சு, கஞ்சி குடுச்சுக்கிட்டு, அவங்க சொல்ற வேலயச் செஞ்சுகிட்டு இருந்தர். அவ் பேச்சுப் போல சுத்தமா தொழிலும் இருக்கும். எல்லாச் சாதிக்காரங்களும், எப்பப் பாத்தாலும் ஆசாரி வீட்ல கூடிக்கெடப்பாங்க.

ஒருநா, ஒரு குடும்பன், கொளுத்தட்ட ஆசாரி வீட்டுக்குப் போனர். எல்லாத்தயும் வேல செய்யச் சொல்றது மாதிரி, இந்தக் குடும்பனயும் வேல செய்யச் சொன்னாரு ஆசாரி.

அப்ப ஆசாரி, கொளுவக் காய வச்சாரு. கொளுவுக் காய்றதுக்கு ஏத்தாப்ல, குடும்பன துருத்திய ஊதச் சொன்னாரு. குடும்பன் துருத்தி ஊத, ஆசாரி கொளுவக் காய வக்கிறாரு. கொளுவு காயவும், ஆசாரி, குடும்பங்கிட்ட, இந்தச் சம்மட்டிய எடுத்துக் கொளுவல அடிண்டு சொன்னாரு.

அப்ப, குடும்பன் அடிக்கிறர். ஆசாரி, அடிக்கேத்தாப்ல கொளுவத் திருப்பித் திருப்பிப் புடிக்கிறாரு.

வேலயுஞ் செஞ்சிட்டு, ஆசாரி ஜாலியாப் பேசுறவரு. அப்ப, ஏம்பா! குடும்பா! ஒனக்கு எத்தன பிள்ளைகண்டு கேட்டாரு. எனக்கு எட்டுப் பிள்ளைகண்டு குடும்பன் சொன்னர்.

எட்டுப் பிள்ளைகண்டா. ஒனக்குப் பெறந்தது எத்தன? ஊரானுக்குப் பெறந்தது எத்தனண்டு ஆசாரி கேட்டாரு.

குடும்பனுக்கு வந்ததே கோவம். ஏ....ண்டா!! ஆசாரிப் பயலே! ஒனக்கு எம்புட்டுத் திமுறு இருந்தா, என்னயப் பாத்து, இப்டிக் கேப்பண்டு, சம்மட்டியக் கொண்டு அடிக்க ஓங்குறா.

அப்ப, பக்கத்ல ஒக்காந்திருந்த கோனான், குடும்பா! ஆசாரி கேட்டதுல என்னா தப்பு, ஏ... இம்புட்டுக் கோவம் ஒனக்கு வருது. ஆசாரி சொன்னதுல, உம்ம இருக்குப்பாண்டு சொல்லிட்டு, ஆம்பளப் பிள்ள எத்தன? பொம்பளப் பிள்ள எத்தனண்டு கேக்குறதுக்குத்தா, ஆசாரி, ஒனக்குப்பெறந்தது எத்தன? ஊரானுக்குப் பெறந்தது எத்தனண்டு கேட்டுப்புட்டாரு. இது வெளயாட்டுக்குத்தா. வெனயாக் கேக்கல. இதுக்குப் போயி, ஆசாரிய அடிக்கப் போறியேண்டு, போகச் சொன்னாராம்.

சொல்லவும், நீங்க சொல்றதுக்காக, ஆசாரிய விட்டுட்டுப் போறே. இல்லண்டா! நடக்குறதே வேறண்டு சொல்லிட்டு, கொளுவத்தட்டி வாங்கிக்கிட்டு, வீட்டுக்குப் போனானாம்.

10. வழிபாடு

இருநூறு வருசத்துக்கு முன்னால, ஒரு ரெட்டியாரு பொண்ணு, ஒரு சக்கிலியப் பையன காதலிச்சாளாம். கருவைக் கொளந்தா அவங்க சொந்த ஊரு. இருக்கயில, ரெண்டுவேரும் பழகிட்டாங்க.

பழகிட்டாங்களே தவிர, ரெண்டுவேரும் கல்யாண பண்ணிக்கிற முடியல. ஒருநா, ரெண்டுவேரும் ஓடிப்போயிட்டாங்க. ஓடிப் போயி, தூத்துக்குடிக்கு வடக்க எட்டுக் கிலோமீட்டர் தொலவ்ல, காதறுத்தான் மொடங்கிங்கிற எடத்ல இருக்காங்க.

இருக்கயில, இந்த ரெட்டியாரு, ஆளுகள வச்சு ரெண்டுபேரயும் வெட்டிப் போட்டுட்டாரு. வெட்டிப் போடவும், அண்ணைக்கிருந்து ரெட்டியாரு குடும்பம் வெளங்கல. கொலஞ்சு போச்சு. அந்தக் குடும்பமே கெட்டுப் போச்சு.

ஒரு எடத்ல போயி, ரெட்டியாரு சோசியங் கேட்டாரு. சோசியங் கேக்கவும், ஸ்திரிஉறத்தி தோசம் இருக்குண்டு சொல்லிட்டாங்க. சொல்லவும், அதுக்கு என்னா செய்யறதுண்டு ரெட்டியாரு கேட்டாரு. கேக்கவும், அந்த எடத்ல போயி, வருசா வருசம் வழிபாடு நடத்துங்க, சரியாப் போகும்ண்டு சொன்னாரு சோசியரு.

அண்ணைக்கிருந்து, இண்ணைக்கும் வண்டி கெட்டிட்டு வந்து, அந்த எடத்ல வழிபாடு நடத்திட்டுப் போறாங்க. இது உம்மையா நடந்த கத.

VII. நம்பிக்கை விளக்கக் கதைகள்

1. நல்ல மனசுக்காரி

ஒரு ஊர்ல – இல்லாஞ் செட்டியாருண்டு ஒருத்தரு இருந்தாரு. அவருக்கு ரெண்டு மகங்க இருந்தாங்க. பொண்டாட்டி செத்துப் போச்சு. சின்னச் – சின்ன வேலவெட்டிகளப் பாத்து, இல்லாஞ்செட்டியாரு பொளச்சுக்கிட்டிருந்தாரு.

அந்த ஊர்ல, தனவந்தஞ் செட்டியாரு, பெரிய பணக்காரு, ஒருத்தரு இருந்தாரு. அவருக்கு ரெண்டு பொண்ணுக இருந்துச்சு. ரெண்டு பொண்ணுகளுஞ் செல்வச் செருக்கா வளர்ராங்க. வளந்து - பெரிய மனுசியாகவும், மாப்பிள்ள தேட ஆரம்பிச்சாரு செட்டியாரு. பொண்ணுக பெரிய மனுசியானத விமர்சியாக் கொண்டாடுனாரு.

அந்தச் சடங்கு விசேசத்துக்கு, இல்லாஞ் செட்டியாருடைய மூத்த மகே போனர். போயி–, சடங்கு ஊர்வலத்ல ரைட்டு (லைட்) சுமந்துகிட்டு வாரர். ரைட்டு செமந்த கூலிக்குச் சாப்பாடு போட்டாங்க. சாப்பிட்டுட்டு அந்த பெஞ்சிக்கடியில படுத்து ஒரங்கிட்டர்.

அப்ப' தனவந்தஞ் செட்டியாரு, சடங்குக்கு வந்த சொந்தக் காரங்களோட ஒக்காந்து பேசிக்கிட்டிருந்தாங்க. பணப் பெருமையெல்லாம் பேசிக்கிட்டிருந்தாங்க. அப்ப, பெஞ்சிக்கடியில படுத்துக் கெடந்த இல்லாஞ் செட்டியாரு மகே பெரண்டு படுக்குறர். படுக்கயில, அவனோட கையி விரிஞ்சு கெடந்துச்சு. ஒடனே! தனவந்தஞ் செட்டியாரு, அவனோட கைரேகயப் பாத்துட்டாரு. அன்னரேக – தர்மரேக – செல்வ ரேக – ஆயுள் ரேகைக நல்லா இருக்குது. தனவந்தஞ் செட்டியாரு நெனச்சுப் பாக்குறாரு.

பாத்திட்டு, ஆரு இந்த பயண்டு கேட்டாரு. இல்லாஞ் செட்டியாரு மக்ண்டு சொன்னாங்க. கைரேக நல்லா ஓடுது. பின்னால, இவ் நல்லாப் பொளப்பா். அதனால, நம்ம பொண்ண இவனுக்கே குடுத்துறலாம்ண்டு செட்டியாரு நெனச்சுக்கிட்டு, அவன உசுப்பி, அவனுக்குச் சாப்பாடக் – கிப்பாடப் போட்டு ஒங்கப்பன, தனவந்தஞ் செட்டியாரு, கூப்பிட்டாருண்டு சொல்லிக் கூட்டிட்டு வாண்டு அனுப்பிச்சு வச்சாரு. யார? இல்லாஞ் செட்டியாரு மகன. அப்பனக் கூப்பிட்டுக்கிட்டு வரச் சொல்றாரு. எதுக்கு? கல்யாணம் பேசத்தே.

அப்ப: தனவந்தஞ் செட்டியாரு வீட்டுக்கு, இல்லாஞ் செட்டியாரு வந்தாரு. வரவும், தனவந்தஞ் செட்டியாரு, நல்லா வரவேப்புச் செஞ்சு, ஒக்காந்து பேசுறாங்க. பேசயில, தனவந்தஞ் செட்டியாரு சொல்றாரு. எங்கிட்ட வெத்தல இருக்கு. பச்சப் பசேருண்டு இருக்கு. அது என்னத்துக்கு ஆகும். நீங்க தங்கப் புடம் போட்ட பாக்கு வச்சுருக்கிங்க. அது எண்ணக்கிம் இருக்கும். ரெண்டையுஞ் சேத்தாத்தா் வாயி செவக்கும். நானு பொண்ணு வச்சிருக்கே். நீ மாப்பிள்ள வச்சிருக்க! சம்பந்தம் பண்ணிக்கலாங்கறத இப்டிச் சொல்றாரு.

ஒடனே, இல்லாஞ் செட்டியாரு சம்மதிச்சுட்டாரு. ஆனா, இந்தச் சம்பந்தத்த, தனவந்தஞ் செட்டியாரோட பொண்டாட்டி விரும்பல. இந்தக் கலியாணத்த நடக்க விடமாட்டேண்டு புருசங்கிட்டச் சொல்றா. அடிக்கடி சண்ட புடிக்றா. அப்ப, தனவந்தஞ் செட்டியாரு, கண்டிப்பா இந்தக் கலியாணம் நடக்கும்ண்டு சொல்லிட்டாரு.

ரெண்டுபேரும், மககிட்டப் போயிக் கேக்குறாங்க. கேக்கவும், "அப்பா பாத்து எதச் சொன்னாலுஞ் சரிண்டு சொல்லிட்டா".

அதனால, மக மேலயும், புருசு மேலயும் கோவிச்சுக்கிட்டு பேசாம இருக்கா. யாரு? தனவந்தஞ் செட்டியாரு பொண்டாட்டி. இருக்கயில, கலியாணம் பேசி முடிச்சிட்டாங்க.

கலியாண நாளு வந்திருச்சு. இல்லாஞ் செட்டியாரு மகனும், தனவந்தஞ் செட்டியாரு வீட்டுக்குக் கலியாண ஏற்பாடோட வராங்க. வந்தாங்க, பேசுனாங்க. கலியாணம் முடுஞ்சு போச்சு. புருசன் வீட்டுக்குப் போகயில, தனவந்தஞ் செட்டியாரும், அவரோட பொண்டாட்டியும் கூடவே வந்தாங்க. ஊருக்கு வந்ததும், நாஞ் சொல்லச் சொல்ல ஒண்ணுமில்லாதவனுக்கு வாக்கப்பட்டயில, நீ போட்ட நக, சீலகளக் குடுத்திட்டுப் போண்டு கேக்குறா. கேட்டுப் பூராத்தயும் வாங்கிக்கிட்டு பழய சீலைகளக் குடுத்து, கட்டிக்கிட்டுப் போகச் சொல்லிட்டா.

பழய சீலயக் கட்டிக்கிட்டுப் புருசு வீட்டுக்கு வந்தா. புருசு வீடுண்டு சொல்லி, ஒரு குடிசயக் காட்டுனாங்க. குடிசயச் சுத்தப்படுத்தி, இராமன் இருக்கிற எடந்தானே சீதக்கி அயோத்திண்டு மனசுல நெனச்சுக்கிட்டு, பானயில இருந்த மாவ எடுத்து, கூழக் காச்சிக் குடிச்சிட்டு அண்ணக்கி ராத்திரிப் படுத்துக்கிட்டாங்க.

படுத்திருக்கும்போது, இண்ணக்கி மாதிரி எண்ணைக்கிம் ஒத்துமயா இருக்கணும். வெளியில – எது கெடச்சாலும், வீட்ல கொண்டு வந்து குடுக்கணும்ண்டு புருசங்கிட்டயும் – கொழுந்தங் கிட்டயும் சொல்லி வச்சிட்டா. புருசனும், கொழுந்தனும் சரிண்டு சொல்லிட்டாங்க.

மறுநாக் காலைல, கொழுந்தன் வெளில போனப்ப, நார்த்தங்காயும் செத்த பாம்புங் கெடச்சுச்சு. ரெண்டயும் கொண்டு வந்து மதினிக்கிட்டக் குடுத்தா். வெழுத்ததெல்லாம் பாலுண்டு நெனக்கிறவருகிட்ட, செத்த பாம்ப ஏ..ங் கொண்டு வந்த, இது வேணாம்ண்டு சொன்னா, நாளைக்குத் தங்கம் கெடச்சாக் கூட எடுத்திட்டு வரமாட்டாருண்டு மனசுல நெனச்சுக்கிட்டு, அதயும் வாங்கி வச்சுக்கிட்டா. நார்த்தங் காய ஊறுகா போட்டா. செத்த பாம்பத் தூக்கி, வீட்டுப் பக்கத்ல இருந்த வேலா மரத்ல போட்டுட்டா.

அப்பஃ அரமணயில, தன்னோட ஒட்டியாணத்தக் கழத்தி வச்சிட்டு, அரசி குளிச்சுக்கிட்டிருந்தா. அந்த வழியாப் பறந்து வந்த பெறாந்து எனமோண்டு நெனச்சு, ஒட்டியாணத்தத் தூக்கிக்கிட்டு வந்திருச்சு. பறந்து வந்து, இல்லாஞ் செட்டியாரு வீட்டு வேலா மரத்ல ஒக்காந்து, ஒட்டியாணத்தக் கொத்திப் பாத்துச்சு. கொத்த முடியல. ஒட்டியாணத்தப் போட்டுட்டு, பக்கத்ல கெடந்த பாம்பத் தூக்கிக்கிட்டுப் போயிருச்சு.

அங்க அரமணயில, ஒட்டியாணத்த காணம்ண்டு வெளியெல்லாந் தேடுறாங்க. எடுத்தவங்க, அரமணயில கொண்டு வந்து குடுத்தால் தகுந்த சன்மானந் தரப்படும்ண்டு தமுக்கடுச்சு ஊர் பூராஞ் சொல்லி, சாட்டச் சொல்லிட்டாங்க.

இல்லாஞ் செட்டியாரோட மருமக, காலைல எந்திருச்சு, வாசக் கூட்டப் போனவ, ஒட்டியாணத்தப் பாத்துட்டா. அரசிகிட்டக் கொண்டு போயிக் குடுக்கணும்ண்டு நெனச்சவ, சாட்டுரவங்கிட்ட ஒட்டியாணம் இருக்குங்றத, அரசங்கிட்டச் சொல்லச் சொன்னா.

இல்லாஞ் செட்டியாரோட மருமகளக் கூட்டி வரச் சொல்லி, அரசன், பல்லாக்க அனுப்பிச்சா. அரசன வீட்டுக்கு வரச் சொல்லி, பல்லாக்கத் திருப்பி அனுப்பிட்டா. யாரு? இல்லாஞ் செட்டியாரு மருமக.

இல்லாஞ் செட்டியாரு குடிசக்கி ராசா வந்தாரு. ஒட்டியாணத்தத் தேடிக் குடுத்ததுக்காக நிய்யி எதக் கேட்டாலுந் தாரேண்டு சொல்லுறாரு.

அப்ப: ராசாகிட்ட, பொன்னும் பொருளும் எதயுங் கேக்காம, வர்ர வெள்ளிக்கெழமண்ணக்கி ஏ.. வீட்ல மட்டுந்தா வெளக்கு எரியணும், வேறெங்கயும் வெளக்கு எரியக் கூடாதுண்டு, வரந் தரணும்ண்டு கேட்டா. ராசாவும், சரிண்ட்டுப் போயிட்டாரு.

மறு வெள்ளிக்கெழமண்ணக்கி, யாரும், ஊர்ல வெளக்கெரிக்கக் கூடாது. மீறி எரிச்சால் தண்டனைக்குள்ளாவாங் கண்டு சாட்டச் சொல்லிட்டாரு. அண்ணக்கி, எந்த வீட்லயும் வெளக்கு எரியல. இல்லாஞ் செட்டியாரோட குடிசயில மட்டும் வெளக்கு எரியுது.

அப்ப: எப்பயும் வெளிச்சத்ல இருக்கிற அன்னலட்சுமி, குணலட்சுமி, பாக்கியலட்சுமி, தனலட்சுமி, அழகுலட்சுமி, மகாலட்சுமி, அம்சலட்சுமிகளெல்லாம் வெளிச்சத்தத் தேடி வெளியேறி, இல்லாஞ் செட்டியாரு குடிசய நோக்கி வருதுக. எதுக்கு? அங்கதான வெளக்கு எரியுது. வெளிச்சத்தத் தேடி வருதுக.

அப்ப: எப்பயும் இருட்டில இருக்ற மூதேவி, வெளிச்சத்தப் பாத்துப் பயந்து, இருட்டுப் பக்கம் வெளியேறிப் போக நெனக்கிது. மூதேவி இருட்டத் தேடிப் போகுது.

அப்ப: புருசனக் கொல்லப் புரத்லயும், கொழுந்தன வாசல்லயும் நிக்க வச்சுட்டா. எப்டிச் சொல்லி நிக்க வக்கிராண்டா, வெளியேயிருந்து ஆரு வந்தாலும், இனிமே நீ இந்த வீட்ட விட்டுப் போக மாட்டேண்டு சத்தியம் வாங்கிக்கிட்டு உள்ள வரவிடுண்டு, கொழுந்தங்கிட்டச் சொல்லி வச்சுட்டா. வீட்டுக்குள்ளயிருந்து வெளிய ஆரு போனாலும், இனிமே, இந்த வீட்டுக்குத் திரும்பி வரமாட்டேண்டு சத்தியம் வாங்கிக்கிட்டுப் போகவிடுண்டு புருசங்கிட்டச் சொல்லி வச்சுட்டா.

இருட்ட – இருட்ட அதிர்ஸ்ட்ட லட்சுமிக இருட்டுக்குப் பயந்து, இல்லாஞ் செட்டியாரு குடிசக்குள்ள வந்துருச்சுக. மண்ணா இருந்தாலும் மகிழ்ச்சியா இருக்கலாம்ண்டு குடிசக்குள்ள வரவும், ஒரங்கிக்கிட்டிருந்த மூதேவி வெளிச்சத்தக் கண்டு பயந்து சீ! இதென்ன வெளிச்சம் இப்டியிருந்தால் எப்டி ஒரங்குறதுண்டு, இருட்டப் பாத்து வெளியேறிப் போயிருச்சு.

அதிர்ஸ்ட்ட லட்சுமிக வாசம் பண்ணவும், எல்லாரும் வலிய – வலியப் பொருள் உதவி செஞ்சாங்க. செல்வம் பெருகிருச்சு. மாடிவீடு கட்டுனாங்க. தங்கக் கொட செஞ்சு, வீட்டு மேல வச்சாங்க. நல்லா மதிப்போட வாழுராங்க.

இப்டி வாந்துகிட்டிருக்கயில, தனவந்தஞ் செட்டியாரு, மக வீட்டுக்கு வாராரு. பொண்டாட்டியுங் கூட வர்ரா. அப்ப, இல்லாஞ் செட்டியாரு அன்போட வரவேத்து, விருந்து செஞ்சு சந்தோசப்பட்டாராம்.

கடசில, தங்கச்சியயும், கொழுந்தனுக்குக் கட்டிக்கிட்டு வந்து நல்லாப் பொளச்சாங்களாம். நல்ல மனசுக்காரிக்கு எல்லாந்தான் கெடைக்கும். கெட்ட மனசுக்காரியா இருந்தா, என்னா கெடைக்கும்? வெந்தத் திண்டுபிட்டு, விதி வந்தண்ணக்கிச் சாக வேண்டியதே.

2. கடவுள்

ஒரு ஊர்ல - ஒரு குடும்பத்ல நாலு பிள்ளைக. நாலாவது பிள்ள பொம்பளப் பிள்ள. கடசிப் பிள்ள பொம்பளப் பிள்ளயா இருந்ததனால, செல்லமா வளத்து வந்தாங்க. வயசுக்கு வந்திருச்சு. ஈசுவரங் கோயில்ல தண்ணி எடுத்து ஊத்தி, பூப்போட்டு சாமி கும்பிட பழகிக்கிருச்சு.

இந்த பிள்ளயச் சோதிக்கிறதுக்காக ஈசுவரன், முனிவரு வேசத்துல வந்து, என்ன பெண்ணே! தெனமும் இப்டித் தண்ணி எடுத்து ஊத்துறீயே. மனசில என்ன நெனச்சுக்கிட்டிருக்கேண்டு கேட்டாரு.

கடவுளக் கலியாணம் முடிச்சுக்கிறணும்ண்டு நெனக்கிறே. அது கை கூடணும்ண்டுதா், இந்தக் கடமயத் தெனமும் செஞ்சுகிட்டு வரேண்டு சொன்னா.

சரி. எங்கூட வா, நா் கடவுளக் காட்டுறேண்டு கூட்டிக்கிட்டுப் போனாரு. கோயிலுக்குள்ள கூட்டிக்கிட்டுப் போயி, கடவுள் வேடத்ல வெளியே வந்தாரு. இவ, கால்ல விழுந்தா. கல்யாணம் செஞ்சுகிறேண்டு சொன்னாரு.

இவளுக்கு மகிழ்ச்சி தாங்க முடியல. கடவுளோட உல்லாசமா இருந்திட்டா. பிரியும் போது, நாம் சந்திச்சதுக்கு ஒங்க கையில இருக்ற கணயாழியக் கேட்டா. கணயாழியக் குடுத்தாரு. வாங்கிக்கிட்டு வீட்டுக்கு வந்தா.

வந்து, கொஞ்ச நா ஆச்சு. வகுத்ல கா்ப்பம் உண்டாயிருச்சு. ஊரெல்லாம் பலவாறு பேச ஆரம்பிச்சுட்டாங்க. வீட்ட விட்டு வெளியேறி, கால்போனபோக்ல போக ஆரம்பிச்சுட்டா. போற வழியில, ஒரு ஊரு இருந்திச்சு. ஊருக்குள்ள போனா. போகயில, அவளுக்கு, அகோரமான பசி. பசிக் கெரக்கத்துல, ஒரு வீட்டுத் திண்ணயில படுத்திட்டா. வீட்டுக்காரி பாத்தா, பாத்து, ஆருண்டு

கேட்டா, எதுக்காக வெளியேறி வந்தண்டு கேட்டா. தாய் தகப்பனோட கோவுச்சுக்கிட்டு வந்துட்டேண்டு சொல்லவும், அந்த வீட்லயே வேலக்காரியா வச்சுக்கிட்டாங்க.

அந்த வீட்டுல, வேலக்காரியா இருக்கயில, ஒரு ஆண் கொழந்த பெறந்திருச்சு. வேல செய்யுறதுக்குக் கூலியா அரிசியும், தவிடும் தந்தாங்க. அரிசிய ஆக்கி அன்னதானங் குடுத்துட்டு, தவிட்ட ஆக்கி, தாயும் மகனும் சாப்பிட்டு வந்தாங்க.

வரயில, பையன் பெரியவனாயிட்டர். ஏம்மா? அரிசியக் காச்சி பண்டாரம் பரதேசிக்குப் போட்டுட்டு, எனக்கு ஏ.. தவிட்டுக் களியக் குடுக்கறேண்டு கேட்டர். அதாண்டா மகனே! அன்னதானப் பலண்டு தாயி சொன்னா. அன்னதானப் பலனண்டா என்னாண்டு மகன் கேட்டர். அதச் சொல்ல முடியாது. அனுபவிச்சாத்தான் தெரியும்ண்டு சொல்லிட்டா.

ஒருநா, அன்னதானத்துக்கு ஆக்கிய சோத்த எச்சிப் படுத்திட்டர். அதுக்கு, மகன அடிச்சு வெளிய பத்திட்டா. அழுதுகிட்டே அன்னதானப் பலன் எங்கிருக்கு? எங்கப்பா எங்கிருக்காருண்டு? மகன் கேட்டர்.

பெத்த பாசம் பொறுக்க முடியாம, மகனே! கடவுள்தாண்டா ஒங்கப்பா. அன்னதானப் பலன அவருகிட்டத்தர் கேக்கணும்ண்டு சொன்னா. சரிம்மா! நர் கடவுள்கிட்ட போறேண்டு சொல்லவும், கடவுள்கிட்ட வாங்கிய கணயாழியக் குடுத்து, போகச் சொல்லிட்டா. கடவுளப் பாக்கப் போறர்.

போற வழியில, ஒரு வேடன், வேட்டையாடிட்டு, அந்த வழியா வந்தர். அப்ப, இவன் இங்கிட்டிருந்து போறர். அவன் அங்கிட்டிருந்து வாரர். ரெண்டு பேரும் எதுக்கச் சந்திச்சுக்கிட்டாங்க. அவன் பேரு புலவன்.

எங்கப்பா போறேண்டு புலவன் கேட்டர். அன்னதானப் பலன் கேக்க, எங்கப்பாகிட்ட போறேண்டு சொல்லிட்டுப் போறா். ஒங்கப்பா ஆரு? எங்கிருக்காருண்டு வேடன் கேக்குறா். எங்கப்பா கடவுளு. நா அவருகிட்டப் போறேண்டு சொல்லிட்டு போறதுக்கு வெலகுனா்.

கரடி – புலி இருக்ற காட்டு வழி போக வேணாம். எங்கூட வந்து, எங்குடிசயில தங்கிருந்திட்டு காலைல போண்டு, கூட்டிக்கிட்டுப் போறா்.

போகயில, தேனுந் தெனமாவும் இடிச்சு வச்சிட்டு, வேட்டுவச்சி, வேடனுக்காக காத்துக்கிட்டிருந்தா. அப்ப, சின்னப் பயலக் கூட்டிக்கிட்டு வேடன் போனா். யாருண்டு கேட்டா, அன்னதானப் பலன் கேக்க, கடவுள் கிட்டப் போறானாம். இந்தக் காட்டு வழியாப் போயிக்கிட்டிருந்தா். பாவம்ண்டு, கூட்டிக்கிட்டு வந்தேண்டு சொன்னா்.

அப்ப, அவ என்ன சொல்றா? வழியில போறவனெல்லாம் கூட்டிக்கிட்டு வந்தயில, உன்னோட பங்க, அவனுக்குப் பகிர்ந்து குடுண்ட்டு, மாவ ரெண்டாப் பங்கி பாதியக் குடுத்தா. படுக்ற எடத்ல, பாதியில வேட்டுவச்சி படுத்துக்கிட்டா. பாதி எடத்ல வேடனும், சின்னப்பயலும் படுத்துக்கிட்டாங்க. வேடன் வெளியே படுத்ததுனால, அவனப் புலி தூக்கிட்டுப் போயிருச்சு. விடியவும், எந்திருச்சு கடவுளப் பாக்கப் போறா்.

போற வழியில, ஒருத்தன், ஒடஞ்சுட்டுப் போன கொளத்த, அடச்சுக்கிட்டிருந்தா். அடைக்க அடைக்க கொளம் ஒடஞ்சுகிட்டுத்தே போகுதே தவிர, அடைபடமாட்டேங்குது. அந்த எடத்ல போயி நிண்டா், நிக்கவும், எங்கப்பா போறேண்டு கேட்டா். கேக்கவும், கடவுள்கிட்ட, அன்னதானப் பலன் கேக்கப் போறேண்டு சொன்னா்.

தம்பி! ஆண்டுக்கணக்கா இந்தக் கொளத்த அடச்சுக் கிட்டிருக்கே. நிக்ய மாட்டேங்குது. ஒடஞ்சுக்கிட்டுத்தா போகுது.

நிய்யி வரும்போது, இதுக்கு என்னா பலன்ண்டு, கடவுள்கிட்டக் கேட்டுட்டு வாண்டு சொன்னர்.

சரிண்ட்டு, அங்கிட்டுப் போறர். போகயில, ஒரு மாமரம், வழியில நிக்கிது. தம்பி! எங்க போறேண்டு கேட்டுச்சு. கடவுள்கிட்ட, அன்னதானப் பலங் கேக்கப் போறேண்டு சொல்றர். அப்டிண்டா, ஆண்டாண்டு காலமா நானும் பூக்கவும் இல்ல — காய்க்கவும் இல்ல, எனக்கு என்னா பலன்ண்டு, கடவுள்கிட்டக் கேட்டுட்டு வாண்டு சொல்லுச்சு. சரிண்டு சொல்லிவிட்டு, அங்கிட்டுப் போறர். போகயில ஒரு பாம்பு புத்துக்குள்ளயும் போக மாட்டாம, வெளியேயும் வரமாட்டாம, பாதி உள்ளேயும், பாதி வெளியேயும் இருக்கு. அப்ப, தம்பி! எங்க போறேண்டு பாம்பு கேக்குது. கடவுள்கிட்ட, அன்னதானப் பலன் கேக்கப் போறேண்டு சொல்றர். சொல்லவும்,

கொள்ளக் காலமா, இந்தப் புத்தவிட்டு, உள்ளேயும் போக முடியல, வெளியேயும் வர முடியல. சாவும் வரமாட்டேங்குது. எனக்கு, என்ன பலன்ண்டு கேட்டுட்டு வாண்டு சொல்லுச்சு.

சரிண்ட்டு அங்கிட்டுப் போறர். கடவுள் இருக்ற மலயடிவாரத்துக்கே போயிட்டர். பல பொண்ணுக, மலயடிவாரத்துக் கொளத்ல குளிச்சுக்கிட்டு இருந்தாங்க. அங்க போறர்.

அவங்க, என்னா வேணும்ண்டு கேட்டாங்க. கடவுளு எங்கப்பா, அவருகிட்ட, அன்னதானப் பலங் கேக்க, வந்தேண்டு சொல்றர்.

நாங்க, கடவுளுக்கு தொண்டு செய்யிற பொண்ணுக. கடவுளுக்கு இன்னும் கலியாணமே ஆகலியே, எப்டி மகன் இருக்க முடியும்ண்டு கேட்டாங்க.

சரி! இங்க இரு! நாங்கப் போயி, கடவுள்கிட்டச் சொல்றோம்ண்டு, நேரா கடவுள்கிட்டப் போறாங்க. கடவுள்கிட்டப்

போயி, இந்த மாதிரி, ஒரு சின்னப் பையன், ஒங்களத் தேடி வந்திருக்கா்ண்டு சொன்னாங்க.

அப்ப கடவுளு, கூட்டிக்கிட்டு வரச் சொல்லிட்டாரு. கடவுள்கிட்டக் கூட்டிட்டுப் போறாங்க. அப்ப, கடவுளு ஆரப்பா? நிய்யி, ஒனக்கு, இங்க என்னா வேணும்ண்டு கடவுள் கேட்டாரு.

எங்கம்மா! வேல செய்யிற எடத்ல, கெடைக்கிற தவுட்டப் பொடச்சு, அதுல வர்ற முன்குறுணை = பின்குறுணய எடுத்து ஆக்கிப் பண்டாரம் பரதேசிகளுக்கு, அன்னதானம் குடுத்திட்டு, எனக்குத் தவுட்டுக்களியக் கிண்டித் தருவா.

ஒருநா, அன்னதானத்துக்கு ஆக்கி வச்ச சோற, நான் எச்சுப்படுத்திட்டே. என்னய அடுச்சு வெரட்டிட்டா. அதனால நான், கடவுள்கிட்ட, அன்னதானப் பலங் கேக்க வந்தேண்டு சொல்றா். சொல்லிட்டு, கணயாழியக் குடுத்தா். குடுக்கவும், கணயாழியப் பாத்திட்டு, தன் மகந்தா்ண்டு கடவுளு தெரிஞ்சுக்கிட்டாரு. அன்னதானப் பலன்ண்டா, என்னாண்டு எனக்குச் சொல்லணும்ண்டு கேக்குறா்.

அப்ப கடவுளு, ஒரு உருண்டையக் குடுத்து, இதக் கொண்டு போயி, பக்கத்து ஊர்ல ஒரு ராசா இருக்காரு. அவரு பொண்டாட்டிகிட்டக் குடு. அந்த ராணிக்குப் பிள்ள இல்ல. இதத் திங்கச் சொல்லு, திண்டா, கர்ப்பமாகி கொழந்த பெறக்கும், அத, தங்கத் தாம்பாளத்ல வாங்கி, கொல்லபுறத்துக்குக் கொண்டுட்டுப் போ. அந்த எடத்ல, அந்தக் கொழந்த, அன்னதானப் பலனச் சொல்லும்ண்டு கடவுள் சொன்னாரு.

பெறகு, ஒண்ணு கேட்டுட்டு வரச்சொன்னாங்க. நானு வர்ர வழியில, ஒருத்தன் கொளத்த அடைக்க – அடைக்க, அது ஒடஞ்சுகிட்டே போகுது. அடைக்க முடியல. அதுக்கு என்னாண்டு கேட்டுட்டு வரச் சொன்னாருண்டு சொல்றா். சொல்லிட்டு, அவனோட வீட்டுல, ரெண்டு பொண்ணு இருக்கு. ரெம்ப

நாளாக் குடுக்காம இருக்கு. வெளிய வரவிடாம, மே வீட்டுல அடச்சு வச்சிருக்கா. அதுகளக் குடுத்துட்டால், கொளம் ஒடையாது. அந்தப் பொண்ணுகள கட்டிக் குடுக்கச் சொல்லிருண்டு கடவுளு சொல்லிட்டாரு. இன்னொண்ணுஞ் சொன்னாங்க, வர்ர வழியில, ஒரு மாமரம் இருக்கு. அது ரெம்ப நாளாப் பூக்கவுமில்ல, காய்க்கவுமில்ல. அதுக்கு என்னாண்டு, அந்த மாமரங் கேட்டுட்டு வரச் சொல்லுச்சுண்டு சொன்னா.

அதுக்குக் கடவுளு, அந்த மரத்துக்குக் கிழ, ஏழு அண்டாப் பணம் இருக்கு. அத எடுத்திட்டால், அந்த மரம், பூத்துக் காய்க்கும்ண்டு சொன்னாரு.

இன்னொண்ணும் கேக்குறே, வர்ர வழியில, ஒரு புத்துக்குள்ள ஒரு பாம்பு இருந்திச்சு. அந்தப் பாம்பு, வெகுநாளாப் புத்துக்குள்ளயும் போக முடியாம, புத்த விட்டு வெளியேயும் வர முடியாம இருக்கு. அதுக்கு என்னாண்டு கேட்டுட்டு வரச் சொல்லுச்சுண்டு சொன்னா. அதுக்குக் கடவுளு, அந்தப் பாம்பு வாயில, வெல மதிக்க முடியாத முத்து இருக்கு. அந்த ரவரட்ண முத்தக் கக்கிட்டால், அது செத்துப் போகும், போயி, அதுகிட்டச் சொல்லிருண்டு, கடவுளு சொல்லி அனுப்பி வக்கிறாரு. வேகமா...வாரா. வரயில, அந்தப் பாம்பு அங்கிட்டும் போக முடியாம, இங்கிட்டும் போக முடியாம, புத்துக் கண்ணுக்குள்ள இருக்குது.

அந்தப் பாம்பு, என்னாப்பா! கடவுளு எனக்கு என்னா சொன்னாருண்டு கேட்டுச்சு. கேக்கவும், இவன், ஒங்ககிட்ட ஒரு ரவரட்ண முத்து இருக்காம். அதக் கக்கிட்டா, செத்துப் போயிருவீங்களாம்ண்டு சொல்றா. சொல்லவும், அப்டிண்டா – இப்பக் கக்குறே. என்னய எடுத்துத் தானஞ் செஞ்சுட்டு, போயிருப்பாண்டு சொல்லிட்டு, முத்தக் கக்கிட்டு, மறுகணமே பாம்பு செத்துப் போச்சு. அத எடுத்து தானஞ் செஞ்சுட்டு, ரவரட்ண முத்த எடுத்துக்கிட்டு வாரா.

வரும்போது, மாமரம் தடுத்து, எனக்கு என்னாப்பா சொன்னாருண்டு கேட்டுச்சு. கேக்கவும், ஒங்களுக்குக் கீழ ஏழு அண்டாப் பணம் இருக்காம். அத எடுத்திட்டால், நீங்க, நல்லா பூத்துக் காப்பிங்களாம், கடவுளு சொன்னாருண்டு சொல்றா்.

அப்டிண்டா – நிய்யி அத எடுத்திருப்பாண்டு மாமரஞ் சொல்லுது. சொல்லவும், ஏழு அண்டாப் பணத்தையும் எடுத்துக்கிட்டு வாரர்.

அங்கிட்டுப் போகயில, கொளத்த அடச்சுக்கிட்டிருந்தவ், இவனக் கூப்பிட்டு, எனக்கு என்னாப்பா சொன்னாருண்டு கேட்டா். கேக்கவும், ஒங்க வீட்டுல, ரெண்டு பொண்ணுக குடுக்காம இருக்காம். அதக் கட்டிக் குடுத்திட்டா, கொளம் ஒடையாதுண்டு சொன்னாருண்டு சொன்னா். அப்டிண்டா நிய்யி கட்டிக்கிட்டுப் போயிருண்டு சொல்றா். சொல்லவும், இருக்கட்டும் எனக்கு முக்கியமான வேல இருக்கு. வேலய முடிச்சுட்டு வந்து, கட்டிக்கிட்டுப் போறேண்டு சொல்லிட்டுப் போறா். கடவுளு சொன்ன அரமணக்கிப் போறா். போயி, கடவுளு குடுத்த உருண்டய திங்கச் சொல்லி, ராணிகிட்டக் குடுத்தா். அத ராணி வாங்கித் திண்டால், பிள்ள பெறக்கும்ண்டு சொல்றா். சொல்லவும், ராணிக்குப் பிள்ள பெறந்தா தப்பிச்ச, பெறக்கலண்டா இவங்கள மாதிரி செறயில அடபடணும்ண்டு சொல்லி, ரகள பண்றாங்க. அந்த உருண்டய ராணி திண்டா, இவனப் புடுச்சு அடச்சு வச்சுட்டாங்க. ராணி அந்த உருண்டயத் திண்ட அண்ணக்கிருந்து இவன் செறயில இருக்கா். செறயில இருக்கயில, ராணி கா்ப்பமாயிட்டா. பத்து மாதங் கழிஞ்சுச்சு, ராணிக்குக் கொழந்த பொறந்திச்சு. இவனச் செறயில இருந்து விட்டுட்டாங்க. வெளிய வந்து, கொழந்தய எடுத்து, தாம்பாளத்ல வச்சு தாங்கண்டு சொன்னா். தாம்பாளத்துல வச்சுத் தந்தாங்க, எடுத்துக்கிட்டுக் கொல்லபுறத்துக்குப் போனா். போகயில, அந்தக் கொழந்த, நீ அன்னதானப் பலங் கேக்க வரயில, ஒரு வேடனப்

பாத்தயாண்டு கேட்டுச்சு. ஆமா! பாத்தேண்டு சொன்னரி. அப்ப, இருட்டாயிப் போச்சு. கரடி – புலி பாதயில இருக்கும்ண்டு சொன்னானாண்டு கேட்டுச்சு. ஆமாண்டு, இவன் சொன்னரி. வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போனானா? ஆமா, கூட்டிக்கிட்டுப் போனரி. பொண்டாட்டியான வேட்டுவச்சி, வாசப்படில நிண்டிருந்தாளா? ஆமா நிண்டிருந்தா. ஆருகாட்டுப் பயலையோ கூட்டிக்கிட்டு வந்திருக்கிரிண்டு, மாவ ரெண்டாப் பிரிச்சுக் குடுத்தாளா? ஆமா. படுக்குற எடத்த சரியாப் பகுந்து, பாதி எடத்ல ஒங்களப் படுக்கச் சொன்னாளா. ஆமா. ஒன்னய நடுவுல போட்டு, வேடன் படுத்திருந்தானா? வேடனப் புலி தூக்கிட்டுப் போயிருச்சா? ஆமா. எல்லாத்துக்கும் ஆமாண்டு சொல்றரி.

அந்த வேடன்தாப்பா நானு. இந்த ஊர்ல, இத்தனாவது தெருவுல, ஒரு வீட்டுல, நாலு ஆம்பளப் பண்ணிக்குட்டியோட, ஒரு பொட்டக்குட்டி பெறந்திருக்கு. அந்தப் பொட்டப் பண்ணிக்குட்டிதாப்பா, எம் பொண்டாட்டி.

நானு, அண்ணக்கிச் செஞ்ச புண்ணியத்துக்குத்தரி, இண்ணக்கி, எனக்கு இந்தப் பெறப்பு. ராசா வீட்டுல பெறந்திருக்கே. ஏ...ம் பொண்டாட்டி, அண்ணக்கி செஞ்ச கருமத்துக்கு, இண்ணக்கி பண்ணியாப் பெறந்திருக்கா. இது தானப்பா, அன்னதானப் பலன்ண்டு கொழந்த சொல்லுச்சு.

கொழந்த பெறக்கும்ண்டு சொன்னதுக்கு, அந்த அரமணயில பாதியக் குடுத்து, எல்லாத்துலேயும் பாதி பாதி குடுத்து அவன ராசாவாக்கிட்டாங்க.

ராசாவான பெறகு, கொளம் அடைக்கிறவ் வீட்டுக்குப் போயி, அவனோட ரெண்டு பொண்ணுகளயும் கட்டிக்கிட்டு, மாமரத்துக்கிட்டப் போயி, ஏழு அண்டாப் பணத்தயும் எடுத்துக்கிக்கிட்டு வந்து, தான தர்மஞ்செஞ்சு, நல்லாப் பொளச்சானாம். செஞ்சவனுக்குச் செஞ்சதுதரி கெடைக்கும். செய்யாதது கெடைக்குமா? இவன், செஞ்சது இவனுக்குக் கெடச்சுச்சு. அவ, செஞ்சது அவளுக்குக் கெடச்சுச்சு.

3. தங்கச்சி

ஒரு ஊர்ல – ஏழு அண்ணங்களோடு ஒரு தங்கச்சி இருந்தா. தங்கச்சிய விட்டுட்டு, அண்ணமாரு ஏழு பேரும் வெறகு வெட்டக் காட்டுக்குப் போயிட்டாங்க.

தங்கச்சி, வீட்டுல தனியா இருக்கா. இருக்கயில, ஒரு கெழவி வந்து, தர்மங் கேக்குறா. தர்மம் போட வீட்டுக்குள்ள ஒண்ணுமில்ல. ஒண்ணுமில்லாததால, கதவுக்குப் பின்னால ஒழிஞ்சு, நிண்டுகிட்டு,

அள்ளிப் போட ஆள் இருக்கே

நுள்ளிப் போட அரிசி இல்லயே – ண்டு

சொல்லி அழுகுறா. ஒடனே, கெழவி, அழுகாதம்மா. என்னய நெனச்சு நோம்பு இருண்டு, சொன்னா.

நோம்பு இருக்கப் பொருளும் ஒண்ணுகூட இல்லையேண்டு, அந்தப் பொண்ணு சொல்றா.

அதுக்குக் கெழவி, வருத்தப்படாதம்மா, பூக்காரியக் கூப்பிடு, பூவ வாங்கு, வாங்கின பெறகு, பணம் இல்லண்டு, திருப்பி பூக்காரிகிட்ட குடுத்திரு. அப்ப, ஒங்க கைபட்டு, கீழ விழுகிற பூவ எடுத்து வச்சுக்க.

எண்ணக்காரனக் கூப்டு, எண்ணய வாங்கிக்க. வாங்கின பெறகு, பணம் இல்லண்டு, எண்ணயத் திருப்பி ஊத்திரு, சட்டியில ஒட்டி இருக்கிற எண்ணய, வழிச்சு வச்சுக்க.

இப்படியே, எல்லாச் சாமானயும் சேகருச்சு வச்சுக்க. வச்சிக்கிட்டு, ஏழு கொளத்து (குளம்) மண்ணெடுத்து, ஈனாத, எருமமாட்டுச் சாணியோட சேத்து, அம்மனச் செஞ்சு, அங்கையால மூணு குத்து, பெறங்கையால மூணு குத்து அரிசி எடுத்து,

ஏறுபொழுதுல போட்டு, எறங்கு பொழுதுல குத்தி, கொழுக்கட்ட செஞ்சு கும்பிடுண்டு சொல்லிட்டு . கெழவி போயிடுறா.

அந்தப் பொண்ணு, எப்டியோ, கசுட்டப்பட்டு, எல்லாத்தயும் தயார் செஞ்சு, கெழவிய நெனச்சு, நோன்பு இருந்தா.

தங்கச்சி நோம்பு இருக்கயில, அண்ணமார் ஏழுபேரும் வெறகு வெட்டிக்கிட்டு வீட்டுக்கு வராங்க. வரவும், இவ, என்னா செய்றா? அண்ணங்களுக்குத் தெரிஞ்சா திட்டுவாங்கண்டு, நோம்பு வெளக்க, மரக்கால போட்டுக் கமத்தி வச்சுர்றா.

கமத்தி வச்சிட்டு, நான் நோன்பு இருக்கே. வெளிய வர முடியாத நெல எனக்கு, நீங்க உள்ள வரக்கூடாதுண்டு சொல்லவும், அண்ணமாரு, வெறகுக் கட்டைகள வெளிய போட்டுட்டுப் போயிருறாங்க.

இதுக்குள்ள வெளக்கு அணஞ்சு போகுது. மரக்காலப் போட்டு கமத்தி வச்சா, அணயாமல் என்னா செய்யும்? அணஞ்சு போச்சு.

வெளக்கு எறிஞ்சாத் தான நோம்பு செய்ய முடியும். வெளக்கு அணஞ்சு போச்சுல. மீண்டும் வெளக்க ஏத்தணும்ண்டு நெனச்சு, எங்காவது திய்யி எரியுதாண்டு பாக்குறதுக்கு, புங்க மரத்ல ஒருகாலும், புளிய மரத்ல ஒருகாலும் வச்சு, வெளிய எட்டிப் பாத்தா.

பாக்கயில, ஒரு சுடுகாட்ல, திய்யி எரியுது. அந்தத் திய்யில, அந்த ஊரு ராசா செத்துப் போன பொணம் வேகுது.

நேரா சுடுகாட்டுக்கு வர்ரா. வந்து, சுடுகாட்ல இருந்து, திய்யி எடுத்திட்டுப் போயி, வெளக்கேத்தி நோம்ப முடிக்கிறா.

நோன்பு முடிச்சிட்டு, வெளிய வந்து பாக்கயில, அண்ணமார் இல்ல. அவங்க போட்ட வெறகு கட்டைங்க ; பொன்னா மாறியிருக்கு.

அந்தப் பொன்னுகள அள்ளிட்டுப்போயி, வீட்டுல வச்சுக்கிட்டு, அண்ணங்களுக்கு கல்யாணம் செஞ்சு வக்கிறா. எல்லாருக்கும் கல்யாணத்த முடிச்சிட்டு, அவளும், அடுத்த ஊரு ராசாவுக்கு வாக்கப்பட்டுகிட்டா.

வாக்கப்பட்டுப் போகயில, மதினிமார்களுக்கு, நோம்பு இருக்ற மொறயச் சொல்லிட்டு, தான், நோம்பு செஞ்ச கொழுக்கட்டய மதினிங்ககிட்டக் குடுத்திட்டுப் போயிட்டா, இவங்க, உப்பில்லாத கொழுக்கட்ட ஒண்ணுக்குமாகாதுண்டு, வண்ணாத்திகிட்டக் குடுத்திட்டாங்க.

அதுல இருந்து, செல்வங் கொறைஞ்சுகிட்டே போயி, ஏழயாப் போனாங்க. ஏழயாப் போன பெறகு, வெறகு வித்தாத்தா கஞ்சிங்கிற அளவுக்கு வந்திருச்சு.

அடுத்த ஊர்ல, தங்கச்சி நல்லா பொழைக்கிறா. அப்ப, அண்ணமார் ஏழுபேரும், ஏழுபேரு பொஞ்சாதிகளும், வெறகு செமந்துகிட்டு, தங்கச்சி வீட்டு வழியாப் போறாங்க. போகயில, தங்கச்சி பாத்துப்பிட்டா. பாத்து, அந்தப் பதினாலு வெறகுக் கட்டுகளயும் வாங்கிக்கிட்டு, அவங்களுக்கு சோறு குடுத்து, துணி குடுத்து அனுப்பி வச்சிட்டா. அனுப்பி வச்சிட்டு, தங்கணவன்கிட்டக் கேட்டுக்கிட்டு, பெறந்த வீட்டுக்குப் போறா.

போயி, மதினிங்களப் பாத்து, குறுணி நெல்ல எடுத்து குந்தாணி உருட்டுங்கண்டு சொல்லி, நோம்பு நோக்குற மொறய, மதினிங்களுக்குச் சொல்லித் தாரா. வண்ணாத்திகிட்ட இருந்த, அம்மன் உருவத்த வாங்கிட்டு வந்து, மொறயா நோன்பு, இருந்து, இழந்த செல்வத்த மீண்டும் வரச்செஞ்சு, நல்லா வாழ வச்சாளாம்.

4. ராசா மகன்

ஒரு ஊர்ல – ஒரு ராசா இருந்தாரு. அவருக்கு ஒரு மகன் பெறந்தர். அவனோட சாதகத்தச் சோசியகாரங்க பாத்து, இவனுக்குப் பத்து வயசாகும்போது, அவனோட தாய் தகப்பன் செத்துப் போவாங்கண்டு சொல்லிட்டாங்க. அதே மாதிரி, இவனுக்கு பத்து வயசாச்சு. தாய் தகப்பனுந் செத்துப் போயிட்டாங்க. தாய் தகப்பன் செத்த பெறகு, நமக்கெதுக்கு ராசா பட்டம்ண்ட்டு பரதேசம் புறப்பட்டுப் போறர்.

பரதேசம் போனவ், மருதைக்குப் போயிட்டர். போயி, பாண்டியங்கிட்ட வேலக்கிச் சேந்திட்டர். அந்தப் பாண்டினுக்கு ஒரே மக. செல்லமா வளக்குறாரு. அப்ப, அவ தெனந்தோறும் பட்டணப்பிரவேசம் போறது வழக்கம்.

ஒருநா, பட்டணப் பிரவேசம் போகப் புறப்பட்டா இளவரசி, வண்டியோட்டிக்குச் சொகமில்ல. அதுனால, இவன, வண்டிய ஒட்டிக்கிட்டுப் போண்டு, பாண்டியன் சொல்லிட்டா. எனக்கு வண்டியோட்டத் தெரியாதுண்டு இவ் சொன்னர். நீ ஒண்ணும் மாட்டப் பத்த வேணாம். மாடு தன்னால போகும். இளவரசிக்குத் தொணக்கி மட்டும் போண்டு, பாண்டியன் சொல்லிட்டா. அப்ப, வண்டிய ஒட்டிக்கிட்டுப் போறர்.

வண்டி போகுது. போகயில, இளவரசிக்குத் தாகம் அதிகமாயிருச்சு. வண்டிய நிப்பாட்டிட்டு, கூஜாவத் தூக்கிக்கிட்டு தண்ணி கொண்டுவரப் போறர்.

போற வழியில, ஒரு பெரிய தெப்பந் தெரியுது. தண்ணி மேல, ஒரு ஆளு ஒக்காந்திருக்காப்ல தெரியுது. கிட்டப் போயிப் பாக்குறர். அந்த ஆளு கோரைய முடிஞ்சு – முடிஞ்சு போட்டுக்கிட்டு, தியானம் பண்ணிக்கிட்டிருந்தாரு.

இவரு பெரிய முனிவரு போல, கேக்காம, தண்ணி மோந்தா, சபிச்சாலும் சபிச்சுருவாருண்டு, சாமி! கொஞ்சந் தண்ணி மோந்துகிரவாண்டு கேட்டா். கேக்கவும், அவரு மோந்துக்கப்பா, நாந்தா, இந்த தெப்பத்த உண்டாக்கினேண்டு, அந்த ஆளுசொல்றாரு.

தண்ணி மேல ஒக்காந்து, கோரைய முடிஞ்சு – முடிஞ்சு போட்டுக்கிட்டு இருக்கிங்களே, நீங்க யாருண்டு கேட்டா.

நாந்தாப்பா, பிரமதேவன். யாருக்கு யாருண்டு முடிபோடுறே. என்னோட முடுச்சுப்படிதா் கலியாணம் நடக்கும். நா் முடியுறத, யாராலும் மாத்த முடியாதுண்டு சொல்றாரு.

சொல்லவும், அப்படியா சாமி! நானோ வாலிபன், கலி யாணமாகுற வயசுல இருக்கே. எனக்கு எந்தப் பொண்ணுண்டு சொல்லுங்கண்டு கேக்குறா். அட! நிய்யி கூட்டிக்கிட்டு வந்திருக்கியே, அந்தப் பொண்ணுதாப்பா ஒனக்கு. அப்பவே ஒனக்கு முடிச்சு போட்டுட்டேண்டு, முனிவரு, தண்ணி மேல ஒக்காந்துகிட்டு சொல்றாரு.

சொல்லவும், தண்ணி மோந்துகிட்டு, வேகமா வண்டிக்கிட்ட வந்தா். தாகத்தோட இளவரசி காத்துக்கிட்டிருக்கா. வரவும், என்னா? இவ்வளவு நேரம்ண்டு இளவரசி கேட்டா்.

தண்ணி மோக்கப் போன தெப்பத்ல, பிரம தேவனப் பாத்தே. தண்ணி மேல ஒக்காந்துக்கிட்டு, யாருக்கு யாருண்டு முடிபோட்டுக்கிட்டிருக்காரு. எனக்குயாருண்டு கேட்டே. அவரு ஒன்னயச் சொன்னாரு. அப்டியே வந்தேண்டு சொன்னா்.

சொல்லவும், இளவரசிக்கு பயங்கரமான கோவம் வந்திருச்சு. ஏண்டா! பண்ணக்காரப் பயலே! என்னா பேச்சுப் பேசுறேண்டு, கோவத்ல, காலுல கெடந்த தங்கச் செருப்பக்

கழுத்தி அவன எறிஞ்சுட்டா!. எறியவும், இவனுக்குப் பயம் வந்திருச்சு. அப்ப என்னா நெனக்கிறா, ராசா கொண்டு போட்டுருவாண்டு வண்டிய எடவழில விட்டுட்டு, ஓடிப் போயிட்டா.

ஓடிப் போகவும், இளவரசி அரமணக்கித் திரும்ப வாரா. கோவத்தோட, ராசாகிட்டப் போயி, நீங்க வண்டியோட்ட அனுப்பின ஆளு, என்னயுப் பொண்டாள நெனக்கிறாண்டு பாண்டியங்கிட்டச் சொல்லிப்பிட்டா. பாண்டியனுக்குக் கடுங்கோபம். அவனப் பிடிச்சுட்டு வரப் படைய அனுப்புறா. எங்கயும் கெடைக்காமல, காவக்காரங்க திரும்பி வாராங்க. அவன் காத வழி ஓடிப்போயிட்டா.

இவன் போயி, ஒரு மலயில குடியிருக்கா. ராத்ரில மலயடிவாரத்ல இருக்ற ஊர்ல வந்து, பிச்சயெடுத்துப் பொளச்சுக்கிட்டிருக்கா. இப்டி இருக்கயில 19 வயசு முடியுது. சனி தெச முடிஞ்சு, புதன் தெச வருது. பொண்ணு கெடச்சாலும் புதன் கெடைக்காதுண்டு சொல்லுவாங்க பெரியவங்க.

இங்க, அரமணயில இளவரசிக்குக் கலியாணம் ஏற்பாடு நடக்குது. கேட்டு வரவங்களுக்கு தரமாட்டேண்டு, மன்னரு சொல்லிடுறாரு. ஆன கையில மாலயக் குடுத்து, அது, ஆருக்கு மால போடுதோ, அவந்தா ஏ... மகளுக்குக் கணவன்டு, சொல்லி, பறை சாட்டிட்டாரு. அப்ப! நாட்டுல இருக்கிற ஆம்பளைங்களெல்லாம் மருதையில வந்து கூடிட்டாங்க.

ஆன கையில, மாலயக் குடுத்துப் போகச் சொன்னாங்க. ஓங்கழுத்ல போடாதா? ஏங் கழுத்ல போடாதாண்டு ஏங்கிக்கிட்டிருந்தவங்கள விட்டுப்பிட்டு, நேரா மலய நோக்கிப் போகுது. ஆனக்கி முன்னாலும் பின்னாலும் சனக்கூட்டம் வருது.

ஆனக்கிப் பின்னால பெருங்கூட்டம் வரதப் பாத்திட்டு ஒழிஞ்சுகிட்டிருந்தவன், பயந்துபோயி, இண்ணக்கி நம்ம செத்தோம்ண்டு, நெனச்சுக்கிட்டு, பொதைக்குள்ள பதுங்கிப் படுத்துக்கிட்டார். ஆன கூப்பிட்டுச்சு. சரி! இனி என்ன ஆனாலும் ஆகட்டும்ண்டு, வெளிய வந்தா். மாலயப் போட்டு தூக்கி முதுகில வச்சுக்கிட்டு, அரமணக்கி நேரா வருது.

கொண்டுட்டு வந்து, அரமணயில விட்டுச்சு. விடவும், இளவரசிக்கும், இவனுக்கும் தடபுடலா கல்யாணம் நடக்குது. நடந்த பெறகு ரெண்டு பேரும் பேசல. இளவரசி கலங்கினா. பெண்ணாப் பெறக்கிறதக் காட்டிலும், மண்ணாப் பெறந்திருக்கலாம்ண்டு நெனச்சு, ரெம்ப வருத்தமா இருக்கா.

இருக்கயில, ஒருநா, மந்திரி, இளவரசி புருசங்கிட்ட, என்ன மனச்சடவா இருக்கிங்கண்டு கேட்டார்.

ஆறுமாசம் நோன்புல இருக்கே. மூணு மாசம் முடிஞ்சு போச்சு. இன்னும் மூணு மாசம் இருக்கு. அதுக்குப் பின்னால இளவரசிகிட்ட, நல்லா இருப்பேண்டு சொல்றா்.

ஆறுமாசம் நோம்பு முடிஞ்சு போச்சு. தெரமரவுல இருந்து, ரெண்டுபேரும் ஒருத்தர ஒருத்தர் பாக்காம, சுத்தி வந்து நோம்பு முடிச்சாங்க.

அப்படி முடிச்சு இருக்கயில, இளவரசி எரிஞ்ச தங்கச் செருப்ப, இளவரசி முன்னால போட்டார். போடவும், இளவரசி அடயாளம் கண்டுகிட்டா. பண்ணக்காரனே, எனக்குப் புருசனா வந்திட்டானே. நமக்குப் பிராப்தம், இதுதாண்டு நெனச்சு, அவங்காலுல விழுந்து மன்னிப்புக் கேட்டா.

ரெண்டுபேரும் சந்தோசமா, ரெண்டு நாட்டுக்கும் அரசனாகி, நல்லா வாந்தாங்களாம். கெடைக்குறதுதான் கெடைக்கும். இருக்கிறதெல்லாமா கெடைக்கும். அவனுக்குண்டு முடி போட்டிருக்கு. முடிஞ்சு போச்சு, இல்லாட்டி முடியுமா?

5. வெறகு தலையன்

ஒரு ஊர்ல – ஒரு வெறகு தலயன் இருந்தர். அவனுக்கு ஏழு பிள்ளைங்க இருந்துச்சு. ரொம்ப ஏழ. வெறகு வெட்டித்தா குடும்பத்தக் காப்பத்தணும்.வெறகு வெட்டி வித்து, அத வச்சுப் பொளச்சுக்கிட்டிருந்தர்.

ஒருநா, வெறகு வெட்டக் காட்டுக்குப் போனர். அண்ணக்கிக் காலைல கஞ்சி இல்ல. கஞ்சி குடிக்காமப் போனதுனால ஒரே கெரக்கமா இருந்துச்சு. ஆலாமரத்து நெழல்ல, படுத்து ஒரங்கிட்டிருந்தர். பாக்கப் பரிதாபமா இருந்துச்சு.

எரக்கப்பட்ட எண்ணாயிரத்துக்கும், பறக்கப்பட்ட பன்னிராயிரத்துக்கும் படியளக்கிற பார்வதியும் – பரமசிவனும், அங்க, வழி போக்கா வந்தவங்க, அந்த ஆலாமரத்து மேல வந்து ஒக்காந்தாங்க. பரமாத்தமா – கீழ பாத்த பார்வதி, இவனப் பாத்திட்டு, ரெம்ப எரக்கப்பட்டு, நாதா!! கிழ பாத்திங்களா? ரெம்ப வறும போல இருக்கு. இவனுக்கு ஏதாச்சுஞ் செய்யணும்ண்டு, பரமசிவங்கிட்டச் சொல்லுச்சு.

இதுக்குத்தா, பொம்பளைங்க கூட வரக்கூடாதுண்றது. அவனப் பத்தி எனக்குத் தெரியும். என்னத்தக் குடுத்தாலும் அவனுக்குத் தங்காது. அடுத்த மரத்ல பாரு சனீஸ்வரன், நம்மளப் பாத்து சிரிச்சுக்கிட்டிருக்காரு. எதக் குடுத்தாலும் அவரு பரிச்சுக்கிருவாரு. அதனால, பெண்ணே!! வா! நம்ம போகலாம்ண்டு சொன்னாரு.

ஆனா, பார்வதி பொண்ணுல்ல, அவரு கூப்பிட்டதும் போகல. ஏதாச்சும், இவனுக்குக் குடுத்திட்டுத்தா வருவேண்டு சொல்லுச்சு. என்னத்தக் குடுப்பியோ குடு. நா, சொல்றத சொல்லிட்டேண்டு பெறப்பிட்டுப் போறாரு. நாதா!! படியளக்கத்தானே நாம இந்த மார்க்கமா வந்திருக்கோம். இந்தப் பாவத்தப் பாத்துட்டு, எப்பிடிப் போறதுண்டு? பார்வதி தடுத்துச்சு. பெண்ணே!! ஒ . . . இசுட்டம்ண்ட்டு, மரத்து மேல ஒக்காந்துகிட்டாரு.

ஒரு சருவத்து நெறயாப் பவுன்காசத் திட்டுச்சு, அறுவதுபாகக் கூந்தல்ல, ஒரு கூந்தலப் புடுங்கி, சருவத்தக் கெட்டி, வெறகு தலயன் வகுத்து மேல ஒக்காரும்படி, சருவத்த, பார்வதி விட்டுச்சு.

முளிச்சுப் பாத்தா. சருவம் இருந்துச்சு. உள்ள பாத்தா, நெறயாப் பவுங் காசு. அப்ப, சனீஸ்வரன், இவங்களப் பாத்து சிரிச்சாரு. எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போனா. அப்ப-வீதில சண்ட புடுச்சுக்கிட்டு இருந்தாங்க. சருவத்த, அடுப்பங்கரயில வச்சுட்டு, வீதிக்கு சண்ட பாக்கப் போயிட்டா.

அந்த நேரத்ல, அடுத்த வீட்டுக்காரி, தீய்யி எடுக்க வந்தவ, சருவத்தத் தூக்கி மாராப்புச் சீலக்குள்ள வச்சுக்கிட்டுப் போயிட்டா. அப்ப.

பொண்டாட்டிகாரி வையிரா. வசவு தாங்கமாட்டாம, நாண்டுகிட்டுச் சாகணும்ண்டு ஆலாமரத்துக்குப் போறா. சாவமா? வேணாமாண்டுற நெனப்புல, அந்த மரத்து நெழல்ல படுத்துக் கெடந்தா. அப்ப, பார்வதி – பரமசிவம் அந்தப் பக்கமா வந்தாங்க.

பெண்ணே!! கீழ பாரு! அவனுக்கு இண்ணக்கி என்ன குடுக்கப் போறேண்டு கேட்டாரு. நாதா!! நம்ம குடுக்கிறதக் குடுத்துக்கிட்டே இருப்போம்ண்டு, பார்வதி சொல்லுச்சு.

வெரல்ல, இருந்த கணயாழியக் கழத்தி, தலமயித்ல முடுஞ்சு வகுத்துக்கு நேரா விட்டுச்சு. அத எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போனர்.

போறா வழியில, ஒரு தெப்பம் இருந்துச்சு. தண்ணி குடிச்சுட்டு போவோம்ண்ட்டு கணயாழியப் படில வச்சுட்டு தண்ணி குடிச்சர். கணயாழி மின்னுச்சு. அத எரண்டு நெனச்சு, ஒரு மீனு, படில தவ்வி முழுங்கிட்டுப் போயிருச்சு. அழுது வடிஞ்ச மொகத்தோட வீட்டுக்குப் போனர். அங்க பொண்டாட்டிகாரி ரெண்டு திட்டுத் திட்னா.

மறுநாக் காலைல கோடாரிய எடுத்துக்கிட்டு, வெறகு வெட்டக் காட்டுக்குப் போறர். வெறகு வெட்டிக் கெட்டி வச்சுட்டு, அந்த ஆலாமரத்து நெழல்ல வந்து படுத்திருந்தர்.

பூமிய நாலா பக்கமும் சுத்தி வர்ர பார்வதி – பரமசிவன், அந்த மரத்துக்கு வந்தாங்க. இவ் படுத்திருக்கிறதப் பாத்திட்டு, சனீஸ்வரன் கணயாழியயும் பறிச்சுக்கிட்டாரு போலிருக்கு, போயி, மீன் பிடிச்சாவது பொழச்சுக்கிரட்டும்ண்டு, ஒரு தூண்டியக் குடுத்தாங்க.

தூண்டிய எடுத்துக்கிட்டு வீட்டுக்கு வந்தர். வர்ரபோது, தெப்பத்ல தண்ணி குடிக்கப் போனவ், தூண்டிலப் போட்டர். கணயாழிய முழுங்கின மீனு தூண்டில்ல மாட்டிக்கிருச்சு.

மீனப் புடுச்சுக்கிட்டு வீட்டுக்கு வந்தா். சட்டில போட்டு மூடி வச்சுட்டு, அரிசி வாங்க கட வீதிக்குப் போயிட்டா். வெறகு தலய ஏழுங்கிறதால, யாருமே கடங் குடுக்க மாட்டேண்ட்டாங்க. வீட்டுக்குத் திரும்பி வந்தா். பொண்டாட்டிக்காரி சத்து கெட்ட மனுசேண்டு வஞ்சா. பிள்ளைக பசில அழுகுதுக. இவனுக்கும் பசி. பசிக் கெரக்கத்துல, அந்த மீன எடுத்துக்கிட்டுச் செட்டியாரு கடைக்குப் போறா். கடயில குடுத்துட்டு, அரிசி வாங்கிட்டு வந்தா். பொண்டாட்டிகாரி, அதக் கஞ்சி வெள்ளமாப் போட்டுக் குடுத்தா. குடிச்சுட்டு, வெறகு வெட்டப் போறா்.

வெறகு வெட்டிக் கெட்டி வச்சுட்டு, ஆலாமரத்து நெழல்ல வந்து படுத்தா். படுத்தவ் கொஞ்ச நேரத்ல, ஒரங்கிப் போயிட்டா்.

வழக்கம் போல பார்வதி – பரமசிவன், அந்த மரத்ல வந்து ஒக்காந்தாங்க. அப்ப பரமசிவன், பெண்ணே! இவனுக்கு என்னா குடுத்தாலும் சனீஸ்வரன் பரிச்சுக்கிட்டே இருப்பாரு. நம்ம இவனுக்கு குடுப்போம். ஆனா, அத இன்னொருவ் அடஞ்சு, நல்லப் பொளப்பா். பவுன்காசு குடுத்தோம். கணயாழி குடுத்தோம். கணயாழிய இவனால வச்சுப் பொழைக்க முடியல. இது அவனப் புடுச்ச சனி, அவனோட தலவிதி. இவனோட விதியப் புடிக்க நம்மால முடியாது, வா பெண்ணே! நேரமாச்சு. போவோம்ண்ட்டுப் போயிட்டாங்க.

வெறகு தலயன் அண்ணைக்கிருந்து, வெறகு வெட்டி வித்துப் பொளச்சுக்கிட்டிருந்தா். அவனோட வாழ்க்க கண்ணீரும் கம்பலயுமாவே இருந்திச்சு. சனி கெடுக்கவுஞ் செய்யும் குடுக்கவுஞ் செய்யும். சனியம் புடுச்சவனுக்கு என்னா குடுத்தாலும் நிக்காது.

6. செய்த உதவி

ஒரு ஊர்ல – ஒரு வெறகு வெட்டி இருந்தா். அவனுக்கு ஏழு பிள்ளைக. வெறகு வெட்டினாத்தா கஞ்சி. ஒரு நாளக்கி, ஒரு படி கேப்பக்கி வெறகு வெட்டுறது. அதக் கொண்டு வந்து திரிச்சு, மாவாக்கி, கூழாக் காச்சி, அவனுக்குக் கொஞ்சங் கெட்டியாக் குடுக்றது. பிள்ளைகளுக்கு தண்ணியா, கரச்சுக் குடுத்திட்டு படுத்துக்றது.

இப்டி இருக்கயில, அந்த ஊரு ராசா, மேவீட்ல இருந்துகிட்டு, இவனப் பாக்குறது. பாவம்! ஏழு பிள்ளைகளயும் வச்சு, இந்த வெறகு வெட்டியான், இம்புட்டு கஸ்ட்டப் படுறானேண்டு நெனச்சு, மனசு எரங்குவாரு.

ஒருநா, வெறகு வெட்டியான், அவ் வீட்டு வாசல்ல வெறகப் போட்டுட்டு, சும்மாட அவுக்காம ஒக்காந்திருக்கா். ஒக்காந்திருக்கயில, இந்த ராசா, ஆள விட்டுக் கூப்டுறாரு. அவுங்க வந்து, ஒன்னயராசா கூப்டுறாருண்டு சொன்னாங்க. சொல்லவும், போனா்.

போயி, ஐயா! கூப்டிங்களாம்ல்லண்டு கேட்டா. ஆமாப்பா! நிய்யி கஸ்ட்டப்படுறத என்னால பொறுக்க முடியல. இந்தா, ஏழு மூட கேப்ப, ஏழு மூட மொச்சப்பயறு – கொண்டு போயிச் சாப்டுண்டு சொல்லிக் குடுத்தாரு. வாங்கிட்டு வந்து, ரெண்டு படி கேப்பய, எடுத்துத் திரிச்சு. களியக்கிண்டி, மொச்சப்பயறுச் சாற வச்சுத் திண்டுபிட்டு, வீட்டு வாசல்ல ஒக்காந்திருக்காங்க.

அப்ப, ராசா கூப்டுறாருண்டு வேலக்காரங்க வந்து சொன்னாங்க. சொல்லவும், அரமணக்கிப் போனா். போகவும், வெறகு வெட்டி ஒனக்கு நூறு ரூவா தர்ரே. அதக்கொண்டு போயி, சந்தயில மாடு புடிச்சுக்கிட்டு வா –ண்டு சொன்னாரு. ஆனா, இந்த நூறு ரூவாய எனக்கு, நிய்யி, என்னப் போல வந்த பெறகு, தரணும்ண்டு சொல்லிக்குடுத்தாரு.

இந்த நூறு ரூவாயக் கொண்டுகிட்டு, கெட்டுச்சோறு கெட்டிக்கிட்டுப் போறா். போகயில், அங்கிட்டு ஒரு சம்சாரி, பத்து ஆளத், தோட்டத்ல வேலக்கி விட்டுட்டு, மாட்ட வித்துச் சம்பளங் குடுக்கணும்ண்டு, ரெண்டு மாடுகளயும் புடிச்சுக்கிட்டு, எதுக்க வர்ராரு.

எதுக்க வரவும், என்னாயா மாடு வெலக்கிக் குடுக்குறதாண்டு கேக்குறா். கேக்கவும், ஆமாயாண்டு சம்சாரி சொன்னா். எவ்வளவு ரூவாண்டு கேட்டா. நூறு ரூவாண்டு சம்சாரி சொன்னா். சரி, அப்ப – எனக்குக் குடுண்டு மாட்டப் புடுச்சுக்கிட்டு, ரூவாயக் குடுத்திட்டு வர்றா். வந்து, மாட்டக் கெட்டி வச்சிட்டு, வீட்டுக்கு வந்திட்டா்.

ராசா, மாடுகளப் பாத்திட்டு வெறகு வெட்டியானுக்குக் கூட மாடு புடிக்கத் தெரியுதேண்டு சொல்லி, வெறகு வெட்டியானப் போயிக் கூட்டிட்டு வாங்கடாண்டு சொன்னாரு. சொல்லவும், போயிக் கூட்டிட்டு வந்தாங்க.

வந்தா், வரவும், வாப்பா வெறகு வெட்டி! நல்ல மாடுகளப் புடிச்சிட்டு வந்திருக்கியேண்டு சொல்லிட்டு, மந்தக்காட்ல, அஞ்சு குழில கொள்ளு வெதச்சுக்க. நடுக்காட்ல, அஞ்சு குழில சோளம் வெதச்சுக்க. மணமேட்டுக்காட்ல, அஞ்சு குழில கள்ள போட்டுக்க. மேலக்காட்ல, அஞ்சு குழில காலக்கள்ள போட்டுக்கண்டு, இருவது குழி நெலங் குடுத்திட்டாரு. படப்ல பதினாறு மொழத்த, அளந்துவிடச் சொல்லிட்டாரு. வேலக்காரங்க அளந்து விட்டுட்டாங்க.

சொந்த வெவசாயம், வெறகு வெட்டியானுக்கு நடக்குது. அப்ப, மழ பேயவுங் காடெல்லாம் உழுகணும். வெறகு வெட்டியானக் கூப்ட்டு வந்து, நாளேறுக் கட்டுங்கடாண்டு ராசா சொல்றாரு. போயி, வெறகு வெட்டியானக் கூட்டிட்டு

வந்தாங்க. மொதல்ல, அரமணக்காடுகள வெதைக்கிறாங்க. வெதச்சு முடிச்சிட்டு, வெறகு வெட்டியான், அவனுக்கு விட்ட காடுகள வெதக்கிறா.

எல்லாக் காடுகளும் வெதச்சு முடிச்சாச்சு. முடிச்சிட்டு, கொஞ்சநாக் கழிச்சு, வெறகு வெட்டி! வண்டியப் பூட்டு, காட்ல, பயிருக, எப்டி இருக்ண்டு பாத்துட்டு வருவோம்ண்டு ராசா சொல்றாரு. சரிண்டு, வண்டியப் பூட்னா. காடு பாக்கப் போறாங்க.

போயி, காடெல்லாம் சுத்திப் பாத்திட்டு, வெறகு வெட்டியானப் பாத்து, ஒங்காட்ல பயிருக நல்லா இருக்குது. இந்த வருசம் மழயும் மொகம் பாக்கும் போல. வெளயவும் நாங் குடத்த நூறு ரூவாய மட்டும் எனக்குக் குடுத்திரு. ஏழு மூட கேப்பயும் வேணாம், மொச்சப் பயிறும் வேணாம்ண்டு சொன்னாரு.

சொல்லவும், சரிங்க சாமி, எம்புட்டு ஒதவி செஞ்சிருக்கீங்க. இதெல்லாம் மறப்பனா, தரேஞ் சாமிண்டு, வெறகு வெட்டியான் சொல்றா.

பேசிக்கிட்டு, வீட்ல வந்து இருக்காங்க. இருந்துகிட்டிருக்கயில, காட்ல கருது வெளஞ்சிருச்சு. கருது அறுக்கணும்ண்டு, வண்டியக் கெட்டிக்கிட்டுப் போறாங்க. அரமணக் காடுகள்ல கருதறுத்து, அரமணயில கொண்டு வந்து அடஞ்சு வச்சிட்டு, வெறகு வெட்டியான், அவங் காட்ல கருதறுத்து, அவ் வீட்ல கொண்டு வந்து அடயிறா.

கருதுகள அறுத்து முடிய தைமாசம் வந்திருச்சு. தை மாசம், வீட்ல காப்புக் கெட்டிட்டு கருதடிக்கிறாங்க. தவசஞ் – தானியத்த அடிச்சு,வீட்ல போட்டுக்கிட்டு, வெறகு வெட்டியான், கீவீடு – மேவீடு கட்றா. இப்ப, அரமணக்கிச் சரியா வந்திட்டா. வெறகு வெட்டியான் மகங்கபெரிய வாலிபங்களா வந்திட்டாங்க.

இப்ப, அரமணக்கி மேல வசதியா இருக்காங்க. இருக்கயில, குடுத்த, நூறு ரூவாய வாங்கிட்டு வருவோம்ண்டு, ராசா வாராரு. வரயில, வெறகு வெட்டியானும் அவ் பொண்டாட்டியும் மேவீட்ல இருந்துகிட்டு, ராசா வர்ரதப் பாத்து, சிரிச்சுக்கிட்டிருக்காங்க.

வீட்டுக்குள்ள வரயில, பயக இருந்தாங்க. நொப்பனுக்கு நூறு ரூவா குடுத்தே். அதத் தாங்கண்டு கேட்டாரு. கேக்கவும், வெறகு வெட்டியான் மேவீட்ல இருந்துகிட்டு, ஏண்டா! கெழட்டுப் பயலே! நா் எந்தந்தண்டிப் பணக்காரன். ஒங்கிட்ட வந்து நூறு ரூவா கடன் வாங்குனாக்கும்டா. வேட்ட நாயக் கழத்தி விடுங்கடா. கடிக்கட்டும்ண்டு சொல்றா். சொல்லவும், வேட்ட நாயக் கழத்தி விட்டுட்டாங்க. கழத்தி விடவும், வெரட்டி – வெரட்டிக் கடிக்குதுக.

கடிக்கவும், ராசா, தப்பிச்சு அரமணக்கிப் போயிட்டாரு. போயி கண்டங் கோடாலிய எடுத்துக்கிட்டு, நேரா ரங்கங்கிட்டப் போறாரு. ரங்கன் ஆரு? ரங்கநாதர் சாமிகிட்ட. போயி, ரங்கா! இதக் கேட்டுக் குடு. கேட்டுக் குடுக்கலண்டா, ஒன்னயக் கண்டந் துண்டமா வெட்டுவேண்டு ராசா சொல்றாரு.

சொல்லவும், ரங்கன் நா் கேட்டுக் குடுக்குறே். இப்ப, நிய்யி வீட்டுக்குப் போ – ண்டு சொல்லிட்டாரு. சொல்லவும், வீட்டுக்கு வந்து, எப்பயும் போல ராசா பரிபாலனஞ் செஞ்சுகிட்டு இருக்காரு.

இருக்கும்போது, வெறகு வெட்டியானுக்குச் சொத்து கங்கு கணக்கில்லாம ஏறிப் போச்சு. இப்ப வெறகு வெட்டியா, வேல செய்றதில்ல. எங்கயும் நடந்து போறதில்ல.

ஒருநாத் தேதியில, வண்டியக் கட்டுங்கடா மக்கா, போயிக் காடு பாத்திட்டு வருவோம்ண்டு வெறகு வெட்டியான் சொன்னா். சொல்லவும், வண்டியக் கட்னாங்க, ஏறிக்கிட்டு வெறகு வெட்டியான் போறா்.

அப்ப, வண்டி நடுக்காட்டுக்குப் போயிருச்சு. மானத்ல எங்கயுமே மழ மேகம்ல்ல. திடீர்ண்டு, மேகந் தெறண்டு மழ பேய்றதுக்கு, இடியும் மின்னலும் வெட்டுது. இடி இடிக்கய்ல, டம்ண்டு ஒரு இடி, வெறகு வெட்டியான் மேல விழுகவும், அங்கனயே செத்துப் போனாரு.

செத்துப் போகவும், அந்த வண்டிலயே வச்சு வீட்டுக்குத் தூக்கிட்டு வராங்க. வரயில, வெறகு வெட்டியான் பொண்டாட்டி, மேவீட்ல ஒக்காந்து சிக்கெடுத்துக்கிட்டிருக்கா. அப்ப, வண்டி வருது. இடி விழுந்து, அப்பா செத்துப் போனாருண்டு பயக போயிச் சொன்னாங்க. அவசரத்ல ஓடியாந்தா. முந்திச் சீல தடுக்கி விட்டு, படில விழுந்து, உருண்டு அவளுஞ் செத்துப் போனா.

இவங்க சாகவும், சொத்துங் கொறய ஆரம்பிச்சிருச்சு. கடசில இவங்க வெறகு செமக்குறாங்க. அந்த ரங்கந்தா இதக் கேட்டுக் குடுக்குறாரு.

வெறகு செமக்கய்ல, பாத்தவங்க, அரமணாருகிட்ட வாங்ன ரூவாய, நொப்பன், திருப்பித் தராதனால, அவரு விட்ட வாக்கு புடிச்சு இப்படியாச்சு. அரமண ராசாகிட்டப் போயி, காலுல கையில விழுந்து, தின்னீறு வாங்குங்கண்டு சொன்னாங்க.

சொல்லவும், இவங்க போயி, ராசா காலுல கையில விழுந்து, மன்னிச்சுக்குங்க சாமிண்டு விழுந்தாங்க. விழுகவும், நாஞ் செஞ்ச ஒதவிய மறந்ததுக்கு ரங்கன் தண்டன குடுத்திட்டாரு. இனிமே, செஞ்ச நன்றிய மறக்காதீங்கடாண்டு, தின்னீற ராசா குடுத்தாராம். தின்னீறு வாங்னப் பெறகு, நல்லாப் பொளச்சாங்களாம்.

7. விதி

ஒரு ஊர்ல – ஒரு ராசா. அந்த ராசாவுக்கு ஏராளமா நெலங்க. ராசா வீட்டு நெலத்ல, அந்த ஏரியாவுல இருக்ற எடயங்க கெட போட்டு, நெலத்துக்கு ஒரம் (உரம்) போட்டுத் தரது வழக்கம். ஆடுகள, அந்த வெளில மேய விடுறது. ராசா நெலத்ல, கொண்டு வந்து படுக்கப் போட்டுறது.

அந்த ஆட்டு எடயங்க கூட்டத்ல – ஒரு அழகான பெண் இருந்தா. அவளக் கல்யாணம் செய்யணும்ண்டு, ராசா நெனச்சு, எடயங்ககிட்டக் கேட்டு, கல்யாணம் முடுச்சுக்கிட்டாரு. ராசாவுக்கு, எடயங்க தராமலா போயிருவாங்க. தந்திட்டாங்க.

ராசாவுக்கு ஒரு பொம்பளப் புள்ள பெறந்திருச்சு. அந்தப் பிள்ள வயசுக்கு வரவும், தந் தம்பிக்குக் கல்யாணம் செஞ்சு வைக்கணும்ண்டு எடச்சி சொல்றா.

நாந்தா ஒம்மேல ஆச வச்சுக் கலியாணம் செஞ்சே. அதுனால என்னப் போல, ஒரு ராசாவுக்குத்தா் கலியாணம் செஞ்சு தருவேனே தவிர, எடயனுக்குப், பொண்ணத் தரமாட்டேண்டு, ராசா சொல்லிட்டாரு.

ரெண்டுவேரும் விட்டுக் கொடுக்காம, வீம்பு செஞ்சுகிட்டிருக்காங்க. ராசா மகளுக்கு, வயசு ஏறிக்கிட்டுப் போகுது. அப்ப:

அந்த வழியா, நாரதரு பூலோகத்தச் சுத்திப் பாக்க வந்தாரு. வந்தவரு, தண்ணி குடிக்க, ராசா வீட்டுக்குப் போனாரு. ராசா பொஞ்சாதியான எடச்சி, நாரதருக்கு தண்ணி குடுத்திட்டு, எம் மகளுக்கு, எப்பக் கலியாணம் ஆகுஞ்சாமி? சொல்லுங்கண்டு கேக்குறா.

அப்ப நாரதரு சொல்றாரு. அம்மா! ஓம் பொண்ணுக்கு ஒரு குசுட்ட ரோகிதா புருசனா வருவாரீண்டு, சொல்லிட்டுப் போயிட்டாரு. எங்க? அவரு எதுக்கு வந்தாரோ அதுக்கு.

மகளப் பத்தி சொல்லவும், எடச்சி, மனங் கலங்கி, மகள ஒரு பெட்டிக்குள்ள போட்டு அடச்சு, அதுக்குள்ள, பழம் மத்தப் பொருள்கள வச்சுப் பூட்டி, இதுக்குள்ள பழமும் மத்தப் பொருள்களும் இருக்கு. இதப் பத்திரமா தூக்கிட்டுப் போயி, எங்கப்பா வீட்ல, சேத்திருங்கண்டு சொல்லிடுறா.

ஒன்னயக் கொண்டு போயி, எங்கப்பன் வீட்ல வச்சுத் தொறப்பாங்க. அப்ப, ஓ... மாமன் எதுப்படுவர். அவனயே கலியாணம் பண்ணிக்கண்டு, மககிட்ட சொல்லி வச்சிட்டா.

அப்ப: வேலக்காரங்க, பெட்டியத் தூக்கிக்கிட்டுப் போறாங்க. போற வழில, ஒரு குசுட்ட ரோகி பசில மயங்கி, வழில கெடக்கர். பாவம்! பசில சாகப் போறரீண்டு நெனச்சு, பெட்டிக்குள்ள இருக்ற, பழத்ல ஒண்ண எடுத்துக் குடுக்கலாம்ண்டு, பெட்டிய எரக்கி, வேலக்காரங்க தொறக்கயில, எந்திருச்சிட்டா.

ராசா மக, – மொதல்ல, தனக்கு எதுககால இருந்த குசுட்டரோகியப் பாத்திடுறா. தாயி சொன்னது, நெனவுக்கு வருது. இவந்தா அம்மாவோட தம்பிண்டு நெனச்சு, அந்த குசுட்டரோகிய கலியாணம் செஞ்சுடுறா.

ராசாவுக்கும் – எடச்சிக்கும் ரொம்ப வருத்தம். கடசில பாத்தா, அந்த குசுட்டரோகி ஒரு ராசா மகன். ராசாவோட எண்ணமும் நெறவேறிப் போச்சு. நாரதரோட வாக்கும் நெறவேறிப் போச்சு. விதிய யாரும் மாத்த முடியாது. எல்லாம் விதிப்படிதா நடக்கும் தம்பி. பெறகு எல்லாம், சந்தோசமா வாந்தாங்களாம். நம்ம நெனக்கிறது நடக்காது.

8. தீபம்

ஒரு ஊர்ல – அம்மாவும் மகளும் இருந்தாங்களாம். அம்மா கைம்பொண்டாட்டி. அம்மாகாரி, எங்கயாவது அரிசி பொடைக்கப் போறது. அவங்க, குடுக்ற குறுண தவுடுங்களக் கொண்டு வந்து, கஞ்சியா காச்சிக் குடிக்கிறது. அதுல, கொஞ்சம் சோறு எடுத்து வச்சு, மக, திவத்த (தீபம்) வணங்குறது. மக – இப்டி தெனந்தோறும் திபத்த வணங்கி வர்ரா.

ஒரு அரசன், அவளப் பொண்ணு கேட்டு வந்தர். அம்மாகாரி, பொண்ணு குடுக்கலேண்டு சொல்லிட்டா. ராசா, அவளயுங் கேக்காம, மகளக் கூட்டிக்கிட்டுப் போயிட்டர். கூட்டிக்கிட்டுப் போயி, வீட்ல வச்சுக்கிட்டர். மகளும் சம்மதிச்சுப் போயிட்டா.

அப்ப, வீட்ல திபத்த சோறு வச்சு வணங்குற மாதிரி, அங்கயுஞ் செஞ்சுகிட்டு வந்தா. மகங்கிட்ட, மாமியா புகாரு பண்றா. எப்டிண்டா, ஓம்பொண்டாட்டி, சோற எடுத்துட்டுப் போயி, தனியா வச்சுத் திங்கிறாண்டு சொல்லிப்பிட்டா. இவள கொண்டு போயி, எங்நாவது வெட்டி போட்டுட்டு வரச் சொல்லிட்டர். கூட்டிட்டுப் போறாங்க.

அப்ப, ஒரு கொளத்தங்கரக்கி, கூட்டிட்டுப் போறாங்க. அந்த இருட்ல, தீவத்த வணங்க கையில இருக்ற ரைட்ட குடுங்கண்டு கேக்குறா. தீபவழிபாட்ட செஞ்சுட்டு வந்து, எதுக்கு என்னய இங்க கூப்பிட்டுட்டு வந்தீங்கண்டு கேட்டா. பதிலுச் சொல்லாம, தூங்குண்டு சொல்றாங்க. தூங்க வச்ச பெறகு, கொல்லணும்ண்டு நெனச்சுக்கிட்டு, பேசாம இருக்காங்க.

ராசாவோட நெனப்ப, வெளக்குக தெரிஞ்சிக்கிருச்சுக. ஒரு வெ–ளக்கு போயி, மத்த - மத்த வெள–க்குகளுக்கெல்லாம் இதச் சொல்லிப்பிருச்சு. அப்ப, மத்த வெளக்குகளெல்லாஞ் சேந்துவந்து ஒக்காந்துகிட்டுப் பேசுதுக. என்னா பேசுதுண்டா; அவள வெட்னா, நாமெல்லாம் நாகவேசம் எடுத்து, ராசாவக் கொத்திக் கொல்லணும்ண்டு பேசுதுக. நல்ல.... ஒரக்கத்துல இருந்த ராசாவுக்கு, வெளக்குக பேசுறது கேக்குது. கேக்கவும் பயம் வந்துருச்சு. பெண்டாட்டியோட பத்தினித்தனமுந் தெரிஞ்சு போச்சு. பெறகு, கூட்டிக்கிட்டு வந்து நல்லா வாழுந்தாங்களாம்.

9. கருப்பசாமி

உத்தப்ப நாயக்கனூர்ல—ஒரு ஜமீந்தாரு இருந்தாரு. அவரு, ஏதாச்சும் செஞ்சுக்கிட்டே இருப்பாராம். ஏதாச்சும் வேடிக்க செஞ்சு, பொழுதக் கழிப்பாராம். பொழுது போகலண்டா, எவனயாவது வம்புக்கிழுத்து, இல்லாட்டி, எவனயாவது வம்புல மாட்டிவிட்டு, சிரிச்சுப் பொழுதக் கழிக்கிறதா, அந்த ஜமீந்தாருக்கு வேல.

இப்படி இருக்கயில, அந்த ஜமீந்தாரு, தோட்டத்துக்குப் போனாரு. போயி, அங்க பூசணிக் கொடியப் பாக்குறாரு. அந்தக் கொடியில சின்னச் சின்னப் பிஞ்சுகளாக் கெடக்கு.

கெடக்கவும், ஜமீந்தாருக்கு ஒரு ஐடியா வந்திருச்சு. அத வச்சு ஒரு வேடிக்க காட்டணும்ண்டு நெனச்சு, அதுல ஒரு பிஞ்ச எடுத்துப் பானக்குள்ள விட்டு, குழியத் தோண்டி மண்ணப் போட்டு, மூடி வச்சுட்டாரு.

மூடி வைக்கவும், கொஞ்ச நாள்ல காயி பெருசாயிருச்சு. பெருசாகவும், அப்டியே பானயோட புடுங்கிட்டு வந்து, அரமணக்குள்ள, பானயோட பானயா வச்சுட்டாரு. இத வச்சு, ஒரு கண்ணாமூச்சு வெளையாட்டு வெளயாடணும்ண்டு நெனச்ச, அந்த ஏரியாவுல இருக்ற கோடாங்கிகளக் கூப்பிட்டு, இந்தப் பானக்குள்ள இருக்றது என்னாண்டு சொல்லுங்கடாண்டு கேக்குறாரு. ஒரு கோடாங்கி கூட, பானக்குள்ள இருக்றது என்னாண்டு சொல்ல முடியல. சொல்லலண்டா, அவங்களக் கொடுமப் படுத்தி, ரகள பண்ணி வெளையாடுறத, ஒரு பொழுது போக்கா வச்சிருக்காரு. இந்தப் பகுதில இருக்ற கோடாங்கிகளெல்லாஞ் ஜமீந்தாருகிட்டச் சிக்கிப் போனாங்க. இதுல கொக்குளம் கருப்பசாமி கோயிலுக் கோடாங்கி மட்டும் சிக்கல. இந்தக் கோடாங்கி பெரிய கெட்டிக்காரு. குறி சொல்றதுல படுசுட்டி. சாதில பறையன் அவந்தா கருப்பசாமி கோயிலுக்குப் பூசாரியும், இதுல ஒரு வேடிக்க என்னாண்டா, கொக்குளம் கருப்பசாமி கோயிலக் கட்டுனது, காராளன், வேளாளன், புலையன், கள்ளன், பூசாரியா இருக்றது பறையன். இந்த

நாட்டுப்புறத்துக் கள்ளங்களும் இதர சாதிகளும், அவங்கிட்டத்தான் கால்ல விழுந்து, திண்ணூறு வாங்கணும். பறையன் கால்ல எப்டி விழுகுறதுண்டு நெனச்சா, சாமி ஏதாச்சும் அவனப் பண்ணிறும். சாமிக்குப் பயந்துகிட்டு, எல்லாரும் அடங்கி நடப்பாங்க.

அப்டி இருக்கயில, உத்தப்ப நாயக்கனூறு ஜமீந்தாரு, கொக்குளம் கருப்பசாமி கோயிலுப் பூசாரியக் கூட்டி வரச்சொல்லி, ஆளு அனுப்பிட்டாரு.

ஜமீன் ஆளுக குதுரயில வந்து, ஜமீந்தாரு ஒன்னயக் கூப்பிடுறாண்டு சொல்றாங்க. சொல்லவும், போங்க வாரேண்டு சொல்லி அனுப்பிச்சிட்டு, மறுநா காலைல, கோயில்ல போயி உடுக்கடுச்சு, சாமி எறங்கிக் கேக்குறாரு. அப்ப சாமி, சும்மா போடா. மத்தத நா பாத்துக்கிறேண்டு சொல்லுது. சொல்லவும், எந்திருச்சு நடந்து போறா. கிடுகிடுண்டு போறா. போகயில, ஜமீந்தாரு, காலுமேல காலப் போட்டு, ஆசனத்ல அமந்திருக்காரு.

கிட்டப் போகவும், கோடாங்கிக்கு அருளு வந்திருச்சு. அருளு வரவும், எரங்குடா கீழண்டு சொல்றாரு. சொல்லவும், எரங்கி வந்தாரு, ஜமீன்தாரு. எரங்கி வரவும், விழுறா கால்லண்டு, கோடாங்கி சொல்றா. கால்ல விழுகுறாரு ஜமீந்தாரு. நீ கேக்குறதச் சொல்லவாண்டட்டு, மண் பானக்குள்ள பூசணிக்காய வச்சு, இனிமே இப்டிச் செஞ்சு, எங்களச் சோதன செய்யாதண்டு சொல்லிட்டு, அரமணய விட்டு வெளியேறத் திரும்பயில, புருசனும் பொண்டாட்டியும் சேந்து வந்து, கால்ல விழுகுறாங்க. விழுந்து மன்னிப்பு கேக்குறாங்க.

ஜமீந்தாரு, மனந் திருந்தி, செயில்ல இருந்த கோடாங்கிகள விடுதல பண்ணிட்டு, கொக்குளம் கருப்பசாமி கோயிலுப் பூசாரிய, பல்லக்குல கொண்டட்டு வந்து, விட்டுட்டுப் போனாங்களாம்.

அப்டி! சக்தி வாய்ந்தது இந்தக் கருப்பசாமி. இதோட கத... இன்னும் நெறயா இருக்கு.

10. அங்கம்மக்கா!

சடைச்சி பட்டில, அங்கமாண்டு ஒரு மருத்துவச்சி இருந்தா. ஊரு – ஊருக்குப் போயி, பேருகாலம் பாக்குறது அவளுக்கு வேல. அந்த விசயத்ல அவ கெட்டிக்காரி. என்னா ஆளுக பொம்பள அவ? அவளா! கள்ள வீட்டுப் பொம்பள. இப்டிப் பாத்துக்கிட்டிருக்கயில, ஒருநா, நல்ல ஒரக்கத்ல இருக்கா அங்கம்மா. நட்டா நடுக்குறிச்சாமத்ல, ஒரு முனி வந்து, அந்த ஊருல இருக்ற ஆளு மாதிரி வந்து,

அங்கம்மாக்கா! அங்கம்மாக்கா!
சீக்கிரமா எந்திரிச்சு வாக்கா!
ஓ... நாத்தனாளுக்குப் பிள்ள பெறக்கப் போகுது
வேகமா எந்திருச்சு வாக்கா – ண்டு

முனி, அந்த ஊரு ஆளு மாதிரி நிண்டுகிட்டுக்கூப்பிடுது. அந்த ஆளு, அங்கம்மாளுக்கு தம்பி மொற, தம்பி கூப்பிடுதில்லண்ட்டு, அந்நேரத்ல எந்திரிச்சு, மேலாக்குச் சீலைய எடுத்து மூடிக்கிட்டுப் போறா. அந்த முனி, முன்னால போகுது. இவ, பின்னாலயே போறா. போயிக்கிட்டிருக்கயில, ஒரு ஓட குறுக்கபோகுது. அந்த

ஓடயில, தண்ணி போயிக்கிட்டிருக்கு. அந்த ஓட வழியா கூப்பிட்டுக்கிட்டுப் போகுது. தண்ணிய மிதிச்சதுமே, இவளுக்குத் தூக்கக்கலக்கம் போயிருச்சு. தூக்கத்ல இருக்றவன எழுப்ப மூஞ்சில தண்ணிய தெளிக்குறாங்கல்ல. அது மாருதி தான். தண்ணிய மிதிக்கவும், இவ, நெதானத்துக்கு வந்திட்டா.

தெச மாறிப் போறோம்ண்டு தெரிஞ்சுபோச்சு. இப்ப, நம்மள முனிதா் கூட்டிட்டுப் போகுதுண்டு நெனச்சு பயக்குறா. திரும்பி ஓடுனா, முனி அடிச்சிரும். ஓடவுங் கூடாது, குனியவுங் கூடாது, முன்னால போகவுங்கூடாதுண்டு – நெனச்சுக்கிட்டுப்

பின்னாலயே போறா. ஆனது ஆகட்டும்ண்ட்டு, போயிக்கிட்டிருக்கா. போகயில, ஒரு பெரிய மல இருக்கு. அந்த மலயடி வாரத்ல, ஒரு கொக தெரியுது. வெறுஞ் செடி கொடியாப் படந்து கெடக்கு. இவ உசாரா இருக்கா. கொக வாசல்ல நிண்டுகிட்டு, உள்ள போக்கா, அங்கதா ஓ.. நாத்தனா படுத்துக் கெடக்காண்டு, ஆளு மாதிரி நிண்டுகிட்டுச் சொல்லுது.

அப்ப, வெளிய இருந்துகிட்டு, உள்ள பாக்குறா. பாக்கயில, ரொம்ப வலி வேதனையோட அங்கொரு பொண்ணு படுத்துக்கெடக்குறது தெரியுது. ரொம்ப வாதப்படுற மாதிரி வேற இருக்கா.

என்னா ஆனாலும் ஆகட்டும்ண்டு, உள்ள போனா. படுத்துக் கெடக்குறது, பொம்பள முனியா இருக்குமோண்டு நெனக்கிறா. எதுவா இருந்தாலும் இருக்கட்டும்ண்டு, பிள்ளய எடுக்க ஆரம்பிக்குறா.

கொஞ்ச நேரத்ல, பல்லுகில்லோட, சட கிடையோட பிள்ளய எடுத்துப் போடுறா. எடுத்துப் போட்டுட்டு, வெளிய வாரா, வெளிய வரவும்,

அங்கம்மக்கா! தண்ணி காய வச்சிருக்கேே, குளிக்காண்டு, முனி சொல்லுது. இல்லப்பா! என்னால கூதல் பொறுக்க முடியாது, நா, வீ ட்ல போயிக் குளிச்சுக்கிறேண்ட்டு, வீ ட்டுக்கு, வெளியேறினா.

வெளியேறவும், பழையபடி, முனி, வீ ட்டுக்குக் கூட்டிக்கிட்டு வருது. கூட்டிக்கிட்டு வந்து, வீட்ல விட்டுட்டு, அங்கம்மக்கா! சோறு கொழம்பு கொண்டுகிட்டு வாரேண்டு சொல்லிட்டுப் போகுது.

போகவும், இவளுக்குக் குளிரு – காச்ச வந்து ஆட்டுது, பேசாமப் படுத்துக் கெடக்கா. அண்ணக்கி ராத்ரியே! இந்த முனி, பழைய ஆள் வடிவத்ல, சோறு கொழம்புகொண்டுகிட்டு வருது.

வந்து, அங்கம்மாக்கா! அங்கம்மாக்காண்டு எழுப்புது. பையா எந்திரிச்சு, என்னாப்பாண்டு கேட்டா. சோறு – கொழம்பு கொண்டு வந்திருக்கே. சாப்பிடுண்டு சொல்லுது. இப்ப, என்னால முடியாது, குதுகுதுண்டு வருது. வச்சிட்டுப் போ. காலைல சாப்பிட்டுக்கிறேண்டு சொல்றா. சரிண்டு, கூடயப் போட்டு, மூடி, அதுமேல அம்மிக் கல்லத் தூக்கி வச்சிட்டுப் போயிருச்சு.

காலைல, இவளால எந்திரிக்க முடியல. குளிரு காச்ச வந்து, எந்திரிக்காம படுத்துக் கெடக்குறா. படுத்துக் கெடக்கவும், பக்கத்து வீட்டுக்கார, பொம்பளைக வந்து எழுப்புறாங்க.

எழுப்பி, என்னாண்டு கேக்க, இந்த மாதிரி, முனி, ஆள் மாருதி வந்து என்னயக் கூட்டிக்கிட்டுப் போச்சு. நானும் போனே, அங்க ஒரு பொம்பளக்கிப் பிள்ள பொறந்திச்சு. பிள்ளய, எடுத்துப் போட்டுட்டு வந்திட்டேன். அந்த முனி, பெறகு, சோறு கொண்டுட்டு வந்திச்சு. என்னால இப்ப சாப்ட முடியாதுண்டு சொல்லிட்டே. வச்சிட்டுப் போறே, காலைல சாப்பிட்டுக்கண்டு சொல்லிச்சு. இவ்வளவுதா எனக்குத் தெரியும், போயி, சோறு இருக்காண்டு பாருங்க. சோறு இருந்தால் நெசம், சோறு இல்லண்டா, நாங் கண்டது, கனாண்டு சொல்றா.

போயி, அம்மியத் தூக்கிட்டு, கூடயத் தொறந்து பாக்கயில, சோறுங் கொழம்பும் ஆவி பருஞ்சுகிட்டு இருக்குது. ஆவி பருஞ்சுகிட்டிருக்கிற சோத்தப் பாக்கவும், இவளுக்கு அதிகமான காச்ச கண்டுருச்சு.

சோறு, பெ...ரி...ய வண்ணாப்பய தாளி நெறையா இருக்கு. மனுசன்... அதச் செமக்க முடியாது. முனிகதா செமக்க முடியும். இதுக, பயத்த உண்டாக்கிருச்ச. பயத்துல காச்ச வந்து செத்துப் போயிட்டாளாம்.

11. முனி

ஒரு நாடாரு, வில்லிப்புத்தூருல, ரெண்டுமாடி வீடு ஒண்ணு கட்டுனாரு. வீட்டக் கட்டிப்புட்டாரு. ஆனா, குடி போக முடியல. ஒரு முனி, அந்த வீட்ல இருந்துகிட்டு, ஆளுங்க, யாரயுமே இருக்க விடமாட்டேங்குது. மூணு நாளக்கி மேல அந்த வீட்டுல இருக்க முடியாது. ஏண்டா விதவிதமா சத்தத்த உண்டாக்கி, அடிக்கடி ரகள பண்ணுது. பயந்துகிட்டு, நாடாரு கட்ண வீட்ட விட்டுப்பிட்டு, வேற வீடு வாங்கி, அங்க குடி போயிட்டாரு. கட்ண வீடு சும்மா கெடக்குது.

கெடக்கயில, விருதுநகருல ஒரு நாடாரு, அவருக்கு மூணு பொம்பளப் பிள்ளைக. மூணும் வளந்து, ஒன்னப்பாரு – என்னப்பாருண்டு இருக்குதுக.

இருக்கயில, அந்த வீட்ட, எந்த வீட்ட? அந்த முனி இருக்ற வீட்டத்தே. இந்த நாடாரு, அந்த நாடாருகிட்டச் சொப்ப வெலைல வாங்கிப்பிட்டாரு. வாங்கின நாடாருக்குப் பொண்டாட்டி இல்ல. கைம்பொண்டாட்டி ஆம்பள. அவரு, இந்த வயசுக்கு வந்த மூணு பொம்பளப் பிள்ளைகளோட, அந்த வீட்டுல குடி போனாரு. எந்த வீட்ல? அந்த முனியிருக்ற வீட்லதா. குடியேறி இருக்காங்க. இருந்துகிட்டிருக்கயில, மூத்த பிள்ளயக் கொண்டுபிருச்சு, எது? பேயிதா. கொல்லவும், இவருக்குப் பயம் வந்திருச்சு. என்னடா? செய்யுறதுண்ட்டு, மலையாளத்து மாந்திரிகங்கிட்டப் போறாரு. போயி –, அந்த மாந்திரீகங்கிட்ட, இந்த மாதிரி ஒரு வீடு வாங்குனே. அந்த வீட்ல ஒரு முனி இருந்துகிட்டு, எங்கள இருக்கவிட மாட்டேங்குது. எம் மூணுபிள்ளைகள்ல, மொதப் பிள்ளய, நேத்துக் கொண்டுபிடுச்சு. போகப் போக, எம்பிள்ளைகளக் கொண்டு பிரும்ண்ட்டு, ஒங்ககிட்ட வந்தேண்டு சொல்றாரு.

அப்ப, மாந்திரீகி சொல்றா். நா் வந்தா, முனி வராது. போயி, நா் சொல்றதுமாதிரி செய்யுங்கண்டு சொல்றா்.

சரி: சொல்லுங்கண்டு நாடாரு கேக்குறாரு. அப்ப, ஒரு வெள்ளச் சாவலப் புடுச்சு வீட்டுக்குள்ள விடு. அந்தச் சாவல், எந்தப் பக்கம் வருதோ, அந்தப் பக்கமா ஒக்காந்து, சாவத் தலயக் கடுச்சு எறிஞ்சிறு. அத எடுத்துக்கிட்டு முனி போயிரும்ண்டு சொல்லி, போகச் சொல்லிட்டாரு. நேரா வீட்டுக்கு வந்தா். வந்து, ஒரு வெள்ளச் சாவலப் புடுச்சுட்டு வந்து, வீட்டுக்குள்ள விட்டா். விடவும், வெள்ளச் சாவலப் பாத்திட்டு, சனி மூலையில் இருந்து பளபளண்டு வருது. பாக்குறதுக்கே கண்ணு கூசுது. அப்டி வருது. வீடே இடிஞ்சு விழுகிற மாதிரி இருக்கு. கிட்ட வரவும், சாவலப் புடுச்சு, நறுக்ண்டு தலயக் கடுச்சு, முனி முன்னால எறிஞ்சிட்டா். எறியவும், முனி சிரிக்குது. சிரிச்சு, இப்பத்தாண்டா,ஒனக்கு நல்ல காலம் வந்திருக்கு. இப்ப, ஒனக்கு என்னா வேணுமோ கேளுண்டு முனி சொல்லுது. சொல்லவும், எனக்குப் பணங்காசு வேணும்ண்டு கேக்குறாரு. கேக்கவும், வீட்டுக்குள்ள இருந்துகிட்டுக் கொட்டவா? வெளியில இருந்து கிட்டுக் கொட்டவா? மேல இருந்துகிட்டுக் கொட்டவா - ண்டு முனி கேக்குது. நாடாரு அப்பத்தா ஒசிக்கிறாரு. வீட்டுக்குள்ள இருந்துகிட்டிக் கொட்டினாலும், வெளியில இருந்துகிட்டுக் கொட்டினாலும், வீடு நெறையாக் கொட்ட முடியாது. அதுனால, மேல இருந்து கொட்டுண்டு நாடாரு சொல்லிட்டாரு. நாடாரு இல்ல! விடுவாரா? முனி, மேல இருந்து பணங்காசாக் கொட்டுது, கொட்டுது! ....கெட்டுது! ... கொட்டிக்கிட்டே இருக்கு. வீடு நெறஞ்சு போச்சு. நெறயவும், முனி சாவல எடுத்துக்கிட்டுப் போயிருச்சு.

போகவும், பணங்காசுகள அள்ளிவச்சு, ரெண்டு பிள்ளைகளயும் கட்டிக்குடுத்து, நல்லாப் பொளச்சாங்களாம். குடுக்கறது, கூரயப் பொத்துக்கிட்டுக் குடுக்கும்ண்டு, சும்மாவா சொன்னாங்க.

12. மனசு

ஒரு ஊர்ல – ரெண்டு பேரு கூட்டாளிகளா இருந்தாங்க. ரெண்டு பேரும் எப்பயுமே பிரியுரதில்லயாம். எந்த வேலக்கிப் போனாலும், ரெண்டுபேரும் ஒண்ணாத்தர் போவாங்களாம்.

ஒருநா, ரெண்டுபேரும் கோயிலுக்குப் போனாங்களாம், போற வழியில, ஆத்துல தண்ணி வத்திப் போயி, எக்கச்செக்கமா மீனு கெடந்துச்சாம். மீனப் பாத்து, ஒருத்தனுக்கு ஆச வந்திருச்சாம். அவன் ஏலே! நாளக்கிப் கோயிலுக்குப் போயிக்கிறலாம். இந்த மீன, நாளக்கிப் பாக்க முடியாது. ஆனா, சாமி நாளக்கிம் இருக்கும். நம்ம நாளக்கிப் போயி சாமியக் கும்பிடலாம். இண்ணக்கி, இந்த மீன புடுச்சுக்கிட்டு வீட்டுக்குப் போவோம்ண்டு சொல்லிக்கிட்டே, ஒருத்த் மீனப் புடுச்சர்.

அதெப்டிடா, கோயிலுக்கிண்டு வந்துட்டு, கோயிலுக்குப் போகாம, மீனப் புடுச்சுக்கிட்டு போறது. நா, மாட்டேண்டு சொல்லிக்கிட்டே, ஒருத்த் கோயிலுக்குப் போயிட்டர்.

மீன் பிடிக்கிறவ், இந்நேரம், கோயிலுக்குப் போயிருப்பர். சாமி கும்பிடுவர்ண்டு, நெனச்சுக்கிட்டே, மீனப் புடிச்சுக்கிட்டு வீட்டுக்குப் போயிட்டர்.

கோயிலுக்குப் போனவ், இந்நேரம் எவ்வளவோ மீனப் புடுச்சிருப்பர். அவன் வீட்ல, இந்நேரம் மீன் கொளம்பு வெந்துகிட்டிருக்கும். நம்மளுங்கூட மீன் புடுச்சிருக்கலாம். வீணாப் போச்சுண்டு, நெனச்சுக்கிட்டே சாமி கும்பிட்டு வீட்டுக்குப போயிட்டர்.

ராத்ரி வந்திருச்சு. கஞ்சியக் குடுச்சுட்டு, படுக்கப் போனாங்க. படுக்கயில, இத, நெனச்சுக்கிட்டே படுத்து ஒரங்கிட்டாங்க. விடியங்காட்டில பாக்குரப்போ, ரெண்டுபேரும் செத்துக் கெடந்தாங்க. போலுசுகாரங்க வந்து, ரெண்டு பேரயும் தூக்கிட்டுப் போயி, அறுத்துப் பாத்தாங்க. அறுத்துப் பாக்கயில, மீன் பிடிச்சவ் நெஞ்சுல, சாமி இருந்திச்சாம். சாமி கும்பிட கோயிலுக்குப் போனவ் நெஞ்சுல, மீனு இருந்திச்சாம். இதுனாலதா், இவங்க செத்துப் போனாங்கண்டு முடிவு எழுதிட்டாங்களாம். அதுனால எதநோங்கிப் போறமோ, அதச் செஞ்சு முடிச்சப் பெறகுதா், அடுத்த சோலியப் பாக்கணுங்கறது.